www.t.me/tamilbooksworld



# மின்னல் மழை மோகினி

அத்தியாயம்-1

ஜாவர் சீதாராமன்

AVOID TO DOWNLOAD FROM userupload.net SPAM WEBSITE

மழைக்கு—விடாத தொடர் மழைக்கு—பழகிப்போன மலையாளத்துக்கே புதுமையான ஒரு பேய் மழை!

சரிவுகள் எல்லாம் நீர்வீழ்ச்சியாக மாற, மின்னல் இடையிடையே பளீர் பளீரென்று மின்ன, இடியால் தாக்குண்ட மரங்கள், மழை நீரினிடையே அக்கினி ஜ்வாலையோடு பற்றி எரிந்தவாறு விழும் காட்சி, ஊழிக் கூத்தைப் போல் பயங்கரமாகத் தோற்றமளித்தது.

எரிந்து விழும் மரம், விடாது பெய்யும் மழை, அத்தோடு கும்மிருட்டு—மூன்றும் சேர்ந்து ஒரு விபரீதக் கலவையாகக் காட்சி தந்தன.

இரவு மணி பத்திருக்கும். ஷோரனூரிலிருந்து குருவாயூர் செல்லும் பாதையில், இயற்கையின் இந்தப் பயங்கர நாடகத்துக்கு இடையில், செயற்கையின் சின்னமான ஒரு மோட்டார் பஸ், துணிவோடு, அதன் முன் விளக்குகள் மங்கலாக எரிய, மெள்ள ஊர்ந்து வந்தபடி இருந்தது.

அந்த பஸ்ஸில் மூன்றே பிரயாணிகள், டிரைவர்—கண்டக்டரைத் தவிர. ஓர் இளைஞன், இளமங்கை, மூன்று வயதுச் சிறுமி.

மூவரும், ஏன் இந்த இரவு வேளையில் பயணம் புறப்பட்டோம் என்ற பீதியில் இருந்தனர். டிரைவர், 'எந்த வேளையில் இந்த பஸ்ஸை எடுத்தோமோ,' என்ற கவலையோடு இருந்தார். அவரருகில் உட்கார்ந்திருந்த கண்டக்டர், வேலைக்குப் புதியவன். பயத்தால் உணர்விழந்து, எதுவும் பேசாமல், எதிரே பஸ்ஸின் முன் விளக்குகளின் வெளிச்சத்தில் தெரியும் நீர்த்திரை போன்ற மழையை விறைத்துப் பார்த்தபடி இருந்தான்.

சாலையோரத்தில் தெரியும் பிரம்மாண்டமான மரங்கள் நிறைந்த பள்ளத்தாக்குகளைப் பார்க்கும் போதெல்லாம், பீதி அவன் அடி வயிற்றைப் பற்றிக் கொண்டது. ''பஸ்ஸை இவ்விட நிறுத்திக்கோ!'' என்று அடிக்கடி மலையாளத்தில் சொல்லிக் கொண்டிருந்தான்.

தாயான பின்னும் அவள் நிலையில் முன்னேற்றம் தெரியவில்லை. உடல் ஒன்றைத் தவிர, அவளுக்கும் மனம், உணர்ச்சிகள், அறிவு என்பவை இருப்பதாகவே அவள் கணவன் கருதவில்லை. அவனுக்குப் புரிந்த அந்த உடலையும் அவன் மென்மையாகவோ, தன்மையுடனே நடத்தவில்லை. காதல் வாழ்க்கை தேன் பாயும் ஆறு என்று நம்பி, கணவன் வீடு நுழைந்தவளுக்கு, அது ஒரு நச்சுப் பொய்கையாகத்தான் மாறியது.

மாலை வேளைகளில் அவள் பழம் வாங்கச் செல்லும் கடைக்காரனின் புன்முறுவல், தன்னையும் மதிப்போடு நடத்தும் ஒரு மனிதனும் இந்த உலகத்திலிருக்கிறான் என்பதை அவளுக்குக் காட்டியது. பல நூறு முறைகள் குருவாயூரப்பன் சந்நிதியில், அவள் வீட்டின் நிலை மாறவேண்டும் என்று வேண்டியிருக்கிறாள். ஆனால் குருவாயூரப்பன் அருள் கிட்டவில்லை; இளைஞனின் கருணைதான் கிட்டியது. அதுவும் அவள் வீட்டுக் கொல்லைப்புறத் தோப்பில், இரவில், அவனைச் சந்திக்க நேர்ந்தது. அந்தச் சந்திப்பில் ஆண் பெண் உறவின் மென்மையை உணர்ந்தாள். மாற்றானோடு இன்பத்தை உணர்ந்தபின், கணவன் அளித்த துன்பம் பன்மடங்கு அதிகமாகத் தெரிந்தது. பொறுமையின் எல்லையில் துணிவு பிறந்தது. குழந்தையோடும், மாற்றான் துணையோடும் புது வாழ்வு நோக்கிப் புறப்பட்டாள். அந்த விடுதலைப் பயணமா இப்படி இருக்க வேண்டும்? அவளது துணிவு வீட்டைவிட்டு இருபது மைல் வரும் வரையில்தான் இருந்தது.

அதன்பின், தான் செய்வது பாவம் என்ற உணர்வும், அதன் சுமையும் தான் மிஞ்சின. தன்னையே வெறுத்தாள். தன்னுடன் வந்தவனையும் வெறுத்தாள்.

கடைக்காரனோ, ஊரைவிட்டு ஓடி வந்துவிட்டதால் தான் இழந்துவிட்ட வியாபாரத்தை எண்ணி ஏங்கினான். ஊரிலிருந்தபடியே ரகசியமாக இந்தத் தொடர்பை வைத்துக் கொண்டிருக்கக் கூடாதா என்று நினைத்தான். அதிக முதல் போட்டு, குறைந்த லாபத்தை அடைந்துவிட்ட வியாபாரி போல் மனம் கசந்து நின்றான். ரகசியம், கணவன் வீடு என்ற தடை இரண்டும் இருவரின் உறவையும் வளர்த்தன. அத்தடை நீங்கியதும், உறவும் கசக்கத் தொடங்கியது.

இருண்ட வழியில் மருண்டு நகர்ந்து கொண்டிருந்த பஸ்ஸில், ஓடிவந்த பெண்ணும், கடத்திவந்த இளைஞனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பளீர் என்று வீசிய மின்னல் இருவரையும் பார்த்து இடி இடியென்று நகைத்தது. டிரைவரின் கண்கள் மின்னல் ஒளியில் சில விநாடிகளுக்குக் குருடாகிவிடவே, அவன் கால்கள் பிரேக்கை அழுத்த மறந்தன. பஸ் வேகமாகப் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தது.

கண்டக்டர், இனிமேல் வாழ்வில் நமக்குக் கூச்சலிடும் வாய்ப்பே கிடையாது என்பதை உணர்ந்தவன் போல் அலறினான். பஸ்ஸில் இருந்த பெண், கண்டக்டரின் அலறலைக் கேட்டாள்.

அண்மையில் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத்தின் 70வது பிறந்த தின விழா சென்னையில் நடந்தது. அதில் திருப்பூர் மொகைதீன் பேசினார்:

''நானும் என் நண்பர் அறிஞர் அண்ணாவும் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பினோம். ரயிலில் ஒரே கூட்டம். நல்ல வேளையாக ஒரு நண்பர் இரண்டு இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகளை எங்களுக்கு வாங்கிக் கொடுத்தார். நாங்கள் கொஞ்சம் அசதியாகப் படுத்தோம். மறு ஸ்டேஷன் வந்ததும் டிக்கட் பரிசோதகர் எங்களைத் தட்டி எழுப்பி, ''டிக்கட்,'' என்றார். காட்டினோம். பின் இரண்டு ஸ்டேஷன் தாண்டி வேறு ஒரு டிக்கெட் பரிசோதகர் வந்து உலுக்கினார். சற்றுக் கண்ணயர்ந்ததும் மீண்டும் ஒருவர். 'சரி, நம் டிக்கெட்டுகளை நம் தலையின் மேலே கட்டித் தொங்கவிட வேண்டியதுதான்.' என்றேன் நான்.

காரணம் எங்களை அப்பொழுது பார்த்தால், 'இவர்களா இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுப்பவர்கள்?'' என்று நினைக்கும்படி இருந்தது எங்கள் உடை.

—தகவல்: அச்சுதமங்கலம் பாப்பா

## ரயிலில் அண்ணா பட்டபாடு



www.tamilbooksworld

உள்ளிருக்கும் பீதியை அடக்கி, மங்கலாகத் தெரியும் பாதையில், பஸ்ஸைக் கொண்டு செலுத்தும் பொறுப்பில் முழுக் கவனத்தையும் செலுத்தியபடி இருந்த டிரைவருக்குக் கண்டக்டரின் நறுக்கிடு ஆத்திரத்தைக் கொடுத்தது.

வந்த வழியெல்லாம் ஊரில்லாத மலைப் பகுதி. மலைப் பாம்புகளின் வாசஸ்தலம். பஸ்ஸை நிறுத்தவோ திருப்பவோ இடமில்லாத குறுகிய சாலையில், எங்கு நிறுத்துவது என்று தெரியாமல் டிரைவர் பஸ்ஸை ஓட்டிக் கொண்டே இருந்தார். இன்னும் இரண்டு மைல்களுக்கப்பால் ஒரு சிற்றூர் இருப்பதாக ஞாபகம். அதை அடைந்துவிட்டால் ஓரளவு நிம்மதி என்று நினைத்தபடி பஸ்ஸை ஓட்டிவந்தார்.

திடீரென்று ஒரு மின்னல். அதைத் தொடர்ந்து சில விநாடிகளில் பயங்கர இடி. நீண்டு உயர்ந்த மரத்தின் மீது விழுந்தது. சோவென்று பெய்யும் மழையின் நடுவே அந்த மரம் கடகடவென்று முறிந்து, பஸ்ஸின் பின்புறம் விழுந்தது. அதே மரம், பஸ்ஸின் மீதே விழுந்திருந்தால்...?

பஸ்ஸில் உட்கார்ந்திருந்த குழந்தை அச்சத்தால், ''அம்மே,'' என்று சொல்லி, தனது தாயின் உடலைத் தாவிக் கட்டிக் கொண்டது. உடல் நனைந்து, உள்ளம் பயந்து, முகம் வெளுத்து உட்கார்ந்திருந்த அந்தப் பெண், அருகிலிருந்த இளைஞனிடம், ''எனிக்கி பயமாகுன்னு. நம்மள் செய்யுன்ன பாவம் குருவாயூரப்பனுகூடி பொறுக்கில்லா. நம்மள் பாலக்காட்டக்கே ஜீவனோட போகில்லா. அதனு வேண்டியாணு ஈ பரிசோதனு,'' என்று சொல்லிவிட்டு அழ ஆரம்பித்தாள்.

பாவம், புண்ணியம் என்ற சொற்களின் அர்த்தமே புரிந்துகொள்ள முடியாத மூன்று வயதுக் குழந்தை, தாய் அழுவதைப் பார்த்துத் தானும் அழுதது. ''அம்மே! அச்சன் எவ்விடே? அம்மே! அச்சன் எவ்விடே?''

பயம் வரும்போது தகப்பனை நினைப்பது குழந்தையின் இயற்கை போலும். அந்த இளைஞனுக்குக் குழந்தையிடம் கோபம்தான் வந்தது. அவன் அதன் தகப்பனல்லவே? ஆனால் குழந்தையின் தாய்க்கு அழுகை வந்தது. இளைஞன் குழந்தையை அடிக்கக் கையை ஓங்கினான். குழந்தையின் தாய் அவனைத் தடுத்துவிட்டு, வெறுப்போடு அவனை நோக்கினாள். கணவன் வீட்டில், கணவனும் அவன் தாயும் மிருகத்தனமாக நடந்து கொண்டதன் விளைவாக, வாழ்வு கசந்து போய், எங்காவது ஓடினால் போதும் என்று நினைத்து, நள்ளிரவில் டீக்கடைக்காரனோடு ஓடிவந்தது பெரும் முட்டாள்தனம் என்பதை உணர்ந்தாள்.

கணவன் வீடு என்ற சிறையில் சித்திரவதைப்பட்டபோது, டீக்கடை இளைஞன் தனக்கு விடுதலை கொடுத்து, புது உலகத்தின் கதவுகளையும் திறந்து, தன்னை இன்பத்தின் சிகரத்துக்கு அழைத்துப் போவான் என்று நம்பியவளுக்கு, பஸ்ஸில் ஏறியதிலிருந்தே குழப்பம் ஏற்பட்டது. டீக்கடைக்காரனின் கவர்ச்சி சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. அவனும், 'தவறு செய்கிறோம்,' என்ற உணர்ச்சியில் இருந்ததால் சிறிய விஷயங்களுக்கெல்லாம் பொறுமை இழந்தபடி இருந்தான். 'அவனுக்கும் கோபம் வரும், வெறுப்புணர்ச்சியை அவன் முகமும் காட்டும்,' என்பதை அந்தப் பெண் அவனோடு பஸ்ஸில் ஏறிய பின்தான் உணர்ந்தாள்.

ஒரு முள் படுக்கையாக இருந்த அவளுடைய இறந்த காலத்துக்கு மூடி போட்டுவிடலாம் என்று நினைத்த அவள் அது முடியாது என்பதைத் தன் மகளின் முகத்தைப் பார்க்கும்போது உணர்ந்தாள். இனி, கணவன் வீடு திரும்ப முடியாது. எதிர்காலமோ, பஸ்ஸுக்கு வெளியே இருந்த கும்மிருட்டுப்போல் புரியாத பயங்கரமாகத் தெரிந்தது.

டீக்கடை இளைஞனின் அழகான முகமும், மேனியும் பார்க்கப் பார்க்க இனிமையாக இருந்தாலும், வாழ்வின் சோதனைகளை உறுதியோடு தாங்கக்கூடிய வலிமை அற்றவன் அவன் என்பதை, அவன் புயலுக்குப் பயப்படுவதைக் கண்டதும் உணர்ந்தாள். இயற்கையின் கோரப் புயலைக் கண்டு அவள் பயப்படவில்லை. காரணம், அவள் உள்ளத்தில் வீசிய கோரமான புயல்தான். அவள் கணவனைவிட அழகானவன் அவளைக் கடத்திவந்த இளைஞன். அவள் வீட்டைவிட்டு ஓட அவனது கவர்ச்சி மட்டும் காரணமல்ல. கணவன் வீட்டில் அவள் கண்ட கொடுமை!

சிறு தவறுகளுக்கெல்லாம் பெல்ட்டால் அடிக்கப்படுவாள். அடுத்த கால் மணிக்கெல்லாம் கணவனின் மிருக அணைப்பிற்குச் சிரித்த முகத்தோடு தயாராக வேண்டும். துன்பத்தின் ஆழத்திலிருந்து இன்பத்தின் உச்சிக்குச் சில விநாடிகளில் தாவ வேண்டும் என்று எதிர்பார்த்தான் அவள் கணவன்.

அடுத்த வினாடி ஜன்னல் வழியே பார்த்தான். அப்போது மின்னிய மின்னல், அவளுக்கு நிலையைத் தெளிவாக உணர்த்தியது.

பஸ், பிரம்மாண்டமான பாதாளத்தின் விளிம்பின் மேல் போய்க் கொண்டிருந்தது. உடனே 'கடபட' என்று ஏதோ சத்தம்! ஒரே இருட்டு! பஸ் வேகமாக உருண்டது. தன்னால் தீர்க்க முடியாத சிக்கலான ஒரு பிரசினையை பஸ் நிரந்தரமாகத் தீர்த்துவிட்டது என்பதை அவள் உணர்ந்தாள். உடனே ஒரு நிம்மதி. அவள் தலை, இருட்டில் எதையோ தாக்கியது. தன் கையில் குழந்தை இல்லை என்பதை உணர்ந்தாள். குழந்தை எப்போது, எப்படித் தன்னிடம் இருந்து விசிறி எறியப்பட்டது என்பது புரியவில்லை.

அவளையும் அறியாமல், ''அய்யோ மோகினி!'' என்று கூச்சலிட்டாள். அதன் பிறகு அந்தக் காட்டில் மனிதக் குரலே கேட்கவில்லை.

பஸ்ஸின் உலோகப் பகுதிகள் பாறையிலும் சிறு மரங்களிலும் மோதி இடறும் சப்தம்தான் கேட்டது. மழை மட்டும் பெய்து கொண்டே இருந்தது.

பள்ளத்தாக்கிலிருந்து கூப்பிடு தூரத்தில் இருந்த ஒரு சிறு வீட்டில், சுமார் முப்பது வயதுள்ள ஒரு மலையாளத்து மாது, பேரிரைச்சல் கேட்டு விழித்தெழுந்தாள். மழையின் சப்தம், இடியின் உறுமல் அவளுக்குப் பழகிப் போனவை. ஆனால் இந்தச் சப்தம் அவள் காதுகளுக்குப்



புதியவை.

என்ன சப்தம் என்று ஆராய்ந்திருப்பாள். ஆனால் அதற்கு அவகாசமில்லை. அவள் படுத்திருந்த இடத்துக்கருகிலிருந்த படுக்கை காலியாக இருப்பது கண்டு திடுக்கிட்டாள்.

அந்தப் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த சிறு வீட்டில், நாராயணி அம்மாளையும், அரைப் பைத்தியமான அவளுடைய ஏழுவயதுப் பிள்ளை சங்கரன் குட்டியையும் தவிர வேறு யாரும் இல்லை. நாராயணி அம்மாளின் கணவன் இறந்து நான்கு வருடங்களாகின்றன. நாராயணி அம்மாளுக்குத் துணை சங்கரன் குட்டி, சங்கரன் குட்டிக்குத் துணை நாராயணி அம்மாள் என்ற அமைப்பில் அவர்கள் வாழ்வு நடந்து கொண்டிருந்தது. கொட்டும் மழையில் ஏழு வயதுப் பிள்ளை எங்கு போயிருப்பான் என்று நினைத்தாள். இடி சப்தத்துக்கும் சங்கரன் குட்டிக்கும் உள்ள ஒரு பிணைப்பை நினைத்துப் பார்த்தாள். இடி இடித்தால் போதும் சங்கரன் குட்டிக்கு ஒரே குதூகலம் குதிப்பான், பாடுவான், ஆர்ப்பாட்டம் செய்வான். இன்று இரவு அப்படி ஒன்றும் அவன் செய்யவில்லை. இருளில் அவன் குரலே கேட்கவில்லை.

ஒருவேளை வீட்டை விட்டே வெகு தூரம் சென்றிருப்பானோ என்ற அச்சம் நாராயணியின் மனத்தில் எழுந்தது. தலையணைக்கு அடியில் வழக்கமாக வைத்திருக்கும் தீப்பெட்டியைத் தேடினாள். அது அங்கு இல்லை. நாராயணியின் கலவரம் அதிகமாயிற்று. உடனே வெளியே ஓடிவந்தாள். வீட்டின் பின் கட்டில் வெளிச்சம் தெரிந்தது. அங்கு ஓடினாள். அங்கு தென்னை ஓலைக்கீ





"18 வயதுள்ள டைப்பிஸ்ட் தேவை என்பதற்கு 81 வயதுள்ள என்று பிரஸ்லே தப்பாகப் போட்டு விட்டார்கள். மன்னிச்சுக்குங்கோ பாட்டியம்மா."

டுக்காகக் கட்டி அவற்றுக்குத் தீ வைத்து, கையில் பிடித்தபடி நின்று கொண்டிருந்தான் சங்கரன் குட்டி.

அவன் முகத்தில் ஒருவித எக்களிப்பு இருந்தது. அவன் கையில் தீப்பெட்டி இருந்தது. எரியும் தென்னஞ் சுளுந்தைக் கொண்டு, வீட்டின் பின் கட்டுக் கூரைக்குத் தீ வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

நாராயணி அம்மாள், "டேய் பைத்தியம்! என்னடா செய்யறே?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள். சங்கரன் குட்டி, "ஒரு மின்னல் பண்ணறேம்மா. ஒரு பெரிய மின்னல் செய்யறேம்மா!" என்று சுளுந்தைச் சுற்றுமுற்றும் சுழற்றினான்.

நாராயணிக்கு ஆத்திரமாக வந்தது. "குடி இருக்கிற வீட்டுக்கே தீ வைக்கிறியாடா, பைத்திய மகனே!" என்று சொல்லிக்கொண்டே சங்கரன் குட்டியை இரண்டு கன்னத்திலும் அறைந்தாள். சங்கரன் குட்டியின் முகத்திலிருந்த குதூகலம் குறைந்தது. அவன் முகத்தில் பயம் தோன்றியது. "ஓ..." வென்று ஓலமிட்டு அழ ஆரம்பித்தான்.

அவன் அழுகையின் தொனி, ஒரு மிருகம் ஊளையிடுவது போல் கேட்டது. நாராயணியின் ஆத்திரம் மறைந்தது. பச்சாதாபம் எழுந்தது.

"குருவாயூரப்பா! இந்தப் பைத்தியக்காரப் பிள்ளையை வச்சிட்டு நான் எப்படித்தான் பிழைக்கப் போறேனோ."

என்று வருந்தியவளின் பிரார்த்தனைக் குரலுக்குப் பதில் சொல்வதுபோல் வாசல் புறமிருந்து டொக் டொக் என்ற சப்தம் வந்தது.

நாராயணி அதைக் கவனிக்கவில்லை. ஒருவேளை காற்று கதவை மோதுவதன் விளைவாக உண்டான ஒலியாக இருக்கலாம் என்று நினைத்தபடி, மகனைப் பின்கட்டிலிருந்து இழுத்துவந்து, படுக்கையில் படுக்க வைத்தாள். பிறகு தன் படுக்கையில் படுத்தபடி, "நாராயணா!" என்று கூறிக் கண்ணை மூட முயன்றாள்.

வாசல்புறக் கதவை ஏதோ ஓசைப்படுத்துவதுபோல் கேட்டது. அந்தச் சப்தம் தொடர்ந்து வந்தது. நாராயணி அம்மாள் எழுந்து உட்கார்ந்தாள். 'டொக்டொக்' சப்தத்தைத் தொடர்ந்து முனகல் சப்தமும் கேட்டது. அந்த முனகல் ஒலி பூனையின் ஓலம்போல் கேட்டது.

அருகில் படுத்திருக்கும் மகனைப் பார்த்தாள்.

கணவன் இறந்த பின்பு, அவள் உறவினர்கள் கூறிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. "நாராயணி! நீ இந்த மலையடிவாரத்திலே, தனியே புருஷத் துணை இல்லாமல் இருப்பது சரியில்லே. இந்த மலையிலே பாலமுனி உலாவறதாக மஹேச நம்பூதிரி சொல்றார். பாலமுனி ஒவ்வொரு சமயம் சாஸ்தா மாதிரி வரும். ஒவ்வொரு சமயம் பாவாடை சட்டையோடு தெரியும்," என்று சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

ஒவ்வொரு சமயம் சங்கரன்குட்டிக்கு வயது வளர அதோடு அறிவு வளராமல் பித்தன்போல் இருப்பதன் காரணம், பாலமுனியின் தோஷமாகக்கூட இருக்குமோ என்றுகூட நினைத்திருக்கிறாள். ஆனால் கணவன் இறந்த பிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில் அவள் எந்தவித முனியையும் சந்திக்கவில்லை. சளியாத உழைப்பால் வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தைப் பயிரிட்டு, மானமாக ஜீவனத்தை நடத்திவந்தாள். தனிமை அவளுக்குப் பயம் தரவில்லை. அமைதியையே தந்தது. ஆனால் அன்று இரவு வாசல் புறத்திலிருந்து வந்த சப்தம், சிறிது நடுக்கத்தை உண்டு பண்ணியது.

இருந்த பொழுதிலும், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள். அப்போது மின்னிய மின்னலின் வெளிச்சத்தில், சுவரில் மாட்டியிருந்த குருவாயூரப்பன் படம்

தெரிந்தது. ''குருவாயூரப்பா! நாராயணு!'' என்று இரு முறை முணுமுணுத்தாள். ஒருவிதத் தைரியம் பிறந்தது. மெள்ள அடிமேல் அடி வைத்து வாசல் புறக் கதவை நோக்கி நகர்ந்தாள்.

வாசல்புறத் தாழ்ப்பாளைத் திறக்க விரலைத் தாழ்ப்பாளில் வைத்தவுடனே, 'இச் இச்.' என்ற தும்மல் ஒலி கேட்டது.

இடிச் சப்தத்துக்குப் பழகிப்போன நாராயணி அம்மாளுக்கு, இந்தச் சிறிய தும்மல் சப்தம் பயத்தைக் கொடுத்தது. கதவைத் திறவாமலே உட்புறம் திரும்பி ஓர் அடி எடுத்து வைத்தாள். உடனே மறுபடியும், 'டொக் டொக்' என்ற சப்தம் கேட்டது. நாராயணி அம்மாள் ஒரு விநாடி திகைத்து நின்றாள்.

பிறகு சிரமப்பட்டுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, தாழ்ப்பாளை நீக்கிப் படீரென்று கதவைத் திறந்தாள். அப்போது வேகமான காற்று, மழை நீரை நாராயணியின் முகத்தில் வாரி அடித்தது. நாராயணி பார்வை இழந்தாள் ஒரு விநாடிக்கு. சுதாரித்துக் கொண்டு கண்களைத் திறந்து பார்த்தாள். அவள் பார்த்த காட்சி, அவளை அப்படியே திகைக்க வைத்தது.

தண்ணீர், வீட்டுத் திண்ணையை நனைத்தபடி நீர்வீழ்ச்சிபோல் சென்று கொண்டிருந்தது. இடுப்பளவுத் தண்ணீரில் பாவாடை சட்டையுடன் ஒரு சின்னஞ் சிறு பெண் உருவம் தள்ளாடியபடி நின்று கொண்டிருந்தது.

மின்னல் வெளிச்சத்தில், தள்ளாடியபடி அவள் கறுத்த விழிகள் நாராயணி அம்மாளை நோக்கியபடி இருப்பது தெரிந்தது. அவள் உதடுகள் விலகி, முத்துப்போன்ற பற்களை வெளிக் காட்டியபடி இருந்தன. அந்தச் சிறு உருவம் ஏதோ பேச முயன்று உதடுகளை அசைத்தது. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

நள்ளிரவில், மழையடிவாரத்தில் தன் வீடு தேடிச் சிறுமி ஒருத்தி நிற்பானேன்? இது கனவுத் தோற்றமா, இல்லை உண்மையா? ஒன்றும் புரியாமல் நின்றாள் நாராயணி. பாலமுனி எண்ணத்தில் ஊறிப்போயிருந்த நாராயணி அம்மாளுக்குப் பீதி அதிகமாகிக் கொண்டே போயிற்று. உரத்த குரலில், ''குருவாயூரப்பன் மீது சத்தியம் செய்து சொல்றேன். யார் நீ?'' என்றாள்.

நாராயணியின் கடுமையான குரலைக் கேட்ட அந்தச் சிறுமி, அப்படியே நடுங்கி நின்றாள். அவள் பார்வை நாராயணி அம்மாள் மீது நிலைத்து நின்றது. அப்போதுதான் நாராயணி அம்மாள், சிறுமியின் பின்புறம் நோக்கினாள். தொலைவில் நெருப்பு எரிவது தெரிந்தது. கொட்டும் மழையில் பெரு நெருப்பு ஓர் ஆச்சரியமல்லவா? நாராயணி அம்மாள் நெருப்பையும் சிறுமியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

(தொடரும்)

## இதற்கு நிஜ அர்த்தம் என்ன?

பிரபல கம்பெனிகளில், கடிதங்களின் மேல் போடப்படும் நாகரிகமான குறிப்புக்களுக்கு மெய்யான அர்த்தம் என்னவாயிருக்கலாம் என்று 'மான்செஸ்டர் கார்டியன்' என்ற பத்திரிகை இப்படியொரு பட்டியல் தந்திருக்கிறது.

''பரிசீலனையில் இருக்கிறது.'' : உங்கள் பைலைத் தொலைத்துவிட்டோம்.

''தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது.'' : உங்கள் பைலைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

''தயவு செய்து இதைக் கவனித்து ஆக வேண்டியதைச் செய்யுங்கள்.'' : இந்த விவகாரத்தை வேறு எவரிடமாவது தள்ளிவிட வேண்டியது உம்மைப் பொறுத்த விஷயம்.

''இதுபற்றி இருவருமே கலந்து யோசிப்போம்.'' : என்னை மூச்சுத் திணறச் செய்து விட்டது. உங்களுக்கு எப்படி?





# மின்னல், மழை, மோகினி

## ஜாவர் சீதாராமன்

### அத்தியாயம் 2

தன்னைத் திரும்பத் திரும்பப் பார்த்தபடி நெருங்காமல் நிற்கும் நாராயணி அம்மாளை ஒருவித ஆச்சரியத்துடன் பார்த்தாள் சிறுமி.

நாராயணியோ, சிறுமியின் கால்கள் நிலத்தில் பதிகின்றனவா அல்லது காற்றில் மிதந்தபடி இருக்கின்றனவா என்று பீதியோடும் குழப்பத்தோடும் பார்த்தாள். சிறுமியின் கால்களைத் தண்ணீர் முழங்கால்வரை மறைத்திருந்தபடியால் ஒன்றும் தெரியவில்லை. அந்த மங்கிய வெளிச்சத்தில் கறுப்பாக அகன்று காணப்பட்ட அவள் கண்கள், நாராயணியின் கலக்கத்தை அதிகப்படுத்தின.

இதற்குள், சங்கரன்குட்டி எழுந்து, தாயைப் படுக்கையில் காணாததால், தேடிக்கொண்டே வாயில்புறத்துக்கு வந்துவிட்டான். சங்கரன்குட்டிக்கு எப்போதுமே தாயிடம் ஒரு பயம் உண்டு. அந்தத் தாயே ஒரு சிறிய குழந்தையைக் கண்டு பயந்து நிற்பதைப் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியமே ஏற்பட்டது.

### சென்ற வாரத்தில்

மழையும் இடியும் மின்னலும் கொட்டி முழக்குகின்ற இரவு வேளையில், குருவாயூர்-ஷோரனூர் பாதையில், விபத்துக்காளாகிறது ஒரு பஸ். கணவனின் கொடுமை பொறுக்க மாட்டாமல், தன் குழந்தையுடனும் கள்ளக் காதலனுடனும் வீட்டை விட்டு ஓடிவந்த ஓர் இள மங்கை, ''ஐயோ மோகினி!'' என்று அலறி விழுகிறாள்.

கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு சிறு வீட்டில், தூங்கிக் கொண்டிருக்கும் நாராயணி அம்மாள் திடுக்கிட்டுக் கண் விழிக்கிறாள். அவளுடைய மகன் அரைப் பைத்தியம் சங்கரன்குட்டி கொல்லைப் புறத்தில் நெருப்பு மூட்டி விளையாடிக் கொண்டிருக்கிறான். ''மின்னல் செய்கிறேம்மா,'' என்கிறான். இவனை யார் காப்பாற்றப் போகிறார்களோ என்று நாராயணி மனம் நொந்தபடி திரும்பப் படுக்கைக்கு அழைத்து வருகிறாள் மகனை. வாசல் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கிறது.



www.t.me/tamilbooksworld

தாய்க்குப் பின்புறம், பரட்டைத் தலையுடன், சுழலும் கண்களுடன் நின்று கொண்டிருக்கும் சிறுவனை, சிறுமி லேசாகப் புன்முறுவலுடன் பார்த்தாள்.

நாராயணிக்கு எதிரே நிற்கும் சிறு உருவம், தனக்குப் பின்புறம் எதைப் பார்த்துச் சிரிக்கிறது என்று புரியவில்லை. ஒருவேளை தனக்குப் பின்புறமும், முன் பின் தெரியாத ஒரு பாலமுனி நிற்கிறதோ என்று நினைத்து விருட்டென்று வேகமாகத் திரும்பினாள்.

சங்கரன் தனக்கே உரித்தான அசட்டுச் சிரிப்புடன், ''யாரம்மா அந்தப் பெண்?'' என்று கேட்டான்.

நாராயணி, ஆத்திரத்துடன், ''போடா...போ வீட்டுக்குள்ளே. அது பெண்ணில்லேடா. அது... அது...'' என்று எதையோ சொல்ல நினைத்து அதைச் சொல்லத் துணிவு இல்லாமல் கலவரத்தோடு நிற்கும் போது, அந்தச் சிறுமியே முந்திக் கொண்டு, ''ஞான்...ஞான்தான் மோகினி,'' என்று மழலை மலையாளத்தில் சொல்லிவிட்டுத் தண்ணீரிலே தள்ளாடியபடி நின்றாள்.

நாராயணிக்குத் தலை சுழன்றது. அவள் உதடுகள், ''மோகினி...பால மோகினி,'' என்ற வார்த்தைகளை முணு முணுத்தன. அத்தோடு, ''குருவாயூரப்பா! நாராயணா!'' என்று ஓலமிட்டுக்கொண்டே கதவின் நிலையில் சாய்ந்தாள்.

சிறுமியும் சங்கரனும் திகைத்தனர்.

அந்தச் சிறுமியின் அகன்ற கறுப்பு விழிகளும், நீண்டு அருவிபோல் விழுந்த கேசமும், சாதாரணச் சூழ்நிலையில் நாராயணிக்கு, 'எவ்வளவு அழகான குழந்தை!' என்று தாய்மையின் துடிப்பைக் கொடுத்திருக்கும். ஆனால் அதே அழகிய உருவம், நாராயணியின் பயம் நிறைந்த மனநிலையில், பீதியின் துடிப்பைத்தான் கொடுத்தது.

படிப்படியாக ஏறிக்கொண்டிருந்த பயம் அந்தச் சிறு குழந்தை தன் பெயர் ''மோகினி,'' என்று சொன்னதும், அந்த அம்மாளை உணர்விழக்கச் செய்தது.

வீட்டை விட்டு ஓடிவந்த தாயோடு பஸ்ஸில் வந்த மோகினி, மலைச்சரிவில் பஸ் உருண்டு விழுந்தபோது, விழித்துக் கொண்டாள். 'தாயின் மடியில் இருந்த நாம் புதருக்கு எப்படி வந்தோம்? நாம் ஏறிவந்த பஸ் ஏன் பற்றி எரிகிறது? தாய் எங்கே? தாய்க்குத் துணையாக வந்த டீக்கடை ஆள் எங்கே?' என்று தெரியாமல் தவித்தாள். நீண்டு உயர்ந்த மரங்கள் மழை இருட்டில் தன்னைக் குனிந்து பார்க்கும் ராட்சதர்கள்போல் தெரிந்தன. குழந்தை மோகி



# யார், சொல்லுங்கள்

இருபது வருடங்களுக்கு முன்னால் 'பாசரசு' என்ற பத்திரிகையின் ஆசிரியர், விசேட மலருக்கு ஒரு கட்டுரை கேட்டு ஒரு தலைவருக்கு எழுதினார். தலைவர் எழுதிய பதில்:

''நமஸ்காரம். என்னுடைய மூளை தற்போது காலியாக இருக்கிறது. இந்த யந்திரம் நாம் சொன்னபடி கேட்காது. கட்டுரை எழுது என்று நண்பர்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்ள விரும்பிய போதிலும் கட்டுரை வெளிவரமாட்டேன் என்கிறது!

தயவு செய்து மன்னிக்க வேண்டும்.''

இப்படி எழுதிய தலைவர் யாரென்று அறிய 46-ம் பக்கம் பார்க்கவும்.

விக்கு அழுகைதான் வந்தது. ஓவென்று அழுதாள்.

நான்கு வயதுக் குழந்தைக்கு, அழுதால் தாய் வந்து தேற்றுவாள் என்பது நினைப்பு. இன்று தாய் வரவில்லை. அவள் அழுகைக்கு, இடியின் உறுமல்தான் பதில் கொடுத்தது. யாரும் மோகினியின் குரல் கேட்டு அங்கு வரவில்லை, ஒரு மலைப் பாம்பைத் தவிர! அவள் உட்கார்ந்திருந்த இடத்தில் அவள் தலைக்குமேல் ஒரு பாம்பு நகருவதைக்கூட, பாவம் குழந்தை கவனிக்கவில்லை. இன்னும் கொஞ்சம் ஓங்கி அழுதால் அம்மா வருவாள் என்ற நம்பிக்கையோடு அழுது பார்த்தாள். அப்போதும் தாய் வரவில்லை.

மோகினிக்கு அதற்குமேல் அழச் சக்தியுமில்லை. அப்போதுதான் மின்னலின் ஒளியில் நாராயணியின் சிறு வீடு அவள் கண்ணில் பட்டது. அதே சமயத்தில் பசியால் உந்தப்பட்டு நகர்ந்து வரும் பாம்பு, மோகினியை நெருங்கியது. இன்னும் ஒரு வினாடி குழந்தை அங்கு தங்கியிருந்தால், பாம்பு அவளைச் சுற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் மின்னல் ஒளியில் வீட்டைப் பார்த்த குழந்தையின் மனத்தில் அங்கு ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. வீட்டை நோக்கி நகரத் தொடங்கினாள். மலை நாகம் ஏமாந்து நின்றது. ஒருவேளை மோகினி அந்தப் பாம்பைப் பார்த்திருந்தால், பயத்தால் அவள் மயங்கி விழுந்திருக்கலாம். அவள் வாழ்வு முடிந்திருக்கலாம். ஆண்டவன் மோகினி வாழவேண்டும் என்று கணக்கு செய்து விட்டானே! இல்லாவிட்டால் சரிவில் பலமுறை உருண்ட பஸ்ஸிலிருந்து, எப்படிச் சிறு காயம்கூட இல்லாமல் இவள் தப்பினாள்?

மோகினி, பாம்பு இருப்பதைக்கூடக் கவனியாமல், நாராயணியின் வீட்டு வெளிப்புறம் வந்து நின்றாள்.

வீட்டைச் சுற்றி நீர் ஓடுவதைக் கண்டு பயந்தபடியே நின்றாள். பிறகு துணிவு கொண்டு கதவை அசைத்துச் சப்தம் செய்தாள். அந்தச் சப்தம் கேட்டு வந்து கதவைத் திறந்த நாராயணி, அவளைப் பார்த்து பாலமுனி என்று நினைத்து உணர்விழந்தாள்.

அச்சத்தால் ஆதரவு தேடிவந்த குழந்தை அச்சத்தைக் கொடுத்து நின்றது. ஆனால் சங்கரன்குட்டி மோகினியைப் பார்த்து அச்சப்படவில்லை. மோகினியின் பின்புறம் தெரிந்த



"என்னண்ணே, உன் கழுதையைப் போன மாசம் ஐம்பது ரூபாய்க்கு விற்கிறேன்னு சொல்லிட்டு, இப்போ இருநூறு ரூபாய்கறியே? நல்லாயிருக்கா?"

"நீ பேப்பர் பார்க்கலியா? கழுதைப் பால் உடம்புக்கு நல்லதுன்னு கவர்மெண்ட்டிலேயே சொல்லிட்டாங்கப்பா. இப்ப ஒரே கிராக்கி!"

நெருப்பைப் பார்த்தான். அவ்விடத்தில் இருந்து தான் மோகினி வந்திருக்க வேண்டுமென்று ஊகித்துக்கொண்டான். சங்கரன்குட்டி தன்னைப்போல் அவளையும் நினைத்தான்.

அந்த நெருப்பை உண்டு பண்ணியது மோகினியாகத்தான் இருக்கும் என்று நினைத்தான். வீட்டுப் பின்புறத்தில் அவன் கூரைக்குத் தீ வைத்து, இடியை உண்டுபண்ண முயன்றபோது, அவன் தாய் வந்து தடுத்துவிட்டாள். ஆனால் அதே சமயத்தில் இந்த மோகினி மட்டும் காட்டில் இடி தயார் செய்து கொண்டிருக்கிறாள், அவளைத் தடுக்க யாராலும் முடியவில்லை என்று நினைத்தான். அவனுடைய மந்த புத்தியில் குழந்தை மோகினியின் மீது லேசாகப் பொறாமை ஏற்பட்டது.

"நீதான் அந்தப் பெரிய இடி செய்தாயா?" என்று எரிந்து கொண்டிருக்கும் பஸ்ஸைச் சுட்டிக்காட்டிக் கேட்டான். மோகினி ஒன்றும் புரியாமல் விழித்தாள். பிறகு திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு அவன் கட்டிக் காட்டுவது, எரியும் பஸ்தான் என்று புரிந்தது. அதை எரித்ததாக அவன் குற்றம் சாட்டுகிறான் என்று மட்டும் புரிந்து

கொண்டாள். அந்தச் சின்ன வயதிலும் மோகினியின் மனத்தில், தான் நிரபராதி என்பதை ஸ்தாபிக்க வேண்டும் என்று தோன்றியது.

''ஞான் ஒண்ணும் செய்யில்லா. ஞான் வன்ன பஸ்ஸு தீப்பிடுச்சி இருக்குன்னு. ஞான் வன்ன பஸ்ஸு,'' என்று சொல்லி நெருப்பைக் காட்டி, தன்னை நிரபராதியாக்கிக் கொண்டாள்.

அதுவரையில் உணர்வு இல்லாமல் திகைத்துக் கொண்டிருந்த நாராயணி அம்மாளுக்கு, பஸ் என்ற வார்த்தையைக் கேட்டதும் சிறிது தெளிவு ஏற்பட்டது.

சங்கரன்குட்டி சகஜமாகப் பேசுவதைப் பார்த்ததும், நாராயணி துணிவுடன், குழந்தை மோகினியைக் கூர்ந்து நோக்கினாள். நனைந்த உடை, அவள் கழுத்தில் அணிந்திருந்த செயின், அதன் நுனியில் தொங்கிய சின்னஞ்சிறு கிருஷ்ண விக்கிரகம் இவை எல்லாம் சேர்ந்து மோகினியை ஒரு மனிதக் குழந்தை என்று தெளிவாக்கின. நாராயணி மெள்ள நெருங்கி மோகினியின் தலையைத் தடவிப் பார்த்தாள்.

''நீ யாரம்மா குழந்தை?'' என்று கேட்டாள்.

குழந்தை, ''ஞான் மோகினி, ஞான் மோகினி,'' என்று கூறினாள். நாராயணி அம்மாள், ''நிண்ட அச்சன் அம்மே எவ்விட?'' என்று கேட்டாள்.

குழந்தை தூரத்தில் எரியும் நெருப்பைப் பார்த்தாள். பிறகு தடுமாற்றத்துடன், ''எண்டா அச்சன் குருவாயூர்லே; அம்மை ஈ பஸ்லே,'' என்று சொல்லி எரியும் நெருப்பைக் காட்டினாள்.

இதைக் கேட்டதும் நாராயணி பதறிப்போனாள். பயத்தால் மரத்துப் போயிருந்த அவள் மனத்தளத்தில், விஷயங்கள் வேகமாகப் புலப்படலாயின. உடனே மோகினியை அழைத்துக் கொண்டு நெருப்பை நோக்கி நகர்ந்தாள். சங்கரன்குட்டியும் பின்தொடர்ந்தான். இப்போது பஸ்ஸைச் சுற்றி ஜ்வாலை சற்றுக் குறைந்திருந்தது.

எரிந்து கருகிப் போயிருந்த பஸ்ஸில் மழைத்துளிகள் விழுந்தபடி இருந்ததால் 'புஸ்' என்ற சப்தத்தோடு புகை எழுந்தது. நாராயணி பஸ்ஸைச் சுற்றிப் பார்த்தாள். தரையில் முகம் கருகிய ஆடவனின் உடல் தெரிந்தது. நாராயணி அம்





மாள் அதை நெருங்கினாள். அதுதான் டீக்கடைக்காரன் உடல். மோகினி அதைப் பார்த்ததும், ''டீக்கடையிலுள்ள அம்மாவன்,'' (டீக்கடை மாமா) என்று சொன்னாள்'

நாராயணி டீக்கடைக்காரனை அசைத்துப் பார்த்தாள். எரிந்த உடலாயினும் அது ஜில்லிட்டுக் கிடந்தது. பஸ்ஸின் இன்ஜின் புறத்தில் மட்டும் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. உருமாறிப் போயிருந்த பஸ் தரையில் குத்திட்டு நின்றது. மெள்ள நாராயணி பஸ்ஸை நெருங்கினாள். பஸ்ஸின் கதவு திறந்து கிடந்தது.

அதன் அருகில் தரையில், முற்றிலும் வெந்து கறுத்துப்போன உடலோடு ஒரு உருவம் கிடந்தது. முகம் மட்டும் நெருப்புப் படாதபடி கிடந்தாள் மோகியின் தாய். உடல் பற்றி எரிந்து துடித்த நிலையிலும், வலியின் காரணமாகவோ, தீயின் வெப்பத்தின் காரணமாகவோ அந்த முகத்தில் ஒரு சுளிப்பு இல்லை; விகாரம் இல்லை. இறந்தவள் முகம் புன்முறுவலோடு காணப்பட்டது. அந்த முகத்தில் ஒருவித அமைதியும் திருப்தியும்தான் இருந்தன. கணவனுக்குச் செய்த துரோகத்துக்கு அக்கினிப் பிரவேசம் செய்து பிராயச்சித்தம் தேடி விட்டோம் என்ற உணர்வும் உறுதியும் அந்தப் பேதை மங்கையின் உள்ளத்தில் இருந்திருக்க வேண்டும்.

தாயின் முகத்தைக் குனிந்து பார்த்த மோகினிக்கு, தாய் இறந்து விட்டாள் என்பது புரியவில்லை. சாவை அந்தக் குழந்தை முதன் முறையாகச் சந்திக்கிறாள் அல்லவா? உண்மை புரியாமல், ''அம்மே! அம்மே,'' என்று தன் தாய் மொழியாகிய மலையாளத்தில் கூறி அழுதது.

ஆனால், பெற்றவளோ, செவி அற்றவளாகக் கிடந்தாள். நாராயணியின் தாய்மை உணர்ச்சி பொங்கி எழுந்தது. குழந்தையை இறுகத் தழுவி அணைத்துக் கொண்டாள். குழந்தை மோகினி, ''அம்மே! எந்தா மிண்டாதிருக்குன்னுன்னது?'' என்று கேட்டாள்.

நாராயணி, குழந்தையிடம் எப்படி விளக்குவது என்று தெரியாமல் தவித்தாள். மோகினியை மெள்ள வீட்டுக்கு அழைத்துப்போக இழுத்தாள். குழந்தை விடாமல் தாயை நோக்கி ஓடியது.

அவளது நான்கு வருஷ வாழ்வில் அவளுக்கு ஒரு சிறு உண்மைதான் தெரியும். அவள் அழுத போதெல்லாம் தாய் முத்தமிட்டுத் தேற்றியிருக்கிறாள். சில சமயங்களில் அவளை அறைந்து கண்டித்தும் இருக்கிறாள். இரண்டும் செய்யாமல் தன்னை விறைத்துப் பார்த்தபடி படுத்திருக்கும் தாயை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. ''உறவு என்பது முறியக்கூடிய ஒன்று. வாழ்வு என்பதே உறவுகள் சேர்ந்த சங்கிலி. அதில் நாம் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது சில காலம். அவற்றை முறிப்பது சில காலம். நாமாக முறிக்காத உறவுகளை மரணம் வெட்டிவிடுகிறது,'' என்பதெல்லாம் மோகினிக்கு எப்படிப் புரியும்?

அவளுக்குப் புரிந்ததெல்லாம் 'அம்மை,' என்ற உறவு, 'அச்சன்' என்ற உறவுதான். அழுதுகொண்டிருக்கும் மோகினியைப் பிடித்து நாராயணி ''அம்மா மரிச்சி போயி. ஒரிக்கலும் சம்சாரிக்கில்லா. ஒரிக்காலும் சம்சாரிக்கில்லா,'' என்ற மூல தத்துவத்தை விளக்கினாள். குழந்தை மோகினி நாராயணி முகத்தையே விறைத்துப் பார்த்தபடி இருந்தாள்.

''மரிச்சிபோயி,'' என்ற வார்த்தை, அவளது மனத்திரையில் சில காட்சிகளை உருவாக்கின. ஒரு மாதத்துக்கு முன்பு, அவள் அச்சன், வீட்டில் எலிப்பொறி வைத்து எலியைப் பிடித்த காட்சி தோன்றியது. பிறகு அவள், அச்சன் பொறியைத் திறந்து எலியை வெளியேற்றி அதைத் தடியால் அடித்ததும், அடிபட்ட எலி அப்படியே அசையாமல் வீட்டின் வெளிப்புறம் கிடந்ததும் நினைவுக்கு வந்தது. அப்போது அவள் அச்சனை, ''எந்தா எலி ஓடில்லா?'' என்று கேட்டாள்.

''எலி மரிச்சிப்போயி,'' என்று அவன் சொன்னான். அன்று பிற்பகல் வரை அந்த எலி வீட்டின் வெளிப்புறம் அசையாமல் கிடந்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் மோகினிக்குப் பரிதாபமாக இருந்தது. மோகினியின் மனத்தில் அவளுடைய தாய், அந்த எலியின் நிலைக்கு வந்துவிட்டாள் என்ற உண்மை இப்போது விளங்கியது.

அதே விநாடி அவள் உடல் பூராவும் 'கிடுகிடு' என்று ஆடியது.

''மரிச்சிப்போயி,'' என்ற உண்மை தெரிந்ததும், விவரிக்க முடியாத ஒரு பயம், துக்கம் அவளைச் சூழ்ந்து கொண்டது. அது ரத்த பாசத்தால் ஏற்பட்டதா அல்லது கர்ம பந்தத்தால் ஏற்பட்டதா என்பதை விவரிக்க முடியாது. இந்தத் துக்கம் காலம் தாழ்த்தி மோகினியின் ஆன்மாவை அடைந்ததால் அது புயல்போல் தாக்கியது. அவளால் அதைச் சமாளிக்க முடியவில்லை. தாயை நிரந்தரமாகப் பிரிந்து விட்டோம் என்ற நிலையில், அச்சன் நினைவுதான் வந்தது. ''அச்சன்! அச்சன்!'' என்று அலறியபடி ஞாபகம் இழந்து விழுந்தாள்.

நாராயணி, ஓடிப்போய்க் குழந்தையைத் தூக்கினாள். மோகினி துணிபோல், நாராயணியின் கைகளில் கிடந்தாள். எதை, எப்போது, எந்த அளவுக்குப் பேசுவது என்பதை உணராத சங்கரன்குட்டி, ''அம்மே! மோகினியும் மரிச்சிப்போயி!'' என்று கூறிக் கை கொட்டி நகைத்தான்.

நாராயணிக்கு அவனை அறையலாம் போலிருந்தது. ஆனால் அவள் கைகளில் மோகினி துவண்டு கிடந்ததால், அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ராஜி
அப்படி எழுதிய நினைவர்

(தொடரும்)




## அத்தியாயம் 3

அந்த நள்ளிரவில் மோகினியைத் தூக்கியவாறு நாராயணி வீட்டுக்கு வந்தாள். சங்கரன்குட்டி படுத்திருந்த படுக்கையில் குழந்தையைப் போட்டாள். அதன் உடலைப் பச்சாதாபத்தோடு தடவிக் கொடுத்தாள்.

சங்கரன் குட்டி, தாயை ஒருவிதமாகப் பார்த்தான். தன் படுக்கையில் குழந்தையைப் போட்டுவிட்டுக் கவலையோடு அந்தச் சிறுமியைத் தடவிக் கொடுப்பது கண்டு சங்கரன்குட்டிக்கு விபரீதமான யோசனை தோன்றியது. ''அம்மா! நானும் மரிக்கப் போறேன். என் பக்கத்திலே உட்கார்ந்து என்னையும் தடவிக்கொடும்மா,'' என்று சொல்லிவிட்டு, நெடுங்கிடையாகப் படுக்கையில் படுத்து விட்டான்.

தாய்க்கு ஆத்திரம் வந்தது. ''அடே! அவ மரிச்சிப் போகலேடா. மயங்கி விழுந்திருக்கா. நீ பாயை விரிச்சுட்டு அப்படிப் படுடா,'' என்று கட்டளை விட்டாள்.

தாயின் முகத்தில் தெரிந்த கோபத்தைப் பார்த்துச் சங்கரன்குட்டி ஒதுங்கிப் போய்ப் படுத்தான். நாராயணி அம்மாள் நீலகிரித் தைலத்தை எடுத்து மோகினியின் பொட்டிலும் நெஞ்சிலும் தடவினாள். பக்கத்திலே தானும் படுத்துக் கொண்டாள். மோகினியை அணைப்பதில் ஒரு நிறைவும் திருப்தியும் ஏற்பட்டது. அப்படியே அயர்ந்து தூங்கி விட்டாள்.

திடீரென்று வந்த ஒரு குழந்தையைத் தாய் அணைத்தபடி படுத்திருப்பதைப் பார்த்து, சங்கரன்குட்டி எதையோ இழந்துவிட்டவன்போல் ஆனான். எழுந்து நின்றான். பிறகு கைகளைச் சொடுக்கினான். மறுபடியும் படுத்துக் கொண்டான். விழித்துக்கொண்டே, வானத்தில் தோன்றிய மின்னலைக் கணக்கெடுத்தபடி படுத்திருந்தான். கணக்கும் அவனுக்கு ஒழுங்காகத் தெரியாது.

1, 2, 7, 9, 4, 3—என்று ஏதேதோ எண்ணிக் கொண்டே கண்ணை மூடித் தூங்கினான்.

பொழுது விடிந்ததும் மழை நின்று இருந்தது. பட்சிகளின் ஆரவாரத்தின் ஒலி கேட்டு நாராயணி அம்மாள் விழித்துக்கொண்டாள்.

குழந்தை மோகினி, இரவு படுத்த நிலையிலேயே கொஞ்சமும் அசையாமல் அப்படியே படுத்திருந்தாள். குழந்தையின் பிஞ்சுக் கால்களைத் தொட்டுப் பார்த்தாள். நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். ஜுரம் இல்லை.

தாய் இறந்துவிட்டாள் என்பதைப் புரிந்துகொண்டவுடன் மயங்கி விழுந்த குழந்தையின் புத்திக்கு ஏதாவது நேர்ந்து இருக்குமோ என்று பயந்தாள்.

சித்த சுவாதீனமில்லாத ஒரு பிள்ளைக்குத் தாயாக இருந்தபடியால், அவளுக்குக் குழந்தையின் புத்தியைப் பற்றித்தான் முதல் கவலை ஏற்பட்டது. அதனால் மோகினியை எழுப்பவே பயமாக இருந்தது.

அடுத்தபடி நாராயணியின் மனத்தில் பல சில்லறைப் பிரச்னைகள் எழுந்தன. 'தன் வீட்டருகில் நிகழ்ந்த விபத்தைப் பற்றி, அரை மைலுக்கப்பாலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் தகவல் கொடுப்பதா? தகவல் கொடுத்தால், ஏன் உடனே சொல்லவில்லை என்று கேட்பார்கள். தகவல் கொடுக்காமலே இருந்தால் மோகினியை எப்படி அவளைச் சேர்ந்தவர்களிடம் சேர்ப்பது? ஒருகால் பஸ்ஸில் ஏதாவது விலையுயர்ந்த பொருள்கள் இருந்தால், அவைகளைப் பத்திரப்படுத்திப் போலீஸாரிடம் கொடுப்பது தன்னுடைய பொறுப்பல்லவா? அம்மாதிரிப் பொருள் ஏதாவது காணாமல் போய்விட்டால் அல்லது சிதறி எங்காவது மறைந்து விழுந்திருந்தாலும் சந்தேகம் தன்மேல் அல்லவா வரும்?' என்றெல்லாம் நினைத்தாள்.

ஏதோ வறுமையில் ஓரளவு அமைதியோடு வாழ்ந்து வந்தவளுக்கு, இந்த

விபத்து புதுப் பொறுப்புக்களையல்லவா சுமத்துகிறது?

விடிந்துவிட்டது. வெளியே போய்ப் பார்ப்போம் என்றால், மோகினியைத் தனியே விட்டுச் செல்ல மனம் இல்லை. மாறுபட்ட யோசனைகளில் குழம்பி இருந்தான். நாராயணி அம்மாளின் மூத்த சகோதரன் கோழிக்கோட்டில் ஒரு போலீஸ் ஹெட் கான்ஸ்டபிளாக இருந்ததால், அவனுக்கு மாமூல் போலீஸ் நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்று தெரியும். இப்படிச் சிந்தனைகளிலேயே பொழுது போக்கினால் முடியுமா?

அன்றாடக் கடமைகள் இருக்கின்றனவே! பக்கத்து அறையில் அடுப்பை மூட்டி நீர் காய வைத்துத் தேயிலை பானம் தயார் செய்தான். பாலில்லா தேனீர்! அதில் இரண்டு பெரிய திப்பி வெல்லத்தைப் போட்டான்.

சங்கரன்குட்டி விழித்துக் கொண்டான். அதோடு அவன் பசியும் விழித்துக் கொண்டது. கொல்லைப்புறம்சென்று கால்முகம்கழுவி, பல் தேய்த்துவிட்டு வந்து தாயின் அருகில் உட்கார்ந்தான்.

மண்பானையில், உலர்ந்த இலையில் சுற்றி வைத்திருந்த நேந்திரங்காய் வறுவலை அவன் முன் எடுத்துவைத்தான்..



ஏழு வயதுப் பிள்ளை, பதினேழு வயது இளைஞனின் பசியோடு அந்த உப்பிட்ட வறுவலைக் காலி செய்து விட்டு மடக் மடக்கென்று இரண்டு கிளாஸ் மோரைக் குடித்தான். குட்டிக்குச் சாப்பாட்டு விஷயம் ஒன்றிலாவது வயதுக்கு மிஞ்சிய சாமர்த்தியம் இருக்கிறதே என்ற திருப்தி நாராயணிக்கு. அவனும் சாயாவைக் குடித்துவிட்டு, சிறு மூங்கில் தட்டில் வறுவல்களையும் ஒரு கண்ணாடி கிளாஸில் கொஞ்சம் சூடான சாயாவையும் எடுத்துக் கொண்டு மோகினியிடம் வந்தாள்.

மெள்ளத் தட்டிக் குழந்தையை எழுப்பினாள். மோகினி விழித்தெழுந்தாள். நாராயணி அம்மாளையும், சங்கரன்குட்டியையும் மாறி மாறிப் பார்த்தாள். வீட்டை ஒருமுறை பார்த்தாள். ''மோகினி! இதைச் சாப்பிடு.'' என்றாள் நாராயணி.

மோகினி, வேண்டாம் என்று தலையை அசைத்தாள்.

''இந்தச் சாயாவையாவது குடி.''

மோகினி ஆவி பொங்கும் சாயாவைப் பார்த்தாள். நடுங்கும் கைகளோடு கிளாஸை வாங்கிக் குடித்தாள். பிறகு மௌனமாகத் தரையைப் பார்த்தபடி இருந்தாள்.

'மோகினி! இன்னும் கொஞ்சம் சாயா?''

குழந்தை, ''வேண்டாம்,'' என்று கூறிவிட்டுத் தரையைப் பார்த்தாள். தன் அம்மாவைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

நாராயணி அம்மாள் தொடர்ந்து, ''உனக்கு என்ன வேணும் மோகினி?'' என்று கேட்டாள்.

மோகினி தலையை நிமிர்த்தி நாராயணியைப் பார்த்தாள். ''எண்ட அச்சனை நோக்கணும்.''

''நிண்ட அச்சன் பேரு என்ன மோகினி?''

மோகினி கண்களை அகல விரித்து யோசித்தாள்.

''எண்ட அச்சன் பேரு... அச்சன்,'' என்று சொல்லி





விட்டு மறுபடியும் படுத்துவிட்டாள்.

இறந்துவிட்ட தாயைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாதது ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு பயங்கர விபத்தில் தாயை இழந்த குழந்தை, சாயாவைக் குடித்து விட்டு மறுபடியும் தூங்குவது அதைவிட ஆச்சரியமாக இருந்தது.

துக்கத்தைப் பாராட்டி ரசிக்கவும் உலக அனுபவம் தேவைப்படுகிறது. ஒன்றுமறியாத குழந்தைக்கு, தாயின் பிரிவு வெறும் அதிர்ச்சியைத்தான் கொடுத்தது. உலக அனுபவம் முற்றி உண்மை தெளிவாகி, துறவியானால் போதும், பிரிவுத் துக்கத்தை நாம் பாராட்டுவது இல்லை. ஒன்றுமறியாத நிலைக்கும், எல்லாம் தெளிந்த நிலைக்கும் இடையே சராசரி மனிதனாய் இருக்கும் போதுதான், பிரிவின் துக்கம் நமக்கு ஏற்படுகிறது போலும்!

குழந்தை விழித்தவுடன் கதறி அழுவாள்; அவளை மடியிலே போட்டு அன்போடு தேற்ற வேண்டும் என்று தன் தாய்மை உணர்ச்சிகளைத் தயார்ப் படுத்திக் காத்திருந்த நாராயணிக்கு ஏமாற்றமே ஏற்பட்டது.

இரவு வேளையில் ரயில்வே ஸ்டேஷனில் தூங்கும் பிரயாணி எழுந்து, போர்ட்டரிடம், ''எக்ஸ்பிரஸ் வந்தவுடன் என்னை எழுப்பு,'' என்று சாதாரணமாகச் சொல்வதுபோல் அல்லவா மோகினி, ''என்ட அச்சனை நோக்கணும்,'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள்!

மோகினி மன உறுதியின் காரணமாக அப்படி இருந்தாள் என்று சொல்வதா அல்லது அவளை ஒன்றுமே அறியாத குழந்தை என் று சொல்வதா? நாராயணிக்கு விளங்கவில்லை. அப்பனைப் பார்க்கத் துடிக்கும் அந்தக் குழந்தையால் அப்பன் பெயரைக்கூட சொல்லத் தெரியவில்லை. எப்படி இவளைத் தகப்பனிடம் சேர்க்கப் போகிறோம் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்த நாராயணி அம்மாளிடம் சங்கரன்குட்டி, ''மோகினி மட்டும் என்னம்மா, நானும் என் அச்சனைப் பார்க்க வேண்டும்,'' என்று உளறினான்.

''நீ உங்கப்பனைப் பார்க்கணும்னு மலை உச்சியிலிருந்து குதிக்கணும். இல்லேன்னு நெருப்பிலே விழுந்து சாகணும். கொஞ்சம் சும்மா இருடா,'' என்று ஆத்திரம் தீரப் பேசிச் சொல்லி நாராயணி அவனை அடக்கினாள்.

இதே சமயத்தில் வீட்டின் வெளிப்புறம் இரைச்சல் கேட்டது. நாராயணி அம்மாள் வெளியே வந்து பார்த்தாள். தொலைவில் எரிந்து கருகிப் போய் இருந்த பஸ்ஸின் கூடு தெரிந்தது. அதைச் சுற்றிப் பத்துப் பதினைந்து ஆட்கள் நின்று கொண்டு இருந்தனர். எல்லோரும் அவளுக்கு ஓரளவு தெரிந்த அருகிலிருக்கும் வாழைத் தோட்டத்துக் கூலிகள்.

அவர்கள் உற்சாகத்தோடு பஸ்ஸைச் சுற்றி வந்து பார்வையிட்டபடி இருந்தனர்.

இளம் எழுந்து காட்டுக்குச் செல்வது, பூமியைத் தோண்டி நாற்று நடுவது, இப்படியே உப்புச் சப்பில்லாத ஒரே மாமூல் வேலையைச் செய்கின்றவர்களுக்கு, சில நாள் பேச விஷயம் கிடைத்தது அல்லவா? மாமூலை விட்டு மாறிய நிகழ்ச்சிகள் எதுவாயினும் அது சுவாரசியமானதே. ''அவள் அவனோடு ஓடினாள், அவன் போலீசாரால் பிடிபட்டான்,'' போன்ற நிகழ்ச்சிகளே ஊர் வாய் மெல்ல உதவுகிறபோது, இம்மாதிரி பஸ் உருண்டு எரிந்து விழுந்ததுபோன்ற அசாதாரண விஷயம் கிடைத்தால், சும்மா விடுவார்களா? அவர்கள் கற்பனை சக்திக்கு உணவு கிடைத்த மாதிரி அல்லவா? ஒவ்வொருவனும் விபத்து நிகழ ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தான். ஒருவன், ''டிரைவர் பட்டை அடித்திருப்பான்,'' என்று பொருள்படும்படி சொன்னான். இன்னொருவன், ''சடன் பிரேக் போட்டிருப்பான், வண்டி ஸ்கிட்டாகியிருக்கும்,'' என்று தன் மோட்டார் யந்திர அறி



''பிளட் பிரஷர் பார்க்கணும். டாக்டர் எங்கே இருக்கிறார்?''

''ஐந்தாவது மாடியில். சீக்கிரம் ஓடுங்கள். டயமாச்சு.''

லைக் காட்டி விளக்கிக் கொண்டிருந்தான். ஸ்டியரிங் வீல் அருகில் கிடந்ததால் கண்டக்டரை டிரைவர் என்றும் நினைத்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

டீக்கடைக்காரனையும், அலங்கோலமாக விழுந்து கிடந்த மோகினியின் தாயையும் பார்த்த கூட்டம் அதன் பச்சாத்தாப உணர்ச்சியைப் பலமாகத் தெரிவித்தது.

''ஐயோ! பார்க்கவே முடியல்லே,'' ''காணச் சகிக்கில்லா,'' என்று சொல்லிக் கொண்டே அந்த இடத்தைவிட்டு நகராமல் நின்று கொண்டிருந்தனர்.

மோகினியின் தாய் எடுத்துவந்த டிரங்க் பெட்டி, மூலே நசுங்கிப் பாதித் திறந்தபடி கிடந்தது.

பயந்து, வீட்டுக்குத் தெரியாமல் ஓடி வரும் பெண் எவ்வளவு பொருள்களை எடுத்துக்கொண்டு வர முடியுமோ அவ்வளவைத்தான் எடுத்து வந்திருந்தாள்.

குழந்தையுடைய கசங்கிய கவுன்கள், பழைய சேலைகள், சிறு பவுடர் பெட்டி, ஒரு பழைய குருவாயூரப்பன் படம்—இவைதான் இறந்தவளின் சொத்து. அவை யாவும் கருகிப் போகாமல் புல் தரையில் கிடந்தன. குருவாயூரப்பன் படம், பிணமாகிக் கிடந்த மோகினியின் தாயின் முகத்தின் எதிரே கிடந்தது.

''கணவன் வீட்டுக் கொடுமையிலிருந்து காப்பாற்று, காப்பாற்று என்று என்னிடம் தினமும் கதறியிருக்கிறாய். பார், உன்னைக் காப்பாற்றிவிட்டேன்,' என்று சொல்வதுபோல் இருந்தது படத்திலிருந்த கடவுளின் தோற்றம்.

டீக்கடைக்காரனின் மணி பர்ஸ் அவனருகில் கிடந்தது. அதன் விளிம்பிலிருந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் கத்தையாகத் தெரிந்தன. சுமார் ஐந்நூறு ரூபாய்க்கு இருக்கும் அந்தப் பர்ஸிலிருந்த தொகை. அதுதான் அவன் தன் எதிர்காலத்தை அமைக்கக் கொண்டுவந்த முதல். அந்த முதல் செலவாகாமலே அவன் வாழ்க்கை வியாபாரம் ஓய்ந்து முடிந்துவிட்டது.

சிதறிக் கிடக்கும் நோட்டுக்களை அங்கு நின்றவர்களில் சிலர், 'பசி'யோடு பார்த்தனர்.

அவர்கள் தனியாக இருந்திருந்தால் எரியும் காட்டில் அகப்பட்டதைச் சுருட்டத் தயங்கியிருக்க மாட்டார்கள். ஆனால் கூட்டமாக இருந்ததால், பணத்தைத் தொடத் துணிவு இல்லாமல் இருந்தார்கள்.

இதற்குள் போலீசாரும் வந்துவிடவே, எல்லாரும் ஒதுங்கி நின்றார்கள். போலீசார் முறைப்படி விபத்தைப் படம் எடுத்தனர். பிரேதங்களை விழுந்து கிடந்த அமைப்பிலே போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

பிறகு அந்த இடத்துக்குக் காவல் வைத்துவிட்டு, துப்புத் துலக்கத் தொடங்கினார்கள்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நாராயணி அம்மாள், அந்தப் பஸ்ஸில் வந்த மோகினி தன் வீட்டில் இருக்கிறாள் என்று சொல்வதா வேண்டாமா என்று யோசித்து நின்றாள்.

சொன்னால், தன்னைக் காணாமல் போன பொருள்களுடன் சம்பந்தப்படுத்தித் துன்புறுத்துவார்களோ என்று பயம். சந்தர்ப்பம் எதிர்பாரா விதமாகப் பிரசினையைத் தீர்க்கத் தொடங்கியது. வந்திருந்த இன்ஸ்பெக்டர் ஒரு வயதான நாயர். அவர் தலை, தும்பைப் பூவைப்போல் நரைத்திருந்தது. அவர் குறிப்புக்கள் எடுத்து, உடல்களை அப்புறப்படுத்தும்போது மணி பதினொன்று ஆகிவிட்டது.

மழை ஓய்ந்த மறுநாள் வெய்யில் எப்போதுமே கடுமையாக இருக்குமாதலால் இன்ஸ்பெக்டர் பங்குன் நாயருக்குக் களைப்பு ஏற்பட்டது. அத்தோடு தாகமும் எடுத்தது. அவர் பார்வையில் நாராயணி அம்மாளின் வீடு தெரிந்தது. ஒரு கான்ஸ்டபிளை அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

இன்ஸ்பெக்டர் பங்குன் நாயர் ஆறடி உயரமும், பரந்த மார்பும் உள்ளவர். வெளுத்த மயிர்த் தலையும், அதற்கு நேர்மாறுகச் சாயம் தடவிக் கறுத்திருந்த கெய்சர் முறுக்கு மீசையும் உடையவர். அந்த வட்டாரங்களில் அவருக்குக் 'கெய்சர் மீசை இன்ஸ்பெக்டர்' என்றே பெயர்.

அவரது தொழில் திறமை, அவர் டிபார்ட்மெண்டுக்குப் புரிந்த துணிவான சாதனைகள் எல்லாம் சேர்ந்து அளிக்காத புகழை, அவருடைய மீசை தனித்து அளித்தது. ஆகவே தலை நரைக்க ஆரம்பித்தபோது அவர் கவலைப்படவில்லை. அப்படியே விட்டுவிட்டார். மீசை நரைக்க ஆரம்பித்ததும் தான் கலங்கினார். அவருடைய டிரேட் மார்க்கின் நல்ல பெயருக்கே களங்கம் வரக்கூடாது என்று அதற்கு மட்டும் சாயம் தடவிக் கறுப்பாகவே வைத்திருந்தார்.

அவர் உருவத்துக்குத் தகுந்த குரல் இருந்தது. அவர் பேசினால் குதிரைப் படைத் தகரப் பாலத்தில் நடை பழகுவதுபோல் இருக்கும். ஆனால் அவர் அதிகமாகப் பேசுவதில்லை. அவர் கைது செய்து லாக்கப்பில் அடைத்த திருடர்களிடம் அவர் உதடுகள் பேசவில்லை என்றாலும், அவரது பெல்ட் பேசி, பலமுறை, உண்மையை வரவழைத்ததுண்டு.

சில சமயம் அவர் பூட்ஸ் கால்களும் குற்றவாளிகளிடம் சம்பாஷிப்பதுஉண்டு. அவர் சட்ட விரோதிகளிடமிருந்து, கருணை, இரக்கம் போன்ற உணர்ச்சிகளை எதிர்பார்ப்பது இல்லை. அந்த உணர்ச்சிகளை மற்றவர்களிடம் காட்டுவதும் இல்லை.

அவர் தன் வீடு நோக்கி வருவதைப் பார்த்த நாராயணி அம்மாளின் உடல் வியர்த்தது. வீட்டினுள் நுழைந்ததும் நாராயணி அம்மாள் ஓடிப்போய் ஒரு மரப்பெஞ்சியை இழுத்துப் போட்டாள். இன்ஸ்பெக்டரின் கண்கள் பாதாதிகேசம் அவளை உரித்து நோக்கின.

வயதானவர். ஆனாலும் இன்ஸ்பெக்டர் ஓர் ஆண் மகன் அல்லவா? அவர் பார்வை நாராயணியைச் சிலிர்க்க வைத்தது. மலையாள முண்டும் சோளியும் அணிந்த நாராயணி, முப்பது வயதுக்கு மேற்பட்ட விதவையானாலும், உடல் கட்டுக் குறையாதவளாக இருந்தாள். அருகில் நின்ற கான்ஸ்டபிள், இன்ஸ்பெக்டர் இம்மாதிரி அவளை நோக்குவதைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். ஏனென்றால் பங்குன் நாயர் கண்டிப்பானவர்.



"கல்யாணமாகாத டீச்சரை நான் ட்யூஷன் வைத்துக் கொண்டால் சாக்லெட் வாங்கித் தருவதாக எங்க காலேஜ் அண்ணா சொல்லிச்சு. உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டதா" "டீச்சர்?"

பங்குன் நாயர், "தாகமாக இருக்கிறது. கொஞ்சம் வெள்ளம் கிடைக்குமா?" என்று கேட்டார்.

நாராயணி, ஏதேதோ நெடும்பிடியான கேள்விகளை எதிர்பார்த்தவள், தாகத்துக்குத் தண்ணீர் கேட்கிறார் என்றதும் ஓரளவு நிம்மதி அடைந்தாள். ஓடிப் போய், கக்கு வள்ளத்தில் சிறிது தேன் விட்டுக் கொண்டுவந்தாள்.

அதற்குள் நாயர் அறை முழுதும் நோட்டம் விட்டார். பயந்து நிற்கும் சங்கரன் குட்டி, தூங்கும் மோகினி ஆகிய எல்லோரையும் பார்த்துக் கொண்டார்.

நாராயணி அம்மாள் கொண்டு வந்த கக்கு வள்ளத்தைக் குடித்துவிட்டு, அவளை ஒருமுறை பார்த்தார். அவள் ஒரு விதவை என்பதை உடனே புரிந்து கொண்டவர் சங்கரன் குட்டியைக் காட்டி, "நீங்களும், இந்தப் பையனும் தான் இங்கிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

அவர் கேட்ட கேள்வியில், குழந்தை மோகினியை அவள் குடும்பத்தில் சேர்க்கவில்லை என்பது தொக்கி நின்றது.

நாராயணி அம்மாள் பயத்தோடு தலைகுனிந்தபடியே, "ஆமாம்," என்றாள்.

நாயர் துப்பாக்கிக் குண்டு வெடிப்பது போன்ற குரலில், "அப்படியென்றால் இந்தப் பெண் குழந்தை யாரு? எப்படி வந்தது?" என்று கேட்டுவிட்டு, நாராயணியை முறைத்துப் பார்த்தார்.

நாராயணி அப்படியே வெலவெலத்து நின்றுவிட்டாள்.

முதலில் சாதாரண குரலில் ஒரு கேள்வி. அடுத்தபடி குண்டு வெடி போன்ற குரலில் இன்னொரு கேள்வி. சாதாரணக் குற்றவாளிகள் உடனே உண்மையை உளறிவிடுவார்கள். இது நாயரின் பரந்த அனுபவத்தில் கண்டு பிடித்த உண்மை.

நாராயணி நடுக்கத்தோடு, "இது அந்தப் படகில் வந்த குழந்தை," என்று உண்மையைச் சொல்லிவிட்டாள்.

"இந்தக் குழந்தை மட்டுமா உயிரோடு தப்பியது? இல்லை, இன்னும் வேறு யாராவது..." என்று கேள்வியைக் கேட்டு நிறுத்தினார்.

நாராயணி அம்மாள், "எனக்குத் தெரிந்தவரையில் வேறு யாரும் தப்பவில்லை. இந்தக் குழந்தை மட்டும்தான்

இரவு வந்து என் கதவைத் தட்டியது,'' என்றாள்.

உடனே நாயர், ''அப்படியென்றால் இரவே உனக்குப் பஸ் விபத்தைப் பற்றித் தெரியும். ஏன் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கவில்லை?'' என்று கேட்டார்.

''இரவு ஒரே மழையும் இடியுமாக இருந்தது,'' என்று தழுதழுத்த குரலில் அவள் பதில் சொன்னாள்.

''காலையில் நான் வந்ததும், என்னிடம் வந்து உண்மையைக் கூறியிருக்கலாமே?''

''நீங்கள் வந்தவுடனே சொல்லியிருக்கலாம். ஆனால்...''

''ஆனால் என்ன சொல்லு?'' அறைவதுபோல் கேட்டார்.

நாராயணி பதில் சொல்லவில்லை. இன்ஸ்பெக்டரைப் பயந்தபடி பார்த்துக் கொண்டு நின்றாள்.

''ஏன் சொல்லவில்லை? சொல்லு.''

நாராயணியின் கண்களில் நீர் நிறைந்தது. ஆனால் உதடுகள் பேசவில்லை. இன்ஸ்பெக்டர் எழுந்து நாராயணியை நெருங்கினார். நாராயணி அவரைப் பார்த்தபடி நின்றாள். இன்ஸ்பெக்டர் நாயர், திடீரென்று தன் குரலை மாற்றினார்.

குழைவான குரலில் ரகசியம் பேசுவதுபோல் சொன்னார், ''நீ சொல்ல வேண்டாம், நான் சொல்கிறேன். இந்தக் குழந்தையோடு சில பெட்டிகளையும் அப்புறப்படுத்திவிட்டாய். இந்தக் குழந்தை அணிந்திருந்த நகைகளை எடுத்துப் பதுக்கி வைத்துவிட்டாய். அதனால் தான் நீ விபத்தைப் பற்றி ரிப்போர்ட் பண்ண முன் வரவில்லை,'' என்று அடுக்கிக்கொண்டே போனார்.

தன்னை ஒரு திருடி என்று குற்றம் சாட்டுகிறார் என்று உணர்ந்ததும் நாராயணிக்குத் திடீரென்று தைரியம் வந்தது. இன்ஸ்பெக்டர் நாயரின் பயங்கரத் தோற்றம், அவள் கண் முன்னின்று மறைந்தது. அவள் பிறந்த பரம்பரையில் யாரும் திருடர்கள் அல்ல. ஏழைகளாய் இருந்திருக்கலாம். ஆனால் யாரும் திருடினதில்லை. தன்னோடு, தம் உத்தம சகோதரன், தந்தை எல்லாரும் சேர்த்து நிந்திக்கப்படுவதாகத் தோன்றியது. அதுவும் அவள் செய்யாத ஒரு குற்றத்துக்கு.

''நான் எதையும் திருடவில்லை. விபத்திலிருந்து தப்பிப் பிழைத்த குழந்தைக்குக் கருணை காட்டியதற்கு நல்லாயிருக்கு சன்மானம்! என் அப்பன், அண்ணன்—இவங்க திருடங்களைப்

# இவர்களில்










நம் இந்தியப் பிரதமர் சாஸ்திரியோடு பன்னிரண்டு வெளிநாடுகளின் அரசியல் பிரமுகர்களுடைய பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் யார் வயதில் மிகவும் மூத்தவர்? இளையவர்? வயதுக்கேற்றபடி அவர்கள் பெயர்களை வரிசைக் கிரமப்படுத்திக் கூற முடியுமா? பாருங்கள்.

1. இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி
2. கானு அதிபர் என்க்ருமா
3. கென்யா பிரதமர் ஜோமோ கென்யாட்டா
4. இலங்கைப் பிரதமர் சேன நாயகா



5. எகிப்து அதிபர் நாசர்
6. பிரிட்டிஷ் பிரதமர் ஹெரால்டு வில்சன்
7. சீனப்பிரதமர் சூ என் லாய்
8. இந்தோனீஷிய அதிபர் சுகர்னோ
9. யூகோஸ்லேவியா அதிபர் டீட்டோ



10. பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகால்
11. மலேசியப் பிரதமர் துங்கு அப்துர் ரஹ்மான்



12. அமெரிக்க அதிபர் ஜான்சன்
13. ஆஸ்திரேலிய பிரதமர் மென்ஸில்

விடை 66'ம் பக்கம்.

பிடிச்சுக் கொடுத்திருக்காங்களே அல்லாமல், யாரும் என்னிக்கும் திருடினதில்லே. எங்கப்பா கோவிந்தன் நாயர் ஒரு இன்ஸ்பெக்டர். எங்கண்ணன் அச்சுதன் நாயர் டியூட்டியிலே இன்னொரு போலீஸ் அதிகாரியைக் காப்பாத்தப் போயி இறந்தார். அவர் உடன் பிறப்பான நான் இன்னும் திருடற அளவுக்குக் கெட்டுப் போயிடல்லே!'' என்று சொல்லித் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இதுவரை புலிபோல் உறுமிய இன்ஸ்பெக்டர், நாராயணியின் துணிவான பேச்சைக் கேட்டு நிதானித்தார்.

புதுப் பார்வையோடு நாராயணி அம்மாளைப் பார்த்தார். திரும்பிக் கான்ஸ்டபிளைப் பார்த்தார். ஜாடை புரிந்து கொண்டு கான்ஸ்டபிள் அறைக்கு வெளியே சென்றான். கான்ஸ்டபிளை வெளியே அனுப்பி விட்டு அறையில் அவர் மட்டும் நிற்பதைப் பார்த்ததும் நாராயணி அம்மாளின் மனத்தில் விபரீதமான எண்ணங்கள் உதயமாயின.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. ஆனால் இன்ஸ்பெக்டர் நாயர், சற்று விலகி நின்று கொண்டு தரையில் மயங்கிப் படுத்திருக்கும் குழந்தையைப் பார்த்தார்.

பிறகு எந்தவித உணர்ச்சியுமற்ற குரலில், ''அந்தக் குழந்தையைப் பத்தி ஏதாவது தகவல் தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு நாராயணி அம்மாளின் முகத்தைப் பாராமல் வேறுபுறம் பார்த்தார்.

நாராயணி, ''உடல் கருகிக் கிடக்கும் அந்தப் பெண்தான் மோகினியின் தாய். இவள் அச்சன் குருவாயூரில் இருக்கிறான் என்று தெரிகிறது. இறந்து கிடக்கும் இன்னொரு இளைஞனைக் குழந்தை, 'மக்கடை அம்மாவான்' என்று அழைத்து வந்ததாகத் தெரிகிறது,'' என்று தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் கூறினாள்.

நாயர் யோசித்தார், ஒரு விநாடி. ''அச்சன் பேர் என்னவென்று சொன்னாளா?'' என்று கேட்டார்.

''நான் கேட்டேன். அச்சன் பேரு அச்சன் என்று சொன்னாள். அவளுக்கு அச்சன் பேரு தெரியவில்லை.''

''பரவாயில்லை. அவள் அச்சனை இங்கு வரவழைக்க ஏற்பாடு செய்கிறேன். அதுவரை குழந்தை இங்கேயே இருக்கட்டும்.''

கழற்றிப் பெஞ்சியில் வைத்திருந்த தொப்பியை எடுத்து அணிந்து கொண்டார். ஒரு முறை நாராயணி அம்மாளைப் பார்த்துவிட்டு வீட்டு வாயிற்புறம் வரை சென்றார். அங்கு நின்றார்.

நாராயணி அம்மாள் வாயிற்புறம் வரை வந்து நின்றாள். இன்ஸ்பெக்டர் நாயரின் கண்களில் நீர் நிறைந்து காணப்பட்டது. அவர் தொனியில் ஆணவம் இல்லை. மரியாதை இருந்தது. ''நீங்கள் தானே நாராயணி அம்மாள்?'' என்று கேட்டார்.

''ஆமாம். உங்களுக்கு என் பெயர் எப்படித் தெரியும்?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் நாராயணி.

''கோழிக்கோட்டில் நானும் உங்கள் அண்ணன் அச்சுதனும் ஒரே ஸ்டேஷனில் வேலை பார்த்தோம். அச்சுதன் உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறான்,'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினார்.

நாராயணி அம்மாளின் மனத்தில் எண்ணங்கள் வேகமாக ஓடின. பல வருடங்களுக்கு முன் ஒரு முறை லீவில் வந்திருக்கும்போது அச்சுதன், நாராயணியைத் தன் கோழிக்கோடு சிநேகிதன் பங்குன் நாயருக்குக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னதும் அவள் தந்தை, 'என் ஒரே மகளை உயிருக்கு ஆபத்து நிறைந்த ஆயுத போலீஸ் இலாகாவில் உள்ளவனுக்குக் கட்டிக் கொடுக்க முடியாது' என்று மறுத்துக் கூறியதும், ஞாபகத்துக்கு வந்தன. தன் மகள் வாழ்நாள் பூராவும் பூவும் மஞ்சளோடும் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டு, ஒரு மர வியாபாரிக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார். ஆனால் அந்த வியாபாரி என்னவோ அற்பாயுசாகப் போய் விட்டார். உயிருக்குத் தினம் ஆபத்து வரும் இலாகாவில் வேலை செய்பவன் என்று பயந்து ஒதுக்கிய பங்குன் நாயர் கண் எதிரே ஆஜானுபாகுவாக நின்று கொண்டிருந்தார்.

நாராயணி அம்மாள் தயக்கத்தோடு, ''அச்சுதனை உங்களுக்குத் தெரியுமா? அப்படியானால் உங்கள் பெயர்தான் பங்குன் நாயர் என்பதா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். என் பெயர்தான் பங்குன் நாயர். கோழிக்கோடு துறைமுகத்தில் கள்ளக் கடத்தல் கூட்டத்தைப் பிடிக்கப் போனபோது, என்னைக் காப்பாற்ற முன்வந்து, துப்பாக்கிக் குண்டைத் தன் உடலில் வாங்கிக் கொண்டான். அவனை நான் மறக்க முடியுமா? நீங்கள் யார் என்று தெரியாத நிலையில் உங்கள் மனம் நோகும்படி பேசியதற்கு மன்னித்துவிடுங்கள்,'' என்று சொல்லி விட்டு இன்ஸ்பெக்டர் நடந்தார்.

வீட்டை விட்டுப் பத்தடி நடந்ததும், அவர் நடையில் மறுபடியும் கம்பீரம் தெரிந்தது. சற்றுமுன் குழைந்து பேசிய அவர் குரல் மறுபடியும் போர் முரசுபோல் ஒலித்தது. இறந்த காலத்திலிருந்து பறந்து வந்த ஒரு சிறு ஏடு, நாராயணி அம்மாளின் நிகழ் காலத்தின் அமைதியைக் குலைத்து நின்றது.

(தொடரும்)

# மின்னல், மழை, மோகினி



அத்தியாயம் 4

பங்குன் நாயர் சென்ற திசை வழியே பார்த்து நின்ற நாராயணியின் உள்ளத்து அலைகள் அவளை உணர்வற்றவளாக்கின.

எவ்வளவு முறை அவள் அண்ணன் அச்சுதன் இந்தப் பங்குன் நாயரைப்பற்றி அவளிடம் சொல்லி இருக்கிறான்! அவர் நேர்மை, அவர் கண்டிப்பு, அவர் தைரியம், அவர் மீசை—எல்லாவற்றைப் பற்றியும், ஒவ்வொரு முறை அச்சுதன் விடுமுறைக்கு வந்தபோதும் கதை கதையாகச் சொல்லியிருக்கிறான்!

அவன் சொல்லாமல் சென்ற கதை, அவன் உயிரிழந்த கதைதான். யாரைக் காப்பாற்றுவதன் பொருட்டு அவன் உயிரிழந்தான் என்பது அவளுக்குத் தெரியாத கதை. அந்தக் கதையைச் சொல்லவா இன்று இன்ஸ்பெக்டர் பங்குன் நாயர் இந்தக் காட்டுக்கு வந்தார்?

அன்பு அண்ணனைப் பற்றிய நினைவுகள் எழும்போதெல்லாம் அவளுக்கு வேதனை ஏற்படும். அண்ணன் உயிரோடு இருந்தால் எவ்வளவு உதவியாக இருந்திருக்கும்? ஆதரவில்லாத விதவையாக, பித்தம் பிடித்த மகனோடு, ஜன சஞ்சாரமில்லாத தனிமையில் வாழ வேண்டாமே? மெள்ளக் கடந்த காலத்தைச் சிந்தையிலிருந்து ஒதுக்கிவிட்டு, அவள் வீட்டினுள்ளே நுழைந்தபோது குழந்தை மோகினி தூங்கியபடி இருந்தாள். அருகில் சங்கரன்குட்டி பயந்து உட்கார்ந்திருந்தான்.

தாயின் அருகில் வந்து ரகசியமான குரலில், ''அம்மா! அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டராக்கும், அந்தப் பஸ்ஸை மலையிலிருந்து உருட்டிவிட்டிருக்கான். அவனைப் பார்த்தாலே பயமாயிருக்கும்மா. அவன் மேலே கல்லை உருட்டிவிடட்டுமாம்மா?'' என்று நடுங்கும் குரலில் கேட்டான்.

வீரம் நிறைந்த அண்ணனைப் பற்றிய நினைவில் ஆழ்ந்திருந்த நாராயணிக்கு, தன்னுடைய மகனைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. சங்கரன்குட்டி பயப்படும்போது, அவன் கண்கள் அவன் தந்தையின் கண்கள் போலவே சுற்றிச் சுழன்றன. அவரும் இப்படித்தான், போலீஸ் என்றாலே பயந்து வாழ்ந்தவர். அவர் நடத்திய மர வியாபாரத்தின் எல்லாப் பகுதியும் சட்டபூர்வமாக நடந்தன என்று சொல்ல முடியாதபடி இருந்தது.

பயந்த கோழைகளுக்கு, இயற்கையாகவே தனக்குக் கீழ் உள்ளவர்களிடம் கோபம் வரும். நாராயணியின் கணவனும்,

ஜாவர் சீதாராமன்

நாராயணியிடம்தான் தன் தைரியத்தைக் காட்டுவார், மற்றப்படி எல்லாரிடமும் பயப்படுவார். ஒவ்வொரு சமயம் அவருக்கு வரும் கோபத்தைக் கண்டு, நாராயணி நடுங்கி இருக்கிறுள். தன் கணவனுக்குப் புத்தி பேதலித்துவிட்டதோ என்றுகூட நினைக்கத் தோன்றும். கோழைத்தனத்துக்கு அடித்தளத்தில் உறங்கும் பயங்கர வெறி, சங்கரன்குட்டிக்கும் இருந்துவிடுமோ என்று நினைக்கவும், நாராயணிக்குத் தன் மகனின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை ஏற்பட்டது.

இன்ஸ்பெக்டர் நாயர் மீது கல்லை உருட்டுவேன் என்று சொல்லும் மகனிடம் என்ன சொல்லுவது என்று புரியவில்லை.

''குட்டி! அப்படி ஒன்றும் செய்யாதே. இன்ஸ்பெக்டர் ரொம்பவும் நல்லவர்டா,'' என்று சொல்லி, குட்டியின் அபிப்பிராயத்தை மாற்ற நினைத்தாள்.

''நல்லவர்னு ஏம்மா அவர் உங்கிட்டே அப்படிப் பேசினுர்?''

''எல்லாரையும் விசாரணை செய்றது அவர் வேலைடா.''

குட்டி விடுவதாயில்லை. ''போலீஸ்காரனுக்குத் திட்றதுதான் வேலையா?'' என்று மறுபடியும் கேட்டான்.

குட்டி, பங்குன் நாயரிடம் அசட்டுத்தனமாக நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டுமென்றுல் அவனைப் பயமுறுத்தி வைத்தால்தான் முடியும் என்ற நிர்மானத்துக்கு வந்தாள். பயம் ஒன்றுதான் அவனுக்குப் புரிந்த உணர்ச்சி என்பதை உணர்ந்து கொண்ட தாய், அவனை அருகே அழைத்தாள். சங்கரன்குட்டி நெருங்கி வந்தான். நாராயணியும் பயந்தவள்போல் நடித்து, சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தாள்.

தாய் பயப்படுவதைப் பார்த்து, குட்டி, ''என்னம்மா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

''குட்டி! இன்ஸ்பெக்டர் வம்புக்குப் போகாதே. அவர் ஒரு மாதிரி.''

''அம்மா, மறைஞ்சிருந்து அவர் மேலே கல்லை வீசினுல் என்னம்மா செய்வார்?''

''அவராலே முன்னுலேயும் பார்க்க முடியும், பின்னுலேயும் பார்க்க முடியும். அதுக்குத்தான் தொப்பி போட்டிருக்கார். அவர் மீது கல்லை வீசினுயோ உடனே அவர் உன்னைப் பிடிச்சிட்டுப் போய், உன் கண்ணிலே மிளகாயை அரைச்சித் தடவிடுவார். ஜாக்கிரதை!''

மிளகாய் என்று சொன்னவுடனே, அவனுக்குப் பயம் ஏற்பட்டது. ''மிளகாயா? மிளகாயா?'' என்று இருமுறை கேட்டான்.

பிறகு, ''அம்மா! நான் அவர் பக்கமே போகல்லேம்மா,'' என்று சொல்லிவிட்டு அறையின் மூலைக்குப் போய்விட்டான்.

அதே சமயத்தில், படுத்திருந்த மோகினியும் விழித்துக்கொண்டாள். கண்ணைக் கசக்கிக் கொண்டு நாராயணியைப் பார்த்தாள்.

நாராயணி, ''மோகினி! நீ என்ன சாப்பிடறே?'' என்று கேட்டாள்.

மோகினி பேசாமல் இருந்தாள். நாராயணி எழுந்து போய்ச் சமையல் அறையிலிருந்து சிவப்பு அரிசிச் சோற்றில் குழம்புவிட்டுப் பிசைந்து எடுத்து வந்தாள்.

அதை மோகினியின் முன் வைத்து, ''சாப்பிடு மோகினி,'' என்றுள்.

மோகினி தன் அகன்ற கண்களால் நாராயணியைப் பார்த்துவிட்டு, ''வேண்டாம்,'' என்றுள்.

''நான் எடுத்து ஊட்டட்டுமா?''

''வேண்டாம்.''

''வேறே பழம் சாப்பிடறியா?''

குழந்தை பதில் சொல்லவில்லை.

''சின்னக் குழந்தை நீ. சாப்பிடாமல் இருக்கக் கூடாது. கொஞ்சம் சாயா கொண்டு வர்ரேன். அதையாவது குடி மோகினி,'' என்று நாராயணி வற்புறுத்தியதும், குழந்தை அழ ஆரம்பித்துவிட்டாள்.

''எண்ட அச்சனை நோக்கணும். அச்சன் வருன்னவரே எனிக்கே ஒன்னும் வேண்டாம்,'' என்று அழுது கொண்டே ஒரு மூலையில் போய் உட்கார்ந்தாள்.

சிறு குழந்தையாயிருந்தும் அவளுக்குத் தந்தை மீதுதான் எவ்வளவு பாசம்! அவள் மனத்தில்தான் எவ்வளவு உறுதி! ஆச்சரியப்பட்டாள் நாராயணி. அதே சமயம், நள்ளிரவில் உதவியவனுக்கு நன்றியோ அல்லது சிறு

---

**தெரியுமா?**

உலகத்தின் மிகப் பெரிய விமானப் போக்குவரத்து அமைப்பு எது?

ஏர் ஃபிரான்ஸ்.

---

அன்போ காட்டாமல் ஒரு மூலையில் போய் உட்கார்ந்திருக்கும் குழந்தைமீது லேசாகக் கோபம்கூட வந்தது.

மாலை வரை காத்திருந்தாள். குழந்தை. மௌனமாக ஜன்னல் வழியே வெறும் வெளியைப் பார்த்திருந்தாள். சங்கரன்குட்டியிடம் கூடப் பேசவில்லை. இறந்துபோன தன் தாயைப் பற்றிக் கூட ஒரு வார்த்தை பேசவில்லை.

அறுபது வயதுக் கிழவனுக்குத் துக்கம் நேர்ந்தால், அமைதியாக எப்படி அந்தத் துக்கத்தை ஏற்றுக் கொள்வாரோ, அம்மாதிரி தனக்கு நேர்ந்த பிரிவை எடுத்துக் கொண்டாள். 'நான்கு வயதுக் குழந்தை விசும்பி அழக்கூடாதா? தனக்கு ஆதரவளித்த பெண்மணியிடம் ஒரு புன்முறுவல் காட்டக் கூடாதா? ஒன்றும் செய்யாமல், கருங்கல்லைப்போல் இருக்கிறாளே!' என்று நினைத்தாள் நாராயணி. குழந்தை அழுக்காமல், சிணுக்காமல் ஜன்னல் வழியே பார்த்தபடி இருந்தாள்.

மாலைப் பொழுது இரவாக மாறி, இருள் மலைப் பகுதியைக் கவ்விய பின் ஜன்னல் வழியே பார்ப்பதற்கு ஒன்றுமில்லை. ஜன்னலை விட்டு எழுந்து தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

சங்கரன்குட்டி பசி பொறுக்க முடியாமல் சாப்பிட உட்கார்ந்தான். அவன் சாப்பிடுவதைப் பார்த்த பின்புகூட, குழந்தை. 'பசிக்கிறது,' என்று சொல்லவில்லை.

திக்கற்ற குழந்தையைப் பட்டினியாக வைத்துவிட்டு, தான் மட்டும் சாப்பிட நாராயணி அம்மாளின் இளைய மனம் கேட்கவில்லை. இரவு ஒன்பது மணி அளவில் மோகினி வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினாள். ''குடிக்க வெள்ளம்.'' அதுவும், பாதி ஜாடையிலும், பாதி பேச்சிலும்.

நாராயணி கொடுத்த சுக்குப் போட்டுக் காய்ச்சிய நீரைக் குடித்துவிட்டு, விரித்திருந்த பாயில் படுத்துக் கொண்டாள். படுத்த சில விநாடிகளுக்கெல்லாம் மறுபடியும் எழுந்து உட்கார்ந்தாள். நாராயணியைப் பார்த்து, ''எண்ட அச்சன் வன்னு என்னெ எனிப்பிக்கோ?'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள்.

உடனே தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். இந்த விசித்திரமான குழந்தையின் மௌனத்தைப் புரிந்துகொள்ள முயன்றாள் நாராயணி. தாயை இழந்த குழந்தை தகப்பனைப் பார்த்த பின்புதான் சரியான நிலைக்கு வரும் என்



நாட்டுப் பெண்: கோலம் போட அரிசி மா இல்லையே.

நாகரீக மாமியார்: பேஸ் பவுடரில் தான் இன்றைக்கு ஒரு நாளைக்கு போட்டேன்.

பதைப் புரிந்துகொண்டு, குழந்தையின் அருகில் படுத்துக் கொண்டாள்.

அமைதியாகத் தூங்கும் மோகினியின் நிர்மலமான முகத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். குழந்தையாய் இருந்தாலும் அழுது அமளி செய்யாமல் இந்த மட்டும் அமைதியாகத் தூங்கினாளே, புத்திசாலிப் பெண்தான் என்று நினைத்தபடி குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

நாராயணியின் கைகள், தூங்கும் மோகினியின்மீது பட்டதும், தூங்கியபடியே அவளது உதடுகள் அசைந்தன. விழித்த நிலையில் தன்னைவிட்டு ஒதுங்கி இருந்த குழந்தை, தூக்கத்தில் நாராயணியின் அணைப்பை விரும்பியது போலும்! அதன் பிஞ்சு உதடுகள் நாராயணியின் மார்பில் உராய்ந்து அவள் தாய்மையைச் சுண்டி எழுப்பின. அவளை அணைத்தபடி நாராயணியும் புன்முறுவலுடன் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

பொழுது புலர்ந்ததும் நாராயணி எழுந்து காலைக் கடன்களைக் கவனிக்க ஆரம்பித்தாள். அதிகாலையிலேயே வீட்டின் வெளிப்புறத்தில் ஆள் நடமாட்டமும் போலீஸாரின் குரலும் கேட்டது. பங்குன் நாயர் ஒரு மரத்தடியில் அமர்ந்தபடி கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

(தொடர்ச்சி 50-ஆம் பக்கம்)

(47 'ம் பக்கத் தொடர்ச்சி)

கருகிக் கிடந்த பஸ்ஸை அப்புறப் படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. குழந்தை மோகினி எழுந்தாள். பல் விளக்கிக் குளித்தாள். ஓடிவந்து ஜன்னலருகில் உட்கார்ந்துகொண்டு, திறந்த வெளியைப் பார்த்தபடி இருந்தாள்.

நாராயணி கொடுத்த சாயாவைக் குடித்துவிட்டு மௌனமாக இருந்தாள். நாராயணி ஒரு பித்தளை டம்ளரில் சாயா ஊற்றி எடுத்துக்கொண்டு போய் பங்குன் நாயருக்குக் கொடுத்தாள். அவர் ஒரு வினாடி யோசித்தார். பிறகு நாராயணி அளித்த சாயாவை வாங்கிக் குடித்து விட்டு, ''அம்மா, நான் நேற்றே அந்தக் குழந்தையின் தகப்பனுக்குத் தகவல் அனுப்பிவிட்டேன். சீக்கிரமே கிருஷ்ண பணிக்கர் வந்து அவர் மகளை அழைத்துப் போவார்,'' என்று சொன்னார்.

நாராயணி தரையைப் பார்த்தபடி, ''உங்களுக்கு மோகினியின் அச்சனைத் தெரியுமா?'' என்று கேட்டாள்.



''இந்தத் தடவை பிறக்கப் போவது ஆண் குழந்தைதான் என்று எப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?''

''நீயே கணக்குப் பண்ணு. மாறி மாறிப் பிறந்திருக்கிறது. பார். முதலில் ராமன் பிறந்தானா? அடுத்தது, கமலா. ரமேஷ், சீதா; கோபால், மாலா; கண்ணன், லீலா; கிட்டு, சாந்திதானே லேட்டஸ்ட்டு?''

பங்குன் நாயர், ''தெரியாது. இறந்து போன தாயின் பெட்டியிலிருந்து விலாசம் கிடைத்தது. அவள் தாய் டீக்கடைக்காரனோடு ஓடி வந்து விட்டதாகக் கணவனிடமிருந்து குருவாயூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு புகார் வந்திருந்தது,'' என்று சொல்லி விட்டு நிறுத்தினார். ஒரு பெண் ஒழுங்கு தவறிய செய்தியைக் கூறுவதற்கும் கூச்சப்பட்டார் என்பதை அவருடைய குரல் காட்டியது.

நாராயணி தலை குனிந்தபடி வீடு திரும்பினாள்.

பத்து மணி சுமாருக்கு மலையின் முகட்டை ஒட்டிச் செல்லும் ரோடில் ஒரு பஸ் நின்றது. அதிலிருந்து ஒரு கான்ஸ்டபிளும் இன்னொரு நபரும் இறங்கினார்கள். இறங்கிய நபரின் கையில் ஒரு குடை இருந்தது. அவர் குடுமி வைத்திருந்தார். அவர் குடுமி நுனியில் முடியப்பட்டு, உச்சந்தலையில் முடிச்சு உட்கார்ந்திருந்தது. தூரத்திலிருந்து பார்த்தபோது நடுத்தலையில் ஒரு கொட்டைப்பாக்கு வைக்கப்பட்டிருந்ததுபோல் தோற்றமளித்தது. அவர் நெற்றியில் அரைத்த சந்தனக் கீற்றுக்கள் குறுக்கு நெடுக்காகச் சென்றன. அவர் குடுமி பாதி நரைத்தும், பாதி கறுப்பாகவும் இருந்தது. மார்பை மூடச் சட்டை அணியவில்லை. நீண்ட, அகலமான துண்டை அணிந்திருந்தார். காலில் பழைய செருப்புக் காட்சியளித்தது. கண்கள் அப்படியும் இப்படியுமாக அசைந்து கொண்டிருந்தன. நாசி, நெற்றியிலிருந்து வளைந்து கிளியின் மூக்குப்போல் தோற்றமளித்தது.

அவருடன் வந்த கான்ஸ்டபிள், அவரைப் பங்குன் நாயர் இருக்குமிடத்துக்கு அழைத்து வந்தான். வந்தவர், எரிந்து கிடக்கும் பஸ்ஸைப் பார்த்தார். பங்குன் நாயர் அவரைப் பார்த்தார். என்ன காரணத்தால் அந்த இளம் பெண் கொட்டும் மழையில் இவரை விட்டு ஓடியிருப்பாள் என்ற ஊகம் அவர் மனத்தில் எழுந்தது.

கனைத்துக்கொண்டு, ''உங்கள் மனைவியின் உடலை ஆஸ்பத்திரியில் பார்த்தீர்களா?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த மனிதர், ''பார்த்தேன் பார்த்தேன். தயவு செய்து என் பாழ் யாள் என்று மட்டும் சொல்லாதீர்கள், இன்ஸ்பெக்டர். அந்த நாய் எப்போ வீட்டை விட்டு ஓடிற்றோ, அப்பவே எனக்கும் அவளுக்கும் சம்பந்தம் அத்

www.tamilbooksworld

துப் போச்சு!'' என்று வெறுப்புடன் பேசினார்.

''உங்களுக்கு இந்தப் பெண் இளைய சம்சாரமோ?''

''ஆமாம். கர்மம். அப்பா அம்மா இல்லாத அனாதையாயிருக்கிறாளே, ஒழுங்காக இருப்பாள், நமக்கும் குழந்தை இல்லியேன்னு இவளை இரண்டாந்தாரமாகக் கல்யாணம் பண்ணிட்டேன். என் தலையிலே தீராத அவமானத்தைக் கொண்டு வந்து விட்டாள். இனிமேல் தெருவிலே நடக்க முடியாது நான், இன்ஸ்பெக்டர். என் தொழில் மந்திரிச்சிப் பிழைக்கிறது, தாயத்தைக் கொடுப்பது. தள்ளி வச்ச பெண்சாதியைப் புருஷனோடு சேர்த்து வைக்க வசிய பூஜை பண்ணுவேன். விஷக் கடிக்கு மந்திரிப்பேன். ஜோஸ்யம், நவக்கிரக சாந்தி செய்து வைப்பேன். இனிமே யாராவது என் மந்திரத்தை நம்புவானா? நீங்களே சொல்லுங்க! இவர் மந்திரம் இவர் சம்சாரத்துக்கிட்டேயே நடக்கல்லியேன்னு சொல்வானா, இல்லியா? பாவி, என் பிழைப்பிலேயே மண்ணை வாரிப் போட்டு விட்டாள்!'' என்று சொல்லிக் கலங்கி நின்றார்.

இன்ஸ்பெக்டர், ''இந்தத் துக்கத்திலேயும் ஒரு நல்ல செய்தி நான் சொல்லப் போகிறேன்,'' என்று முடிப்பதற்குள் அந்த மனிதர் குறுக்கிட்டார். ''அந்தக் கழுதை, வீட்டிலேயிருந்து திருட்டுத்தனமாகத் தூக்கிவந்த இருநூறு ரூபாயும் பத்திரமா இருக்கா? அந்தப் பணம் எரிஞ்சு போகாம பத்திரமா இருக்கா?'' என்று ஆவலோடு கேட்டார்.

''பணமா? உங்க மனைவியின் பெட்டியிலே எந்தப் பணமும் இல்லையே. அந்த டீக்கடைக்காரன் பர்ஸிலேயல்லவா பணம் இருந்தது!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அந்த டீக்கடைக்காரப் பயலிடம் ஏது பணம்?''

''டீக்கடைக்காரன் பர்ஸில் இருந்தது அவன் பணம்தான் என்பதற்கு அத்தாட்சி இருக்கிறது. டீக்கடையை விற்று அதன் விலையாகப் பெற்றுக் கொண்டது ஐந்நூறு ரூபாய் என்பதற்குக் கடிதம் இருக்கிறது. அதிலிருக்கும் தேதியும், விபத்து நிகழ்ந்த தேதிக்கு முதல் தேதி. ஆகையால் உங்கள் மனைவி மீது, அவள் செய்யாத திருட்டுக் குற்றங்களையும் நீங்கள் சுமத்த வேண்டாம்,'' என்று சற்றுக் கடுமையான குரலில் சொன்னார்.



பணிக்கருக்கு இது ஏமாற்றத்தைக் கொடுத்தது. ''நீங்க வரச் சொன்னதாகக் கான்ஸ்டபிள் சொன்னார். இங்கே வந்தேன்,'' என்று இழுத்தார்.

''அதற்காக உங்களைக் கூப்பிடவில்லை. பஸ் விபத்தில் உங்கள் மகள் சாகவில்லை. அவள் உயிரோடுதான் இருக்கிறாள்,'' என்று பங்குன் நாயர் கூறி முடிப்பதற்குள்ளாகவே, தன் தந்தை வந்திருப்பதைக் குழந்தை மோகினி கவனித்து விட்டாள். தன் இருக்கையை விட்டு ஓடினாள். திடீரென்று குழந்தை ஓடுவதைக் கவனித்த நாராயணியும் பின் தொடர்ந்து வந்தாள்.

மோகினி, கண்களில் நீர் வழிய, உதடுகள் விரிந்து அழகான பற்களைக் காட்ட, தன் அச்சனைக்கண்டு விட்டோம் என்று எல்லையில்லா மகிழ்ச்சி வெள்ளமாக வெளிப்பட, ''எண்ட அச்சன், எண்ட அச்சன்,'' என்று கதறியபடி ஓடி வந்து தன் தகப்பனைக் கட்டிக் கொண்டாள்.

பங்குன் நாயருக்கும் கண்



கலங்கியது. மனைவியை மாற்றானுக்கு இழந்து, முடிவிலே யமனுக்கே கொடுத்துவிட்ட கணவன்; தாய் என்ன தவறு செய்தாள் என்பதைக் கூட உணர்ந்து கொள்ள முடியாத பருவத்துக் குழந்தை; இருவரும் ஒன்று சேரும் போது, பச்சாத்தாப உணர்ச்சிகளையே தன் இதயத்திலிருந்து துடைத்துவிட் இன்ஸ்பெக்டருக்கும் மனம் இளகிற் என்றால், நாராயணியின் உள்ளம் என் பாடு பட்டிருக்கும்?.

ஆனால் இந்த நிலையிலும், உணர்ச் யையு வெளியில் காட்டாது நி றவர்—குழந்தையின் தந்ை கிருஷ்ண பணிக்கர்தான்.

(தொடரும்





# மின்னல், மழை, மோகினி

## ஜாவர் சீதாராமன்

### அத்தியாயம்-5

மோகினி அவளுடைய தகப்பனாரின் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

இதுவரை அவளது குழந்தை உள்ளம் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளையெல்லாம் கொட்டித் தீர்த்தாள். ''அம்மே மரிச்சிப்போயி. அம்மே மரிச்சிப்போயி,'' என்று விபத்தைப் பற்றித் தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் கூறினாள்.

தன் தந்தை தன்னை எடுத்து அணைப்பார், உச்சி மோந்து முத்தமிடுவார் என்று எதிர்பார்த்தாளோ? தன்னுடன் சேர்ந்து அழுது, தன் பிஞ்சு மனத்தின்மீது அழுந்தியிருக்கும் துக்கச் சுமையைப் பகிர்ந்து கொள்வார் என்று நினைத்தாளோ? அழுதபடி தன் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

அவர் ஒன்றும் தோன்றாமல் தன்னையே விறைத்துப் பார்ப்பதை உணர்ந்தாள். தந்தையின் கண்களில் அவள் கண்ணீரைக் காணவில்லை. பயத்தைத்தான் கண்டாள். அச்சன் முகத்தில் அருளைக் காணவில்லை. மருளைத்தான் கண்டாள். தன்னை அவர் பாம்பையோ தேளையோ அல்லது உயிரை உண்ண வரும் மிருகத்தையோ நோக்குவதுபோல் நோக்குவதைக் கண்டாள்.

மோகினிக்கு ஆச்சரியமாக இருந்தது. அச்சன் சிரித்துப் பார்த்திருக்கிறாள். தன் தாயைக் கோபத்தில் அடித்ததைப் பார்த்திருக்கிறாள். எதற்கும் பயப்படாதவர் அச்சன் என்றுதான் அவள் அதுவரை நினைத்திருந்தாள். இப்போது தன்னைப் பார்த்துப் பயப்படுவது, அவளுக்குப் புரியாத விஷயமாய் இருந்தது.

மோகினியின் அனுபவத்தில் சமூகம், கட்டுப்பாடு — இவையிரண்டும் புலி, சிங்கத்தினும் மிகப் பயங்கரமானவை. சமூகத்தின் துரத்தலுக்குப் பயந்து மனிதர்கள் உயிரையும் மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எப்படிப் புரியும்?

மோகினியைத் தன் அருகில் பார்த்ததும் தான் அவளுடைய தகப்பன் என்ற உணர்வோடு தன் எதிர்காலத்தைப் பற்றிக் கிருஷ்ண பணிக்கர் நினைத்துப் பார்த்தார். சிறு வயதிலிருந்து மந்திரம் பயின்று, ஒரு நாளைக்கு நான்கு முறை குளிப்பதும் ஈரத் துணியோடு நின்று மணிக்கணக்கில் ஜெபிப்பதும்தான் அவருக்குத் தெரியும். தாயத்துத் தயார் செய்வது, ரட்சைகள் செய்து பேயோட்டுவது—இவைதான் அவர் தொழில். இந்தத் தொழிலின் வருவாய் சிறியதாயினும் சமூகம் இவர்களிடம் ஆசாரத்தையும் அதிகம் எதிர்பார்த்தது. ஆகையால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த கிருஷ்ண பணிக்கர் தன் மனைவி ஓடிப் போனதைத் தன்னுடைய கௌரவத்துக்கு, ஆண்மைக்குக் களங்கமாக நினைக்கவில்லை. அதனால் வந்த கெட்ட பெயர், அவருடைய எதிர்கால வருவாய்க்கு ஆபத்து விளைவிக்குமே என்றுதான் நினைத்தார்.

கெட்டு, ஓடிப்போன மனைவியின் குழந்தையைப்பற்றி, அவர் வாழ்ந்த இரக்கமற்ற சமூகத்தில் பகுதி என்ன சொல்லுமோ? மோகினி அவள் தாயின் தவற்றுக்கும், தன்னுடைய தோல்விக்கும் நிரந்தரமான ஞாபகச் சின்னமாக அல்லவா வளர்ந்து வருவாள்? தாயோடு மகளும் அதே விபத்தில் மடிந்து மறைந்து போய் இருக்கக்கூடாதா? இந்த மோகினியை எப்படிக் குருவாயூருக்கு அழைத்துச்




"எனக்கு ஒரு சம்பந்தமும் இல்லே!" என்று கிருஷ்ண பணிக்கர்.

www.t.me/tamilbo

செல்வது என்ற ஆலோசனையில் ஈடுபட்டு மனம் குழம்பினார். பாச உணர்ச்சி இருக்க வேண்டிய இதயத்தில், பய உணர்ச்சிதான் மிஞ்சியது. குடும்பத்தின் நல்ல பெயர் போய்விடுமோ, அதோடு பணமும் போய்விடுமோ என்றுதான் அவர் மனம் கவலைப்பட்டது.

தந்தையின் உருவத்தில் தாயையும் சேர்த்துப் பார்த்து வாத்ஸல்யத்தோடு நின்றாள் மகள் மோகினி. ஆனால் அவள் தந்தையோ வறுமை என்ற எதிர்காலத்தைத்தான் நோக்கி நின்றார்! அவர் கால்களை அணைத்து நின்ற மகளின் கைகளை விலக்கினார். "இறந்தவள் என் மனைவியுமல்ல, இது என் பெண்ணுமல்ல," என்று கூறிவிட்டு, சடாரென்று அங்கிருந்து நகரத் தொடங்கினார்.

அதைப் பார்த்த இன்ஸ்பெக்டர் பங்குன் நாயர், "நீங்க ஒரு மனுஷனே அல்ல. தாயின் தவற்றுக்குக் குழந்தையைத் தண்டிக்காதீர்கள். உங்கள் மகளைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை," என்று சொன்னார்.

கிருஷ்ண பணிக்கர் ஒன்றுமே பேசாது சாலையை நோக்கி நகர ஆரம்பித்தார்.

மோகினி தன் தந்தையைப் பின் தொடர்ந்து ஓடினாள். ஆனால் அவள் கூச்சலைக் காது கொடுத்துக் கேட்காமலே சென்று கொண்டிருந்தார் தந்தை. இந்தக் கொடுங்காட்சியை ஆச்சரியத்தோடு பார்த்தபடி நின்றார் பங்குன் நாயர்.

மோகினியும், விடாப்பிடியாக மலையின் முகட்டில் ஏறித் தந்தையைப் பின்தொடர்ந்தாள்.

அதே சமயத்தில் ஒரு பஸ் வந்தது. கிருஷ்ண பணிக்கர் அதில் தொற்றி ஏறிக்கொண்டுவிட்டார். வாழ்வில் தனக்குள்ள ஒரே உறவாகிய அச்சனைப் பிரிய மனமில்லாமல் மோகினியும் பஸ்ஸில் முயன்றாள். பணிக்கர் அவளைப் பிடித்துக் கீழே இறக்கி விட்டார்.

குழந்தை தரையில் உருண்டது. பஸ் நகர்ந்தது.

பிஞ்சுக் கால்கள் பஸ்ஸைப் பின் தொடர்ந்து ஓடின. பஸ்ஸின் வேகத்தோடு போட்டி போட முடியவில்லை குழந்தையின் கால்களால். மோகினி துக்கம் மனத்தைக் கவ்வ, திறந்த வானத்தைப் பார்த்து வீரிட்டலறினாள். அங்கு தான் இறந்து போன அவளது தாய் இருப்பதாக நினைத்தாள் போலும்! தலை மயிரைப் பிய்த்துக் கொண்டாள். அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும், துக்கத்தையும் தரையிலே உருண்டு புரண்டு தீர்த்துக் கொள்ள முயன்றாள்.

வானத்திலிருந்து மோகினியின் தாய் இறங்கி வந்து அவளைத் தேற்றவில்லை. ஆனால் நாராயணி அம்மாள் ஓடி வந்து மோகினியை அணைத்துக் கொண்டாள். "அழாதே மோகினி! அழாதே!" என்று கலங்கிய கண்களோடு தேற்ற முயன்றாள்.

மோகினியின் குழந்தை மனத்தில் கூட ஓரளவு ஆணவம் இருந்திருக்க வேண்டும். 'அம்மா போய் விட்டாள்; அச்சனும் என்னைத் துறந்து போய் விட்டார்; இதை விட அவமானம் வேறு இல்லை' என்று நினைத்தது போல் ஆத்திரத்துடன் அலறி அலறி அங்கும் இங்கும் ஓடினாள்.

அங்கு நின்றிருந்த கூலியாட்கள், கான்ஸ்டபிள்கள் ஆகியோர் இம்மாதிரியான சோகக் காட்சியை இதுவரை பார்த்ததில்லையாகையால், கண் கலங்கி நின்றார்கள். பங்குன் நாயர், தன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்

(50'ம் பக்கம்)

### யார் இவர்?

திருப்பத்தூரில் சாதாரண வியாபாரியின் மகனாகப் பிறந்தவர். நேருஜியின் பிறந்த தினமான நவம்பர் 14'ம் தேதி தான் இவருக்கும் பிறந்த தினம், தையல் கடையில் பொத்தான் தைப்பவராக இருந்து, பின்பு சொந்தத்தில் சைக்கிள் கடை வைத்து நடத்திவருகிறார்.

வட இந்தியப் பெண்ணைக் காதலித்து வழக்கு மன்றம் வரை சென்று மணந்தார். விடுதலைப் போராட்டத்தின் போது மைசூர் சிறையில் நிஜலிங்கப்பாவுடன் அடைபட்டிருந்திருக்கிறார்.

—ஜெயமணியன்

விடை: 56'ம் பக்கம்

கொண்டு குழந்தையிடம் வந்து, ''பயப்படாதே குழந்தை. உன்னை குருவாயூருக்குக் கூட்டிப் போய், உன் அச்சன் வீட்டிலே நான் சேர்த்து விடுகிறேன்,'' என்று சொன்னார்.

மோகினி அழுவதைநிறுத்திக்கொண்டு இன்ஸ்பெக்டரைப் பார்த்தாள். மிக்க பரிதாபத்தோடு தன்னை நோக்கியபடி நிற்கும் மற்றவர்களைப் பார்த்தாள். கருணையற்ற தன் தந்தையை ஏற்றிச் சென்ற பஸ் போன திசையை ஒரு முறை நோக்கினாள். மறுபடியும் அழுகை அவளுக்குப் பொங்கி வந்தது. அழுகையும் ஆத்திரமும் பொங்கும் குரலில், ''வேண்டாம். ஞான் குருவாயூர் போவில்லா. எண்ட... எண்ட அச்சனும் மரிச்சிப்போயி,'' என்று சொல்லிவிட்டு நாராயணியைப் பார்த்தாள்.

நாராயணி விம்மிய மார்போடும், கலங்கிய கண்களோடும் நின்று கொண்டிருந்தாள். அப்போது ஓடிப்போய் மோகினி நாராயணியைக் கட்டிக்கொண்டாள். ''அம்மா அம்மா...'' என்று அழுதாள்.

முதல் நாள் பூராவும் ஒட்டுதல் இல்லாமல், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் உட்கார்ந்திருந்த குழந்தை, இன்று, ''அம்மா!'' என்று ஓடி வந்து தன்னைக் கட்டிக்கொண்ட விந்தையைப் பார்த்துத் திகைத்து நின்றாள் நாராயணி.

பங்குன் நாயர் மெள்ள நெருங்கி வந்து தரையைப் பார்த்தபடி, ''குழந்தையை நான் அழைத்துப் போகிறேன். அவள் அப்பன் அவளை வீட்டில் வைத்துக் கொள்கிறானா இல்லையா என்று பார்த்து விடுகிறேன்,'' என்றார்.

உடனே மோகினி, ''ஞான் அவ்விட போவில்லா,'' என்று அலறினாள்.

நாராயணி இன்ஸ்பெக்டரிடத்தில், ''குழந்தை கலங்கிப் போயிருக்கு. இப்போதைக்கு இங்கேயே இருக்கட்டும். அப்புறம் குழந்தையே வீட்டுக்குப் போகணும்னு ஆசைப்பட்டா அனுப்பி விடுவோம்,'' என்று சொன்னாள்.

இன்ஸ்பெக்டர் யோசித்தார். நாராயணி அம்மாளின் பொருளாதார நிலையைப் புரிந்து கொண்டிருந்தார் அவர். ''அப்பன் தான் வேண்டாமென்று சொல்லிவிட்டுப் போயிட்டான். குருவாயூருக்கே குழந்தை போகணும்னு இல்லை. எனக்குத்தெரிந்த அனாதை விடுதியிலே வேணுமானால் குழந்தையைச் சேர்த்திடறேன்; அவுங்க நல்லாக் கவனிச்சிக்குவாங்க,'' என்று சொன்னார்.

நாராயணி மோகினியின் முகத்தைத் கவனித்தாள். குழந்தையின் கண்களிலிருந்து தோன்றிய கலக்கத்தைப் பார்த்தாள். நாராயணியின் மனத்தில் ஒரு தீர்மானம் உருவாயிற்று. ''இல்லை. மோகினி என்னுடனேயே இருக்கட்டும். அவள் விரும்பும் வரையில் என் வீட்டிலேயே இருக்கட்டும்,'' என்று சொல்லிக் குழந்தையைத் தழுவிக் கொண்டாள்.

இன்ஸ்பெக்டர், நாராயணியைப் பரிவோடு நோக்கினார். அந்தப் பார்வையில், 'இந்தக் குழந்தை உங்களுக்குச் சுமையாக இருக்காதா?' என்ற கேள்வி வெளிப்பட்டது. அந்தக் கேள்வியைப் புரிந்து கொண்டவள் போல் நாராயணி தரையைப் பார்த்தபடி பதில் சொன்னாள்: ''இல்லை. இவள் யாருக்கும் சுமையாக இருக்க மாட்டாள். புத்திசாலிப் பெண்...எனக்கும், ஒரு பெண்ணுக்குச் சோறூட்டி, தலை வாரி, பூச்சூடி, பொட்டு இடணும்னு ரொம்ப நாளாய் ஆசை.''

பங்குன் நாயர் ஒரு பெருமூச்சு விட்டார். 'இல்லாதவங்களுக்குத்தான் எப்பவுமே தாராள மனசு,'' என்று நினைத்துக் கொண்டு, நாராயணியிடம் திரும்பி, ''எனக்கு ஷொரனூர்லே தான் ட்யூட்டி. இந்தக் குழந்தை விஷயமா, எந்தவித உதவி தேவையாயிருந்தாலும், தகவல் கொடுங்கம்மா,'' என்று சொன்னார்.

நாராயணி, ''அப்படியே ஆகட்டும்,'' என்று சொல்லிவிட்டுத்தரையைப் பார்த்தாள். இன்ஸ்பெக்டர், குழந்தை மோகினியின் முகத்தை ஒரு முறை தடவிக் கொடுத்து விட்டுப் போனார்.

நாராயணி வீடு திரும்பினாள் மோகினியோடு. காட்டில் அங்குமிங்கும் ஓடிய களைப்பும் தந்தையால் அடைந்த ஏமாற்றமும்மோகினியின் உள்ளத்தையும் உடலையும் சோர்வடையச் செய்யவே அயர்ந்து படுத்து விட்டாள். வெகு நேரம் எழுந்திருக்கவில்லை. நாராயணிக்கு ஒரே கவலை. அச்சன் வரப் போகிறார் என்ற ஆவலில் மோகினி முந்தின நாள், டீ தவிர ஒன்றும் சாப்பிடவில்லை. அவர் வந்து சென்ற பின்னும், ஒன்றும் சாப்பிடாமல் படுத்து விட்டாளே என்று வருந்தினாள்.

மோகினி அன்று மாலைதான் விழித்தெழுந்தாள். எழுந்ததும் கால், முகம்,

கழுவிக் கொண்டு வந்தாள். நாராயணி அம்மாளைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். வாய் திறந்து, ''பசிக்குன்னு,'' என்று முதல் முறையாகப் பேசினாள்.

உடனே நாராயணி ஆசையோடு இலை போட்டு சங்கரன் குட்டிக்கும் மோகினிக்கும் சாப்பாடு பரிமாறினாள்.

சாப்பிட்டு முடிந்ததும், மோகினி சாப்பிட்ட எச்சில் இலையை எடுத்துக் கொண்டு போய் வெளியே எறிந்தாள். பின்பு வந்து சாப்பிட்ட இடத்தை நீர் தெளித்துச் சுத்தம் செய்தாள். 'இனி மேல் இந்த வீடுதான் என் வீடு,'' என்ற எண்ணத்தைச் செயலால் வெளிப்படுத்தினாள் போலும்! வெளிப்புற அறையில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

நாராயணி மிகுதி இருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு உணவுப் பாத்திரங்களை எடுத்துக் கழுவி, சுத்தம் செய்து விட்டு வெளிப்புற அறைக்கு வந்தாள். மோகினி வரிசையாகப் பாய் விரித்துத் தலையணைகளை வைத்துக் கொண்டிருந்தாள். சங்கரன்குட்டி அருகில் வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். மோகினியின் பொறுப்புணர்ச்சியைக் கண்டு நாராயணி அதிசயித்தாள்.

மறுநாளும் அப்படியே மோகினி நாராயணியின் வேலைக்காரி வருவில் வந்து பகிர்ந்து கொண்டாள். குருவாயூரைப் பற்றியோ, தன் தகப்பனைப் பற்றியோ அல்லது இறந்துபோன தாயைப் பற்றியோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

சில நாள் கழித்தாவது மோகினியின் தந்தை கிருஷ்ண பணிக்கர் வந்து குழந்தையை அழைத்துப் போவார், மோகினி ஒருநாள் தன்னை விட்டுப் பிரிந்து போக வேண்டியவள்தான் என்ற நினைப்பில்தான் நாராயணி வாழ்ந்து வந்தாள்.

நாட்கள் வாரங்கள் ஆயின. வாரங்கள் மாதங்களாயின. மாதங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து இரண்டு மூன்று வருடங்கள் நடந்து முடிந்தன. ஆனால் கிருஷ்ண பணிக்கர் மகளைத் தேடி வரவே இல்லை.

மோகினியும் நாராயணியைத் தாயாகவே நினைத்து, ''அம்மா,'' என்றே அழைக்க ஆரம்பித்து விட்டாள். சங்கரன் குட்டி படிக்கச் செல்லும் பள்ளியிலேயே மோகினியும் சேர்க்கப்பட்டாள், சங்கரன் குட்டியும் பள்ளியில் சேர்ந்தபோது இருந்த அதே அறிவுத் திறனோடு, அப்படியே மாறாமல் இருந்தான். மோகினியோ ஒவ்வொரு வகுப்பாகத் தேறிக் கொண்டே சென்றாள்.

சங்கரன் குட்டியால் ஒரு விஷயத்தையும் கிரகித்து மனத்தில் நிறுத்த முடியவில்லை என்பதை உணர்ந்த ஆசிரியர்கள், அவன் படிப்பதை நிறுத்தி விடுவது நலம் என்றேகூறினார்கள். அதன்படியே குட்டியின் படிப்பு நிறுத்தப் பட்டது. ஆனால் மோகினியின் படிப்பு தொடர்ந்து நடந்தது.

படிப்பு வளர்ந்ததைப்போல் மோகினியின் உடலும் கவர்ச்சியோடு வளர ஆரம்பித்தது. பத்தாவது வயதிலேயே அவள் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத எழில் ஓவியமாகத் திகழ்ந்தாள். அது மட்டுமல்ல. படிப்போடு வீட்டு வேலைகளிலும் மோகினி கவனம் செலுத்தினாள்.

நடு நடுவே சங்கரன் குட்டிக்குக் கிறுக்கு ஏற்படும். வீட்டுப் பாத்திரங்களை உடைப்பதும், தீ வைப்பதும் போன்ற பயங்கரச் செயல்களில் ஈடுபடுவது அவனது பழக்கங்களாக இருந்தன. நாராயணி அம்மாளின் வார்த்தைகளைச் சட்டை செய்யவே மாட்டான். அம்மாதிரி சமயங்களில் மோகினி அவனைச் சமாளித்து, சீர்ப்படுத்தப் பெரிய உதவியாக இருந்தாள்.

மூளை வளரா விட்டாலும், குட்டியின் உடல் வளர்ந்து கொண்டுதானிருந்தது. அவன் மிருக பலம் வளர்ந்து வந்தது. அவனை விடச் சிறியவளாயி



''டாக்டர்! ரொம்ப சீரியஸ் கேஸ், இப்பவோ அப்பவோ என்று இருக்கு.''

''யாருக்கு?''

''என்னுடைய பர்ஸுக்குதான். தேதி பத்தாச்சு. இன்னும் நீங்க சம்பளம் தரலியே?''

னும் மோகினியைக் கண்டால் குட்டிக்கு ஒரு பயம். மோகினி அதிகம் பேசாமல் தன் வேலையை மட்டும் கவனித்து வந்ததே குட்டியின் மனத்தில் அவளிடம் ஒரு விதமான மதிப்பைக் கொடுத்தது. மோகினியின் கறுத்த அகன்ற விழிகளால் ஒருமுறை நோக்கினால், சங்கரன் குட்டி அப்படியே பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவான்.

மோகினி பள்ளிக்குப் புத்தகம் தாங்கிச் செல்லும் அழகே அழகு. மழை மேகம் போன்ற கூந்தல் தோளில் புரள, எந்தவித ஆபரணமும் இல்லாத ஆனால் தானே ஒரு ஆபரணம் போல் மின்னும் கழுத்து அசைய, கறுத்து ஒளி வீசும் விழிகள் பார்ப்பவர் உள்ளத்தை இழுக்க, பத்து வயது மோகினி அந்தப் பருதியிலேயே எல்லோருக்கும் வேண்டியவளாகி விட்டாள்.

ஒருநாள் மாலை.

பள்ளி முடிந்தது வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் மோகினி.

மழைச்சாரலில் ஒரு மனித உருவம் நகர்ந்து வருவது தெரிந்தது.

முதலில் மோகினி அதைக் கவனிக்கவில்லை. அந்த உருவம் எதிர்த் திசையிலிருந்து வந்தது. அதன் தலை முடி ஒட்ட வெட்டப்பட்டிருந்தது. முப்பத்திரண்டு பற்களும் தெரியும்படியான ஒரு சிரிப்பு. பார்க்கவே மோகினிக்குப் பயமாக இருந்தது.

மோகினியை நெருங்கியதும் உருவம் அப்படியே நின்றது. அவளை முறைத்துப் பார்த்தது. மோகினியும் அந்த உருவத்தை முறைத்துப் பார்த்தாள்.

திடீரென்று அந்த உருவத்தின் கண்களில் ஒருவித ஒளி வீசியது. பயமே தெரியாத மோகினிக்குக் கூட நெஞ்சு படபடத்தது. செம்மண் நிறச் சாக்குத் துணி அணிந்த உடல் வெண்மையாக இருந்தது. அந்த உருவம் மோகினியை நோக்கிக் குனிந்தது. அப்போது தான் மோகினி அந்த உருவத்தின் கையைக் கவனித்தாள்.

அதன் ஒரு கையில் மூன்று விரல்கள் இல்லை!

சிறு பெண் மோகினிக்கு பயம் ஏற்பட்டது. மலை முகட்டில் சூரியன் மறைந்து இருள் சூழும் சமயம். அந்த உருவத்தின் கை—மூன்று விரல்களை இழந்த கை— மோகினியின் முகத்தை நோக்கி நெருங்கிற்று. கட்டைவிரலும் ஆள்காட்டி விரலும் மட்டுமே அந்தக் கையில் மீதியிருந்தன. இரண்டும் சேர்ந்து ஒரு கிடுக்கி போல் காட்சியளித்தன. அந்தக் கிடுக்கி மோகினியின் கன்னத்தைத் தடவியது. விரல்களின் ஸ்பரிசம் ஏற்பட்டதும் மோகினி வீரிட்டலறினாள். "அம்மா! அம்மா! சத்தம் போடாதே!" என்று கூறியது அந்த உருவம்.

பத்து வயதுக் குழந்தையாகிய தன்னை, "அம்மா," என்று அந்தப் பெரிய உருண்டு திரண்ட உருவம் அழைத்தது மோகினிக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த உருவத்தின் பின்னால் மலைச்சரிவில், ஒரு பெரிய கார் நிற்பதையும் அவள் கவனித்தாள்.

(தொடரும்)

❋



சுந்தரவல்லி என்ற பெயரைத்தான் சாதாரணமாக யாரும் கேள்விப் பட்டிருப்பார்கள். சுந்தரவில்லி என்று சொன்னால் 'சுந்தர வில்லியா' என்று ஆச்சரியக்குறி உங்களுக்குத் தோன்றும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பாடல் இதோ:—

பந்தரைக் கிழித்தன, பரந்த பூமழை;
அந்தர துந்துமி முழலின் ஆர்த்தன;
இந்திரன் முதலிய அமரர் கண்டினார்;
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தினர்

விசுவாமித்திரரது வேள்வியை அரக்கர்களது கொடுமையிலிருந்து இனிது காத்த ராமபிரானை தேவர்கள் வாழ்த்து முகத்தான் அமைந்த பாடலே இது. சுந்தரமான வில்லாகிய கோதண்டத்தைத் தாங்கிய ஸ்ரீராமனையே சுந்தரவில்லியென்று விளிக்கிறார் கம்பர்.

—வி. ச. வாசுதேவன்

## ராமாயணத்தில் ஒரு சுந்தரவில்லி

# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்



## அத்தியாயம்-6

மோகினிக்குக் கிலி பிடித்தது.

எதிரே நின்ற அந்த உருவத்தின் கண்ணில் நீர் துளித்தது.

"குழந்தை! என்னைப் பார்த்து நீ பயப் படாதே. நீ எனக்குத் தாயம்மா. நான் தொழும் வாலைக்குமரியம்மா. பாலா திரி புரசுந்தரி! அண்ட சராசரங்கள் உயிர்நாடி யான பராசக்தியின் பால வடிவம் நீ!" என்று ஏதேதோ சொன்னார்.

அவர் சொன்னவற்றின் பொருள் என்ன என்று மோகினிக்குப் புரியவில்லை. அவர் விரல்களைக் கண்டு அவளுக்குப் பயம்தான் ஏற்பட்டது. அவரது கடை வாய்ப் பற்கள் வரை வெளியே தெரியும் ஒரு சிரிப்பு அவரை ஒரு பயங்கர உருவமாய்க் காட்டியது. ஆனால் ஒளிவீசும் அவர் விழி நிறைந்த கண்ணீர் அவர் வருந்து கிறார் என்ற உண்மையைத்தான் புலப்படுத்தியது.

மோகினி, "வழியை விடுங்க, நான் வீட்டுக்குப் போகணும்," என்றாள்.

"உன் வீடு எங்கேம்மா இருக்கு?"

மோகினி, தன் வீட்டின் இருப்பிடத்தை இந்த பயங்கர சொரூபியிடம் சொல்லலாமா கூடாதா என்று தயங்கினாள். சொல்லாவிட்டால் அவர் ஏதாவது செய்து விடுவாரோ என்ற பயம் மனத்தை உறுத்தியது. தன்

அழகிய கைகளை உயர்த்தி, மலைக்கப் புறம் காட்டினாள். ''அவ்விடே,'' என்று கூறிவிட்டு வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

உருவமும் மெல்லத் தொடர்ந்தது.

மோகினி, சரிவில் நிறுத்தியிருக்கும் காரைத் தாண்டிப் பத்தடி போனதும், பின்புறம் பேசும் குரல் கேட்டு நின்றாள். அந்தப் பளபளப்பான காரின் டிரைவர், ''வண்டி எடுக்கட்டுங்களா?'' என்று கேட்டான். மோகினி திரும்பிப் பார்த்தாள். டிரைவர், அந்தப் பயங்கர மனிதரிடம் கைகட்டிப் பணிவுடன் நின்று கொண்டிருந்தார். காவி அணிந்தவர், மோகினியைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

''வேண்டாம், நான் கொஞ்சம் நடந்து விட்டு வருகிறேன்,'' என்று சொல்லிவிட்டு மோகினியை நோக்கி நடக்க ஆரம்பித்தார். மோகினி விர்ரென்று திரும்பி இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தாள். மேல் சட்டைகூட இல்லாமல் இருப்பவருக்கு இவ்வளவு பெரிய கார் சொந்தமாக இருக்கிறதா! பெரிய பணக்



காரராக இருக்கவேண்டும். நம்மை ஏன் தொடர்ந்து வருகிறார். புரியவில்லை. திரும்பிப் பார்த்தாள். அந்த மனிதர் வேகமாக பின் தொடரவில்லை. மெள்ள நடந்து வந்து கொண்டிருந்தார்.

வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. மோகினியின் பயமும் குறைந்து கொண்டு வந்தது. மோகினி வீட்டுக்குள் சென் றதும் படபடப்போடு தன்னுடைய பயத்தைத் தெரிவித்தாள். நாராயணி மோகினியை உள்ளே அனுப்பிவிட்டு வெளிப்புறம் வந்தாள். சங்கரன்குட்டியும் வெளியே வந்தான்.

அவர் நாராயணி அம்மாளையும், சங்கரன் குட்டியையும் மாறி மாறிப் பார்த்தார். புன்முறுவலோடு, ''பள்ளியிலிருந்து வந்தாளே சிறுபெண், அவள் உங்கள் மகளா?'' என்று கேட்டார்.

நாராயணியின் மனத்தில் சந்தேகம். கிருஷ்ண பணிக்கர் அனுப்பிய ஆளாக இருப்பாரோ? மகளைக் கதறக் கதற விட்டுச் சென்றவர், இத்தனை வருஷம் கழித்து ஆளனுப்பி அழைத்துப் போக நினைக்கிறாரோ? என்ன நெஞ்சழுத்தம்! சற்று சூடாகவே, ''நீங்கள் யார்? எதற்காக வந்திருக்கிறீர்கள்? மோகினி என் வயிற்றில் பிறந்த மகளல்ல. ஆனல் அவளை விட்டுப் பிரிய நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்!'' என்று படபடவென்று அடுக்கிக் கொண்டே போனுள்.



## சற்றே விலக்கும் பிள்ளாய்

### விடை

1. தஞ்சாவூர்
2. மாமல்லபுரம்
3. கங்கை கொண்ட சோழபுரம்
4. ராமேஸ்வரம்
5. பெங்களூர் பலவன்குடி
6. மைசூர் சாமுண்டி
7. திருப்புங்கூர் (நந்தனுருக்கு நந்தி)
8. திருவாவடுதுறை
9. திருநெல்வேலி
10. காஞ்சிபுரம்

''என்னைப் பார்த்துக் குழந்தை பயப்பட்டாள். அது நியாயம். வயதில் பெரிய நீங்களும் பயப்படுகிறீர்களே!'' என்று புன்முறுவல் செய்தார் அவர். உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த சங்கரன் குட்டி, ''அம்மா, அவர் தலை ஈயச் செம்பு போல இருக்கம்மா!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். நாராயணி, ''சும்மா இருடா குட்டி!'' என்று கண்டித்தாள்.

சங்கரன்குட்டி ஒரு மாதிரி என்பதைத் தெரிந்து கொண்ட அவர் முகத்தில் கனிவு ஏற்பட்டது. ''இது ஈயச்செம்புபோல் இருந்தாலும் இது தேயாத செம்பு. ஈயாத செம்பு. உலகத்தைப் பார்த்துப் புரிந்து கொண்ட விஷயங்களைத் தேக்கி வைக்கும் செம்பு. இந்தச் செம்பில் நுழைந்தது வெளி வராது.'' என்று பற்களையெல்லாம் காட்டிச் சிரித்தார்.

நாராயணி, ''அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் யார், எதற்கு வந்தீர்கள் என்ற கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே?'' என்று தொடர்ந்து கேட்டாள்.

''பார்த்தாலே தெரியவில்லையா? நான் ஒரு பரதேசி. எங்கு போகிறேன், என்ன பேசுகிறேன் என்ற கட்டுப்பாடு இல்லாதவன். நடந்து வரும்போது குழந்தையைப் பார்த்தேன். மாலைச்சூரியன் ஒளி முன்பு அவள் நடந்து வந்த காட்சி நான் மனத்தில் உபாசிக்கும் பாலாதிரிபுரசுந்தரியின் கற்பனை உருவம்போல் தோன்றியது. மகிழ்ந்தேன். ஆனால் குழந்தை என்னைப் பார்த்துப் பயந்தது.'' என்று நிறுத்தினார்.

நாராயணி அவர் முகத்தில் நிலவிய அருளைப் பார்த்துக் குழம்பினாள். அவர் கண்களில் களங்கமோ, விகல்பமோ இல்லாதிருப்பதை உணர்ந்தாள். அவர் பார்வை பொதுவாகத் தரையிலே நின்றது. அவர் தலை நிமிர்ந்து பார்க்கும் போது, அவர் பார்வை குறிப்பாக எதிலும் லயிக்காமல் எல்லாவற்றிலும் பொருந்தி நின்றது. குழந்தைகள், மிருகங்கள் பார்ப்பது போல் எந்தவித தனி நோக்கமும் அப்பார்வையில் இல்லாதிருந்தது. நாராயணிக்கு அவர்மீது நம்பிக்கை பிறந்தது. அதைப் புரிந்து கொண்டவர்போல் அந்த மனிதர், ''அம்மா, தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறீங்களா?'' என்று கேட்டார்.

நாராயணி நீர் கொண்டு வர உள்ளே சென்றபோது அவர், ''அம்மா, தண்ணீரை உங்க வளர்ப்புப் பெண்ணிடம் கொடுத்து அனுப்புங்க. அவள் என்னைக் கண்டு பயப்படக் கூடாது,'' என்று சொன்னார்.

ஒரு வெண்கலப் பாத்திரத்தில் நீர் எடுத்து வரும்போதே மோகினி நாராயணியிடமிருந்து பாத்திரத்தை வாங்கிக் கொண்டு வீட்டின் வெளிப்புறம் வந்தாள். ஆனால் தயங்கித் தயங்கி வந்தாள்.

''உன் கையால் தாகம் தீரத் தண்ணீர் கொடம்மா,'' என்றார்.

மோகினி பாத்திரத்திலுள்ள நீரைச் சாய்த்தாள்.

இரண்டு கைகளாலும் கை ஏந்திக் குடித்தார். நீர் அருந்திய பின் ஒருவித நன்றியோடு மோகினியை நோக்கினார். நாராயணி, ''உங்கள் பேச்சைப் பார்த்தால் நீங்கள் மலையாளத்தைச் சேர்ந்தவர் அல்ல என்று தெரிகிறது. நீங்க எந்த ஊர்? எங்கே தங்கறீங்க?'' என்று கேட்டாள்.

''நான் கோயம்புத்தூரைச் சேர்ந்தவன். இரண்டு மைலுக்கப்பாலுள்ள 'சாந்திவில்லா'வில் தங்கியிருக்கிறேன்.''

சாந்திவில்லா என்றதும் நாராயணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்த சாந்திவில்லாவில் வாழ்பவர்தான் அந்த வட்டாரத்திலேயே பெரும் பணக்காரர். அவருக்குச் சொந்தமாகக் கோயம்புத்தூரில் பல மில்கள் இருப்பதாகக் கேள்வி. ஏதோ மனச் சாந்திக்காக இந்த மலைப்பிரதேசத்துக்கு வந்து வாழ்வதாகவும், அவருக்கு ஒரு மகன் இருப்பதாகவும் கேள்விப்பட்டிருந்தாள். ஒவ்வொரு வைகுண்ட ஏகாதசியின்

www.t.me/tamilbooksworld

போதும் அந்தப் பிராந்தியத்து ஏழைகள் அவர் வீட்டுக்குச் சென்று அரிசி துணி, தானமாக வாங்கி வருவது வழக்கம். மற்றப்படி அவர் வெளியே வந்து யாருடனும் சகஜமாகப் பழகவோ ஊர் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வதோ கிடையாது. அவர் வாழும் பிரம்மாண்டமானசாந்திவில்லாவுக்கு யாரும் போவதில்லை. பெரிய அரசாங்க அதிகாரிகள் கூட சாந்திவில்லாவுக்குப் போவதென்றால் முன்னேற்பாடான அழைப்பின் பேரில்தான் போகமுடியும். உயர்வோடு ஒதுங்கி வாழ்ந்த லட்சாதிபதியின் வீட்டில் எப்படி இந்த சாமியார் தங்க நேர்ந்தது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, கார் டிரைவர் ஒரு கூடையோடு அவரை நெருங்கினான்.

''அந்தப் பழங்களை என் தாயாருக்குக் கொடு,'' என்றார்.

டிரைவர் குழம்பினான். அவன் பார்வையில் தெரிந்தவர் இருவர்: ஒருத்தி நாராயணி அம்மாள், இன்னொருத்தி, மோகினி. இருவருமே அவருக்குத் தாயாகக்கூடிய பருவத்தினர் அல்ல. புரிந்து கொண்டவர்போல், அவர், மோகினியைச் சுட்டிக்காட்டி, ''அதோ அதுதான் என் தாய், அவளிடம் கொடு,'' என்றார்.

டிரைவர் தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல் பழக்கூடையை மோகினியிடம் கொடுத்தான்.

அவர் எழுந்து ஒன்றும் பேசாமல் காரை நோக்கிச் சென்றுவிட்டார். பழக்கூடையைக் கொடுத்துவிட்டு நகரும் டிரைவரை நிறுத்தி நாராயணி கேட்டாள்.

''இவர் யாருப்பா?''

''சாமியை உங்களுக்குத் தெரியாதுங்களா? இவரை வேண்டியவங்கன்னு நெனைச்சேன். மார்க்கெட்டிலே பத்து ரூபாய்க்கு வாங்கிய பழத்தை அப்படியே கொடுத்திட்டாரே. அவர் போக்கே புரியலேங்க. 'பங்களாக்காரர்' தம்பிங்க.''

''சாந்திவில்லா பங்களாக்காரர் தம்பியா? அவ்வளவு செல்வந்தரின் தம்பி ஏம்பா இப்படி ஆயிட்டார்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. அண்ணாத்தை எவ்வளவுக்கு எவ்வளவு பணத்திலே அழுத்தமோ அவ்வளவுக்கவ்வளவு இவர் தாராளமுங்க. பள்ளிக்கூடம் கட்டப் போறாருங்களாம். ஏழை அனாதைக் குழந்தைங்களுக்கு விடுதி கட்டப் போறாராம்,'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தான்.

மறுநாள் மாலையும் அவர் நாராயணியின் வீட்டுக்கு வந்தார். அப்போது மோகினி பள்ளியிலிருந்து திரும்பவில்லை. மோகினியின் விருத்தாந்தம் பூராவும் கேட்டுக்கொண்டார். அப்புறம் தினமும் மாலை வர ஆரம்பித்தார். மோகினிக்குத் தமிழ்ப் பாடமும், திருக்குறள் பாடமும் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். உயர்நிலைப் பள்ளி தொடங்கியதும் மோகினியை அதில் சம்பளமில்லாமல் சேர்த்துக் கொண்டார். ஒரு குழந்தையின் வளர்ச்சியில், அதுவும் பெண் குழந்தையின் வளர்ச்சியில் இருவித ஆதரவுகள் தேவை. உணவு அளித்து அன்பு காட்டும் மென்மையான தாயின் ஆதரவு. மற்றொன்று, தைரியமூட்டி உள்ளத்துக்கு வலிவும் உலக அறிவும் போதிக்கும் தந்தையின் ஆதரவு. மோகினி இரண்டையும் ஆரம்பத்தில் இழந்தவளாயினும் நாராயணியின் அன்பால் ஒன்றையும், இவரது ஆதரவால் மற்றொன்றையும் அடைந்தாள். அவர் மோகினிக்குப் படிப்பு மட்டும் சொல்லித் தரவில்லை. பண்பும் போதித்தார். உடல் வளர்ச்சிக்கும் வேண்டிய பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்தார். நாராயணி வீட்டைச் சுற்றி ஒரு காய்கறித் தோட்டம் போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அதற்குத் தேவையான விதைகளையும் உரத்தையும் கொண்டுவந்து கொடுத்தார். அந்தத் தோட்டத்திலே மோகினியையே உழைக்கும்படி செய்தார். ''உழைப்பே இன்பத்தின் அடிப்படை. பலன் கருதாமல் ஏதாவது ஒன்றில் உழைத்துக் கொண்டே இருந்தால் துன்பம் அணுகாது. அதுவே பேரின்ப சாதனம். இடைவிடாத பலன் கருதா உழைப்புக்கு ஆண்டவன்தான் எடுத்துக்காட்டு. தினமும் சூரியனைக் காலையில் எழுப்பி பவனி வரச் செய்கிறான். பருவத்தில் மழையைப் பெய்வித்து உணவை வளர்க்கிறான். புஷ்பங்களை மலரச் செய்கிறான். நாம் தூங்கும்போது அவன் தூங்குவது இல்லை. எங்கும் எப்போதும் விழிப்புடன் இருந்துகொண்டே பணியாற்றுகிறான். ஓய்வை வெறுக்கும் ஒருவன் புவனத்தில் உண்டென்றால் அது முழுமுதற் கடவுள்தான். அவன் படைப்பாகிய நாம் அவனைப் பின்பற்ற வேண்டாமா?'' என்று அடிக்கடி மோகினிக்குச் சொல்வார்.

அவருடைய வாழ்வையும் அப்படியே

அமைத்துக் கொண்டார். காலை நான்கு மணியிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரையில் ஏதாவது செய்துகொண்டே இருப்பார். எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார். அதனால் அந்தப் பகுதியில் அவருக்குக் 'குழந்தைச் சாமி' என்ற பட்டப் பெயர் வந்துவிட்டது. குழந்தைச் சாமி வந்ததிலிருந்து நாராயணி அம்மாள் வாழ்க்கையமைப்பில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. எல்லையில்லாச் செல்வத்தில் பிறந்தும் செல்வத்தைத் துறந்து, காவி அணிந்து தெருத் தெருவாக சுற்றுகிறாரே இந்தக் குழந்தை சாமி, அதைப் பற்றிச் சிறிது கூட வருந்துவதாக இல்லையே என்று நினைக்கும்போதெல்லாம், நாராயணிக்குத் தன் மகன் சங்கரன்குட்டி அறிவு வளராமல் இருப்பதை ஒரு பெரும் துக்கமாக மனத்தில் போற்றி வளர்ப்பது தவறு என்று பட்டது.

நாராயணியின் மனத்தில் ஒரு அமைதி, திருப்தி ஏற்பட்டது. அது மட்டுமல்ல. குழந்தைசாமியின் சொல்படி காய்கறித் தோட்டம் அமைத்ததன் விளைவாக, பொருளாதார அமைப்பிலும் சிறிது உயர்வு ஏற்பட்டது. பணத்தைக் கொண்டுவந்து பிச்சையாகக் கொடுத்திருந்தால் நாராயணி அம்மாளின் தன்மானத்தை உறுத்தியிருக்கும். ஆனால் குழந்தைச் சாமி சம்பாதனைக்கு வழி காட்டினார். அதற்குத் தேவையான விதைகள், உரம் கொண்டுவந்து கொடுத்து உதவினார். அதுமட்டுமல்ல, பயிரான காய்கறிகளைத் தன்னுடைய அறுதை விடுதிக்கே விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். ஒன்றும் செய்யாமல் வீட்டில் உட்கார்ந்திருந்த சங்கரன்குட்டிக்குக்கூட நீர் இறைத்துத் தோட்டத்தில் வேலை செய்யும் பழக்கம் ஏற்பட்டது.

ஒரு நாள் மாலைப் பொழுது, மோகினி பள்ளியிலிருந்து இன்னும் வரவில்லை. நாராயணி அம்மாள் வீட்டுக்கு இன்ஸ்பெக்டர் பங்குன் நாயர் வந்தார். ஷோரனூரிலிருந்து குருவாயூர் போக நேர்ந்தபோது அவருக்குக் குழந்தை மோகினியைப் பற்றியும், நாராயணியைப் பற்றியும் ஞாபகம் வரவே, வழியில் பயணத்தை நிறுத்தி நாராயணியைப் பார்க்க நினைத்தார். அடையாளம் தெரியாமல் வளர்ந்துவிட்ட சங்கரன்குட்டியைத்தான் வீட்டில் நுழைந்ததும் பார்த்தார். ஒருவேளை மோகினியின் தந்தை மனம் மாறித் திரும்பி வந்து தன் மகளை அழைத்துப் போயிருப்பாரோ என்றுதான் நினைத்தார். நாராயணி அம்மாள் அவரிடம் மிகவும் பெருமையோடு மோகினியைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், தான் நினைத்தது தவறு என்பதை உணர்ந்தார்.

"குட்டி என் வயிற்றில் பிள்ளையாகப் பிறந்தாலும் அவனால் எனக்கு உதவி எதுவும் இல்லை. எனக்குப் பிள்ளை போல் உதவுவது மோகினிதான். அன்று இரவு நடந்த விபத்து என்னைப்பொறுத்த வரையில், பெரிய அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். என்னையும் சங்கரன்குட்டியையும் காப்பாற்றுவது மோகினியின் உழைப்பு என்றே கூறலாம். என்ன சுறுசுறுப்பு அந்தக் குழந்தை! பள்ளியில் படிக்கிறாள். தோட்ட வேலையில் உதவுகிறாள். வீட்டு வேலையில் பாதி அவளே செய்கிறாள். அவளை இரக்கமில்லாமல் இங்கு விட்டுச் சென்ற அவள் தந்தை கிருஷ்ண பணிக்கருக்கு, அவர் அடைந்த நஷ்டத்தைப் பற்றிக் கொஞ்சமும் தெரியாது!" என்றாள் நாராயணி.

"அப்படியென்றால் அவள் தந்தை பிறகு ஒரு முறைகூட இங்கு வந்து அவளைப் பார்க்கவே இல்லையா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"மோகினியும் அவள் அச்சனைப் பற்றியே பேசுவதில்லை. அவரும் இந்தப் பக்கமே அப்புறம் வரவில்லை. பெற்ற தந்தை மோகினியை மறந்தாலும் கடவுள் அந்தக் குறையைத் தீர்த்துவிட்டார். அவளுக்கு ஒரு உயர்ந்த மனிதர் தந்தையாகக் கிடைத்துவிட்டார்," என்று குழந்தைச் சாமி பற்றியும், மோகினி அவர் நடத்தும் பள்ளியில் படிக்கும் விவரத்தையும் கூறினாள்.

"நானும் அவரையும், அவர் செய்யும் நன்மையையும் அடிக்கடி கேள்விப்படுகிறேன். ஆனால் அவரை இதுவரையில் ஒருமுறைகூட நேரிலே பார்க்கவில்லை," என்று சொல்லி நிறுத்தும்போதே, ஆள் நுழையும் சத்தம் கேட்டது. வீட்டினுள் குழந்தைச் சாமி நுழைந்தார். நாராயணி அம்மாள் பயபக்தியோடு எழுந்து அவர் உட்காருவதற்காக மூலையிலிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டாள். ஆனால் உள்ளே நுழைந்த குழந்தைச் சாமி, இன்ஸ்பெக்டர் பங்குன் நாயரைப் பார்த்ததும், அதிர்ச்சி

அடைந்தவர் போல் ஆனார். சலனமில்லா அவர் முகத்தில் குழப்பம் திரைபோல் விழுந்தது. அதேபோல் பங்குன் நாயரும் குழப்பத்தோடு அவரைப் பார்த்தபடி தன் இடத்தைவிட்டு எழுந்தார்.

பங்குன் நாயரின் பார்வை அவரது தலையிலிருந்து அவர் பாதம் வரை பார்வையிட்டது. முடிவில் இன்ஸ்பெக்டரின் பார்வை அவரது விரல்கள்மீது நின்றது. ஐந்து விரல்களுக்குப் பதிலாக இரண்டே விரல்கள் கிடுக்கிபோன்ற அமைப்பில் மிருந்திருக்கும் கரத்தைப் பார்த்தார். இன்ஸ்பெக்டர் முகத்தில் ஒருவித ஒளி உண்டாயிற்று. அவர் எதையோ புரிந்து கொண்டவர்போல் புன்முறுவல் செய்தார். 'யோக்கியர்கள் என்று நிரூபிக்கப்படும்வரை எல்லாருமே அயோக்கியர்கள்,' என்ற வரண்ட தத்துவத்தில் நம்பிக்கை வைத்த இன்ஸ்பெக்டர், 'எல்லோரும் நல்லவரே,' என்று தினமும் சொல்லிவந்த 'பரதேசி'யைப் பார்த்து முறைத்து நின்றார். அந்தச் சிறு அறையின் ஒருபுறத்தில், மின்னும் பொத்தான்களும் பளபளவென்று பாலிஷ் செய்யப்பட்ட பெல்ட்டும் அணிந்த இன்ஸ்பெக்டர்; இன்னொரு புறத்தில் வெள்ளை உடை பரதேசி ஒருவர், சமூகத்திலுள்ள குற்றத்தைத் துரத்தித் தண்டிக்கும் ஆயுதம், மற்றவர் குற்றத்தை வலுவில் போய் அணைத்து, அதன் விஷத்தைப் போக்கப் பாடுபடும் சக்தி. இந்த இரண்டு தத்துவங்களும் எதிர்எதிராய் நிற்கும் நிலையில், இரண்டுக்கும் இடையில் நிகழ்ந்த மௌன சம்பாஷணையைப் புரிந்து கொள்ளாமல் நாராயணி, ''இவர்தான் நான் இப்போது பேசிக் கொண்டிருந்தேனே அந்தக் குழந்தைச்சாமி. உட்காருங்கோ. பழமும் கக்குவெள்ளமும் எடுத்திட்டு வர்றேன்,'' என்று சொல்லி உள்ளே சென்றாள்.

சங்கரன்குட்டியும் தாயைப் பின் தொடர்ந்தான். தனியே விடப்பட்ட இருவரும் ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்துக் கொண்டனர். இன்ஸ்பெக்டர் பங்குன் நாயர் கனைத்துக் கொண்டார். பிறகு, ''நீ தானு குழந்தைச் சாமி?'' என்று சொல்லி விட்டுச் சாமியை ஏளனமாகப் பார்த்தார்.

தரையைப் பார்த்தபடி இருந்த அவர் கண்கள் இன்ஸ்பெக்டரை நிமிர்ந்து பார்த்தன. ''நான் யார் என்பது இப்போது எனக்கே அக்கறையில்லாத ஒரு விஷயம். நான் இப்போது

## வந்தும் கெடுத்த ரயில்

அவனும் அவளும் காதலர்கள். அவர்களுடைய காதலை இருதரப்புப் பெற்றோர்களும் ஒப்புக் கொள்ளவில்லை. இருவரும் செத்துப் போய் விடுவதாக முடிவு செய்தார்கள். ரயில் முன்னே விழுந்து சாவது என்று முடிவு செய்து கொண்டார்கள்.

தண்டவாளத்தில் படுத்துக் கொள்வதற்குச் சௌகரியமாக ஜமுக்காளம் தலையணை முதலியவைகளை எடுத்துக் கொண்டு இருட்டின பிறகு புறப்பட்டார்கள்.

சாவதற்கு முன்னால் ஒரு ஐயனார் கோவில் வாசலில் மாலை மாற்றிக் கொண்டார்கள். பிறகு தண்டவாளத்தில் போய்ப் படுத்துக் கொண்டார்கள்.

பதினொன்றரை மணி எக்ஸ்பிரஸின் வெளிச்சம் இருளைக் கிழித்துக் கொண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தது.

வாழ்க்கையில் மிச்சமிருக்கும் ஒரு சில விநாடிகளை இன்பமாகக் கழிக்க அவ்விருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டனர். ரயில் நெருங்கிக் கொண்டிருந்தது. ''தட தட தட'' என்ற சப்தம் போட்டது. ''ஊஹ்ற...'' என்ற விசில் காதைத் துளைத்தது. இருவரும் கண்களை இறுக மூடிக் கொண்டனர்.

மீண்டும் அவர்கள் கண் விழித்தார்கள். இந்திரலோகத்தில் அல்ல. சாட்சாத் பூலோகத்தில்தான். எக்ஸ்பிரஸ் அடுத்த ஸ்டேஷனுக்குப் போய்விட்டது. அவர்கள் இருட்டில் லயன் தெரியாமல் ரயில் ஓடாத இடத்தில் படுத்திருந்ததுதான் காரணம். மீண்டும் அவர்கள் சாக முயற்சிக்கவில்லை. ஏனென்றால் போலீஸ்காரர்கள் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டார்கள்.



—'தொழிற்பித்தன்'

www.t.me/tamilbooksworld

என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதில்தான் எனக்கு அக்கறை. அதனால் நான் யார் என்பது இங்குள்ள யாருக்கும்தெரியவேண்டியதில்லை. தெரிந்தால் வீண் குழப்பம்தான் ஏற்படும்.''

இன்ஸ்பெக்டர் சிரித்துக்கொண்டே, ''உண்மையை மூடி மறைக்கச் சொல்கிறீர்கள்,'' என்றார்.

''சில உண்மைகளை மறைப்பதால் ஏற்படும் நன்மை அபரிமிதம். நீங்கள் நேர்மையும் ஒழுக்கமும் உள்ள இன்ஸ்பெக்டர். குழந்தையல்ல. நான் என் சுய லாபத்துக்காக எந்த உண்மையையும் உங்களை மறைக்கச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கமாட்டீர்கள். நான் என்னால் இயன்றவரை இந்த வட்டாரத்தில் செய்துவரும் நல்ல காரியங்களுக்கு முட்டுக்கட்டை போடமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்,'' என்று சொல்லிவிட்டு, குழந்தைச் சாமி இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் அவரது பார்வையில் அப்படியே கட்டுண்டு நின்றார். சிந்தனை சுழன்றது. அவர் பேச நினைத்தது, சொல்ல விரும்பியது எல்லாம் அவர் மனத்தைவிட்டு மறைவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

தன்னுடைய போலீஸ் உடை, இன்ஸ்பெக்டர் என்ற நினைப்பில் தோன்றும் ஒருவித பலம், இவற்றையெல்லாம் மிஞ்சிய ஒரு பலம், குழந்தைச் சாமியிடம் இருப்பதைப்போல் உணர்ந்தார்.

பல வருஷங்களுக்கு முன் விசித்திரமான சூழ்நிலையில் சந்தித்த ஆசாமியின் உடல், தோற்றம் இவரிடம் இருந்த போதிலும், எதிரே இருப்பவர் அவன் அல்ல. இவரை 'அவன்' என்று அழைக்கவே இன்ஸ்பெக்டரின் சிந்தனை கூசியது. இந்த மாறுதல் வெறும் உடையினால் வரக்கூடிய மாற்றமல்ல. ஓர் ஆழமான மாற்றம், உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து ஏற்படும் மாற்றம் என்பதை உணர்ந்து கொண்டார்.

(தொடரும்)


# சார்மிஸ் ஸ்னோ

## உங்கள் அழகை அதிகரிக்கிறது ...

எல்லாப் பருவ காலங்களிலும்
பாதுகாக்கவும் செய்கிறது

அற்புத
மணமுடையது




CS.Q.5 TAM

# மின்னல், மழை, மோகினி

## ஜாவர் சீதாராமன்



### அத்தியாயம்—7

இன்ஸ்பெக்டர் பங்குன் நாயரும் குழந்தைச்சாமியும் ஒருவரையொருவர் பார்ப்பதைத் தவிர, வேறு ஒன்றும் செய்யாமல் சில விநாடிகள் இருந்தனர்.

அப்போது நாராயணி அம்மாள், பழத்தையும் சுக்கு வெள்ளத்தையும் எடுத்து அறையினுள்ளே வந்தாள்.

இன்ஸ்பெக்டருக்கு, குழந்தைச்சாமி சொன்னபடி உண்மையை மறைத்துவிடுவதா, இல்லை எல்லாவற்றையும் வெளியிட்டுவிடுவதா என்று புரியவில்லை. இருவரும் மௌனமாகச் சாப்பிட்டனர்.

இன்ஸ்பெக்டர் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவர்போல், சட்டென்று எழுந்து விடை பெற்றுக்கொண்டு வெளியே போனார். போகும்போது குழந்தைச்சாமி உட்கார்ந்திருந்த இடத்தைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. அப்போது இன்ஸ்பெக்டர் ஒரு விநாடி தயங்கி நின்றபடி அவரைப் பார்த்தார்.

குழந்தைச்சாமியும், அவரை ஏதோ மன்றாடி வேண்டிக் கொள்வதுபோல் பார்த்தார். இன்ஸ்பெக்டர் வெளியே சென்றார்.

குழந்தைச்சாமி சிந்தனையில் ஆழ்ந்தபடி இருந்தார்.

நாராயணி அம்மாள், "இன்னிக்கி ஏன் உங்க முகம் கவலையிலே ஆழ்ந்தபடி இருக்கு?" என்று கேட்டாள்.

சமாளித்தபடி சிரித்துக்கொண்டே, "ஒன்றுமில்லை. வாழ்வின் அமைப்பைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருந்தேன். திடீரென்று என்னைப்பற்றி யாராவது உங்களிடம் வந்து, நான் ஒரு அயோக்கியன், இரக்கமற்றவன் என்று சொன்னால் மறுநாள் முதல் நீங்கள்—நான் எவ்வளவு நல்லதைச் செய்திருந்தாலும்—என்னை நம்புவீர்களா?" என்றார்.

"இதென்ன கேள்வி? வேடிக்கையாக இருக்கிறதே! உங்களைப்பற்றித் தவருகப் பேசக்கூடிய ஜீவன்கூட இருக்க முடியுமா?" என்று நாராயணி அம்மாள் வியந்தாள்.

பிறகு மோகினியைப் பற்றிச் சில விநாடிகள் பேசிக்கொண்டு இருந்து விட்டுப் புறப்பட ஆயத்தமானார் குழந்தைச்சாமி.

நாராயணி, "மோகினி பள்ளியில் இருந்து திரும்பும் நேரமாகிவிட்டது. கொஞ்ச நேரம் இருந்து குழந்தையைப் பார்த்துவிட்டுத்தான் போங்களேன்," என்று வற்புறுத்தினாள்.

"பரவாயில்லை. நாளைக்கு வருகிறேன்," என்று சொல்லிவிட்டுக் குழந்தைச்சாமி நடந்தார்.

ஆழ்ந்த சிந்தனையோடு நடந்தபடி மலைச்சரிவுக்கு வந்தார். சரிவிலிருந்து மெள்ள ஏறியபடி குருவாயூர் செல்லும்

சாலையை அடைந்தார். அதே இடத்தில்தான் பல வருடங்களுக்குமுன், மோகினியின் தந்தை அவளைக் கதறக் கதற விட்டுவிட்டு பஸ் ஏறிச் சென்றார். இப்போது அதே சாலையில் அழகின் உருவமாய் மோகினி ஒரு கையில் புத்தகத்துடனும், இன்னொரு கையில் புதிதாகப் பறித்த புஷ்பங்களுடனும் பள்ளியிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

எதிர்ப்புறத்தில் குழந்தைச்சாமி நடந்து வருவதைப் பார்த்ததும், மோகினியின் சிவந்த முகம் இன்னும் சிவந்தது. அவளுடைய நடையில் ஒரு துள்ளல் ஏற்பட்டது. தன் கையிலுள்ள புஷ்பத்தைப் பார்த்தாள். உடனே ஓட்டமாக ஓடிவந்தாள்.

''குழந்தைச்சாமி! உங்களைப் பார்க்கவென்றே வேகமாக வந்தேன். அதுக்குள்ளே புறப்பட்டுட்டீங்களே. இன்னும் கொஞ்ச நேரம் தாமஸிக்கக்கூடாதா?'' என்று கேட்டாள்.

அவர் சிரித்தபடி, ''நல்லா தமிழ் பேசக் கத்துக்கிட்டியே!'' என்றார்.

''எல்லாம் நீங்கள் சொல்லிக் கொடுத்ததுதான். வர்றப்போ அருவித் தோட்டத்திலே இந்தப் பூவைப் பறித்து வந்தேன். உங்களுக்காக,'' என்று சில புஷ்பங்களை அவரிடம் கொடுத்தாள்.

சிலவற்றை அவர் பாதங்களில் போட்டு வணங்கினாள்.

அவளைப் பார்த்து அவர், ''ஆண்டவன் ஒருவன் பாதங்களில்தான் நீ மலர் போடலாம் மோகினி,'' என்றார்.

''நீங்களும் சாமிதானே? நீங்கள் தலையிலே பூ வைத்துக்கொள்ள முடியாது. அதனாலேதான் பாதத்திலே வைத்தேன்,'' என்றாள்.

குழந்தைச்சாமி சிரித்தார்.

மோகினியின் முகத்தைத் தடவியபடி, ''மோகினி! நீதான் என் தாய். இந்தப் புஷ்பங்களை என் தாய்க்குச் சூட்டப் போகிறேன்,'' என்று சொல்லி, அந்த மலர்களை மோகினியின் தலையில் சூட்டினார்.

மோகினி மகிழ்ச்சியோடு அவரைப் பார்த்து, ''சாமி! நீங்க எப்பப் பார்த்தாலும் கொடுக்கறீங்களேயல்லாமல், எதையும் வாங்கிக்க மாட்டேங்கிறீங்களே!'' என்றாள்.

அவர் கண்கள் கலங்கின. ''மோகினி, நான் கொடுக்கறது கம்மி. நான் வாங்கிக்கறதுதான் அதிகம். நான் உங்கிட்டேயிருந்து களங்கமில்லாத, தெய்வீகமான அன்பை வாங்கிக்கிட்டிருக்கேனே! இந்த ஊரிலே பல பேர் முகம் என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சி அடைகிறது. அவ்வளவு பேர் அன்பையும் நான் வாங்கிட்டுத்தானே இருக்கேன்!''

''வாங்க, வீட்டுக்குப் போகலாம்,'' என்றாள் மோகினி.

''இப்போதான் வீட்டிலிருந்து வர்றேன். பழம், சுக்குவெள்ளம் கொடுத்தாங்க நாராயணியம்மா. சாப்பிட்டுத்தான் வர்றேன்...ஆமாம் மோகினி! நான் கெட்டவன்னு சொல்லி யாராவது உன்னைப் பயமுறுத்தினாங்கன்னு, நீ என்னைக் கண்டு பயப்படுவியா?''

மோகினி சிரித்தாள். வெள்ளிப் பந்துகள் ஒன்றன்மீது ஒன்று மோதும்போது உண்டாகும் ஒலிபோல் இருந்தது அவள் சிரிப்பு.

''உங்களை முதன் முதல்லே நோக்கினப்பத்தான் பயந்து போயிட்டேன். இனிமேல் பயப்படவே மாட்டேன்,'' என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே வீடு நோக்கி நடந்தாள்.

மோகினி வீடு நோக்கி நடந்து செல்லும் அழகையே பார்த்து நின்றார் அவர். தன் தோளில் ஒரு கை வந்து விழுந்ததைக்கூடக் கவனிக்கவில்லை. திரும்பியதும் எதிரே இன்ஸ்பெக்டர் பங்குன் நாயர் நிற்பதைக் கவனித்தார்.

அதிர்ச்சியைச் சமாளித்து, ''நீங்க குருவாயூர் போகல்லியா?'' என்று கேட்டார்.

''இதோ குருவாயூருக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதன் முன் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்,'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையாக, என் வாழ்வின் இளமைப் பகுதியில் ஏழு வருஷங்களைக் கழித்துவிட்டேன். விடுதலையான பின்புதான் குற்றவாளிக்கு உண்மைத் தண்டனை ஆரம்பிக்கும் என்பார்கள். அதனை வழங்க வந்திருக்கிறீர்களா இன்ஸ்பெக்டர்?''

''படபடப்பாகப் பேசாதிங்க அழகிரிசாமி,'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அந்தப் பூர்வாசிரமப் பெயரை ஞாபகப்படுத்தாதிங்க. அதை நான் மறந்தே போனேன். எனக்கு இப்போ பேரே கிடையாது,'' என்றார் குழந்தைச்சாமி.

பங்குன் நாயர் சிரித்தார். ''பேரில்லாமல் ஒரு பொருளோ மனிதனோ இருக்க முடியாது. இங்கே உள்ளவங்க,



உங்களைக் குழந்தைச்சாமின்னு கூப்பிடறாங்க. நீங்க மாறிட்டீங்க என்பதைக் குழந்தை மோகினியோடு பேசிக்கிட்டிருந்தப்பவே தெரிஞ்சது. இதே ரோட்டிலே அவன் அச்சன் அவனை விட்டுட்டு பஸ்லே ஏறிப் போனப்போ, அந்தக் குழந்தை துடியாத் துடிச்சது இன்னமும் என் கண் முன்னாலே நிக்குது. அதே குழந்தை உங்க பாதத்தில் மலர் சூட்டும் அளவுக்கு உங்களை விரும்புது. குழந்தையின் தீர்ப்பு ஓரளவுக்குத் தெய்வத்தின் தீர்ப்பு என்றே சொல்லவேண்டும். அதனால் நான் உங்களுடைய பூர்வ வாழ்க்கையைப் பற்றி யாரிடமும் மறந்து கூடப் பேச மாட்டேன்னு சொல்லிட்டுப் போகவே இதுவரை காத்துக்கிட்டிருந்தேன். நீங்க நிம்மதியா உங்க சேவைகளைத் தொடர்ந்து செய்யுங்க. அந்த அதிராம் பட்டணம் கேஸிலே சம்பந்தப்பட்ட ஆபீஸருங்க யாருமே உயிரோட இல்லே, என்னைத் தவிர," என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

குழந்தைச்சாமி அப்படியே நடுச் சாலையில் நின்றார். பங்குன் நாயரின் ஜீப் சென்று மறையும் வரை, அதையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, ஒருமுறை, "பராசக்தி! ஜகதாம்பிகே!" என்று கூறியபடி பெருமூச்சோடு நகர்ந்தார்.

இதே சமயத்தில், 'சாந்தி வில்லா' என்ற மலைமுகட்டு பங்களாவின் சொந்தக்காரர் படுக்கையில் படுத்தபடி முனகிக் கொண்டிருந்தார். அவர் பார்வை எதையோ எதிர்பார்ப்பது போல் தோன்றியது. 'பங்களாக்காரர்' என்று சிறப்போடு வாழ்ந்

தவர். பல ஆயிரம் பேருக்குப் பல மில்களில் பிழைப்புக் கொடுத்துப் பராமரிப்பவர், இன்று எழுந்திருக்க முடியாமல், கொடுக்கும் உணவை விழுங்க முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தார்.

அவருடைய உடல் உபாதையைவிட அவருடைய மனத்தை அழுத்தும் ஒரு சுமைதான் அவரைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது.

அவருடைய மகன் ராஜு அருகில் வீற்றிருந்தான்.

பங்களாக்காரர் "தம்பி வந்தாச்சா? தம்பி வந்தாச்சா?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

ராஜு, "சித்தப்பாவுக்கு ஆள் அனுப்பியிருக்கேன். அவர் வந்துடு வாரப்பா," என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

கோயமுத்தூரிலிருந்து பெரியவரின் நண்பர்கள், செல்வந்தர்கள் எல்லாரும் பல கார்களில் வந்து காத்திருந்தனர். கோயமுத்தூரில் பருத்தி சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்த பெரியவரின் உடல்நிலை, கடந்த ஒரு மாத காலமாகச் சர்க்கரை நோயால் மிகவும் பாதிக்கப்பட்டு வந்ததால், அவர் நிலை இப்போதோ அப்போதோ என்று இருந்தது. சுயநலம், நட்பு, மரியாதை, என்ற பல காரணங்கள் பல பிரமுகர்களைக் கோயமுத்தூரிலிருந்து இந்த மலைக்காட்டுக்குக் கொண்டுவந்திருந்தன.

அந்தப் பெரிய பங்களாவின் எல்லா அறைகளிலும் விருந்தினரே கூடியிருந்தனர். வந்த விருந்தினருக்குத் தேவையான பணிகளை நிறைவேற்ற, ஒரு படை வேலைக்காரர்கள் அங்குமிங்கும் சென்றபடி இருந்தனர். அவர்களில் பெரும் பகுதிப் பேர் மலையாளிகள். சிலர் கோயமுத்தூரிலிருந்து பெரியவரோடு வந்தவர்கள். பங்களாவின் பரந்த தோட்டத்தின் பல மூலைகளிலும், ஒரு வித ஒழுங்கில்லாமல் சிறிய கார்களும், பெரிய கார்களுமாக நிறுத்தப்பட்டிருந்தன.

பங்களாவின் வெளிப்புறம், ஒரு வெற்றிப் படம் ஓடிக்கொண்டிருக்கும் சினிமாத் தியேட்டரின் வெளிப்புறம் போல் காட்சியளித்தது.

'பிளைமவுத்,' 'டாட்ஜ்,' 'செவர்லேட்,' 'பென்ஸ்,'—இப்படிப் பல ரகமான கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஏழ்மையின் இருப்பிடமான அந்த மலையாளப் பகுதியில், குழந்தைகள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக அந்தப் பங்களாவின் வெளிப்புறம் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

கார்களை ஓட்டிவந்த டிரைவர்களுக்குப் பொழுது நகராமல் நின்றதாகையால், அவர்கள் ஒரு மரத்தடியில் ஜமக்காளம் விரித்து, காசு வைத்துச் சூதாடிக் கொண்டிருந்தனர்.

பங்களாவின் மாடியில் டிரைவர்களின் எஜமானர்கள் ஒரு தனியறையில் நோட்டுக்கள் வைத்துச் சூதாடினர். சீட்டுக் கட்டுக்கள் தேவைப்பட்டதால், கிராமத்துப் பெட்டிக்கடைக்காரன் பஸ்ஸில் ஆள் அனுப்பி, பாலக்காடு, ஷோரனூரிலிருந்து விதம்விதமான சீட்டுக் கட்டுக்களை வாங்கிவந்து ஐந்து பங்கு விலைக்கு விற்றுக் கொண்டிருந்தான். அதேபோல்தான் சிகரெட்டுகளின் விலையும் ஏறியது.

அந்தச் சிற்றூரார் பஜாரின் பொருள்கள் எல்லாமே விலை ஏறியிருந்தன. கோயமுத்தூர்ப் பிரமுகர்களில் முதியவர்கள் ஒருபுறமாக அமர்ந்து, பெரியவரின் பழைய புராணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

"பாவம், வெங்கடபதி. காட்டன் மார்க்கெட் டவுன் ஆனப்போ, நூலே விக்காதப்போ, என்னமா சமாளிச்சான்! எல்லாரும் மில்லை விக்கிறப்போ மில்லை அவன் வாங்கினான்! அதுதான் இவ்வளவு பெரிய முதலாளி ஆக முடிஞ்சது."

"என்ன ஆகி என்ன பிரயோஜனம்! அவன் தம்பி அழகிரிசாமி செய்த கலாட்டாதான். அவனைத் தலைகுனியச் செய்துட்டுதே. அதனால்தானே அவன் இந்த மாதிரிக் கண் காணாத இடத்துக்கு வரும்படியாச்சு?"

"ஆமாம். வெங்கடபதி சொத்திலே பாதி தம்பிக்கும் சேருமில்லே?"

"தம்பிதான் ஜெயில்லேருந்து வந்தப்புறம் ஏதோ அரைப் பைத்தியமாட்டம் திரிகிறதாச் சொல்றாங்களே, அவனுக்கு எதுக்குச் சொத்து?"

"என்னதான் இருந்தாலும் அழகிரிசாமி நல்ல துணிச்சல்காரன்தான். அதிராம்பட்டணத்திலே ஒரு ராஜாங்கமே நடத்தியிருக்கான்! தோணி தோணியாத் தங்கம் கொண்டுவந்திருக்கான்! மூணு வருஷத்துக்கு நோட்டு அடிச்சிருக்கான். யாருமே கண்டுபிடிக்க முடியல்லியே?"

"ஆமாம். அவ்வளவு பணமும் என்ன ஆச்சு? எங்கே போச்சு?"

"அதுதான் யாருக்கும் புரியல்லியே."

''புரியறத்துக்கு என்ன இருக்கு? வெங்கடபதி ஒவ்வொரு மில்லா வாங்கினது எந்தப் பணத்திலேன்னு நினைக்கறே? எல்லாம் அந்தக் கள்ள நோட்டுத் தான்.''

''சேச்சே! சும்மா இரு. வெங்கடபதி வீட்டிலேயே உட்கார்ந்துட்டு அவனைப் பத்தியே தப்பாப் பேசறியே,'' என்று கண்டித்துப் பதில் சொன்னார் ஒரு முதியவர்.

இவ்வாறு வெங்கடபதி என்ற பெயர் கொண்ட பங்களாக்காரரைப் பற்றி மனம் போனபடி பேசிக் கொண்டிருந்தனர்.

வந்தவர்களில் பலர் சுயநலத்துக்காகவே வந்திருந்தனர். ஒருவர் லட்ச ரூபாய்க் கடனுக்குத் தவணை வாங்க வந்திருந்தார். இன்னொருவர் தனக்கு மாமூலாக வந்து கொண்டிருக்கும் லாபம் தடைபடாமல் தொடர்ந்து நடக்கவேண்டுமே என்ற நோக்கத்தில் வந்தவர். மற்றொருவர் தன் மகன் திருமணத்துக்குப் பத்தாயிரம் கடன் வாங்கிப் போக வந்தவர்.

தந்தை போனபின் ஜேஷ்ட மகனான ராஜுதான் நிர்வாகத்துக்கு வரப் போகிறான் என்று இப்போதிருந்தே அவனை வளைத்துத் தமக்குச் சிநேகமாக்கிக் கொள்ளும் முயற்சியில் அங்கு கூடியிருந்த இளவட்டங்கள் ஈடுபட்டன.

ராஜுவின் இளம் மனைவி விஜயா, புதிதாகக் கல்யாணமாகி வீடு வந்தவள். அவளைச் சுற்றி உறவினர் கூட்டம் குழுமியிருந்தது. செல்வந்தரின் ஒரே மகள். பிறந்த வீட்டிலே செல்வமாக வளர்ந்து, புகுந்த வீட்டிலே அவள் வார்த்தையைத் தட்டிச் சொல்ல மாமியோ நாத்தியோ இல்லாத காரணத்தால், பிறர் உணர்ச்சிகளை யெல்லாம்பற்றிக் கவலைப்படும் பண்பு இல்லாதவளாக அவள் இருந்தாள்.

வீடே ஒரு கல்யாண வீடு போல காட்சி அளித்தது. யாரும், அந்த வீட்டின் ஒதுக்குப்புறமான அறையில் ஒரு ஜீவன் இந்தப் பிரும்மாண்டமான செல்வத்தை விட்டுப் பிரியத் தயாராகிக் கொண்டிருந்த வேதனையை உணரவில்லை. வெங்கடபதிமட்டும் படுக்கையில் படுத்தபடி அறையைச் சுற்றிப் பார்த்தார். அவருக்கு அருகே வைத்திருக்கும் மருந்து பாட்டில்கள் கூட அவர் போகப் போகும் புதிய இடத்துக்கு (அப்படி ஒரு இடம் இருந்தால்) உடன் வராது என்றால், சளியா உழைப்பால், விடாத முயற்சியால், பெருக்



## ராஜாஜி இழந்த புதவியை மீட்டுக் கொடுத்தார் காமராஜர்

ராஜாஜி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபோது அமரர் திரு. சத்தியமூர்த்தி உப தலைவர்.

'பஞ்சாயத்துக்களையும் நகர சபைகளையும் காங்கிரஸ் கைப்பற்றவே வேண்டும்; இதற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும்,' என்று தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டத்தில் திரு. சத்யமூர்த்தி ஓர் தீர்மானம் கொண்டு வந்திருந்தார். இதற்கு ராஜாஜி எதிரிடையாக இருந்தும், அத்தீர்மானம் அதிக வாக்குகளுடன் நிறைவேறியது.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய ராஜாஜி வெகுண்டார். 'இத்தீர்மானத்தை என்னால் அமுல் நடத்த இயலாது. எனவே நான் தலைவர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்கிறேன்,' என்று குறிப்பு எழுதி வைத்து விட்டு ராஜாஜி தலைவர் ஆசனத்திலிருந்து இறங்கி அமர்ந்தார்.

ராஜாஜி காலி செய்த இடத்தில் துணைத்தலைவர் என்ற முறையில் சத்தியமூர்த்தி அமர்ந்து தொடர்ந்து கூட்டத்தை நடத்த முற்பட்டார். உடனே திரு.காமராஜ் குறுக்கிட்டு, சத்தியமூர்த்தியிடம் தீர்மானத்தை வாபஸ் வாங்குமாறும், ராஜாஜியைத் திரும்பவும் தலைமை தாங்க அழைக்குமாறும் வற்புறுத்தினார்.

காமராஜ் கோரிக்கையை ஏற்ற சத்திய மூர்த்தி. ''தீர்மானத்தை வாபஸ் பெறுகிறேன். ஆசாரியார், உங்கள் இடத்தில் அமருங்கள்.'' என்று கூறினார். பின்னர் ராஜாஜி தொடர்ந்து கூட்டத்தை நடத்தினார்.

காமராஜ், 60'வது ஆண்டு நிறைவு மலரை ஆதாரமாகக் கொண்டு எடுத்தெழுதியவர்:

இரா. புவனேஸ்வரன்

கிய பெரும் செல்வம் மட்டும் கூடவா வரப் போகிறது?

முடிவுப் பயணத்தில் தன்னுடன் துணையாக வரப் போகிறவர்கள், வரக்கூடிய பொருள்கள் எதுவும் இல்லை என்ற உண்மையை நன்கு உணர்ந்தவர்போல், மருட்சியுடன் அந்த அறையை நோக்கினார்.

தன்னிடம் முடிவு நேரத்தில் சலுகைகள் எதிர்பார்த்து நிற்கும் நண்பர் கூட்டத்தைப் பார்க்கப் பார்க்க அவருக்கு வேதனையாக இருந்தது.

அவர்களைப் பார்க்கவே அவர் விரும்பவில்லை. அருகில் உட்கார்ந்திருக்கும் ஒரே மகன் ராஜாவும், அவன் அன்பும், அவன் ஒழுக்கமும்தான் அவர் வாழ்வில் சம்பாதித்த உருப்படியான பொருள், அவர் வாழ்வின் ஒரே வெற்றி என்று தோன்றியது.

"என் மகன் என்னைப் போல இருக்க மாட்டான். அவன் பணத்துக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்ய மாட்டான். அவன் வாழ்வு நிறைந்திருக்கும்." என்று எண்ணினார்.

அடுத்த விநாடியே, "என் பாவங்களின், என் தவறுகளின் சுமை அவன் தலையில் விழுமோ?" என்ற எண்ணமும் தோன்றியது. அவர் உடல் நடுங்கியது.

அவர் பார்வை அந்த அறையில் மின்சார விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் குருவாயூரப்பன் படத்தின் மீது லயித்தது. ஒவ்வொரு வியாபார முயற்சியின் போதும் அவர் குருவாயூரப்பனை வேண்டிக் கொண்டுதான் இறங்குவார். அவருக்கு வெற்றி அளிக்காமல் இருந்ததில்லை குருவாயூரப்பன். அந்த முயற்சியினால் பலர் வாழ்வு பலர் சந்தோஷம் பாதிக்கப்படுகிறதே என்று வெங்கடபதி யோசித்ததில்லை. வியாபாரத்தில் அதெல்லாம் சகஜம் என்றுதான் நினைத்தார்.

அம்மாதிரித் தவறான முயற்சிகளில் கூட குருவாயூரப்பன் அவருக்கு வெற்றியை அளித்துத்தான் வந்திருக்கிறான். அதனால் அவர் மனத்தில் குருவாயூரப்பன் என்றும் கை கொடுக்கும் ஒரு கூட்டாளி—லாபத்தில் பங்கு கேட்காத ஒரு கூட்டாளி—போல்தான் இருந்து வந்தான்.

இன்று வெங்கடபதி பார்த்தபோது அந்தக் குருவாயூரப்பன் முகத்தில் அவர் வழக்கமாகக் காணும் புன்முறுவல் இல்லை. அதில் மகிழ்ச்சி இல்லை. இகழ்ச்சிதான் தோன்றியது. "எத்தனை முறை என் சந்நிதியில் வந்து, நெடுங்கிடையாக விழுந்து, ஏதேதோ மில்லுக்காக, கோர்ட் விவகாரம் சரியான படி முடிய வேண்டுமென்பதற்காக, அதிக லாபத்துக்காக ஆசைப்பட்டுப் பிரார்த்தனை செலுத்தியிருக் கிறாய்! நானும், நீ கேட்டதையெல்லாம் உடனுக்குடன் கொடுத்திருக்கிறேன். வெள்ளிக்கும், தங்கத்துக்குமாக, செங்கல் கண்ணாம்பால் ஆகிய வீடுகளுக்காக, தோட்டங்களுக்காக ஆசைப்பட்டு என் காலில் விழுந்து அழுதாயே! ஆனால் உனக்காக ஒன்று கூடக் கேட்டுக் கொள்ளவில்லையே வெங்கடபதி. நீ எவ்வளவு பெரிய முட்டாளடா!" என்று அந்தக் குருவாயூரப்பன் புன்னகை செய்வது போல் தெரிந்தது.

"ஆம்! என்னுடைய நிரந்தர நலனுக்காக ஒன்று கூடத் தேடிக் கொள்ளவில்லையே. இந்த அறுபது வருஷங்களில் ஒரு ஏழை அழுத கண்ணீரைத் துடைத்திருக்கிறேனா! எவ்வளவு பேரை நசுக்கி அவர்கள் நலிந்த வாழ்வை நடைபாவாடையாக விரித்து அதன்மீது ஊர்வலம் வந்திருக்கிறேன். வெற்றி! வெற்றி! என்ன விலை கொடுத்தாவது வெற்றி என்று தானே வாழ்ந்திருக்கிறேன்! வெற்றி உண்மையிலேயே தோல்வியின் வேறு பெயர் என்று தெரியாமல் போய்விட்டதே!" என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, வீட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து வெங்கடபதி



"என்ன இது? ஒவ்வொரு நாளும் நீயும் சமையல் செய்கிறாய்; உன் கணவர் வேறு சமையல் செய்கிறாரே?"

"ஆமாம்; என் சமையல் என்றால் அவருக்கு உயிர்! அவருடைய சமையல் என்றால் எனக்கு உயிர்!"

—'கலா'

படுத்திருக்கும் அறைக்குள் திறக்கும் கதவு திறந்தது.

அந்தக் கதவு வழியே, அறையைச் சுத்தம் செய்யும் தோட்டிகள் தான் நுழைவது வழக்கம். அது எப்போதுமே மூடித்தான் இருக்கும். அதன் வழியே நுழைந்தார் குழந்தைச்சாமி.

படுத்துக் கொண்டிருந்த வெங்கடபதி அவர் நுழைந்ததும் மெள்ளத் தலையணைகளின் உதவியால் முயற்சியோடு எழுந்து உட்கார்ந்தார்.

''தம்பி! உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன். ஏன் இந்தக் கதவு வழியா வந்தே? நேர் வழியா வரக் கூடாதா?''

''வெளி ஹாலிலே கோயமுத்தூர் ஆளுங்க எல்லாம் உட்கார்ந்துகிட்டிருக்காங்க. அவுங்களைப் பார்க்க விரும்பல்லே. அதுதான் பின்புற வழியா வந்தேன்.''

அண்ணன், சிந்தனையுடன் தம்பியைப் பார்த்தார். பிறகு அருகிலிருக்கும் தன் மகனைப் பார்த்தார்.

''சித்தப்பாவுக்குப் பழரசம் கொண்டு வா.''

ராஜு நாற்காலியை விட்டு எழுந்தான்.

''வேண்டாம் ராஜு. நான் விரதம். ஒன்றும் சாப்பிடுவதில்லே,'' என்றார் குழந்தைச்சாமி.

வெங்கடபதியின் முகம் வருத்தத்தைக் காட்டியது. ''எப்ப வந்தாலும் விரதம்னு சொல்றே. இந்த வீட்டிலே ஒரு நாள்கூட ஒரு கிளாஸ் பச்சைத் தண்ணி கூடச் சாப்பிடறதில்லே நீ!''

பேச்சை மாற்றும் நோக்கத்தோடு, ''அண்ணு உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் குழந்தைச்சாமி.

''உடம்பா! அது நல்லாத்தான் இருக்கு. நான்தான் அதிலே அதிக நேரம் இருக்கப் போறதில்லே. அதுக்குள்ளே உங்கிட்டே சில முக்கியமான விஷயம் சொல்லிட்டுப் போகணும்,'' என்று சொல்லிவிட்டு மகன் ராஜுவைப் பார்த்தார்.

ராஜு தந்தையின் முகக் குறிப்பைப் புரிந்து கொண்டு வெளியே சென்றான். அந்தப் பெரிய அறையில் வெங்கடபதியும் குழந்தைச்சாமியும் மட்டுமே இருந்தனர்.

இருவரும் சில நிமிஷங்கள் பேசவில்லை. வெங்கடபதி தம்பியின் கையைப் பிடித்துத் தன் கையில் வைத்துக் கொண்டார்.

தம்பியின் கையில் மூன்று விரல்கள்




www.t.me/tamilbooksworld

இழந்த பகுதியைத் தடவினார்.

கண்களில் நீர் வழிந்து குழந்தைச் சாமியின் கையை நனைத்தது.

"அன்று அதிராம்பட்டினத்தில் நீ மூன்று விரல்களை மட்டும் இழக்கவில்லை அழகிரி. நல்ல பெயர், சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்தாய்." இதைச் சொல்லி முடிப்பதற்குள் வெங்கடபதியின் குரல் தழுதழுத்தது.

"விரல்களை இழந்தேன். உண்மை. ஆனால் வாழ்வைப் பெற்றேன் அண்ணா. அமைதியை அடைந்தேன். சிறை செல்லும்வரை வாழ்க்கை ஜுரம் என்னை அனலாக வாட்டியது. சிறையில் அந்த ஜுரம் தணிந்தது. வெளி வந்ததும் என் ஆத்மா ஒரு நோயற்ற வாழ்வு வாழ முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன். இன்று மாலை அந்த இன்ஸ்பெக்டர் பங்குன் நாயரைச் சந்தித்தேன். அப்போதுதான் ஒரு விநாடிக்கு அந்த வாழ்வு ஜுரத்தின் ஞாபகம் திரும்பியது."

"இன்ஸ்பெக்டர் நாயர் உன்னை அடையாளம் கண்டு கொண்டாரா? தண்டனை முடிந்தும் உன்னைப் பழி விடாது போல் இருக்கிறதே!"

"என்னை அடையாளம் புரிந்து கொண்டார். ஆனால், அவர் என்னைப் பற்றிப் பேச மாட்டார். அவருக்கு இன்று நான் குற்றவாளி அழகிரிசாமி அல்ல. நான் குழந்தைச்சாமியாகவே இருக்கிறேன். என்றும் இருப்பேன்."

"அழகிரி! உன் அமைதியைப் பார்த்து எனக்குப் பொறுமை ஏற்படுகிறது. உன் வாழ்வை விலை கொடுக்காமல் வாங்கிக் கொண்டேன். ஒரு பலனையும் காணவில்லை. தானமாகக் கொடுத்தவன் நீ. உனக்கு இருக்கும் அமைதி எனக்கில்லையே. இந்த முடிவு நேரத்திலாவது, அன்று நீ அதிராம்பட்டினத்தில் அளித்த வாழ்வுக்குப் பிரதியாக ஒரு விலை வாங்கிக்கொள். என் சொத்தில் சரி பாதியை ஏற்றுக்கொள்."

"வேண்டாம் அண்ணா. அன்றே அதிராம்பட்டினத்தில் எனக்கு விலை கொடுத்து விட்டீர்கள். சொத்து சுமையில்லாத இன்ப வாழ்வுக்கு வழி வகுத்துக் கொண்டபின், என் முதுகில் மறுபடியும் பாரத்தை ஏன் ஏற்றுகிறீர்கள்?"

வெங்கடபதியின் முகம் சிவந்தது. அவர் உதடுகள் துடித்தன. "தம்பி! அன்று நீ என்னைக் காப்பாற்றித் தண்டனையடைந்தாய். சிறை சென்றாய். இன்று இப்படி நிற்கிறாய். இவ்வளவும் எதற்காக? எனக்காக. இவ்வளவும் செய்த நீ என் வீட்டில் உணவருந்துவதும் இல்லை. தங்குவதும் இல்லை. என்னிடம் எதையும் வாங்கிக் கொள்வதும் இல்லை."

"அண்ணா! அறுதை விடுதியும் பள்ளியும் உங்கள் உதவியால் ஏற்பட்டது தானே?"

"அழகிரி! உனக்காக என்று ஒன்று கூடப் பெற்றுக் கொள்ளவில்லையே. அன்று நீ அதிராம்பட்டினத்தில், கடற்கரையில் என் பொருட்டுப் பலியாகியிராவிட்டால் ஏது எனக்குச் சொத்து, அந்தஸ்து, சுகம் எல்லாம்? என் ஆத்ம திருப்திக்காக நீ ஏதாவது பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்."

குழந்தைச்சாமி திகைத்து இருந்தார். சில விநாடிகளுக்குப் பிறகு, "அண்ணா! எனக்குத் தேவை என்று நான் நினைக்கும் பொருள் உலகத்தில் ஒன்றுமில்லை. ஆகையால் எதையும் கொடுக்க வேண்டாம். உங்களுக்குப் பிற்காலம் உங்கள் மகன் இந்தத் தர்மங்களைத் தொடர்ந்து நடத்தினால், அதுவே எனக்குப் போதும்," என்று சொல்லிவிட்டுத் திரும்பினார்.

குருவாயூரப்பன் படம் தெரிந்தது.

"அண்ணா! எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்."

ஆவலுடன், "என்ன தம்பி! என்ன உதவி?" என்று கேட்டார் அண்ணன்.

"உங்கள் கோயமுத்தூர் நண்பர்களுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்துவிட்டீர்களா?"

"எல்லாம் முடிந்த மாதிரிதான்."

"அண்ணா! உங்கள் உலக விவகாரங்களை முடியுங்கள். அதுவரை நான் தோட்டத்தில் இருக்கிறேன். பிறகு வருகிறேன். அப்புறம் யாரும் இந்த அறைக்குள் வரக்கூடாது. நானும் நீங்களும் மட்டும்தான் இருக்க வேண்டும். நம் இருவரிடையேயும் குருவாயூரப்பன் நினைவுதான் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, உங்கள் தலை என் மடியில் இருக்க வேண்டும், உங்கள் பயணம் முடியும்போது."

வெங்கடபதி நன்றியோடு தம்பியின் முகத்தைப் பார்த்தார். "அழகிரி! அன்றும் இன்றும் நீ என்னைப் பற்றித்தான் நினைக்கிறாய்! உன்னைப்பற்றியே நினைப்பது இல்லை," என்று சொல்லிவிட்டு அவர் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

அப்போது அவர் உள்ளத்தில் ஒரு நிம்மதி ஏற்பட்டது.

(தொடரும்)




ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 8

குழந்தைச்சாமி, வந்த வழியே இறங்கித் தோட்டத்துக்குச் சென்றார்.

அங்கு சிந்திப் பசுக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. அருகில் இருந்த ஒரு முக்காலியின்மீது உட்கார்ந்தார் சிந்தித்தபடி.

குழந்தைச்சாமி என்ற அழகிரிசாமியின் வளர்ச்சியில் இரண்டே இரண்டு பருவங்கள்தான். பால பருவம், அடுத்தது முதிய பருவம்! இடையே உள்ள இளமைப் பருவம், அதன் லட்சணங்களாகிய காதல், உறவு, பின் திருமணம், குழந்தைப் பேறு என்ற நிகழ்ச்சிகளையெல்லாம் ஒரே தாண்டலில் தாண்டிவிட்டார்.

அவரது பாலபருவம் வறுமையில் கழிந்தது. தாய் தந்தையற்ற வெங்கடபதியும் அழகிரியும் ஒருவருக்கொருவர் தான் உறவு!

ஏழு வயது மூத்தவனான வெங்கடபதி, அழகிரிக்கு எண்ணெய் தேய்த்து விடுவது, உணவு தயார் செய்வது போன்ற பொறுப்பெல்லாம் ஏற்றுக் கொண்டான். தம்பிக்கு அண்ணனாக மட்டும் இல்லாமல், தந்தை தாயாகவும் இருந்தான்.

இருவரும் சேர்ந்து, ''பருத்தி ஜின்னிங்'' தொழிற்சாலையில் வேலை செய்தனர். இரவு வேளைகளில் தம்பிக்கு அண்ணன் ஆசிரியராகவும் இருந்தான்.

உயர்ந்த ரகப் பருத்தியோடு மட்ட ரகப் பருத்தியைக் கலந்து விற்கும் சாமர்த்தியத்தினால் வெங்கடபதியின் சம்பளம் உயர்ந்தது. அனுபவம் இருந்ததால் சில வருஷங்களில் பருத்தி வாங்கி விற்று, லாபம் சம்பாதிக்கத் தொடங்கினான். பிறகு ஒரு ஜின்னிங் பாக்டரியின் முதலாளியானான்.

பாங்கு அதிகாரியின் ஆதரவால், தேவைப்பட்டபோது பணம் கிடைக்கவே, அடையாளம் தெரியாத அளவுக்கு வியாபாரம் பெருகிற்று. பாங்கிக்குக் குறித்த தவணையில் வட்டியும் முதலும் கட்டி வந்தமையால், வெங்கடபதியின் நாணயம் கெடாமல் இருந்தது.

அழகிரியை உயர்நிலைப்பள்ளியில் சேர்த்தான் வெங்கடபதி. செல்வம் பெருகியபோதுகூட, வெங்கடபதியும் அழகிரியும் ஒரே படுக்கையில்தான் தூங்குவார்கள். பள்ளியிலிருந்து திரும்பிய அழகிரிக்குக் காப்பி தயார் செய்ய, வெங்கடபதி வேலையை விட்டு நாலு மணிக்கே ஓடி வந்து விடுவான். சமையலுக்கு ஓர் ஆள் வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணமே வெங்கடபதிக்குத் தோன்றவில்லை.

தன்னுடைய அண்ணன் ஒரு முதலாளி, ஆயிரக்கணக்கில் சம்பாதிக்

கிறான், அவன் தனக்கு எண்ணெய் தேய்த்துவிடுவது. உணவு சமைப்பது எல்லாம் பொருந்தாது என்பதை அழகிரி சிறிதும் நினைக்கவில்லை. அழகிரிக்கு நினைவு தெரிந்தது முதல், வெங்கடபதி உழைப்பது, அழகிரி அமர்ந்திருப்பது என்பது ஒரு மாமூலாகிவிட்டது. செல்வம் வந்தும் கூட ஏழ்மை அவர்கள் வாழ்வில் சிறிது காலத்துக்கு நீடித்துக் கொண்டிருந்தது.

வெங்கடபதிக்குத் திருமணம் ஆனதும் தான் மாறுதல் வந்தது. அழகிரியைக் கவனிக்கும் பொறுப்பு வெங்கடபதியின் மனைவி ராஜத்தின் பணியாகிவிட்டது. அண்ணன் தனக்காக இவ்வளவு பாடு படுகிறான் என்பதை உணர்ந்ததாகவே அழகிரி காட்டிக் கொள்ளவில்லை. நன்றி வார்த்தைகள் கூறுவதுமில்லை. இதைப் பார்த்த வெங்கடபதியின் மனைவி, அழகிரி சுயநலக்காரன், தன் கணவனின் தலைச்சுமை என்று நினைத்தாள். வெங்கடபதிக்குக் குழந்தை ராஜு பிறந்ததும், ராஜத்தின் மனம் பூராவும் ராஜுவின் பராமரிப்பிலேயே சென்றது.

அழகிரி அதே வீட்டில் சாப்பிடுவதும், வெளியே செல்வதுமாக இருந்தான். அந்த வீட்டில் ஓர் அன்னிய மனுஷனாக இருந்தான். பணம் பெருகப் பெருக வெங்கடபதிக்குப் பல தொல்லைகள், பல ஊர்ப்பயணங்கள் ஏற்பட்டவண்ணமே இருந்தன. வீட்டில் தங்கவே நேரம் கிடைப்பதில்லை. தம்பி எப்படி இருக்கிறான், என்ன படிக்கிறான் என்று விசாரிக்கவே நேரமில்லாதபடி போய் விட்டது. பரீட்சையில் தவறிய அழகிரி, படிப்பை நிறுத்திவிட்டான். அதுகூட வெங்கடபதிக்குத் தெரியாது.

அழகிரி கோயமுத்தூரில் உள்ள ஒரு அம்மன் கோவிலுக்குப் அடிக்கடி போவான். பிறகு வீட்டுக்கு வந்து தூங்குவான். இப்படி உபயோகமில்லாத வாழ்க்கை நடத்துகிறோமே என்ற வருத்தம் கொஞ்சமும் இல்லை அழகிரிக்கு. அண்ணன் தனக்காகப் பாடுபட்டபோது நன்றியும் சொன்னதில்லை. அண்ணன் பாராமுகமாக வேலையில் ஈடுபட்டிருந்த போது, குறையும் சொன்னதில்லை. அண்ணி அவனை அலட்சியமாக நடத்திய போது, அண்ணியைப் பற்றி ஒரு நாளும் புகார் சொன்னதும் இல்லை. ஒரு மக்குப்போல், உணர்ச்சியில்லாத மரக்கட்டை போல், இருந்து வந்தான்.

அவ்வப்போது ராஜம் சொல்லும் புகார் வார்த்தைகளை மட்டும் தொடர்ந்து கேட்டு வந்த வெங்கடபதி, அழகிரியைக் கண்டிப்பான். அப்போதெல்லாம் அழகிரி கண்கலங்கி நிற்பான், ஆனால் பதில் சொல்லமாட்டான். அழகிரிக்கு மாதாமாதம் கொடுத்து வரும் செலவுத் தொகை நிறுத்தப்பட்டது. அப்போதும் அண்ணனிடம் போய், "என் அலவன்ஸை ஏன் நிறுத்தினாய்?" என்று கேட்கவில்லை. மாதம் தவறாமல் அரசியல் தலைவர்களுக்கு வெங்கடபதி ஆயிரக்கணக்கில் செலவு செய்து டின்னர்கள் வைப்பான். அந்த அலங்கார விருந்துகளில் கூட, அழகிரி ஒதுங்கியே இருப்பான்.

எதிர்த்துப் போராடாது இருந்த அழதரியிடம் வெங்கடபதியின் மனைவிக்குக் கோபம் குறையவில்லை. அதிகமாகியது. உலகத்தின் பாராட்டு, நல்ல பெயர், அந்தஸ்து இந்தக் காரணங்களுக்காகக் கணவனை ஆடம்பரச்செலவுசெய்ய தூண்டிக் கொண்டிருந்த வெங்கடபதியின் மனைவி ராஜத்துக்கு, படிப்பில்லாமல் ஊமைபோல் உலவும் அழகிரியைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அவன், தன் கணவனின் வளமான எதிர்காலத்துக்குப் பெரிய விரோதி என்றே நினைத்தாள்.

உடை உடுக்கத் தெரியாதவன், பெரிய மனிதர்களோடு பேசிப் பழகத் தெரியாத மண்டு, குலத்தின் பெயரை நாசமாக்க வந்தவன் என்று அடிக்கடி வேலைக்காரர்களிடம் சொல்லி வருந்துவான். வேலைக்காரர்கள் நாளடைவில் அழகிரியை மதிக்கவே மறுத்தனர். அழகிரிக்குப் பங்களா வேலைக்காரர்களின் நடத்தையில் ஏற்பட்ட மாறுதல் மன வருத்தத்தைக் கொடுத்தது.

அண்ணனிடம் சொல்லலாமா என்று நினைத்தான். ஆனால் அண்ணன் வருந்துவான் என்று நினைத்துப் பேசாமலே இருந்தான். சமையல் அறையில் போய்ச் சாப்பிட்டுவிட்டு வருவதே நாளடைவில் பெரும் சோதனையாகி விட்டது. என்ன செய்வது என்று புரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த அழகிரிக்கு, அந்தப் பிரச்னை, தானாகவே ஒரு முடிவுக்கு வரும்படியான நிகழ்ச்சி ஏற்பட்டது.

ஒரு நாள் மாலை ஜெயில்ரோடு வழியாக நடந்து வந்து கொண்டிருந்த அழகிரி, ஒரு மூலையில் ஒரு கிழவி கிழங்கு சுட்டு விற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்தான். பஞ்சு ஆலையில் கூலியாக அண்ணன் வேலை செய்த போது—இருவரும் சின்னப்பிள்ளைகளாக இருந்தபோது—அந்தக் கிழங்கை வாங்

கிச் சாப்பிட்டு மகிழ்ந்தது ஞாபகத்துக்கு வந்தது.

வெங்கடபதிக்குச் சுட்ட கிழங்கு என்றால் உயிர் என்று அழகிரிக்குத் தெரியும். செல்வம் வந்தபின் சுட்ட கிழங்கை அண்ணன் சாப்பிடச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டதே என்று வருந்தினான்



அழகிரி. அந்தக் கிழவியிடம் நாலணாக் கொடுத்துச் சுட்ட கிழங்குகளை வாங்கிப் பேப்பரில் சுற்றி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

அன்றுதான் சென்னையிலிருந்து ஒரு பெரிய செல்வர் வெங்கடபதியின் வீட்டுக்கு வந்து தங்கியிருந்தார். வியாபாரத்தில் 'முதலுதவி' செய்யும் பெரிய புள்ளியாகையால் அவருக்குத் தடபுடலாக உபசாரம் செய்து கொண்டிருந்தனர் வெங்கடபதியும், அவர் மனைவியும்.

வெங்கடபதியின் சுறுசுறுப்பான பேச்சிலிருந்து, பெரிய தொகை கடனைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்து கொண்டு இருந்தார் என்பது தெளிவாகியது. வெங்கடபதியின் பங்களாவின் புல்தரைப் பகுதியில் வர்ண நாற்காலியில் அமர்ந்திருந்தார் விருந்தாளி. எதிரே ராஜமும் வெங்கடபதியும் அமர்ந்து உ-




வதந்திகளைப் பரப்பாதீர்கள்! யுத்த காலத்தில் மட்டுமல்ல, சமாதான காலத்துக்கும் இது பொருந்தும்.

மெய்யா, பொய்யா என்று தெரியு முன்னரே கிளப்பி விடுகிற ஒரு வதந்தி எத்தனை வேகத்தில் பரவுகிறதென்பது உங்களுக்கே தெரியாது.

நீங்கள் இரண்டு பேரிடம் ஒரு விஷயம் சொல்லுகிறீர்கள். பதினைந்து நிமிடத்துக்குள் அந்த இரண்டு பேரும் தங்கள் நண்பர்கள் இருவரிடம் சொல்வதாக வைத்துக் கொள்வோம். இப்படியே, பதினைந்து நிமிட நேரத்துக்குள், ஒவ்வொருவரும் இரண்டு பேரிடம் சொல்வதாகக் கொள்வோம். இதே வேகத்தில்—

நீங்கள் சொன்ன விஷயத்தை, உலகத்தில் ஒருத்தர் மிச்சமில்லாமல் அத்தனை பேரும் அறிய எத்தனை நேரமாகுமென்று நினைக்கிறீர்கள்?

ஏழு மணி நாற்பத்தைந்து நிமிடம் போதும்.

—ஆனந்த் மான்.

ருபசரித்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் அழகிரி பங்களாவினுள் நுழைந்தான். நுழைந்தவன் பேசாமல் வீட்டின் உட்புறம் போயிருக்கலாம்.

ஆனால் அண்ணன் மீதுள்ள அன்பு, நேரே அவனை நோக்கிப் போகச் செய்தது. "அண்ணா!" என்று ஆசையோடு கூப்பிட்டுக் கொண்டே சென்றான் அழகிரி.

புழுதி அடைந்த கால்களோடு, பழைய செருப்போடு, பழுப்பு நிற வேட்டியோடு நுழைந்த அழகிரி, "அண்ணா!" என்று தன் கணவனை, விருந்தாளி முன்பு அழைப்பதே ராஜத்துக்குப் பிடிக்கவில்லை.

ஆச்சரியத்தோடு அழகிரியைப் பார்த்து உட்கார்ந்திருக்கும் சென்னைக்காரரிடம், அழகிரியைத் தம்பி என்று அறிமுகம் செய்து வைக்காமல் இருக்க முடியவில்லை வெங்கடபதியால். அறிமுகம் ஆனபின்பாவது அழகிரி நகர்ந்திருக்கலாம். ஆனால் சுட்ட கிழங்கை அண்ணனுக்கு கொடுக்காமல் போக அவன் விரும்பவில்லை. காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து, கிழங்குகளை அங்குள்ள பிங்கான் தட்டில் வைத்தான்.

"அண்ணா! உனக்குச் சுட்ட கிழங்குன்னா ரொம்பப் பிடிக்குமேன்னு வாங்கி வந்தேன். சார்! அந்தக் காலத்திலே அண்ணனும் நானும் பேக்டரி டியூட்டி முடிஞ்சதும் கிழங்கு வாங்கித் தின்னாமல் வர்றதில்லே," என்று சொன்னான்.

எதிரே அமர்ந்திருந்த மூவர் முகமும் போன போக்கிலிருந்து, ஏதோ சொல்லக்கூடாத ஒன்றைச் சொல்லிவிட்டோம் என்பதை உணர்ந்தான். பேசக்கூடாத விஷயத்தைப் பேசிவிட்டோம் என்பதைத் தெரிந்து கொண்டான்.

"சரி சரி, அழகிரி. உள்ளே போடா," என்று அண்ணன் அன்பில்லாமல் உத்தரவிடவும், குழம்பிய சிந்தனையோடு அழகிரி பங்களாவினுள் சென்றான். பங்களாவினுள் சென்ற அழகிரி, 'சுட்ட கிழங்கைச் சாப்பிடுவது என்ன ஒரு கேவலமான செயலா? ஏன் அப்படி அண்ணனும் அண்ணியும் என்னை முறைத்துப் பார்க்க வேண்டும்?' என்று நினைத்தவண்ணம் இருந்தான். பிறகு குளித்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான். வந்தவர், இரவு சாப்பிடும் வழக்கம் இல்லாதவராகையால், சீக்கிரமே படுக்கச் சென்றுவிட்டார்.

வெங்கடபதியும் ராஜமும் சாப்பிட வந்தபோது, சமையல் அறையில் அழகிரி

சாப்பிட்டுக்கொண்டு இருந்தான். அவனைப் பார்த்ததும் வெங்கடபதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''டேய் அழகிரி! சமய சந்தர்ப்பம் தெரியாமல் இப்படி நடந்துக்கறியே, நீ என்னடா குழந்தையா? உன்னாலே உதவியில்லேன்னாலும் உபத்திரமாவது இல்லாமல் இருக்கலாமல்ல? வந்திருக்கிறவர் யாரு? அவர்கிட்டப் போயி, நாம் கூலி வேலை செய்தது, சுட்ட கிழங்கு சாப்பிட்டது இதையெல்லாமா சொல்லணும்?'' என்று உரத்த குரலில் கண்டித்தான்.

அழகிரி தன்னுடைய அண்ணன் இதுவரை இவ்வளவு கோபமாக இருந்ததைப் பார்த்ததே இல்லை. 'என்னுடைய அண்ணனா இப்படிப் பேசுகிறார்?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே, ராஜம் தொடர்ந்து பேசினாள்.

''எல்லாத்துக்கும் நீங்கதான் காரணம். தம்பியா இருந்தா என்ன? இப்படியா உட்கார்த்தி வச்சு, தண்டச் சோறு போடுவாங்க? ஒரு வேலை வெட்டி இல்லாம, இப்படியே இருந்தா முடிவுதான் என்ன?''

சமையல்காரர்கள் முன் 'தண்டச் சோறு,' என்ற வார்த்தையை அண்ணி சொல்லவே, அழகிரி கலங்கிப் போனான். ''அண்ணி! வார்த்தையை அடக்கிப் பேசு. என் அண்ணன் வீட்டில் நான் சாப்பிடறேன். நீ யார் கேட்கிறதுக்கு?' என்று பதில் சொன்னான்.

''அண்ணன் தம்பியானாலும் வாயும் வயிறும் வேறேதானே. அவனவன் சம்பாதிக்கணும். அப்போத்தான் ஆண்பிள்ளை. வேஷ்டி கட்டறவங்களெல்லாம் ஆண்பிள்ளை ஆயிடமாட்டாங்க,''என்று ராஜம் சொன்னதைக் கேட்டதும், அங்கு நின்ற சமையல்காரன் சிரித்தான்.

அழகிரிக்குக் கோபம் வந்தது. ''அண்ணா! அண்ணி வாய் போனபடி பேசறாங்க. பார்த்துக்கிட்டு சும்மா இருக்கீங்களே,'' என்று உரிமையோடு சொன்னான்.

அண்ணன் தரையைப் பார்த்தபடி பேசினான். ''அழகிரி! அவள் சொல்றதிலே ஒண்ணும் தப்பில்லே. நானும் உங்கிட்டே ரொம்ப நாளாச் சொல்லணும்னுதான் இருந்தேன். உருப்படியா ஒண்ணும் செய்யாமல் இப்படிச் சுத்திக்கிட்டிருக்கிறது எனக்குக் கட்டோடு பிடிக்கல்லே. உன்னை என் தம்பின்னு சொல்லிக்கவே எனக்கு அவமானமா இருக்குடா,'' என்று கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

அழகிரி முதலில் திகைப்படைந்தான். அண்ணனே மாறிவிட்டார்! செல்வம் மாற்றியதா, இல்லை, மனைவி மாற்றினளா? இல்லை, இரண்டும் சேர்ந்து மாறுதலைக் கொடுத்ததா?

அழகிரி முன் வைக்கப்பட்டிருந்த உணவு விஷம் போல் காட்சியளித்தது. அவன் உட்கார்ந்திருந்த இடத்தில் பூமியே பிளந்துவிட்டது போலவும், அந்தப் பள்ளத்தில் அவன் விழுந்து கொண்டிருப்பது போலவும் உணர்ந்தான். அப்படியே பேய் அறைந்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

சமையல்காரன், ''சாப்பிடறதுன்னா சாப்பிடு. இல்லாட்டி எந்திரிச்சிப் போ,'' என்று சொன்னதும்தான் சுய நினைவுக்கு வந்தான்.

உடனே எழுந்து கை கழுவிக் கொண்டு வெளியேறினான்.

தூக்கம் பிடிக்கவில்லை. பங்களாவை விட்டு மெள்ள நடக்க ஆரம்பித்தான்.

அவினாசி ரோடில் உள்ள ஒரு பார்க்கினுள் நுழைந்தான். அங்கு போடப்பட்டிருந்த பெஞ்சியிலேயே அன்று இரவைக் கழித்தான். தூக்கத்தில் கழிக்கவில்லை. கோபத்தில் கழித்தான்.

பொழுது புலரும் வேளையில்தான் அண்ணன், அண்ணிமீது ஏற்பட்ட கோபம் தணிந்தது. அவர்கள் சொல்வதில் ஓரளவு உண்மை இருப்பதாகவும் பட்டது. கோபம் தணிந்ததேயல்லாமல், மறுபடியும் மனத்தில் உறவு தொடரவில்லை.

எழுந்து நடந்து ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்றான். அங்கிருந்து டிக்கெட்டில்லாமல் ரயில் ஏறினான். அப்புறம் எங்கெங்கோ சென்றான். வாழ்வைப் புரிந்து கொண்டான்.

அரசைத் துறந்த சித்தார்த்தன் புரிந்து கொண்டதுபோல், வாழ்க்கையின் மூல தத்துவத்தைப் புரிந்து கொண்டான். ''அண்ணன், மனைவி, செல்வம், அந்தஸ்து எல்லாம் ஒருவனைச் சூழ்ந்திருந்தாலும், மனிதன் அடிப்படையில் தனிமையானவன். அவன் கணக்கை அவன்தான் தீர்க்க வேண்டும். அவன் எண்ணங்களோடு, பயங்களோடு, ஆசைகளோடு அவன்தான் தனியாக வாழ வேண்டும். அவன் உண்ணும் உணவை அவனேதான் ஜீரணித்தாக வேண்டும். படவேண்டிய கவலைகளை அவனேதான் படவேண்டும். உறவு உதவாது. சமயத்தில், அவனுக்கு உடலும் உதவாமல் வம்பு செய்யும்.

மனிதன் ஒரு பயங்கரமான தனிமையில் தான் வாழுகிறான், தனிமையில்தான் இறக்கிறான்,'' என்ற உண்மையைப் புரிந்து கொண்டான் அழகிரி.

அழகிரி உள்ளத்திலே வாழ்ந்தபோது, வெங்கடபதி ஊரிலே செல்வத்தோடு பரந்து வாழ்ந்தான். அழகிரி ஒவ்வொரு ஆசைகளாக இழந்துகொண்டே வந்தபோது, வெங்கடபதி ஒவ்வொரு மில்லாக வாங்கிக்கொண்டே வந்தான். பருத்தி மார்க்கெட் இறங்கிக்கொண்டே போகும்போது, பணமுடை கோயமுத்தூரில் அதிகமாகிக்கொண்டு போகும் நிலையில், வெங்கடபதிக்கு மட்டும் எப்படிப் பணம் கிடைத்தது என்று ஊரார் நினைத்தனர். ஆனால் தூக்கமில்லாமல், உணவில்லாமல், பரட்டைத் தலையோடு அதிராம்பட்டணத்துக்கும் கோயமுத்தூருக்குமாக இரவு வேளைகளில் பேய் போல் உலவிக் கொண்டிருந்த வெங்கடபதிக்குத்தான், அவன் மனம் பட்ட பாடு தெரியும். சட்ட விரோதம் என்ற சறுக்குப் பாறையில் சறுக்க ஆரம்பித்து விட்ட வெங்கடபதி நடுவில் நிறுத்த முடியாதபடி சறுக்கிக்கொண்டு வந்தான். கள்ளநோட்டு, கள்ளக் கடத்தல், இரண்டின் அஸ்திவாரத்தின்மீது பயமில்லாது கட்டிய அவனுடைய அந்தஸ்து எப்போது வெடித்துச் சாம்பல் ஆகுமோ என்று ஒவ்வொரு நிமிஷமும் சாகாமல் செத்துக் கொண்டிருந்தான்.

போலீஸ் துப்புத் துலக்குகிறார்கள் என்று தெரிந்ததும் வெங்கடபதியின் பீதி அதிகமாயிற்று. அவன் மனைவியின் கழுத்தில் மின்னும் வைரங்கள் அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோல் தோன்றின. அவன் புதிதாகத் துவக்கிய பஞ்சாலைகளின் சங்குகள் ஊதும் போதெல்லாம், அவன் வாழ்க்கைப் பயணத்தின் முடிவுச் சங்கொலியாகவே ஒலித்தன. உடல் கோயமுத்தூரிலும் உள்ளம் அதிராம்பட்டணத்திலுமாகத் தவித்தான். கூட்டாளிகளில் எவனாவது உளறிவிட்டால்?

இந்த நிலையில்தான் பங்குன்னாயர் மலையாளத்தில் ஒரு குற்றவாளியைப் பிடித்து விசாரணை செய்யும்போது, கோயமுத்தூர் செல்வந்தரின் நடவடிக்கைபற்றிக் கேட்க நேர்ந்தது. அவர் புலன் விசாரிக்க ஆரம்பித்தார். வெங்கடபதியின் கார் ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாமல் அதிராம்பட்டணம் செல்வதன் விவரம், அது அங்கு தங்குமிடங்களின் விவரம் எல்லாம் போலீஸாரிடம் கிடைத்துவிட்டன. இது வெங்கடபதிக்குத் தெரிந்ததும் அவன் தன் அந்தஸ்தின் முடிவு நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்தான்.

பத்து நாளோ, ஒரு மாதமோ— போலீஸார் தன்னைத் தேடி வருவார்கள் என்பது நிச்சயமாகிவிட்டது. இந்த விஷயத்தை மனைவியிடம் சொல்லி, பகிர்ந்து கொள்ளவும் முடியாதே? தம்பி அழகிரியிடம் சொல்லலாம். ஆனால் அவனும் இல்லை. அவன் எங்கு சென்றான் என்றே தெரியவில்லை. ரூபாய் தேடும் ஜுரத்தில் இருந்த வெங்கடபதிக்கு, தம்பியைப்பற்றி நினைக்க அவகாசமேது? துணிவோடு ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

லட்சக்கணக்கான தொகைக்குப் பதுக்கிய தங்கத்தை எடுத்துக்கொண்டு சென்று அதிராம்பட்டணத்திலுள்ள கூட்டாளிகளிடம் கொடுத்து, அவனைக் காட்டிக் கொடுக்கக்கூடிய ரிக்கார்டுகள், கடிதங்களைப் பெற்று வருவது என்று புறப்பட்டான். அதிராம்பட்டணத்தில், வெளிப்புறத்தில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையின் அருகில் தினசரியைப் படித்தபடி நிற்கும் அழகிரியைப் பார்த்ததும் வெங்கடபதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் முகத்தில் இருந்த அமைதியைப் பார்த்ததும் பொறாமையும் ஏற்பட்டது. ''சின்னப் பையனாக இருந்தபோது அவன் பொருட்டு எவ்வளவு பாடுபட்டிருக்கிறேன்,'' என்று நினைக்கவும் வெங்கடபதிக்குத் தம்பியைக் கட்டிக்கொண்டு



''நான் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறேனே! எப்படி இருக்கிறது ராமு?''

''நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் என் பெயர் ராமு இல்லை.''

அழுது, தன் துன்பத்தையெல்லாம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

''டேய் அழகிரி! இங்கே பாருடா.'' என்றதும் அழகிரி பேப்பரை மடித்து விட்டுப் பார்த்தான்.

பத்து வருடங்களாகப் பாராத அண்ணன், காரில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

மெள்ள நடந்து கார் அருகில் வந்து, ''அண்ணு! கோயமுத்தூரில் இருக்க வேண்டியவன் நீ, இங்கே எப்படி வந்தாய்?'' என்று குழந்தைபோல் கேட்டான்.

வெங்கடபதி தம்பியிடம் என்ன பதிலைச் சொல்வான்? கண் கலங்கியது. நாக்குழறியது. ''தம்பி, வண்டியிலே ஏறிக்கோ,'' என்ருன்.

அழகிரி தயங்கினுன்.

''சரிதான். வண்டியிலே ஏறுடா.'' என்று கட்டளையிட்டதும் அழகிரி காரிலே ஏறிக் கொண்டான்.

வெங்கடபதி தங்கும் விடுதிக்கு வந்ததும் தம்பியைச் சாப்பிடச் சொன்ஞன்.

அழகிரி பசியில்லை என்று சாப்பிட மறுத்துவிட்டான்.

''அண்ணு! கோயமுத்தூர்லே நீதான் இப்ப நம்பர் ஒன் முதலாளியாமே! மில்லு மில்லா வாங்கித் தள்றியாமே!'' என்று கேள்விகளை அடுக்கினுன்.

வெங்கடபதி, ''மண்ணுங்கட்டி! நீ ஏண்டா சொல்லாமே கொள்ளாமே வீட்டை விட்டுப் போயிட்டே? இப்ப என்னடா பண்றே?'' என்று கேட்டான்.

அழகிரி, ''சும்மாத்தான் சுத்திக்கிட்டிருக்கேன். நிலையா ஒரு வேலையும் கிடையாது,'' என்று சொல்லிவிட்டு, அண்ணியைப்பற்றியும், குழந்தை ராஜுவைப்பற்றியும் விசாரித்தான்.

ராஜு உதகமண்டலத்திலுள்ள லவ்டேல் பள்ளியில் படிப்பதாகச் சொன்ஞன் வெங்கடபதி.

அழகிரி விடைபெற்றுச் செல்லக் கிளம்பியதும், வெங்கடபதியால் பொறுக்க முடியவில்லை. அழகிரியைச் கட்டிக்கொண்டு ஓவென்று அழுதான். தன்னை எதிர்நோக்கி இருக்கும் ஆபத்தினைப்பற்றிச் சொன்ஞன். தன் போலி வாழ்க்கையின் அலங்கோலத்தைப்பற்றி விவரித்தான்.

''தம்பி! என்னைப் போலீஸார் பிடித்துச் சென்ருல் நான் வாழப் போவது இல்லை. பையிலேயே தயாராக சயனைடு மாத்திரை வைத்திருக்கிறேன். அதைச் சாப்பிட்டு இறந்துவிடுவேன். அப்போது ராஜுவையும், என் ஆஸ்தியையும் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு,'' என்று சொல்லிவிட்டு அழுதான்.

அழகிரி, ''அண்ணு! நீயா இப்படிக் கேவலமான ஒரு சிக்கல்லே மாட்டிக்கிட்டே! எதுக்கண்ணு உனக்கு இவ்வளவு பணம்?'' என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

அன்றிலிருந்து அண்ணனும் தம்பியும் இரண்டு நாட்களில் கூட்டாளிகளைச் சந்தித்து, தங்கத்தைக் கொடுத்து, ரிக்கார்டுகளை வாங்கிக் கொண்டனர்.

வெங்கடபதியின் நிலை ஒருவாறு சரியானதும், அழகிரி வெங்கடபதியைக் கோயமுத்தூருக்குச் செல்லும்படி சொல்லிவிட்டு, தங்கத்தோடு அதிராம் பட்டணத்திலேயே தங்கினுன். அதன் அர்த்தம் வெங்கடபதிக்கு விளங்கவில்லை.

ஆனல் இரண்டு நாட்களில் போலீஸார் அழகிரியைக் கள்ளநோட்டு அச்சடிக்கும் யந்திரத்தோடு கைது செய்த போதுதான் விவரம் புரிந்தது. யந்திரத்தை எடுக்கப் பங்குன்நாயர் போலீஸாருடன் வந்தபோது நடந்த கலாட்டாவில்தான் போலீஸார் சுட, அழகிரியின் மூன்று விரல்கள் சிதறி விழுந்தன.

அழகிரி கொடுத்த வாக்குமூலத்தில், "நானே குற்றவாளி. என்னுடைய அண்ணனுக்கு எதுவும் தெரியாது. அண்ணன் பெயரையும் காரையும் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் நானே உபயோகப்படுத்தினேன்.'' என்று குறிப்பிட்டிருந்தான்.

இதைப் பார்த்த வெங்கடபதி கலங்கிவிட்டான். விசாரணையின்போது அழகிரி, ''அண்ணு! இந்த விசாரணையில் நான் இழப்பது ஒன்றுமில்லை. எனக்கு அந்தஸ்து, சொத்து, மனைவி, மகன் கிடையாது. தனி ஆள். சின்னப் பையனக இருந்தபோது, என்னை வளர்த்து, காத்து எவ்வளவோ செய்திருக்கிருய். அதற்கு உருப்படியாகப் பதில் ஏதாவது செய்ய வேண்டாமா?'' என்று சொன்னன்.

தன் கணவனின் தம்பி, எவ்வளவு உறுதியான தியாக உள்ளம் படைத்தவன் என்று உணர்ந்த ராஜம் அப்படியே மனம் இடிந்துவிட்டாள்.

இரண்டு வருஷம் கழித்து அவள் இறக்கும்போது அவளுக்கிருந்த ஒரே

குறை, அன்று இரவு உணவு சாப்பிடாமல் போனவனுக்குத் தன் ...யால் உணவு போடாமல் சாகிறோமே என்பது தான்.

குழந்தைச்சாமி தமது கடந்த காலச் சம்பவங்களைப்பற்றி ஒவ்வொன்றாக நினைத்துக்கொண்டே புழக்கடைத் தோட்டத்தில், மாடுகளுக்கெதிரே உட்கார்ந்திருந்தார்.

திடீரென்று ஏதோ தோன்றவே அங்கிருந்து எழுந்து கடைத் தெருவுக்குச் சென்று திரும்பினார்.

அண்ணனிடம் வந்து, ''அண்ணா! உலக விவகாரமெல்லாம் முடிஞ்சதா?'' என்று கேட்டார்.

''எல்லாம் முடிஞ்சுது. உன் விவகாரந்தான் பாக்கி. நீதான் ஒண்ணும் வாங்கிக் கொள்ளமாட்டேங்கிறே,'' என்றார் அண்ணன்.

''என் விஷயத்தை விட்டுத் தள்ளுங்க. இன்னொரு சின்ன உலக விவகாரம் உங்களுக்குப் பாக்கி இருக்கு.''

மேல் மூச்சு வாங்கியபடியே அண்ணன், ''அதென்ன தம்பி?'' என்றார்.

குழந்தைச்சாமி தன் கையிலே எடுத்து வந்த பொட்டலத்தைப் பிரித்தார். அதில் தணலில் சுடப்பட்ட சர்க்கரைவள்ளிக் கிழங்குகள் இருந்தன. அவற்றை எடுத்து உரித்து அண்ணன் வாயில் போட்டார். வெங்கடபதி முயற்சி செய்து, கிழங்கை மென்றார். ''அண்ணா! என் கணக்கு உங்களுக்குத் தீர்ந்து விட்டது. அன்று இந்தக் கிழங்குகளை ஆசையோடு உங்களுக்குக் கொண்டு வந்தேன். நீங்க சாப்பிட மறுத்தீங்க. இப்போ சாப்பிடறீங்க. எனக்குச் சொத்துக் கொடுத்த மாதிரி ஆச்சு. இனிமேல் நீங்க ஒரு விதக் குறையும் இல்லாம, ருவாயூரப்பனைப் பத்தி நினைக்கலாமில்லே?'' என்றார்.

வெங்கடபதியின் தலையைக் குழந்தைச்சாமி தன் மடியில் வைத்துக் கொண்டார். மெள்ள ''நாராயணா!'' என்று சொல்ல ஆரம்பித்தார்.

இரண்டு சகோதரர்களும் தொடர்ந்து, ''நாராயணா'' என்று சொல்லியபடி இருந்தனர். குழந்தைச்சாமியின் பார்வை குருவாயூரப்பன் படத்தில் இருந்தது.

ஆனால் வெங்கடபதியின் பார்வை தம்பியின் முகத்தில் நின்றது.

இதைக் குழந்தைச்சாமி கவனித்தார். ''குருவாயூரப்பன் படத்தைப் பாருங்கண்ணா. கடைசி நிமிஷத்திலே யாவது அவரைப் பாருங்க. கதி கிடைக்கும்,'' என்றார்.

வெங்கடபதியின் மூச்சு தள்ளாடியது. கண்கள் மருண்டு படத்தை நோக்கின. ''குருவாயூரப்பன் அங்கே இல்லையே. அங்கே வெறும்போட்டோ பிரேம்தானே இருக்கு? அப்பன் அங்கில்லே. குருவாயூரப்பன் இதோ..இதோ..என் பக்கத்திலே,'' என்று சொல்லி, தன் தம்பியையே சுட்டி காட்டினார் வெங்கடபதி. அடுத்த விநாடி ''நாராயணா!'' என்று முடிக்கும் போதே அவர் மூச்சு நின்றது.

அவர் தலை தம்பியின் மடியில் புரண்டது. குழந்தைச்சாமி கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் வழிந்தது.

விரல்கள் இழந்த கரத்தால் வெங்கடபதியின் கையை எடுத்தார். விரல்களிடையே சிக்கிக் கொண்டிருந்த சுட்ட கிழங்கின் மீதியிருந்த பகுதியை அப்புறப்படுத்தினார். அண்ணன் தலையைப் படுக்கையில் கிடத்தினார்.

அண்ணன் மகன் ராஜுவை அழைத்தார். ராஜு, தந்தையின் வாழ்வு முடிந்துவிட்டது என்று தெரிந்ததும், அலறிக்கொண்டு நெருங்கினான்.

'ராஜு! நான் வருகிறேன்,'' என்று கதவை நோக்கிப் போனார் குழந்தைச்சாமி.

ராஜு, ''சித்தப்பா! எங்கே போறீங்க?'' என்று கேட்டான்.

''அண்ணனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்திட்டேன். இனி அவர் உடலுக்கு செய்ய வேண்டியதை நீயும், மத்தவங்களும் செய்யுங்க. நான் மயானத்துக்கு வரப் போவதில்லே,'' என்று சொல்லி விட்டு வந்த வழியே சென்றார் குழந்தைச்சாமி.

(தொடரும்)



''படுபாவி! காரை என்ன வேகமாய் ஒட்டிக்கொண்டு போகிறான் பார்த்தீரா?''

'அதற்கு நீர் ஏன் அலறுகிறீர்?'

'காரை எங்கள் கம்பெனியிலல்லவா இன்ஷ்யூர் பண்ணியிருக்கிறான்!''

www.tamilbooksworld

# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்



## அத்தியாயம்—9

வெங்கடபதியின் உடலுக்குப் பெரிய ஆடம்பரத்துடன் இறுதி மரியாதைகள் செய்யப்பட்டன. அவருடைய கோயமுத்தூர் நண்பர்களுக்கு அவர்கள் இதுநாள்வரை காத்துக் கொண்டிருந்த முடிவு ஏற்பட்டதும், எல்லாருக்கும் ஒரு நிம்மதி. வெங்கடபதியின் உடலை மரியாதையோடு பின் தொடர்ந்தனர்.

வெங்கடபதியின் உறவினர் எல்லாருமே, அழகிரி இந்தச் சமயத்தில்கூட இறுதிப் பயணத்துக்கு வராமல் மலை மீது எங்கோ சென்றுவிட்டான் என்று பேசினர். ஒரே தாய் வயிற்றிலே எப்படி இரண்டு மாறுபட்ட குண அமைப்பு உள்ள மக்கள் பிறந்தனரோ என்று பேசினார்கள்.

ஷோரனூர், குருவாயூரில் இருந்தும் பலர் தானம் வாங்கிப் போக வந்திருந்தனர். சில நாட்களுக்கு சாந்தி வில்லா என்ற மாளிகை ஒரு அன்ன சத்திரமாக விளங்கியது.

ஒரு திருநாளுக்குக் கூட்டம் கூடுவது போல், சாலையில் கூட்டம் கூடவே, மோகினிக்கு விஷயம் புரியவில்லை. நாராயணியிடம், ''என்னம்மா இப்படிப் பெரிய கூட்டம் கூடிவிட்டது?'' என்று விசாரித்தாள்.

''குழந்தைச் சாமியுடைய அண்ணன் இறந்துட்டாரு. பெரிய சாவு இல்லியா? அதுதான் கூட்டம்,'' என்று விளக்கிச் சொன்னாள் நாராயணி அம்மாள்.

குழந்தைச்சாமி மட்டும் அந்த வட்டாரத்தில் இல்லை என்பது மோகினிக்கு ஆச்சரியமாயிருந்தது. வெங்கடபதியின் மரணத்துக்கு மரியாதை செலுத்தும் நோக்கத்தோடு மோகினியின் பள்ளிக்கூடம் மூடப்பட்டது. வீட்டில் உட்கார்ந்தபடி குருவாயூர் சாலையில் செல்லும் வண்டிகளையும் கார்களையும் வேடிக்கை பார்த்தபடி இருந்தாள் மோகினி. தினமும் வரும் குழந்தைச் சாமி இப்போது சில நாட்களாக வராதது குறித்து மோகினிக்கு ஏமாற்றம். அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகள் எவ்வளவோ இருந்தன. அவர் சொல்லிக் கொடுத்து வந்த திருக்குறள் பாடமும் கம்பராமாயணப் பாடமும் நிறுத்தப்பட்டு இருந்தன. இப்படியே வராமலே இருந்து விடுவாரோ என்று கவலைப்பட்டாள் மோகினி.

வெங்கடபதியின் கருமாதியன்று ஆயிரக்கணக்கான பேர்கள் பக்கத்துக்

கிராமங்களிலிருந்து சாப்பிட வந்திருந்தனர். சங்கரன்குட்டி சாப்பிடப் போக வேண்டுமென்று துடித்தான்.

நாராயணி அம்மாள் மோகினியிடம், "நீயும் வேணும்னு குட்டியோடு போய்ச் சாப்பிட்டு வா," என்றாள்.



மோகினிக்கு அந்தப் பங்களாவில் போய் இலவசச் சாப்பாடு சாப்பிடப் பிடிக்கவில்லை. போக மறுத்து விட்டாள். சிறு பெண்ணாய் இருந்தாலும் தன்மான உணர்ச்சியோடு, "இலவசச் சாப்பாடு வேண்டாமம்மா. நீ சமைச்ச சாப்பாடே போதும்மா," என்று மோகினி சொன்ன உறுதியைக் கண்டு நாராயணி வியந்தாள்.

சங்கரன் குட்டி மட்டும் சாப்பிடப் போய் வந்தான். அன்று இரவு குருவாயூர் போன்ற இடங்களிலிருந்து வந்த பல பரதேசிகள் சாந்தி வில்லாவில் படுக்க அனுமதிக்கப்படவில்லையாகையால், கடைத்தெருவில் திண்ணைகளில் படுக்கப் புறப்பட்டனர்.

அவர்களில் மெலிந்த தோற்றமுள்ள ஒருவருக்கு மட்டும் படுக்க இடமே கிடைக்கவில்லை. மெள்ள நகர்ந்து இடம் தேடிக் கொண்டிருந்தார். மலையின் சரிவில் 'மினுக்—மினுக்' என்று விளக்கு எரிவது தெரியவே, தள்ளாடியபடி மெள்ள இறங்கினார். பாதி வழிகூட இறங்கியிருக்கமாட்டார். குமட்டல் எடுத்தது. இலவசமாகக் கிடைக்கிறதே என்று ஆசையோடு சாப்பிட்டதெல்லாம் வெளியே வந்தன. காதில் ஒரு பேரிரைச்சல். தள்ளாடியபடி நாராயணி அம்மாள் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். உட்கார்ந்தபடி கண்ணை மூடித் தூங்க முயன்றார். ஆனால் அவர் வாழ்வின் கடந்த காலம் விடாமல் அவர் மனத்திரையில் படங்களாக ஓடியபடி இருந்தது.

அதே சமயத்தில் ஒரு பெண் குரல் குருவாயூரப்பனைப்பற்றித் துதித்துப் பாடும் சுலோகம் கேட்டது. அந்தக் குரலைக் கேட்கக் கேட்க அவர் உடலில் ஏற்பட்ட வலியெல்லாம், தாபமெல்லாம் மறைவதுபோல் உணர்ந்தார்.



அதைப் பலமுறை கேட்டிருக்கிறார். ஆனால் இன்று அது அவருடைய உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கே திரட்டி, குருவாயூரப்பன் காலடியில் வைப்பது போல் தோன்றியது.

மெள்ள எழுந்து, 'யார் இவ்வளவு சொல் நயம் குன்றாமல் பாடுவது?' என்று பார்க்க ஜன்னல் புறம் வந்தார். அந்தச் சிறு முயற்சியில் அவர் நெஞ்சு வெடித்துவிடும்போல் அடித்துக்கொண்டது.

குடிசையின் உட்புறம் மோகினி குருவாயூரப்பன் படத்தின் முன் நின்று பாடிக்கொண்டிருந்தாள். அவள் சிறு பாலதேவதை போல் காணப்பட்டாள். சுலோகத்தைச் சொல்லும்போது அசையும் அவளது சிவந்த உதடுகள் அவருக்கு யாரையோ ஞாபகப்படுத்தின. ஆண்டவனது தியானத்தில் மூடியிருந்த மேலிமைகள், கரிய அரைவட்டங்களாகச் சிவந்த முகத்தில் காணப்பட்டன. மோகினி கண்களைத் திறந்தாள்.

உடனே அவருக்கு அடையாளம் புரிந்துவிட்டது. 'அதே கறுத்த விழிகள் என் மனைவியின் விழிகள்! இறந்துபோன என் மனைவியின் விழிகள்! இந்தச் சிறுமியின் முகத்தில்..' என்று நினைத்துக்கொண்டு இருக்கும்போது, மோகினி சுலோகத்தை முடித்துவிட்டு ஜன்னல்புறம் திரும்பினாள். ஜன்னல் புறமிருந்து வாடி வதங்கிய முகம் தன்னைப் பார்ப்பதைக் கண்டு கலவரம் அடைந்தாள் அவள். பிறகு மெள்ள வெளியே

வந்தாள். இருளில் திண்ணையில் திணறும் மூச்சோடு கிடக்கும் உருவத்தின் அடையாளம் தெரியவில்லை. ''நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்?'' என்று கேட்டாள் மோகினி.

உருவம் பேச முயன்றது. அதனால் பேச முடியவில்லை. வீட்டினுள்ளிருந்து நாராயணி அம்மாள், ''மோகினி! யார் வந்திருக்காங்க?'' என்று குரல் கொடுத்தாள்.

மோகினி என்ற வார்த்தையைக் கேட்டதும், திண்ணையில் படுத்திருந்த முகம் ஒருவித மலர்ச்சியடைந்தது. இருளில் மலைச் சரிவைப் பார்த்தார். அதன் உச்சியில் செல்லும் குருவாயூர் சாலையும், எதிரே உள்ள மரங்களின் அமைப்பும் திடீரென்று அவருக்குக் கடந்த காலக் காட்சியை ஞாபகப்படுத்தின. இதே ஊர்தான். இதே இடம்தான். அன்று பகலில் வந்தோம். இன்று இரவில் வந்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டார். ஆவலோடு, ''குஞ்சே! நிண்ட பேரு மோகினியா? நிண்ட பேரு மோகினியா? நிண்ட அம்மை, அச்சன் எவ்விட?'' என்று மலையாளத்தில் தன்னையும் மறந்து கேட்டார்.

''எண்ட அம்மை பஸ்ஸுலே மரிச்சுப்போயி. எண்ட அச்சன்...அச்சன் ..என்னைவிட்டுக் குருவாயூர் போயி..'' என்று மோகினி தயங்கிக் கொண்டே கூறினாள்.

உடனே திண்ணையிலிருந்த உருவம்; ''நிண்ட அச்சன் பேரு?'' என்று கேட்டது.

மோகினி தலையைக் குனிந்தபடி, ''என் அச்சன் பேரு கிருஷ்ணபணிக்கர். அதெல்லாம் நீங்க ஏன் கேக்கறீங்க? உங்களுக்கு என்ன வேணும்?'' என்று கொஞ்சம் துடுக்காகவே தமிழில் பதில் சொன்னாள்.

குழந்தைச் சாமியுடைய பழக்கம் ஏற்பட்டதிலிருந்து அதிகம் தமிழே பேச ஆரம்பித்தாள் மோகினி. தன்னை மறந்த நிலையிலும் அவள் திடீரென்று தமிழே பேசுவாள். திண்ணையில் படுத்திருந்தவர் பதில் சொல்லாமல், விக்கி அழ ஆரம்பித்தார். மெலிந்து எலும்புக்கூடு போன்ற அவர் உருவம், அவர் அழும்போது உதறி ஆடியது. வயது முதிர்ந்த பெரிய மனிதர்கள் விக்கி விக்கி அழுவதை மோகினி இது வரை பார்த்ததில்லை.

மோகினி ஆச்சரியத்தோடு, ''ஏன் அழறீங்க? நான் என்ன சொல்லிட்டேன், உங்களை?'' என்று குழப்பத்தோடு கேட்டபடி நின்றாள்.

உட்புறமிருந்து நாராயணி அம்மாள் கை விளக்கோடு வெளியே வந்தாள். விளக்கின் வெளிச்சம் திண்ணையில் இருந்தவர்மீது தெளிவாக விழுந்தது. அதே சமயம் நாராயணி அம்மாள், ''நீங்கள் தானே?..நீங்கள்தானே?...'' என்று வாக்கியத்தை ஆரம்பித்து விட்டு நிறுத்தினாள்.

''ஆம். நான்தான் கிருஷ்ணபணிக்கர். நான் தான் மோகினி, உன் அச்சன். அன்னிக்கு உன்னை விட்டுப் போனவன்,'' என்று சொல்வதற்குள்ளே மூச்சுத் திணறியது.

புகை, பனி நடுவே தோன்றும் பொருள்கள் எவ்வளவு தெளிவில்லாமல் இருக்குமோ, அப்படித்தான் மோகினிக்குத் தந்தையின் நினைவு இருந்தது. உடலும், முகமும் இளைத்ததன் விளைவாக, கிருஷ்ணபணிக்கரின் கிளி மூக்கு அதிக முக்கியத்துவத்தோடு வெளிவந்தது. மோகினி தன் தகப்பனை ஆச்சரியத்தோடு பார்த்தபடி நின்றாள்.

நாராயணிக்குப் பணிக்கர் எந்த நிலையில் இருக்கிறார் என்று புரியவில்லை. அவரைப் பார்த்தவுடன் முதல் உணர்ச்சியாக ஆத்திரம்தான் வந்தது. ''இத்தனை நாள் கழித்து இப்பத்தான் வழி தெரிஞ்சுதா உங்களுக்கு? தாயில்லாக் குழந்தையைத் தள்ளிவிட்டுப் பஸ் ஏறிப்



''பஸ்லேக் குளிப்பாட்டச் சொல்றியே? இப்பத்தான், முதல் தேதி குளிப்பாட்டினேன். இரண்டாம் தேதியுமா குளிப்பாட்டுவது?''

''அது செப்டம்பர் முதல் தேதி. இன்று, அக்டோபர் இரண்டு இல்லையா?''

www.tamilbooksworld

போலீங்களே, இப்போ பாருங்க, மோகி..ி எப்படி வளர்ந்திருக்கிறள்னு?'' என்று ஏசியபடி பேசினுள்.

''அவள் தேவதை மாதிரி தான் வளர்ந்திருக்கா. அவ எங்கிட்டே இருந்திருந்தா, வீணுயிருப்பா. அதனுல் தான் கடவுள் அன்னிக்கி எனக்கு அந்தப் புத்தியைக் கொடுத் திருக்கான். அவளை விட்டுப் போனதிலிருந்து என்னைத் தரித்திரம் விடல்லே. வருமானமே இல்லாமப் போச்சு. இத்தனை வருஷமும் சத்திரம் சத்திரமா சுத்திக்கிட்டிருக்கிறேன்.'' இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவர் பலமுறை நிறுத்தி நிறுத்திப் பேசினுர். ''தாகமா இருக்கம்மா. கொஞ்சம் தண்ணீர் தர்றியா?'' என்று கேட்டார்.

மோகினி வீட்டின் உள்ளிருந்து தண்ணீர் எடுத்து வந்தாள். தந்தையின் தலையைப் பிஞ்சுக் கரங்களால் தாங்கிப் பிடித்தாள். செம்பு நிறைய இருந்த தண்ணீரைப் பூராவும் மடக் மடக்கென்று அவர் குடித்து முடித்தார். அவர் முகத்தில் திருப்தியும் புன்முறுவலும் ஏற்பட்டன. குழந்தையின் தலையைத் தடவினுர். ''நல்லா இரு மோகினி. நான் செய்த தப்பெல்லாம் என்னைத் தொடரட்டும். நான் ஏதாவது நல்லது, புண்ணியம் செய்திருந்தா, அதன் பலன் உன்னை அடையட்டும். அதுதான் நான் உனக்குக் கொடுக்கற சொத்து. என்னை மன்னிச்சிடு,'' என்று கூறி முடிப்பதற்குள், ஒரு குமட்டல் எடுத்தது.

அதைத் தடுக்க வயிற்றைப் பிடித்துக் கொண்டார் கைகளால். உடனே அவர் உடல் குப்புறத் தரையில் விழுந்தது. அப்புறம் அவர் தலையைத் தூக்கவில்லே.

நாராயணியும் மோகினியும் திகைப்போடு நின்றனர். நாராயணி பணிக்கரை அசைத்துப் பார்த்தாள். பணிக்கரின் நாட்கள் முடிந்துவி''.ன என்பதை உணர்ந்தாள். மோகினியிடம்



# …ானத்தைக் க…லேற்றிய விருந்தாளி



''காதலிக்க நேரமில்லே'' இந்தித் தயாரிப்பு விஜயா ஸ்டுடியோவில் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

மாலே இடைவேளையில் பிரதம நடிகரான சசிகபூர். ராஜஸ்ரீ முதலானேருடனும் உதவியாளர் களுடனும் ஸ்ரீதர் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார்.

அன்றைய டிபன் தோசை. டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஒரு பூனை மெல்ல வந்து ஒவ்வொருவர் காலேயும் மெல்லத் தொட்டு அவர்கள் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தது. ஆனுல் எல்லோரும் அதை விரட்டினுர்கள்.

ஸ்ரீதர் மட்டும் இரக்கப்பட்டு அதை அருகில் அழைத்து, தோசையை எடுத்துப் போட்டார்.

அந்தப் பூனை வேகமாக அருகில் சென்று தோசையை நுகர்ந்து பார்த்தது. பிறகு அந்தத் தோசையையும் சரி, ஸ்ரீதரையும் சரி திரும்பிக் கூடப் பார்க்காமல் அங்கிருந்து ஓடி விட்டது. ஒருவராலும் சிரிப்பை அடக்க முடியவில்லே.

''எனக்கு நன்ருக வேண்டும். எல்லோரையும் போல உன்னை நானும் விரட்டி அடிக்காமல் தோசை போட்டேன் பார்!'' என்று பூனையைப் பார்த்து ஸ்ரீதர் கூறுகிஞர்.

—இளங்கோ

இதை எப்படிச் சொல்வது என்று யோசித்தபடி, மோகினியைப் பார்த்தாள். மோகினியின் கண்கள் கலங்கியபடி இருந்தன. தகப்பன் தலையைத் திருப்பித் திண்ணையில் படுக்க வைத்தாள். உள்ளேயிருந்த ஒரு துணியை எடுத்துப் போர்த்தினுள், பிறகு அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''அம்மா! இந்தச் சமயம் பார்த்துக் குழந்தைச்சாமி இல்லாமப் போயிட்டாரே! அவர் இருந்தா என்ன செய்யணும்னு சொல்லுவார்,'' என்றான்.

அதற்கு நாராயணி அம்மாள், ''கவலைப்படாதே மோகினி. மஹேச நம்பூதிரிக் கிட்டே கடன் வாங்கி, அச்சனுக்குச் செய்ய வேண்டிய சடங்கைச் செய்திடுவோம். எங்கெங்கோ சுத்திக்கிட்டிருந்தவர் சாகிறப்போ பெண்கிட்டே வந்துட்டாரே, அதிர்ஷ்டசாலிதான்,'' என்று கூறிவிட்டு அப்படியே திண்ணையில் உட்கார்ந்தாள்.

மோகினியும் நாராயணியும் இரவைத் திண்ணையிலேயே கழித்தனர். விடியும் தருணத்தில் தன்னையும் அறியாமல் கண்களை மூடிய மோகினி திடீரென்று விழித்துக்கொண்டாள். அவளை விழித்தெழச் செய்தது யார் என்று கண்களைத் திறந்து பார்த்தாள். குழந்தைச்சாமி எதிரே நிற்பதைப் பார்த்தாள். திண்ணையில் கிடக்கும் உடலையும் குழந்தைச்சாமியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அவர் சிறிது நேரம் சிந்தித்தபடி திண்ணையில் கிடக்கும் உருவத்தைப் பார்த்து, ''நிண்ட அச்சனு?'' என்று கனிவோடு கேட்டார்.

அதுவரை சும்மா இருந்த மோகினி பாய்ந்து அவரைக் கட்டிக்கொண்டு அழுதாள். குழந்தைச்சாமி மெள்ள மோகினியைத் தட்டிக் கொடுத்தார். அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு அன்போடு, ''என் தாய் நீ அழலாமா? தாய் அழுதால் இந்த ஏழைச் சாமியும் அழும்,'' என்று கொஞ்சியபடி கூறும்போதே அவர் கண்களில் நீர் அரும்பியது

அதைப் பார்த்து மோகினியின் மனம் வருந்தியது. மோகினி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''சாமி! இப்போ என்ன செய்யறது?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் பத்தி என் தாய் கவலைப்படக் கூடாது. மகன் நான் கவனித்துக் கொள்வேன்,'' என்று சொல்லிவிட்டு வெளியேறினார்.

பிறகு சில மணி நேரங்களில் வந்து பணிக்கரின் தகனத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். தானே நேரில் இருந்து எல்லாவற்றையும் கவனித்தார். அன்று மாலைதான் மறுபடியும் குடிசைக்கு வந்தார்.

நாராயணி அம்மாளுக்கு அவர் போக்கே புரியவில்லை, தமையன் இறந்தபோது மயானம் செல்லாதவர், மோகினியின் தகப்பனுருடைய சடங்குகளை நேரில் இருந்து நடத்துகிறாரே என்று அதிசயித்தாள்.

அவரும் நாராயணி அம்மாளின் கருத்தைப் புரிந்து கொண்டவர் போல், ''என் அண்ணன் அந்தஸ்தோடு வாழ்ந்தார். அந்தஸ்தோடு இறந்தார். அவர் மரணம் இந்த ஊர் ஏழைகளுக்கு ஒரு திருவிழாவாகியது. ஆனால் இந்தப் பணிக்கர் அந்தஸ்தோடு வாழவும் இல்லை. அந்தஸ்தோடு சாகவும் இல்லை. என்னைப் போன்றவனின் முயற்சியினாலாவது அவருக்கு நல்ல கதி கிடைக்கட்டும்,'' என்று கூறினார்.

அதன் பிறகு சில நாட்கள் தினமும் மோகினிக்குக் கதை சொல்லி அவள் துக்கத்தை உணராதவாறு பொழுது போக்கினார்.

மோகினி தந்தையின் மரணத்தை மறக்கவேண்டும் என்பதற்காக அவர் புஷ்பங்களும், பலகாரங்களும், பொழுது போக்குப் புத்தகங்களும் கொண்டு வருவார். மோகினியைத் திருப்திப் படுத்துவதில் தீவிரமாக முனைந்து இருந்தவர் ஒருநாள் திடீரென்று தன்னையே ஆராய்ந்து பார்த்துக் கொண்டார். மோகினியின் காரணமாகத்தான் மெள்ள மெள்ள ஒரு குடும்பஸ்தனுதி வருவதை உணர்ந்தார். ஆனால் அவர் அதற்காக மோகினியோடு பொழுதுபோக்குவதை நிறுத்திக்கொள்ளவில்லை. மோகினியின் தந்தை கிருஷ்ண பணிக்கர் இறந்ததன் விளைவாக அவருக்கும் மோகினிக்கும் இடையே உள்ள பிணைப்பு இன்னும் வலுவாகியது.

இவ்வாறு பல மாதங்கள் கடந்தன. ஒருநாள் குழந்தைச்சாமி திடீரென்று பிற்பகல் மூன்றுமணிக்கு நாராயணி அம்மாள் விடுதிக்கு வந்தார். என்றும் வராத வேளையில் அவர் வீட்டுக்கு வந்தது ஆச்சரியமாக இருந்தது. சங்கரன்குட்டி வீட்டினுள் உட்கார்ந்து அடுப்பில் பலாக்கொட்டைகளைச் சுட்டுக் கொண்டிருந்தான். அவர் சிறிது நேரம் சங்கரன் குட்டியைக் கவனித்தபடி நின்றார்.

பிறகு வீட்டின் வெளிப்புறம் நோக்கித் திரும்பியபடி நாராயணி அம்மாளிடம், ''அம்மா! கொஞ்சம் வெளியே வருகிறீர்களா?'' என்று கேட்டுவிட்டு, வெளிப்புறம் வந்து திண்ணையில் உட்கார்ந்தார்.

நாராயணி எதிர்ப்புறம் உட்காராமல்

நின்றாள். ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசப் போகிறவர்போல் எதிரே உள்ள காட்டைப் பார்த்தபடி ஒரு விநாடி இருந்தார். பிறகு நாராயணியிடம் திரும்பி, ''அனுபவங்கள் நதிபோல் நம்மைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த நதியில், சருகுகள் போல் நாம் மிதக்கிறோம். என்னைப் பொறுத்தவரை, நான் ஏழ்மையில் பிறந்தேன். அண்ணனின் செல்வத்தில் சில நாள் வாழ்ந்தேன். அப்புறம் இன்பம், துன்பம், பழி, தண்டனை—இப்படிப் பல அலைகள் என்னைச் சுற்றி மோதின. ஆனால் எதுவும் என் ஆன்மாவை நனைக்கவில்லை. இந்த ஊருக்கு வருவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன், ஒரு சாமியார் எனக்கு வாலை மந்திரத்தை உபதேசம் செய்தார். அதை ஒரு கோடி எண்ணிக்கை ஜபித்துப் பூர்த்தியான அன்று மாலைதான், அந்த மலைச்சரிவில் குழந்தை மோகினியைக் கண்டேன். என் ஜபம் சித்தித்தது. என் வாலைக் குமரியே மலை முகட்டில் உதயமானது போல் மோகினி உதயமானாள். அப்புறம் குழந்தையை என்னால் பிரிய முடியவில்லை. நாளுக்கு நாள் என் மனம் மோகினியின் பாசத்தில் பின்னப்படுவதை உணர்கின்றேன். அது குழந்தைக்கு நல்லதல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் அவளை என் மனம் உறுதிப்படும்வரை பிரிந்திருக்க விரும்புகின்றேன். மோகினி பள்ளியில் தொடர்ந்து படிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டேன். மாதந்தோறும் அவள் செலவுக்காக வேண்டிய தொகை அனுப்பப்படும். அவள் பெரியவளாகி இஷ்டப்பட்டால், அவள் படித்த பள்ளியிலேயே ஆசிரியை ஆகலாம்,'' என்று நிறுத்தினார்.

நாராயணி, ''நீங்கள் ஊரைவிட்டே போகப் போகிறீர்களா?'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

''ஆமாம். நான் எங்கிருந்தாலும் மோகினியின் படிப்புக்குக் குறைவு வராதபடி நடக்கும்.''

''குழந்தை உங்களைப் பிரிந்து வாழக் கஷ்டப்படுமே?'' என்று நாராயணி வருத்தத்தோடு சொன்னாள்.

அவர் யோசித்தார். பின்பு சிரித்தபடி, ''மோகினி இன்னும் சில வருஷங்களில் காட்டுச் செடிபோல் பூத்துக் குலுங்கப் போகிறாள். வளரும் பருவத்தில் இருக்கும் பெண்ணுக்கு, துறவியின் தொடர்பு இருக்கக்கூடாது. இயற்கை விதித்தபடி அவள் வளர வேண்டும். வாழ வேண்டும்,'' என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

இரண்டடி நடந்தார். பிறகு திரும்பினார். நாராயணி அம்மாள் கண்ணீரோடு நிற்பதைப் பார்த்தார். ''நீங்களே கலங்கினால் மோகினியை எப்படித் தேற்றப் போகிறீர்கள்? மோகினியின் அழகு, அவள் ஒழுக்கத்துக்குத் தீங்கு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்து போய்விட்டார்.

சிந்தித்தபடி நடந்து கொண்டிருந்த குழந்தைச்சாமியை நோக்கி, ஒரு வேலைக்காரப் பையன் ஓடி வந்தான். அவன் மிகவும் படபடப்புடன் காணப்பட்டான். குழந்தைச்சாமி தன்னுடைய ஆஸ்தியாகிய சட்டை, வேஷ்டியை ஒரு சிறு தோல் பையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார். இனி அவர் திரும்புவது எப்போதோ என்ற நினைப்பில் புறப்பட்டவரைத் தடுப்பவன்போல் அந்த வேலைக்காரப் பையன் ஓடி வந்தான்.

அவன், ''சாமி! நீங்க புறப்பட்டுப் போனவுடனே இந்தத் தந்தி வந்ததுங்க. உங்களை எங்கெங்கோ தேடினேன். கிடைக்கல்லே,'' என்று சொல்லித் தந்தியைக் கொடுத்தான்.

''தந்தியா? எனக்கா?'' என்று ஆச்சரியத்தோடு தந்தியை வாங்கிக் கொண்டார் அவர்.

[தொடரும்]

❊



யாவும் நானே!

''நானே, டிப்போவுக்குப் போய் பால், நானே, கடைக்குப் போய்ச் சர்க்கரை, நானே, க்யூவில் நின்று காப்பிக்கொட்டை வாங்கி வந்த பிறகு, நீ என்ன காப்பி போட்டுத் தருவது? அதையும் நானே போட்டு, நானே குடிப்பேன்!''

## முன்கதை

அநாதைச் சிறுமியான மோகினியைத் தன் மகள் போல் வளர்க்கிறாள், அசட்டுப் பிள்ளையான சங்கரன்குட்டியின் தாய், நாராயணி அம்மாள்.

மோகினியிடம் ஏதோ ஒரு தெய்வீகத்தைக் கண்டு அவளுடைய படிப்புக்கு எல்லா வசதிகளையும் செய்துதருகிறார் சமூகத் தொண்டரான குழந்தைச்சாமி.

லட்சாதிபதியான அண்ணனின் கள்ள நோட்டுக் குற்றங்களைத் தன் மேல் போட்டுக் கொண்டு போலீஸ் வேட்டையின் போது காயமுற்று சிறை சென்ற தியாகி அவர்.

குழந்தைச் சாமியின் அண்ணன் காலமாகிறார்; வாலிபனான அவர் மகன் ராஜு திரண்ட சொத்துகளுக்கு அதிபதியாகி, மனைவியுடன் வாழ்ந்து வருகிறான்.

குழந்தைச்சாமி, மோகினிக்கு எல்லா வசதிகளும் செய்து தந்து விட்டு ஊரை விட்டுச் செல்ல முற்படுகிறார். ஒரு தந்தி வருகிறது.

# மின்னல், மழை, மோகினி

## அத்தியாயம் 10

கையில் தந்தியோடு நின்ற குழந்தைச்சாமி தூரத்தில் மோகினி புஸ்தகப் பையைத் தூக்கிக் கொண்டு, ஒரு அழகுத் தேர் வருவது போல் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

உடனே மரத்தின் பின்புறம் மறைந்து கொண்டார். வேகமாக வீடு நோக்கி வந்து கொண்டிருந்த மோகினியின் மனத்தில், குழந்தைச்சாமியின் நினைவு தான். வீட்டுக்குப்போனதும் சாமியிடம் பள்ளியில் கற்றதையெல்லாம் அள்ளிக் கொட்டி, அவருடைய அன்புப் புன் முறுவலைக் கண்டு மகிழலாம் என்று ஆசையோடு துள்ளி நடந்து போய்க் கொண்டிருந்தாள். ஆனால் அவர் ஒரு மரத்தின் பின்புறம் நின்றபடி, அவளைக் கவனித்துக் கொண்டிருந்ததை, அவள் உணரவில்லை.

மோகினி மரத்தைக் கடந்ததும், அவர் வெளியே வந்து அவள் சரிவில் இறங்கும்வரையில் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டார். பெருமூச்சு விட்டபடி, தந்தியைப் பிரித்துப் பார்த்தபடி சில விநாடிகள் நின்றார்.

தந்தி கோயமுத்தூரிலிருந்து வந்திருந்தது.

அதில், "விஜயாவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. விஜயாவின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது—ராஜு," என்று குறிப்பிட்டு இருந்தது.

மோகினி என்ற பாசத்தை வெல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தவருக்கு அண்ணன் மகன் ஒரு தந்தியனுப்பி, அவருக்குக் குடும்பத் தொடர்பை ஞாபகப் படுத்தினான்.

அண்ணன் வெங்கடபதி இறக்கும் போதே அவர் மருமகள் விஜயா கருவுற்றிருந்தாள் என்பது குழந்தைச்சாமிக்குத் தெரியாது. அண்ணன் வீட்டில் சில மணி நேரங்களே தங்கிவிட்டு வெளியேறும் பழக்கம் கொண்ட அவருக்குக் குடும்ப விஷயங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலும் இடையாது.

அவரிடம் யாரும் குடும்ப விஷயங்களைப்பற்றிப் பேசுவதும் இடையாது.

தந்தை இறந்தபின் சித்தப்பாதான் வீட்டுப் பெரியவர் என்று நினைத்து ராஜு தந்தி அனுப்பி இருக்க வேண்டும்.

விஜயாவுக்குக் குழந்தைச்சாமியிடம், பக்தி, மதிப்பு எதுவும் இடையாது



என்பதை அவள் அவரிடம் முதல் சந்திப்பிலேயே காட்டிவிட்டிருந்தாள். அவருக்கு அதனால் வருத்தம் இல்லை.

விஜயாவுக்கு உண்மை தெரியாது. 'சிறை சென்று திரும்பிய ஒரு குற்றவாளி, அழகிரி. சிறையிலிருந்து திரும்பியதும் நல்லவனாக வேஷம் போடுகிறான். அவனிடம் ஏன் நம் கணவரின் தந்தை மரியாதை காட்டுகிறார்?' என்றுதான் விஜயா நினைத்தாள்.

மாமனார் வெங்கடபதிக்கும் அவர் சகோதரன் அழகிரிக்கும் உள்ள பிணைப்பு. அதில் மறைந்து கிடக்கும் தியாக சரித்திரம்—விஜயாவுக்கு யாரும் சொல்லவில்லை. சொல்லவும் முடியாது.

கோயமுத்தூர் பெரிய புள்ளிகள் நினைத்தது போல் அழகிரியைத் தப்பாக விஜயா எண்ணியதில் ஆச்சரியமில்லை.

குழந்தைச்சாமி, கோயமுத்தூர் செல்வதா, இல்லை, நேராகத் திட்டமிட்டபடி ஆனைமலைக்கே சென்றுவிடுவதா என்று ஒரு விநாடி யோசித்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்து ஷோரனூர் ரயில் சந்திப்புக்கு வந்து ரயில் ஏறினார்.

அவர் கோயமுத்தூர் வந்து சேரும் போது. இரவு ஒன்பது மணி இருக்கும்.

அண்ணன் பங்களாவுக்கு ஒன்பதரை மணி அளவில் வந்து சேர்ந்தார்.

பங்களாவின் வெளிப்புறம் ஒரே கூட்டமாக இருந்தது-குழந்தைச்சாமி நுழைந்ததை யாரும் கவனிக்கவில்லை.

விஜயா படுத்திருந்த அறை, ஓர் ஆஸ்பத்திரி போல் காட்சியளித்தது. டாக்டர்களும், நர்சுகளும் புடைசூழ நின்று கொண்டிருந்தனர்.

குழந்தைச்சாமி நுழைந்ததும் கவலையோடு, ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த ராஜூ எழுந்துவந்து, ''சித்தப்பா! வாங்க, வாங்க'' என்று அழைத்துக்கொண்டு விஜயா படுத்திருக்கும் அறையினுள் நுழைந்தான்.

விஜயாவின் கண்கள் மூடியிருந்தன. முகம் வெளுத்துக் கிடந்தது. குழந்தைச்சாமி விஜயாவின் கால்களைத் தொட்டுப் பார்த்தார். ஜில்லிட்டுக் கிடந்தது. கவலையோடு திரும்பினார்.

ஒரு வேலைக்காரன் ஒரு கோப்பைப் பாலோடு வந்து, ''சாமி, சாப்பிடுங்க,'' என்றான்.

குழந்தைச்சாமியின் பார்வை பால் கோப்பையில் நின்றது. ராஜூ கவலையோடு, ''சித்தப்பா! எனக்கு ஒன்றுமே புரியல்லே. டாக்டர்கள் ஒன்றும் பிடி கொடுத்துப் பேசமாட்டேங்கிறாங்க. 'பல்ஸ்' தளர்ந்து போச்சு. மேல் சுவாசம் வந்திட்டுது. என் விஜயா பிழைப்பாளா? அவள் பிழைப்பாளா—சொல்லுங்க சித்தப்பா,'' என்று அவன் இழந்துவிட்ட நம்பிக்கையைச் சித்தப்பாவின் வார்த்தைகளால் மறுபடியும் அடையத் துடித்தான்.

ராஜூ தன் மனைவியை எவ்வளவு நேசிக்கிறான் என்பதை அவன் முகம் காட்டியது. குழந்தைச்சாமி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்து, அதிலிருந்த குங்குமத்தை விஜயாவின் நெற்றியில் வைத்தார். ''ரயிலை விட்டு இறங்கியதுமே அம்மன் கோயிலுக்குப் போயிட்டுத்தான் வந்தேன்,'' என்று சொல்லிவிட்டு, வேலைக்காரன் நீட்டிய பாலை வாங்கி ஆர்வத்தோடு குடித்தார்.

திரும்பவும் ராஜூ விடாமல் ''விஜயா பிழைப்பாளா? டாக்டர்கள் சொல்றதைப் பார்த்தா, எனக்குப் பயமா இருக்கு சித்தப்பா,'' என்று மறுபடியும் சொன்னான்.

''ராஜூ! எனக்கு வைத்தியம் தெரியாது. ஆனால் வாழ்வும் அதன் முடிவும் எந்த டாக்டர் கையிலுமில்லை என்பது தெரியும். கோவில்லே நுழைஞ்சப்போ தீபாராதனை நடந்தது. இங்கே வீட்டிலே நுழைஞ்சப்போ கடிகாரத்திலே மணி அடித்தது. விஜயாவின் இந்த ரூமுக்கு வந்து, அவள் காலைத் தொட்டுப் பார்த்தேன். பனிக்கட்டி மாதிரி ஜில்லுனு இருந்தது. கவலையோடு உன் பக்கம் திரும்பினேன். அப்போ உன் வேலைக்காரன் பாலைக் கொடுத்தான், குடிக்கச் சொல்லி. ஒரு மணி நேரத்துக்குள்ளாற மூன்று சகுனம் நல்லதையே காட்டுது. அம்மன் அருளாலே, விஜயா பிழைச்சிடுவான்னுதான் எனக்குத் தோணுது,'' என்றார்.

ராஜூவின் முகம் நம்பிக்கையால் மலர்ந்தது. ''உங்க வார்த்தையே போதும் சித்தப்பா,'' என்று சொல்லிவிட்டு, அவரை உணவருந்த அழைத்தான்.

''வேண்டாம் ராஜூ. நான் சாப்பிட்டாச்சு. இங்கே வந்தவுடனே பாலும் சாப்பிட்டுவிட்டேன். உன் குழந்தையைப் பார்க்க வேண்டும்,'' என்றார்.

ராஜூ அவரை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

அங்கு தொட்டிலில் ஒரு பெண் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. ''குழந்தைக்கு ஆதி பராசக்தியின் அழகான திருநாமங்களில் ஒன்றாகிய கௌரி என்ற பெயரை வை. அது தாய்க்கும் சேய்க்கும் நல்லது செய்யும்,'' என்று கூறிவிட்டு வெளியே நகர்ந்தார்.

ராஜூ வீட்டில் தங்கும்படி வேண்டினான். ஆனால் குழந்தைச்சாமி, ''பரவாயில்லை. நான் போக வேண்டும்,'' என்றார்.

''காரையாவது எடுத்துச் செல்லுங்கள்,'' என்றான். அதற்கும் ஒப்புக்கொள்ளாமல் நடந்தே வெளியே சென்று ரயில்வே ஸ்டேஷனை அடைந்தார்.

அன்று சென்ற சித்தப்பா குழந்தைச்சாமியை, அப்புறம் ராஜூ பல வருஷங்களுக்குச் சந்திக்கவில்லை.

சாவு முனையில் இருந்த விஜயா டாக்டர்களின் முடிவுகளுக்கு நேர்மாறாக இரண்டு நாட்களில் கண் திறந்தாள்.

உயிர் காப்பிருன். ஆனல் அவள் எழுந்து நடமாட முடியாமல் படுக்கையிலேயே இருந்தாள். பிரசவத்தின் காரணமான பலவீனம் என்று நினைத்தான் ராஜு.

மாதங்கள் செல்லச் செல்ல, எந்த மாறுதலும் இல்லே. அப்புறம்தான் பிரசவ அதிர்ச்சியின் விளைவாக விஜயாவின் கால்கள் விளங்காமல் போய் விட்டன என்ற உண்மையை டாக்டர்கள் வெளியிட்டார்கள்.

எப்போதும் சுறுசுறுப்பாக எல்லோரையும் அதிகாரம் செய்து பழக்கப்பட்ட விஜயாவுக்கு, படுத்த படுக்கையாக வாழ்நாள் கழியப் போகிறது என்பதை நினைக்கவும் முடியவில்லே. அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. தன்னே முடமாக்கியது பின்ளேப்பேறு என்பதை உணர்ந்தவுடன், அதற்குக் காரணமான தன் கணவன்மீது ரகசியமாகக் கோபம் வந்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளவும் பயப்பட்டாள்.

மாமனர் இறந்தபின் அவர் சொத்துக்கள் எல்லாம் கணவன் மேற்பார்வைக்கு வரும். அப்போது நேரடியாக எல்லாவற்றையும் ஆண்டு அனுபவிக்க வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தாள்.

ஐரோப்பா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளேக் கணவனேடு சுற்றிப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டிருந்தாள்.

ஐரோப்பாவும் அமெரிக்காவும் இனி மேல் படுக்கைதான். அவளுடைய சுற்றுலாக்களேயெல்லாம் இனி ஒரு சக்கர நாற்காலியில் சுற்றி முடிக்க வேண்டும் என்பதை நினேக்க நினேக்க அவள் உள்ளம் துடித்தது.

தன்னே அன்போடு பார்க்க வந்த சிநேகிதிகள், உறவுப் பெண்கள் எல்லாரையுமே, அவளது பரிதாப நிலேகண்டு சந்தோஷப்பட்டுப் போக வந்த எதிரிகளாகவே நினேத்தாள்.

கோயமுத்தூர் வாழ்வு, வெங்கடபதிக்கு எப்படி ஒரு காலத்தில் கசந்து போய், மலேயாளத்து சாந்தி வில்லாவின் தனிமையை விரும்பிஞரோ, அதே போல் விஜயாவும் தெரிந்தவர்களின் தினசரித் தொடர்பு இல்லாமல் இருக்க, அதே சாந்தி வில்லாவிற்கே செல்ல விரும்பினுள். ராஜுவும் விஜயாவின் இஷ்டப்படியே ஜாகையை மறுபடியும் மலேயாளத்துக்கு மாற்றினுன்.

சாந்தி வில்லாவில் விஜயாவின் வாழ்வு குறுகியதுபோல், அதே மலேயாளப் பகுதியில் சிறு வீட்டில் வாழ்ந்துவந்த மோகினியின் வாழ்வு



'திருவாளர் நிகம்பரஞரின் சேவையைப் பாராட்டி வசூலான தொகை பத்தாயிரம் ரூபாய். விழா சம்பந்தமான செலவு விவரம்:

| | | |
|---|---|---|
| அலங்காரப் பந்தல் செலவு .. | ரூ | 1847-37 |
| வரவேற்பு, பாண்டு இசை .. | ரூ | 1749-26 |
| விருந்து, இன்னிசை .. | ரூ | 1999-13 |
| மாலே புஷ்பம் வகை .. | ரூ | 1002-01 |
| போக்கு வரவு .. | ரூ | 1987-07 |
| டிபன், காப்பி, சோடாகிரஸ் .. | ரூ | 1415-15 |
| ஆகமொத்த செலவு | ரூ | 9999-99 |
| பணமுடிப்பில் உள்ள தொகை | | ——01 |
| ஆக மொத்தம் | ரூ | 10000-00 |

வளர்ந்து பெருகிற்று. குழந்தைசாமி தன்னிடம் சொல்லாமல் போய்விட்டாரே என்ற வருத்தம் மட்டும் மோகினியை வாட்டியது. அவரிடமிருந்து கடிதமோ வேறு எந்தவிதத் தகவலோ வரவே இல்லே. அவர் எங்கிருக்கிருர் என்றுகூட மோகினிக்குத் தெரியவில்லே. பிரிவு, மோகினியின் மனத்தில் குழந்தைச்சாமி சார்பில் இருந்த பக்தியை அதிகப்படுத்திற்று. அவர் அவளுக்குச் சொல்லிக் கொடுத்த பொன்மொழிகளே அவள் மறக்கவில்லே.

''மோகினி! உடல் என்பது ஆன்மா வாழும் வீடு. அதை நீ அழகாக, புனிதமாக வைத்திருக்க வேண்டும். அதற்கு, பயிற்சிகள் தேவை,'' என்று சொன்னதை மோகினி மறக்கவே இல்லே.

நீர் இறைப்பது, தோட்ட வேலைகளைச் செய்வது எல்லாவற்றையும் மோகினி தேகப்பயிற்சியாகவே கருதினுள். ''உழைப்புதான் நமக்கும் ஆண்டவனுக்கும் உள்ள ஒற்றுமை. இவ்வளவு அண்டங்களையும் படைத்துக் காத்து வருகிருன் ஆண்டவன். அவன் விடாமல் உழைக்கிருன். அதுவும் இச்சையில்லாமல் உழைக்கிருன். நாமும் அதே போல் தன்னலம் இல்லாமல் உழைத்தால்தான் ஆண்டவன் இதயத்தை ஓரளவு நெருங்க முடியும்.'' குழந்தைச்சாமி கூறிய இந்த வார்த்தைகளை அடிக்கடி நினைத்துக் கொள்வாள்.

சோம்பல் வரும்போது, வேலையில் சலிப்பு வரும்போது இந்த வார்த்தையை நினைத்துக் கொண்டால், யாவும் உடனே மறைந்துவிடும்.

வீட்டுக் கடமைகளைச் செய்வது, சங்கரன்குட்டிக்குப் பாடம் கற்பிப்பது, தோட்டத்துக் காய்கறிகளை மார்க்கெட்டுக்கு எடுத்துப்போய் விற்று வருவது— எல்லா வேலைகளையும் மோகினியே ஆர்வத்தோடு செய்ய ஆரம்பித்தாள்.

உழைப்பின் விளைவாக நாராயணியின் செல்வ நிலையும் வளர்ந்தது. எதிர் காலத்தைப்பற்றிப் பயமும் குறைய ஆரம்பித்தது.

குழந்தைச்சாமி அந்த மலைச் சரிவை விட்டுச் சென்றிருந்தாலும், அவருடைய சொற்கள் நாராயணி அம்மாள் வீட்டில் ஆட்சி புரிந்து வந்தன.

வருடங்கள் செல்லச் செல்ல, படிப்பும் உழைப்பும் தன் உடலில் செய்து வந்த மாறுதல்களை மோகினி சரியாக உணரவில்லை.

ஏற்கனவே சிவந்திருந்த அவள் மேனி, குங்குமச் சிவப்பில் வெளுப்பைக் கலந்தது போல் ஒருவிதக் கனியின் நிறத்தை அடைந்தது. மோகினியின் பருவத்தின் குமுறல், அவள் அணிந்திருந்த ஆடைகளின் உட்புறத்திலிருந்து ஊரின் செவிகளுக்கும் கண்களுக்கும் ஒலித்தன. விண்பூத்த வெண் தாமரையோ அல்லது வானத்து மோகினியோ என்று எண்ணும்படி இருந்தது அவள் அழகாக பவனிவரும் காட்சி. மோகினியும் மற்றவர்கள் தன்னைப் பார்க்கும் பார்வையில் களங்கமும் கலக்கமும் இருப்பதை உணர்ந்தாள். ஒரு கால் ஏற்றி, ஒரு கால் இறக்கி ஏதோ ஒரு தெய்வீகத் தாளத்துக்குத் தக்கபடி மோகினி அடி எடுச்ச வைக்கும்போது, அவளது தோளும் மார்பும், கால் அசைவுக்குத் தக்கபடி அசைந்து உருளும் காட்சி பார்ப்பவர் உள்ளத்தில் ஆசைப் புயலை எழுப்பியதில் ஆச்சரியமில்லை. முழங்கால்வரை தொங்கும் நீண்ட கேசம் இடமிருந்து வலம் அசையும் பின்னழகைப் பார்த்தவர் பார்த்தபடி நின்றனர். முன் அழகோ, பார்த்த முனிவரும் தவம் செய்வாரோ என்று எண்ணும்படி இருந்தது. இவள் ஒரு மின்னலா, இல்லை மோகினியா என்று ஐயப்படாதவர் இல்லை.

நாராயணி அம்மாள் மோகினியை ஷொரனூர் மார்க்கெட்டுக்குக் காய்கறி விற்கச் செல்ல வேண்டாமென்று தடுத்துப் பார்த்தாள். ஆனால் மோகினி அதைக் கேட்கமாட்டாள். ஒரு சிறு மாட்டு வண்டியில் காய்கறிகளை ஏற்றிக் கொண்டு அவளே ஓட்டிச் செல்வாள்.

''அழகே ஒரு ஆபத்து.'' என்று நாராயணி சொல்வாள்.

''அந்த ஆபத்தைச் சமாளிக்கத் தெரியாத பெண் அழகாய் இருக்கக் கூடாது,'' என்று மோகினி சட்டென்று பதில் சொல்வாள்.

வண்டி மார்க்கெட் வந்தடைந்ததும், கடைக்காரர்கள் பலரும் மோகினியைச் சூழ்ந்து கொள்வார்கள். மோகினி திட்டமிட்ட விலையைக் கொஞ்சம்கூடத் தாட்சண்யம் இல்லாமல் சொல்வாள்.

வியாபாரிகள் வாய்திறந்து, உணர் விழந்து பார்த்தபடி விலையை ஒப்புக் கொள்வார்கள். பணத்தை வாங்கிக் கொண்டு, வீட்டுக்கு வேண்டிய மளிகைச் சாமான்களை அதே இடத்திலிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டு, வண்டியில் வீடு திரும்புவாள்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும், கோயமுத்தூரில் மேல் படிப்பு—டீச்சர் ட்ரெயினிங்—படித்துவிட்டு ஊர் திரும்பி, குழந்தைச்சாமியின் பள்ளியிலேயே ஆசிரியையாகப் பணியாற்றி வந்தாள்.

சம்பளம், காய்கறி வியாபாரத்து லாபம்—இவற்றையெல்லாம் நாராயணி அம்மாளிடமே கொடுத்துவிடுவாள்.

உங்களை ஜேபடி செய்ய உங்கள் கைகளையே உபயோகப் படுத்திக்கொள்ளும் பிக்பாக்கட்டுகளுக்கு ரு ப் பெயர் சூறினைப் பர்க் தயம்.

—பாப் ஹோப்



மோகினிக்குப் பதினெட்டு வயது முடிந்த நிலையில் நாராயணி ஷோரனூர் பண்டு ஆபீஸில் ஆயிரத்து இருநூறு ரூபாய் சேர்த்திருந்தாள்.

அந்தப் பணத்தை மோகினியின் கல்யாணத்துக்கு என்று ஒதுக்கி இருந்தாள்.

பள்ளி வேலை முடிந்து வீடு திரும்பியதும் தோட்ட வேலை. பிறகு மார்க்கெட் செல்வது—இவ்வாறு மணிக் கணக்காக உழைத்துவந்த மோகினிக்குத் திருமணத்தைப்பற்றி நினைக்கவே பொழுதில்லை.

இனக் கவர்ச்சி என்றால் என்ன என்பதை அவள் அனுபவத்தில் உணரவில்லை. அவள் மனத்தில் இருந்த ஒரே பாசம் குழந்தைச்சாமியின்மீதுதான். அவரை எப்போது பார்ப்போம் என்று ஆவலோடு இருந்தாள்.

அவர் இருக்கும் இடம்பற்றி, அவர் நடவடிக்கைபற்றி, நிச்சயமான ஒரு தகவலும் கிடைக்கவில்லை. எங்கோ ஆனைமலைக் காட்டில் இருப்பதாகச் சிலர் சொன்னார்கள். சிலர், திருவண்ணாமலையில் ஒரு பெரியவரோடு இருப்பதாகச் சொன்னார்கள். வேறு சிலர், எங்கோ ராஜஸ்தானில் இருப்பதாகத் தகவல் சொன்னார்கள்.

இந்த நிலையில்தான் ஒரு நாள் மோகினி பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் காய்கறிகள் பறித்து வண்டியில் ஏற்றிக்கொண்டு மார்க்கெட்டுக்குப் புறப்பட்டாள். சங்கரன்குட்டியும் உடன் வருவேன் என்று குழந்தைபோல் பிடிவாதம் செய்தான். காய்கறிகளோடு இருபது வயதுக்கு மேற்பட்ட சங்கரன் குட்டியும் வண்டியில் ஏறிக் கொண்டான். மீசையோடு பருத்து வளர்ந்திருந்த சங்கரன்குட்டி மூளையளவில் இன்னமும் குழந்தையாகவே இருந்தான்.

வண்டியோடு மார்க்கெட்டில் இறங்கியதும் ஒரு மூலையில், திண்ணையில் வைக்கப்பட்டிருந்த பஞ்சு மிட்டாய்க் கடைக்குச் சென்று பஞ்சுமிட்டாய் வாங்கித் தின்ன ஆரம்பித்துவிட்டான். தோட்டத்துக் காய்களையும், பலாப்பழங்களையும் விற்றுவிட்டு, சாமான்களை வாங்கிக் கொண்டு மோகினி வீடு திரும்ப நினைக்கும்போது, இருட்டிவிட்டது.

சங்கரன்குட்டி கூட்டத்தில் மறைந்தவன் திரும்பவில்லை. அவனுக்காகக் காத்திருந்தாள்.

குறுகிய தெருவில் போவார் வருவாரின் தீ போன்ற சுடும்பார்வை மோகினியை வேதனைக்குள்ளாக்கிற்று.

ஏழு மணி சுமாருக்குச் சங்கரன்குட்டி கையில் மிட்டாயுடன் திரும்பி வந்தான்.

''குட்டி! இனி உன்னை மார்க்கெட்டுக்குக் கூட்டிட்டு வரமாட்டேன். இந்நேரம் வரையிலும் எங்கே போயிருந்தே?'' என்று மோகினி கடிந்து கொண்டாள்.

குட்டி நடுங்கியபடி, ''மோகினி! மோகினி! கோபிக்காதே... புகைவண்டி பார்க்கப் போயிருந்தேன். வண்டி அப்படியே முட்டிமோத வந்தது. பயந்து, ஓடி வந்துட்டேன்,'' என்று சொல்லிவிட்டு, ரயில் போல் ஊத ஆரம்பித்தான்.

மோகினி வெறுப்புடன், ''ஏறிக்க வண்டியிலே,'' என்றாள். உடனே குட்டி ''குப் குப்'' என்று ரயில்போல் சத்தமிட்டபடி வண்டியின் பின்புறம் ஏறிக் கொண்டான்.

வயது நிரம்பியவன் ரயில்போல் சத்தமிடும் வேடிக்கையைப் பார்த்து, கடைக்காரர்கள் சிரித்தபடி இருந்தனர்.

மோகினிக்கு வேதனையாய் இருந்தது. வண்டியில் ஏறிக்கொண்டு, வேகமாக ஓட்டினாள்.

வண்டியினுள் இருந்தபடி குட்டி சாமான் பொட்டணங்களை ஒவ்வொன்றாகப் பிரித்தான். அவரைப் பந்தல் போட மூங்கில்கள் வாங்கி வண்டியில் வைத்திருந்தாள் மோகினி.

அதைப் பார்த்த குட்டி, ''மூங்கில் எதுக்காக வாங்கியிருக்கே மோகினி?'' என்று கேட்டான். ஆத்திரத்துடன் இருந்த மோகினி, ''உன் தலையிலே அடிக்க,'' என்று வெடுக்கென்று பதில் சொல்லிவிட்டு, வண்டியை இருளில் வீடு நோக்கி ஓட்டிக் கொண்டிருந்தாள்.

குட்டி வண்டியினுள் இருந்தபடி வெல்லப் பொட்டலத்தைப் பிரித்து, வெல்லத்தை எடுத்துக் கடிக்க ஆரம்பித்தான்.

வண்டி அடர்த்தியான தென்னை மரங்கள் நிறைந்த தோப்பினுள் நுழைந்தது. வண்டி நடுத்தோப்பில் நுழைந்ததும் மரங்களின் பின்புறம் இருந்து ஓர் உருவம் நகர்வதுபோல் தெரிந்தது.

மோகினியின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. வண்டியை வேகமாக ஓட்டினாள்.

ஆனால் மரத்தின் பின்புறம் மறைந்து இருந்தவன் திடீரென்று பாய்ந்து வந்து வண்டியை நிறுத்தினான்.




அவன், வரிகள் போட்ட பனியன் அணிந்து இருந்தான். ஹிட்லர் மீசை வைத்து இருந்தான். அவன் வாய்விட்டுச் சிரித்தபடி மோகினியைப் பார்த்தான்.

அவன் வெறிப் பார்வை மோகினிக்குப் புதிதல்ல.

அடிக்கடி அவன் தன்னை இப்படி வெறியோடு பார்ப்பதைச் சில மாதங்களாக உணர்ந்திருக்கிருள். மரக்கடை வைத்திருந்த காக்கா வஹாப், அவள் பள்ளியிலிருந்து திரும்பும்போது கடை வாசலில் நின்றபடி சிரிப்பான். அவன் பார்வை எப்போதும் அவள் உடல்மீதே லயித்து நிற்கும். ''வஹாப், வண்டியை விடுங்க,'' என்ருள்.

அதே சமயம் காக்கா, வண்டியின் உட்புறமிருக்கும் சங்கரன்குட்டியைக் கவனித்தான். குட்டியும் பயத்தோடு காக்காவைக் கவனித்தான். ''குட்டி! இறங்குடா!'' என்று கட்டளை இட்டான் காக்கா.

அடுத்த விநாடியே குட்டி நடுங்கும் கால்களோடு, வண்டியில் இருந்து கீழே குதித்தான். ''டேய் பிராந்து! பொய்க்கோடா! இவ்விட இருந்து பொய்க்கோடா,'' என்று உரத்த குரலில் கட்டளையிட்டான்.

''ஞான் ஒன்னும் செய்யில்லா. ஞான் ஒன்னும் செய்யில்லா,'' என்று அலறியபடி குட்டி நடுங்கி ஓடுகிறன்.

''ஓடாதே குட்டி. நில்லு. என்னைத் தனியேவிட்டு ஓடாதே குட்டி! நில்லு!'' என்று மோகினி கூப்பிடுவதைக்கூடக் கேளாமல் குட்டி ஓடுகிறன்.

ஓடும் குட்டியைப் பார்த்து வஹாப் சிரித்தபடி, ''அந்தக் குட்டி சுத்தப் பட்டி. ஆறடி உயரம் இருக்கான். காலடி 'தில்' அவனுக்கு இல்லே,'' என்று சொல்லியபடி மோகினியை நெருங்கிறன்.

மோகினியின் முகம் வியர்த்தது. வஹாபின் கை மோகினியின் தோளைப் பற்றியது. மோகினி சட்டென்று விலகிக் கொண்டாள். அவன் கையில் அவளது ஜாக்கெட் மாட்டிக் கொள்ளவே, அது கிழிந்தது. அவள் அறிவையும் உணர்வையும் இழந்தாள். உதடுகள் துடித்தன. மார்பைக் கைகளால் மூடிக் கொண்டாள் மோகினி.

(தொடரும்)



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம்-11

இருண்ட தோப்பில், தனிமையில் வஹாப்பின் வெறுத்த பார்வையில் இருந்தாள் மோகினி. அதிக அழகு ஆபத்தை விளைவிக்கும் என்பது அன்றுதான் மோகினிக்கு அனுபவ பூர்வமாகத் தெரிந்தது. வஹாப்பின் மூச்சு வேகமாக வந்து போய்க் கொண்டிருந்தது.

மோகினி அவசர அவசரமாகத் தன் மார்பைக் கைகளால் மூடிக் கொண்டாள். வஹாப் அவள் கைகளைப் பிடித்து இழுத்தான். மோகினி திமிறினாள். இந்தப் போராட்டத்தின் விளைவாக மோகினி தரையில் விழுந்தாள்.

வஹாப் விரட்டியதில் பயந்து ஓடிய சங்கரன்குட்டி தோப்பை விட்டு ஓடவில்லை. அவனுக்கு, மோகினிக்கு உதவி புரியும் துணிவும் இல்லை. ஆனால் அங்கு என்ன நடக்கிறது என்பதை இருந்து பார்க்க வேண்டுமென்ற விபரீத ஆசை மட்டும் அவனுக்கிருந்தது. மரத்தின் பின்புறம் நின்று நடப்பதைக் கவனித்தான்.

மோகினியின் ஆடை கிழிந்து அவள் மானத்தோடு போராடுவதைப் பார்த்தான். இதுநாள் வரை அவளோடு நெருங்கி வாழ்ந்த போதிலும், அவன் மோகினியின் பெண்மையை ஒரு ஆண் பார்க்கும் முறையில் இது வரை பார்த்ததில்லை. கிழிந்த ரவிக்கையோடு உடல் வெளித் தெரிய நிற்கும் மோகினியைப் பார்த்த சங்கரன் குட்டியின் குழம்பிய அறிவில் புரியாத உணர்ச்சிகள் எழ ஆரம்பித்தன.

குட்டி ஓடியபின் மோகினியின் மனத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல உணர்ச்சிகள்! வஹாப் ஒரு மிருகம் என்பதை உணர்ந்த மோகினிக்கு முதலில் வெறுப்பு ஏற்பட்டது. அவள் மீது அவன் கை பட்டதும் அருவருப்பு. அருவருப்பின் காரணமாக அவன் பிடியிலிருந்து நகர்ந்து கொண்டாள். அதனால் அவள் ரவிக்கை கிழிய நேர்ந்தது. அவள் வெறுக்கும் மனித மிருகத்தின் முன் ஆடை குலையும்படியாயிற்றே என்றதனால் வேதனை தரும் லஜ்ஜை அவளைத் தாக்கியது. கையால் உடலை மூடிக் கொண்டாள். அவன் கைகளைப் பற்றி இழுத்ததும் பீதி அவள் மனத்தைத் தாக்கியது. விலை மதிப்பில்லாத தன்னுடைய மானம் என்ற சொத்தை இழக்க நேருமோ என்ற பயம் அவளை இருள் சூழ்வது போல் சூழ்ந்தது. கை கால்கள் அசையும் சக்தியை இழந்தன.

''ஐயோ! என்னைக் காப்பாற்ற யாருமில்லையா?'' என்று கூச்சலிடலாம் என்றாலும் குரல் எழவில்லை.

செயலற்ற ஊமையாய் விநாடிக்கு விநாடி பயம் ஏறிக்கொண்டே போகும் நிலையில், மூச்சு மட்டும் வேகமாக வந்து போய்க் கொண்டிருந்தது. உடல் வியர்த்தது. கண்கள் மருண்டு அங்கும் இங்கும் நோக்கின. பீதியின் காரணமாக மோகினியின் உடலில் ஏற்பட்ட லட்சணங்கள் எல்லாம், வஹாப்பின் ஆசை வெறி என்ற நெருப்புக்கு நெய்யாக உதவி, அதை இன்னும் பன்மடங்கு கொழுந்து விட்டு எரியச் செய்தன.

அந்த விநாடியில் மோகினியின் பயம் அதன் எல்லைக் கோட்டை அடைந்தது. அந்தப் பயத்தின் எல்லையில் அருவருப்பின் எல்லையையும் கண்டாள். அதே இடத்தில் பயம் முடிந்து ஒரு வித முரட்டுத் தைரியமும் தேகத்தில் ஒரு வித அசாதாரணமான சக்தியும் பிறப்பதை உணர்ந்தாள். அவனை நெட்டித் தள்ளினாள். செவ்வாழைத் தண்டு போன்ற அந்தக் கைகளுக்கு எப்படித் தான் அந்தப் பலம் வந்ததோ, அவளுக்கே தெரியவில்லை.

தள்ளப்பட்ட வஹாப் ஒரு விநாடிக்குச் செயல் இழந்து கிடந்தான். உடனே எழுந்தான். சிரித்தான். ''துள்ளும் மீன் என்றால் எனக்குப் படா குஷி,'' என்று சொல்லிக்கொண்டே மோகினியை நோக்கி நெருங்கினான்.

அதற்குள், மோகினி அவரைப் பந்தலுக்கு என்று வாங்கி வைத்திருந்த

மூங்கில்கள், வண்டியின் வெளிப்புறத்தில் நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். உடனே பாய்ந்து ஒரு மூங்கிலை வண்டியிலிருந்து உருவினாள். உழைப்பால் பலமேறிய கைகள், மூங்கில் கழியின் துணையோடு சுற்ற ஆரம்பித்தன.



ஆசையோடு நெருங்கிய வஹாப்பின் தலை, முதுகு, தொடை முதலிய இடங்களில் மூங்கில் அடி விழுந்து வஹாப்பைத் திணற வைத்தது. அடுத்த விநாடி மோகினியைப் பயமுறுத்தும் நோக்கத்துடன் வஹாப் தன் மடியிலிருந்து பேனாக்கத்தியை எடுத்துப் பிரித்துக் கொண்டு மோகினியை நெருங்கினான்.

இன்னது செய்கிறோம் என்று தெரியாத ஒரு நிலையில் மோகினி இருந்தபடியால் அவளுக்குக் கத்தி பயத்தைத் தரவில்லை. மூங்கிலை முரட்டு வேகமாகச் சுழற்றிய படிவஹாப்பை நெருங்கினாள். மூங்கில் வஹாப்பின் மணிக்கட்டில் படரென்று அடித்து, கத்தியைத் தொலைவில் வீசி எறியச் செய்தது. மூங்கிலின் பலம் பொருந்திய அடி, கைஎலும்பில் படவே, பொறுக்க முடியாத வலியைக் கொடுத்தது. வலி என்ற உணர்ச்சி தேகத்தில் படரவும் வஹாப்பின் காம இச்சை

குறைய ஆரம்பித்தது. தொடர்ந்து மோகினி அடித்துக் கொண்டே இருந்தாள்.

வஹாப்பின் மனத்தில், மூங்கிலைச் சுழற்றிச் சுழற்றியடிக்கும் மோகினியைப் பார்த்துப் பயம் பிடித்துக் கொண்டது. சற்று தூரத்தில் போக்கு வண்டிகளின் சத்தம் கேட்கவே காக்கா வஹாப் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். அவன் ஓடி விட்டான் என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் மோகினி தொடர்ந்து மூங்கிலைச் சுழற்றியபடி சில விநாடிகள் இருந்தாள். பிறகுதான் மூங்கிலைக் கீழே எறிந்தாள்.

அவள் உடம்பு இன்னும் நடுங்கி ஆடிக்கொண்டே இருந்தது. புரியாத பலவித உணர்ச்சிகளால் தொடர்ந்து தாக்கப்பட்டதால், அவளுக்குச் சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. தனியாக நின்று ஓர் ஆண் மிருகத்தை விரட்டி விட்டோம் என்ற வெற்றி உணர்ச்சி கூட ஏற்படவில்லை. தன்னைத்தானே அவள் பாராட்டிக் கொள்ளவும் இல்லை. ஒரு பெண்ணுக்கு இயற்கையாக உள்ள பெண்மை அவளைப் பற்றிக் கொள்ள, அப்படியே வண்டிக் கூட்டைப் பிடித்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள். அப்படி அழுவதில் ஒரு பெரிய ஆறுதல் இருப்பதாகவும் நினைத்தாள்.

ஒரு கோழையாக, மோகினியின் வீரப் போராட்டத்தை மரத்தின் பின்பிருந்து பார்த்துக் கொண்டிருந்த குட்டிக்கு மோகினி ஏன் அழுகிறாள் என்பது புரியவில்லை. மோகினி மூங்கிலால் அடித்துத் தரையில் எறிந்திருந்த காக்காவின் பிரித்த கத்தியை எடுத்துக் கொண்டு மெள்ள அடி மேல் அடி வைத்து சங்கரன் குட்டி மோகினியை நெருங்கினான்.

அவள் அழுது கொண்டிப்பதைப் பார்த்த குட்டி, ''மோகினி! நீ ஆடின குச்சிகள் ரொம்ப நல்லாயிருந்தது. இந்த குச்சிகள் நீ எவ்விடே படிச்சே மோகினி?'' என்று கேட்டான்.

மோகினி பதில் சொல்லவில்லை. ஆஜானுபாகுவாக வளர்ந்திருக்கும் குட்டியைப் பார்த்தாள். உருண்டு திரண்டு வலிமையோடு காணப்படும் அவனுடைய கரங்கள் தனக்கு எந்தவிதமான பாதுகாப்பும் அளிக்கவில்லையே என்பதை நினைத்ததும் வருந்தினாள். அவனை நொந்து பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டு ஆத்திரத்தை அடக்கியபடி, ''சரி குட்டி, பேசாம வண்டியிலே ஏறிக்கோ.'' என்று சொல்லிக் கொண்டே, கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

குட்டி அவளை அதோடு விடுவதாயில்லை. ''மோகினி! ஆ பட்டியின்டெ மகன் (நாயின் மகன்) வஹாப்பில்லே அழணும்? நீ என் அழணும்?'' என்று தொடர்ந்து கேட்டான்.

பொறுமையை இழந்த மோகினி, ''நீ சும்மா இருக்கமாட்டே? உன்னோட தனியா வந்ததை நினைச்சுத்தான் அழறேன்,'' என்றாள் வெடுக்கென்று.

அப்புறம், குட்டி பேசாமல் வீடு செல்லும் வரையில், வண்டியின் பின்புறம் உட்கார்ந்திருந்தான். ஆனால் அடிக்கடி மோகினியின் முதுகுப்புறத்தைப் பார்த்தபடி இருந்தான். அவளைத் தொட வேண்டுமென்று ஓர்முறை நினைத்தான். ஆனாலும் அவனுக்குப் பயம். பேசாமல் இருந்துவிட்டான்.

வீடு வந்ததும் சாமான்களை எடுத்து வீட்டுக்குள் கொண்டு போய் வைத்தான். மோகினி மாட்டைப் பட்டியில் கட்டிவிட்டு வண்டியைத் தள்ளி ஒதுக்குப் புறமாக வைத்துவிட்டு வீட்டுக்குள் வருவதற்குள் குட்டி தன் தாய் நாராயணி அம்மாளிடம், வழியில் நிகழ்ந்த ஆபத்தையும், அதை மோகினி சமாளித்த விதத்தையும் விவரமாகக் கூறிவிட்டான்.

நாராயணி பதறி விட்டாள். ''அதாம்மா, நீ மார்க்கெட்டுக்குப் போக வேண்டாம்னு சொல்றேன். உனக்கு இருக்கிற அழகுக்கு, நீ படுதாவுக்குப் பின்னாலே இருக்கணும். நீ இனிமே தனியா எங்கேயும் போகாதே மோகினி,'' என்றாள்.

மோகினிக்குக் குட்டியின் மீது ஆத்திரம் வந்தது. ''எங்கேயும் தனியா போகாம, நான் எப்படிம்மா வாத்தியார் வேலை பார்க்க முடியும்? எப்படித்தான் வாழமுடியும்? இன்னிக்கித்தாம்மா எனக்கு ஒரு புது உண்மை புரிஞ்சது,'' என்றாள்.

''என்ன மோகினி அது?'' என்று கேட்டாள் நாராயணி.

''பயம் என்பது கொஞ்ச நேரத்துக்குத்தாம்மா. அப்புறம் பயம் முடிஞ்சவுடனே, தைரியம் தானே வருதும்மா.''

சற்று முன்பு அனுபவித்த பீதியைச் சமாளித்துச் சாமர்த்தியமாக அவள் பேசுகிறாள் என்பதை உணர்ந்து கொண்ட நாராயணி அம்மாள், ''போதும் போதும் உன் பேச்சு. ஒருநாள் போலவா இருக்கும் எல்லா



கணக்கு ஆசிரியர்:

"டிகாக்ஷனையும் பாலையும் 3 : 5 என்ற விகிதத்திலே கலந்து கொண்டா, சர்க்கரையை நானே திட்டமாகப் போட்டுக்கறேன்."

நாளும்? இன்னிக்கு உன்னைக் குருவாயூரப்பன்தான் காப்பாற்றியிருக்கார்." என்று சொல்லி மோகினியைச் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டாள்.

அந்த இரவிலிருந்து சங்கரன்குட்டி தன்னை ஒரு புது விதமாகப் பார்ப்பதை மோகினி உணரவில்லை. அதற்கு மோகினிக்கு அவகாசமும் இல்லை. சங்கரன் குட்டி என்பவன் ஒன்றும் அறியாத வளர்ந்த குழந்தை. தன்னை விட வயதில் மூத்த ஒரு குழந்தை. அவனைக் கண்டிக்க வேண்டிய சமயங்களில் கண்டிக்கவேண்டும், பச்சாத்தாபம் காட்ட வேண்டிய சமயங்களில் பச்சாத்தாபம் காட்ட வேண்டும். இப்படித் தனக்குள்ளேயே ஒரு தீர்மானம் செய்து வைத்திருந்தாள் மோகினி.

மறுநாள் காலை குளித்துவிட்டு, குடை எடுத்துப் பிடித்துக் கொண்டு அவள் பாடம் சொல்லித் தரும் பள்ளிக்குச் சென்றாள். அதுவே அவள் படித்த பள்ளி. இப்போது அவள் அதன் ஆசிரியை.

தினமும் மோகினி பள்ளியில் நுழைந்ததும் செருப்பை வெளியே விட்டுவிட்டு நடுமத்தியப் பகுதியில் உள்ள தொழும் ஹாலில் சில விநாடிகள் அமர்ந்துவிட்டுத்தான் தன் வகுப்புக்குச் செல்வது வழக்கம்.

அந்தத் தொழுகைக் கூடத்தில் சுவரில் திருவண்ணாமலையில் வாழ்ந்த ரமண பகவான் உருவப்படம், ராமகிருஷ்ண பரம ஹம்சர், விவேகானந்தர், சிவானந்தர் ஆகியோரின் படங்கள் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. அதன் ஒரு மூலையில் சிறிய அளவில் குழந்தைச்சாமியின் படமும் மாட்டப் பட்டிருந்தது. அவரது படத்தின் முன் நின்று சிந்தித்தபடி இருந்தாள் மோகினி. அவர் எங்கிருக்கிறாரோ என்ற நினைப்பும், அவரைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பும் அவள் மனத்தில் இருந்தன.

தொழுகை அறையின் வெளியே வந்ததும் மூங்கில் படல்கள் வழியே மோகினியின் பார்வை சென்றது. பள்ளிக்கூடத்தின் வெளிப்புறத்தில் மிகப் பெரிய கார் ஒன்று நின்று கொண்டு இருந்தது. அந்தக் கார் பொன் வண்டு கலரில் பார்க்க மிகவும் அழகாயிருந்தது.

இதற்கு முன் பலமுறை தூரத்திலிருந்து அந்தக் கார் போவதை மோகினி பார்த்திருக்கிறாள். அது அந்தப் பள்ளிக்குத் தனம் உதவிக் கட்டியவரான 'சாந்தி வில்லா' உரிமையாளரின் கார் என்று கேள்விப்பட்டிருக்கிறாள்.

சாந்தி வில்லா முதலாளி ராஜுவின் கையெழுத்தைத்தான் இது வரை மோகினி பள்ளிக்கு அவ்வப்போது வரும் அறிக்கைகளில் பார்த்திருக்கிறாள். பள்ளியின் நிர்வாகியும், தலைமை ஆசிரியையுமான பாருகுட்டி அம்மாள்தான், அவரிடம் பள்ளி விஷயமாகப் பணம் பெறவோ, பள்ளியின் அன்றாட விஷயங்களைப் பற்றிப் பேசவோ போய் வருவாள்.

பள்ளியை ஆரம்பித்த குழந்தைச் சாமியும் எங்கோ சென்று விட்டார். அதற்கு மூலதனம் அளித்து ரட்சிக்கும் பிரபுவும் பள்ளிப்பக்கம் வருவதில்லை. இந்த நிலையில் பள்ளியின் வரவு செலவு நிர்வாகம் எல்லாமே பாருகுட்டி அம்மாவின் கையில்தான் இருந்தது. வேலையின் ஒருவரைச் சேர்த்தல், வேலையிலிருந்து ஒருவரை நீக்கல், காத்தல், ஆகிய பள்ளியைப் பொறுத்த முத்தொழிலையும் பாருகுட்டி அம்மாளே செய்து வந்தாள்.

மோகினி ஒருத்திதான் குழந்தைச் சாமியின் வேண்டுதல்படி பள்ளியின் ஆசிரியையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். அதுவும் குழந்தைச் சாமி ஊரை விட்டுப் போகும் போது, அவர் எழுதி வைத்து விட்டுப் போனபடி: "மோகினி இலவசமாகப் படிக்க வேண்டியது; மேல் படிப்புப் படிக்க அவள் விரும்பினல் அவளுக்குப் பள்ளிக்கூடம் பண உதவி செய்ய வேண்

டியது. மறுபடியும் அவன் இதே பள்ளியில் வேலை பார்க்க விரும்பினால் அவளுக்கு ஆசிரியை வேலை கொடுக்கவேண்டியது.''

மேற்படி குறிப்பின் பிரகாரம்தான் அவளுக்கு அந்த வேலை கிடைத்தது. பாருகுட்டி அம்மாளுக்கு மோகினியைப் பிடிக்காமல் போயிருந்தால் இந்த உதவிகள் மோகினிக்குக் கிடைக்காமலே போயிருக்கலாம். மோகினியின் சார்பில் உதவி செய்யக் குழந்தைச்சாமி அங்கில்லை. அவரது அண்ணன் மகன் ராஜுவுக்கோ மோகினியைப்பற்றி ஒன்றும் தெரியாது.

இப்போது ராஜுவின் கார் பள்ளிக்கு வந்ததில் பள்ளியைச் சேர்ந்த எல்லாருக்குமே ஆச்சரியம். மோகினி காருக்குள் எட்டிப் பார்த்தாள்.

மோகினியின் பார்வையில் ராஜுவின் முகம் தெரியவில்லை. ராஜுவின் முதுகுப்புறமே தெரிந்தது. சில்க் ஜிப்பாவும், அதன் மேல்புறம் உயர்ந்து வளர்ந்த கழுத்தும், கறுத்து அடர்த்தியாயிருந்த சுருண்ட தலை மயிரும்தான் தெரிந்தன. அடுத்த விநாடியே கார் புறப்பட்டுச் சென்றது. காரின் அருகில் நின்றுகொண்டிருந்த பாருகுட்டி அம்மாள், மஞ்சள் நிற சில்க் கௌன், வெள்ளை ஸ்டாக்கிங், பூட்ஸ் அணிந்த குழந்தையை மெள்ள அழைத்தபடி பள்ளியை நோக்கி வந்தாள்.

தலைமை ஆசிரியையின் கையைப் பிடித்துக் கொண்டு வந்த குழந்தையின் முகம் மெலிந்து, உணர்ச்சியில்லாமல் வெளுப்பாக இருந்தது. அழகான முகம்தான்—ஆனால் புஷ்டியானதாகத் தெரியவில்லை. குழந்தைகளுக்கு உள்ள இயற்கையான குதூகலம், அந்தக் குழந்தையிடம் இல்லை. மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைத்து, ஒரு வயது முதிர்ந்த பெண் டப்பதுபோல் அந்தக் குழந்தை நடந்து வந்தது. முகத்தைப் பார்த்தால், ஆறு ஏழு வயது இருக்கும்போல் தெரிந்தது. ஆனால் அதற்குத் தகுந்த வளர்ச்சி குழந்தைக்கு இல்லை. குழந்தையின் உதடுகள் சற்று வெளுத்தும் கறுத்தும் இருந்தன.

பாருகுட்டி அம்மாளின் பின்புறம் டவாலி அணிந்த வேலைக்காரன் ஒருவன் குழந்தையின் சிலேட், புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த பையைத் தூக்கிக்கொண்டு வந்தான்.

தலைமை ஆசிரியையோடு வரும் குழந்தையை வேடிக்கை பார்க்க மற்ற ஏழைக் குழந்தைகள் இருபுறமும் கூடிவிட்டனர்.

ஆனால் எல்லாக் குழந்தைகளும் தன்னையே உற்றுப் பார்க்கும் புதுமை, அந்தச் செல்வக் குழந்தைக்குக் கூச்சத்தைக் கொடுத்தது. பள்ளியின் வெளிப்புறம் உள்ள நான்கு படிகளை ஏறித்தான் பள்ளியின் உட்புறம் நுழைய வேண்டும். பாருகுட்டி அம்மாளும் அந்தக் குழந்தையும் படிக்கட்டை அடைந்ததும், ஒன்றும் பேசாமல் புத்தகப் பையுடன் பின்னால் வந்துகொண்டிருந்த சேவகன் திடீரென்று குழந்தையின் முன்னால் வந்தான்.

''சின்னம்மா! பொறுங்க,'' என்றான். உடனே அந்தக் குழந்தையை லபக்கென்று தூக்கினான். நான்கு படிகளையும் மெள்ளக் கடந்து குழந்தையை இறக்கித் தரையில் விட்டான்.

தலைமை ஆசிரியையின் திகைப்பைத் தீர்க்கும் நோக்கத்தோடு அந்தச் சேவகன், ''சின்னம்மா! உங்களுக்கு 'ஹார்ட்' சரியில்லே. படி ஏறக்கூடாது, வேகமாக ஓடக்கூடாதுன்னு டாக்டர் சொல்லி இருக்காரே?'' என்றான்.

அந்தச் செல்வக் குழந்தை மற்றக் குழந்தைகளைப் பார்த்து வெட்கத்தோடு தலை குனிந்தது. அந்தக் குழந்



மூவர் புதிர்

விடை

1. ஸ்ரீதர்
2. எஸ். எஸ். வாசன்
3. ஏவி. மெய்யப்பசெட்டியார்

தைக்குத் தன்னுடைய பலவீனத்தை எல்லோர் முன்னிலையிலும் அம்பலப் படுத்திய வேலைக்காரன்மீது ஆத்திரம் வந்தது. ஆத்திரம் காரணமாக ரத்தம் குபுகுபுவென்று குழந்தையின் முகத்துக்கு வர, குழந்தையின் உதடுகள் இன்னும் கறுப்பாயின.

அந்தக் குழந்தையின் நிலையை மோகினி உணர்ந்து கொண்டாள். அவளையுமறியாமல் மோகினிக்கு அந்தக் குழந்தையின் மேல் ஓர் வகை பச்சாத்தாபம் ஏற்பட்டது.

பாருகுட்டி அம்மாளின் பார்வை மோகினியின் மீது நின்றது. "மோகினி, இதுதான் கௌரி. நம்ம பள்ளியின் போஷகர் ராஜுவின் ஒரே பெண். கௌரி உன் வகுப்பில்தான் படிக்கப் போகிறாள். அவளை நீ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்," என்று சொல்லிவிட்டு, குழந்தை கௌரியிடம் திரும்பினாள். "கௌரி! இவுங்கதான் உன் டீச்சர் மிஸ் மோகினி."

கௌரி அப்படியே மோகினியை விழுங்குபவள் போல் பார்த்தாள். கௌரியின் முகத்திலேயே அவள் கண்கள்தான் சிறந்த பகுதி. அகன்று, கறுத்து நீர்படிந்து, மோகினியை நோக்கின. அந்தப் பார்வையில் ஒரு விதக் கெஞ்சல் பாவம் தான் இருந்தது. உடனே ஓடிப் போய் அந்தக் குழந்தையை அணைத்துக்கொண்டு முத்தமிட வேண்டுமென்று தோன்றியது மோகினிக்கு. ஆனால், "நாம் ஒரு ஆசிரியை. பள்ளியில், மற்றக் குழந்தைகள் முன்பு நிற்கிறோம்,' என்ற நினைப்புத்தான் மோகினியைத்தடுத்தது.

மோகினியையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த கௌரி திடீரென்று சிரித்தாள். "இவுங்களா டீச்சர்? ரொம்ப அழகா, சினிமா ஸ்டார் மாதிரி இருக்காங்களே?" என்று சொன்னாள். இதுவரை புதிதாக வந்த குழந்தையை ஒரு விசித்திரப் பொருளைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்த மற்றக் குழந்தைகள் கொல்லென்று சிரித்தனர். தமிழ் புரியாத பல மலையாளக் குழந்தைகள், மற்றக் குழந்தைகள் சிரிப்பதைப் பார்த்துப் புரிந்து கொண்டது போல் சிரிப்பில் சேர்ந்து கொண்டார்கள்.

பாருகுட்டி அம்மாளும் மோகினியும் ஒன்றும் புரியாமல் நின்றார்கள். குழந்தை கௌரி எல்லாக் குழந்தைகளும் உரக்கச் சிரிப்பதைப் பார்த்து, தன்னைத்தான் கேலி செய்கிறார்கள் என்று நினைத்தாள். தன்னைப் பார்த்துச் சிரிக்கும் மற்றக் குழந்தைகளை வெறுத்தாள். டீச்சர் மோகினியின் மீதும் ஒரு விதக் கடுப்பு ஏற்பட்டது.

சந்தர்ப்பத்தைச் சமாளிக்கும் எண்ணத்தோடு மோகினி, "கௌரி! வா, வகுப்புக்குப் போகலாம்," என்று சொல்லிக் குழந்தையை நோக்கிக் கையை நீட்டினாள்.

குழந்தை கௌரி மோகினியின் கையைப் பிடித்துக்கொண்டு பின் செல்லத் தயங்கினாள். மோகினியை ஒரு விதக் கசப்போடு பார்த்தபடி நின்றாள்.

(தொடரும்)




உலக மார்க் ஷண்முகம் பட்டணம் பொடி
100 வருடங்களுக்கு மேல் பிரக்யாதி பெற்றது.
ORIGINAL SHUNMUGAM SNUFF (ESTD.1839) Co.
POST BOX No.140. MADRAS-1.



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 12

நீட்டிய கையை வாங்கிக் கொள்ளாமலே, ஒருவித கலவரத்தோடு நிற்கும் குழந்தையை மோகினி கவனித்தாள். கௌரியின் மருண்ட பார்வை தன்னையும் மற்றச் சிரிக்கும் குழந்தைகளையும் மாறி மாறிப் பார்ப்பதை அறிந்தாள்.

கௌரி பள்ளிக்கு வந்த முதல் நாளே பள்ளியை வெறுக்கக் கூடாது என்ற உண்மையை மோகினி உணர்ந்தாள். பள்ளி, இன்பம் தரும் சூழ் நிலையாக இல்லாவிட்டால், பள்ளி தரும் போதனை மாணவிக்குப் பயன் படாது என்பதை உணர்ந்தவள் மோகினி. குழந்தைச்சாமி, அவள் சிறுமியாக இருந்தபோது, படிப்பை எவ்வளவு கவர்ச்சியாகச் செய்திருக்கிறார்!

இளமையில் மனம் விரிய வேண்டும், மலர்போல் விரிய வேண்டும்; அன்னிய விமர்சனமோ, புரளியோ பிஞ்சு மனத்தை விரியச் செய்யாமல் குவியச் செய்து விட்டால் அந்த மனம் குவிந்து குவிந்து, சிறுத்து, தனிமையிலே இருந்தபடி உலகத்தை வெறுக்கத் தொடங்கும். உலகமே நம் விரோதி என்ற விபரீதமான அடிப்படை மனத்தில் எழுந்துவிடும். வலிமை இல்லாத இளம் உள்ளங்களை மற்றவர்களின் பொறுப்பற்ற கேலியும் சிரிப்பும் தாக்கி, முறித்து விடும் என்பது மோகினிக்குத் தெரியும். இளமையில் வறுமை கூடக் கொடிது அல்ல, ஆனால் நோயும் அன்பில்லாமையும் கொடிது என்பதை உணர்ந்திருந்தாள்.

செல்வத்தில் வாழும் கௌரியின் முகம் வெளுத்து, உதடுகள் கறுத்து இருக்க, அவள் இளம் வாழ்வில் ஒரு விதக் குறை இருக்கவேண்டும். அது அன்பில்லாத சூழ்நிலையாக இருக்குமோ என மோகினி ஐயமடைந்தாள். உடனே அதிகப்படியாகப் புன்முறுவல் செய்தபடி மிகக் கனிவோடு, ''கௌரி! வகுப்புக்குப் போனால் நாம் எவ்வளவோ பேசலாம். வா கௌரி'' என்று வலுவலப்பாய், கௌரியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

கௌரி வேறு வழியில்லாமல் நடந்தாள். வகுப்புக்குப் போகும் வழியில் கௌரியின் பார்வை மோகினியின் மீதே நின்றது. வெண்மையாக, தந்தம் போன்ற, மாசு மறுவற்ற கைகளைப் பார்த்தாள். அடுத்தபடியாக அவள் கண் பார்வைக்கு நேராக இருந்தது மோகினியின் தங்க நிறமான இடை. டீச்சரின் நடையே ஒரு நாட்டியமாகத் தோன்றியது குழந்தைக்கு.

வகுப்பை அடைந்ததும் குழந்தை கௌரி அப்படியே தன்னை விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது மோகினிக்கு ஒரு விதக் கூச்சத்தைக் கொடுத்தது. கௌரி குழந்தைதான்—அதுவும் பெண் குழந்தை தான்—ஆனாலும் அவள் கண்களின் பார்வை அவளை விட வயதில் முதிர்ந்த மோகினிக்கு ஒருவித சலனத்தை உண்டுபண்ணிற்று. அதன் காரணம் மோகினிக்கே புரியவில்லை.

கௌரியின் பார்வையை எதிர்த்து நோக்க முயன்றபோது, மோகினியின் இதயத்தில் என்னவோ போன்ற ஒரு விதத் துடிப்பு ஏற்பட்டது. தன் குழம்பிய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்ட பின் மோகினி, ''என்ன கௌரி அப்படிப் பார்க்கறே?'' என்று கேட்டாள்.

அதற்கு அந்தக் குழந்தை சிரித்தபடி, ''டீச்சர்! நீங்க ரொம்ப அழகா நடக்கறீங்க,'' என்றாள்.

இப்போதுதான் கௌரி வகுப்புக்கு வரும்வரையில் தன்னுடைய நடையையே கவனித்து வந்திருக்கிறாள் என்பது புரிந்தது மோகினிக்கு. 'அப்படியா? என் நடை அவ்வளவு அழகாகவா இருக்கு? உங்கம்மாவை விடவா நான் அழகாக நடக்கிறேன்?'' என்று சொல்லி



விட்டுக் குழந்தையைத் திருப்தி செய்து விட்டோம் என்ற மன நிறைவோடு கௌரியைப் பார்த்தாள். ஆனால் கௌரியோ மோகினியை வெறுப்போடு பார்த்தாள். கௌரியின் கண்களில் பொல பொலவென்று நீர்த்துளிகள் சேர்ந்தன. கௌரியின் கைவிரல்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டன. அவள் உதடுகள் துடித்தன. ''டீச்சர்... டீச்சர்...'' என்று இரு முறை அழைத்து விட்டு நிறுத்திக் கொண்டாள்.

மோகினிக்கு விஷயம் விளங்கிவிட்டது. குழந்தையிடம் எதைச் சொல்லக்கூடாதோ அதைச்சொல்லிவிட்டோம் என்பதைத் தெரிந்து கொண்டாள். ஆனால் சொல்லக்கூடாத அந்த விஷயம் என்ன என்பது மோகினிக்குத் தெரியவில்லை.

கௌரி முகத்தில் கண்ணீர் வழியத் தேம்பியபடி, ''என்னைக் கேலி செய்யாதீங்க டீச்சர். எங்கம்மாவாலேதான் நடக்க முடியாதே. அவுங்க எப்படி உங்களைவிட அழகா நடக்க முடியும்?'' என்று சொன்னாள்.

கௌரியின் தாய் கால் விளங்காமல் கிடக்கிறாள் என்பதோ, கௌரியின் வீட்டின் விவரங்களோ மோகினிக்குத் தெரியாது. தன் வேலை உண்டு, தன் வீடு உண்டு என்று வாழ்ந்து வந்தவளுக்கு ராஜுவின் மனைவி விஜயா, கௌரியைப் பிரசவித்தவுடனே அதிர்ச்சியால் கால்களின் சக்தியை இழந்துவிட்டாள் என்பது தெரியாது.

குழந்தையிடம் தன் குற்றத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று மோகினியின் மனம் சொல்லிற்று. அதே சமயம் வகுப்பில் மற்றக் குழந்தைகள் இருப்பதையும் உணர்ந்தாள். கௌரியை எடுத்து அணைத்து ஆறுதல் கூறி மன்னிப்புக் கேட்டாள் வகுப்பிலுள்ள மற்ற ஏழைக் குழந்

தைகள், 'கௌரி பணக்காரக் குழந்தை. ஆனாலும் டீச்சர் மன்னிப்புக் கேட்கிறார்.' என்று நினைக்க நேரும்.

வகுப்பின் கட்டுப்பாட்டுக்கு அது பொருந்தாது. ஆனால் ஒரு குழந்தையின் உள்ளம் நோகும்படியாகப் பேசி விட்டோம். ஆனால் நோக வேண்டும் என்று நினைத்துப் பேசவில்லை என்பது அந்தக் குழந்தைக்குப் புரியவேண்டும். என்ன செய்வது என்று ஒரு விநாடி யோசித்தாள். பிறகு, ''கௌரி! குழந்தைகள் தப்பு செய்வது போல் பெரியவர்களும் சில சமயம் தெரியாமல் தப்பு செய்கிறார்கள். உங்கம்மா கால் இழந்தவள் என்பது உண்மையாகவே எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் பேசியிருக்கமாட்டேன். தெரியாமல் செய்ததாயினும் அப்பிழை உனக்கு வேதனையைக் கொடுத்திருக்கிறது. ஆனாலும் அது தவறு தான். இனிமேல் அந்தத் தவறைச் செய்யமாட்டேன். நீ உன் இடத்தில் போய் உட்கார்.'' என்று தன் அந்தஸ்தைக் குறைத்துக் கொள்ளாமல் சொல்லிவிட்டுப் பாடத்தை நடத்த ஆரம்பித்தாள்.

வகுப்பில் அமைதி நிலவியது. கௌரிக்கு இது ஆச்சரியமாய் இருந்தது. தவறு செய்த பெரியவர்கள், தங்கள் தவறை ஒத்துக் கொண்டதை அவள் பார்த்தது இல்லை. மனம் புண்படும்படி பேசியவர்களைப் பார்த்திருக்கிறாள். ஆனால் அது தவறு என்று ஒத்துக் கொண்டதைப் பார்த்ததில்லை. அப்போதே கௌரி, மோகினி டீச்சர் ஒரு தனி ரகம் என்பதை உணர்ந்து கொண்டாள்.

அன்று மாலை வீடு திரும்பியதும் கௌரியின் மனம் டீச்சரைப் பற்றியே நினைத்தது. முதல் நாள் பள்ளிக்குச் சென்று வந்த மகளிடம் விஜயா ஆசையோடு, ''கௌரி!



உனக்குப் பள்ளிக்கூடம் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டாள்.

அதற்குக் கௌரி, ''பள்ளிக்கூடம் ரொம்பப் பிடிச்சிருக்கம்மா. என்னுடைய டீச்சர் ரொம்ப அழகா இருக்காம்மா. ரொம்ப நல்லவம்மா,'' என்றாள்.

விஜயாவின் மனம் திருப்தியடைந்தது. ஆனால் முதல் நாளே குழந்தை தன் டீச்சரைப் பற்றி அவ்வாறு புகழ்ந்து பேசுவது விஜயாவுக்குப் பிடிக்கவில்லை. விஜயாவின் உள்ளம், மற்றவர் உள்ளங்களையும் ஆளவிரும்பும் உள்ளம். அவள் குழந்தையோ கணவனோ, அவளைத் தவிர வேறு யாரிடமும் அன்போ, மரியாதையோ செலுத்துவது அவளுக்குப் பிடிக்காது. விஜயா அவள் வாழ்வை ஒரு சூரிய மண்டலமாகக் கருதினாள். அந்தச் சூரிய மண்டலத்தில் தன்னை ஒரு சூரியனாகவும், மற்றவர்களைத் தன் கவர்ச்சியின் காரணமாகத் தன்னைச் சுற்றிவரும் கிரகங்களாகவும் கருதினாள். விஜயா என்ற நடு மையத்தில் இருந்து நெருக்கமாகச் சுற்றி வரும் ஒரு கிரகம் மகள். இன்னொரு கிரகம் கணவன். உறவினர்கள் சற்றுத் தொலைவில் சுற்றி வர வேண்டிய கிரகங்கள். வேலைக்காரர்கள், இன்னும் சற்று அதிக தூரத்தில் இருந்து சுற்றி வர வேண்டிய கிரகங்கள். மற்றக் கிரகங்கள் அவளிடமிருந்து வாங்கிக் கொள்ளும் ஒளியால் பிரகாசிக்க வேண்டும். அவர்களுக்குச் சொந்தமாக எந்த ஒளியும் இருக்கக்கூடாது என்று ஆசைப்படுகிறவள் விஜயா.

குழந்தை கௌரி, அவள் சென்று வந்த பள்ளியைப் புகழ்ந்தது விஜயாவுக்குப் பிடித்தது. காரணம் அது, அவள் தேர்ந்தெடுத்து அனுப்பிய பள்ளிக்கூடம். சென்னைக்கோ, கோயமுத்தூருக்கோ, குழந்தையை அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும் என்பதுதான் ராஜுவின் எண்ணம். அதனால், குழந்தை பள்ளியைப் புகழ்வது சரி. ஆனால் அதன் டீச்சரை அழகானவள், நல்லவள் என்று ஏன் புகழவேண்டும் என்று நினைத்தாள் விஜயா.

சற்றுக் கடுமையான முகத்தோடு, ''ஒரு நாள் பழக்கத்திலே டீச்சரை நல்லவள் என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட கௌரி யோசித்தாள். பின்பு தொடர்ந்து, ''ஆமாம்மா. டீச்சர் நல்லவங்கன்னு ஒரு நாள்லே சொல்ல முடியாதும்மா. ஆனா அவுங்க அழகாய் இருக்காங்கங்கிறதை ஒரு நிமிஷத்திலே சொல்லிவிடலாமே?'' என்று பதில் கூறினாள்.

குழந்தையின் இந்தச் சாதுரியமான பதிலைக் கேட்டுக் கொண்டிருந்த ராஜு, உடனே சிரித்து விட்டான். விஜயா, சிரிக்கும் கணவனின் முகத்தைப் பார்த்தாள். தன் கணவன் உட்கார்ந்து இருக்கும்போது, தன் மகள் இன்னொரு பெண்ணின் அழகைப் பற்றிப் பேசுகிறாளே, அதைக் கேட்டுவிட்டு அவரும் சிரிக்கிறாரே என்று வேதனை ஏற்பட்டது விஜயாவுக்கு.



# சூடும் மன்னர்

கி. வா. ஜ. சொன்னது | தகவல்: திருவேரகன்

சென்னை விக்டோரியா ஹாஸ்டல் மாணவர்களின் தமிழ் இலக்கிய மன்றம் (20-8-65'ல்) துவக்கப்பட்டது. அதற்காகச் சிறப்புச் சொற்பொழிவாளராக, திரு. கி. வா. ஜகந்நாதன் அழைக்கப் பெற்று, வந்திருந்தார் -சற்றுத் தாமதமாகவே.

திரு. கி. வா. ஜ. வை மாணவர்களிடையே அறிமுகப்படுத்திய மாணவர், ''இன்றைய இலக்கியத்தை வளர்க்கும் முடிசூடா மன்னர்களில் ஒருவர் சொற்பொழிவு ஆற்ற வந்திருக்கிறார்,'' எனக் குறிப்பிட்டபின் நகர்ந்துவிட்டார்.

திரு கி. வா. ஜகந்நாதன் பேச எழுந்ததும், ''இன்றைய இலக்கிய மன்றத்தின் துவக்க விழா, என்னால் தவக்க விழாவாகவே ஆரம்பமாகிறது,'' எனக் கூறவே சிரிப்பொலி எழுந்தது. அதற்கும் மேலாக, ''என்னை இலக்கிய உலகின் முடிசூடா மன்னர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டார் அன்பர். அல்ல, நான் முடி சூடிக் கொண்டவன். பாருங்கள்,'' என்று, தலையசைத்தார்.

ஆம். சிகை முடிந்திருக்கும் தன் தலையைத்தான் குறிப்பிட்டார்!

மாணவர்களின் பலத்த கைதட்டல் வெகு தூரம் வரை கேட்டிருக்கும்...!

வேதனையோடு, சந்தேகமும் கூடவே எழுந்தது.

ஆனால் தன் சந்தேகத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவும் இஷ்டமில்லை விஜயாவுக்கு. உள்ளே பொங்கி எழுந்த சந்தேகத்தை மறைத்துக் கொண்டு கௌரியிடம் திரும்பி "சரி சரி, நீ போய் ஜூஸ் சாப்பிடு. படிக்கட்டிலே நீ இறங்கிப் போயிடாதே கௌரி. மாதவனைக் கூப்பிட்டு, தூக்கிட்டுப் போகச் சொல்லு," என்று மகளை அனுப்பிவிட்டு, ஜன்னலருகில் புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள்.

மாலை ஒளி ராஜுவின் முகத்தில் வீசியது. அந்த ஒளியில் ராஜுவின் மேனி, தகதகவென்று மின்னியது. ஓங்கி உருண்டு வளர்ந்திருந்த அவன் தோள்கள், வலிமையும் ஆண்மையும் சேர்த்து உருவாக்கிய கழுத்து... இரண்டையும் கவனித்தாள். தேகப் பயிற்சியினால் அகலமாக விரிந்திருந்த அவன் மார்பும், அவளைக் கவர்ந்ததைப் போல் மற்றப் பெண்களையும் கவர்ந்து விட்டால்...

புஸ்தகத்திலேயே கவனம் செலுத்தியபடி இருந்த கணவனிடம், "ஆமாம். காலையிலே பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தீங்களே. அங்கே கௌரியின் டீச்சரைப் பார்த்து, கௌரிக்கு ஹார்ட் வீக்குன்னு சொல்லி, அவள் படி ஏறும, ஓடாம, அவளைத் தனியாக் கவனிக்கணும்னு சொன்னீங்க இல்லியா?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வி தேவையே இல்லை. விஜயாவேதான் மாதவனோடு குழந்தை பள்ளி செல்லவேண்டும் என்று திட்டம் செய்தவள். மாதவன் பள்ளி முடியும் வரை இருந்து, குழந்தையை அழைத்து வரவேண்டுமென்று ஏற்பாடும் செய்திருந்தாள். இந்தக் கேள்விக்கு ராஜு சொல்லும் பதிலிலிருந்து, ராஜு கௌரியின் டீச்சரைப் பார்த்திருப்பானா, அவள் அழகு ராஜுவின் மனத்தைக் கவர்ந்திருக்குமா என்பதைப் புரிந்து கொள்ளவே, ஒரு கிரிமினல் வக்கீல், குறுக்கு விசாரணையில் வலை விரித்துக் கேள்வி கேட்பது போல் கேள்வி கேட்டாள்.

புஸ்தகத்திலேயே ஆழ்ந்திருந்த ராஜு, "விஜயா, நீ என்ன கேட்டே?" என்று குழந்தைபோல் கேட்டான்.

விஜயா "நம்ம கௌரிக்கு ஹார்ட் வீக், அவளை ஜாக்கிரதையாக் கவனிக்கணும்னு கௌரியோட டீச்சர்கிட்டே சொன்னீங்களா?" என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியிலிருக்கும் சூதைப் புரிந்து கொள்ளாமல் ராஜு, "கௌரியின் டீச்சர்கிட்டேயா? அவளிடம் நான் போய் இதையெல்லாம் சொல்லிட்டிருக்கணுமா? மாதவன் சொன்னா போதாதா? நான் பள்ளிக்கூடத்துக் குள்ளேயே போகல்லே. பாருகுட்டி அம்மாளிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு வந்துவிட்டேன்," என்று பதில் சொன்னான்.

ராஜு கௌரியின் டீச்சரைப் பார்க்கவில்லை என்பதை விஜயா புரிந்துகொண்டாள். அதனால் அவளுக்கு ஒரு வித நிம்மதி ஏற்பட்டது. மெல்ல சக்கர நாற்காலியைக் கைகளால் தள்ளிக்கொண்டு ராஜு உட்கார்ந்திருக்கும் இடத்துக்குப் போனாள். ராஜுவின் மனம் புஸ்தகத்தில் ஆழ்ந்திருந்தது. ஆகையால் விஜயா அருகில் வந்ததை அவன் கவனிக்கவில்லை. விஜயா தன்னுடைய கணவனின் தேகக் கட்டையும், அவன் உதடுகளின் சிவப்பையும், மேல் உதட்டில் அரும்பு போல் வளர்ந்திருக்கும் மீசையின் அழகையும் பார்த்தபடி இருந்தாள்.

ராஜு—விஜயாவின் வாழ்க்கை இன்பம் முடிந்து, கௌரிக்கு உண்டான வயதாகிவிட்டது. விஜயாவின் மனத்தில், ராஜுவுடன் திருமணம் ஆனது, ராஜுவை முதன்முதலில் சந்தித்தது போன்ற காட்சிகள் மனத்திரையில் தொடர்ந்து ஓடின. முதல் சந்திப்பை நினைக்கும்போதே விஜயாவுக்குப் புரியாத இன்பம் ஏற்பட்டது.

கோயமுத்தூரில் வருடா வருடம் நடக்கும் போட்டி மைதானம். நூறு கெஜப் போட்டி, இருநூறு கெஜப் போட்டி, போல் வால்ட், ஹை ஜம்ப், லாங் ஜம்ப், ஒரு மைல் ஓட்டம், அரை மைல் ஓட்டம் முதலிய பல போட்டிகள் நடக்கும். போட்டிகள் நடுப்பகல் ஒரு மணிக்கு மேல் துவங்கும். மாலை ஆறு மணிக்கு முடிவடையும்.

அதை வேடிக்கை பார்க்க வரும் பெரிய இடத்துப் பெண்மணிகள், ஆண்கள் எல்லோருக்கும் அங்குள்ள 'ஸ்டேடியத்தில்' உட்கார இடம் இருக்கும். மற்றச் சாதாரண மக்கள், விளையாட்டு மைதானத்தின் விளிம்புகளில் குடை பிடித்தபடியும், குடை பிடிக்காமலும் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

பல கல்லூரிகள், பள்ளிகளிலிருந்து

வந்து போட்டியில் கலந்து கொள்வார்கள். அதைப் பார்ப்பதில் விஜயாவுக்கு மிகுந்த உற்சாகம். வீட்டிலிருந்து ஐஸ் வாட்டர் நிரம்பிய ஒரு தெர்மாஸ் கூஜா, கடலைப் பொட்டலங்கள், சாக்லெட் துண்டுகள், ஆரஞ்சுப்பழங்கள் இவைகளோடு சில சிநேகிதிகளையும் அழைத்துக் கொண்டு ஒரு மணிக்கே விஜயா ஸ்டேடியத்துக்கு வந்துவிட்டாள்.

அவள் தந்தை அந்த விளையாட்டுக்கள் நடத்தும் நிர்வாகத்துக்கு வருடம் தவறாமல் ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுப்பவராதலால், போட்டி நிர்வாகிகள் விஜயாவையும் சிநேகிதிகளையும் மிக்க மரியாதையோடு நிழல் நிறைந்த ஓர் இடத்தில், போட்டிகளை நன்றாகப் பார்க்கும்படியான ஒரு மூலையில் நாற்காலிகள் போட்டு உட்கார வைத்தார்கள். உடல் தெரியும்படியான உடை அணிந்து, அதன் மீது விலை உயர்ந்த பிரெஞ்ச் ஷானல் நம்பர் 5 என்ற வாசனை சென்ட்டைத் தெளித்து விஜயா உரக்கச் சிரித்தபடி நடந்து செல்லும் காட்சியை யாராலும் பார்க்காதிருக்க முடியாது.

தன்னை யாரும் பார்க்கத் தவறக் கூடாது என்பதுதானே விஜயாவின் வாழ்வின் நோக்கம்? இயற்கையான அவளுடைய அழகு, பருவம், இவை இரண்டுமே மற்றவர்களைக் காந்தம் போல் இழுக்கும். அதோடு மட்டும் திருப்தி அடையவில்லை விஜயா. தன்னைச் சுட்டிக் காட்டி எல்லாரும் பேச வேண்டுமென்பதே அவளுடைய நோக்கமாய் இருந்தது.

போட்டி மைதானத்தில் போட்டிகள் தொடங்கியதும் நூறு கெஜப் போட்டியில் ராஜூ முதலாவதாக வந்ததுமே விஜயாவின் கவனம் ராஜூவின் மீது சென்றது. சளசளவென்று பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தவள் பேச்சை நிறுத்தினாள். சிரிப்பதை நிறுத்தினாள். மைதானத்தில் போட்டியில் கலந்து கொண்டவர்களின் நடுவே நின்றபடி சிரித்துக் கொண்டிருந்த ராஜூவின் அழகான முத்து வரிசைப் பற்களையும், விரிந்த கண்களையுமே கவனித்தாள். அவ்வளவு அழகான சிரிப்பையும், சிரிப்பின் கவர்ச்சியைப் பன்மடங்கு அதிகப்படுத்தும் அழகான பற்களின் வரிசையையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது விஜயாவுக்கு.

ஒவ்வொரு போட்டியிலும் ராஜூவே வெற்றி பெற வேண்டுமென்று, விஜயா விரும்பினாள், துடித்தாள். தன்னுடைய ஆர்வத்தை நினைத்ததும் அவளுக்கே வெட்கமாக இருந்தது.

பரிசு வழங்குதல் முடிவுற்று, விழா முடிந்து கூட்டம் கலைந்தும் கூட விஜயாவுக்கு அந்த மைதானத்தை விட்டு நகரவே இஷ்டம் இல்லை. ராஜூ பரிசுகளைத் தன் கார் டிரைவர் வசம் கொடுத்து அனுப்பிவிட்டான். ராஜூ சிறிது நேரம் அருகில் உள்ள பார்க்கில் தங்கிவிட்டுப் பிறகு வீட்டுக்கு நடந்தே போகத் தீர்மானித்தான். பார்க்கை நோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கும் ராஜூவை விஜயா சந்திக்கும்படி நேர்ந்தது.

"மிஸ்டர் ராஜூ! மிஸ்டர் ராஜூ!" என்று கூப்பிட்டாள். ராஜூ திரும்பிப் பார்த்தான். காரில் உட்கார்ந்திருக்கும் விஜயாதான் தன்னை அழைத்தாள் என்பதைப் புரிந்து கொண்டான். அவள் ஆடையிலிருந்து, மென்காற்றில் மிதந்து வந்த சுகந்தம் அவன் நாசியை இழுத்தது. சிரித்தபடியே அவளைப் பார்த்தான்.

விஜயாவுக்கு, முதலில் என்ன பேசுவது என்று புரியவில்லை. வார்த்தைகளை முயற்சி செய்து தேடிப் பிடித்து ஒன்று சேர்த்துப் பேச முயன்று கொண்டிருந்தாள். அவள் தவிப்பை உணர்ந்து கொண்ட ராஜூ சிரித்தபடி, "நீங்கள் என்னிடம் ஏதோ பேச வேண்டும் என்று நினைக்கிறீர்கள். ஆனால் முடியவில்லை. நடுரோடில் காரை நிறுத்திக் கொண்டு அதிக நேரம் யோசித்தால் மற்றக் கார்களின் போக்குத் தடைப்படும். ஆகையால் நான் காரில் ஏறிக் கொள்கிறேன். நீங்கள் காரை ஓட்டிக் கொண்டே சொல்ல வேண்டியதைச் சிந்தியுங்கள்," என்று சொல்லிவிட்டு அவள் பதிலுக்குச் சற்றும் எதிர்பாராமலே, காரின் கதவைத் திறந்து விஜயாவின் அருகில், முன்சீட்டில் உட்கார்ந்து கொண்டான்.

விஜயாவுக்குப் பாதி பயத்தாலும், பாதி இன்பத்தாலும் உடல் வியர்த்தது. காரை ஓட்டியபடியே," ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை..." என்று ஏதேதோ சொல்ல முயன்றாள்.

ராஜூ சிரித்தபடி, "என்னிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றால் என்னிடம் பேசியிருக்க வேண்டாமே. நான் இறங்கி விடட்டுமா?" என்று கேட்டான்.

உடனே விஜயா பதட்டத்துடன், "வேண்டாம் வேண்டாம், இறங்க

www.tamilbooksworld

வேண்டாம்,'' என்றான். இறங்கப் போனவனை இறங்க வேண்டா ம என்று ஏன் தடுத்தோம் என்று அவளுக்கே புரியவில்லை. ''நீங்கள் இன்று போட்டியில் வென்றதைக் குறித்து உங்களைப் பாராட்ட விரும்பினேன் அதற்காகத் தான் உங்களைக் கூப்பிட்டு, காரை நிறுத்தினேன்,'' என்று சொல்லிவிட்டுப் பேச்சை நிறுத்தினாள்.

ராஜு உடனே குறும்புத்தனமாக, ''அப்படியா? பாராட்டுதல்தான் முடிந்து விட்டதே. இனிமேல் நான் போகலாம் அல்லவா?'' என்றான்.

விஜயாவின் மனம் காலியாக இருந்ததால் அவளுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. ஆனாலும், அவனைப் பிரியவும் அவளுக்கு மனம் இல்லை. ஏதாவது பேசி, அவனைக் காரை விட்டு இறங்காமல் தடுக்க வேண்டும் என்று விரும்பினாள். ''எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொண்ட உங்கள் உடல், மிகவும் களைத்துப் போயிருக்குமே! பாவம்! நடந்து வீடு போகிறீர்களே, சொந்தக் கார் இல்லையா?'' என்றாள்.

இந்தக் கேள்வியை விஜயா கேட்டதும் ராஜுவின் மனத்தில் ஒருவித குறும்புத்தனமான விபரீத யோசனை தோன்றியது. பல லட்சங்களுக்கு அதிபதியான வெங்கடபதியின் மகன் என்று நாம் கூறிக் கொள்வானேன்? இவள் யார் என்று தெரிவதற்கு முன்பு, நாம் யார் என்று சொல்வானேன் என்று நினைத்தான். ஆகையால் விளையாட்டாக, ''என்ன செய்வது? வாடகை சைக்கிள் கடை வைத்திருப்பவங்க வீட்டுப் பிள்ளை நான். சவாரிக்கு, கார் வைத்துக் கொள்ள முடியுமா?'' என்று சொன்னான்.

வாடகை சைக்கிள் ஷாப்காரன் என்றதும் விஜயாவுக்குச் சுருக்கென்றது. கவனம் சிதறியதால், கார் ஒரு புறமாக ஒதுங்கப் பார்த்தது. அது சென்று பக்கத்துச் சுவரில் இடிப்பதற்குள், ராஜு தாவிக் காரின் ஸ்டியரிங்கைப் பிடித்துத் திருப்பிச் சரி செய்தான். காரைச் சரி செய்யும் போது ராஜுவின் கருங்கல் போன்ற புஜங்கள் விஜயாவின் கைகளில் உரசும்படியான ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு விநாடிக்கு விஜயாவின் இதயம் படபடத்தது.

அடுத்த விநாடி சுதாரித்துக் கொண்டாள். ''சொந்த க் கார் ஒன்று இல்லை என்றாலும், உங்களுக்குக் கார் ஓட்டத் தெரிந்திருக்கிறதே!'' என்றான்.

ராஜு சிரித்தான். ''படிப்பு முடிந்ததும் கார் ரிப்பேர் ஷாப் வைக்கலாமென்றிருக்கிறேன்,'' என்று இன்னொரு முறை புளுகினான். ''உங்கள் வீடு இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள். அங்கு கொண்டு போய் விடுகிறேன்,'' என்றாள்.

''நான் வாழும் பகுதி ஜனசந்தடி நிரம்பிய இடம். அங்கு என்னைக் காரில் கொண்டு வந்து இறக்கிவிட்டால், உங்களைப் பற்றித் தவறான பேச்சுக் கிளம்பும்,'' என்று சொல்லிவிட்டு நழுவினான்.

பிறகு தினமும் இருவரும் ரகசியமாகச் சந்தித்தனர். விஜயா ஒரு பெரிய செல்வந்தர் மகனைக் கல்யாணம் செய்து வாழ வேண்டும் என்று கனவு கண்டவள். அந்தக் கனவு இப்போது நிகழாது என்று நினைக்கவும், அவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. இருந்தாலும் ராஜுவிடமிருந்த கவர்ச்சியின் முன், அவள் ஆணவம், கர்வம், பணத்தாசை மூன்றுமே மறைந்து இருந்தன.

இந்த நிலையில் அவள் தந்தை ஒரு நாள் நடுப்பகல் வந்து ஒரு குண்டைப் போட்டார். ''இன்று, மாலை நான்கு



''வெற்றிலைச் சுண்ணாம்பை என் முதுலே தடவிட்டீர்களே? நான்சென்ஸ்!''

''கோவிச்சுக்காதேம்மா! மூக்குக் கண்ணாடியை வீட்டிலே வச்சுட்டு வந்துட்டேன், பஸ் ஸ்டாண்டு கம்பத்திலே தடவணும்னு நெனச்சேன்.''

மணிக்கு வெங்கடபதியும் அவர் மகனும் வருவார்கள். அவரு உன்னை மருமகளாக்கிக் கொள்ள ஆசை. அவர் மகனுக்கு உன்னைக் கொடுக்க லாம் என்றிருக்கிறேன். சமையல்கார னிடம் சொல்லி, டிபன் காப்பி தயார் செய்யச் சொல். நல்லா டிரஸ் பண் ணிட்டிரு. வெங்கடபதி மில் முதலா ளிகள் சங்கத்தில் முதல் நம்பர் பேர் வழி. அவர் சம்பந்தம் கிடைக்கிறது நம்ம அதிர்ஷ்டம்,'' என்று சொன்னார்.

சிந்தித்துச் சிந்தித்துச் சலித்துப் போயிருந்த விஜயாவிடம் அவள் அத்தை வந்து, ''வெங்கடபதியும் மகனும் வந்துட்டாங்க. இன்னும் நீ டிரஸ் செய்து கொள்ளவில்லையே?'' என்று கடிந்து கொண்டாள். அதற்கு விஜயா, 'எப்படியாவது இந்தச் சம் பந்தம் இல்லாமல் போக வேண்டும். அவர்களுக்கு என்னைப் பிடிக்காமல் இருக்க வேண்டும்,' என்று மனத்துக் குள் வேண்டிக்கொண்டாள்.

எப்போதும் சரிகைப் பட்டுப்புடவை உடுத்திச் செல்பவள், கதர்ப்புடவை யும், கதர் ரவிக்கையும் அணிந்து ஒரு நகைகூட இல்லாமல், ஹாலுக்குப் புறப் பட்டாள். ஒவ்வொரு நாள் மாலையும் ராஜுவை ரகசியமாகச் சந்திக்கப் போகும் போதெல்லாம் சர்வ அலங் காரங்களையும் செய்து கொண்டுதான் செல்வாள்.

ராஜு ஒருநாள் அவளிடம், ''உன் திவ்ய அலங்காரத்தைப் பார்த்தால் எனக்கு என் யோக்யதையில் நம் பிக்கை போய்விடுகிறது விஜயா,'' என்றான்.

அவள் குறும்பாகச் சிரித்தபடி, ''கவலைப்படாதீங்க. உங்கள் யோக்ய தையைச் சரிசமமாகச் செய்து விடு கிறேன்,'' என்று தன்னுடைய நெக் லஸை எடுத்து அவன் கழுத்தில் போட் டாள்.

பிறகு செயினைப் போட்டாள். வளையல்களைப் போடப் போகும் போது ராஜுவின் கை பருத்து இருந்ததால், அதை அவளால் போட முடியவில்லை. இருவரும் சிரித்தார்கள். அந்த நிலையில் அவளடைந்த இன்பத்தில் அவள் சுய ஞாபகத்தையே இழந்தாள்.

அந்த நினைவு அவளை வந்து தாக் கியது. ''இந்த வெங்கடபதியின் மக னுக்கு ஒரு அலங்காரமும் இல்லாமல் போனால்தான் அவன் என்னை வெறுத்து விலக்குவான்'' என் நினைத்தபடி ஹா லுள் வந்தாள். வெள்ளைக் கத ராடை அணிந்து, நகைகள் எதுவும் இல்லாமல் நுழைந்த விஜயாவைப் பார்த்த அவள் தந்தை அதிர்ச்சி யடைந்தார்.

தாம் தம் மகளுக்கு ஒருநகை கூடப் போடவில்லை என்று தவறாக நினைத்து விடுவார்களோ என்ற பயத்தால், ''இரண்டு லட்ச ரூபாய்க்கு நகை பண்ணி யிருக்கேன். என்ன விஜயா, தினமும் மாலையிலே வெளியே போறப்போ எல்லா நகையையும் போட்டுட்டுப் போவே. இன்னிக்குப் பார்த்து இப்படி வெறுங் கழுத்து, காதோட வந்து நிக்கறே?'' என்றார்.

தந்தை மகளைத் தன் முன்னால் கண்டிப்பது,—விஜயாவின் தந்தையின் தாக் குறைவைக் காட்டுகிறது என்று நினைத்தார் வெங்கடபதி. ஆனால் ராஜு உடனே சமாளித்தான். ''ஒருவேளை பெண்ணுக்கு எளிமையில்தான் விருப் பமோ என்னவோ. பணக்கார வீட்டுப் பெண்களுக்கு ஏழ்மையை ஆசைப்படு வது சகஜம்,'' என்று கேலியாகக் கூறி னான்.

அதுவரை குழப்பத்தால் தரையைப் பார்த்துக் கொண்டிருந்த விஜயா ராஜுவின் குரல் கேட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தாள். வெங்கடபதியின் அருகில் சிரித்தபடியே தன்னையே ஒருவிதக் கேலியோடு பார்த்துக் கொண்டிருக்கும் ராஜுவைக் கவனித்தாள்.

அவளுக்கு அவன் மீது கோபமும் ஆத்திரமும் வந்தன. தன் உள்ளத்தைக் கவர்ந்து, உறவு ஏற்படுத்திக்கொண்ட ராஜு அவனுடைய உண்மை அந் தஸ்தை மறைத்து விட்டான் என் பதை நினைக்கவும் அவன் ஏமாற்றுக் காரன் என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவளைப் பணக்காரனுக்க அவள் அவனிடம் திட்டங்கள் வகுத்துக் கொண்டிருக்கும்போது அவன் உண்மை யிலேயே மனத்திற்குள் கேலியாகச் சிரித்துக் கொண்டிருந்திருக்க வேண் டும். அவன் ஓங்கிக் கன்னத்தில் அறைந்திருந்தால் கூட, விஜயாவுக்கு இவ்வளவு வேதனை தோன்றியிராது.

விஜயாவின் ஆணவம் நிறைந்த மனத்திற்கு அங்கு நிற்கவேமுடியவில்லை. ராஜுவைப் பார்க்கவும் பிடிக்கவில்லை. கண்களில் நீர் ததும்ப, அங்கிருந்து தன்னையும் மறந்து ஓடினாள். வெங்கட பதிக்கும், விஜயாவின் தந்தைக்கும் புரியவில்லை. ஆனால் ராஜுவுக்கு மட்டும் சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

(தொடரும்)



# மின்னல், மழை, மோகனா

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 13

விஜயாவின் தந்தைக்கு, திடீரென்று விஜயா ஹாலை விட்டு ஓடியது பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. வெங்கடபதியை அவமானப்படுத்துவதைப்போல் — அதுவும் வேண்டுமென்றே அவமானப்படுத்துவதுபோல் இருந்தது அந்நிகழ்ச்சி.

அவர் எதிர்காலத்தில் வெங்கடபதியின் தயவை எதிர்பார்த்திருந்தார். சமயத்தில், லட்சக்கணக்கில் கடனுதவிக் காப்பாற்றியவர் வெங்கடபதி. அவரை வீட்டுக்கு அழைத்து இப்படி அவமானப்படுத்தும்படியாய் விட்டதே, அவருக்கு என்ன சமாதானம் சொல்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தார் விஜயாவின் தந்தை. வெங்கடபதியும் திகைத்துப் போயிருந்தார். அவர் முகம் அடக்கப்பட்ட கோபத்தால் சிவந்துபோய் இருந்தது. தன்னுடைய ஒரே பிள்ளைக்கு இம்மாதிரியான கர்வம் பிடித்த பெண்ணையா கட்டி வைப்பது. இவளோடு ராஜு எப்படி வாழ்க்கை நடத்துவான் என்று யோசிக்க ஆரம்பித்தார் வெங்கடபதி.

நிகழ்ந்துவிட்டதை இனித் தடுக்க முடியாது, நிகழ இருப்பதையாவது இனித் தடுப்போம் என்ற முடிவுக்கு வந்தார். விஜயாவின் தந்தை குருசாமியை ஒரு பொருட்டாகவே நினைக்காமல், அமர்ந்திருந்த சோபாவிலிருந்து எழுந்தார். "ராஜு, போகலாம் வா," என்று அழைத்தார்.

விஜயா தன்னைப் பார்த்ததும் அதிர்ச்சியடைவாள், குழம்பிப் போவாள் என்பதை ராஜு எதிர்பார்த்தான். ஆனால் இப்படி மிரண்டு ஓடி விடுவாள் என்று எதிர்பார்க்கவில்லை. 'இவ்வளவு குழப்பத்துக்கும் காரணம் நான்தான். நீ நினைப்பதுபோல் நான் ஏழையல்ல. பணக்காரன்' என்பதைத் தனிமையில் விஜயாவிடம் விளக்கியிருந்தால், பெரியவர்கள் முன்னால் அவள் இப்படி நடந்து கொண்டிருக்கமாட்டாள் அல்லவா' என்று நினைத்தான்.

வெங்கடபதி எழுந்ததும், குருசாமி

கெஞ்ச ஆரம்பித்தார். ''வெங்கடபதி, நீங்க உக்காருங்க. விஜயா நல்ல பொண்ணுதான். அவ ஏன் இப்படி நடந்துக்கிட்டான்னு எனக்கே புரியல்லே. தயவுசெய்து பெரிய மனது பண்ணி, நீங்க உக்காருங்க,'' என்றார்.

ஆனால் வெங்கடபதி, குருசாமியின் வார்த்தைகளைக் காது கொடுத்தே கேட்கவில்லை. நிமிர்ந்த தலையோடு குருசாமியை ஒரு புழுவென மதித்து, ஹாலுக்கு வெளிப்புறம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

குருசாமி மேலும் தொடர்ந்து மன்றாடியபடி, வெங்கடபதியைத் தொடர்ந்தார்.

வெங்கடபதி விர்ரென்று ஆத்திரத்தோடு திரும்பி, ''குருசாமி! நீ ஒரு மனுஷன் மாதிரி! நீ வியாபாரத்தை எப்படிப் புரியாமே நடத்தறியோ, அப்படியே உன் பெண்ணையும் புரியாமே வளர்த்திருக்கே!'' என்று வெம்மையான பதிலைச் சொல்லிவிட்டு, வெளியேறத் திரும்பினார்.

அந்த சமயத்தில், ''அப்பா! அப்பா!'' என்று ராஜுவின் குரல்கேட்டு நின்றார். ''அப்பா! கொஞ்சம் பொறுங்கப்பா. எனக்கு விஜயாவைப் பிடிச்சிருக்கப்பா. அவள் வெளியே போனதுக்குத் தக்க காரணம் இருக்கப்பா,'' என்று ராஜு சொல்லிவிட்டு, யாருடைய பதிலையும் எதிர்பார்க்காமல், குருசாமியின் வீட்டின் உட்புறம் சென்றான்.

விஜயாவின் நடத்தை கொடுத்த அதிர்ச்சியை விட மகன் ராஜுவின் பதில் இன்னும் அதிக அதிர்ச்சியைக் கொடுத்தது வெங்கடபதிக்கு. அவர் மனிதர்களைத் தன் காரியங்களுக்காக உபயோகப்படுத்தியிருக்கிறாரே அல்லாமல் யாரையும் நேசித்தது இல்லை. பணம் உள்ளவனைப் பயன்படுத்து, சாமர்த்திய முள்ளவன் சாமர்த்தியத்தை உபயோகப்படுத்து. ஏமாறத் தயாராக இருப்பவனை ஏமாற்று, தம் குறிக்கோள் வெற்றி என்று வாழ்ந்தவர் வெங்கடபதி. அவர் யாரிடமும் உள்ளம் பூராவையும் கொடுக்க முடியாதல்லவா?

அவருடைய இரும்புக் கொள்கைக்கும் விதிவிலக்காக இருந்தவர்கள் இருவர். அவரையுமறியாமல் அவர் மனம் ராஜுவிடம் இளகியது. அதே போல் அவரது சகோதரன் அழகிரியிடமும் இளகியது. தம்பி அழகிரி பால்யத்தில் எப்படிப் புரியாத ஒருவனாக இருந்தானோ அதேபோல் மகனும் சில விஷயங்களில் வெங்கடபதிக்குப் புரியாதவனாகவே இருந்தான். அவமானப் படுத்திய அந்தப் பெண்ணைத் தேடி வீட்டினுள் அவன் செல்வது அவருக்குக் கொஞ்சமும் புரியவில்லை. அப்படியே அசைவற்று அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்துவிட்டார்.

ராஜு, விஜயாவின் சார்பில் பேசியது, குருசாமிக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்ததாயினும், அவர் அதைத் தன் பக்க பலமாக உபயோகப் படுத்தி, வெங்கடபதியைத் திருப்திப் படுத்த ஏதேதோ பேச முயன்றார்

ஆனால் வெங்கடபதி குருசாமியின் முகத்தைக் கூடப் பார்க்காமல் இறுமாந்து உட்கார்ந்திருந்தார்.

வீட்டின் உட்புறம் சென்ற ராஜு, நேராக விஜயாவின் அறைக்குள் சென்றான். அங்கு அவள் படுக்கையில் சாய்ந்துகொண்டு, வேதனையோடு இருந்தாள். எதிரே அவள் அத்தை. அவளைக் கண்டித்துக் கொண்டிருந்தாள். ''தாயில்லாத பெண் நீ. ஒரு நல்ல இடத்து சம்பந்தம் வர்றப்போ இப்படியா நடந்துக்கறது? முட்டாள் பெண்ணே. உன்னைச் சொல்லி என்ன பண்றது? உங்கப்பன் உன்னைக் கண்டிப்பு இல்லாம வளர்த்துட்டான்,'' என்று சொல்லிக் கொண்டிருந்தவள், மாப்பிள்ளையாகப் போகும் ராஜுவே அறையின் வாயிலில் நிற்பதைப்பார்த்துக் குழம்பிப் போனாள்.

அவன் பார்வையிலிருந்து அவன் விஜயாவோடு ஏதோ பேச வேண்டு மென்று நினைக்கிறான் என்பதை அத்தையம்மாள் புரிந்து கொண்டாள். உடனே மகிழ்ச்சியோடு வெளியே சென்றாள்.

தனிமையில் விடப்பட்ட ராஜு படுக்கையை நெருங்கினான். தலைகுனிந்தபடி இருந்த விஜயாவை அணைத்தபடி அவள் முகத்தைத் திருப்பினான். நீர் நிறைந்த விஜயாவின் விழிகள் அவன் முகத்தைப் பார்த்தன. ''என்னை மன்

**எது மேலானது?**

துருப்பிடித்துச் சாவதைவிட ஓட்டி ஓடும் களைப்படைந்து சாகலாம்

—பிஷப் கம்பர்லேண்ட்

னித்து விடு விஜயா. நான் சைக்கிள் ஷாப்காரன் மகன் என்று விளையாட்டாகச் சொன்னேன். அப்புறம் உன் காதலின் உறுதியைச் சோதிக்க வேண்டும் என்று ஏழையாகவே நடித்தேன்.

உன் உள்ளத்தில் இரண்டு ஆசைகள் போராடியபடி இருந்தன. பணத்தாசை ஒன்று, என்மீதுள்ள காதல் மற்றொன்று. எது வெல்லப் போகிறது என்று தெரிந்து கொள்ளவே இந்த நாடகம் ஆடினேன். நீ எந்த அலங்காரமும் இல்லாமல் ஹாலுக்கு வந்தது, உன் உண்மையான அன்பு இந்த ராஜு-விடம்தான், செல்வந்தர் வெங்கடபதியின் செல்வத்திடம் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். என்னை மன்னிப்பாயா விஜயா?'' என்று கேட்டான்.



விஜயாவுக்குக் கோபம், இன்பம், நெகிழ்ச்சி—இப் [illegible] உணர்ச்சிகள் சேர்ந்து தோன்ற அவளைத் திக்கு முக்காடச் செய்தன. அவனுக்குப் பதில் சொல்ல வார்த்தைகள் தோன்றவில்லை. முகத்தை ராஜுவின் மார்பில் புதைத்தபடி, விக்கி விக்கி அழவே தோன்றியது.

அவன் கை, அவள் முதுகின் மீது மெள்ள நகர்ந்தபடி இருந்தது.

அந்தக் காட்சிதான் இப்போது சக்கர நாற்காலியில் உட்கார்ந்து, கால் இழந்து உட்கார்ந்திருக்கும் விஜயாவின் மனத்திரையில் தோன்றியது. 'அன்று என்னிடம் எவ்வளவு அன்பாகப் பேசினார். தந்தையின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் என்னை என் அறைக்குத் தேடி வந்து, தேறுதல் வார்த்தைகள் சொல்லி அணைத்தவர் அல்லவா? இன்றும் அவர் என்னிடம் அன்போடுதான் பழகுகிறார். ஆனால் அன்றைக்கு இருந்த ஆர்வம், இன்று என் மீது இருக்குமா?' என்று சந்தேகத்தோடு ராஜுவின் மார்பைப் பார்த்தாள்.

'இரும்பு போன்ற பரந்து கிடக்கும் அதே மார்பு. அந்த மார்பு மாறவில்லை. அன்று போல் அப்படியேதான் இருக்கிறது. அதற்குள் இருக்கும் இதயம் மாறிவிட்டால்? அந்த இதயத்து அன்பு மாறிவிட்டால்?' என்ற பயம் விஜயாவுக்கு வந்தது.

'இளமை மாறாமல் வலிமை குன்றாமல் இருக்கும் கணவனுக்கு, நம்மால் என்ன இன்பம் கொடுக்க முடிகிறது? நான் ஒரு சுமையாக அல்லவா இருக்கிறேன்,' என்று தன்மீதே ஆத்திரப்பட்டுக்கொண்டாள். உணர்விழந்து கிடக்கும் கால்களைப் பார்த்தாள். அவளுக்கு அவள் மீதுள்ள ஆத்திரம் அதிகமாயிற்று. 'அந்தப் பாழாய்ப் போன தலைப்பிரசவம் தானே, நன்றாக நடந்து கொண்டிருந்த என் கால்களை இப்படி ஆக்கிவிட்டது? அந்தக் காலத்தில் எவ்வளவு வலிமை மிகுந்த கால்களாக இருந்தன! இப்போது எப்படி ஆகிவிட்டன! அன்றெல்லாம் அவருக்குத்தான் என்மீது எவ்வளவு கவர்ச்சி! என் நடையைக் கண்டு எப்படி மயங்கிப் நிற்பார்!' என்று எண்ணினாள்.

அதே சமயம் நாற்காலியில் அமர்ந்தவாறு புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கும் ராஜுவைக் கவனித்தாள். அவள் அவன் அருகில் வந்த பின்பும் அந்தப் புஸ்தகத்தையே படித்துக் கொண்டு இருப்பதையும், தன்னைத் திரும்பிக்கூடப் பாராமல் இருப்பதையும் கண்டு, அவனது அந்தச் செய்கை அவளுக்கு மன்னிக்க முடியாத குற்றமாகத் தோன்றியது.

அவளுக்குத் தன் கால்மீது இருந்த கோபம், புஸ்தகத்தின் மீது சென்றது. நொண்டியான பின்பு உலகில் அவள் ஓடி நகர்ந்து வாழ முடியவில்லையாகையால், சதா உணர்ச்சிகளிலேயே வாழ ஆரம்பித்தாள். உணர்ச்சிகள் சதா மாறிச் சுழலும் தன்மையை உடையன. இதனால் அவள் வெறுப்பு ஒவ்வொரு பொருளாக மாறி முடிவில் ராஜுவின் மீதே வந்து நிற்கும்.

'ராஜுவின் மீதுள்ள காதல் தானே என்னைத் தாயாக்கியது? தாய்மைதானே முடிவில் என்னைக் கால் இழக்கச் செய்தது?' என்று தர்க்க ரீதியாக நினைப்பாள். பொருமுவாள். ராஜுவின்மீது சுடுவார்த்தைகளைத் தாக்குவாள். ஆனால் ராஜுவுக்கு விஜயா என்ன சொன்னாலும் கோபம் வருவது கிடையாது.

காரணம், விஜயாவின் வாதத்தை அவன் ஒப்புக் கொண்டான். தானே விஜயாவின் சக்கர நாற்காலி வாழ்வுக்குக் காரணம் என்று நினைத்து அவன் புழுங்கியதால், அவன் விஜயாவின் அர்த்தமில்லாத கோபத்தையெல்லாம்



"நம்ம நிர்மலாவுக்கு, உங்க இனிஷியலை எடுத்துவிட்டு, எதிர்வீட்டு ரமேஷின் இனிஷியலைச் சேர்த்துக் கொள்ளணும்னு ஆசையாக இருக்காம்."

பொறுத்துக் கொண்டான்.

அவள் அமைதியாக, இன்பமாக வாழ்வதற்காக அவன் எதையும் துறக்கத் தயாராக இருந்தான். தான் ஒரு குற்றவாளி, குற்றம் இழைக்கப்பட்டவள் விஜயா என்பது அவன் எண்ணம். அவள் கோபம் எல்லை மீறும்போது அதைப் பொறுத்துக் கொள்வதே சரி என்று நினைத்தான்.

பொதுவாக, அசாதாரண தேக வலிமை உள்ளவர்களுக்கு உள்ள பொறுமை அவனிடமிருந்தது. விஜயாவின் மனம் கோணாமல் நடப்பதே தன்னுடைய வாழ்வின் கடமையாக ராஜு அமைத்துக் கொண்டான்.

விஜயா கால் இழக்காமல் இருந்திருந்தால், ஒரு வேளை அவள் ராஜுவை இவ்வளவு தூரம் ஆளமுடியாமல் போயிருக்கலாம். நொண்டியானதால் அவள் ஆளும் சக்தி அதிகமாயிற்று. அவளுடைய ஒவ்வொரு ஆசையும் கட்டளையாகவே நிறைவேற்றப்பட்டது. அந்த சாந்தி வில்லாவில் வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் முதலியோர் ராஜுவின் கட்டளையை மீறத் துணிந்தாலும் துணிவார்கள், ஆனால் விஜயாவின் கோபத்துக்கு ஆளாகப் பயப்படுவார்கள்.

''என்ன அவ்வளவு படிப்பிலே சுவாரஸ்யம்! அது என்ன புத்தகம்?'' என்று எரிச்சலுடன் கேட்டாள். அப்போதுதான் ராஜு திரும்பிப் பார்த்தான் விஜயாவின் முகத்தை.

அதில் தோன்றிய கோபத்தை அவன் உடனே புரிந்து கொண்டான். ''ஒன்றுமில்லை. ஒரு ஆங்கிலப் புத்தகம்,'' என்று சொல்லிவிட்டு அந்தப் புஸ்தகத்தை அவள் பார்த்து விடுவாளோ என்று தூரத்தில் உள்ள மேஜையில் கொண்டுபோய் வைத்து விட்டு வந்தான். ''உனக்குப் பழ ரஸம் கொண்டு வரட்டுமா? இல்லை, நாற்காலியை வெளி வராந்தாவுக்குக் கொண்டு செல்லட்டுமா?'' என்று கனிவோடு கேட்டான்.

விஜயாவின் கவனம் பூராவும் அந்தப் புஸ்தகத்திலேயே இருந்தது. ''அந்தப் புஸ்தகத்தின் பெயர் என்ன?'' என்று தொடர்ந்து கேட்டாள்.

ராஜு ஒரு விநாடி திகைத்தான். ''ஒன்றுமில்லை விஜயா. அந்தப் புஸ்தகம் ஒரே போர். ஏதோ 'லேடி சாட்டர்லீஸ் லவர்'னு பேரு,'' என்று சொல்லி நிறுத்தினான்.

''சாட்டர்லி சீமாட்டியின் காதலன்! பேரு அழகா இருக்கே! 'காதல் நாவலா?'' என்று ஆர்வத்தோடு வேண்டுமென்றே கேட்டாள்.

விஜயாவின் ஆர்வத்துக்குக் காரணம் புஸ்தகத்திலுள்ள ஆசையல்ல. 'ராஜு ஏன் அந்தப் புஸ்தகத்தைப் பற்றி அக்கறையில்லாதவனைப் போல் நடிக்க வேண்டும்? அவ்வளவு கவனம் செலுத்திப் படித்த அந்தப் புஸ்தகம் எப்படி போராக இருக்க முடியும்? இதன் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்,' என்ற குதர்க்க நோக்கமே அவள் ஆர்வத்துக்குக் கா ணம்.

''ஒரு விதமான காதல் நாவல்,'' என்று சொல்லி விட்டு வாக்கியத்தை முடிக்காமல் நின்றான்.

'சரி. இனிமேல் புஸ்தகத்தைப் பற்றிய விசாரணையைத் தொடர வேண்டாம்,' என்று விஜயா நினைத்து அதோடு நிறுத்திவிட்டு, ''என்னைத் தூக்கிப் படுக்கையில் விடுங்கள்,'' என்றாள்.

ராஜு அவளைப் படுக்கையில் தூக்கி வைத்தான்.

''ஏன், நான் கனமாக இருக்கிறேனா? என்னைத் தூக்க முடியவில்லையா?'' என்று கேட்டாள். ''இல்லை விஜயா... இல்லை... வந்து,'' என்று தன் எண்ணங்களைக் கூற முடியாமல் நின்றான். ராஜுவின் குழப்பம் எப்போதுமே விஜயாவுக்கு இன்பம் அளிக்கும்.

அவனை இன்னும் குழப்பி அவனைத் திண்டாட வைப்பதில் அவளுக்கு ஓர் ஆசை. ராஜுவின் கைகளைப் பற்றினாள்.

''வேண்டாம் விஜயா. வேண்டாம். என்னை மிருகம் ஆக்கிவிடாதே. டாக்டர் சொன்னதை நீ மறக்கக் கூடாது விஜயா,'' என்றான்.

''எத்தனை நாள்தான் நீங்க இப்படி உணர்ச்சிகளைத் துறந்து தவம் இருக்க முடியும்? உங்களுக்கு ஒரு சுமையா உபயோகமில்லாமல் நான் ஏன் உயிரோடிருக்கணும்?'' என்று கண்ணீரோடு சொன்னாள்.

''நீ எனக்கு சுமையல்ல விஜயா. எனக்குத் தேகத்திலே பலம் இருக்கிற மாதிரி, மனசிலேயும் பலம் இருக்கு. பொறுத்திருப்போம். என் மிருக இச்சையினாலே உனக்குக் கால் போச்சு. அதன் காரணமாய் உனக்கு உயிரும் போயிடக்கூடாது விஜயா,'' என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினான். அவன் போனதும் விஜயா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 15

ராஜு குதிரையைத் தன் வீட்டு லாயத்தில் கட்டியபோது குதிரையின் உடலும் வியர்த்திருந்தது. அவன் உடலும் வியர்த்துக் களைத்திருந்தது. ஆனால் அவன் மனத்தில் ஓர் அமைதி இருந்தது. அவன் மனத்தில் தோன்றிய ஆசை என்ற நெருப்பு அணைந்து அவன் மறுபடியும் மென்மையான ஓர் ஆடவனாக வீட்டினுள் நுழைந்தான். குளிக்கும் அறைக்குச் சென்று குளித்துவிட்டு, ஒரு சில்க் பனியன் அணிந்து ஹாலுக்கு வந்தான். அதே சமயத்தில் கௌரி, படிக்கும் அறையிலிருந்து கையில் புத்தகத்துடன் ஹாலுக்கு வந்தாள்.

கௌரியைப் பார்த்ததும் அவனுக்கு அவள்மீது ஒரு பச்சாத்தாபம் ஏற்பட்டது. காலிழந்து படுத்த படுக்கையான மனைவி, பலவீனமான இருதயம் படைத்த மகள். அந்த வீட்டிலே மூன்று பேர். அதில் இருவருக்கு உடல்நிலை சரியில்லை. திரண்ட செல்வம் இருந்தும் அதைப் பூரணமாக அனுபவிக்க முடியாத ஒரு நிலை.

கௌரி தந்தையைப் பார்த்ததும், "அப்பா, அப்பா! மருந்து கொடுங்கப்பா," என்று சொல்லி அவனை நோக்கி வந்தாள். ராஜு கௌரியைப் பார்த்து ஒருமுறை புன்முறுவல் செய்துவிட்டு ஹாலில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த அலமாரியிலிருந்து ஒரு மருந்துப் பாட்டிலை எடுத்துத் திறந்து அதிலிருந்து சிறு மாத்திரைகளை எடுத்து அதில் ஒன்றைக் கௌரிக்குக் கொடுத்தான். கௌரி மாத்திரையை விழுங்கிவிட்டுத் தண்ணீரைக் குடித்தாள்.

"ஏம்பா நீங்க மருந்தே சாப்பிடறதில்லே? நானும் அம்மாவும் மட்டும் மருந்து சாப்பிட்டுக் கொண்டே இருக்கோம்," என்று ராஜுவைப் பார்த்துக் கேட்டாள்.

"அம்மாவுக்கும் உனக்கும் நோய் இருக்கு. அதனாலே நீங்க மருந்து சாப்பிடணும். எனக்கு நோய் இல்லே, அதனாலே நான் மருந்து சாப்பிடறதில்லே," என்று சொல்லிவிட்டு சோபாவில் உட்கார்ந்து கொண்டான் ராஜு.

கௌரி சோபாவில் ஏறி அவன் அருகில் உட்கார்ந்தபடி அவனைப் பார்த்து, "ஏம்பா உங்களுக்கு மட்டும் நோயில்லே?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று ராஜுவுக்குத் தெரிய வில்லை. சிரித்தபடி பேச்சை மாற்ற நினைத்தான்.

''கௌரி, உனக்குப் பள்ளிக்கூடம் பிடிச்சிருக்கா? அது என்ன புஸ்தகம்?'' என்று சொல்லி, புஸ்தகத்தைக் குழந் தையின் கையிலிருந்து வாங்கினான். கௌரி, தன் தந்தை தான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே என்பதை மறந்துவிட்டாள். அவள் கவனம் புஸ்தகத்தில் சென்றது.

''இப்போல்லாம் நானே படிப்பேன். கேட்கிறீங்களா?'' என்று சொல்லி விட்டு, புஸ்தகத்தை வாங்கி ஒரு பக் கத்தைத் திறந்து படிக்க ஆரம்பித் தாள். ''தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை, தந்தை சொல்மிக்கதோர் மந் திரமில்லை. நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்,'' என்று படித்ததும், கௌரி படிப்பதை நிறுத்திவிட்டுத் தந் தையைப் பார்த்தாள். கௌரியின் கண் களில் பரிதாப உணர்ச்சி தெரிந்தது.

''அப்போ எனக்கும் அம்மாவுக் கும் செல்வம் இல்லையாப்பா? நாங்க ஏழைங்க தானே?'' என்று கேட் டாள்.

ராஜு, ''அதெல்லாம் ஒன்னுமில்லே. உனக்கு சீக்கிரமே உடம்பு சரியாப் போயிடும்,'' என்றான்.

''அப்போ அம்மாவுக்கு மட்டும் சரியாப் போகா தா? அம்மா எப் பவுமே நடக்க மாட்டாளாப்பா?''

''கௌரி! அம்மாவுக்கும் சரியாப் போயிடும். அதுக்குத்தானே டாக்டர் மருந்து கொடுக்கிறார்?'' என்றான் ராஜு.

கௌரி ஒரு விநாடி யோசித்தாள். பிறகு திடீரென்று ஞானோதயம் ஆனவள் போல், ''மருந்து சாப்பிடறதினாலே தானே நோயிருக்கு? நீங்க மருந்து சாப் பிடறதில்லே. உங்களுக்கு நோயில்லே. அதனாலே நானும் இனிமேல் மருந்து சாப்பிடமாட்டேன். எனக்கும் நோயிருக் காது,'' என்று சொன்னாள்.

தன் குழந்தையின் நூதனமான தர்க்க வாதத்தைக் கேட்க ராஜுவுக்குச் சிரிப்பு வந்தது. குழந்தையை எடுத்து அணைத் துக்கொண்டு முத்தமிட்டான். அப் போது கௌரி தன்னுடைய சிறிய கை களால் தந்தையின் புஜங்களை அன்போடு தடவினாள்.

''அப்பா! உங்க கை பாறாங் கல்லு மாதிரி இருக்கப்பா,





"பாவம்! உன் அத்தானுக்கு இரண்டு நாளாக ரொம்ப வேலை அதிகம் போலிருக்கு."

"அதெப்படி உனக்குத் தெரிந்தது?"

"இரண்டு நாளும் நீ ஒரே மாடல் கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறாயே, மாற்றாமல்?"

---

உங்களுக்கு நிறையப் பலமிருக்கு," என்று சொல்லிவிட்டுத் தனது கையைத் தொட்டுப் பார்த்தாள். "எனக்கு அப்படி இல்லையே. ஏம்ப்பா?" என்று கேட்டாள்.

"நீ இப்ப சின்னவ. அப்படித்தான் இருக்கும். பெரியவளானால் பலசாலியாகி விடுவாய்," என்றான் ராஜு. அதே சமயத்தில் மாடியிலிருந்து மின்சார மணி ஒலித்தது. விட்டு விட்டு இருமுறை ஒலித்தது.

மின்சார மணி விட்டு விட்டு இருமுறை ஒலித்தால் விஜயா தன்னைக் கூப்பிடுகிறாள் என்பது ராஜுவுக்குத் தெரியும். தொடர்ந்து ஒரு முறை ஒலித்தால் வேலைக்காரர்களைக் கூப்பிடுகிறாள் என்று பொருள். ராஜு வேகமாக மாடிக்குப் போனான்.

மாடி அறையில் விஜயா படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் குழம்பி, கண்கள் சிவந்திருந்தன. அவள் மூச்சு வேகமாக வந்து போய்க் கொண்டிருந்தது. அவள் கை மார்பைப் பிடித்தபடி இருந்தது.

ராஜு ஓடிவந்து கவலையோடு பதறியபடி "என்ன விஜயா? என்ன விஜயா?" என்றான்.

விஜயா மூச்சுத் திணறியபடி "திடீர்னு நெஞ்சு வலிக்குது. மூச்சுத் திணறுது," என்று சொல்லிவிட்டு ராஜுவின்மேல் சாய்ந்தாள்.

ராஜு நிதானமாக அவளைத் தாங்கியபடியே, படுக்கை அருகில் வைக்கப்பட்டிருக்கும் ஷெல்பிலிருந்து ஒரு பாட்டிலை எடுத்து அதிலிருந்து மருந்தை அவுன்ஸ் கிளாஸில் ஊற்றி விஜயாவுக்குக் கொடுத்தான். அதை வாங்கிக் குடித்ததும் விஜயாவின் மூச்சுத் திணறல் சற்றுக் குறைந்தது. தன் கைக்குட்டையால் விஜயாவின் நெற்றியைத் துடைத்தான்.

விஜயா பொறுமை இழந்தவளாய், "உங்களுக்கென்ன கவலை? இந்த வலி வந்தால் நரக வேதனையா இருக்கு. குதிரையை எடுத்துக்கொண்டு நீங்க பாட்டுக்கு எங்கோ போயிட்டீங்களே," என்றாள்.

"கொஞ்சம் பொறுமையா இரு விஜயா," என்று சொல்லிவிட்டு, தலையணையில் அவளைப் படுக்க விட்டான் ராஜு.

"பொறுமையாயிரு என்று சொல்வது சுலபம். என் வலி எனக்குத்தானே தெரியும்!" என்று சொல்லிவிட்டு அவனுடைய பலம் நிறைந்த, நோய் நொடி இல்லாத உடலைப் பார்த்தாள் விஜயா. அவன் உடலைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவள் மனத்தில் இருந்த ஒரு பகுதி — அசுரப் பகுதி— எப்படியாவது அவனை வருந்தச் செய்ய வேண்டும் என்று நினைத்தது.

"என்னை இப்படி நாற்காலியோடு நாற்காலியாக ஆக்கினதே நீங்கள் தான். இந்தப் பாழும் பிரசவம் இல்லையென்றால், கௌரி மட்டும் எனக்குப் பிறக்கவில்லையென்றால் நான் எவ்வளவோ நன்றாய் எல்லாரையும்போல நடமாடிக் கொண்டிருப்பேன்," என்று கூச்சலிட்டபடி சொன்னாள்.

இதை விஜயா ஞாபகப்படுத்தும் போதெல்லாம் ராஜுவுக்குத் தன்மீதே கோபம் வரும். வேதனையும்வரும். ஆனால் ஆண்மையும் வலிமையும் நிறைந்தவனானதால் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வான். தன்னுள் எழும் ஆத்திரத்தை வெளிக்காட்ட மாட்டான்.

"கௌரி மட்டும் எனக்குப் பிறக்காவிட்டால் நான் எவ்வளவோ நல்லா எல்லாரையும்போல நடமாடிக் கொண்டிருப்பேன்," என்ற வார்த்தைகளைச் சொன்னபோதே, கௌரி அறையில் நுழைந்ததையும், தாயின் சுடுவார்த்தைகளைக் கேட்டுக் கலங்கி நின்றதையும் முதலில் தாயும் கவனிக்கவில்லை, தந்தையும் கவனிக்கவில்லை.

விஜயா திரும்பியதும் அறையின் கதவருகில் தன் மகள் அழுதுகொண்டு

நிற்பதைக் கவனித்தாள். தாம் கூச்சலிட்டது குழந்தையின் காதுகளில் விழுந்துவிட்டது என்பதை உணர்ந்தாள். அவளுக்கு ராஜுவின்மீது இருந்த ஆத்திரம் தன்மீதே திரும்பியது. தன்னைத்தானே ஒருவர் திட்டிக்கொள்ள முடியாதல்லவா? ஆகையால் பற்களை நரநரவென்று கடித்தாள்.

குழந்தையின் பக்கம் திரும்பிய விஜயா, "கௌரி! மாடிக்கு நீயாகவா வந்தாய்? படிக்கட்டிலே நீயேவா ஏறி வந்தே?" என்று கேட்டாள்.

"ஆமாம்மா. நான்தான் ஏறிவந்தேன்." என்றாள் கௌரி பயத்தோடு.

உடனே விஜயா கணவன் பக்கம் திரும்பினாள்.- "பார்த்தீர்களா, பார்த்தீர்களா? அவளாகவே படிக்கட்டிலே ஏறி வந்திருக்காள். நீங்கள் இருந்தும் என்ன பிரயோசனம்? கௌரி படி ஏறக்கூடாதென்று டாக்டர் சொன்னதைப் பத்தி அவளுக்கும் அக்கறையில்லே, உங்களுக்கும் அக்கறையில்லே. அந்த மாதவன் எதற்கு வேலைக்கு இருக்கிறான்? அவனை உடனே வேலையை விட்டு நீக்குங்கள்!" என்று கூச்சலிட்டாள்.

தன் காரணமாக மாதவனுக்கு வேலை போய் விடுமோ என்று நினைத்த கௌரி, "நான் மாடிக்கு ஏறிவந்தது மாதவனுக்குத் தெரியாதும்மா. அவன் என்னுடைய கவுன் சட்டைகளைத் துவைக்கக் கிணற்றடிக்குப் போயிட்டாம்மா. நான் ஏறிவந்துட்டேன். எனக்கு ஒண்ணும் ஆகல்லியே?" என்றாள்.

விஜயா அமைதியாகச் சிந்தித்திருந்தால் குழந்தை சொல்வதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பாள். ஆனால் அவளுக்குப் புரிந்ததெல்லாம் 'குழந்தைகூடத் தன்னை எதிர்த்துப் பேசுகிறாள். தன்னை மதிக்கவில்லை,' என்பதுதான்.

"எதிர்த்து எதிர்த்துப் பேசறியா! இனிமேல் நீ படி ஏறக்கூடாது. ஓடக்கூடாது. தெரிஞ்சுக்கோ!" என்று புருவங்களை நெரித்தாள்.

கௌரிக்குக் கோபத்தினிருக்கும் தாயைப் பார்க்கவே வெறுப்பாயிருந்தது. "நான் ஓடினால் என்னம்மா? என் உயிர்தானே போகும்? போகட்டுமே! என்னால்தான் உன் கால் போச்சு. நான் செத்துப் போயிட்டால் உன் காலாவது சரியாயிடும் இல்லையா?" என்று திக்கித் திணறியபடி சொல்லிவிட்டு ஓடிவிட்டாள்.

விஜயா, "கௌரி! கௌரி! கௌரி!" என்று பலமுறை உணர்ச்சியோடு கூப்பிட்டதோ தந்தை அழைத்ததோ அவள் காதில் விழவில்லை.

முதன் முறையாகக் கௌரி இப்படிப் பேசியது இன்றுதான். விஜயாவுக்கு ஒரு பக்கம் ஆத்திரம். ஒரு பக்கம் துக்கம், ஒரு பக்கம் அழுகை! "என் குழந்தையே என்னை வெறுக்க ஆரம்பித்துவிட்டாள். நீங்களும் என்னை வெறுக்குறீங்க. ஆனால் அதை மூடிவைக்கிறீங்க. இந்த வீட்டிலே வேலை செய்கிறவங்க எல்லாம் பணத்துக்காக எனக்குப் பயந்து நடக்கிறாங்க. நான் எல்லாருக்குமே ஒரு சுமையாயிட்டேன். நான் ஏன் உயிரோடு இருக்கணும்? நான் ஏன் உயிரோட இருக்கணும்?" என்று சொல்லிவிட்டுத் தலையில் மடேர் மடேர் என்று அடித்துக் கொண்டாள்.

அவள் துக்கத்தைப் பார்த்து ராஜுவுக்கு வேதனையாக இருந்தது. அவளைத் தேற்றும் நோக்கத்தில் ஏதாவது சொன்னால் விஜயாவுக்கு மீண்டும்கோபம் வரும். விஜயா காலை இழந்ததிலிருந்து இம்மாதிரி சம்பவங்களை அவன் அடிக்கடி

செம்மங்குடியின

சமீபத்தில் மதுரையில் நடைபெற்றது திரு. செம்மங்குடி சினிவாசய்யரின் பாட்டுக் கச்சேரி. ஒரு பாட்டை அருமையாகப் பாடி முடித்தார் சபையோர்கள் மௌனமாக அதை ரசித்தனர். ஒரு சிலர் தான் கை தட்டி ரசிகத்தன்மையை வெளிப்படுத்தினர்.

செம்மங்குடி சிறிது வருத்தத்துடன் சொன்னார்: "இப்பொழுதெல்லாம் அப்ளாஸைக் கேட்டு வாங்க வேண்டியிருக்கிறது. 'அப்' வரை போகிறோம். கடைசியில் 'லாஸ்' தான்."

—ஏ. அல்லை

சந்தித்திருக்கிறான். ஆகையால் ராஜு வுக்கு விஜயாவைத் தேற்றும் பழக்கம் இருந்தது. வார்த்தைகள் அவள் கோபத்தைக் கிளறும். ஆகையால் இம்மாதிரி சமயங்களில் ராஜு அவளோடு அதிகம் பேசமாட்டான். அவளை நெருங்கி, முரட்டுக் குதிரையை அதன் சாரதி தட்டிக் கொடுப்பதுபோல் விஜயாவைத் தடவிக் கொடுப்பான். சமாதானப் படுத்துவான்.

அதே போல் இன்றும் ராஜு விஜயாவை நெருங்கி அவள் மோவாய்க் கட்டையைத் தூக்கிப் பிடித்து அவள் கண்களை கனிவோடு நோக்கியபடி, "விஜயா! நீ ஏன் உயிரோடு இருக்கணும், தெரியுமா? நான் உயிரோடு இருக்கணும் என்பதுக்காக நீ உயிரோடிருக்கணும்." என்றுசொல்லிவிட்டுப் படுக்கையில் உட்கார்ந்து அவளை அணைத்துக் கொண்டான்.

ராஜுவின் ஸ்பரிசம் பட்டதுமே விஜயா கோபம் தணிந்து அழ ஆரம்பித்தாள். அவன் கையை எடுத்துக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். "உங்கள் மாதிரி ஒரு பொறுமையான நல்ல புருஷன் உலகத்திலேயே இருக்க முடியாது. எவ்வளவோ பாபத்துக்கு நடுவிலே கொஞ்சம் புண்ணியம் பண்ணியிருக்கேன். அதனால்தான் உங்களைக் கணவனாய் அடைந்திருக்கிறேன். என்னை என்றைக்கும் மறக்கமாட்டீர்களே? என்னைக் கைவிடமாட்டீர்களே?" என்று சொல்லிவிட்டு அவனைக் கெஞ்சியபடி பார்த்தாள். ஒன்றும் சொல்லாமல் அவளைப் படுக்க வைத்துவிட்டு நகர்ந்தான் ராஜு.

கோபம், கூச்சல், அழுகை, மன்னிப்பு இந்த நிலைகளில் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு வெகு சீக்கிரத்தில் தாவும் விஜயாவிடம் வார்த்தைகள் பேசி என்ன பயன்? விஜயாவுக்கும் தனக்குமிடையே ஒரு காந்த வயல் இருப்பதையும் அதில் எப்போதும் கண்ணீர் மழை பெய்து கொண்டிருப்பதையும் ராஜு நன்கு உணர்ந்திருந்தான்.

பேசாமல் செல்லும் ராஜுவைப் பார்த்து, "என்ன, ஒன்றும் சொல்லாமல் போகிறீர்களே!" என்று கேட்டாள் விஜயா.

ராஜு திரும்பினான். அவன் முகத்தில் சோகப் புன்னகை படிந்தது. "நான் என்ன சொல்லணும் விஜயா? நான் உன்னை விரும்பறேன்னு ஒரு நாளைக்கு எவ்வளவு முறை சொல்லணும்?" என்றான்.



"இதென்ன வேடிக்கை? சங்கீதத்திற்கு முழுக்கு போட்டுட்டு, டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் போகப் போறீங்களா?"

"எந்த வீட்டிற்கு நான் டியூஷனுக்குப் போனாலும் பெண்ணுக்கு ஆர்மோனியம் வேண்டாம், டைப் அடிக்க சொல்லித் தாங்கோ என்கிறாங்களே!"

"பெண்மனம் உங்களுக்குப் புரியல்லியா? எவ்வளவு முறை ஒரு பெண்ணிடம் நீங்க அவளை விரும்பறேன்னு சொன்னாலும் அவளுக்கு அது அலுக்காது. அந்த வார்த்தைதானே எங்களுக்கு தெய்வீக சங்கீதம்." என்றாள் விஜயா.

ராஜு சிரித்துவிட்டு வெளியே சென்றான்.

மறுநாள் காலையில் கௌரி எழுந்ததுடன் மாதவன் கௌரியை விஜயாவிடம் அழைத்துச் சென்றான். விஜயா குழந்தையின் நன்மதிப்பைப் பெறும் நோக்கத்தோடு கௌரியின் அலங்காரத்தைத் தானே மேற்கொண்டாள். சக்கர நாற்காலியில் உட்கார்ந்தபடியே கௌரிக்குத் தலை சீவிப் பூ வைத்தாள். மலேயாவிலிருந்து வந்திருந்த சுவையான பிஸ்கோத்துகளைக் கொடுத்தாள். சிரித்தாள். இன்னும் என்ன என்னவோ செய்து பார்த்தாள்.

கௌரி அமைதியாக இருந்தாள். வெறுப்பையும் காட்டவில்லை, அன்பையும் காட்டவில்லை. கணவன் ராஜுவிடம் பலிக்கும் முயற்சிகள் தன் குழந்தையிடம் பலிக்கவில்லையே என்றதும் விஜயாவுக்கு ஏமாற்றமாயிருந்தது. ஒன்றும் பேசாமல் இருந்த கௌரி, "அம்மா! நான் பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டு வர்றேன் அம்மா," என்றாள்.

அவள் அந்த அறையைவிட்டு வெளியே போக விரும்புகிறாள் என்பது புரிந்தது

விஜயாவுக்கு. "நீ ரொம்ப அழுத்தக்காரிடி! நேத்திக்கு உன்னைத் திட்டினதுக்காக உனக்கு என் மேலே கோபம் தானே கௌரி?" என்று கேட்டாள்.

"இல்லேம்மா, எனக்குக் கோபம் இல்லேம்மா," என்றான் கௌரி.

விஜயா குழந்தையை அதோடு விடுவதாயில்லை. விஜயாவின் ஒரு பெரும் குறைபாடே அதுதான். எந்த உணர்ச்சியையும் எந்த அளவில் விட வேண்டுமென்று தெரியாது. எந்தப் பேச்சை எப்போது நிறுத்த வேண்டுமென்று தெரியாதவள்.

"கௌரி! நீ என் கண்ணில்லே? நீ ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே?" என்று தொடர்ந்து கேட்டாள்.

கௌரி கொஞ்சம் தயங்கினான். தாயைப் பயத்தோடு ஒருமுறை பார்த்துவிட்டு, "அம்மா உன்னை எனக்குப் புரியலேம்மா... ஆனால்... ஆனால் உன்னைப் பார்த்தால் இரக்கமா இருக்கம்மா," என்று சொல்லிவிட்டு, "மாதவா, என்னைக் கீழே தூக்கிட்டுப் போ," என்று மாதவனைப் பார்த்துச் சொன்னான். மாதவனும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கினான்.

குழந்தையின் பதிலைக் கேட்ட விஜயாவுக்கு விரல்கள் துடித்தன. பலவீனமான நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. ஆனால் அவள் கோபப்படவில்லை. கூச்சலிடவில்லை. 'நான் பெற்ற குழந்தை. என் உதிரத்தில் உதித்தவன். என்னைப் பார்த்துப் பரிதாபப்படும்படி ஆகிவிட்டதே!' என்று வருந்தினாள்.

இதே சமயத்தில் கீழ்ப்புற ஹாலின் சோபாவில் அமர்ந்தபடி ராஜு கௌரியின் பாடப் புத்தகத்தைப் புரட்டினான். அந்தப் புத்தகத்தில் அவன் கண்முன் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற வரிகள் எதிர்ப்பட்டன. ராஜு ஒரு பெருமூச்சுவிட்டான். கடந்த ஆறு வருடங்களாக, தன் மனைவிக்குச் சம்பளமில்லாத ஒரு ஆண் நர்ஸாகப் பணியாற்றும் விந்தையை நினைத்துப் பார்த்தான். எதிரே மாட்டியிருந்த தன்னுடைய தந்தையின் படத்தைப் பார்த்தான். 'ஒரே மகனுக்காக எவ்வளவு மில்கள், எவ்வளவு தோட்டங்கள், எவ்வளவு பங்களாக்கள்! குறுகிய காலத்தில் அவ்வளவும் தேடி வைத்து விட்டு இறந்து போனார். அவர் வைத்து விட்டுப் போன செல்வம் அவர் இறந்த பின் விருத்தியாகிக் கொண்டுதான் இருக்கிறது. பாங்குகளில் தொகை ஏறிக் கொண்டே போகிறது. ஆனால் அவர் மகனுக்கு ஒருநாள் சுகமுண்டா? அமைதி உண்டா?' என்று ராஜு பன்மைப் படுத்தி யோசிக்கும்போதே தன்னுடைய அன்பு மகனை மாதவன் படிக்கட்டுகளில் தூக்கி வருவதைப் பார்த்தான்.

அதே நேரத்தில் ராஜுவுக்கு அவன் சித்தப்பாவின் நினைவும் மனத்தில் எழுந்தது. அவர் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்ற தகவலே கிடைக்கவில்லை. ஆனால் அவர் எங்கோ பரதேசியாக, சந்தோஷமாக இருக்கிறார் என்பது மட்டும் உறுதி என்று ராஜுவின் மனம் நினைத்தது.

சித்தப்பாவைப்பற்றிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராஜுவுக்கு, தன் குழந்தை கௌரி கூப்பிடுவது முதலில் காதில் விழவில்லை. "அப்பா! அப்பா! நான் ஸ்கூலுக்குப் போறேம்பா," என்று சொன்னான், கௌரி.

"அதுக்குள்ளேயா? ஸ்கூலுக்கு மணி ஆகவில்லையே கௌரி?" என்றான்.

"ஸ்கூலுக்குப் போக ஆசையா இருக்கப்பா," என்றான் கௌரி.

அமைதி இல்லாத வீட்டை விட்டு ஸ்கூலுக்காவது போவோம் என்று குழந்தை ஆசைப்படுகிறது என்பது ராஜுவுக்குப் புரியவில்லை. "சரி, போய் விட்டு வா, கௌரி!" என்று சொல்லி விட்டு மாடியை நோக்கி ஏறினான்.

(தொடரும்)

## மாயவரத்தில் ஜப்பான்

நீங்கள் மாயூரம் வந்தால் மணிக் கூண்டி ம…ரிருந்து ஒரு பர்லாங்கு தூரத்துக்குள்ளேயே கீழ்க்கண்ட பெயர்களில் கடைகளைக் காணலாம்.

கல்கத்தா ஸ்வீட் ஸ்டால்
டில்லி ஸ்டோர்
பாம்பே ஜுவலரி ஹால்
லண்டன் ஸ்டோர்
ஜப்பான் ஷூ மார்ட்

—இ. அ. ஷம்சுதீன்




## அத்தியாயம் 15

அன்று காலை ஒன்பது மணிக்குப் பள்ளியில் நுழையும்போது கௌரிக்கு ஒரு புத்துணர்ச்சி. மற்றக் குழந்தைகளைப் பார்க்கப் போகிறோம், அவர்களோடு பேசப் போகிறோம் என்ற ஆவல். எல்லாவற்றுக்கும் மேலாக, அழகான மோகினி டீச்சரைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவல்தான் அவள் மனத்தில் மேலோங்கி நின்றது.

ஆனால், கௌரி பள்ளிக்குள் நுழைந்ததும் சில குழந்தைகள்தான் விளையாடிக் கொண்டிருந்தனர். மோகினி டீச்சர் இன்னும் பள்ளிக்கு வரவில்லை என்பதை உணர்ந்தாள். அந்த ஏழைக் குழந்தைகளோடு நெருங்கிப் பேச முயன்றாள். ஆனால், அவர்கள், காக்கி உடை அணிந்த மாதவன் அருகில் இருப்பதைக் கண்டு பயந்து ஒதுங்கினார்கள். இது கௌரிக்குத் துன்பமாயிருந்தது.

''மாதவா! நீ தூரப் போ!'' என்று கட்டளையிட்டாள்.

மாதவன் தயங்கினான். ''அம்மா திட்டுவாங்க. நான் இங்கனே இருக்கேன்,'' என்றான்.

கௌரி வீம்போடு, மறுபடியும், ''மாதவா! நீ போய்க்கோ. நீ போய்க்கோடா!'' என்று மீண்டும் கட்டளையிட்டாள்.

வேறு வழியில்லாமல் மாதவன் நகர்ந்து கொண்டான். பள்ளியின் வேறு புற வராந்தாவில் போய் உட்கார்ந்து பீடியைப் பற்ற வைத்தான்.

மாதவன் நகர்ந்ததும் குழந்தைகளுக்குத் துணிவு ஏற்பட்டது. கௌரியை நெருங்கிவந்தனர். அழுக்காடை அணிந்த குழந்தைகள் சில, மேல் சட்டையே இல்லாத குழந்தைகள் சில. எல்லோருமே அவளை நட்போடு பாராமல் பகையோடு பார்த்தனர். காரணம், கௌரி பள்ளிக்கு வந்த ஆடம்பரமான விதம்தான்.

குழந்தைகளும் பேசாமல் தன்னை உற்றுப் பார்ப்பது கௌரிக்கு அவமானமாக இருந்தது. வீட்டில்தான் குழப்பமாயிருக்கிறது என்று பள்ளிக்கு வந்த குழந்தைக்கு இம்மாதிரியான வரவேற்பு வேதனையாக இருந்தது.

''ஏண்டி எல்லாரும் அப்படி முறைக்கப் பாக்குறீங்க?'' என்று கேட்டாள் கௌரி.

அதில் அழுக்கு உடை அணிந்த ஒரு குழந்தை, ''நீதான் போலீஸோட வர்றியே!'' என்று மாதவனைக் குறித்துச்

சொன்னாள்.

இன்னொரு குறும்புக்காரக் குழந்தை, "அது போலியில்லேடி. அதுதான் கௌரியோட கால். கௌரி தன் காலை வச்சிப் படியேற முடியாதுடி. அதுக்குத் தான் அந்த ஆளு வர்றான்," என்று சொன்னதும், எல்லாக் குழந்தைகளும் சிரிக்க ஆரம்பித்தனர்.

விஜயாவின் ஆணவம், மகள் கௌரியிடம் கொஞ்சமாவது இல்லாமலிருக்குமா? ஆத்திரத்தோடு, தனக்குக் கால் இல்லை என்று சொன்ன குழந்தையின் மீது பாய்ந்தாள். அவளைத் தன் கைகளால் பிறாண்ட ஆரம்பித்தாள். அவளும் இவளை அடித்தாள். கௌரிக்கு மூச்சு வாங்கியது. ஆனாலும் விடாமல் எதிரியைத் தாக்கினாள். இந்தச் சண்டை நடந்து கொண்டிருக்கும்போதே ஒரு கை வந்து, போரிடும் குழந்தைகளைப் பிரித்தது. எல்லாக் குழந்தைகளும் பிரிந்து நின்றனர்.

கௌரி நிமிர்ந்து பார்த்தாள். மோகினி டீச்சர் நின்று கொண்டிருந்தாள். செல்வமாகச் சலுகையோடு வாழ்ந்த குழந்தையாதலால் கௌரி, மாதவனைப்போல் மோகினி டீச்சரும் அவள் சொல்வதையெல்லாம் கேட்பாள் என்று நினைத்தாள்.

"பாருங்கள் டீச்சர்! அவள் என்னைத் திட்டறா. அவளை அடியுங்க டீச்சர்," என்றாள்.

மோகினி, "அடிக்கிறதுன்னா இரண்டு பேரையும்தான் அடிக்கணும். இரண்டு பேரும்தானே சண்டை போட்டீங்க?" என்று சொல்லிவிட்டு மற்றக் குழந்தைகளைப் பார்த்து, "வகுப்புக்குப் போங்க," என்று கட்டளையிட்டாள். எல்லாரும் வகுப்புக்குச் சென்றனர்.

மோகினி டீச்சர் இப்படி நிர்த்தாட்சண்யமாகப் பேசுவாள் என்று கௌரி எதிர்பார்க்கவில்லை. திகைப்போடு டீச்சரைப் பார்த்தாள்.

குழந்தை கௌரியின் மனத்தில் முதல் நாள் தாய் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. 'ஒருநாள் பழக்கத்திலே டீச்சர் நல்லவள்னு எப்படி கௌரி சொல்ல முடியும்?' என்றது கௌரியின் ஞாபகத்துக்கு வந்தது. குழப்பத்தோடு டீச்சரைப் பார்த்தாள். மோகினி சிரிப்போடு குழந்தையைப் பார்த்தாள்.

"என்னையும்கூட அடிப்பீங்களா டீச்சர்?" என்று கேட்டாள் கௌரி.

"பொதுவா நான் யாரையும் அடிக்கிற பழக்கமில்லே. நீயும் தப்பு செய்தா உன்னையும் கண்டிப்பேன். நீயும் எல்லாரையும் போலத்தானே? வா. வகுப்புக்குப் போகலாம்," என்று அழைத்தாள் மோகினி.

பள்ளிக்கூடத்தின் படிக்கட்டுக்கு வந்ததும் கௌரி தயங்கினாள். "பரவாயில்லை. படிக்கட்டிலே ஏறினா உனக்கு ஒண்ணும் ஆயிடாது. ஏறி வா!" என்று சொன்னாள் மோகினி.

கௌரியும் மெள்ள ஒவ்வொரு படியாக ஏறினாள். படிக்கட்டில் ஏறிக் கொண்டிருக்கும்போதே கௌரிக்கு முதல் நாள் இரவு, அவள் படியேறியதைக் குறித்துத் தாய் கண்டித்தது ஞாபகத்துக்கு வந்தது. மற்றக் குழந்தைகளைப் போல் நானும் படிக்கட்டுகளில் மாதவன் உதவி இல்லாமல் ஏறிவிட்டேன் என்ற திருப்தியும் கௌரிக்கு ஏற்பட்டது. ஆனால் அவளுக்கு டீச்சர்மீது ஏற்பட்ட கோபம் மட்டும் தணியவில்லை.

வீட்டில் எல்லோரும் கௌரியிடம் தனிப்பட்ட சலுகை காட்டுவார்கள். ஆனால் டீச்சர் அப்படி இல்லை. தன்னை அலட்சியமாக நடத்துகிறாள் என்று நினைத்தாள். சிரிப்பை துளிகூடக் காட்டாமல் வகுப்புக்கு வந்தாள்.

விஜயா கோபத்தைக் காட்டும் சமயத்தில் எல்லாம், இயற்கையாகவே சிரிப்பூட்டும் நிகழ்ச்சி நடந்தால்கூடச் சிரிக்க மாட்டாள். எடுத்ததற்கெல்லாம் சிரித்தால் அது கௌரவக் குறைச்சல் என்று தன் தாய் சொல்லக் கேட்டிருக்கிறாள் கௌரி.

வகுப்பில் மோகினி வேடிக்கையான கதைகள் சொன்னாள். மற்றக் குழந்தைகள் எல்லாம் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆனால் கௌரி மட்டும் 'உம்'மென்று உட்கார்ந்திருந்தாள். அதைப் பார்த்த மோகினி, கௌரியின் கோபத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டாள். தன்னோடு சண்டை போட்ட குழந்தையை டீச்சர் கண்டிக்கவில்லை என்ற கோபம்தான் கௌரியின் மனத்தைக் குழப்புகிறது என்று தெரிந்து கொண்டாள்.

பணக்கார வீட்டுச் செல்வக் குழந்தைகளுக்கு ஏற்படும் ஆணவம்தான் கௌரியிடம் தோற்றமளிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை, மோகினியால்.

மோகினி செல்வத்தில் பிறக்கவுமில்லை, செல்வத்தில் வளரவுமில்லை. அவளைச் சுற்றிக் குற்றேவல் புரிய வேலைக்காரர்கள் இருந்ததில்லை. கௌரியைவிடச் சிறிய வயதில் தாயை இழந்து, தகப்

பருவில் புறக்கணிக்கப்பட்டவளுக்கு, சலுகை, செல்வம் என்ற வார்த்தைகளின் அர்த்தமே புரியாததில் ஆச்சரியமில்லை. அவளைப் பாராட்டி உயர்த்திப் பேசிய ஜீவன்கள் குழந்தைச்சாமியும் நாராயணியும்தான்.

குழந்தைச்சாமியின் நினைவு வந்ததும் மோகினிக்குக் கௌரியிடம் ஒரு பரிவு ஏற்பட்டது. கௌரி குழந்தைச்சாமிக்கு ஒரு விதத்தில் பேத்தியல்லவா? அதற்காகவாவது அவளுக்குத் தனிச் சலுகை காட்ட வேண்டியதுதான் என்று நினைத்தாள்.

குழந்தைச்சாமியின் பேத்தி என்று கௌரியை நினைக்கும்போதே மோகினிக்குத் தன்



லையுமறியாமல் ஒருவிதச் சிரிப்பு வந்தது. 'அந்தச் சின்ன வயதிலே என்னை அம்மா, தாயே, என்றெல்லாம் சாமி கூப்பிடுவாரே, அவரே என் மகன் ஆனால் கௌரிக்கு நான் கொள்ளுப் பாட்டி ஆகவேண்டும் அல்லவா?' என்று சிரித்துக் கொண்டாள்.

வகுப்பு முடிந்து பிற்பகல் இடைவேளையில், கௌரிக்கு வராந்தாவில் போட்டிருந்த பெஞ்சியில் வேலைக்கார மாதவன் உணவு எடுத்துப் பரிமாற ஆரம்பித்தான். வீட்டுக்கு உணவருந்த மற்றக் குழந்தைகள் சென்றுவிட்டனர்.

கௌரியின் முன் பல பிளேட்டுகளும் ஜூஸ், தண்ணீர் நிரம்பிய சிறிய பாட்டில்களும் பரப்பப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிளேட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பல ரகப்பட்ட உணவுகளை மாதவன் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

மோகினி சிரித்தபடி கௌரியிடம் நெருங்கி ''என்ன கௌரி, டீச்சருக்கு டிபன் கிடையாதா?'' என்றாள்.

கௌரி ஒரு விநாடியில் கோபத்தை மறந்துவிட்டு, ''எது வேணும்னாலும் எடுத்துக்கோங்க டீச்சர்!'' என்றாள்.

''கௌரி, நான் கொடுப்பதை நீ சாப்பிட்டாத்தான் நீ கொடுக்கிறதை நான் எடுத்துப்பேன்,'' என்ற மோகினி, தன் டிபன் பெட்டியிலிருந்து ஓர் இலை அடையை எடுத்து வைத்தாள்.

இலை அடை என்பது பொதுவாக மலையாளப் பணியாரம் ஆகையால் கௌரிக்கு அதைச் சாப்பிட்டுப் பழக்கமில்லை. அது பார்க்கவே புதுமையாக இருந்தது. அதை எடுத்துச் சாப்பிட்டு விட்டுக் கௌரி, ''ரொம்பத் தித்திப்பா இருக்கு டீச்சர். இதுக்குப் பேர் என்ன டீச்சர்?'' என்று கேட்டாள்.

''பார்த்தாலே தெரியலே? இலையிலே சுற்றி இருக்கிறதுனாலே இதுக்குப் பேர் இலை அடை,'' என்றாள் மோகினி.

இருவரும் சாப்பாட்டைப் பகிர்ந்து கொண்டனர். கௌரி மறுபடியும் குதூகலமாகப் பேச ஆரம்பித்தாள். மோகினி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, 'கௌரி! உன் கோபமெல்லாம் போயிட்டுதா?'' என்றாள்.

கௌரி வெட்கத்தோடு தலையைத் தொங்கவிட்டுக் கொண்டாள்.

மோகினி, தொடர்ந்து, ''ஒரு விஷயத்திலே அவன் உன்னோடு சண்டை போட்டது நல்லதாப் போச்சு. உனக்கு இதயத்திலே ஒரு கோளாறும் இல்லேன்னு தெரியுது. ஹார்ட் வீக்கா இருந்தா, நீ போட்ட சண்டைக்கு நீ மயங்கி விழுந்திருக்கணும். இல்லேன்னு ஏதாவது விபரீதம் ஏற்பட்டிருக்கணும்,'' என்றாள்.

இதைக் கேட்டதும் கௌரிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ''அப்பாவும் அம்மாவும் எனக்கு ஹார்ட் வீக்னு சொல்றாங்களே, அது பொய்யா?'' என்று கேட்டாள்.

''அப்பாவும் - அம்மாவும் பொய் சொல்லமாட்டாங்க. அவுங்க, டாக்டர் பேச்சைக் கேட்டுத்தான் சொல்லியிருப்பாங்க.'' என்றாள் மோகினி.

''அப்போ டாக்டர் சொல்றது பொய்யா டீச்சர்?''

''டாக்டர் வேணும்னுட்டுப் பொய் சொல்லமாட்டார். உன்னைப் போல வளர்ற குழந்தைக்கு நோய்கள் ஏற்படறதும் அப்புறம் தானுவே சரியாப் போயிடறதும் சகஜம். உனக்குக் குழந்தையிலே ஏதாவது கோளாறு இருந்திருக்கலாம். பின்பு இயற்கையே அந்தக் கோளாறைச் சரி செய்திருக்கலாம் இல்லையா?'' என்றாள் மோகினி.

கௌரி யோசித்தாள். ''நிஜமாவே எனக்கு ஒண்ணுமில்லையா டீச்சர்?'' என்று மோகினியைக் கெஞ்சும் பார்வையில் பார்த்தாள். அப்பார்வை, 'எனக்கு ஒரு கோளாறும் இல்லை என்று அடித்துச் சொல்லுங்கள்,' என்று கூறுவது



''தங்கச் சங்கிலியைக் கொடுத்து நீ தங்கப் பத்திரம் வாங்கின வரையில் சரி. அதற்காக அதையே நூலில் கோத்துக் கழுத்திலே மாட்டிக்கணுமா என்ன?''

போர் இருந்தது.

மோகினி "கௌரி! உனக்கு ஒரு கோளாறும் இல்லே. நீ எல்லாக் குழந்தைகளும்போலத்தான் இருக்கே," என்று உறுதியோடு சொன்னாள்.

மோகினி சொன்ன வார்த்தைகள் கௌரிக்குப் பெரிய ஔஷதம் போல் அமைந்தன. கௌரியின் முகம் மலர்ந்தது. அவள் கண்களில் புது ஒளி தோன்றியது. அவள் இதயத்தில் நிறைவு ஏற்பட்டது. கௌரியின் தாய் விஜயா இதுவரை கௌரியின் மனத்தில் இம்மாதிரி ஒரு நன்றிப் பெருக்கை உண்டு பண்ணியதில்லே.

கௌரி பாய்ந்து மோகினியைக் கட்டிக் கொண்டாள். தன் முகத்தை மோகினியின் மார்பில் புதைத்துக் கொண்டாள்.

மோகினியும் உடலளவில் கன்னியாக இருந்தபோதிலும் ஒரு தாயின் இன்பத்தை அப்போது அடைந்தாள். கௌரியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

இந்தத் திடீர் அன்புக் காட்சியைப் பார்த்துத் திகைத்தவாறு நின்றான் மாதவன். அடுத்தபடி கௌரி டீச்சரைக் கேட்ட கேள்வி மாதவனுக்கு இன்னும் திகைப்பை ஊட்டியது. அவனைச் சிரித்தபடி தலை குனியச் செய்தது.

"டீச்சர், உங்க தோளும் மார்பும் கல்லுமாதிரி பலமா இருக்கு. எங்கப் பாவுக்கும் இப்படித்தான் பலம் இருக்கு டீச்சர்," என்று மோகினியின் வளமான வலிமை பொருந்திய அழகை வர்ணித்தாள் கௌரி.

இக்கேள்வி மோகினியைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. எதிரே வேலைக்காரன் நிற்பதை உணர்ந்த மோகினி கண்டிப்பான முகத்தோடு,

"கௌரி நீ! பெரியவளானு உனக்கும் பலம் வந்துடும்," என்று சொல்லி மழுப்பிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்றாள்.

அன்று பிற்பகல் மூன்று மணிக்கு விளையாட்டு நேரத்தில் மற்றக் குழந்தைகளோடு கௌரியும் விளையாட விரும்பினாள். மாதவன் அதைத் தடுத்தான். "எஜமானியம்மா குழந்தை ஓடாம குதிக்காம பாத்துக்கத்தான் என்னை அனுப்பியிருக்காங்க," என்று சொன்னான்.

மோகினி, "குழந்தைக்கு இந்த விளையாட்டினால் கெடுதி ஒண்ணும் வராது. தினமும் நோயாளி நோயாளின்னு குழந்தையிடம் சொல்லி அதை ஒரு நோயாளி ஆக்கக்கூடாது. உண்மையிலேயே ஏதாவது கோளாறு இருந்தாக்கூடக் குழந்தையின் திடநம்

## விவாகரத்துக்கு 1 வருஷத் தவணை

நியூயார்க்கில் ஒரு விவாகரத்து கேஸ்.

கோர்ட்டில் விவாகரத்து கோரி, கணவனும் மனைவியும் மூன்று குழந்தைகளுடன் நிற்கின்றனர், தீர்ப்பை எதிர்பார்த்து.

நீதிபதி கூறுகிறார்: 'நீங்கள் இருவருமே சம்பாதிப்பவர்கள். சம உரிமை, சம அந்தஸ்து உள்ளவர்கள். ஆகையால் உங்கள் இருவர் பேரிலும் பொதுவாக உள்ள பாங்க் பணம், சொத்து ஆகியவற்றைச் சரிபாதியாகப் பங்கிட்டுக்கொள்ளச் சம்மதமா? கோர்ட்டாரின் தலையீடு இல்லாமல் நீங்களே கூட இதைச் செய்து கொள்ளலாம்.''

''அப்படியே செய்து கொள்கிறோம். ஆனால் குழந்தைகள்?''

''அவர்களையும் நீங்களே ஒரு முடிவுக்கு வந்து பிரித்துக் கொள்ளலாம். வேண்டுமானால் ஒருநாள் அவகாசம் தருகிறோம். நாளைக்கு உங்கள் முடிவைக் கோர்ட்டுக்குத் தெரிவிக்கலாம்.''

மறுநாள்.

நீதிபதி கேட்டார்: 'உங்கள் முடிவு என்ன?

கணவன்: ''விவாக ரத்து கோரி அடுத்த வருஷம் இன்னொரு குழந்தையும் பெற்றெடுத்துக்கொண்டு வருகிறோம். நான்கு குழந்தைகளாக இருந்தால் பிரித்துக் கொள்வதற்குச் சௌகரியமாக இருக்கும்!''

ஆதாரம்: 'கௌரவம் என்ன?' —ஒரு பழைய அமெரிக்கப் புத்தகத்திலிருந்து அப்பட்ட காப்பி!

—எஸ். டி. ராகவன்



பிக்கை அந்தக் கோளாறைப் போக்கிடும்,' என்று சொல்லிவிட்டுக் கௌரியைக் குழந்தைகளின் விளையாட்டில் கலந்து கொள்ளச் சொன்னாள்.

மாதவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கௌரி குதூகலமாகப் பந்தைத் துரத்தி ஓடும் காட்சியைப் பார்த்த மாதவனுக்கு, 'கௌரிக்கு நோய்கூட இருக்க முடியுமா?' என்ற சந்தேகம் வந்தது. குழந்தையின் குதூகலத்தைக் கெடுக்க விரும்பவில்லை மாதவன். எஜமானி அம்மாளுக்குத் தெரிந்தால்தானே வம்பு? விஷயத்தை மூடிவைத்துவிடுவோம் என்று தீர்மானித்தான்.

மூடிவைக்கக் குழந்தையின் ஒத்துழைப்புத் தேவையல்லவா? மாலை வீடு திரும்பும்போது மாதவன் கௌரியிடம் விஷயத்தை விளக்கினான்!

''அந்த டீச்சரம்மாவானா உன்னைப் பந்தாடச் சொல்றாங்க. அவுங்க வீட்டுப் பலகாரத்தை உனக்குக் கொடுக்கிறாங்க. இதெல்லாம் விஜயா அம்மாவுக்குத் தெரிஞ்சா எனக்கு வேலை போயிடும் பாப்பா. உன்னையும் பள்ளியிலேருந்து மாத்திடுவாங்க,'' என்றான் மாதவன்.

'பள்ளியிலேருந்து மாத்திடுவாங்க' என்ற விஷயம் கௌரிக்குக் கவலையைக் கொடுத்தது. ''நீ அம்மாக்கிட்டே சொல்ல வேண்டாம். நானும் சொல்ல மாட்டேன்,'' என்று அவனோடு தன்னுடைய தாயை ஏமாற்றும் சதிக்கு ஒத்துக் கொண்டாள்.

''கவுன்லே எப்படி இவ்வளவு செம்மண் கறைன்னு அம்மா கேட்டாங்கன்னு என்ன சொல்லுவே பாப்பா?''

''அம்மா மாடியிலேதானே இருக்காங்க? நான் மாடிக்குப் போறதுக்கு முன்னாடி வேற கவுன் போட்டுட்டா, அம்மாவுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் கௌரி சமத்காரமாக.

குழந்தையும் வேலைக்காரனும் விஜயாவை ஏமாற்றத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது பழனிமலைக்குச் செல்லும் பாதையில் ஒரு பிச்சைக்காரன் ஒரு தனவந்தர் முன் குருடன் போல் கருவிழியை இமையில் மறைத்து. ''கண்ணில்லாத கபோதி ஐயா... பிச்சை போடுங்க,'' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்தத் தனவந்தர், முழு ரூபாயைப் பிச்சைக்காரனுக்குப் போட்டுவிட்டு நகர்ந்தார்.

பணத்தை வாங்கிக் கொண்டதும் அந்தப் பிச்சைக்காரன் கண்களைச் சரியாக்கிக்கொண்டு, பணம் கொடுத்து விட்டுப் போனவரின் திசையை நோக்கி, ''முட்டாப் பசங்கதான் முதலாளியாறாங்க,'' என்று சொன்னான்.

''கொடுத்தவரையே திட்டறியேப்பா, கொடுக்காதவனை இன்னும் எப்படியெல்லாம் திட்டுவே நீ?'' என்ற குரல் கேட்டுப் பிச்சைக்காரன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

எதிரே புழுதி படிந்த கால்தனோடு, அயர்வும் களைப்பும் மிகுந்த தோற்றத்தோடு ஒரு சாமியார் நிற்பதைக் கண்டதும், ''ஓ! சாமியாரா? நீங்களும் நம்மைப் போல ஒரு ரகம்,'' என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

அவன் குருடன் அல்ல என்பதை உணர்ந்து கொண்ட குழந்தைச்சாமி, ''ஏம்பா, நீ குடனில்லையா? ஒருவன் சிலரைப் பலகாலம் ஏமாத்தலாம். ஒருவன் பலரைக் கொஞ்சகாலம் ஏமாத்தலாம் ஆனால் எல்லோரையும் எப்பவுமே ஏமாத்திக் கொண்டிருக்க முடியாது. அதுவும் கடவுளை நீ ஏமாத்தவே முடியாதுப்பா,'' என்று சொல்லிவிட்டுப் பழனிமலை மீதிருக்கும் ஆண்டவன் இருக்கையைக் காட்டினார்.

பிச்சைக்காரன் இடிஇடி என்று சிரித்தான். குழந்தைச்சாமி திகைத்தார்.

''ஏம்பா சிரிக்கிறே?''

''சாமி! கடவுளைத்தான் நல்லா ஏமாத்த முடியும். மனுஷங்கூட சமயத்திலே உஷாராயிட்றான். அந்த மலைமேலே இருக்காரே ஆண்டவன், அவன் ஏமாத்தறவங்களோட கூட்டாளிங்க. ஏமாத்துந் தொகையிலே அவனுக்கும் பங்குண்டுங்க. இல்லாட்டி எப்படி இவ்வளவு தடபுடல் நடக்கும்? கிருத்திகைக்கு எவ்வளவு கார் வருதுன்னு நினைக்கிறீங்க? அந்தக் காரிலே வர்றவங்க எல்லாம் யோக்யன்னு சொல்றீங்க? அவ்வளவு பயல்களும் சுத்தக் கேப்மாரிப் பசங்கசாமி. திரும்பத் திரும்ப ஏன் வர்றாங்க, தெரியுங்களா? ஊரை ஏமாத்திச் சம்பாரிச்சதை ஆண்டவன் என்கிற கூட்டாளிக்குக் கொடுக்க வர்றாங்க,'' என்று சொல்லிக் கொண்டிருந்தவன் தொலைவில் காலில்லாமல் தரையில் நகர்ந்தபடி பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒரு மாது வெய்யில் தாங்காமல் தரையில் சாய்வது கண்டு அவளைத் தூக்க ஓடினான்.

குழந்தைச் சாமியும் அவனைத் தொடர்ந்து ஓடினார்.

(தொடரும்)

# மின்னல், மழை, மோகினி

அத்தியாயம்-16

ஜாவர் சீதாராமன்



மயங்கி விழுந்த பெண்மணியைப் பிச்சைக்காரன் தூக்கினான். அவள் கண் திறக்கவில்லை. நுரை கக்கிய வாயிலிருந்து மூச்சு வேகமாக, இரைச்சலோடு வந்து போய்க்கொண்டிருந்தது.

சற்றுமுன் ஒரு பணக்காரனை முட்டாள் பயல் என்று கூறி ஏமாற்றிவிட்டு மார்தட்டிக் கொண்டிருந்த அதே பிச்சைக்காரன், இப்போது சிறு குழந்தைபோல் அழுதான். "தங்கச்சி! தங்கச்சி!" என அவளை அழைத்தான்.

ஆனால் அப்போதும் அவள் கண் திறக்கவில்லை. அண்ணனின் அழைப்பு அவள் காதில் விழுந்ததற்கு அறிகுறியாக எந்தவிதச் சலனமும் அவள் முகத்தில் தோன்றவில்லை.

குழந்தைச்சாமி விழுந்துகிடக்கும் பெண்மணியின் அருகில் உட்கார்ந்து அவள் கையை எடுத்து, மணிக்கட்டருகில் கையை வைத்து, அவளது நாடியைப் பரிசோதித்தார்.

அந்த ஏழைப் பெண்ணின் நாடித் துடிப்பு வேகமாக அடித்துக் கொண்டது.

குழந்தைச்சாமிக்கு அது மிகுந்த கவலையைக் கொடுத்தது. பிச்சைக்காரன் குழந்தைச்சாமியைப் பார்த்து, "சாமி! என்னங்க? தங்கச்சி ஏன் பேசமாட்டேங்குது?" என்று துடிப்போடு கேட்டான்.

பதில் சொல்லாமல் சுற்று முற்றும் பார்த்தார் குழந்தைச்சாமி.

நூறு கெஜ தூரத்தில் ஒரு குதிரை வண்டி நிற்பதைப் பார்த்தார். உடனே வண்டியை நோக்கி ஓடினார்.

வண்டியை அழைத்து வந்தார். இதையெல்லாம் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்த பிச்சைக்காரன், "என்ன சாமி! என்னங்க?" என்று திகைப்போடு கேட்டான்.

குழந்தைச்சாமி, "பேச நேரமில்லை. நாடி விழுந்திட்டிருக்கு. உடனே தங்கச்சியை வண்டியிலே எடுத்துப் போடு," என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெண்மணியின் பரட்டைத் தலையைப் பிடித்துத் தூக்கினார்.

உடனே பிச்சைக்காரன் அந்தப் பெண்ணின் கால் பக்கம் தூக்கி அவளை வண்டியில் ஏற்றினான்.

குழந்தைச்சாமி வண்டியின் முன்புறம் உட்கார்ந்து கொண்டார். பிச்சைக்காரன் வண்டியின் பின்புறம் உட்கார்ந்து கொண்டான்.

"ஒரு நல்ல டாக்டர் வீட்டுக்கு ஓட்டுப்பா. இல்லே, ஆஸ்பத்திரிக்கு ஓட்டு. வேகமா ஓட்டு," என்று துரிதப்படுத்தினார் குழந்தைச்சாமி.

அவர் கண்களிலிருந்த ஒளியோ அல்லது அவர் குரலிலிருந்த நிர்ப்பந்தமோ, வண்டிக்காரன் சவுக்கைச் சொடுக்கிக் குதிரையை வேகமாக ஓட்டினான்.

வண்டி வேகமாக ஓட ஆரம்பித்ததும் குழந்தைச்சாமிக்குத் திடீரென்று ஒரு விஷயம் ஞாபகத்து வந்தது.

அவர் கையில் ஒரு செப்புக்காசுகூட இல்லை என்பதுதான் அது.

கடந்த சில வருடங்களாகவே அவர் சல்லிக்காசுகூட வைத்துக் கொள்ளாமல் வாழ முயன்று வந்தார்.

அதனால்தான் அவர் தன் தமையன் மகன் ராஜுவுக்கு ஒரு கடிதம்கூட எழுதவில்லை. விலாசம் தெரிந்தால் பணம் அனுப்பி வைப்பான். அவர் யாருக்கும் தெரியாமல், யாரும் உதவாத ஒரு பூஜ்யமாக வாழ முயற்சித்து வந்

தார். பறவை வாழவில்லையா? மிருகங்கள் வாழவில்லையா? மனிதன் மட்டும் ஏன் சேமிப்பு, சொத்து என்ற பாதுகாப்பு நிழலில் ஒதுங்க வேண்டும்?

குழந்தைச்சாமி திருவண்ணாமலை ஆசிரமத்தில் இருந்தபோது, அங்கு வந்த ஓர் அறிஞர் சொன்ன வாக்கியம் தான் அவர் மனத்தை . உறுத்திக் கொண்டிருந்தது.

அந்த வாக்கியம் ஒரு ரிஷியின் வாக்கியமென்று கேள்விப்பட்டதாக அவருக்கு ஞாபகம். ''மறுநாள் காலை உணவுக்குத் தானியம், முதல் நாள் இரவு எவன் வீட்டில் இல்லையோ அவனேதான் உண்மைப் பிராம்மணன்,'' என்பதே அந்த வாக்கியம்.

அறத்தின் உருவமாக இருக்க வேண்டியவன் அந்தணன். அவனது ஒழுக்கமும் அறமும் குன்றிலிட்ட தீபமாக ஊரில் விளங்கும் நிலையில் அவனுக்கு ஊரில் உணவு கிடைக்காமல் போகாது.

பிரம்மத்தை நம்பி வாழ்பவனுக்கு அவன் நம்பும் பிரம்மம் உணவளிக்காமல் போகாது என்பதே அப்பொன் மொழியின் பொருள்.

இதே உண்மையைத்தான் ஏசுநாதர் சொன்னார். 'நரிகளுக்கு ஒதுங்கி மறையப் பொந்துகள் உண்டு. காற்றில் பறக்கும் பறவைகளுக்கும் கூடு இருக்கின்றன. ஆனால் மனிதன் மகனுக்குத் தலை வைத்துப் படுக்க இடம் இல்லையா?' என்ற வாக்கியமும் குழந்தைச்சாமிக்கு ஞாபகம் வரும்.

இரண்டு வருடங்களாவது ஆண்டவனை மட்டும் நம்பி வாழ வேண்டும் என்று தீர்மானித்தார்.

கால் நடையாகச் சுற்ற ஆரம்பித்தார். பசித்தால்கூட யாரையும் கை நீட்டிக் கேட்பதில்லை.

நடையின் களைப்பில் கால் ஓய்ந்தால் மரத்தடியில் படுத்துவிடுவார். துணி கிழிந்துவிட்டதே என்று கூச்சப்பட்டு, யாரையும் போய்த் துணி கேட்க மாட்டார். சுவர் ஊராகப் போகும் போது ஒவ்வொரு நாளும் யாராவது கேட்காதபோதே தேடி வந்து உணவு கொடுப்பதையும், கிழிந்த ஆடைகளைப் பார்த்துத் துணி கொடுப்பதையும் கண்டார். ஒரு சிலர் பணமும் கொடுக்க வந்தனர். வாங்க மறுத்துவிட்டார்.

உயிர் வாழ ஒரு வேளை உணவு, மானத்தை மறைக்க சிறு துணி— இது போதும் என்று சங்கல்பத்தோடு இரண்டு வருஷம் வாழ்ந்து, பழனியில் வாழும் புகழ்பெற்ற ஆண்டியின் முன் தன் சங்கல்பத்தை முடிக்க வந்தவருக்கு, சங்கல்பம் முடியும் நாளில் பணம் தேவைப்படும்படியான சோதனை வந்து விட்டதே என்று வருந்தினார்.

அவருக்காக இல்லாவிட்டாலும், ஆபத்தான நிலையில் இருக்கும் ஒரு பெண் ஜீவனுக்காக வண்டியைப் பேசியவர் அவர்தானே?

ஆகவே அவனுக்கு வாடகை கொடுக்க வேண்டியது அவர் பொறுப்புத்தானே? வைத்தியர் வீட்டுக்குச் சென்றதும் வைத்தியருக்குப் பணம், மருந்துக்குப் பணம் வேண்டும். என்ன செய்வது!

'இரண்டு வருஷங்களாக விடாமல் காப்பாற்றிய விரதத்தை முடிக்கும் நாளில் தோற்றுவிடப் போகிறேனா?' என்று மனம் பதைத்தார்.

விரதத்தின் கட்டுப்பாடு பெரிதா, ஒரு சகஜீவனுக்குக் காட்ட வேண்டிய கருணை பெரிதா? என்ன சிக்கலான பிரச்னை! 'பழனி ஆண்டவா! திடீரென்று இந்தக் குடும்ப பாரத்தைக் கொடுத்து விட்டாயே!' என்று வண்டிக்குள் மேல் மூச்சு வாங்கியபடி கிடக்கும் பெண்ணையும், அவளருகில் அழுதபடி இருக்கும் பிச்சைக்காரனையும் பார்த்துக் கலங்கினார்.

'பொறுப்பை வரவழைத்துக் கொண்டோம். கடந்த இரண்டு வருஷம் யாரிடமும் கை நீட்டாமல் இருந்த நாம், இன்று யாரிட



ஈவது கை நீட்டித்தான் ஆகவேண்டும் போலிருக்கிறதே' என்று நினைத்தார். அந்தப் பிச்சைக்காரனிடம் சிறிது பண மாவது இல்லாமலா இருக்கும்?

அவன் கொடுத்துக் கொள்ளட்டுமே என்று அவர் மனம் எண்ணவில்லை.

இப்படிச் சிந்தனையில் குழம்பிக் கொண்டு இருக்கும்போதே குதிரை வண்டி ஒரு வீட்டின் முன் நின்றது.

வண்டிக்காரன், ''டாக்டர் வீடு வந்தாச்சு,'' என்றான். குழந்தைச்சாமி வண்டியிலிருந்து கீழே குதித்தார்;

பிச்சைக்காரனும் வண்டிக்காரனும் இருபுறமாகப் பிடித்து அந்தப் பெண்ணை



உள்ளே தூக்கிச் சென்றனர்.

குழந்தைச்சாமியும் பின்தொடர்ந்தார். வீட்டின் முன்புறத்தில் உள்ள சோதனை அறையில் ஒரு பெஞ்சியில் பெண்ணைக் கிடத்தினார்கள். ஆள் நடமாட்ட சப்தம்கேட்டு டாக்டர், வீட்டின் உட்புறமிருந்து வெளியே வந்தார்.

அந்த டாக்டர் இருபத்தேழு வயது மதிக்கத்தக்க நாகரிக இளைஞராக இருந்தார். பிச்சைக்காரனையும், குழந்தைச் சாமியையும் கிழிந்த ஆடையுடன் கிடக்கும் பெண்ணையும் பார்த்ததும் டாக்டரின் முகத்தில் ஒருவித சலிப்பு தெரிந்தது.

அதைப் பார்த்ததும் குழந்தைச்சாமி, "டாக்டர்! உடனே ஏதாவது செய்யுங்க. இல்லாட்டி அவள் பிழைக்க மாட்டாள்," என்று ஒருவிதக் கம்பீரத்தோடும் உரிமையோடும் சொன்னார்.

குழந்தைச்சாமியின் குரலில் தொனித்த ஒரு கண்ணியம் அந்த டாக்டரை ஒரு விநாடி திகைக்க வைத்தது.

பிச்சைக்காரனையும் சாமியாரையும் மாறி மாறிப் பார்த்தார் டாக்டர்.

இருவருக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்க முடியாது—என்பதைப் புரிந்துகொண்டார்.

டாக்டரின் மனத்தில் தோன்றிய சந்தேகத்துக்கு விடையளிப்பவர்போல் குழந்தைச்சாமி, "தம்பி! நாம் எல்லாருமே ஒரே மனிதக் குடும்பம் தான். உடனே பேஷண்டைக் கவனியுங்க," என்று சற்றுப் பொறுமை இழந்து கூறினார்.

டாக்டர் வேறு வழி இல்லாமல் பெண்ணைப் பரிசோதித்தார். உடனே ஆபத்து சிகிச்சையாக ஓர் இன்ஜக்ஷன் கொடுத்தார். பிறகு மயங்கிக் கிடக்கும் பெண்ணின் வாயைத் திறந்து ஏதோ திரவத்தை ஊற்றினார்.

சுவாசம் சற்று அடங்கி, சாவதானமாக நடைபோட ஆரம்பித்தது.

பிச்சைக்காரன் நன்றியோடு குழந்தைச்சாமியைப் பார்த்தான். அவன்பார்வை, 'சாமி! டாக்டர் பீஸ், மருந்துச் செலவு எல்லாத்துக்கும் உங்களையே நம்பியிருக்கிறேன்' என்று கூறாமல் கூறுவதுபோல் இருந்தது.

பணத்தின் நினைவு வந்ததும் குழந்தைச்சாமியின் அடிவயிற்றை என்னமோ செய்தது.

பணம் என்பது எவ்வளவோ இன்றியமையாத ஒன்று என்பதைக் குழந்தைச்சாமி அப்போதுதான் பூரணமாக உணர்ந்தார்.

டாக்டர், "ஆபத்து ஒன்றுமில்லை. பலமில்லாத இதயம்—அதோடு பசி மயக்கம் வேறு.




மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட தினத்தில இலங்கை வானொலியில் ஒரே அல்லோலகல்லோலம். அப்போது ஒலிபரப்பு அதிகாரியாக இருந்த ரிச்சர்ட் வீரசூரியா என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துப் போனார்.

இந்திய வானொலியோ, சோகத்தை ஒலிபரப்பிக் கொண்டிருந்ததோடு, இடையிடையே நேரு முதலிய தலைவர்களின் பேச்சுக்களையும், செய்தியறிக்கைகளையும் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

இலங்கை வானொலியில் அப்பொழுது அந்த வசதிகள் இருக்கவில்லை. செய்ய வழியில்லை. அதிகாரிகளெல்லாம் மண்டையை உடைத்துக் கொண்டார்கள்.

கடைசி கடைசியாக இந்த முடிவுக்கு வந்தார்கள்:

'அடுத்த 24 மணி நேரத்திற்கு எந்தவித நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பாமல் கொழும்பு ரேடியோ நிலையத்தை மூடி வைப்பது!'

இதன்படி முழுசாக ஒருநாள் இலங்கை வானொலி எந்த நிகழ்ச்சியையும் ஒலிபரப்பாமல் உயிரிழந்தது.

உலகத்தில், காந்திஜிக்கு இந்தவிதமாக 'மௌனாஞ்சலி' செய்த நாடும் வானொலியும் இலங்கைதான்!

—'ஈழநாடு' இதழில், இலங்கை வானொலி பற்றிய, 'வி. என். பி.' எழுதிவரும் கட்டுரைத் தொடரிலிருந்து ஒரு துணுக்கு.

—எடுத்தனுப்பியவர்: எம். ஏம். மக்கீன்.

சத்தான ஆகாரம் கொடுக்க வேண்டும்,'' என்றார்.

சத்தான ஆகாரம் என்ற வார்த்தையைக் கேட்டதும் பிச்சைக்காரன் சோகமாகப் புன்னகை புரிந்தான்.

டாக்டர் அதைக் கவனியாமலே ஒரு சீட்டில் ஏதோ டானிக்குகளை வரிசையாக எழுத ஆரம்பித்தார்.

அதைப் பார்த்த குழந்தைச்சாமி, மருந்துகள் வாங்கப் பணம்; டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய பீஸ் தொகை—இதற்கெல்லாம் என்ன செய்வது என்று நினைக்கும்போதே, அறைக்கு வெளியே இருந்து, ''சாமி, வாடகை,'' என்று குரல் வந்தது. டாக்டரைப் போல் வண்டிக்காரனும் குழந்தைச் சாமியை நம்பித்தான் வந்திருக்கிறான்.

ஆனால் அவர்கள் யாருக்கும் அந்தப் பிச்சைக்காரனிடம் இருக்கும் சொற்பத் தொகைகூட, குழந்தைச்சாமியிடம் இல்லை என்பது எப்படித் தெரியும்?

தன் நிலையை நினைக்க நினைக்கச் சிரிப்பாகவும் துக்கமாகவும் இருந்தது குழந்தைச்சாமிக்கு. கண்களை மூடி, ''முருகா! முருகா!'' என்று நினைப்பதைத் தவிர அவரால் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை.

அதே சமயத்தில், ''சுப்பய்யா,'' என்று கூப்பிட்டுக் கொண்டே நரைத்த தலை, நரைத்த மீசையோடு ஒருவர் அறையின் உள்ளே நுழைந்தார்.

அவர் வீட்டின் உட்புறத்திலிருந்து அறைக்குள் நுழைந்தார். இடுப்பில் ஒரு வேட்டியோடு, மேலே ஒரு சிவப்புச் சாயத் துண்டு அணிந்திருந்தார்.

உள்ளே நுழைந்தவர், டாக்டர் பேஷன்டோடு இருப்பதைப் பார்த்தவுடன், ''சுப்பய்யா! நீ கேஸ் பார்த்திட்டிருக்கியா?'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் வீட்டின் உட்புறம் செல்லத் திரும்பினார்.

டாக்டர், ''என்னப்பா உங்களுக்கு வேணும்?'' என்று மரியாதையோடு கேட்டார்.

''ஒன்னுமில்லே. குழந்தைங்க பயாஸ்கோப்புக்குப் போகணும்னு தொந்தரவு செய்யறாங்க. பரவாயில்லே, வேலையைக் கவனிச்சுட்டு வாப்பா,'' என்று சொன்னவர் திடீரென்று தலையைத் தூக்கி ஜன்னலருகே நின்று கொண்டிருக்கும் குழந்தைச்சாமியைக் கவனித்தார்.

அவரது காவி ஆடை அந்தப் பெரியவரைச் சற்றுக் குழப்பியது. பெரியவர் கூர்ந்து கவனித்தார். அவரது முகத்தில் ஒருவிதத் துடிப்பு, மலர்ச்சி, குழப்பம்—

> பிரம்மசாரி, கத்திரிக் கோலின் ஒற்றைப் பகுதி போல, பூர்த்தியாகாதவன்.
>
> —ஃப்ராங்க்ளின்

எல்லாம் ஒருங்கே சேர்ந்து அந்த வயதான முகத்தில் படர்ந்தது.

குழந்தைச்சாமியைப் பார்த்து, ''நீங்க...நீங்க...தானே அழகிரி?'' என்று உணர்ச்சி ததும்பக் கேட்டார்.

பழனியில் ஒரு டாக்டர் வீட்டில், திடீரென்று ஒருவர் தன்னுடைய பூர்வாசிரமப் பெயரைக் கூப்பிடவும் குழந்தைச்சாமி திகைத்துப் போனார்.

ஒரு விநாடிக்கு அவர் மனத்தை மோதிக் கொண்டிருந்த பொருளாதாரப் பிரச்னை மறைந்தது. பெரியவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அடையாளம் புரியவில்லை. ''நான் அழகிரிசாமிதான். ...நீங்க...?'' என்று சொல்லி நிறுத்தினார்.

''என்னங்க அப்படிப் பார்க்கறீங்க? நான்தான் பழனி ஆண்டிங்க. உங்களுக்கு ஞாபகம் இல்லையா? உங்களுக்கு எப்படிங்க ஞாபகம் இருக்கும்? கொடுக்கற கை மறந்துடும்... வாங்கின கை மறக்கலாமா? அன்னிக்கு இறந்த ஒரு வாரத்துக்குள்ளே துக்கம் விசாரிக்க மலையாளத்துக்கு வந்தேன். சின்னத்தம்பி ராஜாதான் இருந்திச்சு. நீங்க ஊர்லே இல்லேன்னாங்க. எவ்வளவு வருஷமாச்சு,'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

குழந்தைச்சாமிக்கு மெள்ள மெள்ள ஞாபகம் வந்தது. அதிராம்பட்டணத்து விடுதியில் தங்கியிருந்து, கள்ளக்கடத்தல் விவகாரத்தில் அண்ணனைச் சம்பந்தப்படுத்தும் ருஜுக்களையெல்லாம் உடைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது, தினமும் தனக்குச் சமையல் செய்துபோட்ட, தங்கள் குடும்ப சமையல்காரன் பழனிஆண்டிதான் பேசுகிற ஆள் என்பதைப் புரிந்து கொண்டார்.

அண்ணன் செய்த குற்றத்தைத் தன் குற்றமாக மாற்றிக்கொண்ட விஷயம் ஓரளவுக்குச் சமையல்காரனுக்குத் தெரியும் என்பதை உணர்ந்த அழகிரி, தன்






அண்ணனிடம் சொல்லி, பழனி ஆண்டியின் மகனது மேல்படிப்பு செலவு பூராவையும் வெங்கடபதியையே ஏற்றுக் கொள்ளச் செய்தது ஞாபகத்துக்கு வந்தது.

''சுப்பய்யா! நீ படிச்சு டாக்டர் ஆனதே இவரால்தான்டா. நம்ம வீட்டிலே விளக்கை ஏற்றின புண்ணியவான் இவருடா. விழுந்து கும்பிடுடா,'' என்று சொன்னார்.

டாக்டர் சுப்பய்யா குழப்பத்தைச் சமாளித்தபடி, ''பங்களா வெங்கடபதியோட தம்பியா? நான் பார்த்ததே இல்லே,'' என்று சொல்லிவிட்டுக் குழந்தைச்சாமியின் கால்தொட்டு வணங்கினான்.

பழனியாண்டி அறையில், பெஞ்சில் படுத்திருக்கும் பெண்ணையும் பிச்சைக்காரனையும் பார்த்துவிட்டு, ''இவனை நான் பார்த்திருக்கேனே. இவன் மலைப் படியிலே உட்கார்ந்திருக்கிற பிச்சைக்காரன் இல்லே? எஜமான், இவன் எப்படிங்க உங்களோட?'' என்றதும் உடனே அவர் மகன் சுப்பய்யா, ''அப்பா! இவர் தான் இவுங்களை இங்கே கூட்டிட்டு வந்தார்,'' என்றான்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பிச்சைக்காரன் உணர்ச்சி ததும்பப் பேச ஆரம்பித்தான். ''இவர் சாதாரண சாமி இல்லீங்க. கடவுளே தான்,'' என்று சொன்னான்.

குழந்தைச்சாமி அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல் டாக்டரைப் பார்த்து, ''தம்பி! அந்தப் பெண்ணுக்கு உடம்பு எப்படி இருக்கு?'' என்று கேட்டார். ''இனிமேல் அவளுக்கு ஒன்னுமில்லீங்க. அவளைத் தூக்கிட்டுப் போகலாம். இரண்டு நாளைக்கு மருந்தும், நல்ல ஆகாரமும் சாப்பிட்டால், எல்லாம் சரியாயிடும்,'' என்று டாக்டர் பதில் சொன்னார்.

குழந்தைச்சாமி யோசித்தவாறே, ''தம்பி! ஒரு பிச்சைக்காரன் எப்படி நல்ல ஆகாரமும், மருந்தும் வாங்கிக் கொடுக்க முடியும்? வைத்தியம் பார்த்த நீதான் அதுக்கும் ஏற்பாடு செய்யணும்,'' என்று சொல்லிவிட்டு டாக்டரின் முகத்தைப் பார்த்தார்.

டாக்டர் சுப்பய்யா புரியாமல் விழித்தார். குழந்தைச்சாமியின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட பழனியாண்டி, மகனைப் பார்த்து. ''என்ன சுப்பய்யா முழிக்கறே! எஜமான் சொன்னா சொன்னதுதான். மருந்துக்கும் பணத்தைக் கொடுத்து அனுப்புடா,'' என்றார்.

உடனே சுப்பய்யா டிராயரைத் திறந்து இருபத்தைந்து ரூபாயை எடுத்துப் பிச்சைக்காரனிடம் கொடுத்தார். பிச்சைக்காரன் நன்றி செலுத்திவிட்டுத் தன் சகோதரியைத் தூக்கிக்கொண்டு வண்டிக்குச் சென்றான்.

குழந்தைச்சாமி வண்டியை அனுப்பி விட்டு மறுபடியும் வீட்டினுள் நுழைந்தார்.

பழனியாண்டி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு, உட்காராமல் அருகில் நின்றார், பக்தியோடு.

குழந்தைச்சாமிக்கு ஒரு திருப்தி. அவர் எடுத்துக்கொண்ட விரதத்துக்குப் பங்கம் வராமல், பணத்தை விரலால் கூடத் தொடாமல், பிரசினை தீர்ந்து விட்டது. "பழனியாண்டி! இத்தனை வருஷம் கழித்து உன் வீட்டிலே முதல் முறையில் அடி எடுத்து வைக்கிறப்பவே, உன் மகனுக்குச் செலவு வச்சிட்டேனே," என்று சொன்னார்.

"இதென்ன எஜமான்! ஒரு செலவா! சுப்பய்யா பட்டணத்திலே படிக்க எவ்வளவு ஆயிரம் ஆகியிருக்கு, தெரியுங்களா? அதெல்லாம் நீங்க சொல்லாட்டி உங்க அண்ணாச்சி மனசாரக் கொடுத்திருப்பாரா? எஜமானுக்கு நன்றிக் காணிக்கை செலுத்தச் சந்தர்ப்பம் வந்திருக்கேன்னு சந்தோஷப்படறேனுங்க," என்று பழனியாண்டி பதிலுக்குக் கூறினார்.

அதற்குக் குழந்தைச்சாமி, "பழனி ஆண்டி! நான் இப்போ யாருக்கும் எஜமான் இல்லே. நீயும் எல்லாரையும் போலே என்னை 'சாமி'ன்னே கூப்பிடலாம்," என்று சொன்னார்.

அன்று, மலை ஏறிப் போய்ப் பழனி ஆண்டவரைத் தரிசித்தார்.

இரண்டு வருடகாலம் பணத்தைத் தொடாமலே வாழவைத்த ஆண்டவன் கருணைக்கு நன்றி செலுத்தினார்.

அன்று இரவு பத்து மணிக்கு மேல் தான் வீடு திரும்பினார். டாக்டர் சுப்பய்யாவும் தந்தையும் சாப்பாட்டுக்குக் காத்திருந்தனர். குழந்தைச்சாமி சாப்பிடும்போது பழனியாண்டி பெருமையோடு சொன்னார். "சாமி! இன்னைக்கி நானேதான் உங்களுக்குச் சமையல் செய்தேன். திருப்தியாச் சாப்பிடுங்க," என்றார்.

குழந்தைச்சாமி டாக்டரின் முகத்தைப் பார்த்தார். அதில் தோற்றமளித்த லஜ்ஜையைக் கவனித்துவிட்டு, "பழனியாண்டி! நீ சமையல்காரனாயிருந்தது பழைய விஷயம். இப்போ நீ ஒரு டாக்

மழை வருது



மழை பெய்தால் பிடித்துக் கொள்ளக் குடை இருக்கிறது.

பனி பெய்தால் பிடித்துக் கொள்ள என்ன இருக்கிறது? படத்தைப் பார்த்து நீங்களே கண்டு கொள்ளுங்கள்.

டரின் தந்தை. நீ டாக்டரின் தந்தையாகத்தான் இருக்கணும்." என்றார்.

அதற்கு பழனியாண்டி, "பழசை மறந்துடறது நல்லதுங்களா?" என்று கேட்டார்.

குழந்தைச்சாமி, "ஆமாம். பழசை மறந்துட வேண்டியதுதான். வாழ்வே ஒரு வளர்ச்சிதானே? அது ஆன்ம வளர்ச்சியாய் இருக்கலாம். எதுவானாலும் ஒருத்தருடைய இறந்தகாலம், மற்றவர் எதிர்காலத்தில் குறுக்கிடக்கூடாது... இதை நீ தெரிஞ்சுக்கணும் பழனி ஆண்டி." என்று சொல்லிவிட்டு சுப்பய்யாவைப் பார்த்துச் சிரித்தார்.

சுப்பய்யாவுக்குக் குழந்தைச்சாமியின் சரித்திரம், தந்தை சொல்லித் தெரியும். மூத்த சகோதரனுக்காகத் தன் வாழ்வையே தியாகம் செய்தவர் என்பது தெரியும். ஆனால் அவர் தோற்றமும், அவர் ஒரு பிச்சைக்காரன் சகோதரியை சிகிச்சைக்கு அழைத்து வந்த விஷயமும், அவர் மனத்தில் ஏமாற்றத்தையே கொடுத்தது. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

மறுநாள் காலையிலேயே குழந்தைச்சாமி பழனிஆண்டியிடம் விடைபெற்றுப் புறப்பட்டுவிட்டார்.

ஊருக்கு வெளியே வந்ததும் கோயமுத்தூர் போவதா, இல்லை வேறு திசை

செல்வதா என்று யோசித்தபடி நின்றார்.

அப்போது பிச்சைக்காரன் அவரை, ''சாமி! சாமி!'' என்று கூப்பிட்டபடி ஓடிவந்தான். அவனைப் பார்த்த குழந்தைச்சாமி, ''உன் தங்கச்சிக்கு எப்படியப்பா இருக்கு?'' என்று கேட்டார்.

''இப்போ எல்லாம் சரியாயிடுத்துங்க. எல்லாம் உங்க அருள்தாங்க. கொஞ்சம் என்னோடு வாங்க.'' என்று சொல்லி அழைத்தான்.

மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தார் குழந்தைச்சாமி.

இரண்டு பர்லாங் தூரத்தில் ஓர் இடிந்த மண்டபம். அதன்மீது தென்னங்கீற்றினால் கூரை வேய்ந்திருந்தது. அதில் மூன்று பிச்சைக்காரக் குடும்பங்கள் இருந்தன. அந்த மண்டபத்தில் தான் அவன் வசிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டார்.

பிச்சைக்காரன் அவரை மண்டபத்தின் தெற்கு மூலைக்கு அழைத்துச் சென்றான்.

அங்கு ஒரு கிழிந்த சாக்கு தொங்கிற்று. சாக்கின் பின்புறம் தரையில் விரித்த கோரைப்பாயில் உட்கார்ந்து இருந்தாள் பிச்சைக்காரி. குழந்தைச் சாமியைப் பார்த்ததும் அவள் நகர்ந்து வந்து, அவர் காலில் விழுந்து கும்பிட்டாள்.

அப்போதுதான் பிச்சைக்காரியை நன்றாகக் கவனித்தார். அவளுக்கு முப்பத்தெட்டு நாற்பது வயதுக்குள்தானிருக்கும். அவள் காலின் சக்தி இழந்து நகர்ந்து வந்தது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''சாமி, உட்காருங்க,'' என்று சொல்லி ஒரு பழைய பெட்டியை குழந்தைச்சாமி முன் நகர்த்தினான்.

பெட்டியின்மீது உட்கார்ந்து கொண்டார். ஒட்டி உலர்ந்து போன அந்தப் பிச்சைக்காரியைப் பார்த்ததும் அவளிடம் ஏதாவது ஆறுதலுக்கு விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது அவருக்கு. ''ஏம்மா! உனக்குப் பிறவியிலிருந்தே கால் ஊனமா, இல்லே, இடையிலே ஏற்பட்டதா?'' என்று கேட்டார்.

''அஞ்சலை! சாமிகிட்டே உன் கதையைச் சொல்லு. நான் இதோ வந்துட்டேன்,'' என்று சொல்லிவிட்டு வெளியே ஓடினான் பிச்சைக்காரன்.

நொண்டிப் பிச்சைக்காரியோடு தனியே விடப்பட்ட குழந்தைச்சாமிக்கு என்னவோபோல் இருந்தது.

''சாமி! நான் பரம்பரைப் பிச்சைக்காரி இல்லீங்க. என் புருஷனும் அதிராம் பட்டணத்திலே வெத்திலே பாக்குக் கடை வச்சி, நல்லா சம்பாதிச்சிக்கிட்டிருந்தார்.. எல்லாம் கெட்ட சகவாசத்தாலே வந்தக் கஷ்டமுங்க. யாரோ ஒரு கோயமுத்தூர் ஆளுங்க. பெரிய பணக்காரனும். ஒரு கறுப்புக் கார்லே வருவாருங்க. பாம்பு மாதிரி கார் முன்னாலே ஒரு ஹாரன் வச்சிருக்கும். அவரோட என் புருஷன் எங்கேயோ போவாருங்க. விடிஞ்சப்புறம்தான் திரும்பி வருவாரு,'' என்று சொன்னதுமே குழந்தைச்சாமிக்கு ஒருவிதக் குழப்பம் ஏற்பட்டது.

பாம்பு போன்ற ஹாரன் உள்ள கார், கறுப்பு கார்— இந்த இரண்டு அம்சங்களும் வெங்கடபதியின் காரை அவருக்கு ஞாபகப்படுத்தின.

அதோடு அதிராம்பட்டணம் என்ற ஊர் அவரால் மறக்க முடியுமா? ''உன் புருஷன் பேர் என்னம்மா?'' என்றார் சாமியார். ''அவர் பேரு செவந்திலிங்கம்,'' என்று சொல்லி நிறுத்தினாள். செவந்திலிங்கம் என்ற பெயரைக் கேட்டதுமே குழந்தைச்சாமிக்கு இருந்த சொற்ப சந்தேகமும் நீங்கிற்று.

ஆச்சரியத்தோடு நொண்டிப் பிச்சைக்காரி அஞ்சலையைக் கவனித்தார்.

(தொடரும்)

---

**சொன்னவர் யார்? விடை**

(அ) எம். ஜி. ஆர். (ஆ) சிவாஜி (இ) காமராஜ் (ஈ) அண்ணா (உ) ஈ. வே. ரா. (ஊ) சாவித்திரி (எ) கருணாநிதி (ஏ) இந்திரா காந்தி (ஐ) ஜெமினி கணேஷ்

# மின்னல் மழை மோகினி

ஜாவர் சீதாராமன்



## அத்தியாயம் 17

'செவந்திலிங்கம்' என்ற பெயரை அஞ்சலை சொன்னதுமே, சாமியாரின் ஞாபகம் பல வருஷங்களைக் கடந்து சென்றது. அவர் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்பதும், போலீஸ் தரப்பு வக்கீல்கள், கள்ள நோட்டு, கள்ளக்கடத்தல் சாட்சிகளை மாறிமாறிக் கேள்விகள் கேட்பதும், ஒவ்வொரு குறுக்கு விசாரணையிலும் செவந்திலிங்கத்தின் மனைவியின் பெயரான அஞ்சலை தோன்றியதும் நினைவுக்கு வந்தது.

இறந்த செவந்திலிங்கத்தின் மனைவியைப் போலீஸார் வலைபோட்டுத் தேடினார்கள். ஆனால் அவள் கிடைக்கவில்லை. அவள் மட்டும் கிடைத்திருந்தால் எவ்வளவோ விஷயங்கள் தெளிவாகியிருக்கும். ஒருவேளை அஞ்சலையின் சாட்சியம் அண்ணன் வெங்கடபதியையே பாதித்திருக்கலாம். ஆனால் அவள்தான் கிடைக்கவில்லையே?

அஞ்சலை தொடர்ந்து தன்னுடைய சோகக் கதையைக் கூறிக்கொண்டே சென்றாள்.

''என் புருஷன் ஏதோ தப்பு செய்யறார்ன்னு எனக்குச் சந்தேகமுங்க. தினமும் ராத்திரி வேளையில் எங்கே போறீங்கன்னு கேட்டேன். அவர் பதில் ஒண்ணும் சொல்ல மாட்டாரு. என்னைத் திட்டுவாரு.

ஒரு நாள் ராத்திரி புருஷன் வெளியே போறப்போ, அவர் பின்னாலேயே போனேனுங்க. கடற்கரையை அடுத்த ஒரு வீட்டுக்குள்ளே நுழைஞ்சாருங்க. கொஞ்ச நேரம் பொறுத்து ஒரு தோல் பையோடு வெளியே வந்தார். திடீர்னு போலீஸ் குழல் சத்தம் கேட்டிச்சு. என் புருஷன் சமுத்திரத்தை நோக்கி ஓடினாரு. அடுத்தாப்போல குண்டு சத்தம் கேட்டது. பையோடு என் புருஷன் சமுத்திரக் கரையில் விழறது தான் தெரிஞ்சது. அவர் பின்னாலே போலீஸ்காரங்க ஓடறதைப் பார்த்தேன். அத்தான்னு அலறினேன். அடுத்த நிமிஷம் அந்தப் பாம்பு ஹாரன் உள்ள கறுப்புக் கார் நேரே மோத வர்ற மாதிரி இருந்திச்சு. அடுத்த வினாடி தரையிலே விழுந்தேன்.

கார் என் தொடைமேலே ஏறிச்சுங்க. எனக்கு ஞாபகமே போயிடுச்சி. ஞாபகம் வந்தப்போ நான் அந்தக் கார்லே பின் சீட்டில் படுத்திருந்தேன். கார்லே வேற யாரும் இல்லே. அந்தக் காரை ஒரு பெரிய மனுஷன்தான் ஓட்டிட்டிருந்தார். என்னை திண்டுக்கல்லிலே ஒரு வீட்டிலே கொண்டு போய் வைத்தியம் பார்த்தாரு.

ஒரு காலைச் சரி செய்ய முடியாது என்று அந்தக் காலை வெட்டிட்டாங்க. ஆறு மாசம் வரையிலும் என் புருஷன் செத்த விவரத்தையே என்னிடம் சொல்லலீங்க. அப்புறம்தான் அந்தப்

பெரிய மனுஷன் நான் ஒரு விதவை என்கிறதைச் சொன்னுை 'கவலேப் படாதே. ஆயுள் பூராவும் உன்னைக் காப்பாத்தறேன்'னு சொல்லிட்டு என்னைப் பழனியிலே கொண்டுவந்து, நடு ரோடிலே விட்டுட்டுப் போயிட்டாருங்க. அந்த ஆள் பேர் தெரியலிங்க அப்புறம் அந்த ஆளை நான் பார்க்கவே இல்லீங்க. போலீஸ் ஸ்டேஷன்லே போய் விஷயத்தைச் சொன்னேன் அதிராம்பட்டணம் வழக்கு முடிஞ்சிட்டதுன்னும், கறுப்புக் காரில் கள்ளக் கடத்தல் நடத்திய குற்றவாளி அழகிரியைத் தண்டிச்சாச்சுன்னும் சொன்னுங்க பத்திரிகையிலே வந்த குத்தவாளி படத்தையும்காட்டினுங்க.

படத்திலே இருந்தவனுேட மூஞ்சியே வேறேங்க. 'யாரோ ஒருத்தனைத் தண்டிச்சுட்டீங்க. உண்மைக் குத்தவாளி வேறே'ன்னு சொன்னேன்.

அவுங்க என்னைப் பார்த்து சிரிச்சாங்க. 'என்னம்மா உளர்றே? குத்தவாளியே குத்தத்தை ஒத்துட்டாரு'ன்னு சொல்லி என்னை விரட்டிட்டாங்க. அப்புறம் நான் பிச்சை எடுத்துக்கிட்டிருக்கேன்.''

அவள் பேச்சை நிறுத்தினுள். அவள் சொன்ன அடையாளங்களிலிருந்து அவள் மீது காரை ஏற்றியவன். அவளை விசாரணை முடியும் வரையில் திண்டுக் கல்லில் பூட்டி வைத்திருந்தவன், தன்னுடைய அண்ணன் வெங்கடபதிதான் என்று புரிந்து கொண்டார் பத்திரிகையில் தன்னுடைய படத்தைப் பார்த்திருந்தும் அவளால் தன்னை இன்று அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்பது அவருக்கு நிம்மதியாகவே இருந்தது. கள்ளக்கடத்தலில் பிரதமக் கூட்டாளியாக இருந்த செவந்திலிங்கம் இறந்ததும், அவன் மனைவி மீது கார் ஏற்றிக் கொல்லவா நினைத்தார் வெங்கடபதி? இல்லை, அது எதேச்சையாக நேர்ந்த விபத்தா?

'இவளுக்கு எவ்வளவு தெரிந்திருககுமோ என்ற பயத்தில் வெங்கடபதி அஞ்சலேயைப் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். நான் தண்டிக்கப்பட்டுச் சிறை சென்றதும் அவர் ஆபத்து நீங்கிற்று என்ற நம்பிக்கையில் அவளைப் பழனியில் விட்டுச் சென்றிருக்க வேண்டும்,' என்று புரிந்து கொண்டார். அண்ணன் இவ்வளவு இரக்கம் இல்லாத, கொடூர மனம் படைத்தவரா என்று நினைக்கவே. சாமியாருக்கு வெட்கமாயிருந்தது

அஞ்சலே சாமியாரின் சிந்தனைப் போக்கைக் கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல், ''சாமி! அந்தப் பணக்காரன் ஊரையும், கோர்ட்டையும் ஏமாத்தியிருக்கலாம். ஆனுல் கடவுளை ஏமாத்த முடியாதுங்க. என் காலே மொண்டியாக்கிட்டுப்போன பாவியோட காலே மொண்டியாக்காம ஆண்டவன் விடமாட்டாருங்க. விடவேமாட்டார். ஏன் சாமி! நான் சொல்றது சரிதானே?'' என்று சாமியாரைப் பார்த்து வினவினுள்.

என்ன சொல்வார் சாமியார்? 'அஞ்சலே! வாழ்க்கையில் எல்லா நிகழ்ச்சிகளுக்குமிடையே ஒரு பின்னல் இருக்கு. கவலேப்படாதே நீ பிச்சை எடுக்காமல் வாழ நான் வழி பண்ணறேன். உன் கால்களைப் போக்கியவன் இப்போது இறந்துகூடப் போயிருக்கலாம். நீஅவன்மீது கொண்ட வெறுப்பை நீக்கிவிடு,'' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு எழுந்திருந்தார்.

''சாமி! சாமி! அதுக்குள்ளே புறப்பட்டுட்டீங்களே,'' என்று கூறியபடி அஞ்சலேயின் சகோதரன், உள்ளே நுழைந்தான். அவன் கையில் ஒரு மூங்கில் தடுக்கு இருந்தது. அதில் சில சுட்ட கிழங்குகள் இருந்தன. ''பழம் வாங்கலாம்னுதான் போனேன். பழம் அழுகலா இருந்திச்சு. அதுதான் கிழங்கை வாங்கிட்டு வந்தேன் '' என்று சொல்லிவிட்டு கிழங்குத் தட்டை நீட்டினுன்.

கிழங்கைப் பார்த்ததும் சாமியார் முகத்தில் விநோதமான ஒரு புன்னகை படர்ந்தது. அவர் மனத்தில் வெங்கடபதியின் ஞாபகம் வந்தது. அதே வினடி, தன் முன்னுல் கால் இழந்து கிடக்கும் நொண்டியையும், கிழங்கையும் பார்த்தார். தன் அண்ணனுல் வாழ்விழந்தவளின் குடிசையில் உணவுப் பொருள் களைத் தொடவே அவருக்கு விருப்பம் இல்லே 'பணம் சேகரிக்கும் வெறியில் எவ்வளவு கொடுமைகள் புரிய வேண்டியிருக்கிறது!' என்று நினைத்தார்

கிழங்குகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிச்சைக்காரன் வருந்துவான், தன்னை யார் என்று புரிந்துகொள்ளாதவர்களிடம் தன்னைக் காட்டிக் கொள்வானேன் என்று நினைத்தார். ''இப்போ எனக்குப் பசியில்லே. அந்தக் கிழங்குகளைக் காகிதத்திலே கட்டிக் கொடு. வழியிலே பசிக்கிறப்போ சாப்பிடறேன்,'' என்று சொன்னுர். பிச்சைக்



காரன் கிழங்குகளைக் காகிதத்தில் சுருட்டிக் கொடுத்தான். சாமியார், ''அவளை இனிமேல் பிச்சை எடுக்க வைக்காதேப்பா. ஒவ்வொரு மாசமும் உனக்குப் பணம் அனுப்ப வழி பண்றேன். டாக்டர் சுப்பையா வீட்டிலே போய், முதல் தேதி அன்னிக்கி பணம் வாங்கிக்க. டாக்டர் சுப்பையாவின் தந்தை பேருக்கு மணியார்டர் வரும்,'' என்று சொல்லி விட்டு, கிழங்குகளை எடுத்துக் கொண்டு நகர்ந்தார்.

பிச்சைக்காரனும், அஞ்சலையும் சாமியார் முன் காலில் விழுந்து அழுதபடி நன்றி தெரிவித்தனர். அவரை வாயாரப் புகழ்ந்தனர். தன் அண்ணனைப் பற்றிய உண்மையை மறைத்து, அந்த ஏழைகளிடம் திருடனைப்போல் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறதே என்று குழம்பிப் போயிருந்த சாமியாருக்கு, இந்தப் புகழ்ச்சி தகாத புகழ்ச்சியாகத் தோன்றியது. ''நான் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். இவர்கள் என்னை ஒரு வள்ளல் என்று போற்றுகின்றனர்,'' என்று நினைத்து வேதனைப்பட்டார்.

''நான் உங்களுக்கு உதவுவது விளம்பரத்துக்காக அல்ல. அது ஒரு தர்மமும் இல்லை. என் ஆத்மத் திருப்திக்காகத் தான் செய்யறேன். பாவத்தை எப்படிப் பரம ரகசியமாகச் செய்கிறோமோ அது போலத்தான் நல்லதையும் செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆசை. ஆகையினாலே நீ என்னைப் புகழ வேண்டாம். யாரோ ஒரு பாவி உன் தங்கச்சி மேலே கார் ஏற்றி, நொண்டியாக்கிவிட்டான். அவன் அந்தத் தப்பைப் பயத்திலே செய்து இருக்கலாம். இல்லை, யோசிக்காமல் கண்மூடித்தனமாகச் செய்திருக்கலாம். அவனை நீயும் உன் தங்கச்சியும் மன்னித்துவிட்டால்

போதும். அதுதான் நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டிய உதவி,'' என்று சொல்லிவிட்டுத் தன் தோள்மேல் கிடந்த காவித் துணியைத் தலைமீது போட்டுக் கொண்டு வேகமாக



நடந்தார்.

பழனியிலிருந்து கோவை செல்லும் சாலையில் இரண்டு மைல் நடந்திருப்பார். வெப்பம் தாங்கவில்லை. ஒரு புளியமரத்தடியில் உட்கார்ந்தார். கையில் இருந்த காகிதப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தார். அஞ்சலையின் சகோதரன், நன்றி உணர்ச்சி காரணமாகக் கொடுத்த கிழங்குகள் இருந்தன. பிஞ்சுப் பருவத்து ஆசை அல்லவா? சாமியார் வாயில் உமிழ் நீர் நிறைந்தது. பழுத்த பருவத்து ஞானம் அந்தக் கிழங்கை உண்ணக் கூடாது என்று சொல்லியது.

பிரசினைக்கு முடிவு காணுமுன்பே எதிரே மூன்று வயதுக் குழந்தையொன்று வந்து நின்றது. கறுத்து, மெலிந்த அந்தக் குழந்தையின் உடலில் ஆடையில்லை. வாழைப் பட்டையைக் கோவணமாகக் கட்டி நின்ற அவன், சாமியாரையும் கிழங்கையும் பார்த்தான். பிறகு கிழங்கைத் தன் விரலால் காட்டி, தன் வாயையும் தொட்டுக் காட்டி, தனக்குச் சாப்பிட ஆசை என்பதை விளக்கினான்.

சாமியார் கிழங்குகளை நீட்டினார். குழந்தை கிழங்குகளை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். அங்கு நின்றால் ஒருவேளை சாமியார் மறுபடியும் கிழங்குகளைப் பிடுங்கிக் கொள்வார் என்ற பயம் போலும்!

சாமியார் சிரித்தபடி எழுந்து நடக்க ஆரம்பித்தார். நடந்து கொண்டே போய்க்கொண்டிருந்த சாமியாருக்கு

அன்று புரட்டாசி சனிக்கிழமை என்பது ஞாபகம் வந்தது. அவர் பிறந்ததும் ஒரு புரட்டாசி சனிக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது. ஆனால் அன்று நட்சத்திரம் என்ன என்று தெரியவில்லை ஆகையால் அது தன் பிறந்த நாளா என்று புரியவில்லை. அவர் சிறுபையன் அழகிரியாக இருந்தபோது அவர் அண்ணன் அவர் பிறந்த நாளை எவ்வளவு ஆர்வத்தோடு கொண்டாடுவான்! பணம் சேருவதற்கு முன்பு வெங்கடபதி எப்படிக் குழந்தை உள்ளத்தோடு இருந்தான்! பணம் வந்தபின் எப்படி மாறிவிட்டான்!

வெங்கடபதியை நினைத்ததும் உடனே அவருக்கு மலையாளமும். அங்கு அவர் ஸ்தாபித்த பள்ளியும், அனாதை விடுதியும் ஞாபகத்துக்கு வந்தன. உடனே பளிச்சென்று மோகினியைப் பற்றிய எண்ணம் வந்தது. மோகினி என்று நினைக்கவும், சாமியாரின் மனத்தில் சொல்ல முடியாத ஓர் இன்பம் பிறந்தது. அவளைப் பார்த்து வருஷங்கள் பல ஆகிவிட்டனவே என்று நினைத்தார். அட்ரஸ் இல்லாமல், பணம் இல்லாமல் வாழ விரும்பினார் வாழ்ந்தும் காட்டிவிட்டார். ஊரை விட்டு ஓடினாலும் உடலை விட்டு ஓடமுடியாது. குடும்பத்தை விட்டு ஓடினாலும், நினைவுகள், ஞாபகங்கள் என்ற குடும்பத்தை விட்டு ஓட முடியாது என்பதைப் புரிந்து கொண்டார்.

'அலை அலையாக எழும் உணர்ச்சிகள், குலை குலையாகத் தோன்றித் தொங்கும் நினைவுகள் இவைகளுக்கு முடிவே கிடையாதா? ஒன்றிலே கோடிக்கணக்கான பலவற்றைக் காண்பது எக்காலம்? பல கோடிப் பொருளிலே ஊடுருவி நிற்கும் ஒன்றைக் காண்பது எக்காலம்?' என்று சிந்தித்தபடி மேற்கு நோக்கி நடந்தார். மேற்கு திசையிலிருந்து சில்லென்று காற்று வீசியது. மேகங்கள் மலையாளத்தில் மழையைப் பொழிந்துவிட்டு, தண்மையான வெறும் மென் காற்றாகக் கோவை ஜில்லாவை நோக்கி வீசியது. அக் காற்று களைப்பை ஆற்றி, உடலின் வெப்பத்தைப் போக்க, சாமியார் அப்படியே ஒரு திட்டில் சாய்ந்தார். அவரைச் சுற்றிக் கற்கள் கிடந்தன, அவரைப்போல் அசைவில்லாமல். சற்றுத் தூரத்தில் ஒரு பசுவும் மேய்ந்துவிட்டு அசை போட்டபடி படுத்துக் கிடந்தது. சாமியார் எண்ணங்களை மென்றபடி கிடந்தார். அவ்வளவுதான் வித்தியாசம்.

அதே நேரத்தில் மோகினி ஆசிரியையாய் இருக்கும் பள்ளியில் பாருக்குட்டி அம்மாள் பள்ளியின் ஸ்தாபகரான சாமியாரின் பிறந்த நாளை நினைத்து, அவர் படத்துக்கு அலங்காரம் செய்து வைத்திருந்தாள். குழந்தைகளுக்குப் பொரியும் வெல்லமும் கொடுத்துவிட்டு, சாமியாரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னாள்.

குழந்தை கௌரி இதுவரை சாமியாரைப் பார்த்தே அறியாதவள். ஆதலால், அவர் தனக்குத் தாத்தா முறை என்று தெரியவும் மிகவும் ஆச்சரியப்பட்டாள். மோகினி டீச்சரிடம் அவரைப் பற்றிப் பேசவும், மோகினி அவரைப் பற்றிப் புகழ்ந்து சொன்ன விவரங்கள் கௌரியின் மனத்தைக் கவர்ந்தன அவள் தாயோ தந்தையோ இதுவரை படத்திலிருக்கும் சாமியாரைப் பற்றி, ஒரு முறைகூடப் பேசிக் கேட்டதில்லை.

விஜயாவுக்குச் சாமியாரிடம் பெரிய மதிப்பு ஒன்றும் கிடையாது. அதனால் அவள் பேசவில்லை. ராஜுவோ உலகத்தைத் துறந்து அட்ரஸ் இல்லாமல் எங்கோ சுற்றித் திரியும் சித்தப்பாவைப் பற்றிக் குழந்தையிடம் சொல்வதால் என்ன பயன் என்று சும்மா இருந்துவிட்டான்.

குழந்தைக்குத் தன் குடும்பத்துப் பெரியவரைப் பற்றி, டீச்சர் அவ்வளவு அன்போடும் ஆர்வத்தோடும் பேசுவது, பெருமையாகவே இருந்தது. "டீச்சர்! சின்னத் தாத்தாவை உங்களுக்கு நல்லாத் தெரியுமா?" என்று கேட்டாள்.

அதற்கு மோகினி, "பல வருஷத்துக்கு முன்னாலே அவரைப் பார்த்தது. ஆனால் அவரை மறக்கவே முடியாது. நான் கடவுளை நேரில் பார்த்தது கிடையாது. ஆனால் கடவுள் உருவம் எடுத்து வந்தார்னு கிட்டத்தட்ட உன் சின்னத் தாத்தா மாதிரிதான் இருப்பார்னு நினைக்கிறேன்." என்று சொன்னாள்.

அன்றிரவு கௌரி தன் தாயிடம் குழந்தைச் சாமியாரைப் பற்றி விசாரித்தாள் விஜயா அன்று தலைவலியால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்ததால் குழந்தையின் கேள்விகளுக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. "அவரைப் பத்திப் பேசாதே கௌரி. அவராலே நம்ம குடும்பத்துக்கே கெட்ட பெயர். அவர் ஜெயிலுக்குப் போனவர் அவர் ஊரைவிட்டு ஒழிஞ்சுபோனதே நல்லது. சும்மா தொண தொணன்னு அவரைப்

பத்திப் பேசாதே,'' என்று விஜயா மகளைக் கண்டித்தாள்.

''என்னம்மா! டீச்சர் சின்ன தாத்தா நல்லவர்னு சொல்ருர். அவர் கடவுள் மாதிரின்னு சொல்ருர். நீ என்ன என்னவோ சொல்றியே?'' என்று கௌரி மீண்டும் கேட்டாள்.

டீச்சரைப் பற்றிக் கௌரி சொன்னதும், விஜயாவுக்கு ஆத்திரம் வந்தது ''உன் டீச்சருக்கு என்ன தெரியும்? அவள் ஒரு கூலிக்காரி. எதுக்கெடுத்தாலும் அந்த டீச்சரைப் பத்தியே பேசிட்டிருக்கிறே?'' என்று தாய் சொல்லவும், கௌரி, ''டீச்சர் மட்டுமில்லேம்மா. ஹெட்மிஸ்ட்ரஸ்கூட சின்னத் தாத்தா நல்லவர்னுதான் சொன்னுங்க. எல்லாருமே அவரை நல்லவர்னுதான் சொல்ருங்கம்மா,'' என்ருள்.

விஜயாவுக்கு ஆத்திரம் இன்னும் அதிகமாயிற்று. ''அவுங்களுக்கெல்லாம் உண்மை தெரியாது. உங்க சின்னத் தாத்தா ஒரு குலத்தைக் கெடுத்த கோடாரி! அவரைப் பத்திப் பேசாதே! பேசாதே!'' என்று கத்தினுள்.

அப்போது அறையில் நுழைந்தான் ராஜு. தன்னுடைய சித்தப்பாவை விஜயா கேவலமாகப் பேசுவதைக் கேட்டதும், உரத்த குரலில், ''விஜயா! பெரியவரைப் பற்றி ஏன் தவருப் பேசறே?'' என்று கேட்டான்.

''மகாப் பெரியவர்! அவர் கம்பி எண்ணினது ஊருக்கெல்லாம் தெரிஞ்ச விஷயம்தானே?'' என்ருள் விஜயா.

ராஜு, ''விஜயா! அவரைப் பத்திப் பேசாதே. பேசினுல் எனக்குக் கெட்ட கோபம் வரும்,'' என்று கோபத்தோடு கூறினுன். ராஜு அவ்வளவு கோபமாகப் பேசி விஜயா அதுவரை பார்த்தது இல்லை. குழந்தை கௌரியும் தன் தந்தை கோபமாக இருந்ததைப் பார்த்ததே இல்லை. ஆச்சரியத்தோடு தந்தையைப் பார்த்தாள்

குழந்தையின் முன்னுல் கணவன் தன்னிடம் கூச்சலிடுவதைப் பார்த்த விஜயாவுக்குப் பொறுக்க முடியவில்லை. ''உள்ளதைச் சொன்னுல் ஏன் கோபப் படறீங்க? கொலையும், திருட்டும் நான் பிறந்த வீட்டிலே கிடையாது. அந்தப் பெருமை உங்க வீட்டுக்குத்தான் உண்டு. உங்க சித்தப்பா செய்த பாவத்தைத்தான் நான் இப்போ சுமக்கிறேன். இல்லேன்னு நல்லாயிருந்தவள் ஏன் இப்படிக் கால் இல்லாமல் கிடக்கணும்?'' என்று குத்திக்காட்டினுள்.

பொறுமை இழந்த ராஜு, சூழ்நிலையை மறந்தான். கைகளை ஓங்கிய படி, ''விஜயா! வாயை மூடறியா, இல்லியா?'' என்று அடிக்க ஓடினுன்.

தந்தையின் பயங்கரமான முக மாறுதலையும், அவரால் தன் தாய்க்கு வர இருந்த ஆபத்தையும் பார்த்து மிரண்டுபோன கௌரி, ''அப்பா!'' என்று அலறினுள்.

கௌரியின் அலறல் சத்தம் கேட்டு. ராஜுவின் ஓங்கிய கை நடுங்கியது. குழந்தையின் முகத்தில் தோன்றிய மருட்சியைக் கண்டு வெட்கமடைந்தான். ''திடீரென்று ஒரு மிருகமாகி விட்டோமே,'' என்று தன்னைத்தானே வெறுத்துக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் விஜயா ''அடியுங்கள்! ஏன் நிறுத்திட்டீங்க? நல்லா அடியுங்கள்!'' டூன்று கூச்சலிட்டாள்.

கௌரி அங்கு நிற்கவே விரும்பாமல், அறையை விட்டே ஓட்டம் பிடித்தாள்.

(தொடரும்)




''உங்கள் இலாகாவின் ஹிந்திப் பரீட்சையை நீங்கள் எழுதத் தவறியமைக்காக உங்கள் ஆண்டுச் சம்பள உயர்வை ஏன் நிறுத்தி வைக்கக்கூடாது?'' என்று காரணம் கேட்டு டாக்டர் தெலாங்க் என்பவருக்குக் கடிதம் எழுதியிருந்தது மகாராஷ்டிர மாநில சர்க்கார்.

தெலாங்க எழுதத் தவறியது: ஹிந்தியில் ஓர் ஆரம்பப் பரீட்சை.

அவர் வகிக்கும் பதவி: அரசினர் கலை—விஞ்ஞானக் கல்லூரியில் ஹிந்தி மொழித் துறைத் தலைவராக.

பெற்றிருக்கும் உயர்தரப் பட்டம்: பி. எச். டி. அனுபவம்: பத்தாண்டுகளாக பி. ஏ. மாணவர்களுக்கு ஹிந்தியும், சமஸ்கிருதமும் போதித்து வருகிருர்.

ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா.)

—''துராப்'';



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 18

கௌரி அறையை விட்டு ஓடிய பின்பு, ராஜு குழப்பத்தோடு தன் மனைவி விஜயாவைப் பார்த்தபடி நின்றான்.

விஜயாவுக்கு விவரிக்க முடியாத அதிர்ச்சி. 'பெட்டியிலே அடைபட்டுக் கிடந்த பாம்பு இன்று சீறுகிறது. நான் கிழித்த கோட்டைத் தாண்டாமல் இருந்தவர் இன்று என்னையே அடிக்கக் கையை ஓங்கிவிட்டார். பொறுமையின் அவதாரம் இன்று பொறுமையிழந்து நிற்கிறது. நம் கணவரின் பண்பு என்ற கோட்டையிலும் சில ஓட்டைகள் இருக்கின்றன. அவரும் ஒரு மனிதர்தான்; தன் நிலை தடுமாறக்கூடிய மனிதர்தான்,' என்பதை உணர்ந்தாள்.

இந்த உண்மையை உணர்ந்ததில் விஜயாவுக்குக் கோபம் ஏற்படவில்லை. திருப்தியே ஏற்பட்டது. 'கோபப்படுவது, பொறுமை இழப்பது, இரண்டும் என்னுடைய பிரத்தியேகமான பலவீனம் என்று நினைத்திருந்தேன். ஆனால் அசையா மலை என்று நம்பிய என் கணவருக்கும் அந்தப் பலவீனம் இருக்கிறது,' என்று நினைத்தவளுக்கு, உண்மையிலேயே லேசாகச் சந்தோஷமே ஏற்பட்டது.

இதுவரையில் அவள் கோபப்படுவாள். அரைமணி கழித்து வருந்தி, கணவனிடம் மன்னிப்புக் கேட்பாள். ஆனால் இன்று கணவரல்லவா மன்னிப்புக் கேட்க வேண்டும்? நினைக்கவே, அது விஜயாவுக்கு ஒரு புதிய அனுபவமாய்த் தோன்றியது. அவள் எதிர்பார்த்தபடியே ராஜு, ''விஜயா! என்னை மன்னித்துவிடு. என்னையும் அறியாமல் நான் சுயஉணர்வு இழந்துவிட்டேன்,'' என்று சொன்னான்.

சுயஉணர்விழந்த நிலையில் உள்ள ஆடவனையே பெண் இனம் விரும்புகிறது என்பதை ராஜு உணரவில்லை. பண்பில் பூரணத்துவம் உள்ளவனைப் பெண் மனம் கைகூப்பித் தொழலாம். ஆனால் காதலிக்காது. பெண் மனம் ஒரு தாய் மனம் அல்லவா? குறைபாடுகள் உள்ளவர்களிடம்தான் அது இரக்கம் காட்டும். முடிவில் அந்த இரக்கமே காதலாக மாறிவிடும். அதனால்தான் கோழைகள், சோம்பேறிகள், குடிகாரர்களுக்குக் கற்பரசிகள் மனைவிகளாய் அமைந்து வாழ முடிகிறது.

தன்னை அடிக்கக் கையை ஓங்கிய கணவனை, விஜயா இன்று புதுக் கண்

களோடு நோக்கினுள். அந்தப் பார்வையில் ஒரு பயம், மரியாதை, அன்பு—மூன்றும் கலந்திருந்தன. அதைப் புரிந்து கொள்ளாத ராஜு அவளிடம் மன்னிப்புக்காகப் போராடிக் கொண்டிருந்தான்.

விஜயாவும் பெண்ணுக்கே இயல்பான தந்திரத்துடன், அவளுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் கோபமும் வருத்தமும் அடைந்தவள் போல் மாய்மாலம் செய்தாள். ஆனால் அந்தப் பாசாங்கு நடிப்பின் நடுவே, கணவனின் அன்பை இழந்துவிடக் கூடாது என்ற முயற்சியும் இருந்தது. "நீங்கள் ஒன்றும் தவறு செய்யவில்லை. நான் தான் உங்கள் சித்தப்பாவைப்பற்றிப் பேசி இருக்கக் கூடாது. ரத்த பாசம் விடுமா? வேணுங்கிறவங்களைப்பத்திச் சொன்னால் கோபம் வராமல் இருக்குமா என்ன? ஒரேயடியா அடிச்சிருந்தீங்கன்னு என் உயிரே போயிருக்கும். எனக்கும் எவ்வளவோ நிம்மதியா இருந்திருக்கும்," என்று அழுதபடி சொல்லிவிட்டு ஓரக்கண்ணால் தன் கணவனைக் கவனித்தாள்.

ராஜு, "விஜயா! சித்தப்பா விவகாரம் எனக்குப் பெரிய குழப்பமாவே இருக்கு. இவ்வளவு சொத்திருந்தும் நம்ம வீடு இப்படி வேதனையிலேயே சூழ்ந்திருக்கக் காரணம், ஒரு வேளை சித்தப்பாவுக்குச் சேர வேண்டியதை அவருக்குக் கொடுக்காம இருக்கிறதனாலே தானோ என்னவோன்னு நினைக்கிறேன். ஆனால் சித்தப்பாவோ, சொத்தே வேண்டான்னுட்டுப் போயிட்டார். அவர் எங்கே இருக்கார்னு தெரியல்லே. திரும்பி வந்தாக்கூட, அவர் பங்கை வாங்கிக்க மாட்டார். நம்ம வீட்டிலே அவர் சாப்பிடறதுகூடக் கிடையாது விஜயா," என்றான்.

"அவர் எதுக்கு இப்படி நாடகம் ஆடறார்னு எனக்கும்தான் புரியல்லே," என்று விஜயா கூறினாள்.

அதற்கு ராஜு, "அவர் நாடகம் ஆடல்லே விஜயா. உண்மையாவே அவர் ஒரு சிறந்த துறவின்னுதான் தோணுது," என்றான்.

அதை ஏற்றுக் கொள்ளாதவள்போல் விஜயா, "கள்ளக் கடத்தல், கள்ள நோட்டெல்லாம் தயார் செய்துட்டு ஜெயிலுக்குப் போனவர், வெளியே வந்தவுடனே துறவியாயிட்டார்னு பொருத்தமாயில்லியே!" என்று சொல்லிவிட்டு, ராஜுவின் முகத்தைப் பார்த்தாள்.

ராஜுவுக்கு மறுபடியும் கோபம் தலைதூக்கிற்று. ஆனால் உடனே அடக்கிக் கொண்டான். "அதில்லே விஜயா. அப்பா சித்தப்பாவிடம் மரியாதையா நடந்து கொண்டவிதம், சித்தப்பாவின் பெரும்போக்கு இதையெல்லாம் பார்க்கிறப்போ, சித்தப்பா அந்த வழக்கிலே குற்றவாளியா இருந்திருந்தார்னு என்னாலே நம்ப முடியல்லே," என்றான்.

"அவர் குற்றவாளியா இல்லாதப்போ வழக்கிலே குற்றத்தை ஒப்புக் கொள்ள அவருக்கு என்ன வைத்தியமா?" என்று விஜயா கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு ராஜுவால் பதில் சொல்ல முடியவில்லை. அவன் இதயம் சித்தப்பா நிரபராதி என்று சொல்லிற்று. ஆனால் அவன் அறிவு, ஊர் பேச்சு, சந்தர்ப்ப சாட்சியத்தைச் சிந்திக்கும்போது குழம்பியது. சற்று நிதானித்த பிறகு ராஜு, "அதுதான் எனக்கும் புரியல்லே விஜயா. ஒருவேளை ஆரம்பத்திலே சித்தப்பா ஒரு மாதிரியா இருந்து, சிறைச்சாலையிலே மாறியிருக்கலாம் அல்லவா?" என்று சொல்லி நிறுத்தினான்.

தந்தை வெங்கடபதிக்கும், சித்தப்பா அழகிரிக்கும் உள்ள ரகசியத் தொடர்புபற்றி, ராஜுவுக்கு எதுவும் தெரியாது. உயிருக்கும் மேலாக நேசித்த ஒரே மகனிடம் வெங்கடபதி இறந்த காலத்தின் உண்மை உருவத்தைச் சொல்ல முதலில் துணியவில்லை. வெங்கடபதி இறப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன் வெங்கடபதியின் மனம், 'தம்பி நிரபராதி, உத்தமன்,' என்பதைச் சொல்லத் துடித்தது ராஜுவிடம்.

'அழகிரிசாமி உன் சித்தப்பா அல்ல. அவன் ஒரு தெய்வம். என்னை வாழ வைப்பதற்காகவே பிறவி எடுத்த தெய்வம்,' என்று சொல்லி, தன் மகனுடைய மனத்தில் தன் தம்பியின்மீது ஒரு நன்மதிப்பை ஏற்படுத்த விரும்பினார்.

அது விஷயமாகத் தம்பி குழந்தைச்சாமியையே கேட்டார். ஆனால் குழந்தைச்சாமி, "அண்ணா! உங்களுக்குப் புத்தி இருந்தால் அதைச் செய்யமாட்டீங்க. நீங்க தவறு செய்து பணத்தைச் சம்பாதிச்சீங்க. ஆனால் ராஜு, பணத்துக்காகத் தவறு செய்வது என்றால் என்னன்னுகூடத் தெரியாமல் சுத்த சத்துவமா வளர்ந்திருக்கான். இந்தச் சொத்து எப்படி வந்துச்சுன்னு அவனுக்குத் தெரிஞ்சா, அவன் உங்களை வெறுப்பான். சொத்தை வெறுப்பான். தன்னையே வெறுப்பான். அப்புறம் என்னை ஆகும்னு சொல்ல முடியாது. நம்மைப்

பற்றிய நல்ல உண்மைகள் மட்டும் தான் குழந்தைகளுக்குத் தெரிய வேண்டும். விகாரமான உண்மைகளை ஏன் நம் சந்ததிகளுக்குச் சொல்ல வேண்டும்? ஒரு பொய்யால் நல்லது ஏற்படும்போது, அந்தப் பொய் சத்தியத்தைவிட எவ்வளவோ மேல்,'' என்று அடித்துச் சொல்லித் தடுத்தார்.

வெங்கடபதி சில நாட்களுக்குத் தன்னுடைய உண்மைச் சரித்திரத்தைச் சொல்லும் முயற்சியை ஒத்திப் போட்டார். ஆனால் அவர் மனச்சாட்சி, சாகும் முன் எப்படியாவது உண்மையை ராஜுவிடம் சொல்லிவிட வேண்டும் என்று தவித்தது. ஒரு நாள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு உண்மையைச் சொல்ல ராஜுவை அழைத்தார். ஆனால் வெங்கடபதி பேசு முன்பே ராஜு அவரிடம் பேசியது, அவரை அதிர்ச்சியடையச் செய்தது.

ராஜு, ''அப்பா! கஸ்தூரி ஐயா விஷயம் தெரியுமாப்பா? அவன் இத்தனை நாளும் பெரிய ஆஷாடபூதியா இருந்திருக்கான். நெத்தியிலே நாமம். கழுத்திலே துளசி மாலை. ஏகாதசி விரதம் இப்படியெல்லாம் நடிச்சிருக்கான். அவனிடம் வேலை செய்யும் குமாஸ்தா சம்சாரத்தோடு கள்ள நட்பு வச்சிருக்கான். இப்போ விஷயம் வெளியே வரவும், அந்தப் பெண் தற்கொலை பண்ணிக்கிட்டாளாம், பாவம்! இனிமேல் நாம அந்தக் கஸ்தூரியோட எந்த வியாபாரமும் வச்சுக்கக் கூடாது. நம்ம மில்களிலே அவன் சரக்கை வாங்கக் கூடாதுன்னு உத்தரவு அனுப்பிச்சிட்டேன்,'' என்று சொன்னான்.

இதைக் கேட்ட வெங்கடபதி சற்றுத் தயங்கியபடி, ''கஸ்தூரி ஐயா சொந்த விஷயம் எப்படி வேணும்னு போகட்டும். அவன் வியாபாரத்திலே நாணயஸ்தன். பல வருஷங்களாக நமக்குப் பருத்தி சப்ளை செய்யற வியாபாரி,'' என்று கூறினார்.

அதற்கு ராஜு, ''பெண்ணாசை உள்ளவன் ஏன் பக்தி வேஷம் போடணும்? வெளிப்படையாச் சோரம் போறவன், திருடறவன், குடிகாரனைக்கூட மன்



னிச்சுடலாம்ப்பா. ஆனு, நல்லவனைப் போல நடிக்கிற பரம சண்டாளனை மன்னிக்கவே கூடாதுப்பா, மன்னிக்கவே கூடாது,'' என்றான் ஆத்திரத்தோடு.

''வீட்டுக்கு வீடு வாசப்படி இருக்கும் ராஜு. நம்ம வீட்டிலேயே அந்த மாதிரி தவறு பண்ணுறவங்க இருந்தா?'' என்று வெங்கடபதி கேட்டுவிட்டு, மகனுடைய முகத்தை அச்சத்தோடு பார்த்தார்.

ராஜு, ''நீங்க சொல்றதின் அர்த்தம் தெரியுது அப்பா. சித்தப்பாவைப் பற்றித்தானே சொல்றீங்க? அவர் கள்ளக் கடத்தல் செய்தார்; உண்மை. ஆனல் அவர் மறைஞ்சு வாழல்லே, ஊருக்கு முன்னலே நல்லவனு நடிக்கல்லே. வேஷம் போடல்லே, தன் குற்றத்தை இன்னொருத்தர் மேலே சுமத்தல்லே, குற்றத்தை ஒப்புக்கொண்டு, தண்டனை ஏத்துக்கிட்டார். தவறு செய்யறது மனித இயற்கை. ஆனல் தவறு செய்துகிட்டே உலகத்தின் முன்னலே நல்லவனு பேரெடுக்க ஆசைப் படறதுதான் கோழைத்தனம்,'' என்று உஷ்ணமாகப் பதில் சொன்னன்.

வெங்கடபதி அப்படியே இடிந்து போய் உட்கார்ந்துவிட்டார். ராஜு கஸ்தூரிஐயாவை வர்ணித்த அத்தனை வாக்கியங்களும், தனக்கும் ஓரளவு பொருந்தும் என்பதை உணர்ந்த வெங்கடபதி, ராஜுவின் மனநிலையை நன்கு புரிந்து கொண்டார். ராஜுவிடம் தன் கடந்த கால வாழ்க்கையைக் கூறுவது உசிதமல்ல என்ற முடிவுக்கு வந்தார். அவர் சேகரித்த சொத்தின் அஸ்திவாரமே, பாவத்தால் ஆகியது. ஒரு கொலை, ஒரு கூட்டாளியின் மனைவி தன்னல் முடமாக்கப்பட்டுப் பிச்சை எடுக்கிருள் என்பன போன்ற உண்மைகளை அறிந்தால், தம்பியைப்போல் மகனும் சொத்தே வேண்டாம் என்று உதறித் தள்ளிவிடுவான் என்று நினைத்துக் குழம்பினர். ஆகையால் ராஜுவிடம், அதிராம்பட்டண வழக்கின் உண்மையைச் சொல்லவில்லை.

ஆனல் ராஜு தன் தந்தையிடம், ''ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று சொன்னீர்களே, அது என்னப்பா?'' என்று கேட்டான்.

வெங்கடபதி ஒரு வினடி யோசித்துவிட்டு, ''ஒன்றுமில்லை ராஜு. நான் இறந்த பின்பு, நீ உன் சித்தப்பாவை மிகவும் மரியாதையாக நடத்த வேண்டும். அவர் எது கேட்டாலும் உடனே யோசிக்காமல் கொடுத்துவிடு. அவரை நீ குற்றவாளி போல் நடத்தாதே. அவரைக் காரணமில்லாமல் தண்டிக்கப்பட்ட நிரபராதியாகவே நினைக்க வேண்டும். அது மட்டுமல்ல. அழகிரி எனக்கு வெறும் தம்பியல்ல. உனக்குச் சித்தப்பா மட்டுமல்ல, இந்த வீட்டை வாழவைக்க வந்த நம் குல தெய்வம் அவன். அவன் மனம் வேதனைப்பட்டால் நம் குடும்பம் உருப்படாது,'' என்று சொன்னர்.

ராஜு, தன் தந்தைக்கு அவரது தம்பியிடம் தோன்றிய அன்பைக் கண்டு தந்தையைப் பாராட்டினன். வெங்கடபதிக்கு ஒரு திருப்தி. 'நம் கௌரவத்தை மகன் பார்வையில் இழக்காமல், தம்பியின் குற்றமற்ற தன்மையையும் விளக்கிவிட்டோம்,' என்று நினைத்தார்.

தந்தை கூறிவிட்டுப் போன இந்த வார்த்தைகளின் ஞாபகம் தான் தன் சித்தப்பாவை விஜயா கேவலமாகப் பேசியதும் ராஜுவுக்கு ஏற்பட்டது. அதனல்தான் ராஜுவுக்குக் கோபமும் வந்தது. அவனை அடிக்கவும் கை ஓங்கி

## ஓட்டல்காரர்களுக்கு மட்டும் தனியான தந்தி முறை

நீங்கள் டோக்கியோவுக்குப் போகப் போகிறீர்கள். ஓட்டலில் ரிஸர்வ் செய்ய வேண்டியிருக்கிறது. 'நான் ஞாயிற்றுக் கிழமை காலை அங்கு வருகிறேன். நான்கு படுக்கைகள் கொண்ட மூன்று அறைகளை ரிஸர்வ் பண்ணி வையுங்கள்' என்று தந்தி அடிக்க வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இத்தனை நீளமாய் அடிக்க வேண்டுமே, செலவு அதிகமாகுமே என்று நீங்கள் யோசிக்க வேண்டியதில்லை.

'போபப் காரிட்' என்று இரண்டே வார்த்தைகள்! அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

உலகில் உள்ள எல்லா ஓட்டல்களுக்கும் பொதுவான தந்தி மொழி இது. மற்ற விவரங்களுக்கு: 'ஹிந்துஸ்தானி .·.பர் த டூரிஸ்ட்- இந்திய அரசாங்கத்தின் ஆங்கில வெளியீடு.



விட்டான். அன்புத் தந்தையின் அருள் மொழியைக் காக்கப் போய், அங்கஹீன மான தன் மனைவியை அடிக்கும் அள வுக்கு மிருகமாகிவிட்டோமே என்று வருந்தினன். ஒரு தவறைத் திருத்த நினைத்து இன்னொரு தவறைச் செய்து விட்டோமே என்று வருந்தினன். அன் றிலிருந்து சில நாட்களுக்கு ராஜு விஜயாவிடம் அதிகப் பரிவோடு நடந்து கொண்டான். எப்பொழுதும் அவள் அருகிலேயே உட்கார்ந்திருந்து அவளைக் கவனித்து வந்தான்.

இது விஜயாவுக்கும் மகிழ்ச்சியை அளித்தது. ஆனல் குழந்தை கௌரிக்கு மட்டும், அன்று முதல் தந்தையிடம் ஒரு பயம் ஏற்பட்டது. ராஜு குழந் தையிடம் கொஞ்சிப் பேச வந்தால்கூடக் கௌரி பயந்து ஒதுங்கிப் போக ஆரம் பித்தாள். ராஜு வேதனை அடைந் தான். விஜயா திடீரென்று கோபப் படுவதும், உடனே கோபம் மாறி அன்பு காட்டுவதும் குழந்தைக்குப் புரியாத புதிராகத் தோன்றியது. அப்பா கோபத் தில் தாயை அடிக்கப் போவதைப் பார்த்த நாள் முதல் தந்தையும் பயப் படவேண்டிய நபர் என்று கௌரி ஒதுக்கி விட்டாள்.

அவள் அன்பு செலுத்த மிஞ்சியிருந்த தெல்லாம், மோகினி டீச்சர் ஒருத்தி தான். ஆகையால் குழந்தையின் சிறு உலகத்தில், மோகினியின் முக்கியத் துவம் மெள்ள மெள்ள, தாய் தந் தையர்க்கும் மேலாக வளரத் தொடங் கியது. ஒவ்வொரு நாளும் வீட்டிலிருந்து கொண்டுவரும் பலகாரங்களை மோகினிக் குக் கொடுக்காமல் சாப்பிட, கௌரிக்கு மனம் வராது,

அதே போல் மோகினியும், குழந் தைக்கு வீட்டிலிருந்து விதவிதமான பலகாரம் செய்துகொண்டு வருவாள். நாராயணி அம்மாள்மீது மோகினி வைத்த அன்பு ஒருவிதம். அறியாப் பருவத்தில் ஆதரவு காட்டிய தாய் என்ற நன்றி உணர்ச்சி அது. ஆனல் கௌரி யிடம் எதையும் பெற்றுக் கொள்ளாமல், எதையும் எதிர்பார்க்காமல் அன்பு காட் டினள். கௌரியின் முகத்தில் ஆரோக் கியம் ஒளி வீச, அவள் உடலில் பலம் வளர வளர, மோகினி, தன் அன்பால், போதனையால் குழந்தை பலமடைந்து வருகிறது என்று பெருமைப்பட்டாள். நாராயணி அம்மாளிடம் வீடு திரும் பியதும் கௌரியைப்பற்றித்தான் பேசு வாள். தோட்டத்தில் பழுத்த பழங் களைக் கௌரிக்கென்று துணியில் சுற்றி



''உங்க மருமகள் கழுத்திலே இருக் கும் தாலி, 14 காரட்டா, இல்லே 22 காரட்டா?''

''பிளாஸ்டிக்தான்!''

எடுத்துச் செல்வாள். இதைக் கண்ட நாராயணி அம்மாள் சிரிப்பாள்.

''என்ன மோகினி! கல்யாணம் ஆவதுக்கு முன்னுடியே உனக்கு ஒரு பெண் கிடைச்சுட்டா. அதுவும் பணக் கார வீட்டுப்பெண். ஆனல் பணக்கார வீட்டுப் பெண்ணிடம், அன்பு செலுத் தறபோது ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். பார்த்துக்கோ,'' என்று சொல்வாள்.

நாராயணியின் எச்சரிக்கையை மோகினி புரிந்து கொண்டுதான் இருந் தாள். குழந்தை கௌரி எவ்வளவோ முறை காரில் வரும்படி அழைத்தும் மோகினி காரில் ஏறியதில்லை. கௌரி ஒரிருமுறை மோகினியின் வீட்டுக்கே வருகிறேன் என்று சொன்னபோது, மோகினி, குழந்தையின் மனம் புண் படாமல் காரணம் சொல்லித் தடுத் திருக்கிறள். கௌரி பள்ளி முடிந்து வீட்டுக்குப் புறப்படுவதற்குத் தயங்கி நிற்பாள். டீச்சருடனேயே இருந்து விடலாம் போல் இருக்கும் கௌரிக்கு.

மாதவன், ''அம்மா திட்டுவாங்க. வாங்க பாப்பா. போகலாம்,'' என்று வற்புறுத்தி அழைப்பான்.

கௌரி புறப்படமாட்டாள். மோகினி யின் அருகிலேயே தயங்கி நிற்பாள். டீச்சர் வற்புறுத்தின பிறகுதான் வீட் டுக்குப் புறப்படுவாள். கௌரிக்கென்று புதிது புதிதாகத் தந்தை வாங்கிக் கொடுத்த கௌன்களை, டீச்சர் பார்த்து

# தொட்டிக்குள்ளே ஓர் ஆலமரம்

சென்னை ஓவியக்கலைத் தொழிற்கல்லூரி ஆசிரியர் திரு. தனபாலிடம் ஆலமரம் ஒன்று இருக்கிறது. வீட்டிலா? ஆமாம். அதுமட்டுமல்ல, அது ஒரு தொட்டியில் வளர்கிறது. விழுதுகூட விட்டிருக்கிறது. இதன் வயது பத்தொன்பதாம்!

**எப்படி வளர்ப்பது?**

மிகக் கண்ணும் கருத்துமாக இந்த மரத்தைப் போற்றி வளர்க்கிறார் திரு. தனபால்.

தொட்டிக்குள் பூசாரம் குறைந்துவிடுமாதலால் ஓராண்டுக்கு ஒருமுறையாவது வேறு தொட்டிக்குச் செடியை மாற்றுகிறார். அப்படி மாற்றும் போது, வேர்கள் அறுந்துவிடாமலும் பழைய மண்ணும் கொஞ்சம் போல் ஒட்டிக் கொண்டிருக்கும்படியும் பார்த்துக் கொள்கிறார். இல்லையேல் புதுமண்ணைச் செரிக்க முடியாமல் செடி பட்டுப்போய் விடுமாம்.

**'போன்ஸாய்' என்றால்...**

இப்படி தொட்டிக்குள் பிரம்மாண்ட மரங்களை வளர்ப்பதை ஒரு கலையாகச் செய்து காட்டியவர்கள் ஜப்பானியர்கள். 'போன்ஸாய்' என்று பெயர் இந்தக் கலைக்கு. 'போன்ஸாய்' என்றால் ஜப்பான் மொழியில் ஒடுங்கிய கலயம் என்று பொருள்.

அட்டைப்படத்தில் ஆசிரியர் எஸ். தனபால் தமது போன்ஸாய் கலையின் அருமை பெருமைகளை விளக்கிக் கொண்டிருப்பது எஸ். எம். பிரேம குமாரியிடம்.

**வண்ணப் புகைப்படம் :**

**ஆர். நரசிம்மன்**

**பேட்டி : இளங்கோ**

மகிழ வேண்டுமென்று பள்ளிக்கு அணிந்து வருவாள். மோகினியும் குழந்தையின் மனத்தில் உள்ள ஆசையைப் புரிந்துகொண்டு, "கௌரி! இந்தக் கௌன் உனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கு.....இந்தக் கலர் பிரமாதம்..." என்றெல்லாம் மற்றக் குழந்தைகள் இல்லாத சமயத்தில் புகழுவாள்.

கௌரி மகிழ்ந்து போய்விடுவாள். ஒரு நாள் கௌரி, "ஏன் டீச்சர்! நீங்க அடிக்கடி புடவை, ஜாக்கெட் மாத்தாமல் வர்ரீங்க? உங்ககிட்டே இதைத் தவிர வேறு புடவை இல்லியா?" என்று திடுக்கிடும்படியாகக் கேட்டாள்.

"உனக்குப் பணக்கார அப்பா இருக்கார். புதுசு புதுசா வாங்கித் தர்ரார்..."

"உங்களுக்கு அப்பா இல்லையா டீச்சர்?"

"எங்கப்பா செத்துப் போய்ட்டார் கௌரி."

"எங்கப்பாவிடம் சொல்லி, உங்களுக்குப் புடவை, ஜாக்கெட் வாங்கித் தரட்டுமா டீச்சர்?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் மோகினிக்கு வெட்கமாக இருந்தது. என்ன பதிலைச் சொல்வது என்றும் புரியவில்லை.

"கௌரி! உங்கப்பா உனக்குத்தான் வாங்கித் தரணும். எனக்கு வாங்கித்தரக் கூடாது. அது பார்த்தா நல்லாருக்காது."

"எங்கப்பா, இந்த ஊருக்கே துணி வாங்கிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு, அவர்

கிட்டே பணம் இருக்குன்னு மாதவன் சொன்னான் டீச்சர்.''

''இருந்தாலும், அது சரியில்லே கௌரி. எங்கிட்டே சொன்ன மாதிரி, உங்கப்பா, அம்மாக்கிட்டே சொன்னா, அவுங்க என்னைத் தப்பா நினைப்பாங்க. உன் அன்பு ஒன்றே எனக்குப் போதும் கௌரி,'' என்று சொல்லிவிட்டு மோகினி கௌரியை அன்போடு அணைத்துக் கொண்டாள்.

இன்னொரு நாள் கௌரி கேள்வி கேட்டு மோகினியைத் திண்டாட வைத்துவிட்டாள். ''ஏன் டீச்சர்! நான் பிறந்ததனாலே என் அம்மாவுக்குக் கால் போச்சுன்னு, அம்மா சொல்றாங்களே, அது எப்படி டீச்சர்?'' என்று கேட்டாள்.

மோகினி, ''நீ பிறக்கறப்போ ஏற்பட்ட பிரசவ அதிர்ச்சியிலே கால் போயிருக்கும். அதுக்கு நீ காரணம்னு சொல்ல முடியாது கௌரி,'' என்றாள்.

''பிரசவம்னா என்ன டீச்சர்?'' என்று கௌரி திடீரென்று கேட்டாள்.

அந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியவில்லை மோகினிக்கு. யோசித்தாள், பிறகு ஒருவாறு சமாளித்து, ''குழந்தை பிறக்கிறதுக்குப் பேரு பிரசவம்,'' என்றாள்.

''குழந்தை எப்படிப் பிறக்கிறது டீச்சர்?''

கௌரியின் இந்தக் கேள்வி மோகினிக்குக் கோபத்தையே உண்டாக்கியது. ''கௌரி! நீ சின்னப் பொண்ணு. இந்த மாதிரித் தேவையில்லாத கேள்வியையெல்லாம் கேட்கக் கூடாது,'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

''ஏன் டீச்சர் கோபிச்சுக்கறீங்க? உங்களுக்குக் கேள்விக்குப் பதில் தெரியலைன்னா, தெரியலைன்னு சொல்லுங்களேன். எனக்குத் தெரியும் டீச்சர்,'' என்று சொன்னதும், மோகினி ஆச்சரியத்தோடு கௌரியைப் பார்த்தாள்.

கௌரி பெருமையோடும் கம்பீரத்துடனும், ''டீச்சர்! நல்லாக் கேட்டுக்குங்க. அப்பாவுக்குக் கோபம் வந்து அம்மாவை அடிச்சுட்டா, குழந்தை பிறந்துடுமாம். எங்கப்பா பலசாலி. அம்மாவை, ஓங்கிக் காலிலே அடிச்சிருக்காங்க. அதனால் நான் பிறந்துட்டேன். ஆனால் அம்மாவுக்குத்தான் கால் போயிட்டது,'' என்று கூறினாள்.

இதைக் கேட்டு மோகினிக்கு ஆத்திரம் வந்தது. ''இதெல்லாம் உனக்கு யார் சொன்னாங்க?'' என்று கேட்டாள்.

''மாதவன் சொன்னான் டீச்சர்,'' என்று கௌரி பதில் சொன்னாள்.

(தொடரும்)

கெம்பின் படை மருந்து

சருமம் மற்றும் உச்சந்தோல் தொத்து நோய்களுக்கு




கெம்ப் & கம்., லிட்
பம்பாய்-28

# மின்னல், மழை, மோகினி



ஜாவர் சீதாராமன்

## 19

மோகினிக்கு மாதவன்மீது ஆத்திரமாய் வந்தது. இளம் பெண்ணிடம் குழந்தைப்பேறு பற்றியெல்லாம் செய்திகள் சொல்லி, குழந்தையின் மனத்தைக் கெடுக்கிறானே, இவன் இன்னும் என்னவெல்லாம் சொல்லியிருக்கமாட்டான் குழந்தையிடம் என்ற ஐயமும் ஏற்பட்டது.

மோகினி சுற்றுமுற்றும் நோக்கினாள். மறைவிலிருந்து மாதவன் தலையை நீட்டினான்.

மோகினி மாதவனிடம் கோபத்துடன், "என்ன மாதவா! குழந்தையிடம் என்ன பேசறதுன்னு உனக்குத் தெரியவேண்டாம்? குழந்தையோட பிஞ்சு மனசைக் கெடுத்திடுவே போலிருக்கே!" என்று கடிந்து கொண்டாள்.

"டீச்சரம்மா! நான் என்னங்க செய்யறது? குழந்தை தொண தொண என்று ஏதாவது கேட்டுக்கிட்டே இருக்குங்க. நான் இனிமேல் அதுகிட்டே ஒண்ணும் பேசமாட்டேங்க. குழந்தை இங்கே விளையாடறது, ஓடறதையெல்லாம் கூட அம்மாவுக்குச் சொல்லாம மூடி வச்சிருக்கேனுங்க," என்று மாதவன் பதில் சொல்லி மோகினியைத் திருப்திப் படுத்த முயன்றான்.

குழந்தை கௌரிக்கு மாதவன் சொன்னது பொய் என்று அவன் டீச்சரிடம் உளறியதிலிருந்து தெரிந்து விட்டது.

கௌரி, தன் பிறப்பின் காரணம் என்னவாக இருக்கும், நாம் பிறந்ததற்கும், தாய் கால் இழந்ததற்கும் உள்ள தொடர்பு என்ன என்ற கேள்விகளுக்கு ஏதோ ஒரு விடை இருக்கிறது, ஆனால் அதைப் பெரியவர்கள் சொல்ல மாட்டார்கள், அது மர்மமாகவே இருக்கும் என்றெல்லாம் நினைக்கலானாள். ஏன் சில விஷயங்களைப் பெரியவர்கள் மூடி வைக்கிறார்கள் என்று அவள் உள்ளத்துக்குப் புரியவில்லை.

அன்று மாலை வரையிலும் கௌரி வகுப்பில் அமைதியாக இருந்தாள். அவள் முகம் சிந்தனையில் தோய்ந்து களை இழந்து இருந்தது.

பள்ளி முடிந்ததும் கௌரி வீடு திரும்பும் போது மோகினி கௌரியிடம் சிரித்தபடி பேச்சுக் கொடுத்தாள். ஆனால் கௌரி 'உம்' என்று இருந்தாள்.

"என்ன கௌரி? வழக்கம்போல் சந்தோஷமா இல்லாமல் ஒரு மாதிரியா இருக்கியே?" என்று கேட்டாள் மோகினி.

அதற்கு கௌரி, "இல்லை டீச்சர். நீங்களாவது உண்மை சொல்வீங்கன்னு நினைச்சேன். ஆனால் நீங்களும் அப்பா அம்மா மாதிரியே ஒண்ணும் சொல்லாமல்மூடி வைக்கிறீங்க," என்று வருத்தத்தோடு சொன்னாள்.

சிறுமியின் செல்லக் கோபத்தைக் கண்டு மோகினிக்குச் சிரிப்பு வந்தது.

டீச்சரின் சிரிப்பைக் கண்டதும் கௌரிக்கு இன்னும் வருத்தமாக இருந்தது. "ஏன் டீச்சர், என்னைப்பார்த்துச் சிரிக்கறீங்க?வகுப்பிலே உண்மையே பேசணும்னு எவ்வளவு முறை நீங்க சொல்லியிருக்கீங்க? ஆனா எங்கிட்டே மட்டும் உண்மையைச் சொல்ல மாட்டேங்கிறீங்களே! எங்கம்மாவுக்குக் கால் போனதுக்குக் காரணம் நான்தானென்னு எனக்குத் தெரிய வேண்டாமா டீச்சர்?" என்று உணர்ச்சியோடு கௌரி சொன்னதும் மோகினியின் மனம் உருகியது.

கௌரியை அணைத்தபடி பெஞ்சியில் உட்கார்ந்தாள்.

அவள் தலையை அன்போடு கோதியபடியே, "கௌரி! உன்னைப்போல ஒரு நல்ல குழந்தையாலே ஒரு அம்மாவுக்குக் கால் போக முடியுமா? உங்கம்மாவின் கஷ்டத்துக்குக் காரணம் நீ இல்லவே இல்லே. அப்படின்னு யார் சொன்னாலும் அதை நம்பாதே," என்று சொன்னாள்.



கௌரிக்கு அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. ''நிஜமாவா? என்னாலே எங்கம்மா நொண்டி ஆகல்லியா?'' என்று கேட்டாள்.

''நிஜமாத்தான் கௌரி.''

''ஒருவேளை எங்கப்பாவாலே அம்மா நொண்டி ஆகியிருப்பாங்களா?''

''அதுவுமில்லே கௌரி. உங்கம்மாவின் கஷ்டத்துக்குக் காரணம் நீயும் இல்லே. உங்கப்பாவும் இல்லே. அது விதிதான்.''

''விதின்னா என்ன டீச்சர்?''

''விதின்னா..விதின்னா..அது விளக்க முடியாத ஒரு சக்தி...ஒரு அமைப்பு. அது உனக்கு இப்போ புரியாது. நீ பெரியவளானதும் தானாப் புரியும்,'' என்று ஒருவாறு பதில் சொல்லி முடித்தாள்.

கௌரிக்கு மோகினியின் பதில்கள் பூராவும் திருப்தி தரவில்லை என்றாலும், தாயின் கஷ்டத்துக்குத் தான் காரணம் இல்லை என்பதில் ஒருவிதத் திருப்தி ஏற்பட்டது.

திடீரென்று அவளுக்கு மறுநாள், தனது பிறந்த நாள் என்பது நினைவுக்கு வந்தது.



உடனே மோகினி டீச்சரைப் பங்களாவுக்கு அழைக்க வேண்டும் என்று தோன்றியது.

''டீச்சர்! நாளைக்கு எனக்குப் பிறந்த நாள். நீங்க எங்க வீட்டுக்குச் சாப்பிட வர்ரீங்களா?'' என்று விகல்பமில்லாமல் கேட்டாள்.

அதற்கு மோகினி, ''ஓ! அப்படியா! வந்துட்டா போகுது,'' என்று கௌரியின் திருப்திக்காகச் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

அப்போது கௌரி, ''டீச்சர்! நாளைக்கு உங்க வீட்டுக்கு நான் கார் அனுப்பறேன். நீங்க வந்துடுங்க,'' என்றாள்.

''நிச்சயமா வர்ரேன்,'' என்று சொல்லித் தன் அழகு வாயைத் திறந்து மோகினி புன்னகையை உதிர்த்தாள்.

பிறகு, கௌரி தனது காரில் வீடு திரும்பினாள்.

மாதவன் கௌரியிடம், ''என்ன பாப்பா! நீ பாட்டுக்கு மாஸ்டர் அம்மாவை வீட்டுக்குச் சாப்பிட வரச் சொல்லிட்டே. அம்மா ஒப்புக்கமாட்டாங்களே?'' என்று சொன்னான்.

''ஏன் ஒப்புக்க மாட்டாங்க?'' என்று கௌரி கேட்டாள்.

''மாஸ்டரம்மா போலச் சாதாரண அந்தஸ்துள்ளவங்களை, நம்ம பங்களாவுக்கு விருந்துக்குக் கூப்பிடறதில்லேம்மா,'' என்று மாதவன் சொன்னதும் கௌரியின் முகம் சுருங்கியது.

அன்று இரவு கௌரி சாப்பிடும்போது, தன் தாயிடம் மெள்ளப் பேச்செடுத்தாள்.

விஜயா அன்று மாலையிலிருந்து தலைவலியால் தவிப்பதை உணராமல் குழந்தை பேச ஆரம்பித்தாள். ''அம்மா, நாளைக்கு என் பிறந்த நாள் விருந்துக்கு எங்க டீச்சரம்மாவைக் கூப்பிட்டா என்னம்மா?'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

''டீச்சரம்மாவைக் கூப்பிடறதா? நாளைக்கு யாரையுமே நான் அழைக்கப்

போறதில்லே?'' என்று தாய் சொன்னதும், கௌரி, ''யாரையுமே கூப்பிடாட்டி, அதை ஏம்மா விருந்துண்ணு சொல்லணும்?'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட விஜயா, ''வர வர நீ அதிகமாப் பேச ஆரம்பிச்சுட்டே. அந்த டீச்சரம்மா உன்னைக் கெடுத்திட்டா,'' என்று கடுகடுப்போடு கூறியதும் கௌரிக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டும் போல இருந்தது.

ஆனால் தாயின் சுளித்த முகத்தைப் பார்த்ததும், ஏதாவது சொன்னால் தாய் கூச்சலிடுவாள் என்ற பயமும் இருந்தது.

பிறகு மெதுவாகச் சமாளித்தபடி, ''நாளைக்கு டீச்சருக்குக் கார் அனுப்பறதாச் சொல்லிட்டேம்மா,'' என்று இழுத்தாள்.

இதைக்கேட்டதும் விஜயாவுக்கு அந்த டீச்சர்மீது சந்தேகம் வந்தது. ''கௌரி! உங்க டீச்சர் கெட்டிக்காரியா இருப்பா போலிருக்கே! பெரிய இடத்திலே எப்படியாவது ஒட்டிக்கணும்னு ஆசை போல் இருக்கு. அதுதான் உன்னைக் காக்கா பிடிக்கறா. அம்மாவைக் கேட்காம நீ யாரையும் நம்ம வீட்டுக்கு அழைக்கக்கூடாது,'' என்று சொல்லிவிட்டு கௌரியைச் சலிப்போடு முறைத்துப் பார்த்தாள்.

அதற்குமேல் கௌரிக்குப் பேச்சு எழவில்லை.

அன்றிரவு கௌரிக்குத் தூக்கமே வரவில்லை. ''டீச்சரிடம் கார் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு வந்தோமே, அனுப்ப முடியாது போலிருக்கிறதே,'' என்று நினைத்து நினைத்து மிகவும் வருந்தினாள்.

மறுநாள் பிறந்த நாள் என்ற காரணத்துக்காகப் பள்ளிக்குப் போக வேண்டாம். அதற்கு மறுநாள் பள்ளி சென்ற பிறகு, டீச்சர் முகத்தில் எப்படி விழிப்பது என்று கவலைப்பட்டாள்.

மறுநாள் காலையில் எழுந்ததும் குளித்துவிட்டு, புது ஆடை அணிந்து, தந்தையோடு குருவாயூர் கோவிலுக்குக் காரில் சென்றுவிட்டுத் திரும்பினாள்.

அவளுக்கு மாலை நேரம் வரவே, 'நாளைக்கு வகுப்புக்குச் செல்ல வேண்டுமே, டீச்சரை எப்படிச் சந்திப்பது; சாப்பிட அழைத்துவிட்டு வந்தோமே, டீச்சர் காருக்காகக் காத்திருந்து ஏமாந்து போயிருப்பாங்களே, அந்த வருத்தத்தினாலே நாளைக்குப் பள்ளிக்குப் போகும்போது சிரித்துப் பேச மாட்டாங்களே, டீச்சரின்அன்பை இழந்து எப்படி வாழ்வது?' என்று விதவிதமாகக் கவலையோடு சிந்தித்தபடி இருந்தாள்.

இரவு சாப்பாடே கௌரிக்குப் பிடிக்கவில்லை. தன் தாயிடம் விளக்க முடியாத ஒருவிதக் கசப்பு ஏற்பட்டது. அன்றிரவு தாய் அவளைத் தன்னருகிலே படுக்கச் சொன்னபோது கௌரிக்குக் கோபம் வந்து மறுத்துவிடலாம் என்று தோன்றியது. ஆனால் அடக்கிக் கொண்டாள்.

மனத்திற்குள் குழந்தை படும் வேதனையை ராஜுவோ விஜயாவோ உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மறுநாள் விடிந்ததும் கௌரி பள்ளிக்கே போகாமல் இருந்துவிடலாமா என்றுகூட நினைத்தாள்.

வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்கவும் பிடிக்கவில்லை.

தாய் தந்தையின் அன்பைவிட மோகினி டீச்சரின் கோபமே மேல் என்று தோன்றியது.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டாள்.

காரில் பள்ளியில் நுழையும் வரையில் டீச்சர் ஏன் கார் அனுப்ப

## அவமரியாதை அலவன்ஸ்



டில்லி மின்சார வினியோகப் பிரிவில் வேலை செய்யும் சூபர்வைசர்களின் கோரிக்கை:

''எங்களைக் கண்டபடி கவுன்சிலர்கள் திட்டவும், அடிக்கவும் செய்கிறார்கள். இதை நாங்கள் பொறுமையுடனும், மகிழ்ச்சியுடனும், ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் எங்களுக்குக் குறைந்தபட்சம் அதற்குப் பரிகாரமாக அவமரியாதை அலவன்சாவது கொடுக்க வேண்டும்! இல்லையேல் நாங்களும் பதில் நடவடிக்கை எடுப்போம்.''

தகவல்: ஜி. நீலகண்டன்

www.tamilbookworld

வில்லை என்று கேட்டால் என்ன சொல்வது என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

மாதவனோடு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பள்ளியில் வந்து இறங்கியதும் நேரே வகுப்புக்குச் சென்றாள்.

அங்கு மற்றக் குழந்தைகள்தான் இருந்தார்கள்.

பாருக்குட்டி அம்மாளும் இதர உபாத்தியாயினிகளும் நடு ஹாலில் இருந்தனர்.

மோகினி டீச்சர் வரவில்லையே என்று நினைத்தாள் கௌரி.

பள்ளி மணி அடித்து வகுப்புக்கள் தொடங்கும் நேரத்துக்கு மோகினி ஒரு கையில் பையையும், மறு கையில் புஸ்தகங்களையும் தூக்கியபடி பள்ளியில் நுழைந்தாள்.

நேரம் கழித்து வந்ததால் மோகினி நேரே வகுப்புக்கு வந்து பாடம் நடத்த ஆரம்பித்தாள்.

கௌரிக்கு டீச்சரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்படவே இல்லை.

அது ஒரு வகையில் கௌரிக்குப் பெரிய நிம்மதியாகவே இருந்தது.

அன்று நடுப்பகல் உணவருந்தும் போது, கௌரி பயந்துகொண்டே டீச்சரை நெருங்கினாள்.

ஆனால் மோகினி முதல்நாள் கார் அனுப்பாததைப் பற்றிப் பேசவே இல்லை.

வழக்கம்போலவே கௌரியோடு சிரித்துப் பேசினாள் மோகினி. தன்னுடைய டிபன் பாக்ஸில் இருந்து இலை அடையை எடுத்துவைத்து கௌரியைச் சாப்பிடச் சொன்னாள்.

திடீரென்று ஞாபகம் வந்தவளாய் மோகினி, ''கௌரி! நேத்திக்கு உனக்குப் பிறந்த நாள் இல்லை? கோவிலுக்குப் போனியா?'' என்று கேட்டாள்.

''போனேன் டீச்சர். அப்பாவோட நான் குருவாயூர் போய் இருந்தேன்,'' என்றாள் கௌரி.

''அப்படியா! குருவாயூருக்கா? நான் உன்னைவிடச் சின்னக் குழந்தையா இருந்தப்போ குருவாயூர்லேதான் இருந்தேன். அப்புறம் அங்கே போகணும்னு ரொம்ப ஆசை. ஆனால் முடியல்லே. கோவில்கூடச் சரியா ஞாபகம் இல்லே கௌரி. ஏதோ கனவிலே கண்ட மாதிரி இருக்கு,'' என்று சொல்லிவிட்டுச் சாப்பிட ஆரம்பித்தாள்.

தன்னைக் கார் அனுப்பிக் கூப்பிடாதது பற்றி ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லையே என்று ஆச்சரியத்தோடு இருந்தாள் கௌரி.

சாப்பிட்டு முடிந்ததும் மோகினி கௌரிக்குக் கை கழுவி விட்டு, கைக்குட்டையில் கையைத் துடைத்துக் கொண்டு தான் கொண்டுவந்த பையை எடுத்தாள்.

கௌரியைப் பார்த்துச் சிரித்தபடி, ''கௌரி, கண்ணை மூடிக்கோ. கண்ணைத் திறன்னு நான் சொன்னவுடனேதான் நீ திறக்கணும். அதுவரையும் நீ திறக்கக்கூடாது. தெரியுமா?'' என்று கூறினாள்.

கௌரி விஷயம் புரியாமல் டீச்சரைப் பார்த்தபடி நின்றாள். ''கண்ணை மூடிக்கோ,'' என்று கட்டளையிட்டாள் மோகினி.

கௌரி உடனே கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

மோகினி, ''ஒன், டூ, த்ரீ—கண்ணைத் திற,'' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

கௌரி கண்ணைத் திறந்தாள். திறந்ததும் டீச்சரின் கைகளில் உள்ள அழகான சில்க் கௌனைப் பார்த்துத் திகைத்தாள். ''கௌன் நல்லா இருக்கா? நானே துணி வாங்கி, வெட்டித் தைத்தேன்.''

''ரொம்ப நல்லா இருக்கு டீச்சர். சில்க் கௌனா?''

''ஆமாம் கௌரி. ஷோரனூர் போய் நானே சில்க் வாங்கி வந்தேன். உனக்குக் கொடுக்கணும்னுதான் வாங்கித் தைத்துக்கிட்டிருந்தேன். நல்ல வேளையா உன் பிறந்த நாளும் சமயத்துக்கு வந்துச்சு. பிறந்த நாள் பரிசாவே கொடுத்துடலாம்னு நினைச்சேன்,'' என்று சொல்லி கௌனை கௌரியிடம் கொடுத்தாள்.

கௌரி கண்களில் நீர் தளும்ப கௌனைப் பார்த்தபடி ஒன்றும் பேசாமல் நின்றாள்.

அதைக்கண்டு ஆச்சரியமடைந்த மோகினி, ''ஏன், உனக்குக் கௌன் பிடிக்கலையா?'' என்று கேட்டாள்.

''அதில்லே டீச்சர்...அதில்லே டீச்சர்,'' என்று கூறிவிட்டு மேலே ஒன்றும் பேச முடியாமல் குழப்பத்தோடு நின்றாள். மோகினிக்குக் கௌரியின் மனத்தில் கொந்தளித்து எழும் உணர்ச்சிகள் புரியவில்லை.

''ஏன் கௌரி கண்கலங்கி நிக்கறே? பிறந்த நாளன்னிக்குக் கொடுக்காமல், ஒரு நாள் தள்ளி, இந்தப் பரிசைக் கொடுக்கிறேன்னு நினைக்கிறியா? நேத்திக்கு நீ பள்ளிக்கு வந்திருந்தா, நேத்

திக்கே கொடுத்திருப்பேன். ஆனல் நீதான் வல்லியே,'' என்று சொல்லி விட்டு கௌரியை அன்போடு பார்த் தாள்.

கௌரியால் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை. இவ்வளவு ஆசை வைத்திருக்கும் டீச்சரைத் தன் வீட் டுக்குச் சாப்பிட அழைக்க முடியவில் லையே என்ற வருத்தம் ஒருபுறம். டீச்சரிடம் உண்மையைச் சொல்லி விட வேண்டும்; அதுதான் சரி என்ற எண்ணம் மறுபுறம் கௌரியை வாட் டியது. உணர்ச்சிகளை அடக்க முடியாத நிலையில் கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

''ஏம்மா அழறே! நான் உன்னை ஒன்றும் சொல்லலியே!'' என்று மோகினி கூறினள்.

அதற்கு கௌரி, ''இல்லே டீச்சர். உங்களை நேத்து வீட்டுக்குக் கூப்பிட ணும்னுதான் நினைச்சேன். ஆனல் அம்மாதான் வேண்டாம்னுட்டாங்க. உங்களைப் பத்திப் பேசினலே அம்மா எரிஞ்சி விழறாங்க. எனக்கு எங்கம்மாவை நினைச்சாலே வெறுப்பா இருக்கு டீச் சர்,'' என்று சொல்லி நிறுத்தினள்.

மோகினி குழந்தையை ஆச்சரியத் தோடு பார்த்தாள். ''கௌரி! நீ அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. பெத்த அம்மாவை வெறுக்கிறேன்னு சொல்லக்கூடாது. நீ என்னை வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிட்டபோதே எனக்குத் தெரியும், உங்கம்மா ஒப்புக்க மாட்டாங் கன்னு. அதனலே எனக்கு வருத்த மில்லே கௌரி. பாவம், உங்கம்மா. கால் இல்லாம வீட்டிலேயே கிடக் காங்க. அவுங்களுக்கு எவ்வளவு வேத னையோ கஷ்டமோ! அதனலே அம்மா ஏதாவது சொன்னலும் நீ பொறுத்துக் கணும். அம்மாவை வெறுக்கக்கூடாது. அப்போதான் நீ நல்ல பொண்ணு!'' என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

கௌரி வீடு திரும்பியபோது டீச்ச ரைப் பற்றியே நினைத்தபடி இருந்தாள். 'அம்மாவோ டீச்சரைத் திட்டறாங்க. ஆனல் டீச்சரோ அம்மாவைப் பத்தி நல்லாவே சொல்றாங்க. டீச்சருக்குக் கோபமே வரல்லியே' என்று நினைத்த படியே நடந்தாள்.

கௌரிக்கு மோகினியின்மீது அன்பும் மதிப்பும் இன்னும் அதிகமாயிற்று. டீச்சர் கொடுத்த கௌனை அன்போடு பார்த்தாள். அதை உடனே அணிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

வீட்டில் நுழைந்தவுடனே வீட்டு

''தங்கம், வெள்ளி, எவர்சில்வர் என்று சீர் கொடுக்கிறேமே, அது போதாதா? வரதட்சணை என்று பணம்வேறு எதற்கு?''

''நகைகளையும் பாத்திரங்களை யும் அடகுக் கடையில் வைத்தால் மீட்கப் பணம் வேணுமே! அப்போது உங்களைக் கேட்டால் நன்றாக இருக் குமா? நீங்களே சொல்லுங்கள்.''



மாடிப்புறத்திலிருந்து இரைச்சல் கேட் டது. வீட்டு வேலைக்காரியான காத் யாயனி என்ற கேரளப் பெண்ணை அவள் தாய் திட்டிக் கொண்டிருந்தாள். அவளை வேலையைவிட்டு விலகிக் கொள் ளும்படி சொன்னள்.

காத்யாயனி அழுதுகொண்டே படிக் கட்டுகளில் இறங்கி வந்து கொண் டிருந்தாள்.

கௌரிக்குக் காத்யாயனியிடம் பிரியம் உண்டு. காரணம், சூதுவாதில்லாத பெண் அவள். எப்போதும் கௌரிக்குப் பிடித்தமான பலகாரம் தயார் செய்து கொடுத்தபடி இருப்பாள்.

காத்யாயனி கௌரியைப் பார்த்த தும், ''குழந்தை! நான் இனிமேல் இங்ஙனே இல்லே. நிண்ட அம்மைக்கு என்னைக் கண்டா பிடிக்கல்லே. என்னைத் திருடின்னு சொல்றாங்க. நான் திருடற வளா? சொல்லு கௌரி,'' என்று அழுதபடி தன்னுடைய ஓலைப் பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியேறினள்.

விஜயா, காத்யாயனியை நடத்திய விதம், குழந்தை கௌரியின் மனத்தில் வருத்தத்தைக் கொடுத்தது. தாய்,

ஏன் எல்லோரையும் இப்படிக் கொடுமையாக நடத்துகிருள் என்று சிந்தித்தாள்.

மாதவன் வந்து அழைக்கவே, கௌரி குளிக்கும் அறைக்குச் சென்று வெந்நீரில் குளித்துவிட்டு வந்தாள்.

டீச்சர் மோகினி கொடுத்த கௌனை எடுத்து அணிந்து கொண்டாள்.

தாயும் தந்தையும் இதுவரை வாங்கிக் கொடுத்த ஆடையைவிட இதுதான் கௌரிக்கு மிகவும் அழகாகத் தோன்றியது.

கௌனின் முன்புறத்தில் பட்டு நூலால் பின்னப்பட்டிருந்த ரோஜாப் பூ மிகவும் அழகாகத் தெரிந்தது. அந்த ரோஜாப் பூவைப் பார்க்கும்போதெல்லாம், கௌரிக்கு மோகினியின் சிவப்பு உதடுகளே ஞாபகத்துக்கு வந்தன.

டீச்சர் அளித்த கௌனை அணிந்து கொண்டு கௌரி மாடிக்குப் போனாள்.

மாடி அறையில் ஜன்னல் அருகில் "டி. எச். லாரன்ஸ்' எழுதிய 'லேடி சாட்டர்லிஸ் லவர்' என்ற புத்தகத்தைப் படித்தபடி உட்கார்ந்திருந்தான் ராஜு.

விஜயா சலிப்போடு படுக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

அறையில் நுழைந்த கௌரியை விஜயா பார்த்தாள்.

விஜயா செல்வ நிலையிலிருந்து பார்க்கும்போது, அந்த கௌன் மட்டமான சில்க் கௌனாகத் தோன்றியது.

தன்னுடைய ஒரே பெண் அணியத் தகுந்ததாகத் தெரியவில்லை. மோகினி தன் மாதச் சம்பளத்தின் வள்ளிசான ஒரு பகுதியைக் கொடுத்து அந்த சில்க் துணியைத் தன்னுடைய அபிமான மாணவிக்கு வாங்கியிருந்தாள் என்பதைப் பற்றி விஜயாவுக்கு என்ன தெரியும்?

ஆத்திரத்தோடு விஜயா, ''ஏதுடி இந்தப் புது கௌன்? பார்க்கச் சகிக்கல்லியே?'' என்று படபடவென்று கேட்டாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு கௌரி அதிர்ச்சி அடைந்து நின்றாள். புத்தகத்தைப் படித்தபடி இருந்த ராஜு தலையைத் தூக்கிக் குழந்தையைப் பார்த்தான்.

கீழுதட்டைப் பற்களால் கடித்தபடி குழந்தை கௌரி நின்றாள்.

(தொடரும்)





# மின்னல், மழை, மோகினி

**ஜாவர் சீதாராமன்**

**அத்தியாயம் 20**

கௌரி தாயின் முகத்தை முறைத்துப் பார்த்தபடியே பற்களால் உதட்டைக் கடித்து நின்றாள். இது வரையில் ஏற்படாத ஓர் உணர்ச்சி கௌரியின் மனத்தைப் பற்றிக் கொண்டது.

அது பய உணர்ச்சி அல்ல, கோப உணர்ச்சியல்ல; வெறுப்பு உணர்ச்சி மட்டுமல்ல. ஆனால் அதை ஒருவித நீதி உணர்ச்சி என்றே சொல்ல வேண்டும். தன் தாய் பெரும் அநீதி இழைக்கிறாள் என்ற உணர்வுதான் அது. எப்போதும் தன் தாய்க்குப் பரிந்து பேசும் டீச்சரை அம்மா திட்டுவது பெரும் அநீதியாகப் பட்டது. காத்யாயனியைக் காரணமில்லாமல் வேலையை விட்டு நீக்குகிறாள். தந்தையைக் காரணமில்லாமல் அடிக்கடி கடிந்து கொள்கிறாள். ஒருமுறை கண்களால் கூடப் பார்த்து அறியாத மோகினி டீச்சரைக் காரணமில்லாமல் தாக்கிப் பேசுகிறாள். பிறந்த நாள் விருந்துக்குக் கார் அனுப்புகிறேன் என்று சொல்லி விட்டு அனுப்பாமல் இருந்த பின்பும் டீச்சர் கோபம் காட்டாமல் அன்போடு கொடுத்த கௌனை, 'பார்க்க சகிக்கல்லே' என்று தாய் சொல்கிறாளே என்று ஆத்திரம் வந்தது கௌரிக்கு.

''அம்மா, எனக்கு இந்த கௌன் பிடிச்சிருக்கு,'' என்று உதட்டைப் பிதுக்கித் தன் எதிர்ப்பைத் தெரிவித்தாள்.

''யார் கொடுத்தாங்க என்று கேட்டால் ஏதேதோ பதில் சொல்றே. தலையணை உறைமாதிரி கௌன் இருக்கிற லட்சணத்துக்கு ரோஜாப்பூ ஒன்றுதான் குறைச்சல்.''

''எங்க டீச்சர் ஆசையாகக் கொடுத்த கௌனம்மா. அதை ஒன்றும் சொல்லாதே,'' என்று தன்னையும் மறந்தபடி குரலை எழுப்பிச் சொன்னாள் கௌரி.

''எந்த டீச்சர் அது?...பிறந்த நாள் விருந்துக்குக் கார் அனுப்பச்சொல்லி உன்னைத் தூண்டி விட்டாளே அந்த டீச்சரா கொடுத்தாள்? கௌரி! உடனே அந்த கௌனைக் கழற்றி எறி!'' என்று உத்தரவிட்டாள் விஜயா. ஆனால் கௌரி அப்படியே முறைத்துப் பார்த்தபடி நின்றாள்.

''கௌனைக் கழட்டப் போறியா, இல்லையா?''

கௌரிக்குக் கௌனைக் கழற்றுவது டீச்சருக்குத் துரோகம் புரிவதுபோல் தோன்றியது. என்ன நேர்ந்தாலும் சரி, கௌனைக் கழற்றுவது இல்லை என்று உறுதியோடு நின்றாள். பேசாமல் முறைத்து நிற்கும் மகளைப் பார்த்ததும் விஜயாவுக்குக் கோபம் அதிகமாயிற்று. கைகளால் சக்கர நாற்காலியைச் சுற்றிக் கொண்டு கௌரியை நோக்கி

நெருங்கினாள். கௌரி அசையாமல் நின்றாள். அநீதியை எதிர்த்து நிற்கும் கர்ம வீரனைப்போல் அலட்சியமாக நின்றாள்.

''அந்த கௌனை எடுத்து எறியப் போறியா, இல்லையா?''

''முடியாதும்மா.''

தாய்க்கும் மகளுக்குமிடையே நிகழ இருந்த உணர்ச்சிப் புயலைக் கவனித்த படி கலவரத்தோடு ராஜு தன் இருக்கையை விட்டு மெள்ள எழுந்தான். ''விஜயா, குழந்தைகிட்டே போய் ஏன் கோபிக்கிறாய்? இஷ்டப்பட்டால் ஒரு நாள் அந்தக் கௌனைத்தான் அணிந்து கொள்ளட்டுமே,'' என்றான்.

குழந்தையின் சார்பில் அவன் பேசுவது விஜயாவின் கோபத் தீக்கு நெய் போல் அமைந்தது.

''என் பெண் என்ன பிச்சைக்காரியா வக்கில்லாத வாத்தியாரம்மாகிட்டே யெல்லாம் கௌன் வாங்கிக்கொள்ள? அந்தக் கௌனை இப்பவே கழட்டியாகணும்,'' என்றாள்.

கௌரி அசையாமல் நின்றாள். 'வக்கில்லாத வாத்தியாரம்மா' என்ற பதத்துக்குச் சரியான பொருள் விளங்கவில்லையானாலும் அது ஒரு வசை மொழி என்று மட்டும் அவளுக்கு நன்றாக விளங்கியது. ராஜு மனைவியின் கோபத்தைத் தணிக்க முடியாது என்று புரிந்ததும் குழந்தையின் பிடிவாதத்தையாவது மாற்றலாம் என்ற நோக்கத்தோடு ''அம்மாவுக்குப் பிடிக்கலைன்னா கௌனை எடுத்துடும்மா, கௌரி. நீ சமர்த்து இல்லையா?'' என்று கௌரியிடம் நயந்து கேட்டான்.

''நான் சமர்த்தில்லேப்பா. எதுக்கெடுத்தாலும் அம்மா சொல்றபடி நான் ஏன் கேட்கணும்?'' என்று பதில் கூறிவிட்டு, அடுத்த வினாடி தன் துணிவைக் கண்டு அவளே ஆச்சரியப்பட்டாள்.

''முந்தியெல்லாம் இப்படிப் பேசமாட்டியே கௌரி? இப்போ உனக்கு என்ன வந்தது?'' என்று




www.t.me/tamilbooksw

ராஜு கேட்டான்.

அழுகையும் கோபமும் பொங்கிவரும் நிலையில் கௌரி பதில் சொன்னுள்:



''முந்தியெல்லாம் அம்மாவுக்குக் கால் போனதுக்குக் காரணம் நானுன்னு நெனைச்சிக்கிட்டிருந்தேன். அதான் அம்மா என்ன சொன்னுலும் பொறுத்திட்டிருந்தேன். மோகினி டீச்சர் எனக்குச் சொல்லிட்டாங்க, அம்மாவுக்குக் கால் போனதுக்குக் காரணம் நான் இல்லை என்று. அம்மா தலைவிதிதான் அதுன்னு...'' என்று கௌரி சொல்லி முடிப்பதற்குள் விஜயா கைகளை ஓங்கிக் கௌரியை அடிக்கத் தயாரானுள்.

கௌரி லாகவமாக விலகிக் கொண்டாள்.

''அம்மா, என்னை அடிக்காதே! என்னை அடிக்காதே! அடிச்சா அப்புறம் உன் கையும் போயிடும்,'' என்ருள் கௌரி.

விஜயாவின் கோபம் எல்லை மீறி, அழுகையாக மாறியது. உடனே ராஜுவிடம் திரும்பினுள். ''பாருங்க,பாருங்க. என் குழந்தையே எனக்குச் சத்துருவாயிட்டுது. இவள் கிட்டே அந்த மோகினி டீச்சர் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொடுத்து இவள் மனசையே குட்டிச்சுவராக்கி விட்டாள். பாடம் சொல்லிக் கொடுக்கிறவளுக்கு நம் குடும்பத்தைப் பற்றி என்ன பேச்சு வேண்டியிருக்கு? உடனே பாருகுட்டி அம்மாளுக்கு லெட்டர் எழுதி மோகினி டீச்சரை வேலையை விட்டு நிறுத்தச் சொல்லுங்க,'' என்று கட்டளையிட்டாள்.

இதைக் கேட்ட கௌரிக்குப் பயம் வந்தது. தந்தையிடம் ஓடிப்போய், ''அப்பா! டீச்சர் நல்லவங்கப்பா. டீச்சர் இல்லாட்டி நான் ஸ்கூலுக்குப் போகமாட்டேம்பா...டீச்சர் ஸ்கூல்லேயே இருக்கட்டும்ப்பா,'' என்று மன்ருடினுள்.

ராஜுவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அர்த்தமில்லாத கௌனைப்பற்றிய சிறு விஷயம், பெரிய உணர்ச்சிப் போராட்டத்தின் மையமாகி விட்டதே என்று வருந்தினுன். ''கௌரி, நீ கீழே போம்மா. இது பெரியவங்க விஷயம்,'' என்று சொல்லி, கௌரியைக்

கீழே செல்லும்படி வேண்டிக்கொண்டான்.

கௌரியும் தந்தையின் அன்பு நிறைந்த வேண்டுகோளுக்கு இணங்கி மெல்லக் கீழே இறங்கிச் சென்றாள். அம்மாவின் கோபத்தினால் நாம் நிரந்தரமாக டீச்சரைப் பிரியும்படி நேர்ந்துவிடுமோ என்ற பயம் அவளுக்கு எழுந்தது. எப்படியாவது தன்னுடைய தாய் தந்தையின் மனத்தை மோகினி டீச்சருக்குச் சாதகமாக மாற்ற வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அதைப் பொறுத்துச் செய்ய வேண்டுமென்று தோன்றவில்லை கௌரிக்கு. இறங்கி வந்த படிக்கட்டுகளில் மறுபடியும் வேகமாக மேலே வந்தாள். ராஜுவும் விஜயாவும் பேசிக் கொண்டிருக்கும் அறைக்குள் ஓடினாள். தன் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''அம்மா, அப்பா! என்னைப் பாருங்க,'' என்றாள்.

ராஜுவும் விஜயாவும் திடீரென்று மறுபடி நுழைந்த மகளை நோக்கித் திரும்பினர். ஒன்றும் சொல்லாமல் கௌரி கயிறு வைத்துக்கொண்டு ஸ்கிப்பிங் செய்வதுபோல் எம்பி எம்பிக் குதிக்க ஆரம்பித்தாள். 'ஒன்று, ரெண்டு, மூன்று' என்று எண்ணியவாறு குதித்தபடியே இருந்தாள்.



கண்டக்டர்:

தினம்தான் நின்னுக்கிட்டே வருவீங்க. இன்னைக்கு நெறைய இடமிருக்குதே. உட்காருங்க சார்!

பிரயாணி:

இன்னைக்குப் பார்த்து எனக்கு முதுகைப் பிடிச்சிட்டிருக்கிறது, பாரேன்!

கௌரி குதிப்பதைப் பார்த்து விஜயாவும் ராஜுவும் கலங்கிவிட்டனர். ''கௌரி! கௌரி! நிறுத்து!'' என்று விஜயா கூச்சலிட்டாள். ராஜு ஓடி வந்து கௌரியைத் தடுத்தான். ''கௌரி, உனக்கு இருதயம் சரியில்லே, ஓடக்கூடாது, குதிக்கக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். அது உனக்குத் தெரியுமில்லே?''

''அப்பா! எனக்கு ஒன்றுமில்லேப்பா. டாக்டருங்க சும்மாச் சொல்றுங்க. நான் தினமும் ஸ்கூல்லே விளையாடறேன். படிக்கட்டிலே விடுவிடுன்னு வேகமாக ஏறுகிறேன். எனக்கு ஒண்ணும் ஏற்படலேப்பா. மோகினி டீச்சர் தான் எனக்கு ஒண்ணுமில்லேன்னு சொன்னாங்கப்பா. எனக்குத் தைரியம் கொடுத்து விளையாடச் சொன்னாங்க. பாதி வியாதி மனசிலேதான்னு டீச்சர் சொல்றுங்கப்பா. அம்மாவை மட்டும் டீச்சர் பார்த்தாங்கன்னா அம்மாவைச் சரி செய்துவிடுவாங்க,'' என்று அடுக்கிக்கொண்டே போனாள் கௌரி.

ராஜுவும் விஜயாவும் ஆச்சரியத்தோடு கௌரியைப் பார்த்தனர். இவ்வளவு நேரம் குதித்த பின்பும் சற்றும் பெருமூச்சு விடாமல் நிற்கும் மகளைப் பார்த்து ராஜுவுக்குத் திருப்தியே ஏற்பட்டது. சமீப காலமாக அவள் முகத்தில் ஒரு தெளிவும் பொலிவும் இருப்பதைக் கண்டு அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. ராஜு சற்று மகிழ்ச்சியுடன் விஜயாவிடம் திரும்பி, ''விஜயா! கொஞ்ச நாளாகவே கௌரியின் உடல் நிலையிலே ஒரு முன்னேற்றம் இருக்கு. ஒருவேளை ஷோரனூர், திருச்சூர் டாக்டர்களின் அபிப்பிராயம் தப்பா இருக்குமோ என்னவோ. டாக்டர் சொல்றது என்ன வேதவாக்கா?'' என்று ராஜு சொல்லி முடிக்குமுன்னே விஜயா இடைமறித்தாள்.

''நீங்களும் குழந்தைபோலப் பேசறீங்களே? கௌரி பிறந்தவுடனே கோயமுத்தூர் டாக்டர் சொன்னார். இங்கே வந்தப்புறம் ஷோரனூர் டாக்டர் சொன்னார். திருச்சூர் டாக்டரும் அதைத் தான் சொன்னார். படித்த மூன்றுபேர் சொன்னதும் தவறாகி, யாரோ ஒரு வாத்தியாரம்மா சொன்னது சரியாகிவிடுமா? அவள் இந்த மாதிரி தப்புத் தைரியம் கொடுத்துக் குழந்தையை ஓடியாடச் செய்து கொலை செய்துடப் போறா. அவளைக் குழந்தைகளோட பழக விடறதே தப்பு. குழந்தைகளுக்கு எமனாய் வந்திருக்கிறாள் அந்த மோகினி.




அம்பாலாவிலிருந்து சண்டிகார் வழியே அமிர்தசரஸை நோக்கி ஜீப்பில் சென்று கொண்டிருந்தோம். செப்டம்பர் 21'ம் தேதி. எங்கள் ஜீப்பில் மூன்று பேர் பிரயாணம் செய்தோம். ஜீப் வெகுவேகமாக கல்கத்தாவிலிருந்து பெஷாவர் செல்லும் ஜி. டி ரோடில் சென்று கொண்டிருந்தது. வழியில் 'கண்ணு' என்ற ஊரின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தோம். விடியற்காலை நாலரை மணி. திடீரென நான்கு பேர்கள் ஓடி வந்தனர், ரஸ்தாவின் பக்கவாட்டிலிருந்து.

காரை நிறுத்தும்படி சைகை காட்டினர். இதைக் கண்ட நாங்கள் அனைவரும் அவரவர் துப்பாக்கியைத் தூக்க ஆரம்பித்தோம்.

அதே சமயம் ஒரு வீடு போன்ற கட்டிடத்தின் உள்ளிருந்து தேயிலை பானம், பிஸ்கட் அடங்கிய தட்டுக்களை ஏந்திக்கொண்டு சிலர் வந்தார்கள். பிறகுதான் தெரிந்தது அந்தக் கட்டிடம் யுத்தவீரர் நலவிடுதி என்று. பஞ்சாப் யுத்த வீரர் நல விடுதி அது!

பஞ்சாப் ராஜ்யத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பல ரோடுகள் கூடும் இடங்களில் இதுபோன்ற நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வழியில் செல்லும் ராணுவ கார்கள், இந்த இடங்களில் ''நிறுத்திச் செல்லவும்,'' என்ற போர்டைப் படித்துவிட்டு நிறுத்தாமல் போனால்கூட அவர்கள் தானே சென்று வழி மறித்துவிடுகின்றனர். இந்த ஸ்டால்களில் கல்லூரி மாணவ மாணவிகள் தொண்டு செய்கின்றனர். வீரர்களுக்குத் தேவையான முக்கிய சாமான்கள் இலவசமாக இருபத்து நான்கு மணி நேரமும் கிடைக்கும்படி செய்துள்ளனர். பருகும் பானம், உணவு, தபால் கவர், கார்டு, ஸோப், ஷேவிங் பிளேடு, டவல், லட்டர் பேடு, பத்திரிகைகள் ஆகியவை கிடைக்கும்.

—சர்வேயர் முத்து

---

கௌரி, நீ போய்ச் சாப்பிடு. நான் அப்பாவோடு கொஞ்சம் பேசணும்,'' என்று கௌரிக்குக் கட்டளையிட்டாள்.

டீச்சரின் சாமர்த்தியத்தையும் உபயோகத்தையும் பற்றித் தாய் தந்தையின் மனத்தில் நல்ல எண்ணம் உண்டாக்க வேண்டுமென்று நினைத்துவந்த கௌரிக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. ஒன்றும் புரியாமல் படிக்கட்டுகளில் இறங்கிச் சென்றுவிட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்தது.

நாராயணி அம்மாளின் சிறு வீட்டில் சங்கரன்குட்டியைப் பற்றிய பிரசினை, நாராயணி அம்மாளை உறுத்திக் கொண்டிருந்தது. இதுவரையில் அறிவில்லாமல் வளர்ந்து நெடுமரமாக நின்ற சங்கரன்குட்டியின் நடவடிக்கைகளில் இப்போது ஒரு மாறுதல் தென்பட்டிருந்தது.

இரவு வேளைகளில் அவன் திடீரென்று எழுந்து காணாமல் போய் விடுவான். விடியும் சமயத்தில்தான் வீடு திரும்புவான். திடீரென்று எழுந்து சென்று கொல்லைப்புறத்து வாழைத் தோட்டத்தில் உள்ள வாழைத்தாரை வெட்டி ஒவ்வொரு காயையும் துண்டம் துண்டமாக வெட்டிப் போடுவான். இல்லையென்றால், காரணமில்லாமல் வீட்டில் உள்ள பாத்திரங்களையெல்லாம் உருட்டி உடைப்பான். ஆனால் மோகினி வீட்டில் இருக்கும் போது மட்டும் ஒழுங்காகப் பயந்து நடுங்கி இருப்பான். மோகினி அவனிடம், ''நான் இருக்கிறப்போ பெட்டிப் பாம்பாக இருக்கிறாய், நான் இல்லாதப்போ அம்மாவைத் தொந்தரவு பண்ணுகிறாயாமே? அது தப்பு இல்லையா?'' என்று கேட்பாள்.

''அம்மா அடிக்கமாட்டாள். நீ தோப்பிலே ஒருநாள் சாயபுவையே கழியாலே அடிச்சுட்டியே? அதான் உன் கிட்டே எனக்குப் பயமா இருக்கு,'' என்பான் சங்கரன்குட்டி.

ஒரு வாரத்துக்கு முன் ஒரு வீட்டில் நடந்த கல்யாணத்தில் சாப்பிடச் சென்றிருந்தவன், வீடு திரும்பியதிலிருந்து, ''எனக்குக் கல்யாணம் செய்து வையம்மா. எனக்கும் ஒரு பாரியாள் வேணும்,'' என்று நச்சரிக்க ஆரம்பித்தான். இந்தக் கல்யாண ஆசை அவனுக்குத் திடீரென்று ஏற்பட்டு விட்டது.

சங்கரன்குட்டியின் நடவடிக்கையில் ஏற்பட்ட மாறுதல்களினால் மிரண்டு போன நாராயணி அம்மாள், ஷோர

னூரில் உள்ள ஓர் ஆயுர்வேத ஆஸ்பத்திரியிலுள்ள வைத்தியரிடம் சங்கரன்குட்டியைக் கொண்டுபோய்க் காட்டினாள்.

அவர், "சில மாதங்கள் ஆஸ்பத்திரியிலேயே அவனை வைத்திருந்து மருந்து கொடுக்க வேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் அவனுக்குத் தைல தாரை செய்து குணப்படுத்தவேண்டும்," என்று சொன்னார். விலையுயர்ந்த 'கிருதங்கள்,' 'அரிஷ்டங்கள்,' 'தைலங்கள்' தயார் செய்ய வேண்டியிருப்பதால் குறைந்தது 500 ரூபாயாவது செலவாகும் என்றும் சொல்லிவிட்டார்.

ஐந்து நூறுகள் மொத்தமாகக் கொடுப்பதா! அப்படிக் கொடுத்து வைத்தியம் செய்தும் பலன் நிச்சயமாகச் சொல்ல முடியாதாமே? நாராயணி அம்மாள் வைத்தியத் திட்டத்தையே அடியோடு மறக்க நினைத்தாள். ஆனால் மோகினி, தன் மாதச் சம்பளத்தில் சேர்த்து வைத்திருந்த தொகை முன்னூறையும் வைத்தியருக்கு முன்பணமாகக் கொடுத்து, சங்கரன்குட்டியின் வைத்தியத்தைத் தொடங்கும்படி வற்புறுத்தினாள்.

"மோகினி, நாளைக்கு உனக்குக் கல்யாணம் ஏற்பாடாச்சுன்னா, ஒரு நகை புடவைக்குப் பணத்துக்கு எங்கே போறது? உன் சேமிப்புப் பணத்தைத் தொடக்கூடாது," என்றாள் நாராயணி.

"அம்மா, எனக்குக் கல்யாணமே வேண்டாம்மா. நான் இப்படியே சுதந்திரமாய்த்தான் இருக்கப்போறேன். அதனாலே என் சேமிப்புப் பணம் செலவழிந்தால் பரவாயில்லை. மறுபடியும் சேர்த்துக்கலாம்," என்று சொன்னாள் மோகினி.

"நீ காய்கறித் தோட்டத்திலே, வயலிலே பாடுபட்டுச் சேர்த்த இரண்டாயிரம் ரூபாயையும் கொண்டுபோய் நிலத்திலே போட்டு, துண்டு நிலம் வாங்கியாச்சு. இப்படி ஒவ்வொருமுறை சேர்த்து வைக்கிறதையும் செலவு பண்ணிட்டால், உன் கல்யாணத்தின்போது வெறுங் கையோடுதான் நிற்கணும். நான் ஒத்துக்கொள்ள முடியாது," என்று மறுத்துவிட்டாள் நாராயணி அம்மாள்.

அதனால், நாராயணி அம்மாளுக்குத் தெரியாமலே ஷோரனூர் ஆஸ்பத்திரியில் பணத்தைக் கொடுத்து வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்துவிடலாம் என்று திட்டமிட்டாள் மோகினி.

முதல்நாள் மாலை, ஷோரனூர் சென்று அந்த ஆயுர்வேத ஆஸ்பத்திரி நிர்வாகியிடம் 300 ரூபாய் கொடுத்து விட்டு வந்தாள். மிகுதி 200 ரூபாயும் வேலை செய்யும் பள்ளியில் கடனைப் பெற்று, மாதச் சம்பளத்தில் கழித்துக் கொள்ளும்படி பாருக்குட்டி அம்மாளிடம் கேட்கத் திட்டம் வகுத்திருந்தாள். பாருகுட்டி அம்மாளுக்கு அவளிடமிருந்த நன்மதிப்பு 200 ரூபாய்க்கும் மேல் பெறும் என்பது மோகினியின் நம்பிக்கை.

அவள் பள்ளி கிளம்பும்போது நாராயணி அம்மாள் பெட்டியைத் திறந்ததும் அதில் 300 ரூபாய் இல்லாமல் இருப்பது கண்டு பதறினாள். மோகினி விஷயத்தை விளக்கினாள். நாராயணிக்கு ஆத்திரம் வந்தது. 'அசட்டுப் பெண்ணே, இத்தனை நாள் எனக்கும் என் பைத்தியக்காரப் பிள்ளைக்கும் உழைத்து வீணானது போதாதா? உன் கல்யாணத்துக்குன்னு சேர்த்து வைத்த பணத்தையும் செலவழிக்கணுமா?" என்றாள்.

"உழைச்சு உழைச்சு வீணாய்ப் போகல்லேம்மா. உடம்பு உப்பித்தான் போயிருக்கு," என்று சொல்லி, தன்னுடைய வளமான உடலைக் காட்டிப் புன்முறுவல் செய்தாள் மோகினி.

"போதும் உன் வேடிக்கை! என் மகனுக்கு வைத்தியத்துக்கு என்னைக் கேட்காமல் யாரடி உன்னை ஏற்பாடு பண்ணச் சொன்னாங்க? பாக்கி இருநூறு ரூபாய்க்கு எங்கே போய்க் கேட்கிறது? யார்கிட்டே போய்க் கேட்கிறது?"

"நான் வேலை செய்கிற பள்ளிக்கூடத்தில் கடனை வாங்கிக்கிறேன். என்னம்மா சொல்றீங்க. உங்க மகன் வைத்தியத்துக்கு, பணம் கொடுத்து உதவ உங்க மகளுக்கு உரிமையில்லையா? ஏன் என்னை அன்னியப் பெண்ணு வச்சுப் பொசுக்கிறீங்கம்மா..." என்று வாதாடினாள் மோகினி. அதற்குமேல் நாராயணி அம்மாள் ஒன்றும் பேசவில்லை. சங்கரன்குட்டியை வண்டியில் ஏற்றிக்கொண்டு ஷோரனூர் ஆஸ்பத்திரியில் விட்டு வருவதாக ஒப்புக் கொண்டாள்.

மோகினி பள்ளிக்குப் புறப்பட்டாள். அவள் மனத்தில் அன்று ஒரு நிறைவு இருந்தது. அமைதி இருந்தது. பள்ளியில் நுழைந்ததும் தலைமை உபாத்தியாயினி பாருக்குட்டியம்மாளைப் பார்த்து,

200 ரூபாய் கடன் விஷயத்தை முடித்து விடவேண்டுமென்று நினைத்தாள். வைத்தியம் ஆரம்பித்த இரண்டு நாட்களில் மிகுதித் தொகையையும் கொடுப்பதாக ஆஸ்பத்திரி மானேஜருக்கு வாக்களித்திருந்ததுதான் அவள் அவசரத்துக்குக் காரணம்.

ஆனால் பள்ளியில் நுழையும்போதே முதல் மணி அடித்துவிட்டது. வகுப்புக்குச் சென்று வேலையைச் செய்யாமல் கடன் கேட்கப் பள்ளித் தலைவியிடம் செல்வது முறையல்லவென்று தீர்மானித்து நேரே வகுப்புக்குச் சென்றாள். பிற்பகல் இடைவேளையின்போது கடனைப் பற்றிக் கேட்டுக் கொள்வோம் என்று முடிவு செய்தாள்.

வகுப்பில் நுழைந்ததும் அங்கு கௌரி இல்லாமல் இருப்பது ஆச்சரியமாயிருந்தது. ஒருவேளை குழந்தைக்கு உடல் நிலை சரியில்லையோ என்று நினைத்தாள். அடுத்த நிமிடமே பாருகுட்டி அம்மாளின் அறைச் சேவகன் ''பெரியம்மா உங்களை ஆபீசுக்கு வரச் சொன்னாங்க,'' என்று கூறி அழைத்தான்.

இம்மாதிரி பாருகுட்டி அம்மாள் அடிக்கடி அழைப்பு அனுப்புவதுண்டு. உடனே எழுந்து பள்ளித் தலைவியின் அறைக்குச் சென்றாள் மோகினி. பாருகுட்டி அம்மாள் அங்கு வைக்கப்பட்டிருந்த ஸ்டீல் பீரோவின் முன் நின்று கொண்டு, பீரோவிலிருந்து எதையோ எடுத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய முதுகுப்புறம்தான் மோகினியின் பார்வையில் தெரிந்தது. தான் வந்திருப்பதை அறிவிக்க மோகினி கனைத்துக் கொண்டாள்.

கனைப்புச் சத்தம் கேட்டதும் பாருகுட்டி அம்மாளின் கரங்கள் அப்படியே நின்றன. மெள்ள, சாவதானமாகத் திரும்பினாள். அவள் முகம் வெளுத்திருந்தது. மோகினி அவளுக்கே உரித்தான தெய்வீகப் புன்னகையோடு, ''குட் மார்னிங் மேடம்,'' என்று சிரிப்பில் தன் அன்பையும் அன்யோன்யத்தையும் சிரம் தாழ்த்துவதில் தலைமைப்பீடத்துக்குச் செலுத்தவேண்டிய மரியாதையையும் செலுத்தினாள்.

ஆனால் பாருகுட்டி அம்மாள் பதிலுக்குச் சிரிக்கவில்லை. பெருமூச்சு விட்டபடி தன் ஆசனத்தில் வந்து உட்கார்ந்தாள். கையிலிருந்த ஒரு பேப்பர் கவரை எடுத்து மோகினியிடம் நீட்டினாள்.

மோகினி திகைப்போடு கவரைப் பிரித்துப் பார்த்தாள். அதில் பத்து ரூபாய் நோட்டுக்களாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பணம் கடனைக் கேட்க வந்தவள்தான் மோகினி. ஆனால் கேட்குமுன்பே பணம் கொடுக்கப்பட்டது ஆச்சரியமாயிருந்தது அவளுக்கு.

''மோகினி, உனக்குச் சேர வேண்டிய சம்பளத் தொகை கொடுத்தாகி விட்டது. நீ இன்றோடு வேலையிலிருந்து விலகிக் கொள். உன் நடவடிக்கை பள்ளி ஸ்தாபகர் குடும்பத்துக்குப்பிடிக்கவில்லை,'' என்று சொல்லி நிறுத்திவிட்டு, பாருகுட்டி அம்மாள் தன் கண்களைத் துடைத்தபடி எழுந்துஅறையை விட்டு வெளியே செல்ல அடி எடுத்து வைத்தாள்.

மோகினி அப்படியே அசைவற்று நின்றாள். அவள் மனம் சில வினாடிகளுக்கு வேலை செய்ய மறுத்தது.

(தொடரும்)



''அம்மாளைக் கேட்டுச் சாப்பாடு எடுத்தாந்திருக்கேன், சார்! 'சாம்பாரிலே உப்பே போடலலே. ரசம் ரொம்பக் காரம். சாதம் நல்லாவே வேகலிங்க. கறியிலே உப்பைக் கொட்டி இருக்காங்க.''



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 21

நாற்பது மைல் வேகத்தில் சென்று கொண்டிருக்கும் ரயில் வண்டியிலிருந்து திடீரென்று தரையில் இறங்கியதுபோல்இருந்தது மோகினிக்கு.

பள்ளியிலிருந்து விலகிக் கொள்வதா? ஏன் விலகிக் கொள்ள வேண்டும்? என்ன தவறு செய்தோம்? ஒன்றுமே புரியாமல் விழித்தாள்.

அவள் குழந்தைப் பருவத்தில் படித்த பள்ளி. அவளுடைய ஒவ்வொரு வளர்ச்சியையும் உணர்ந்து அதற்குச் சாட்சியாக நின்ற பள்ளி அது. அதன் சுவர்களில் எங்கு எந்தக் கறை இருக்கும், எந்த இடத்தில் பொக்கை விழுந்திருக்கும், பள்ளியின் வெளிப்புறத்திலுள்ள எந்த வேப்பமரத்தை எப்போது வெட்டினார்கள், எந்த மாமரத்தை எப்போது நட்டார்கள், மழை பெய்தால் எந்த அறையில் எங்கு நீர் கொட்டும் என்பது எல்லாமே மோகினிக்கு மனப்பாடம்.

இருபத்துநான்கு மணி நேரங்களில் எட்டு மணி நேரம் தூக்கம்; ஆறு ஏழு மணிநேரம் நாராயணி அம்மாள் வீட்டில் இருப்பாள். மற்றப் பொழுதெல்லாம் பள்ளிக்கே உரிமையாக்கி வந்திருக்கிறாள். இன்று நேற்று வந்த உறவல்லவே! அறியாப் பருவத்திலிருந்து அறிந்த பருவம்வரை தொடர்ந்து வந்த உறவல்லவா! இதே பள்ளியில் மாணவியாகப் டம் கற்றுக் கொண்டாள். பிறகு அங்கு ஆசிரியையாகப் பாடம் கற்றுக் கொடுத்து வந்திருக்கிறாள். அவளுக்குக் காதல், குழந்தை என்ற கடமைகள் இருந்ததில்லை. எல்லா உடைமைகளும் பள்ளியிலேயே இருந்தன. தனி உயிர் மூச்சான அ 'தப் பள்ளியிலிருந்து விலகிக்
கொள்ளவேண்டுமென்று எங்கிருந்தோ
யாரிடமிருந்தோ ஓர் உத்திரவு!

ஸ்தாபகர் குடும்பத்துக்குப் பிடிக்
கவில்லையாம். அந்த ஸ்தாபகர் குடும்ப
திலுள்ளவர்கள் இந்தப் பள்ளி
அக்கறையோடு திரும்பிப் பார்த்திரு
கிறார்களா? ஆனால் அவர்கள் உத்திர
இடவும், தான் அதற்குக் கட்டுப்படவு
வேண்டியிருக்கிறதே! உழைப்பா
உருவாகிறது உலகம். ஆனால் உழை
பாளிகளுக்கு அதில் இடமில்லை. ப
இல்லை. ஆசையோடு வீடு கட்டி உழை
பவர்கள் எல்லாம் அந்த வீட்டில் வா
கிறார்களா? மலை மலையாய்த் து
தைத்துக் குவிப்பவர்கள், ஆடையி
லாமல் இருப்பதில்லையா? இப்படி
பலவாறான சிந்தனைகள் மோகினியி
உள்ளத்தில் குமுறி, அவள் கண்க
நீர்க் குளமாக்கின. தாயிறந்தபோ
அவளுக்குப் பிஞ்சுப் பருவம். அழ
தெரியவேயில்லை. ஆனால் ஒரு தாயி
மார்பில் படுத்துப் பால் அருந்தும் குழ
தையை எடுத்து விசிறி எறிந்ததுபோ
அழுதாள்.

''பள்ளியை விட்டுட்டு எங்
போவேன் டீச்சர்?'' என்று நாக்குழ
பாருக்குட்டி அம்மாளிடம் கதறின

''பாவாடை சட்டையோடு
னிடம் மாணவியாக வந்தவள்
இப்போ என்னோட சேர்ந்து நீ வே
பார்க்கிறது எனக்கு எவ்வளவு பெரு
யாக இருந்தது தெரியுமா? நான் எ
வளவோ ராஜு அவர்களிடம் சொல்
விட்டேன். கௌரியின் அம்மாவுக்
உன்னைப் பிடிக்கவில்லையாம், மோகி
கவலைப்படாதே மோகினி, உனக்கு எ

வளவோ நல்ல வேலை கிடைக்கும். ஆனால் எனக்குத்தான் உன் மாதிரி டீச்சர் கிடைக்கமாட்டா," என்று சொல்லிவிட்டு அங்கு நிற்கப் பிடிக்காமல் பாருக்குட்டி அம்மாள் நகர்ந்தாள்.

மோகினி சில விநாடிகள் சிந்தித்தபடி நின்றாள். அப்புறம் தன்னையும் மறந்து மெள்ள நடக்க ஆரம்பித்தவள் சட்டென்று ஞாபகம் வரவே நின்று கொண்டாள். மோகினியின் வகுப்பில் சரஸ்வதி என்ற டீச்சர் பாடம் சொல்லிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டாள். சட்டப்படி இப்படி திடீரென்று ஒருவரை நிறுத்த முடியாது என்பது மோகினிக்குத் தெரியும். அவள் விலகிக்கொள்ள டயம் கேட்கலாம். ஆனால் சட்டத்தின் வலுவிலோ, சம்பளத்தின் ஆசைக்காக மட்டுமோ அவள் அங்கு வேலை செய்து வரவில்லையே! அவள் அங்கு தேவையில்லை என்று முடிவு ஆன பின்பு அங்கு ஏன் நிற்க வேண்டும்?

இந்தச் செய்தியை அறிந்தபின் மோகினி வகுப்பில் குழந்தைகள் முன்னால் போய் நிற்க விரும்பமாட்டாள் என்பதை உணர்ந்த பாருக்குட்டி அம்மாள் கருணையோடுதான் சரஸ்வதியை நம் வகுப்புக்கு அனுப்பியிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட மோகினி வேகமாக வெளிப்புறம் வந்தாள்.

வராந்தாவில் நடுப்பகல் மோகினியும் கௌரியும் உணவருந்தும் பெஞ்சு கிடந்தது. அதைப் பார்க்கவும் மோகினிக்கு வேதனையாக இருந்தது. குழந்தைக்கு மனத்திலுள்ள அன்பை மூடிவைக்கத் தெரியாமல் வீட்டில் ஏதாவது டீச்சரைப்பற்றிப் பேசியிருப்பாள். அது விபரீதத்தில் கொண்டு போய் விட்டிருக்கிறது என்பதை மோகினி ஊகித்துக் கொண்டாள்.

கௌரி அன்று பள்ளிக்கு வராதது அதை ஊர்ஜிதம் செய்வதாயிருந்தது. ராஜூ என்பவர் இவ்வளவு அவசரமாகவும், இரக்கமில்லாமலும் முடிவு செய்தார் என்று நினைக்கவும் மோகினிக்கு அவர்மீது கோபம், ஆத்திரம், ஆக்ரோஷம் எல்லாம் ஏற்பட்டது. வேகமாக நடந்து படிகளில் இறங்கி வீடு நோக்கிப் போக அடி எடுத்து வைத்தாள்.

திடீரென்று மோகினிக்கு ஞாபகம் வந்தது. மறுபடியும் உள்புறம் சென்றாள். பள்ளியின் நடுவில் உள்ள தொழுகை நடக்கும் ஹாலில் நுழைந்தாள் அங்கு மகத் தலைவர்கள் படங்களின் இடையே மாட்டியிருக்கும் குழந்தைச்சாமியின் படத்தின்முன் பாருக்குட்டி அம்மாள் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தாள். மோகினி அப்படியே ஒரு விநாடி குழந்தைச்சாமியின் கருணை நிறைந்த முகத்தைப் பார்த்தாள். மளமள வென்று மோகினியின் கண்களில் நீர் நிறைந்தது. பாருக்குட்டி அம்மாள் மோகினியின் உணர்ச்சிகளை உணர்ந்து கொண்டாள்.

"மோகினி, எல்லாருமே குழந்தைச் சாமி மாதிரி இருக்கமாட்டாங்க. இனிமேல் எங்கே போனாலும் பணக்கார வீட்டுக் குழந்தைகளிடம் ஜாக்கிரதையாகப் பழகு," என்றாள்.

மோகினி பதில் சொல்லாமல் குழந்தைச்சாமியின் படத்தையே பார்த்தபடி நின்றாள். பிறகு குனிந்து படத்துக்கு வணங்கிவிட்டு, பாருக்குட்டி அம்மாள் பக்கம் திரும்பினாள்.

"டீச்சர்.." என்று கூறிவிட்டு நின்றாள்.

"என்ன மோகினி என்ன சொல்ல விரும்பறே?"

"தப்பா நினைக்காதீங்க டீச்சரம்மா! எனக்கு எவ்வளவோ ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள படிப்பைக் கொடுத்து என்னை உருப்படியாக்கினது சாமிதான். ஆனால் நான் அவருக்கு ஒன்றுமே காணிக்கை கொடுக்கல்லே. அவரை இனி எப்பவாவது பார்ப்பேனோ அதுவும் தெரியவில்லே. இந்த நூறு ரூபாயும் சாமி பேரிலே ஆரம்பிக்கப்போற வாசகசாலைக்கு நான் அன்பளிப்பாகக் கொடுத்ததாக இருக்கட்டும்," என்று உணர்ச்சி ததும்பக் கூறிவிட்டு மோகினி பணத்தை எடுத்துச் சாமியின் படத்தடியில் வைத்தாள். பிறகு வேகமாக வெளியேறினாள்.

மோகினி பள்ளியைவிட்டு வெளியே வந்ததும் அவளைப் பிரசினைகள் சூழ்ந்து கொண்டன. வீட்டுக்கு எப்படிச் செல்வது? விஷயம் தெரிந்தால் நாராயணி அம்மாள் எவ்வளவு அதிர்ச்சி அடைவாள்! சங்கரன்குட்டி வைத்தியத்துக்காக மூன்னூறு ரூபாயையும் கொடுத்து அவனை ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டாள். வேலையைவிட்டு விலகும் போது கிடைத்த நூறு ரூபாயையும் குழந்தைச்சாமியின் ஞாபகார்த்த வாசகசாலைக்காகக் கொடுத்துவிட்டாள். இரண்டு மூன்று நாட்கள் அல்லது அதிகம் போனால் ஒரு வாரத்திலாவது இருநூறு ரூபாய் ஆஸ்பத்திரிக்குப் பணம் கட்டியாக வேண்டும். வேறு இடத்தில் வேலை தேடியாக வேண்டும்

பாலக்காடு சென்று வேலை தேடுவதா? இல்லை, கோயமுத்தூர் செல்வதா? வேலை உடனே கிடைத்துவிடாது. அதுவரை வழிச் செலவுக்குப் பணம் தேவை. வீட்டுச் செலவுக்கும் பணம் தேவை. பணம்! பணம்! பணம்! அது எவ்வளவு இன்றியமையாத பொருள் என்ற உண்மை, அது இல்லாமல் இருக்கும் போதுதானே புரிகிறது!

சிந்தித்தபடி வீடு நோக்கி நடந்தாள். ஆனால் மோகினிக்கு வீட்டுக்குப் போகத் துணிவில்லை. வேலை போய்விட்டது என்ற செய்தியை நாராயணி அம்மாளிடம் சொல்லப் பயந்தாள். மோகினிக்கு ஜலதோஷம், ஜுரம் என்றாலே பதறிப் போய்விடும் அந்த வளர்ப்புத் தாய்க்கு இந்தச் செய்தியை எப்படிக் கூறுவது? இது மெள்ள மெள்ளச் சொல்ல வேண்டிய செய்தி என்று நினைத்தாள். மாலைவரை வீடு செல்ல முடியாது. அதுவரையில் எங்கு செல்வது என்று புரியவில்லை. அருகில் இருந்த குளத்தின் அருகில் உட்கார்ந்தாள்.

குளத்தின் சலனமில்லா நீரைப் பார்க்கும்போது குழந்தை கௌரியின் நினைவு உடனே எழுந்தது. இனிமேல் அந்தக் குழந்தையைப் பார்க்கவே முடியாது. கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் அவள் குரலைக் கேட்க முடியாது. கோபத்தால் சுருங்கும் அவள் முகத்தையும், அடுத்த வினாடியே கெஞ்சும் விழியோடு



மன்னிப்புக்காகக் காத்திருக்கும் அவள் முகத்தையும் இனிமேல் காணமுடியாது. மோகினிக்கு எதிர்காலத்தின் ஒருபகுதி சூனியமாகிவிட்டதுபோல் தோன்றியது. அந்தக் குழந்தையோடு ஒரு பிணைப்பை ஆண்டவன் ஏன் ஏற்படுத்தினான்? பிணைப்புக்கள் ஏற்படுவதும் திடீரென்றும் அவை முறிவதுமே வாழ்க்கையின் பாதி துக்கத்துக்குக் காரணமல்லவா? கௌரியின் முகத்தை மறக்க முடியவில்லையே!

பகல் இரண்டு மணி வரையில் குளத்தடியில் சிறு கற்களை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பசி எடுத்ததுபோல் இருந்தது. கையில் கொண்டுவந்திருந்த டிபன் பாக்ஸைத் திறந்து பலகாரத்தை எடுத்துத் தின்றாள். தினமும் நடுப்பகல் குழந்தை கௌரிக்குப் பலகாரம் கொடுத்துவிட்டுச் சாப்பிடும் பழக்கம் இருந்ததால், தனிமையில் அன்று சாப்பிடுவது அவளுக்கு வேதனையாக இருந்தது. மரத்திலிருந்த காகங்கள் கூச்சலிட்டுத் தங்கள் பசியை மோகினிக்குத் தெரிவித்தன. பலகாரத்தில் ஒரு பகுதியைக் காகங்களுக்கு அளித்துவிட்டு இனிமேல் மாலை ஐந்து மணிவரை எங்கு செல்வது, என்ன செய்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள்.

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. ஷோரானூரில் உள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்று வைத்தியரையாவது பார்த்துவிட்டு வருவோம் என்று தீர்மானித்தாள். மெள்ள நடந்து ஷோரனூர் ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் நுழையும்போது மணி நான்காகிவிட்டது. ஆஸ்பத்திரி நிர்வாகி, பிரதம வைத்தியர் யாரும் அங்கு இல்லை. அதுவும் ஒரு ஏமாற்றமாக இருந்தது. விசாரித்ததில் அவர்கள் காலை 11 மணிக்கே ராஜு பங்களாவுக்குச் சென்றுவிட்டதாகவும் அவர் மனைவி திடீரென்று குளிக்கும்போது மயக்கமடைந்து விழுந்துவிட்டதாகவும் காரில் ஆள் வந்து ஆயுர்வேத சமாஜ வைத்தியரையும் ஷோரனூரில் உள்ள ஆங்கில வைத்திய ஆஸ்பத்திரி டாக்டரையும் அழைத்துச் சென்றதாகவும் தெரிந்தது. நிலைமை மிகவும் சிக்கலாக இருப்பதால்தான் வைத்தியர் இன்னும் திரும்பவில்லை என்று ஆஸ்பத்திரி சிப்பந்தி ஒருவன் தெரிவித்தான்.

தன்னை வேலையைவிட்டு நீக்கிய குடும்பத்தினருக்கு உடனே கைமேல் கூலி கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியடையவில்லை மோகினி. ராஜுவையும் அவன் மனைவி விஜயாவையும் இரக்கமில்லாமல், தனக்குத் தாய் போலிருந்த பள்ளியிலிருந்து தன்னைப்பிரித்த காரணத்துக்காகக் காலையில் வெறுத்தாள் என்பது உண்மை.

ஆனால் இப்போது கௌரியின் தாய்க்கு உடல் நிலை சரியில்லை என்று தெரிந்ததும், பாவம் குழந்தை கௌரி, எப்படிப் பயந்து போயிருப்பாள் என்ற கவலையே மோகினிக்கு ஏற்பட்டது. அவளுக்கு அருகிலிருந்து ஆறுதல் கூடச் சொல்ல முடியவில்லையே என்று வருந்தினாள். கௌரியைப் பற்றி நினைக்க ஆரம்பித்ததும் மோகினி தன்னுடைய கவலையை மறந்தாள். தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியும் ஓரளவு மறந்தாள்.

வெங்கடபதியின் பங்களாவில் விஜயா படுக்கையில் மயங்கிக் கிடந்தாள். அவள் தலைமீது ரப்பர் பையில் ஐஸ் வைக்கப்பட்டிருந்தது. விஜயாவின் கண்கள் மூடியபடி கிடந்தன. அருகில் ராஜு, அவள் உயிரே கண்களில் நின்று ஊசலாட விஜயாவின் முகத்தைப் பார்த்தபடி நின்றான்.

கௌரிக்கு ஒன்றுமே புரியவில்லை. தாய் குளிக்கும் அறைக்குள் சக்கர நாற்காலியோடு சென்றதும் சிறிது நேரத்தில் அறையிலிருந்து தாயின் அலறல் சத்தம் கேட்டதும்தான் கௌரிக்குத் தெரியும். உடனே ஓடிப்போய்த் தந்தையை அழைத்தாள். தந்தை வந்து குளிக்கும் அறைக் கதவை நெட்டித் தள்ளி உதைத்து உள்ளே சென்றபோது தான் தாய் தரையில் கிடப்பதையும் தாயின் மூச்சு பலமாக வந்து கொண்டிருப்பதையும் கவனித்தாள்.

ராஜு, ''விஜயா, விஜயா,'' என்று அழைத்தான்.

பதில் இல்லை. உடனே அவளை வாரித் தூக்கி எடுத்து வந்து படுக்கையில் போட்டுவிட்டு வைத்தியருக்குச் சொல்லி அனுப்பினான். வழக்கமாகக் காத்யாயினி தான் விஜயா குளிக்கும்போது அருகில் துணைக்கிருப்பாள். ஆடை உடுத்து விடுவாள். அவளை வேலையைவிட்டு நீக்கியதும் விஜயா தானே? தன் அடிப்படைத் தேவைகளைச் சிரமப்பட்டாவது பூர்த்தி செய்து கொள்வது என்று நினைத்தாள். மற்றவர் கையை நம்பி வாழக்கூடாது என்று தீர்மானித்தாள். அன்று காலையில் எழுந்தவுடன் கணவனோடு பெரும் வாக்குவாதம் நடந்தது. உடனே கடிதம் எழுதி மோகினியை வேலையிலிருந்து நீக்கும் படி கேட்டுக் கொண்டாள். ராஜு

விஜயாவின் மனத்திலிருந்த வெறுப்பை மாற்ற முயன்று பார்த்தான். ''யாரோ பாவம், ஏழைப் பெண் அந்த மோகினி டீச்சர். இந்த வேலையையே நம்பி வாழ்பவள். அவள் என்ன தவறு செய்து விட்டாள்? நம் குழந்தைக்கு ஆசையோடு ஒரு கௌன் வாங்கிக் கொடுத்ததற்காக அவளை வேலையிலிருந்து நீக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

''அற்ப கௌனுக்காகமட்டும் சொல்லவில்லை. அவள், என் மகள் என்னை வெறுக்கும்படி செய்துவிட்டாள். என் மகளின் மனத்தைக் கவர்ந்து ஆக்கிரமித்துவிட்டாள். அவளை உடனே நீக்கவேண்டும். அப்போதுதான் எனக்குத் திருப்தியாயிருக்கும்.''

''கொஞ்சம் யோசித்துப் பாரு விஜயா! ஒரு ஏழை வயிற்றிலே அடிக்கலாமா? வேணும்னு நாம் நம்ம குழந்தையைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிடுவோம். வீட்டிலேயே வேறே டீச்சர் போட்டுச் சொல்லிக் கொடுப்போம்.''

''அவளைப்பத்தி உங்களுக்கென்ன இவ்வளவு அக்கறை? கௌரியை மயக்கின மாதிரி உங்களையும் மயக்கிட்டாளா?'' என்று ஆத்திரம் தொனிக்கக் கேட்டாள் விஜயா.

ராஜுவால், இந்த நேர்முகத் தாக்குதலுக்குப் பின் அதிகம் பேசப் பிடிக்க பிடிக்கவில்லை. விரும்பாமலே தன் மனைவியின் கட்டளைப்படி ஒரு கடிதம் எழுதி, பாருக்குட்டி அம்மாளுக்கு அனுப்பினான்.

கடிதம் எழுதிய அரை மணி நேரத்துக்குப் பின்புதான் விஜயா குளிக்கும் அறைக்குச் சென்றாள். பாசி நிறைந்த தரையில் வழுக்கி விழுந்து மயக்கம் அடைந்தாளா அல்லது நாற்காலியில் இருக்கும்போதே படபடப்பின் காரணமாக வலிப்பு ஏற்பட்டுக் கீழே விழுந்தாளா? ஒன்றும் புரியவில்லை. டாக்டர்களுக்கும் விளங்கவில்லை. ஷொரனூர் ஆங்கில டாக்டர் உடனே விஜயாவை வசதி நிறைந்த கோவை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்த வேண்டும் என்று சொன்னார். விஜயாவின் ரத்த அழுத்தமும், அவள் இருதயத்தின் நிலையும் உடனே கவனிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

ஆயுர்வேத ஆஸ்பத்திரி கேரள வைத்தியர்மெழுகு தடவிஒத்தடம் கொடுத்துச் சரி செய்துவிடலாம் என்று அடித்துச் சொன்னதில் ராஜுவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இந்த வீட்டில்தான் தந்தை இறந்தார். இந்த நிலையில்



''எங்கே உன் டைரி?''

''அதை, என் பெண்சாதி பழைய பேப்பர்க்காரனுக்குப் போட்டுவிட்டாள். சி. ஐ. டி. இலாகாவுக்குப் போன் பண்ணினால் பேப்பர்க்காரனைக் கண்டுபிடிச்சிடலாம்.''

* * * * * * * * * * * * * * * * * * * *

விஜயாவை இங்கு வைத்திருப்பது சரியில்லை என்ற முடிவுக்கு வந்தான். உடனே பங்களாவில் உள்ள ஷெவர்லெட் வேனில் பல படுக்கைகளை அடுக்கி இருபுறமும் திண்டுகளைப் போட்டு அதிர்ச்சி இல்லாமல் விஜயாவைக் கோயமுத்தூர் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தான்.

தந்தையின் கவலை படிந்த முகம், டாக்டர்கள் கிசுகிசுவென்று பேசுவது, தாய் கண் திறவாமல் கிடப்பது இவற்றைப் பார்த்த கௌரிக்கு விஷயம் ஏதோ விபரீதம் என்று மட்டும் புரிந்தது. யாரும் அவளுடன் எதையும் விளக்கிப் பேசுவதாயில்லை. மேலே மாடியில் இருந்த ஆங்கில டாக்டர் கிட்டே போகவே பயமாயிருந்தது. ஹாலில் கூடியிருந்த கேரள வைத்தியர்கள் ஆங்கில வைத்தியனின் தவறான அபிபிப்ராயத்தைப் பற்றிச் சர்ச்சை செய்தபடி இருந்தனர்.

கௌ அவர்களிடம் சென்று கவலையோடு, ''அம்மாவுக்கு என்ன! ஏன் கண்ணே திறக்கல்லே? எப்போ எழுந்து உட்காருவாங்க?'' என்று கேட்டாள்.

கேரள வைத்தியருக்கு ஆங்கில டாக்டரிடம் இருந்த ஆத்திரத்தில், ''மேலே காதிலே குழாய் வைச்சுட்டு இருக்கானே ஒரு டாக்டர், அவனைப்

போய்க் கேளு. அவன் சொல்வான் குழந்தை,'' என்று சலிப்போடு கூறினர்.

ஒன்றும் புரியாத கௌரி, மாதவனிடம் ஓடினள். மாதவன் கௌரியைப் பார்த்ததும், ''குஞ்சு குஞ்சு!'' என்று சொல்லி அழ ஆரம்பித்துவிட்டான்.

''என்ன மாதவா, அம்மாவுக்கு என்ன?''

''ஒன்றும் புரியல்லே,'' என்ருன்.

''மோகினி டீச்சரைக் கூட்டிட்டு வா. அவுங்களுக்கு எல்லாம் புரியும் மாதவா,'' என்ருள்.

''கௌரி, அம்மாவுக்கும் அப்பாவுக்கும் டீச்சரைக் கண்டா பிடிக்கல்லே. அம்மா சொல்லி அப்பா டீச்சரை வேலையைவிட்டுத் தள்ளிட்டாங்க. நான் தான் காலையிலே பாருக்குட்டி அம்மாளுக்கு லெட்டர் எ டு த் தி ட் டு ப் போனேன். டீச்சரைப்பத்தி அம்மா கிட்டே பேசினதுனுலேதான் டீச்சருக்கு வேலே போயிடுச்சு,'' என்ருன்.

கௌரியின் பிஞ்சு மனம், தாயின் நிலைக்கு வருந்துவதா, தன்னுல் மோகினி டீச்சருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப்பற்றி வருத்தப்படுவதா என்று தெரியாமல் தவித்தது. கௌரி எதைப் பற்றியும் சிந்திக்க இடமேயில்லை. அவகாசமும் இல்லை.

தாயை வேலையாட்கள் படிக்கட்டில் தூக்கி வருவதைப் பார்த்தவுடன் கௌரியின் மனம் பதைத்தது. தாயைக் கொண்டுபோய்க் காரில் வைத்ததும் ராஜு கௌரியைத் தூக்கிக் கொண்டான். ''கௌரி, நாம் கோயமுத்தூர் போகப் போறேம். இனிமேல் அங்கே தான் இருக்கப் போறேம்,'' என்று சொல்லி, கௌரியோடு காருக்குச் சென்ருன்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிந்திக்க இடமில்லாமல் நிகழ்ந்தபடி இருந்தன. கார் நகர்ந்த பின்புதான் கௌரி, தான் இன்னும் மோகினி டீச்சர் கொடுத்த ஒரே கௌனேடு புறப்பட்டுக் கோயமுத்தூர் போகிறேம் என்பதை உணர்ந்தாள். அவள் பாவாடை துணிகளை எடுத்து வைக்கக்கூட யாரும் கவனிக்கவில்லை.

ஆயுர்வேத ஆஸ்பத்திரியிலிருந்து களைப்போடு திரும்பி வந்து கொண்டிருந்த மோகினி எதிரேமாலைக் கதிரவன் ஒளியில் மின்னியபடி வரும் ஷெவர்லட் வேனைப் பார்த்து ஒதுங்கிக்கொண்டாள்.

ஷெவர்லட் வண்டி மோகினியைக் கடந்து செல்லும்போது, வண்டியில் டிரைவர் அருகில் குழந்தை கௌரி வேறுபுறம் பார்த்தபடி, உட்கார்ந்திருப்பதையும், அந்த வண்டியின் பின்புறத்தில் படுக்கையில் படுத்தபடி ஒரு பெண் கிடப்பதையும் பார்த்தாள்.

கார் புழுதி மண்டலத்தில் மறைந்தது. மோகினி அப்படியே சிந்தனையில் ஆழ்ந்து நின்ருள்.

(தொடரும்)

---




மத்தியப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான வீடுகளின் முன்னுல், நாம் கண்ணேறு கழிப்பதற்கு வெள்ளே அடித்து, கரும் புள்ளி வைத்திருப்பது போன்ற பானைகளை உறியில் வைத்து மரத்தில் தொங்கவிட்டிருப்பார்கள்.

இந்தப் பானைகளைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்!

ஒரு வீட்டின்முன் எத்தனை பானைகள் உள்ளனவோ அத்தனை பெண்கள் அந்த வீட்டில் கல்யாணத்திற்குத் தயாராக இருக்கிறர்கள் என்று பொருள்

எப்பொழுது கல்யாணம் நடக்கிறதோ அப்பொழுது பானையும் கீழே இறக்கப்படும்.

—கு. கோவிந்தராஜன்

## அத்தியாயம் 22

புழுதி மண்டலத்தில் மின்னி மறைந்த 'சவர்லட்' வானைப் பார்த்து நின்ற மோகினிக்கு, அது செவ்வானத்தில் திடீர்த் தோற்றம் தந்து மறைந்த மின்னல்போல் தோன்றியது. அந்த 'வான்' போன திசையிலிருந்து, அது பாலக்காடு அல்லது அதற்கு அப்பாலுள்ள கோயமுத்தூர் தான் செல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அன்று காலையிலிருந்து ஒவ்வொரு நிகழ்ச்சியும் எதிர்பாராத திடீர் நிகழ்ச்சியாகவே இருந்தது. முதலில் மோகினியின் வேலை நிறுத்தம், பின்பு விஜயாவுக்கு ஏற்பட்ட விபத்து, இப்போது அவர்கள் ஊரைவிட்டே பயணமாகிச் செல்வது!

அந்தக் காரில் கண்களை மூடிப் படுத்திருந்த விஜயாவின் முகம், போட்டோ பிடித்தது போல் மோகினியின் மனத்தில் பதிந்திருந்தது. விஜயாவின் உண்மை நிலை என்ன என்பது புரியவில்லையாகையால், திகிலும் ஏற்பட்டது. முடிந்த அல்லது முடியும் நிலையாக இருந்தால், வண்டியில் அப்புறப்படுத்த மாட்டார்கள்.




ஏதோ ஒருவித அபாய நிலை—ஆனால் நம்பிக்கை வைக்கும்படியான உடல் நிலையாக இருந்தால்தான், இம்மாதிரிப் பயணத்தை மேற்கொள்வார்கள் என்று அவளது பகுத்தறிவு கூறியது.

சலனமில்லாமல், நிம்மதியாக, நீரோடைபோல் சென்று கொண்டிருந்த அவளது பள்ளி வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தவளின் எதிர்காலத்தைப்பற்றி நிர்ணயித்துக் கொண்டிருக்கும்போது, பங்களாக் குதிரை வண்டி, சாலையில் மோகினி நின்ற இடத்தை நோக்கி வந்தது.

அதில் ஆயுர்வேத ஆஸ்பத்திரி வைத்தியர் இருந்தார். மோகினியைப் பார்த்ததும் அவர் வண்டியை நிறுத்தினார். "என்ன மோகினி! ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வர்றியா?" என்று கேட்டார்.

"ஆமாம். சங்கரன்குட்டி விஷயமா உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். ஆனால்..." என்று கூறி முடிப்பதற்குள் வைத்தியர் குறுக்கிட்டு, "என்ன செய்யறது? பங்களாவிலிருந்து வந்து அவசர அவசரமாகக் கூப்பிட்டாங்க. ஆனால் அங்கே போனப்புறம், ஏன் என்னைக் கூப்பிட்டாங்கன்னு எனக்கும் புரியல்லே. அவுங்களுக்கும் புரியல்லே. அவ்வளவு கேவலமாயிட்டது தன்வந்திரி வைத்தியமென்றால்!" என்று குறைபட்டுக் கொண்டார்.

அவர் மனத்தில் விஜயாவைப்பற்றிய கவலைகூட அவ்வளவு அதிகமாக இல்லை. தனக்கு நேர்ந்த மரியாதைக்குறைவே அவர் மனத்தை வாட்டி வதைத்தது.

"பங்களாக்காரர் சம்சாரத்துக்கு என்ன?"

"ஏதோ ஸ்நானத்துக்குப் போயிருக்கிறாள். வலிப்பு வந்திருக்கு. பிரக்ஞை தப்பிடுத்து. நாடி விழுந்திடுத்து. உடனே மெழுகு தடவி, ஒத்தடம் கொடுத்திருந்தா எல்லாம் சரியாப் போயிருக்கும். யாரு என் பேச்சைக் கேட்கறாங்க? அந்தக் குழாய் வைத்தியன், கோயமுத்தூருக்குக் கொண்டு போகச் சொல்லிட்டான்."

"அவுங்க பிழைப்பாங்க இல்லியோ?" என்று ஆவலோடு கேட்டாள் மோகினி.

"நாடி விழுந்தப்புறம், என்னத்தைச் சொல்றதும்மா," என்று சொல்லிவிட்டு சங்கரன்குட்டியைப்பற்றிப் பேச்செடுத்தார்.

சங்கரன்குட்டி வைத்தியம் செய்து கொள்ள மறுக்கிறான் என்றும், அவனுக்குப் பாதுகாவலோடுதான் வைத்தியம் செய்ய வேண்டியிருக்கிறது என்றும் தன் கஷ்டத்தைக் கூறிக் குறைபட்டுக் கொண்டார்.

மிகுதிப் பணம் இருநூறு ரூபாய் கேட்டால் என்ன செய்வது என்று மனம் பதைத்தபடி நின்றாள் மோகினி.

ஆனால் வைத்தியருக்கு இருந்த மன வேதனையில், அவர் பணத்தைப்பற்றிப் பேசவே இல்லை.



வண்டி நகர்ந்தது. ஆஸ்பத்திரி நோக்கி.

மோகினியும் வீடு நோக்கி நகர்ந்தாள். வீட்டை நெருங்க நெருங்க மோகினிக்குக் குழப்பம் அதிகமாயிற்று.

குழந்தை முதல் மோகினி பொய் சொல்லியதே கிடையாது. பொய் சொல்ல அவளுக்குத் தேவையும் இல்லை. தவறான ஆசைகள், நோக்கங்கள் இருந்தால் தானே அவள் பொய் சொல்ல வேண்டும்? அவளது சிறு ஆசைகள், நிறைவேறும் அளவில் இருந்தன. படிக்க விரும்பினாள். படிப்பு, குழந்தைச் சாமியாரால் எளிதில் கிட்டியது. ஆசிரியை ஆக விரும்பினாள். அதுவும் கிடைத்தது. இயற்கையின் அழகுப் பொருள்களான மலர், மரம், கொடி—இவைகள் பொய் சொல்கின்றனவா? அது போலத்தான் மோகினியும் இருந்தாள். அவள் எதையும், யாரிடமிருந்தும் மூடிவைத்ததில்லை. அவள் மூடியதெல்லாம் பொங்கும் அவள் உடல் அழகை ஆடையால் மூடிய குற்றம் தான்.

அதிலும் அவள் பூரண வெற்றி காண முடியவில்லை. ஆடையால் உடலை மறைப்பதால், அழகு மறைந்துவிடாது என்று பறை சாற்றியது அவள் பருவம்.

இன்று நாராயணி அம்மாளிடம், வேலை போன விஷயத்தை மூடிவைக்க நினைத்தாள். வீட்டில் நுழைந்ததும் வழக்கம்போல் பின்கட்டுக்குப் போய்க் கால் முகம் கழுவி வந்தாள்.

நாராயணி அம்மாள் வழக்கம்போல் தேநீரைக் கொண்டுவந்து வைத்தாள்.

அதை வாங்கிக் குடித்தாள். அடுத்தபடி வழக்கம்போல் காய்கறிகள் பறிக்கச் சென்று வாழை இலை, காய்கறிகள் பறித்து வந்தாள்.

சமையலறைக்குச் சென்று நாராயணி அம்மாளுக்குச் சமையலில் உதவியாக இருந்தாள். இரவு ஏழரை மணி ஆனதும் வழக்கம்போல் உணவருந்த உட்கார்ந்தாள்.

சாப்பிட்டு முடிந்ததும் மோகினி வெளிஅறைக்கு வந்தாள். அவளுடைய அன்றாட நிகழ்ச்சி நிரலில் அடுத்த விஷயம் மறுநாள் வகுப்புக்குப் பாடம் தயாரிப்பது.

எதிரே உள்ள மூங்கில் மேஜைமீது உள்ள புத்தகங்களைப் பார்த்தாள். அவைகளை இன்று ஒப்புக்காகப் புரட்

டுவது ஓர் அர்த்தம் இல்லாத விஷய மாகத் தோன்றியது.

'நாளைக்கு எந்த வகுப்புக்குப் பாடம் நடத்தப் போகிறேம்? ஏன் இந்தப் புத்தகங்களை வீணுகப் புரட்ட வேண் டும்? அம்மாவை ஏமாற்றுவதற்கா?' என்று நினைத்தாள்.

பிறகு தன்னுடைய படுக்கையை உதறித் தரையில் விரித்தாள்.

சமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவி எடுத்து மர ஷெல்பில் வைத்துக் கொண்டிருந்த நாராயணி அம்மாள் காதுகளில் மோகினி ஜமக் காளத்தை உதறும் சப்தம் கேட்டது.

நாராயணி எவ்வித சந்தேகமும் இல் லாமல், ''என்ன மோகினி! இன்று புத்தகம் படிக்கவில்லையா?'' என்று கேட்டாள்.

இந்தச் சாதாரண கேள்வி குற்றமுள்ள மனத்தோடு இருந்த மோகினிக்கு திக் திக் என்று இருந்தது. என்ன பொய் சொல்வது? தலைவலி, களைப்பாக இருக் கிறது என்று ஏதாவது சொல்வோமா என்று நினைத்தாள்.

வாய் திறந்து பொய் சொல் வதை விட மௌனமாக இருந்துவிடுவதே சரி என்று பேசாமல் படுக்கையில் படுத் துக் கொண்டாள்.



நாராயணி சமையல் அறைக் கதவை மூடிக்கொண்டு வந்தாள். அதிசயமாக அவ்வளவு சீக்கிரம் படுத்துக் கொண்ட மோகினியைப் பார்த்துப் புன்முறுவலுடன், ''தினமும் நீ படிச்சு முடிக்க மணி பத்தாகும். இன்றைக்குத் தான் அதிசயமாச் சீக்கிரம் படுத்திட்டே. தினமும் நீ இப்படி இருந்தாத்தான் எனக்குப் பிடிக்கும்,'' என்று சொல்லி விட்டு அந்த அறையின் மூலையில் இருந்த ஒரு மரப்பெட்டியிடம் சென்றாள்.

மரப்பெட்டியைத் திறந்து அதன் உட்புறமிருந்து ஒரு மூன்றடுக்கு டிபன் பெட்டியை எடுத்தாள். ''பார் மோகினி. உனக்கு என்ன வாங்கி வந்திருக்கேன்!'' என்று பெருமையோடு சொல்லி நிறுத்தினாள்.

மோகினி ஆச்சரியத்துடன் புத்தம் புதிய டிபன் பெட்டியைப் பார்த்தாள். ''அம்மா! இதை எப்போ வாங்கினீங்க?'' என்று கேட்டாள்.

நாராயணி, ''மோகினி! நீ தினமும் அந்தச் சின்னப் பாத்திரத்திலே டிபன் கொண்டு போறது, எனக்கு என்னவோ பிடிக்கவே இல்லே. நல்லாச் சாப்பிட்டாத்தானே பள்ளிக்கூடத்திலே நல்லா வேலை செய்ய முடியும்? பள்ளிக்கூடத்திலே உன் பலகாரத்திலே பங்கு கொள்ள அந்தப் பெண் கௌரி வேறே இருக்கா. அவளுக்குக் கொடுக்காமல் உன்னாலே சாப்பிட முடியாது. அதுதான் காலையிலே கடைத்தெருவுக்குப் போய்ப் பழைய பாத்திரத்தைப் போட்டுக் கொஞ்சம் பெரிசா ஒரு டிபன் பாக்ஸ் வாங்கிட்டு வந்தேன். இனிமேல் அந்தக் குழந்தை கௌரிக்கும் சேர்த்துப் பலகாரம் எடுத்துக்கிட்டுப் போகலாம்,'' என்று சொல்லி மோகினியைப் பார்த்தாள்.

''இனிமேல் நான் பள்ளிக்குப் போகத் தேவை இல்லே. பள்ளியிலிருந்து என்னை நீக்கிவிட்டார்கள். கௌரியை இனிமேல் நான் சந்திக்கும் வாய்ப்பே இருக்காது. அவள் வேற்றூர் சென்று விட்டாள்,'' என்று மோகினி பதில் சொல்லவில்லை.

காலம் தாழ்த்தி வாங்கப்பட்ட அந்த டிபன் பெட்டியைப் பார்த்தபடி ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

உண்மையைச் சொல்லிவிடுவோமா என்று அவள் மனம் துடித்தது. ஆனால் நாராயணி அம்மாள் மனம் உடைந்து போய்விடுவாளே என்ற பயம் அவளைச் சும்மா இருக்கச் செய்தது.

ஒன்றும் பேசாமல் விறைத்துப் பார்த்தபடி இருந்த மோகினியைக் கண்டு ஏமாற்றமடைந்தாள் நாராயணி அம்மாள். ''என்ன மோகினி, ஒன்றும் பேசாம இருக்கே? உனக்கு இது பிடிக்கல்லியா?'' என்று வருத்தம் தொனிக்கக் கேட்டாள்.

மோகினி பொங்கும் தன் வருத்தத்தை அடக்கிக்கொண்டு, ''இல்லேம்மா. டிபன் பெட்டி ரொம்ப நல்லாயிருக்கும்மா. ஆனால்...'' என்று தொடங்கி முடிக்க முடியாமல் குழம்பினாள்.

''ஆனால் என்னம்மா மோகினி?''

''இல்லேம்மா. நம்ம குட்டிக்கு வைத்தியச் செலவு இருக்கு. இப்போ போய் ஏன் இந்தப் புதுப் பாத்திரம் வாங்கணும்?'' என்று ஒருவாறு சொல்லிச் சமாளித்தாள்.

மோகினியின் மனத்தில் உள்ள உண்மையை உணராத



மிஸ்டர் யானை! உங்களுக்கு சம்மன்!

அந்தக் கோர்ட்டில் ஒரே பரபரப்பு! குற்றவாளி ஒரு ராஜா. மூன்று நபர்களைச் சட்ட விரோதமாகக் கடத்திச் சென்றுவிட்ட ராஜாவைக் கோர்ட்டிற்குக் கொண்டுவரப் பல நபர்கள் தேவையாயிற்று. கூண்டும் போதவில்லை.

காரணம்?

ராஜா— ஒரு பெல்லன்விலா யானை!

மிருகத்தையும் கூண்டில் ஏற்றி விசாரித்த இந்த வழக்கை, இலங்கை பத்திரிகையான 'வீரகேசரி'யில் காணலாம்.

இலங்கையில் சில காலம் இருந்த நண்பர் ஒருவர் கொடுத்த இன்னொரு தகவல்:

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு பெரஹரா ஊர்வலத்தில் வந்த ஹேரரடாலா என்ற யானைக்குக் கோர்ட்டில் மரண தண்டனை கிடைத்ததாம்!

அது இழைத்த குற்றம்: மதம் பிடித்து எட்டு நபர்களை நசுக்கிக் கொன்றது.

—எஸ். சேஷாத்திரி

நாராயணி, ''மோகினி, நீ ஒரு விசித்திரப் பிறவியம்மா. உனக்குத் துணி பாத்திரம் எதிலேயும் ஆசையில்லே. உனக்கு உன் சுகம், உன் தேவையைப் பத்தியே அக்கறையில்லே,'' என்று சொல்லிவிட்டு விளக்கைச் சிறிதாகத் தூண்டிவிட்டுப் படுத்துக் கொண்டாள்.

படுத்த சில விநாடிகளில் தூங்கியும் விட்டாள். ஆனால் மோகினி மட்டும் இரவு வெகு நேரம்வரை தூங்காமல், இனி எதிர்காலத்துக்கு என்ன செய்வது என்று யோசித்தபடி இருந்தாள்.

மன உளைச்சல், உடல் அயர்வு இரண்டின் காரணமாக, விடிந்து வெகு நேரமாகியும் மோகினி எழுந்திருக்கவில்லை.

நாராயணி, காலையில் மோகினி பள்ளிக்குப் போக வேண்டுமே என்று பரபரப்பாகச் சமையல் செய்து கொண்டிருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. ஆகையால் மோகினி எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று வெந்நீர் காய வைத்திருந்தாள்.

மோகினி எழுந்து பல் துலக்கிவிட்டுச் சமையல் அறைப்பக்கம் வந்தாள்.

நாராயணி மோகினியைப் பார்த்து, ''நேரமாகிறது மோகினி! போய் எண்ணெய் தேய்த்துக் குளிச்சிட்டு வா சீக்கிரம்,'' என்றாள்.

மோகினி, ''எனக்கு உடம்பு சரியில்லேம்மா. இன்றைக்கு நான் எண்ணெய் தேய்த்துக் குளிக்கப் போறதில்லே,'' என்று சொல்லிவிட்டு வெளிப்புறம் நகர்ந்தாள்.

வீட்டின் வெளிப்புறம் காட்டில் சூரியன் ஒளியில் செடிகள் பூத்துக் குலுங்கின. ஓங்கி வளர்ந்த மரம், பூத்துக் குலுங்கும் செடி, அசையாது, அமைதியாக விண்ணை நோக்கித் தவம் செய்யும் மலை, பாடிப் பறந்துவரும் பறவைகள்— ஆகியவைகளைப் பார்த்தாள். மோகினிக்குப் பொறாமையாக இருந்தது. மலைச்சரிவில் மிக உயர்ந்த மரத்தில் ஒரு தாய்க் குரங்கு, தன் குட்டியை அணைத்தபடி கிளைக்குக் கிளை லாகவமாகத் தாவும் காட்சியைப் பார்த்தாள்.

பறவைகள், வானரங்கள் இவைகள் மட்டும் ஏன் கவலையில்லாமல் இருக்கின்றன? இந்தப் பூமியையே ஆளும் மனித இனம் மட்டும் ஏன் கவலையில் தோய்ந்து வாழ வேண்டியிருக்கிறது?

மனிதன் சிந்திக்கும் வாய்ப்புப் பெற்றிருக்கிறான். மற்ற மிருகங்களுக்கு அது இல்லை. மனிதன் வாழ்ந்தால் உன்னதமாக வாழ்கிறான். அதே போல் வீழ்ந்தாலும் அவன் வீழ்ச்சி பயங்கரமாகத்தான் இருக்கிறது.

'இயற்கையின் ஓர் அங்கமான மனிதன் மட்டும், இயற்கையோடு ஒத்து வாழாமல் பிரிந்து வாழ்கிறான். அதுவே அவன் வெற்றியின் ரகசியம். அதுவே,' அவன் துக்கத்தின் காரணமும்கூட, என்று நினைத்தாள். ஏன் இன்று மட்டும் தத்துவ விசாரணையில் இறங்கினேன் என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் மோகினி.

ஒரு வேளை தனக்கு வேலை போகாதிருந்தால் இம்மாதிரிச் சிந்தனையில் ஆழ்ந்து நிற்போமா என்று மீண்டும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். எதிர்பாராத ஒன்று நிகழும் போதுதான் வேதனை ஏற்படுகிறது. வேதனையின் வயிற்றில் ஆத்ம விசாரமும் பிறக்கிறது என்று உணர்ந்தபோது மோகினிக்குத் தன்னையறியாமலேயே சிரிப்பு வந்தது.

அவள் பார்வைக்கு நூறு கெஜ தூரத்தில் உள்ள ஒரு திட்டுத் தெரிந்தது. அதை அடுத்தாற்போல் மலைச் சரிவும், சரிவு முடியும் இடத்தில் குருவாயூர்ச் சாலையும் தெரிந்தன. அந்தச் சாலையிலிருந்து உருண்ட பஸ்தானே அவளை நாராயணி அம்மாள் வீட்டுக்குக் குழந்தையாக இருந்தபோது கொண்டு வந்து சேர்த்தது? அவள் அந்த வீட்டுக்கு வந்ததே எதிர்பாராத வகையில்தானே?

குழந்தைச்சாமியைச் சந்தித்ததே சற்றும் எதிர்பாராத முறையில்தானே! அதே போல் பள்ளியிலிருந்து விலக்கப் பட்டதும் முற்றிலும் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சிதானே! எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடப்பதுதானே அவள் வாழ்க்கை இலக்கணமாக இருந்து வந்திருக்கிறது!

இதை நினைத்தவுடன் மோகினியின் மனத்தில் அழுத்திக் கொண்டிருந்த ஒரு சுமை விலகியது போல் உணர்ந்தாள். எதற்காக நடந்து போனதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? அடுத்து நடக்க வேண்டியதைப்பற்றியல்லவா சிந்திக்க வேண்டும் என்று தீர்மானத்துக்கு வந்தாள்.

நாராயணியின் குரல் கேட்டுத் திரும்பினாள். ''மணி ஒன்பது ஆகப்போகிறது. எப்போ குளிக்கப் போறே?'' என்று அவள் கேட்டாள்.

நாராயணியின் முகத்தைப் பார்த்ததும் திடீரென்று மோகினியின் மன




''இதென்ன திட்டம்?''

''சினிமா போக எனக்கு, நீங்க துட்டு தந்தால்தான் உங்களுக்குச் சப்பாத்தியோ, சோறோ கிடைக்கும்.''

தில் ஒரு தீர்மானம் உருவாகியது. ''அம்மா! நான் வேலைக்குப் போகப் போறதில்லே,'' என்று சொல்லிவிட்டுத் தனது துணிவைக் கண்டு தானே ஆச்சரியப்பட்டாள். நாராயணி மிகுந்த ஆச்சரியத்தோடு ஒன்றும் பேசாமல் நின்றாள்.

''அம்மா! என்னை வேலையை விட்டு நீக்கிட்டாங்க. நான் கௌரியோடு நெருங்கிப் பழகினது அவுங்க அம்மாவுக்குப் பிடிக்கல்லே. இனிமேல் நான் வீட்டிலேதான் இருக்கப் போறேன். உனக்கு ஒரு சுமையா, சம்பாதிக்காம இருக்கப் போறேன் அம்மா,'' என்று சொல்லிவிட்டு நாராயணியிடம் ஓடினாள்.

நாராயணியை அணைத்துக்கொண்டு விம்மி அழுதாள்.

உண்மை விளங்க, நாராயணிக்குச் சில வினாடிகள் ஆயிற்று. அவள் ஒன்றும் பேசவில்லை. மோகினியைத் தடவிக் கொடுத்தபடி ஒன்றும் பேசாமல் இருந்தாள். ''அம்மா! அடுத்த மாதச் செலவுக்கு என்னம்மா செய்வோம்! வேலையைவிட்டு நீக்கினபோது கொடுத்த பணத்தையும் சாமியார் ஞாபகார்த்த வாசகசாலை நிதிக்குக் கொடுத்துட்டு வந்துட்டேம்மா. ஆஸ்பத்திரிக்கு இருநூறு ரூபாய் வேறே கட்டியாகணும். என்னம்மா செய்யறது?'' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

நாராயணியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. நாராயணி தன் முந்தானையால் மோகினியின் கண்களைத் துடைத்தாள். முயற்சி செய்து மோகினியைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். ''அதைப்பத்தி எல்லாம் நீ ஏன் கவலைப்படறே மோகினி? உன்னை இழந்த பள்ளிக்கூடம்னு கவலைப்படணும்? போய்க் குளிச்சிட்டு வந்து சாப்பிடு,'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

இப்படிப் பதட்டமில்லாமல் விஷயத்தை எடுத்துக் கொள்வாள் தன் வளர்ப்புத் தாய் என்று மோகினி கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

மோகினி குளித்துவிட்டு வந்து சாப்பிட உட்கார்ந்ததும் வழக்கம்போல் சிரித்த முகத்தோடு பரிமாறினாள். பள்ளியைப்பற்றியோ, ஆஸ்பத்திரியில் இருக்கும் சங்கரன்குட்டியைப் பற்றியோ பேச்சே எடுக்கவில்லை.

நாராயணி மனத்தில் என்ன நினைக்கிறாள் என்றே தெரியாமல் தவித்தாள் மோகினி.

சாப்பிட்டு முடிந்ததும், ''அம்மா! நான் வேணும்னு பாலக்காட்டுக்குப் போய் அங்கே பள்ளிக்கூடத்தில் வேலை இருக்கான்னு பார்த்துட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீ பாலக்காட்டிலே போய் வேலை பார்த்தால் உன்னைப் பிரிஞ்சு நான் எப்படி இங்கே தனியா இருக்கிறது? வயசுப் பொண்ணு நீ தனியா அங்கே இருக்கறதும் சரியில்லே,'' என்று நாராயணி பதில் கூறினாள்.

''செலவுக்கு என்னம்மா செய்யறது?''

''குருவாயூரப்பன் ஏதாவது ஒரு வழிவிடாமல் போகமாட்டார். நீ போய் ஓய்வெடுத்துக்கோ.''

''வேலை செய்யாமல் சும்மா இருக்கிறது கஷ்டமா இருக்கம்மா.''

நாராயணி யோசித்தாள். பிறகு, ''மோகினி! வாழைக்கன்றுகள் வாங்கி வச்சிருக்கேன். அதை,வாடிப்போறதுக்கு முன்னால் நட்டாகணும். பொழுது போகல்லேன்னா தோட்டத்தைக் கொத்தி சரிபண்ணு,'' என்று சொல்லிவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனிக்கஆரம்பித்தாள். அன்றுபிற்பகல் பூராவும்தோட்டத்தில் முளைத்திருந்த தேவையற்ற செடிகளைப் பிடுங்கி, மண்ணைக் கொத்தி, பாத்தி கட்டினாள். மாலை ஐந்து மணி வரையில் வேலை சரியாக இருந்தது.

அவள் கைகளில் மண் படிந்து, உடல் வியர்த்து, களைப்பாக இருந்தது.

இருட்டும் நேரம் வந்துவிடவே, வீட்டுக்கு அருகிலுள்ள குளத்தில் குளிக்க வேண்டுமென்ற ஆசை மோகினிக்கு வந்தது. அந்தக் குளம் ஓர் ஒதுக்குப் புறமான இடத்தில் இருந்தது. அந்தக் குளத்தைச் சுற்றி வட்டமாகத் திரை போட்டது போல் மரங்களும் புதர்களும் அடர்ந்து இருந்தன.

அந்தக் குளத்தில் குளிப்பவர்களை, வெளியில் இருந்து பார்க்கவே முடியாது. யாரும் அங்கு வருவதும் இல்லை. விடுமுறை நாட்களில் தன்னையும் மறந்து மோகினி அங்கு குளிப்பது வழக்கம். உலகக் கவலைகளையெல்லாம் மறந்து தனிமையில் அந்தக் குளத்தில் மிதப்பாள்.

மணிக்கணக்காக நீந்துவாள். குளத்தில் மிதக்கும்போது தன்னை ஒரு ராணியாகவும், குளத்தை தன்னுடைய ராஜ்யம் போலவும் நினைத்துக்கொண்டு மகிழ்வாள்.

அந்தக் குளம் அவள் விலைகொடுத்து வாங்காத ஒரு சொத்து. யாரும் அங்கு வருவதில்லையாதலால், அது அவளுடைய ஏகபோக உரிமைக்கு உட்பட்டு இருந்தது. மங்கிய வெளிச்சத்தில் குளக்கரைக்கு வந்தாள். மேற்கில் சூரியன் மறைந்து பூமியை இருள் கவ்வும் நேரம். கிழக்கில் முழு நிலவு உதயமாகி இருளை விரட்டும் நேரம். மங்கிய ஒளியில் அக்குளம் ஒரு கனவுக் காட்சிபோல் தோன்றியது.

அதைப் பார்க்கப் பார்க்க மோகினிக்கு ஒரு பக்கம் இன்பமும், மறுபுறம் அச்சமும் ஏற்பட்டன. அசையாது கண்ணாடித் தகடுபோல் இருந்த குளத்தின் நீர்மட்டத்தை உற்றுப் பார்த்தபடி நின்றாள்.

நீரில் அவள் நிழல், மிகவும் மங்கலாகத் தெரிந்தது. எது போனால் என்ன, எனக்கு அழகு இருக்கிறது என்று நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

அப்படியே தனக்குத்தானே சிரித்துக் கொண்டபடி நீரில் குதித்து நீந்த ஆரம்பித்தாள். கண்களை மூடியபடி உலகத்தை மறந்து நீந்திக் கொண்டே இருந்தாள்.

அவளுக்குப் பொழுது போவதே தெரியவில்லை.

இரவு வந்து அவளைச் சூழ்ந்து கொண்டதையும் உணரவில்லை. இளந்திங்களின் ஒளி அவளது அவயவங்களைப் பன்மடங்கு அழகுபடுத்தியதையும் அறியவில்லை.

குளத்தை அடுத்த புதரில் ஏற்பட்ட சலசலப்பும் அவள் காதுகளில் விழவில்லை. நீரின் குளிர்ச்சி அவள் மேனியை நடுங்கவைத்த பின்புதான், அவள் எழுந்து வீடு செல்ல வேண்டும் என்று நினைத்தாள்.

நீந்திக் கரை நோக்கி வந்தாள். கரையில் வந்து நீரைத் துடைக்கத் துண்டை எடுத்தபோது, அப்படியே திடுக்கிட்டு நின்றாள்.

ஒரு விநாடிக்குள் சேலையை எடுத்து அவசர அவசரமாகச் சுற்றிக் கொண்டாள். மீண்டும் நோக்கினாள். எதிரே உள்ள மரங்களின் நடுவில் சங்கரன்குட்டி நின்றுகொண்டு அவளையே உற்றுப் பார்ப்பதைப் பார்த்தாள்.

அவன் கண்கள் சிவந்து ஒருவித அரக்க வெறியோடு தன் உடலைக் கவனிப்பதை உணர்ந்தாள். இத்தனை ஆண்டுகள் அவனோடு அவள் வாழ்ந்து வளர்ந்து வந்திருந்தாலும், இன்று அவன் அவளைக் கவனித்த விதம், அவனை ஒரு புதிய மனிதனாகத் தோற்றுவித்தது. மோகினிக்கு திக்கென்று பயம் பிடித்துக் கொண்டது. ஷோரனூர் ஆஸ்பத்திரியில் இருந்தவன், இங்கு திடீரென்று எப்படி வந்தான் என்ற கேள்வி எழுந்தது. ''குட்டி! நீ ஆஸ்பத்திரியிலே இல்லாம இங்கே ஏன் வந்தே?'' என்று கேட்டாள்.

சங்கரன்குட்டி பதில் சொல்லவில்லை கண்களைக் கொட்டாமல் அவளையே பார்த்தபடி நகர ஆரம்பித்தான்.

அவளை நோக்கி, தூக்கத்தில் நடப்பவன் போல் நடந்து வந்தான். அவன் உதடுகள் துடித்தன. அவன் நெற்றி வியர்த்திருந்தது.

அவன் அவனாக இல்லை. அவன் உடலில் ஏதோ ஒரு புது அரக்க சக்தி புகுந்து அவனை நோக்கி அவனை உந்தித் தள்ளுகிறது என்பதை உணர்ந்தாள் மோகினி. அவனுடைய பலம் பொருந்திய கைகள், அவனுடைய ஆஜானுபாகுவான உடல் தோற்றம், என்று மில்லாமல் இன்று மோகினிக்கு மிகுந்த பயத்தை விளைவித்தன.

ஒருவிதப் பயங்கரச் சிரிப்புடன் சங்கரன்குட்டி மோகினியை நெருங்கினான். அவளுக்கும் அவனுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்து கொண்டே வந்தது. அதோடு மோகினியின் மனத்தில் பயம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

(தொடரு



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 23

சங்கரன்குட்டி மோகினியின் மனத்தில் இதுவரை பச்சாதாப உணர்ச்சியைத்தான் ஏற்படுத்தியிருக்கிறான்.

நாராயணி அம்மாள் கட்டளையிட்டால்கூட மறுத்துக் கீழ்ப்படியாதவன், மோகினியின் குரல் கேட்டுக் கீழ்ப்படிவான். ஓங்கி வளர்ந்த திருமேனியாக இருந்தாலும் மோகினியைப் பொறுத்தவரையில் தவறு செய்யும் குழந்தை தந்தையிடம் பயப்படுவது போல்தான் சங்கரன்குட்டியும் பயந்து வந்தான்.

சங்கரன்குட்டியின் சிறுவயதிலேயே அவனுடைய தந்தை இறந்துவிட்டதால் ஒரு வீட்டில் பொதுவாக உள்ள தந்தையின் நிலை என்ன என்பதே அவனுக்குத் தெரியாமல் இருந்தது. மற்றவர்கள் வீட்டில் தந்தையர்களிடம் குழந்தைகள் பயப்படுவதைக் குட்டி பார்த்திருக்கிறான். அதே போல் அவன் வீட்டில் தந்தையின் அந்தஸ்தை குட்டி மோகினிக்குக் கொடுத்திருந்தான்.

மேலும், மோகினி தானே அந்த வீட்டில் ஆணைப்போல் வெளியே சென்று சம்பாதித்து வந்தவள். சம்பாதிக்கும் நபருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்ற கருத்தைக் குட்டி எப்படியோ புரிந்துகொண்டு, மோகினியிடம் பயந்து நடந்து வந்தான்.

மோகினியும் ஒரு நிலையில் பயப்படுவாள் என்பது ஒரு நாள் இரவு வேளையில் வஹாப், வண்டியை மறித்து அவளைப் பலாத்காரம் செய்ய முயன்ற போதுதான், குட்டிக்கு முதன் முதலாகத் தெரிய வந்தது.

அன்றிரவு வஹாபின் பிடியில் திமிறிய படி ஆடைகுலைந்து நிற்கும் மோகினியின் உடலைக் கவனித்தபோதுதான், சங்கரன்குட்டியின் இருண்ட மனத்தில் அவனுக்குப் புரியாத ஆண்மை உணர்ச்சி கொழுந்துவிட ஆரம்பித்தது.

அதன் பிறகு அவனுக்கு மோகினியைப் பார்க்கும்போதெல்லாம், அடிக்கடி ஒருவிதக் குழப்பமான உணர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது.

மோகினி அவனைக் கவனிக்காத பொழுதெல்லாம், அவன் மறைவாக அவளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அவளிடம் இருந்த பயம் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. அவள் ஒரு பெண் என்று புரிந்து கொண்டான்.

நடுப்பகலில் கடைவீதிகளில் சுற்றும் போது, அங்குள்ள இளவட்டங்களோடு பேசும்போது அவர்கள் பேச்சிலிருந்து மோகினியின் அழகைப்பற்றி நன்கு புரிந்துகொண்டான்.

அவர்கள் அவனுக்கு, ஆண் பெண் உறவு பற்றிய சொல்லக்கூடாத விவரங்களையெல்லாம் புரளியாகப் பேசிப் பாடம் கற்பித்தனர்.

பொழுது போகாதவர்களுக்கு வேடிக்கைப் பேச்சாக இருந்த இந்த ஆண் பெண் உறவு பற்றிய பேச்சு, சங்கரன்குட்டிக்கு ஆரம்பப் பாடமாக அமைந்தது.

தனக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்று தன் தாயை அவன் துன்புறுத்த ஆரம்பித்ததற்குக் காரணம் கடைவீதி நண்பர்களின் தொடர்பு ஏற்பட்டதுதான்.



சங்கரன்குட்டிக்குப் பெண்களைப் பற்றிய அக்கறை ஏற்பட்ட பின்பு தன் வீட்டில் பாத்திரங்களை நொறுக்கவும், தோட்டத்துக் காய்கறிகளை வெட்டிப்போடவும் ஆரம்பித்தான்.

இந்த நிலை ஏற்பட்ட பின்புதான் அவனை ஷொரனூர் ஆஸ்பத்திரியில் சேர்த்து அவனுக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பித்தனர்.

பித்தம் தெளியாவிட்டாலும் அவன் பழையபடி அமைதியாக இருந்தால் போதும் என்றுதான் மோகினி அவனுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தாள்.

அவனுக்குக் கடை வீதி சுற்ற ஆரம்பித்ததால், தகாத உறவுகள் ஏற்பட்டுவிட்டன என்பதை மோகினி உணர்ந்தே இருந்தாள்.

பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது பண்பில்லாமல் சில இளைஞர்கள் சங்கரன் குட்டியை அருகில் வைத்துக்கொண்டே அவனைப் பார்த்து ஒருவிதமாகச் சிரிப்பதும், பொருத்தம் இல்லாமல் பேசுவதும் அவளுக்குத் தெரிந்திருந்தது.

நாராயணி அம்மாளிடம் சொன்னால் வருந்துவாளென்று மோகினி இந்த விஷயத்தை மூடியே வைத்திருந்தாள்.

இப்போது சங்கரன்குட்டி ஆஸ்பத்திரியில் இருந்து தப்பி ஓடிவந்ததும், ஓடிவந்த அவன் நேரே வீட்டுக்குச் செல்லாமல் குளத்துக்கு வந்ததும், மோகினிக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அவன் கண்களில் ஒளி வீசிய ஒருவித வெறி அவளுக்கு அச்சத்தையே கொடுத்தது.

அவன் பார்வை பூராவும் அவள் உடலில் நின்றது. அரை குறையாக, அவசரத்தில் சேலையால் சுற்றி மூடப்பட்ட உடலை ஊடுருவிப் பார்ப்பவனாக அவன் நின்றான்.

''குட்டி! வீட்டுக்குப் போ,'' என்று தன் பயத்தை வெளியிலே காட்டாமல் கட்டளையிட்டாள் மோகினி.

ஆனால் சங்கரன்குட்டி அசையவில்லை. மோகினியின் வார்த்தைகள் சங்கரன் குட்டியின் காதில் விழுந்ததோ! இல்லை.

அவனுடைய ஐம்புலன்களில் கண் என்ற புலனைத்தவிர, மற்ற புலன்கள் தற்காலிகமாக வேலை செய்ய மறுத்தன!

குட்டி பார்த்துக்கொண்டே நின்றான். அவனது மூச்சு, வெகு தூரம் வெகு நேரம் தொடர்ந்து, வண்டி இழுத்த எருதுகளின் மூச்சைப்போல இரைச்சலுடன் இயங்க ஆரம்பித்தது.

அவன் உதடுகள் படபடவென்று துடித்தன.

அவனது பலம் பொருந்திய கைகள் அவள் சேலையைப் பறித்தன.

மோகினி, சட்டென்று கைகளால் உடலைப் போர்த்திக் கொண்டுவிட்டாள்.

ஆனாலும் சங்கரன்குட்டி கண் இமைக்கும் நேரத்தில் மோகினியின் கைகளைப் பிரித்தான். தன் இரு கைகளால் அவளது கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

அவனது இரும்புப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள மோகினி திமிறினள்.

அதன் விளைவாக அவனுடைய கால் இடறியது. மோகினி புல் தரையில் விழுந்தாள். சங்கரன்குட்டியும் அவளருகில் விழுந்தான்.

அவன் கைகள் மோகினியின் இரு கைகளையும் சிலுவையில் அறைவது போல், தரையில் அழுத்திப் பிடித்துக் கொண்டன.

கைகளை அசைக்க முடியாத நிலையில், கால்களால் அவனை எட்டி உதைத்தாள் மோகினி.

அந்த உதை சங்கரன்குட்டியின் வயிற்றில் பலமாக விழவே, அவனுடைய கைகள் தாமாக விலகின.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவளை நெருங்கிய குட்டியின் முகத்தில், மோகினி பலமாகக் குத்தினள்.

எவ்வளவு முறை குத்தினள் என்பது மோகினிக்கே தெரியாது.

குட்டியின் உதட்டிலிருந்து ரத்தம் வழிவதைத்தான் உணர்ந்தாள்.

சங்கரன்குட்டியும் உதட்டிலிருந்து சிந்தும் ரத்தத்தைக் கவனித்தான். அவன் கண்களில் மருட்சி தோன்றியது.

அவன் உதடுகள், ''ரத்தம்! ரத்தம்!'' என்று முணுமுணுத்தன.

தன் கைகளால் உதட்டைத் துடைத்துக்கொண்டான்.

விரல்களில் படிந்த ரத்தக் கறையைப் பார்த்தான்.

மோகினி அவன் மோவாயிலும், தலையிலும் ஓங்கிக் குத்திக்கொண்டே இருந்தாள்.

ரத்தத்தைக் கண்டதும் சங்கரன் குட்டியிடம் ஏற்பட்ட மாறுதலை அவள் உணரவில்லை.

''அடிக்காதே மோகினி! என்னை அடிக்காதே மோகினி!'' என்று ஒரு குழந்தைபோல் கதறிக்கொண்டே எழுந்தான்.

சில சிறிய ஸ்டேஷன்களில் நிற்காமல் தாண்டிச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிபோல், சங்கரன்குட்டியைச் சில வினாடிகள் ஆக்ரமித்த காமம், அவனை விட்டு விலகிச் சென்றது.

வெறி இருந்த இடத்தில் பயம்தான் மிகுந்து இருந்தது.

வழியும் ரத்தத்தையும், மோகினியையும் மாறி மாறிப் பார்த்தான். உடனே வீல் என்று பயத்தில் அலறிய படி, அந்தக் காட்டைவிட்டு ஓட்டம் பிடித்தான்.

மோகினிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளைச் சூழ்ந்திருந்த ஆபத்து இப்படித் தானகவே விலகும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

மெள்ள எழுந்தாள். உடைகளை அணிந்துகொண்டாள்.

குட்டி இப்படி நடந்து கொள்வான் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை மோகினி.

குட்டியா இப்படி நடந்து கொண்டான்? இல்லை. குட்டிக்கும் அப்பாற்பட்ட, குட்டியே புரிந்து கொள்ளாத இயற்கையின் ஒரு சக்தியல்லவா மின்னல் போல் பாய்ந்து அவனை அந்தச் சில வினாடிகளுக்கு ஆட்டிவைத்திருக்கிறது.

அந்த மின்னல் மறைந்ததும், குட்டி பழையபடி குழந்தையாகிவிட்டான்.

ஸ்விட்ச் போட்டவுடன் சாதாரண இரும்புக் கம்பிகளில் மின்சாரம் பாய்வதுபோல்தான், மனிதன் உடலில் காமம், கோபம் என்ற உணர்ச்சி அலைகள் பாய்கின்றனவா? அந்த ஸ்விட்சை உடலில் போடுவது யார்? அதை அணைப்பது யார்?

உலகத்தில் தவறு செய்பவர்கள் எல்லாம், தெரிந்து தவறு செய்கிறார்களா, இல்லை, குட்டியைப்போல் எதோ ஒன்றால் உந்தப்பட்டு இயங்குகிறார்களா?

வீட்டை நோக்கிப் புறப்பட்ட மோகினிக்குப் பயமும், குழப்பமும் ஏற்பட்டன.

'குளக்கரையில் நடந்ததைப்பற்றி நாராயணியிடம் சொல்வதா? சொல்

லாமல் விடுவதா? குட்டியிடம் இனிமேல் எப்படி நடந்து கொள்வது? அவனை எப்படிச் சமாளிப்பது' என்றெல்லாம், மோகினியின் மனத்தில் சிந்தனை எழுந்தது.

ஒன்றன்பின் ஒன்றாகப் பலப் பிரசினைகளைச் சமாளிக்க வேண்டியவளாயிருந்தாள் மோகினி.

முதல் பிரசினை, சம்பாத்தியம்.

இரண்டாவது பிரசினை, சங்கரன்குட்டியின் எதிர்காலம். இந்தச் சிந்தனையினால், வெகுநேரம் தயக்கத்துடன் அந்தக் குளக்கரை அருகிலேயே நின்று கொண்டிருந்தாள்.

காற்றில் சேலையும் உலர்ந்தது. அவள் கேசமும் உலர்ந்தது.

மெள்ள யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

வீடு நோக்கி நடந்தாள். வீட்டு வாசல் திண்ணையில் சங்கரன்குட்டி படுத்திருந்தான்; நித்திரை செய்வது போல்.

நாராயணி அம்மாளுக்கு அவன் ஆஸ்பத்திரியிலிருந்து ஓடிவந்த விவரம் தெரிந்துவிட்டது என்பதை மோகினி புரிந்து கொண்டாள்.

அடுக்களையில் இருந்தபடியே நாராயணியின் குரல் கேட்டது. "யாரு? மோகினியா?" என்று.

"ஆமாம்மா," என்று தயக்கத்துடன் பதில் அளித்தாள் மோகினி.

"ஒரு பெண்ணு குளிக்கப்போனால் இவ்வளவு நேரமா? சாப்பாட்டை வைச்சிட்டு எவ்வளவு நேரம் காத்துக்கிட்டிருக்கிறது?" என்று சுடுகடுப்பாகச் சொன்னாள் நாராயணி.

இதைக் கேட்டதும் மோகினிக்குச் சங்கடம் நீங்கியது. நாராயணிக்குக் குளக்கரையில் நடந்தது இன்னும் தெரியாது என்பது தெளிவாயிற்று.

மெள்ளச் சமையல் அறையில் போய் இலை முன்னால் உட்கார்ந்தாள். சற்று ஆறி உலர்ந்துபோன சோற்றையும், அதற்கு நேர் எதிர்மாறாகப் பூசணித் துண்டங்களை மிளகும் உப்பும் போட்டுத் தயார் செய்து வைத்திருந்த ஒரு விதக் கூட்டையும் பரிமாறினாள் நாராயணி.

மோகினி ஒன்றும் பேசாமல் சாப்பிட்டாள்.

பிறகு சோறும் மோரும் போட்டாள். அதற்கு ஊறுகாயாக எலுமிச்சம்பழம் பிழிந்து உப்பு போட்ட பச்சை மிளகைப் போட்டாள்.



"உங்கள் பெண்ணுக்கும் கோபாலசாமியின் பிள்ளைக்கும் ஜாதகம் பார்த்தீர்களே, எப்படி இருக்கிறது?"

"ஜாதகம் சாதகமாத்தான் பொருந்தி இருக்கு. இனிமேல் என்னுடைய மணிபர்ஸுக்கும் கோபாலசாமியின் மணிபர்ஸுக்கும் தான் பொருத்தம் பார்க்கணும்."

மோகினி பேசாமல் சாப்பிட ஆரம்பித்தாள்.

அப்போது நாராயணி, "குட்டி ஆஸ்பத்திரியிலிருந்து ஓடிவந்துவிட்டான்," என்று சொல்லி நிறுத்தினாள்.

இலையிலிருந்த சோற்றைப் பார்த்தபடி மோகினி, "தெரியும். திண்ணையில் படுத்திருக்கிறான். பார்த்தேன்," என்று சொல்லிவிட்டு வேறு ஒன்றும் கூறாமல் மறுபடியும் தொடர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள்.

"பச்சை மிளகு ஊறுகாய் என்றால் உனக்குப் பிடிக்குமே! அதைத் தொடாமலே சாப்பிடுகிறாயே, எங்கே மோகினி உன் கவனம்?" என்று நாராயணி கேட்டாள்.

மோகினிக்கு இருந்த மனக் குழப்பத்தில், இலையில் என்ன பரிமாறப் பட்டிருக்கிறது என்றுகூடக் கவனிக்க முடியாமல், இயந்திரம்போல் சாப்பிட்டாள்.

சாப்பிட்டு முடிந்ததும் மோகினி வீட்டின் நடுக்கட்டில் படுத்துக் கொண்டாள்.

நாராயணி அம்மாள் சமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவி எடுத்து வைக்கும் சப்தம் கேட்டது. பிறகு திடீரென்று சிணுங்கும் ஒலி கேட்டது.

மோகினி படுக்கையில் படுத்தபடி தூங்காமல் இருந்தாள்.

நாராயணி சமையல் அறைக் கதவை மூடிவிட்டு நடுக்கட்டுக்கு வந்தாள்.

ஒரு பழைய கம்பளியை எடுத்துக் கொண்டு வாசல்புறம் சென்றாள்.

மகனுக்குப் போர்த்திவிட்டு, கதவைத் தாளிட்டுக்கொண்டு திரும்பி வந்து பாயை விரித்துக்கொண்டு படுத்தாள்.

படுத்தவுடன் நாராயணியின் உடல் குலுங்கியது. சத்தமில்லாமல் அழுது கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்த மோகினிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

படுக்கையை விட்டு எழுந்து நாராயணி அம்மாள் அருகில் போய் உட்கார்ந்தாள். அப்போதுதான் நாராயணி அம்மாளின் கிழிந்த ஒட்டுப் போட்ட சேலையைப் பார்த்தாள்.

கடந்த சில வருடங்களாகத் தனக்கென்று ஒரு சேலைகூட வாங்கிக் கொள்ளாது ஓயாமல் உழைத்துவரும் அந்தத் தியாக உருவம் எதை நினைத்து அழவேண்டும் என்று மோகினிக்குப் புரியவில்லை.

மோகினி வேலைபோன செய்தியைச் சொன்னபோதுகூட நாராயணி கலங்கவில்லை.

சங்கரன்குட்டி குளக்கரையில் நடந்து கொண்ட முறையைப்பற்றி மோகினி நாராயணியிடம் சொல்லவில்லை.

பின் எதை நினைத்து நாராயணி அழக்கூடும்?

''அம்மா! அம்மா! ஏம்மா அழறீங்க?'' என்று நாக்குழறக் கேட்டாள்.

நாராயணி மோகினியை ஒருமுறை பார்த்துவிட்டு மீண்டும் விசித்து அழ ஆரம்பித்தாள். ''ஏம்மா அழறே! என்னம்மா நடந்தது? சொல்லும்மா,'' என்று திரும்பவும் கேட்டாள் மோகினி.

''மோகினி! என்ன நடந்துதுன்னு என்னையே கேட்கறியா அம்மா? மோகினி, நீ ரொம்பப் பெரியவளாயிட்டே. விஷயங்களை மூடிவைக்கிற அளவுக்குப் பெரியவளாயிட்டே,'' என்று சொல்லிவிட்டு, அழுகை நடுவே ஆத்திரத்தோடு மோகினியைப் பார்த்தாள்.

மோகினி என்ன சொல்வது என்று உணராமல் இருந்தாள். ''குட்டி எங்கிட்டே எல்லாம் சொல்லிட்டான். மோகினி! நீ குளக்கரைக்குப் போனது, அங்கே நீ குளிச்சிட்டு இருந்தது, உன்னை அவன் கட்டிப் பிடிச்சு உங்கிட்டே கேவலமா நடந்துக்கிட்டது, நீ அவனை அடிச்சது எல்லாம் எனக்குத் தெரியும். அவன்தான் பைத்தியமாச்சே, செய்யறதையும் செய்துட்டு எல்லாத்தையும் சொல்லவும் சொல்லிட்டான். நீ கெட்டிக்காரி. பெரிய மனுஷி. அவனை மூடி வைக்கிறே,'' என்று படபடவென்றுசொல்லிக்கொண்டே போனாள்.

''குட்டி வேணும்னு ஒண்ணும் செய்யலேம்மா. அவன் எப்பவும் என் எதிர்லே நின்னு பேசவே பயப்படுவான். இன்னிக்கு மட்டும் ஏன் அப்படி நடந்துக்கிட்டான்னு எனக்கே புரியலேம்மா. தப்பு ஒண்ணும் நடந்துடலே. உங்ககிட்டே சொல்லி உங்களுக்கு ஏன் வேதனையைத் தருவானேன்னுதான்...'' என்று கூறினாள் மோகினி.

''நல்லாயிருக்கு. விபரீதமா ஏதாவது நடந்திருந்தா அப்போ என்னடி பண்ணுவே? இத்தனை வருஷம் எனக்கும் குட்டிக்கும் நீ உழைச்சு சம்பாதிச்சுப் போட்டது போதாது? ஆயுசு பூராவும் நீ வீணாகப் போறதை நான் எப்படிப் பொறுப்பேன் மோகினி? என் பிள்ளை தான் உபயோகமில்லாமல் போயிட்டான்னு, என்னைத் தேடி வந்த பெண்ணும் வீணாகப் போகணுமா! நாளைக்கே பாலக்காடோ, எர்ணாகுளமோ போயி ஒரு வேலையைப் பாரு. இனிமே நீ இந்த வீட்டிலே இருக்கிறதே ஆபத்துன்னு தோணுது,'' என்று கூறினாள் நாராயணி.

அதற்கு மோகினி, ''அம்மா! குட்டி எங்கிட்டேயாவது பயப்படுவான். உங்ககிட்டே அவனுக்குப் பயமே கிடையாது. நீங்க எப்படியம்மா தனியா அவனை வச்சுக்கிட்டு இருக்க முடியும்?'' என்றாள்.

''முடியுதோ, முடியல்லியோ என் தலைவிதி. அவனை நான்தான் கட்டி அழுதாகணும். அதற்காக உன் வாழ்வு பாழாகக்கூடாதும்மா. இன்னிக்கு நடந்த மாதிரி இருக்கு, உங்கம்மா எரியும் பஸ் அருகே விழுந்து கிடந்ததும், நீ இடி மழை, மின்னலோட அந்த அர்த்த ராத்திரியிலே என் வீட்டு வாசல் படியிலே நின்னுக்கிட்டு கதவைத் தட்டினதும். மோகினி! நீ நல்ல இடத்திலே மணந்து சுகமா இருக்கணும்மா. அப்போதான் எனக்கு நல்ல கதி கிடைக்கும். நான் நிம்மதியாச் சாக முடியும்,'' என்று நாராயணி சொல்லி விட்டு மோகினியை அணைத்துக் கொண்டு அழுதாள்.

தாயின் இவ்வளவு வேதனைக்குக் காரணமான சங்கரன்குட்டி நிம்மதியாகக் குறட்டை விட்டபடி திண்ணையில் தூங்கிக்கொண்டிருந்தான்.

அதே இரவு கோயமுத்தூர் ஆஸ்பத்திரியில் பிரத்தியேகமான அறையில் விஜயா உயிரோடு போராடிக் கொண்டிருந்தாள்.

பிராணவாயு அடைக்கப்பட்ட உருளையிலிருந்து விஜயாவின் நாசிக்கு ரப்பர் குழாய் வழியாகப் பிராண வாயு செலுத்திக் கொண்டிருந்தனர்.

அவள் கையில் உள்ள ரத்தக் குழாய் வழியாக உணவு திரவ ரூபத்தில் சென்று கொண்டிருந்தது.

இவ்வித உருளைகளும், அதில் இருந்து தொடங்கும் ரப்பர்க் குழாய்களும் தாயின் மயங்கிய நிலையும், தந்தையின் சிவந்த கண்கள், கலைந்த தலை, கவலை பிரதிபலிக்கும் முகம்—யாவும் குழந்தை கௌரிக்குப் புதிய அனுபவங்கள்.

பிரம்மாண்டமான ஹாலில் பல பேர் வரிசையாகக் கட்டில்களில் படுத்திருப்பதை கௌரி பார்த்தாள்.

அதுவே அவளுக்குப் பயமாக இருந்தது.

வெள்ளை உடை அணிந்த நர்ஸுகள், டாக்டர்கள் வந்துபோவதும், ஒருவரும் அவளிடம் நின்று பேசாமல் செல்வதும் அவள் மனத்தை உறுத்தியது. அம்மாவுக்கு ஏதோ ஆபத்து என்று மட்டும் புரிந்து கொண்டாள்.

ஆஸ்பத்திரியில் எல்லா டாக்டர்களும் அங்கு கூடிவிட்டனர்.

அப்பாவின் முகத்தைப் பார்க்கவே கௌரிக்குப் பரிதாபமாக இருந்தது.

அவருக்கு தேறுதல் சொல்ல வேண்டும்போல் தோன்றியது.

எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. மெள்ளத் தந்தையை நெருங்கினாள்.

தந்தை டாக்டரைப் பார்த்து, "எப்படி இருக்கு டாக்டர்?" என்று கேட்டார். அதற்கு டாக்டர், "ஒன்றும் சொல்ல முடியாது. வி மஸ்ட் டர்ன் தி கார்னர் எட்," என்று கூறினார்.

இரண்டு நாட்களாக ஒரு முடிவு தெரியாத அழற்சி ராஜுவுக்கு ஏற்பட்டது.

பெருமூச்சு விட்டான். அவன் மனம் பெரும் சலிப்போடு இருந்தது.

கௌரி தந்தையின் சட்டையை இழுத்தாள்.

ராஜு திரும்பினான்: "அப்பா! இந்த சாக்லெட் சாப்பிடப்பா," என்று சொல்லி, சாக்லெட்டை நீட்டினாள் கௌரி.

குழந்தையின் மனத்தில் அவள் தன் தந்தைக்கு ஆறுதல் சொல்வதாக நினைப்பு.

ஆனால் மனம் உடைந்து போயிருக்கும் தந்தைக்கு அது கோபத்தைத்தான் கொடுத்தது. "கௌரி! நீ சும்மா இருக்கமாட்டே," என்று கடுகடுப்புடன் சொன்னான்.

தந்தையின் கடுமையான குரல் கேட்டு கௌரி நடுங்கிவிட்டாள்.

எல்லோர் கவனமும் கட்டிலில் படுத்திருக்கும் விஜயாவின் ஊசலாடும் உயிரின்மீது நின்றது.

(தொடரும்)

✻

சென்னை மயிலாப்பூர், சீனிவாச சாஸ்திரியார் ஹாலில் 'போர்க்களம் கண்டு வந்தோம்' என்ற தலைப்பில் திரு. ஈ. வெ. கி சம்பத் பேசினார். போர் வீரர் கேட்ட ஒரு சுவையான கேள்வியைப் பற்றி அவர் சொன்னார்:

"'போர்க்களத்தில் நமது வீரர்களுக்கு நாங்கள் ஆறுதல் சொன்னோம். 'உங்கள் மனைவி பிள்ளைகள் இவர்களைப் பற்றிக் கவலை வேண்டாம். நிவாரணிக்கு நிறையத் துணிமணிகள் கொடுத்திருக்கிறோம்' என்று நாங்கள் கூறியபொழுது ராஜபாளையத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் ஒருவர் குறுக்கிட்டு, கல்யாணம் ஆகாத எனக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? பட்டாளத்தில் இருப்பதால் எனக்கு யாரும் பெண் தரமாட்டேன் என்கிறார்கள் என்றார். உடனே நான் 'கவலை வேண்டாம். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடு உங்கள் ஊரைச் சேர்ந்தவர்தான். ஆகவே, நல்ல பெண் பார்த்து மணமுடிக்க ஏற்பாடு செய்யலாம் என்றேன்!

தகவல்: சி. அ. ராமையா



## அத்தியாயம் 24.

ஊசலாடிக் கொண்டிருந்த விஜயாவின் உயிர் இந்த உலகத்தில் தங்குமா, இல்லை வேறு உலகத்துக்குச் சென்றுவிடுமா என்று புரியாமல் இருந்த போது, குழந்தை கௌரியின் உணர்ச்சிகளைப் பற்றிக் கவனிக்க அவகாசம் ஏது?

கௌரிக்கு அங்குள்ளவர்களின் மனம், அந்தச் சூழ்நிலை யாவும் சரியாகப் புரியவில்லை. அங்குள்ளவர்களுக்கும் அவளுடைய குழந்தை மனத்தின் வேதனை தெரியவில்லை. மோகினி டீச்சர் இங்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கௌரி நினைத்தாள். அந்த அறையில் நாம் இருப்பதே சரியில்லை என்று நினைத்து, மெள்ள அந்த அறையிலிருந்து நழுவினாள்.

அந்த ஆஸ்பத்திரியின் நீண்ட வராந்தாவில் நடந்து சென்றாள். அது வளைந்து ஓர் இடத்தில் திரும்பியது. கௌரியும் திரும்பினாள். இப்படிப் பல திருப்பங்களைத் தாண்டியதும், கௌரிக்கு ஆஸ்பத்திரியில் எங்கிருக்கிறோம் என்றே தெரியவில்லை. இரவு வேளை, மங்கிய வெளிச்சம். இந்த நிலையில் எல்லா வராந்தாக்களும் ஒரே மாதிரியாக இருந்தன. வராந்தாவை அடுத்த ஹால்களில் ஒரே படுக்கைகளாக இருந்தன. மூலைக்கு மூலை ஒரே முக்கல், முனகல், இருமல் சப்தங்கள்.

அந்தக் கோயமுத்தூர் ஆஸ்பத்திரியில் அம்மா படுத்திருக்கும் அறை எது என்றே கௌரிக்குத் தெரியவில்லை. அங்கும் இங்கும் ஓடினாள். ஓர் அறையினுள் நுழைந்தாள். அங்கு ஒரு தாய் பிரசவ வேதனையில் அலறிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிச் சில நர்ஸ்கள் நின்று கொண்டிருந்தனர்.

கௌரி அங்கிருந்து நகர்ந்து வராந்தாவின் மறு கோடிக்கு வந்தாள். இமரென இறந்துவிட்ட ஒருத்தியைச் சக்கர வண்டியில் வைத்துத் தள்ளிச் சென்று கொண்டிருந்தனர், ஆஸ்பத்திரி ஆட்கள்.

ஆஸ்பத்திரி ஒரு பிரயாண விடுதி அல்லவா? இந்த உலகத்தில் வந்து வாழ நுழையும் ஜீவன்களும், இந்த உலகத்தை விட்டுப் பிரியும் ஜீவன்களும் ஆஸ்பத்திரியில்தானே சந்திக்க வேண்டியிருக்கின்றன! ஒரு மூலையில் பிறப்பு; இன்னொரு மூலையில் சாவு! இரண்டுக்கும் ஒரே 'க மரியாதை காட்டும் ஆஸ்பத்திரி சிப்பந்திகள்!





கௌரி எதையும் புரிந்து கொள்ளாமல் ஒருவித புரியாத பயத்தோடு அங்குள்ள படிக்கட்டில் இறங்கினாள். ஆஸ்பத்திரியை அடுத்த திறந்த வெளிக்கு வந்தாள். அங்கு மரங்களிடையே பலவிதக் கார்களும், குதிரை வண்டிகளும் நிறுத்தப்பட்டு இருந்தன. விளக்குக் கம்பத்து அடியில் ஒரு சிமெண்ட் பெஞ்சு போடப்பட்டிருந்தது. அதில் சாய்ந்தபடி எதிரே உள்ள ஆஸ்பத்திரியைப் பார்த்தாள். அவ்வளவு பெரிய ஆஸ்பத்திரியில் தன் தாய் படுத்திருக்கும் அறை எது என்று புரியாமல் உட்கார்ந்திருந்தாள். விளக்கைச் சுற்றி மொய்க்கும் பூச்சிகள் அவள் மீது பறந்து விழுந்தன. அது அவளுக்கு அருவருப்பாய் இருந்தது. விளக்கடியிலிருந்து நகரலாம் என்றால் சுற்றிலும் இருளாக இருந்தது. இருள் பயத்தைக் கொடுத்தது. இருக்கவும் முடியாமல் நகரவும் முடியாமல் தனியே நின்றாள். கௌரிக்கு அழுகை அழுகையாய் வந்தது.

விஜயா படுத்திருக்கும் அறையில் குழந்தை எங்கு சென்றாள் என்பதைப் பற்றி யாரும் சிந்திக்கவில்லை. விஜயாவின் கரத்திலிருந்து இணைக்கப்பட்டிருக்கும் உணவுத் திரவம் ஒரு கண்ணாடி ஜாடியிலிருந்து சொட்டுச் சொட்டென்று விழுந்து கொண்டிருந்தது. அது தீர்ந்ததும் அங்குள்ள நர்ஸ் அதை மாற்றி வேறு ஜாடியை எடுத்துப் பிணைக்கும்போது, விஜயா மெள்ளக் கண் திறந்தாள். அவள் பார்வைக்கு எல்லாம் பனிப்படலம் போல் தெரிந்தது. கண்ணாடி ஜாடிகள், பிராண வாயு சிலிண்டர்கள்... மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள்.

அந்த ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டர் அவளை நெருங்கினார். அவள் கைகளை எடுத்து நாடித் துடிப்பைப் பார்த்தார். அவர் முகத்தையே வெறித்துப் பார்த்தபடி இருந்தான் ராஜு. எல்லோர் கவனமும் பிரதம டாக்டரின் முகத்தில் லயித்து நின்றது. குதிரைப் பந்தயத்தில் குதிரைகள் பிரிக்க முடியாதபடி ஒரு தொகுப்பாக ஓடி வெற்றிக் கம்பத்தைத் தாண்டிய பின்பு எந்த நம்பர் குதிரை வென்றது என்று தெரியாமல் பணம் கட்டியவர் கூட்டம், ஒரு பலகையை அண்ணாந்து பார்த்து நிற்கும். பந்தய மைதான நீதிபதிகள் போட்டோ பார்த்து முடிவு சொல்லச் சில விநாடிகள் பிடிக்கும். அதுவரை சூதாடிகள் உள்ளே சுவாசித்த மூச்சை வெளியே விடாமல் நம்பர் பலகையைப் பார்த்து நிற்பார்கள். அவ்வாறு ராஜுவும் அவன் உறவினர்களும் ஆஸ்பத்திரி பிரதம டாக்டரின் முகத்தைப் பார்த்து முடிவுக்காகக் காத்து நின்றனர்.

டாக்டர் முகம் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் இருந்தது. அவர் பக்கத்திலுள்ள டாக்டரிடம் திரும்பி, ''கோரமைன் ப்ளீஸ். சீக்கிரம்!'' என்றார்.

அந்த டாக்டர், அறையின் மூலைக்கு ஓடி ஓர் இன்ஜக்ஷன் ஊசியில் ஏதோ

களும் ஒன்றும் சொல்லவில்லே. அவர் முகமும் ஒன்றும் சொல்லவில்லே. அவர் அறையின் வெளிப்புறம் நோக்கி நடக்க ஆரம்பித்தார். டாக்டரின் மௌனம் எல்லோருடைய மனத்திலும் பீதியைக் கொடுத்தது. டாக்டர் மறுமுறை படுக்கையில் படுத்திருக்கும் விஜயாவைப் பார்த்தார். ஒரு பெருமூச்சு விட்டபடி அறையின் வெளிப்புறம் சென்ருர். ராஜு அவரைத் தொடர்ந்து




மருந்தை நிரப்பிக் கொண்டு வந்தார். ஈதரில் தோய்த்த பஞ்சும், இன்ஜக்ஷன் ஊசியும் சின்ன டாக்டர் கையிலிருந்து பிரதம டாக்டரின் கைக்கு மாறின. அவர் ஊசியை விஜயாவின் கைகளில் பாய்ச்சினர். விஜயா முகம் சுளித்தாள். ஊசியை எடுத்துவிட்டுப் பிரதம டாக்டர் திரும்பினர். ராஜு அவரைப் பார்த்தபடியே நின்ருன். அவர் உதடு

வந்தான். "என்ன டாக்டர்! என்ன டாக்டர்!" என்றான்.

டாக்டர் தரையைப் பார்த்தபடி, "என்னாலே ஆனதைச் செய்துட்டேன். எனக்கும் ஒன்னும் புரியல்லே மிஸ்டர் ராஜு," என்று சொல்லும்போதே கட்டிலில் படுத்திருந்த விஜயாவின் உடலில் அசைவு ஏற்பட்டது.

அவள் மெள்ளக் கண்களைத் திறந்தாள். அவள் உதடுகள் மெள்ள அசைந்து அவன் எதையோ சொல்ல முயன்றாள். ராஜுவும், டாக்டரும் அவள் அருகே ஓடினர். டாக்டர் முகத்தில் ஒருவித மலர்ச்சி ஏற்பட்டது. அவர் ஸ்டெதாஸ்கோப்பால் அவள் மார்பைச் சோதித்தார். பிறகு நாடித் துடிப்பையும் பரிசோதித்தார். புன்முறுவலோடு ராஜுவிடம் திரும்பி, "மிஸ்டர் ராஜு! ஷீ இஸ் கமிங் ரவுண்ட். இம்முறை பிழைத்துவிட்டாள்," என்று ராஜுவின் கையைக் குலுக்கினார்.

அந்த அறையில் கூடியிருந்தவர்களுக்கு மனதிலிருந்து பெரும் சுமை அகன்றது போல் இருந்தது. ஆனால் படுக்கையில் படுத்திருந்த விஜயாவுக்கு டாக்டர் சொன்னது எதுவும் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவள் கண்கள் ஒரு விநாடி திறந்து மறுபடியும் மூடியபடியே இருந்தன. அவள் முகத்தில் முன்பு ஒரு வெண்திரை படிந்து இருந்தது. அது இப்போது விலகியிருந்தது. அவள் உதடுகள் மென்மையாக, எதையோ உச்சரிக்க முயன்றபடி இருந்தன.

ராஜு மிகக் கனிவோடு, "என்ன விஜயா? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

ராஜு கேட்ட தொனியிலிருந்தும் அவன் ஆர்வத்திலிருந்தும், விஜயா கோயமுத்தூரையே விலைக்கு வாங்கித் தரும்படி கேட்டிருந்தாலும் அவன் தயங்கியிருக்க மாட்டான் என்பது தெரிந்தது. விஜயா கண்களைத் திறந்து, விட்டத்தைப் பார்த்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். நெருங்கிய உறவினர்களின் முகங்களைப் பார்த்தாள். 'நாம் மலையாளத்துப் பங்களாவில் இல்லை. கோயமுத்தூரில் இருக்கிறோம்' என்று புரிந்து கொண்டாளோ என்னவோ?

கணவனை அன்போடு பார்த்தபடி, "நாம் எங்கே இருக்கிறோம்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"விஜயா! நீ பாத்ரூம்லே மயங்கி விழுந்தவுடனேயே டாக்டரை அழைச்சிக் காண்பித்தேன். அவர் உன்னைக் கோயமுத்தூருக்குக் கொண்டு போகணும்னு சொல்லிட்டார். இப்போ கோயமுத்தூர் ஆஸ்பத்திரியிலேதான் இருக்கோம்," என்று ராஜு விளக்கினான்.

அவள் பார்வை அப்படியே ராஜுவின் முகத்தில் லயித்து நின்றது. புன்முறுவல் செய்தபடி, "உங்க முகம் வாடியிருக்கே! கண் சிவந்திருக்கு! நீங்க தூங்கவே இல்லியா? சாப்பிடக் கூட இல்லியா?" என்று விஜயா வேதனை ததும்பக் கேட்டாள்.

ராஜு ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்தான்.

டாக்டர், விஜயாவிடம், "என்னம்மா! அவர் சாப்பிடறதாவது? இரண்டு நாளா அவர் உங்களைவிட்டு நகரவே இல்லை. இவ்வளவு அன்பு வைச்ச புருஷனை நான் பார்த்ததேகிடையாது," என்று புன்முறுவல் செய்தபடி சொன்னார்.

விஜயாவுக்கு அதைக் கேட்கவே மிகப் பெருமையாக இருந்தது. அவள் மனம்



## துப்பாக்கி ஏந்திய தபால்காரர்

ஆயுதப் போலீசார் போல், ஆயுதத் தபால்காரர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள். தண்ணீரை வாரியடிக்கும் 'ஸ்ப்ரே கன்' கொடுக்கப் பட்டுள்ளது. தபால் கொடுக்கச் செல்லும் தபால்காரர்களை விட்டு நாய்கள் கடித்து விடுகின்றனவாம். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு. தற்காப்பிற்காகத் தபால்காரர்கள் அதைப் பயன் படுத்தலாம். இந்தத் துப்பாக்கியிலிருந்து வெளிவரும் தண்ணீர் போன்ற ஒருவகை திரவம் நாய்களைத் தற்காலிகமாகச் சில நிமிடங்களுக்குக் குருடாக்கி விடுகிறது. அதற்குள், தபால்காரர் தபாலைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிடலாம்.

ஆனால் இது குறித்து மிருக வதைத் தடுப்புச் சங்கம் ஆட்சேபம் எழுப்பியது. இதற்குமுன் 'போஸ்ட்மேன்'களை நாய்கள் கடித்தபோது, போஸ்ட்மேன் வதைத் தடுப்புச் சங்கம் ஆரம்பிக்க யாரும் முயலவில்லையே என்று தபால்காரர்கள் சங்கம் சுடச் சுடப் பதில் கொடுத்தது.

—கி. சிவசுப்பிரமணியன்
(ஆதாரம்: ஹிம்மத்)

பூரித்தது. அடுத்த நிமிடம் ஏதோ நினைவு வந்தவள்போல் கணவன் பக்கம் திரும்பினாள். ''கௌரி எங்கே? அவளைத் தனியா பங்களாவிலே விட்டுட்டு வந்துட்டீங்களா?'' என்று கேட்டாள்.

அப்போதுதான் ராஜுவுக்குக் குழந்தையின் நினைவு வந்தது. ''இல்லையே, இங்கே கூட்டிட்டுவந்துட்டேனே. இங்கே தானே இருந்தாள்?'' என்று அறையில் பார்வையைச் செலுத்தினான் ராஜு.

குழந்தை எங்கே சென்றிருப்பாள் என்ற பீதி அவனுக்கு ஏற்பட்டது. தன் பீதியை வெளியில் காட்டாமல், ''இங்கே ரூம்லேதான் இருந்தாள். ஒரு வேளை பாத்ரூமுக்குப் போயிருப்பா, போய்ப் பார்த்துவிட்டு வர்றேன்,'' என்று கூறிவிட்டு, அறையைவிட்டு வராந்தாவுக்கு வந்தான். வராந்தாவில் கௌரி இல்லை, வராந்தாவை ஒட்டிய பாத்ரூம்களிலும் அவள் இல்லை. ராஜுவின் மனம் கலவரம் அடைந்தது.

கடந்த இரண்டு நாட்களாகவே எதிர்பாராத அதிர்ச்சிகளுக்கு ஆளாகியிருந்த ராஜுவின் மனம், நரம்புகள் எல்லாம் முறுக்கேறி இருந்தபடியால் அவன் ஏதேதோ நினைக்க ஆரம்பித்தான். மருண்டவன் பார்வையில் இருண்டதெல்லாம் பேய் என்பது போல், பயங்கரமான சிந்தனைகள் ராஜுவின் மனத்தில் கொத்துக் கொத்தாய் முளைத்து எழுந்தன.

ஒரு வேளை கௌரி ஆஸ்பத்திரியை விட்டு வெளியே நடந்து சென்றிருந்தால்? வைர லோலக், பச்சை நெக்லஸ் அணிந்திருக்கும் அவளை, இருட்டில் யாராவது தூக்கிச் சென்றுவிட்டால்.. அதற்குமேல் அவனால் நினைக்கவே முடியவில்லை, தடதட என்று அவன் படிக்கட்டுகளில் இறங்கி, 'ஷெவர்லே வேன்' நிற்கும் இடத்துக்கு வந்தான்.

டிரைவர் மட்டும் முன் சீட்டில் படுத்து நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். கௌரியைக் காரிலும் காணவில்லை. ஆஸ்பத்திரியில் அவனுக்கு யாரையும் தெரியாது. இரவு வேளையில் குழந்தை எங்கு துணிச்சலோடு போயிருக்க முடியும்? விஜயாவிடம் போய் என்ன சொல்வது? குழந்தையைக் காணோம் என்று சொன்னால், அவளுடைய பலவீனமான இதயத்துக்கு என்ன நேருமோ? ஆஸ்பத்திரி வராந்தாவில் அங்குமிங்கும் ஓடினான். ஆஸ்பத்திரியின் வெளிப்புறம் வந்தான்.

வெளிப்புறத்தில் ஒரு குதிரை வண்டியில் ஒரு மில் கூலி, அழுகின்ற மனைவியோடும், மயங்கிக் கிடக்கும் குழந்தையோடும் ஏறிக்கொண்டிருந்தான். அந்தக் குழந்தையின் கை கால்கள் மாந்தத்தினால் இழுத்துக் கொண்டிருந்தன. குதிரை வண்டிக்காரன் அவனிடம் வாடகை பேரம் செய்துகொண்டிருந்தான். அந்த மில் கூலி, ''வாடகையைப் பத்தி என்ன பேச்சப்பா? ஒழுங்கா வைத்தியம் செய்து என் செல்வத்தை வீட்டுக்கா கொண்டு போறேன்? நேராகக் காட்டுக்குக் கொண்டுபோறவன்கிட்டே என்ன பேச்சப்பா பேசறே? நீ கேட்கறதை நான் கொடுக்கறேன்,'' என்று கூறினான்.

வண்டிக்காரன் திகைப்படைந்து வாயை மூடிக்கொண்டான். அந்த மில் கூலியின் சுருண்ட தலை மயிர் பறந்து, பஞ்சு படிந்து கிடந்தது. நேராகப் பருத்தி மில்லிலிருந்து வந்தவன் அவன் என்று தெரிந்தது. ராஜு அந்தக் குதிரை வண்டியை நெருங்கினான். நான்கு வயதுப் பெண் குழந்தை ஒரு விதமாக இழுத்தபடி கிடந்தது.

ராஜு ஒரு விநாடிக்குத் தன் மகள் கௌரியை மறந்தான். ''என்னப்பா! குழந்தைக்கு இழுத்துக்கிட்டிருக்கு? வைத்தியம் செய்யாமல் போறே?'' என்று கேட்டான்.

திரும்பிப் பார்த்த மில் கூலி, ராஜுவிடம், ''என் மகள் இறந்து போகணும்னு நான் நினைப்பேனுங்களா? சின்ன டாக்டர், ஆஸ்பத்திரியிலே இடமில்லே, பெட் இல்லேன்னுட்டாருங்க. எனக்குப் பணம் இருந்தா பெட் கிடைச்சிருக்கும்!'' என்று கூறிவிட்டு வண்டியில் ஏறப் போனான்.

ராஜு கண் மூடியபடி இருந்த குழந்தையைப் பார்த்தான். ஒருவித உணர்ச்சி அவனை உந்தியது. ''வாப்பா,

சேட்டையைச் சொல்லுகிறோம்—

விடை:

(1) ப. நீலகண்டன்.
(2) மா. ரா.
(3) பி. ஆர். பந்துலு
(4) ஸ்ரீதர்.
(5) கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
(6) ஆர். சுந்தரம்.
(7) ஏ. கே. வேலன்.
(8) கே. சங்கர்.

—தொகுப்பு: விமல்

www.tamilbooksworld

உனக்கு பெட் நான் வாங்கித் தரேன்,'' என்று சொல்லிவிட்டு, தன் நிலையை மறந்தபடி பாய்ந்து வண்டியில் கிடக்கும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு டாக்டரின் அட்மிஷன் அறை நோக்கி நடந்தான்.

பெரிய புள்ளி ஒருவரே சொல்லும் போது, மறுக்க முடியுமா டாக்டரால்? உடனே ஆஸ்பத்திரி வராந்தாவிலே கட்டில் போடச் சொல்லி வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்தார் டாக்டர்.

அந்த மில் கூலியின் குழந்தை, இழுப்புக் குறைந்து தூங்கும் வரையில் ராஜு தன் மகள் கௌரியை மறந்திருந்தான்.

குழந்தை பிழைத்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதும்தான், மில் கூலி, ராஜுவை முதன் முறையாக நன்கு கவனித்தான். அவன் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. ''நீங்க... நீங்க.. பெரிய ஐயா மகன் ராஜு இல்லீங்களா?'' என்று கேட்டான்.

ராஜு அலட்சியமாக, ''ஆமாம்,'' என்றான்.

கூலி நெடுஞ்சாண்கிடையாக அவன் காலில் விழுந்தான். ''எஜமான்! நான் உங்க கோகிலா மில்லுலே வேலை செய்யற கூலிங்க. நீங்க எஜமான் மட்டுமில்லே, என் மகளுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த கடவுளுங்க,'' என்று அழுதபடி சொன்னான்.

அவனுடைய இளம் மனைவியும் ராஜுவை வணங்கினாள். ராஜுவின் மனத்திற்குள் ஒரே வேதனையாக இருந்தது. மகளைக் காணோமே என்று மனம் குழம்பிப் போயிருந்தபோது, ஏதோ உணர்ச்சி வயப்பட்டுச் செய்த உதவிக்கு என்ன பாராட்டுதல்!

அடுத்த கணமே கௌரி எங்கு போயிருப்பாள் என்ற கவலை அவனைப் பற்றிக்கொள்ளவே, ஆஸ்பத்திரி வராந்தாவிலிருந்து வெளிப்புறம் நோக்கி நகர்ந்தான்.

''டாக்டர்! டாக்டர்!'' என்ற குரல் ராஜுவின் காதில் விழுந்தது. ராஜுவுக்கு அந்தக் குரல் கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் நோக்கி எழுந்த பழகிய குரலாய் இருந்தது. அந்தக் குரல் தொடர்ந்து, ''பாவம்! யாரோ ஒரு குழந்தை ஆஸ்பத்திரிக்கு வெளியே சிமெண்ட் பெஞ்சிலே அனாதையாப் படுத்துக்கிட்டிருந்தது. நகை நட்டெல்லாம் பார்த்தா பெரிய இடத்துப் பெண்ணாகத் தெரியுது,'' என்று சொன்னவுடனே, நடந்து கொண்டிருந்த ராஜு நின்றான். திரும்பினான். பார்த்தான். அப்படியே திகைத்துப்போய் விட்டான்.

அவன் சித்தப்பா குழந்தைச்சாமி, தூங்கும் கௌரியைக் கையில் சுமந்தபடி டாக்டரிடம் நின்று கொண்டிருந்தார்.

''இது ராஜுவின் மகள் கௌரி அல்லவா? இது எப்படி ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்தது? ஸ்பெஷல் வார்டு ரூம்லே அல்லவா இருக்கணும்?'' என்று டாக்டர் அவரைப் பார்த்துக் கேட்டார்.

அதற்குக் குழந்தைச்சாமி, ''ராஜு சம்சாரம் விஜயாவுக்கு உடம்பு சரியில்லேன்னு, இங்கே ஆஸ்பத்திரியிலே இருக்கிறதா ஒரு சிநேகிதர் சொன்னார். உடனே ஓடி வந்தேன். வெளியிலே இந்தக் குழந்தையைப் பார்த்தேன். தூக்கிட்டு வந்தேன். விஜயா படுத்திருக்கும் ரூம் எங்கே சொல்லுங்க டாக்டர்,'' என்று கேட்டார்.

குழந்தைச்சாமி கேள்வியை முடிப்பதற்குள் ராஜு ஓடிவந்தான். ''சித்தப்பா! சித்தப்பா!'' என்று வார்த்தைகள் தடுமாற அவரையும் அவர் முதுகில் சாய்ந்தபடி தூங்கும் மகளையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றான்.

(தொடரும்)



''இந்த ஆபீசுக்கு இன்னொரு லேடி டைப்பிஸ்ட் வேணுங்கறியே? உனக்கு ஹெல்ப்பாக இருக்கும் என்றா?''

''ஆமா சார்! பேன் பார்க்கச் சௌகரியமா இருக்கும்.''

## அத்தியாயம் 25

குழந்தைச்சாமியும் ராஜுவும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர். சித்தப்பாவை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, அதுவும் கோவை ஆஸ்பத்திரியில் அவன் எதிர்பார்க்கவில்லை. புரியாத ஒரு நிம்மதி சித்தப்பாவைப் பார்த்தவுடன் அவனுக்கு ஏற்பட்டது. ஜுரத்தால் பீடிக்கப்பட்டவனுக்கு ஜுரம் தணிந்ததுபோல் இருந்தது.

எதுவும் விளங்காமல் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்த கௌரியைக் குழந்தைச்சாமி ராஜுவிடம் கொடுத்தார். ''குழந்தையைக் காணாமல் தவியாத் தவிச்சிட்டேன், சித்தப்பா!'' என்று சொல்லி, கௌரியை வாங்கி முத்தமிட்டான் ராஜு.

கௌரிக்கு முன்பு தந்தை கடிந்து கொண்டதுதான் நினைவில் இருந்தது. திடீரென்று ஏற்பட்ட தந்தையின் அன்பு அவளைக் குழப்பியது. யாரோ ஒரு காவி அணிந்த சாமியார் தன்னைத் தூக்கத்தில் தூக்கியதும், அவரைத் தன் தந்தை சித்தப்பா என்று அழைப்பதும் இணைக்க முடியாத சம்பவங்களாகத் தோன்றின.

சாமியாரையே விழித்து நோக்கும் கௌரியிடம், ராஜு, ''கௌரி! இதுதான் என் சித்தப்பா. உன் சின்னத் தாத்தா. இவர் ஒரு பெரிய சாமியார்,'' என்று அறிமுகம் செய்வித்தான்.

குழந்தைச்சாமி தந்தையின் தோளில் நின்றபடி தன்னை மருட்சியோடு பார்க்கும் குழந்தையை நோக்கிப் புன்னகை செய்து, ''உங்கப்பா சொல்றது சரியில்லை, குழந்தை; நான் பெரிய சாமியார் இல்லை. சின்னச் சாமியார்கூட இல்லை. சின்னச் சின்னச் சாமியார். என் பேரு என்ன தெரியுமா? குழந்தைசாமி,'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். கௌரியும் உடன் சிரித்தாள். குழந்தைச்சாமி ராஜுவிடம் திரும்பி, ''கோவையில் வீவிங் மாஸ்டர் ஒண்டிப் புதூர் நாராயணசாமி வீட்டுக்குப் போயிருந்தேன். அவன்தான் விஜயாவின் உடல்நிலை பற்றிச் சொன்னான். ஆஸ்பத்திரியிலே இருக்கிறதையும் சொன்னான். உடனே வந்தேன், ராஜு. விஜயாவுக்கு இப்போ எப்படி இருக்கு?'' என்று கவலையோடு கேட்டார்.

''அவள் நிலை கவலைக்கிடமாய்த்தான் இருந்தது, சித்தப்பா. கொஞ்சம் முன்னாடிதான் கண் திறந்து பார்த்தாள். இப்ப பயமில்லை என்று டாக்டர் சொல்கிறார். உங்களைப் பார்த்த பிறகு, டாக்டர் சொல்றது பொய்க்காது என்று ஊர்ஜிதம் ஆயிட்டுது, சித்தப்பா. நீங்க ஆஸ்பத்திரி எல்லைக்குள்ளே நுழைந்தப்புறம் விஜயாவுக்குத் தீங்கு வரமுடியுமா? நீங்களே சொல்லுங்க, சித்தப்பா.''

ராஜுவும் குழந்தைச்சாமியும் விஜயா படுத்திருக்கும் அறைக்குள் சென்றனர். விஜயா படுக்கையில் அமைதியாகப் படுத்திருந்தாள். அவள் கண்கள்



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

மூடியிருந்தன. ராஜு அறையினுள் நுழைந்ததும் உற்சாகத்துடன், "விஜயா! கௌரி வந்திருக்கிறாள், பாரு," என்று பலமான குரலில் ஆவலோடு கூறினான். அருகிலிருந்த நர்ஸ், "உஸ். .சத்தம் போடாதீங்க!" என்று ஆள் காட்டி விரலை உதடுகள் மீது வைத்து ராஜுவுக்குச் சைகை செய்தாள்.

ராஜுவின் குரல் கேட்ட விஜயா கண் விழித்து ஆவலோடு கௌரியைப் பார்த்துப் புன்னகை செய்தாள். ராஜு குழந்தையைப் படுக்கையில் உட்கார வைத்தான். விஜயாவின் கண்களில் அவள் உள்ளத்திலுள்ள தாய்மை உணர்ச்சியெல்லாம் கண்ணீராய் வெளிப்பட்டது. "என் செல்வமே, கௌரி," என்று சொல்லிக் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

கௌரியின் உள்ளமும் நெகிழ்ந்தது. வெகு நாட்களாகத் தாயின் கோபத்தைத்தான் உணர்ந்திருந்தாள். இன்றுதான் தாயின் பரிவையும் அன்பையும் உணர்ந்தாள். "நீ சாப்பிட்டியா கௌரி?" என்று விஜயா கேட்டாள். "நான் சாப்பிட்டுவிட்டேன், அப்பா தாம்மா இரண்டு நாளாச் சாப்பிடலே," என்று கௌரி செல்லமாக முறையிட்டாள். தன் விழிகளின் ஓரத்தால் ராஜுவை ஒரு முறை காதலோடு பார்த்தபடி, "நீங்க இரண்டு நாளாச் சாப்பிடாதது டாக்டருக்குத் தெரிஞ்சிருக்கு.... குழந்தைக்குக்கூடத் தெரிஞ்சிருக்கு. என் மேலே உங்களுக்கு அன்பு இருக்கிறதை இப்படியா பட்டினி இருந்து விளம்பரப்படுத்தணும்? போய் ஏதாவது பழம் பாலாவது வாங்கிச் சாப்பிடுங்க," என்று கண்டிப்பது போல் செல்லமாகச் சொன்னாள். ராஜு தலை குனிந்தான். அந்தச் சிறு குடும்பத்தில் உலவிய நட்பைக் கவனித்து மகிழ்ந்து நின்றார் குழந்தைச்சாமி.

விஜயாவின் விழிகள், அறையின் ஜன்னலோரத்தில் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்த சாமியாரைக் கவனித்தன. அதைப் பார்த்த கௌரி, "சின்னத் தாத்தா வந்திருக்காங்கம்மா," என்றதும், ராஜுவும், "ஆமாம், விஜயா. சித்தப்பாதான் வந்திருக்கிறார். அவர் போன தரம் இதே ஊரிலே நம்ம பங்களாவுக்கு வந்தப்போ கௌரி பிறந்திருந்தாள். இதைவிட ஆபத்தான நிலையிலே நீ இருந்தாய். டாக்டர்கள்கூடக் கை விட்டுட்டாங்க. சித்தப்பாதான் உனக்கு ஒன்றும் வராதுன்னு உறுதி கொடுத்தார். அவர் சொன்னபடி நீ பிழைத்தாய், விஜயா. இப்பவும் நீ கண் திறந்து பத்து நிமிஷம் ஆகல்லே, சித்தப்பா வந்துட்டார்," என்று பல வருஷங்கள் இடைவெளியிலே நடந்த இரு நிகழ்ச்சிகளையும் இணைத்துச் சொன்னான். விஜயா ஒன்றும் பேசாமல் தன் கண்களைத் தாழ்த்தினாள்.

குழந்தைச்சாமி அவள் படுக்கையை நெருங்கினார். அவர் இடுப்பில் எங்கோ மறைத்திருந்த சிறு துணிப்பையை எடுத்து, அதிலிருந்து விபூதியை எடுத்து விஜயாவின் நெற்றியில் அணிவித்தார். "விபூதி எனக்குத் தாங்க, தாத்தா," என்று கௌரி கேட்டாள்.

"விபூதியா? உனக்கா விபூதி வேண்டும்? பாலையன் விபூதியே நீ தானே கௌரி?" என்று விபூதி என்ற பதத்தை இரட்டை அர்த்தத்தில் பிரயோகித்துவிட்டுச் சிரித்தபடி குழந்தைக்கும் ராஜுவுக்கும் விபூதி கொடுத்தார் குழந்தைச்சாமி. சிறிய மாமனாரிடம் எந்தவித மரியாதை உணர்ச்சியும் இல்லாதவள்தான் விஜயா. இருந்த போதிலும், அவர் அறையில் நின்று கொண்டிருக்கும் போது நாம் கால் நீட்டிப் படுத்துக்கொண்டு இருக்கிறோமே என்று அவளுக்கு லஜ்ஜையாக இருந்தது. மற்றப் பந்துக்கள்—பணக்காரப் பந்துக்கள்— வந்தபோது கூட அவளுக்கு அந்தக் கூச்சம் ஏற்படவில்லை. அரை மணிக்கு முன்புதான் அவள் மரண வாசலிலிருந்து திரும்பியிருக்கிறாள். மற்றவர்களைப் பற்றியும், அவர்களின் உபசரணை பற்றியும், அவள் கவலைப்படத் தேவையில்லை. விஜயாவின் வழக்கமான பண்புக்கு மாறாக அவள் உதடுகளிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன. கணவனைப் பார்த்து, "பெரியவர் நின்னுகிட்டிருக்காரே. நாற்காலியை இழுத்துப்போட்டு அவரை உட்காரச் சொல்லுங்க," என்று சொன்னாள். சித்தப்பாவை ஒரு மன்னிக்க முடியாத குற்றவாளி என்று சந்தேகமற்ற, தீர்மானமான அபிப்பிராயம் கொண்ட விஜயா இவ்வாறு சொல்வது, ராஜுவுக்கே ஆச்சரியமாயிருந்தது. நாற்காலியை இழுத்துப் போட்டு, "உட்காருங்க சித்தப்பா," என்றான்.

''இல்லே ராஜு'', விஜயா ரெஸ்ட் எடுத்துக் கொள்ளட்டும். நாம் வராந்தாவுக்குப் போவோம்,'' என்று சொல்லிவிட்டு வராந்தாவை நோக்கி நடந்தார் குழந்தைச்சாமி. அவரும் ராஜுவும் வெளியே போனதும் விஜயா கௌரியை அந்த அறையில் மறு கோடியில் உள்ள ஒரு பெஞ்சில் படுக்கச் சொன்னாள். பாதித் தூக்கத்தில் எழுப்பப்பட்ட கௌரியும் உடனே போய்ப் பெஞ்சியில் படுத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள். விஜயா நர்ஸை அழைத்து ரொட்டியும் பாலும் கொண்டுபோய்க் கணவனுக்குக் கொடுக்குமாறு கட்டளையிட்டாள். ''இரண்டு நாட்களாகத் துணி போல் எந்த உணர்வும் இல்லாமல், உயிருக்கு ஊசலாடிக்கொண்டு இருந்தவள், ஞாபகம் வந்ததும் கட்டளையிட ஆரம்பித்து விட்டாள் பார்!' என்று எண்ணிக்கொண்டாள் அந்த நர்ஸ். 'கண் திறந்த உடனே கணவன் மீது எவ்வளவு அக்கறை இந்த அம்மாளுக்கு!' என்று அவள் நினைத்தாள். அந்த நர்ஸின் மனக் கண் முன், ஆண்மையின் விளக்கமாக அமைந்த ராஜுவின் உருவம் தோன்றியது. இவ்வளவு அழகான, செல்வந்தனான கணவனைப் பெற்ற மனைவி பின் எவ்வாறு இருப்பாள் என்று தன் மனத்தில் எழுந்த கேள்விக்குத் தானே பதில் கொடுத்துக் கொண்டாள் அவள். விஜயா படுத்திருந்த அறையை அடுத்த சிறு அறையில் இருந்த அலமாரியைத் திறந்து தட்டுகளில் ரொட்டித் துண்டுகளை எடுத்து வைத்தாள். பிறகு பிளாஸ்கிலிருந்து பாலை எடுத்து ஒரு



கண்ணாடி கிளாஸில் ஊற்றிக்கொண்டு அறையைவிட்டு நகர்ந்தாள்.

இதைப் பார்த்த விஜயா, நர்ஸ் தன் கட்டளையை நிறைவேற்றிவிட்டாள் என்பதை உணர்ந்துகொண்டு நிம்மதியாகக் கண்ணை மூடித் தூங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் காலைப் பொழுது சூரியன் உதித்து மணி ஒன்பதாகியும் விஜயா கண் விழிக்கவில்லை. ஒன்டதரை மணிக்கு விஜயா விழித்தெழுந்ததும் அவளுக்கு வயிற்றில் பசி ஏற்பட்டது. பல் விளக்கியதும் 'ஹார்லிக்ஸு'ம் 'பிரிட்டின்' பிஸ்கட்டும் நர்ஸ் கொண்டுவந்து கொடுத்தாள்.

டாக்டர் மறுபடியும் வந்து விஜயாவைச் சோதனை செய்துபார்த்தார். விஜயாவுக்கு இனி பயமில்லை என்றும் முற்றிலும் குணமான நிலைதான் என்றும் சொன்னார்.

திமர் என்று ஏதாவது ஏற்பட்டால் உடனே கவனிக்க, ஆஸ்பத்திரி அருகில் உள்ள ஓர் இடத்தில்தான் இருக்க வேண்டும் என்று ராஜு தீர்மானித்தான். கோயம்புத்தூரில் திருச்சி ரோடில் உள்ள கோகிலா மில்லைச் சேர்ந்த பங்களாவிலேயே தங்குவதுதான் சரி என்று தோன்றியது. அந்தப் பங்களாவில் இதுவரை உதகையில் அவர்கள் எஸ்டேட்டை நிர்வாகம் செய்துவந்த 'ஸ்மித்' என்ற ஒரு ஆங்கிலோ இந்தியக் குடும்பம் வாழ்ந்து வந்தது.

அவர்கள் குடும்பம் தற்காலிகமாக உதகமண்டலத்துக்குச் சென்றிருந்ததால், அந்தப் பங்களா காலியாக இருந்தது. டாக்டர் அனுமதித்தவுடன் விஜயாவை நேராக அந்தப் பங்களாவுக்கு கொண்டு செல்வது என்று தீர்மானித்தான் ராஜு. ஆங்கிலோ இந்தியர் குடும்பம், ரத்தின சபாபதிபுரத்தில் உள்ள ஒரு பங்களாவில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கோகிலா மில் மானேஜர் காமத் என்பவர் எல்லா ஏற்பாடுகளையும் தொலைபேசி மூலம் சில மணி நேரங்களில் பேசி முடித்தார்.

• • • • • • • • • • • • • • • • • • • • •



''ரெண்டு தபால் வந்திருக்கே! என்ன?''

''எனக்கு புல்மிஸ் ஆர்டர், உனக்கு அப்பாயின்மெண்ட் ஆர்டர்!''

குழந்தைச்சாமி, ராஜு, கௌரி மூவரும் அன்று மாலை திருச்சி ரோடு பங்களாவுக்குச் சென்றனர். அந்தப் பங்களா பத்து ஏக்கர் நிலப்பரப்பின் நடுவில் வீற்றிருந்தது. சிவப்புச் செங்கல்களால் ஆன ஒரு பழங்காலக் கட்டிடம். ஓங்கி வளர்ந்த தென்னை, மாமரங்கள் நடுவே, புகை நடுவே உள்ள ஜுவாலை போல் அமைந்து இருந்தது. ஓர் ஐரோப்பியனால் கட்டப்பட்டு பிறகு வெங்கடபதியினால் வாங்கப்பட்ட அந்த பங்களாவில் இதுவரை ஆங்கிலேயர் அல்லது ஆங்கிலேய ஆசாரத்தில் வாழ்ந்த ஆங்கிலோ இந்தியர்கள்தான் வாடகைக்கு வாழ்ந்து வந்தனர். பங்களாவின் இடப் புறத்திலேயே ஒரு சிறு பூப்பந்து ஆடும் கோர்ட், சிறு நீச்சல் குளம் இருந்தன. குழந்தைகள் விளையாடச் சங்கிலி ஊஞ்சல், சீசா, ஸ்லைட் எனப்படும் சிமெண்டால் செய்த சறுக்குமரம் இவையெல்லாம் அதில் வாழ்ந்த குழந்தைகளின் பொழுது போக்குக்காக ஏற்படுத்தப் பட்டிருந்தன. பங்களாவின் வலது புறத்தில் திறந்த வெளி இருந்தது. அதில் தரையோடு தரையாக அமைந்த ஒரு வட்டமான கிணறு. அந்தக் கிணறு வட்டமான கம்பிகளால் ஆன சட்டம் போன்ற மூடியால் மூடப்பட்டிருந்தது. கிணற்றைச் சுற்றிய கைப்பிடிச் சுவர் ஓர் அடி உயரத்துக்கும் குறைவாக இருந்தது. அந்தக் கிணற்றை மூடிய வட்ட வடிவமான சட்டத்தை விரும்பும் போது இழுத்துக்கொள்ளலாம். வேண்டியபோது நகர்த்தி, பூரா கிணற்றையும் மூடலாம். அரைக் கிணற்றை மூடி அரை கிணற்றை சூரிய வெளிச்சத்துக்குத் திறந்து வைக்கலாம்.

குழந்தைச்சாமி அதைக் கவனித்துப் பார்த்துவிட்டு, ''இது மிகவும் ஆபத்தான அமைப்பு, இரவு வேளைகளில் வேலைக்காரர்கள் மறந்து கிணற்றைப் பாதி திறந்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டால், முன்பின் தெரியாதவர் கிணற்றில் தவறி விழலாம். இந்தக் கிணற்றின் கைப்பிடிச் சுவரை உயர்த்த வேண்டும்,'' என்று சொன்னார்.

வீட்டின் பின்புறத்தில் காம்பவுண்டு சுவர் உயரமாக கட்டப்பட்டிருந்தது. அந்தச் சுவருக்கு ஆறுகஜ தூரத்துக்கு முன் நீண்ட சதுரமான மண் திட்டுகளும் அவற்றின் மீது தகர 'டார்கெட்'டுகள் வைக்கப்பட்

டிருந்தன. அது துப்பாக்கிப் பயிற்சிக்காகச் செய்துள்ள ஏற்பாடு என்பது தெரிந்தது. பின் சுவரில் புள்ளி புள்ளியாகப் பள்ளங்கள், சுவருக்கு வைசூரிநோய் வந்த உடல் போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுத்திருந்தது.

வீட்டின் மாடியில் ஒரு சதுரமான ஹால். அந்த ஹாலைச் சுற்றி ஒரு பால்கனி. அந்த பால்கனியிலிருந்து வீட்டின் நான்கு புறங்களையும் பார்க்கலாம். விஜயா சக்கர நாற்காலியோடு நான்குபுறமும் நகர்ந்து செல்லட்டும். ஓர் அறையிலேயே அடைபட்டுக் கிடக்கவேண்டாம் என்ற எண்ணம் ராஜுவுக்கு வந்தது. விஜயா போன்ற நோயாளிகளுக்கு மலையாளத்தை விடக் கோயம்புத்தூர் சீதோஷ்ணநிலை எவ்வளவோ மேல் என்று குழந்தைச்சாமியும் சொன்னார். மறுநாட் காலையிலேயே திருச்சிரோட் பங்களாவின் மாடி ஹாலுக்கு விஜயா மாற்றப்பட்டாள். பங்களாவில் கோயம்புத்தூர் வேலையாட்களையே வைத்துக்கொள்வது என்று தீர்மானித்தான் ராஜு. விஜயாவுக்கு மட்டும் கோயம்புத்தூரிலேயே ஒரு நோயாளியாகி தங்குவதில் அவ்வளவு விருப்பம் இல்லை. தினமும் உறவினர்கள், தெரிந்தவர்கள், பால்ய சிநேகிதிகள் என்று பலபேர் வருவார்கள். அவர்கள் பார்வையில் காலிழந்த முடமாக, படுக்கையோடு படுக்கையாகக் கிடக்கவேண்டியிருக்குமே என்று நினைத்து வருந்தினாள்.

குழந்தை கௌரிக்கு, குழந்தைச் சாமியிடம் சில மணி நேரங்களில் மாறுதல் ஏற்பட்டது. அன்று பிற்பகல் உணவருந்திய பின் குழந்தைச்சாமி பங்களா வெளி வராந்தாவில் ஒரு நாற்காலியில் அமர்ந்தபடி சிந்தித்துக்கொண்டிருந்தார். அவரிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தபடி கௌரி நெருங்கினாள். மலையாளத்தில் அவள் பள்ளியில் படித்தது, அவளுக்குப் பயத்தைப் போக்கி எல்லாக் குழந்தைகளையும் போல் ஓடியாடச் செய்த மோகினி டீச்சரைப் பற்றி எல்லாம் குழந்தைச் சாமியிடம் சொன்னாள் கௌரி.

குழந்தைச்சாமிக்கு, கௌரி மோகினியைப் பற்றிப் புகழ்ந்து சொன்னதும் சந்தோஷம் தாங்கவில்லை. "கிட்டத்தட்ட உன் வயசு இருக்கும்போது நான்தான் உன் மோகினி டீச்சரை முதல்லே பார்த்தேன். நான் அவளுக்



"ஹலோ! யார் பேசறது?"

"தியேட்டரிலிருந்து நான்தான் முனியம்மா பேசறேன். பஸ் ஸ்டாண்டிலே ஒரே கும்பல். டிரைவரை கார் எடுத்திட்டு இங்கே வரச் சொல்றீங்களா?"

குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கேன். உன் டீச்சருக்கே நான் டீச்சர்! தெரியுமா?" என்று பெருமையோடு சொன்னார்.

"தாத்தா, மோகினி டீச்சரை நீங்க அப்போ பார்த்திருக்கீங்க. இப்போ பார்த்தால் உங்களுக்கு அடையாளமே தெரியாது. அவ்வளவு அழகா இருப்பாங்க, டீச்சர்," என்று சொல்லிவிட்டு கௌரி கண் கலங்கி நின்றாள்.

"ஏன் கௌரி அழறே? மோகினி டீச்சர் சுகமாகத்தானே இருக்காங்க?" என்று கேட்டார் குழந்தைச்சாமி.

கௌரியின் முகத்தில் ஒரு விதக் குழப்பம் நிறைந்தது. "தாத்தா, மோகினி டீச்சரைப்பத்தி இங்கே பேசாதீங்க. அம்மா அப்பாவுக்கு டீச்சரைக் கண்டாலே பிடிக்காது."

"ஏன், உங்க டீச்சரை உங்க அம்மா அப்பாவுக்கு பிடிக்காமல் போச்சு? டீச்சர் ஏதேனும் தவறு செய்தாளா?"

"மோகினி டீச்சர் ரொம்ப நல்லவங்க. ஒரு நாளும் தவறு செய்ய மாட்டாங்க. அம்மாவும் அப்பாவும் என் டீச்சரை ஒருதரம் கூடப் பார்த்ததே இடையாது. பாத்திருந்தாங்கன்னு இப்படி வெறுத்திருக்க மாட்டாங்களே. டீச்சர் எனக்கு ஒரு கவுன் கொடுத்தாங்க, தாத்தா. அது



www.tamilbooksworld

அம்மாவுக்குப் பிடிக்கல்லே. டீச்சரை வேலையை விட்டுத் தள்ளிட்டாங்க.''

கௌரியின் விளக்கம் சாமியாரின் குழப்பத்தை அதிகப்படுத்தியது. மோகினி, அவர் ஆரம்பித்த பள்ளியில் இப்போது இல்லை என்பது மட்டும் அவருக்குத் தெரிந்தது.

''இதெல்லாம் எங்கிட்டே ஏன் கௌரி சொல்றே?'' என்று சாமியார் கேட்டார்.

கௌரி, சாமியாரை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, ''தாத்தா! மோகினி டீச்சர் உங்ககிட்டே ரொம்ப மதிப்பு வச்சிருக்காங்க. கடவுளே மனித உருவத்தில் வந்தா உங்க மாதிரிதான் இருப்பார்னு டீச்சர் என்கிட்டே சொன்னுங்க. அதனுலேதான் உங்ககிட்டே விஷயத்தைச் சொல்றேன். அம்மாகிட்டே சொல்லிடாதீங்க,'' என்று சொன்னுள்.

இதைக் கேட்டதும் சாமியார் நெஞ்சில் ஒருவித வேதனையும், அந்த வேதனையோடு புரியாத ஒரு இன்பமும் ஏற்பட்டது. மோகினியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும் எழுந்தது. தரையைப் பார்த்தபடி சாமியார் உட்கார்ந்திருந்தார். கௌரி, ''தாத்தா, நான் இனிமே மோகினி டீச்சரைப் பார்க்கவே முடியாதா?'' என்று ஏக்கத்தோடு கேட்டாள்.

சாமியார் சிரித்தார். குழந்தையை அன்போடு முத்தமிட்டார்.

அன்று மாலை ராஜுவிடம் விடைபெற்றுக்கொள்ள மாடி ஹாலுக்குச் சென்ருர் குழந்தைச்சாமி. ராஜு அவரைத் தன்னோடு தங்கும்படி வேண்டிக் கொண்டான். ''காற்றும், நீரும் காவி அணிந்தவனும் ஓரிடத்திலே தங்க முடியுமா ராஜு?'' என்று கூறிவிட்டு, கட்டிலில் படுத்திருக்கும் விஜயாவைக் கவனித்தார். படுத்திருக்கும் விஜயாவின் உருவம், அவர் பார்வையில் பழனியில் கண்ட அஞ்சலை என்ற பிச்சைக்காரியின் உருவமாக மாறியது. அந்தப் பிச்சைக்காரி ஒரு மனிதனின் கொடுமையால் கால் இழந்தவள். அண்ணன் வெங்கடபதியின் காரின் சக்கரங்கள், அந்த அஞ்சலையை முடமாக்கின. ஆனுல் விதி விஜயாவின் கால்களைப் போக்கியது.

நினைக்கும்போதே செவந்திலிங்கத்தின் மனைவி அஞ்சலை கூறிய வார்த்தைகள் குழந்தைச்சாமியின் ஞாபகத்துக்கு வந்தன. ''சாமி, அந்தப் பணக்காரன் ஊரையும் கோர்ட்டையும் ஏமாத்தி இருக்கலாம். ஆனுல் கடவுளை ஏமாத்த முடியாதுங்க. என் காலை மொண்டியாக்கின பாவியோட காலை மொண்டியாக்காம ஆண்டவன் விடமாட்டான்.''

'அண்ணன் வெங்கடபதி செய்த தவறுக்கு மருமகள் விஜயா வருந்த வேண்டுமா? கடவுளின் கர்மா என்ற கணக்குப் புரியவில்லையே! அந்தக் கணக்கு ஒழுங்காக இல்லையே!' என்று குழந்தைச்சாமி கடவுளையே நொந்து கொண்டார். அஞ்சலையின் சகோதரனிடம் பண உதவி செய்வதாகக் கூறிவிட்டு வந்ததும் அவர் ஞாபகத்துக்கு வந்தது. ராஜுவைத் தனியே அழைத்து, ''ராஜு, நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்,'' என்ருர்.

''என்ன சித்தப்பா? என்ன செய்ய வேண்டும்?'' என்று அவன் கேட்டான்.

''பழனியில் அஞ்சலை என்ற பிச்சைக்காரியைப் பார்த்தேன். பாவம், அவள் காலிழந்தவள். அவளுக்கு மாதா

தொடர் : வாழைப்பழ வரலாறு

'வாழைப் பழம்' என்ற சொல் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்தாகிய 'ழ' கரத்தைக் கொண்ட இனிமையான சொல். இந்த இனிமையான சொல்லைத் தமிழகத்தின் பல பகுதி மக்கள் பல்வேறு ஓசையுடன் உச்சரிக்கின்றனர்.

திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் சென்னையில் நடந்த பாரதி இளைஞர் சங்கத்தினரின் பாரதி விழா கவியரங்கில் இதைப்பற்றிக் கூறினுர்கள்.

''சென்னை வரும் வாழைப் பழம் மதுரையிலிருந்து கிளம்பும்பொழுது காயாக இருக்கிறது. அதனுல் அவர்கள் 'வாள பளம்' என்கின்றனர். திருச்சி வரும்பொழுது அரைப் பழமாகக் கனிந்து விடுகிறது. ஆதலால், அங்குள்ளோர் 'வாளபளம்' என்கின்றனர். தஞ்சை வரும்பொழுது நன்ருகக் கனிகிறது. ஆதலால், அங்குள்ளோர் நன்ருக, பழம் இனிப்பதைப் போல 'வாழைப் பழம்' என்கின்றனர். பழுத்த கனி, சென்னை வருவதற்குள் அழுகிக் குழகுழ என்ருகிவிடுகிறது. இதனுல் வார்த்தையும் 'வாய பயம்' என்று அழுகி, குழகுழ என்ருகி விடுகிறது!''

மாதம் பணம் அனுப்புவதாகச் சொல்லி விட்டேன். பழனியிலுள்ள டாக்டர் சுப்பையாவின் விலாசத்துக்கு மாதம் முதல் தேதி தவறாமல் நூறு ரூபாய் அனுப்பிவிடு. டாக்டர் வீட்டுக்கு வந்து அந்தப் பிச்சைக்காரியின் சகோதரன் பணம் வாங்கிச் செல்வான்,'' என்று கூறி, ஒரு பேப்பரில் டாக்டர் சுப்பையாவின் விலாசத்தைக் குறித்துக் கொடுத்தார். ராஜு தவறாமல் பணம் அனுப்புவதாக ஒப்புக் கொண்டான்.

சாமியாரின் வேண்டுகோளை கேட்ட படி படுத்துக்கொண்டிருந்த விஜயா வுக்கு மனத்தில் வெறுப்புத்தான் ஏற்பட்டது. சாமியார் வெளியே சென்றதும் ராஜுவிடம், ''இது என்ன கேவலமாயிருக்கு? ஊரிலே இருக்கிற பிச்சைக்காரிகளுக்கு உங்க சித்தப்பா பணம் அனுப்பச் சொல்றார். பணத்தை சித்தப்பா அனுப்பின மாதிரி அனுப்பி விடுங்க. உங்க பேரிலே அனுப்பாதிங்க. யாராவது பார்த்தால் கேவலமாயிருக்கும்,'' என்று கூறினாள்.

அறையைக் கடந்து பால்கனியில் சென்று கொண்டிருந்த சாமியாரின் காதுகளில் விஜயாவின் வார்த்தைகள் விழுந்தன. அப்படியே திடுக்கிட்டு நின்றார். ஒரு நொண்டி பிச்சைக் காரிக்குப் பணம் உதவுவதிலும் இம் மாதிரியான ஒரு தப்பு விளக்கம் ஏற்பட முடியும் என்பதை அப்போதுதான் அவர் உணர்ந்தார். புன்னகை செய்த படியே மேலே நடந்தார்.

அவர் மனத்தில் சிறிதுகூட விஜயா மீது வருத்தமோ கோபமோ ஏற்பட வில்லை. முப்பத்தாறு மணி நேரங் களுக்கு முன் மரணப் படியில் நின்று கொண்டிருந்த அதே விஜயாவுக்கு, பழைய சுபாவம் எவ்வளவு சீக்கிரம் திரும்பிவிட்டது என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டார். முன்பின் பாராத மோகினியை வேலையைவிட்டு நீக்கிய வள் விஜயா என்று நினைக்கும்போது சாமியாருக்கு ஆச்சரியம் ஏற்பட வில்லை. விஜயாவின் கால்கள் மட்டும் முடமாக இல்லை, அவள் இதயமே ஊனமாகிவிட்டதே என்று எண்ணும் போது அவருக்கு விஜயாவின் மீது பச்சாதாபமே ஏற்பட்டது. சத்த மில்லாமல் அந்த வீட்டைவிட்டு வெளி யேறி இருளில் நடக்க ஆரம்பித்தார்.

(தொடரும்)


அப்பழுக்கற்ற மென்மையழகு

டியர்பார்ன் தயாரிப்பாகிய மெர்க்கொலைஸ்டு வேக்ஸ் மெழுகை படுக்கப் போகுமுன் உங்கள் சருமத்தின் மீது மென்மையாகத் தேய்த்துவிடவும். மேனியிலுள்ள மாசு மறுக்களை போக்கி, கவடுகள் களங்கங்கள் யாவற்றையும் மறையச் செய்வதைக் காண்பீர்கள் – பளிங்குபோன்ற மென்மையான மெருகு பூரணமாக உங்கள் இளம் சருமத்தில் உருப்பெறும்.

டியர்பார்ன் தயாரித்த
மெர்க்கொலைஸ்டு வேக்ஸ்

Dearborn



கைபடாத இத் தயாரிப்பு மிருகக் கொழுப்பே கலவாதது என்பதற்கு உத்தரவாதம்

டியர்பார்ன் கம்பெனி,
49, வீர் கரிமன் ரோட், பம்பாய் 1.

S. 33



ஷோரனூர் பஸ் பாலக்காட்டுக் குறுகிய கடைத்தெருவில் வந்து நின்றது. அதிலிருந்து மோகினி இறங்கினாள்.

தூய வெண்மையான புடவை, கறுப்பு ஜாக்கெட். கறுப்பு ஜாக்கெட்டின் நிழல் வெண்மையான புடவையின் உட்புறம் தெரிய, அந்த ஜாக்கெட்டின் உட்புறமிருந்து அவள் தங்க மேனியின் மஞ்சள் நிறம் ஒரு சிறிது வெளிப்புறம் தெரிய, பஸ் ஸ்டாண்டில் ஒரு விநாடி நின்றாள்.

மோகினி கையிலே தாங்கிய சணல் பையில், அவளுடைய சர்ட்டிபிகேட்டுகள் இருந்தன. சிறு பர்ஸில் கொஞ்சம் பணமும், அதே பையில் நடுப்பகல் உணவுக்கென்று பாக்குப் பட்டை இலையில் கட்டிவந்த தயிர் சோறும் இருந்தன. பாலக்காட்டுப் பள்ளியில் வேலை கிடைக்குமா என்று வேலை தேட வந்தவள், குறுகிய கடைத்தெரு வழியே நடக்க ஆரம்பித்தாள்.

தெருவின் இருபுறமும் குறுகிய கடைகள். கடையில் உட்கார்ந்திருந்தவர்கள் பார்வை, நடந்து செல்லும் மோகினியின் அழகைப் பருகியபடியே இருந்தது.

காற்றின் அசைவால் எப்போதும் தோள்புறம் நழுவிக் கீழே விழ முயற்சிக்கும் சேலையை, உடம்பை ஒட்டினாற்போல் அழுத்தமாக சுற்றிக் கொண்டு நடந்தாள்.

சேலையை அழுத்தமாகச் சுற்றியதும் அவள் பருவத்தின் பூரிப்பு இன்னும் கவர்ச்சியாகத் தோற்றம் கொடுக்கவே, மற்றவர்கள் பார்வை, அவள் உடல் மீது இன்னும் அழுத்தமாகப் பாய்ந்தது.

முன்பின் தெரியாதவர்களின் ஆசைப் பார்வை உடலை ஊடுருவியது, மோகினிக்குப் பரம வேதனையாக இருந்தது. நாம் ஏன் அழகாகப் பிறந்தோம் என்ற வருத்தம்தான் அவள் மனத்தைப் பற்றியது.

வேகமாகக் கடைத்தெருவைக் கடந்து அவள் தேடிவந்த பள்ளியை அடைந்தாள்.

பள்ளியின் வெளிப்புறத்தில் குழந்தைகள் உள்ளே நுழைந்தபடி இருந்தனர். அதைப் பார்க்கவும் மோகினிக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது.

பள்ளியினுள் நுழைந்தாள்.

பள்ளியின் வெளிப்புறம் ஒரு மணி-தொங்கியது. அதன் அருகில் காக்கி உடை அணிந்த ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த அரை நிஜார், காக்கிக் கோட்டு—இரண்டையும் பார்த்தவுடன் அவன் பள்ளிப் பியூனாக இருப்பான் என்று புரிந்து கொண்டாள்.

# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

அவனிடம் நெருங்கி, தலைமை ஆசிரியரைப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்தாள்.

அவன் மோகினியை ஏற இறங்கப் பார்த்தான். அவனும் அவளது அழகை எடைபோடுவதுபோல் தெரிந்தது. "உங்களைப் பார்த்தா தலைமை ஆசிரியரைப் பார்க்க வந்ததாகத் தெரியலியே அம்மா. பள்ளி கரஸ்பாண்டண்டைப் பார்க்க வந்து இருக்கிங்களா அம்மா?" என்று கேட்டான்.

பள்ளி கரஸ்பாண்டண்ட் என்பவர் பொதுவாகத் தலைமை ஆசிரியரைவிடப் புது ஆளை நியமிக்கும் தகுதி உடையவர் என்பதை உணர்ந்திருந்தாள் மோகினி.

ஆகையால் ஆவலோடு, "ஆமாம். கரஸ்பாண்டண்டைத்தான் பார்க்கணும்," என்று சிரித்தபடி சொன்னாள்.

அதற்குப் பதிலாக அந்தப் பியூன் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஒரு விதமாகச் சிரித்தான். "கரஸ்பாண்டண்ட் ஐயாவை இங்கேயேயா பார்க்கணும்னு சொல்றீங்க?" என்று சொல்லி, இழுத்தான்.

"ஆமாம்ப்பா. அவரை இங்கேதான் பார்க்கணும்," என்று ஒன்றுமறியாத மோகினி பதில் கூறினாள்.

பியூன் கொஞ்சம் யோசித்தான். பிறகு மோகினியிடம் நெருங்கி, "ஐயாவின் சம்சாரம் உள்ளே பேசிக்கிட்டிருக்காங்க. அப்புறம் வாம்மா," என்று எச்சரிப்பதுபோல் ரகசியமான குரலில் சொன்னான்.

அதற்கு மோகினி, "அவுங்க போறவரையிலும்காத்துக்கிட்டிருக்கேம்ப்பா," என்று சொல்லிவிட்டு அங்கு போட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தாள்.

மோகினி உட்கார்ந்தவுடன் உட்புறமிருந்து நாற்பது வயது மதிக்கத்தக்க ஓர் அம்மாள் முகம் சிவக்க வெளியே வந்தாள்.

அந்த அம்மாளுக்கு அவசர அவசரமாகக் கும்பிடு போட்டான் பியூன்.

அந்த அம்மாள் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, "டேய் நாராயணு, ஏன்டா கூழைக் கும்பிடு போடறே? நீ ஒழிஞ்சாத்தான்டா ஐயா உருப்படுவாரு. அவரைக் குழியிலே தள்ளாம விடப்போறதில்லேடா நீ," என்று சொல்லிவிட்டு அருகிலே பெஞ்சியில் உட்கார்ந்திருந்த மோகினியைப் பார்த்தாள். "அந்தம்மா ஐயாவைப் பார்க்கத்தானே வந்திருக்காங்க?" என்று கேட்டாள்.

உடனே நாராயணன் என்ற அந்த பியூன், "இல்லீங்க. அவுங்க ஹெட்மாஸ்டருக்குச் சொந்தம்," என்று சொல்லிவிட்டுக் கெஞ்சியபடி சிரித்தான்.

அந்த அம்மாள் குழப்பத்தோடு மோகினியைப் பார்த்தாள். பிறகு அந்த இடத்தைவிட்டுச் சென்றாள்.

மோகினிக்கு, தன்னைப் பற்றி அந்த பியூன் அந்தம்மாளிடம் ஏன் இப்படிப் பொய் சொல்கிறான் என்று புரியவில்லை.

பியூன் அந்தம்மாளின் பின்னால் ஓடினான். அந்த நடுத்தர வயது மாது ஒற்றை மாட்டு வண்டியில் ஏறிக் கொள்ளும் வரை, தான் மறைவில்



## அத்தியாயம் 26

ருந்தே கவனித்தபடி இருந்தான். வண்டி நகர்ந்ததும் பெருமூச்சு விட்ட படி மோகினியிடம் வந்தான். "ஒழிஞ் சாங்க," என்று சொல்லிவிட்டு, 'இனி மேல் நீங்க ஐயாவைப் பார்க்கலாம்மா. நான் போய் ஜாடையா ஐயாகிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வர்ரேன்," என்று சொல்லி மோகினியைப் பார்த்து விஷமமாகச் சிரித்துவிட்டுச் சென்ருன்.

அவன் சற்றுத் தொலைவில் உள்ள அறைக்குள் நுழைவதைப் பார்த்தாள். சிறிது நேரம் கழித்து வெளியே வந்து "வாங்கம்மா," என்று அழைத்தான்.

மோகினி, "என்னப்பா, என் பேரைக்கூடக் கேட்டுக்காம போயிட் டியே. கரஸ்பாண்டண்ட்கிட்டே என்ன பேர் சொன்னே?" என்று கேட்டாள்.

"உங்க பேரைக்கூடக் கேட்டுத் தெரிஞ்சுக்கணுமா? பார்த்தே புரிஞ்சிக்க லாமே," என்ருன். மேலும், "மனத்தை மயக்கும் இவ்வளவு அழகுள்ளவங்களுக்கு வேறே என்ன பேர் இருக்க முடியும்மா? உங்க பேர் மோகினிதானே?" என்று கேட்டான்.

மோகினி வாய் அடைத்துப்போய் விட்டாள். தன்னையுமறியாமல், "ஆமாம்," என்று சொன்ஞள்.

"சரி, சரி, இப்படி வாங்கம்மா." என்று அவளை அழைத்துக்கொண்டு, சற்று முன்பு அவள் நுழைந்த அறைக் குள் நுழைந்தான்.

மோகினி சர்ட்டிபிகேட்டுகள் வைத் திருந்த பையிலிருந்து தனது சர்ட்டிபி கேட்டுகளை எடுத்துத் தயாராக வைத் துக்கொண்டாள்.

அவள் நுழைந்த அறையை ஒரு ஹால் என்று சொல்லவேண்டும். அகலமான, நீண்ட மரத்தாலான ஸ்க்ரீன் அந்த ஹாலை இரண்டாகப் பிரித்தது. ஸ்க்ரீனுக்கு அப்பால் என்ன இருக்கிறது, யார் இருக்கிருர்கள் என்று மோகினி நின்ற இடத்திலிருந்து தெரியாது. மோகினி நின்ற பகுதியில் பல மர நாற்காலிகள் போடப்பட்டிருந் தன. சிறு மேஜைகளும் போடப்பட்டு அதன் மீது பத்திரிகைகள் வைக்கப் பட்டிருந்தன. அது வரவேற்பு அறை போல் தெரிந்தது.

"உட்காருங்கம்மா," என்று சொல்லி விட்டு, பியூன் ஸ்க்ரீனுக்கு அப்பால் உள்ள பகுதியில் நுழைந்தான். உட் புறம் இருந்து ஒரு பலத்த ஆண் குரல் கேட்டது.

"இதை என்னன்னு நினைச்சீங்க? இது ஸ்கூலாக்கும். இங்கே ஒழுக்கத் துக்குத்தான் முக்கிய இடம். நான் கரஸ் பாண்டண்டா இருக்கிற ஸ்கூல்லே இந்த மாதிரித் தப்பை ஒரு நாளும் அனுமதிக்க முடியாது."

"இல்லை, மிஸ்டர் சாக்கோ. நான் சொல்றதைக் கேளுங்க. நான் ஏழை தான். சாதாரண ஆசிரியர்தான். இருந்தாலும் ஸ்கூல் பணத்தை எடுத்து —அதுவும் பிள்ளைகளின் விளையாட்டுக் கென்று ஒதுக்கப்பட்ட தொகையை எடுத்துச் சொந்த செலவு செய்யற வன் இல்லைசார் நான். இது அபவாதம். பதினைந்து வருஷமா நான் ஸ்போர்ட்ஸ் செக்ரட்டரியாக இருந்திருக்கிறேன். என் மேலே எந்தப் புகாரும் கிடையாது. கணக்கைப் பார்த்துவிட்டு அப்புறம் பேசுங்க."

"கணக்கு என்னய்யா பிரமாதம். கணக்கு! ஏமாத்தறவங்க கணக்கு எப்பவும் ஒழுங்காகத்தான் இருக்கும்."

"மிஸ்டர் சாக்கோ! நான் அன்னிக்கும் இன்னிக்கும் வெறும் டீச்சர். புனித மான டீச்சர் தொழில் செய்யறவன். உங்கமாதிரி வக்கீல் தொழில் செய்து விட்டுப் பொழுதுபோக்குக்கு ஒரு பள் ளிக்கூடத்து கரஸ்பாண்டண்டா இல்லை ஆசிரியர் வேலையிலே ஏமாத்தறதுக்கு



பச

"இன்றைக்கு சமையல் நன்ருக இல்லை என்று என் மனைவிக்கும் எனக்கும் ஒரே சண்டை."

"சமயங்களில் சரியாக அமையா விட்டால் அதற்காகச் சண்டை போட லாமா நீங்கள்?"

"சமைத்தது நான், சண்டை போட்டது என் மனைவி!"

வாய்ப்பும் இல்லை—பழக்கமும் கிடையாது.''

''அப்படியா! என்னை நேரடியாகவே தாக்க ஆரம்பிச்சிட்டீங்க, இல்லியா? நீங்க யார்கிட்டே பேசறீங்கன்னு மறந்து பேசாதீங்க.''

''நான் யார்கிட்டே பேசறேன்னு எனக்குத் தெரியும். நீங்க மிஸ்டர் சாக்கோ, பிரபல வக்கில். இந்த ஸ்கூல் கரஸ்பாண்டண்ட். கல்வி மந்திரிக்கு வேண்டியவர்—எல்லாம் எனக்குத் தெரியும். நான் சாதாரண டீச்சர். நீங்க நினைச்சா என்னை இந்தப் பள்ளியைவிட்டு நீக்கலாம். ஆனல் ஒன்று தெரிஞ்சுக்குங்க. நான் நல்லவன் என்கிற பேரை உங்களுக்கு முன்னுல் இருந்த மூணு கரஸ்பாண்டண்டும் ரிக்கார்ட்லே எழுதி இருக்காங்க. நீங்க ஒரு நல்லவர் என்று ஊரிலே யாரும் சொல்லமாட்டார்கள். உங்க சம்சாரம்கூடச் சொல்ல மாட்டாள்.''

அதை அடுத்து உடனே, ''கெட் அவுட். வெளியே போடா,'' என்ற ஆத்திரமான குரல் வந்தது.

அதைத் தொடர்ந்து ஒரு மெலிந்த ஐம்பது வயது மதிக்கக்கூடிய உருவம் வேகமாக வெளியே செல்வதை மோகினி கவனித்தாள்.

'நாம் வேலை தேடி வரும் சமயத்தில் இம்மாதிரி நிகழ்ச்சி நிகழ வேண்டுமா? இவ்வளவு முரட்டு ஆசாமியிடம் ஒரு சிபாரிசுக் கடிதம்கூட இல்லாமல் வேலை தேடி வந்திருக்கிறேமே' என்று எண்ணி பயந்தாள்.

''அவ வந்திருக்கா,—மோகினி வந்திருக்கா,'' என்று பியூன் சொல்வது அடுத்தபடியாகக் காதில் விழுந்தது.

''இந்தச் சமயம் பார்த்தா நீ அவளை அழைச்சிகிட்டு வரணும்? அதுவும் ஸ்கூலுக்கா அழைச்சிகிட்டு வரணும்? டேய், நீ சுத்த முட்டாள்டா,'' என்று கோபமாகப் பதில் சொன்னுர்.

''அவ வெளியிலே உட்கார்ந்திருக்கா,'' என்று பியூன் சொல்வது மோகினியின் காதில் விழுந்தது.

பிறகு சில விநாடிகளுக்கு ஏதோ ரகசியமாகப் பேச்சு நடப்பதுபோல் தெரிந்தது.

மோகினிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அடுத்தபடி ஏதோ நாற்காலிகள் நகரும் சப்தம். உட்புறம் ஏதோ கதவு திறக்கும் சப்தம், குழாயிலிருந்து வாஷ் பேசினில் தண்ணீர்

---

ஸீசருக்கு வந்த கடிதம்

## ஏசுநாதர் எப்படி இருப்பார்?

ஏசுபிரானுக்கு மரண தண்டனை விதித்த போண்டியஸ் பைலட் என்பவருக்கு முன் அதே பதவியை வகித்துவந்த பப்லியஸ் லென்டுலஸ், பேரரசின் முதல்வர் சீசருக்கு எழுதியதாகச் சொல்லப்படும் கடிதத்தின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் இப்போது ரோமாபுரியில் சீசர் குடும்பத்தவரிடம் இருக்கின்றதாம்.

''மாட்சிமை மிக்க சீசர் பெருமகனே,''

இந்தப் பகுதிகளிலே வாழ்ந்து வரும் ஏசு கிறிஸ்து என்பவரைப் பற்றியவிபரங்கள் அறிய நீங்கள் ஆசிப்பதாக சேதி கிடைத்தது.

....அவர் கம்பீரமான தோற்றம் படைத்தவர்... அழகு தவழும் அவர் முகத்திலே ஒருராஜகளை மிளிர்கிறது. அவருடைய தலைமயிர் பழுத்த முந்திரியைப்போல் பழுமை நிறமானது... நாசரீன் இனத்தவர் வழக்கப்படி அவர் தலைமுடி நெற்றியின் நடுவிலிருந்து இரு பக்கமாக வகுக்கப்பட்டிருக்கிறது..... மிருதுவான அவர் நெற்றியிலே ஒரு அமைதி குடிகொண்டிருக்கிறது... அடர்ந்த தாடி; நடுவிலே வகுக்கப்பட்டது.

தகவல்: ஏ. எஸ். ஏ. சாமி,
டைரக்டர்

சொட்டும் சப்தம், வாய் கொப்பளிக்கும் சப்தம், யாவும் கேட்டன.

அடுத்தபடி மறுபடியும் கதவு மூடப்படும் சப்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து பியூனின் குரல், "இந்தாங்க கண்ணாடி, சீப்பு," என்று சொல்வது கேட்டது.

சில விநாடிகளுக்கெல்லாம், "இந்தாங்க பவுடர்," என்று பியூன் மெல்லிய குரலில் சொல்வது மோகினியின் காதுகளில் விழுந்தது.

மோகினிக்கு எல்லாம் புதிராக இருந்தது.

ஸ்கிரீனுக்கப்புறம் அமைதி நிலவியது. உடனே பியூன் வெளிப்புறம் வந்தான்.

"வாங்கம்மா. ஐயா உள்ளே இருக்கார், நீங்க பார்க்கலாம்," என்று சொல்லி பியூன் அழைத்தான்.

மோகினி தயங்கினாள். பிறகு ஏதோ ஒரு சக்தி அவளை உந்த அவள் உள்ளே சென்றாள். உட்புறம் மேஜை முன்னால் பருத்த உருவம் உட்கா ந்திருந்தது.

அவர் தலை மயிர் இயற்கைக்கும் மாறாக அதிகக் கறுப்பாக இருந்தது.

அவர் முகத்தில் அவசர அவசரமாக பவுடர் போட்டதன் விளைவாகச் சில பகுதிகளில் பவுடர் திட்டுத் திட்டாக இருந்தது.

அவர் வயது ஐம்பதுக்கு மேல் இருக்கலாம். ஆனால் அதை அவர் முப்பதாகக் காட்ட முயலுகிறார் என்பது தெரிந்தது. வாய் திறந்து புன்னகை செய்தபடி மோகினியை உட்காரச் சொன்னார்.

அவருடைய பற்கள் வெண்மையாக மின்னின. தலைமயிரின் கறுப்பு நிறம், அவை சாயம் என்பதையும், பற்களின் பளபளப்பு அவை பொய்ப் பற்கள் என்பதையும் தெளிவாகக் காட்டின.

அவர் கண்கள் மருண்டு மோகினியின் முகத்துக்கும் அவள் உடலுக்கும் மாறி மாறிப் பிரயாணம் செய்தபடி இருந்தன.

மோகினி ஒன்றும் கூறாமல் அவரையே வெறித்துப் பார்த்தபடி நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவர் மேல் உதட்டிலிருந்த ஹிட்லர் மீசை துடித்தது. நல்ல பசி வேளையில் ஒரு தட்டு நிறைய ஜிலேபியைப் பார்த்த சிறுவன் வாயை சப்புக் கொட்டி உமிழ் நீரை விழுங்குவது போல் சாக்கோ விழுங்கினார். "ஒன்டர்புல்! ஒன்டர்புல்! இவ்வளவு பிரமாதமாக இருக்கும்னு நான் எதிர்பார்க்கலே," என்று சொன்னார்.

அதே சமயத்தில், பியூன் ஸ்கிரீனுக்கு வெளிப்புறம் சென்றான். "திருச்சூர்லே இருந்து எப்போ வந்தே மோகினி?" என்று அன்பு ததும்பக் கேட்டார் சாக்கோ.

அதற்கு மோகினி, "நான் திருச்சூர்லேயிருந்து வரல்லே. ஷொரனூர்லேயிருந்து வர்ரேன்," என்று சொல்லிவிட்டு, மேலும் ஏதோ சொல்லுவதற்குள், சாக்கோ குறுக்கிட்டு, "லெட்டர்லே திருச்சூர் மோகினின்னு இல்லே சொல்லி இருந்தான் கோவிந்தன்! ஊருக்கு வெளியே இருக்கிற என் பங்களா அட்ரஸுக்கு அனுப்பறதாகச் சொல்லியிருந்தானே! பாரு, என் மனைவி ரொம்பப் பெரிய நியூசன்ஸ். அதனாலே நான் பிரண்ட்ஸை அந்தப் பங்களாவிலேதான் சந்திக்கிறது ஹி....ஹி....எல்லா என்டர்டெயின்மென்டும் அங்கேதான். எனக்குத் தொழில் முறையிலே வருமானவரி ஆபீஸர்கள், போலீஸ் கமிஷனர்கள், ஜட்ஜுகள்—இப்படியெல்லாம் சிநேகிதர்கள் உண்டு. அவுங்க ஹாப்பியா இருந்தா, நானும் ஹாப்பியா இருக்கேன். அதனாலே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஊருக்கு வெளியே இருக்கற நம்ம பங்களாவிலே பார்ட்டி—அது ஒரு பக்கம். இந்த ஸ்கூல்லே அறிவாளிகள், ராமாயண சாஸ்திரிகள், பிஷப்புகள்—இவங்களை வரவழைச்சுப் பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லச் செய்வேன். கடவுளுக்குச் செய்யவேண்டியதையும் செய்யறேன், சைத்தானுக்குக் கொடுக்கவேண்டியதையும் கொடுக்கறேன். எப்படி நம்ப வாழ்க்கை ஏற்பாடு?" என்று சொல்லிவிட்டு, "ஹி.. ஹி....ஹி..." என்று சிரித்தார்.

அவர் சொன்னதில் ஓரளவுதான் மோகினிக்கு(ப்) புரிந்தது.

போட்டி ஜுரம் நிறைந்த உலகில் மனிதன் வாழ என்னென்ன செய்கிறான் என்பதை உணராத மோகினியால் சாக்கோ சொன்னதன்

## கோழை:

ஆபத்து சமயத்தில் கால்களைக் கொண்டு சிந்திப்பவன்.

—ஆம்ப்ரோஸ் டியர்ஸ்

அர்த்தத்தைப் பூராவும் புரிந்துகொள்ள முடியவில்லை.

''ஏம்தா தப்பிருக்கணும். நீங்க நினைக்கிற அந்த திருச்சூர் மோகினி இல்லை நான். எந்த கோவிந்தனும் என்னை அனுப்பல்லே. நான்...... நான்...... ஷோரனூர் பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்த மோகினி,'' என்று கூறினாள்.

சாக்கோ ஒரு வினாடி திகைத்தார். தன் திகைப்பைச் சமாளித்துக் கொண்டு மோகினியைப் பார்த்துச் சிரித்தார். ''எந்த ஊரா இருந்தா என்ன மோகினி? முக்கியமான விஷயம் நீ ஒன்டர்புல்லா இருக்கறப்போ, கோவிந்தன் நாயர் அனுப்பினா என்ன, நீயே வந்தா என்ன? எனக்கு ஒன்றும் திருச்சூர் மேலே அன்போ, ஷோரனூர்மேலே கோபமோ கிடையாது,'' என்று சொல்லிவிட்டு மோகினியைப் பார்த்தார்.

''நீங்க சொல்றது எனக்குப் புரியல்லே. எனக்குப் புரியவும் வேண்டாம். நான் தேடி வந்தது சாதாரண டீச்சர் வேலே. அந்த வேலைக்கு எனக்குத் தகுதி இருக்குன்னு காட்ட சர்ட்டிபிகேட்டுகள் கொண்டு வந்திருக்கேன். எனக்காகச் சிபாரிசு செய்ய யாரும் கிடையாது,'' என்று சொல்லிவிட்டு, சர்ட்டிபிகேட்டுகளைப் பையிலிருந்து எடுக்க முயன்றாள்.

சாக்கோ உரத்த குரலில் சிரித்தார். ''மோகினி! இந்தப் பள்ளிக்கூடத்திலே இப்போ டீச்சர் வேலை காலி இல்லே, அப்படிக் காலியிருந்தாலும் அந்த வேலையை நீ செய்யறது பொருத்தமில்லே. இந்தப் பர்சனாலிட்டியை வச்சிக்கிட்டு நீ டீச்சரா இருக்கிறதா? நோ. நோ. இவ்வளவு அழகையும் வேஸ்ட் பண்றதா? யாராவது காப்பி சாப்பிட்ட தம்ளரைக் கழுவறதுக்கு சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சியை உபயோகப் படுத்துவார்களா? தம்ளரைக் குழாய்த் தண்ணீரிலே தான் கழுவணும். நீர் வீழ்ச்சியை மின்சார உற்பத்திக்குத்தான் உபயோகப்படுத்தணும். உனக்கு இது தெரியல்லியே. நீ உன்னைக் கண்ணாடியிலேயே பார்த்திட்டதே இல்லையா? வாட் எ பிடி?'' என்று சொல்லிவிட்டு எழுந்து வந்து மோகினியைத் தொட முயற்சித்தார்.

மோகினி அவரை உதறித் தள்ளி விட்டு வெளியே ஓடினாள்.

ஆத்திரமும் துக்கமும் ஒருங்கே வந்து அவள் மனத்தைத் தாக்கி அவளை அழவைத்தது.

மோகினி தன் அழகான உடலை வெறுத்தாள். அதே சமயத்தில் பள்ளியின் உட்புறம், உதட்டில் சிவப்புச்சாயம் தடவி, முகத்தில் அரை அங்குலம் பவுடர் பூசி அலங்கோலமாக ஒரு பெண் நுழைவதைப் பார்த்தாள்.

அவள்தான் தன் பெயர்கொண்ட திருச்சூர் மோகினி என்பதை உணர்ந்து கொண்டாள்.

மோகினிக்கு அடி வயிற்றில் பூகம்பம் நிகழ்வது போல் கலக்கம் ஏற்பட்டது.

பள்ளியைவிட்டு வேகமாக ஓடினாள். எங்கு செல்கிறோம் என்ன செய்யப்போகிறோம் என்று புரியாமல் தெருவில் நடந்தாள். பரந்த உலகத்தில் ஆண்கள் பார்வையில் எப்படி வாழப்போகிறோம், என்ன வேலை செய்யப் போகிறோம், நாராயணி அம்மாளிடம்




நாடகாசிரியர் பீட்டர் உஸ்டினேவ் தான் எழுதிய 'லேடி எல்' என்னும் தனது நாடகத்துக்கான ஏற்பாடுகளைப் பார்வையிட்டுவிட்டு, பாரீஸில் ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருந்தார். தடாலென அறைக் கதவு திறந்தது. கையில் கத்தியுடன் ஒரு பெண்மணி நுழைந்தாள். அவரைக் கொன்று விடுவதாக மிரட்டினாள். பார்த்தவுடனே அவள் பைத்தியம் என்று நாடகாசிரியருக்குத் தெரிந்துவிட்டது.

ஆகவே, மிரளாமல், பதறாமல், புன்னகையான முகத்துடன், கத்திப் பைத்தியத்தைப் பார்த்து, ''ஆகா, உங்கள் மாதிரி வீராவேசமான பெண்மணி ஒருத்தியைத்தான் என் டைரக்டர் தேடிக் கொண்டிருக்கிறார், தான் தயாரிக்கும் படத்துக்கு. இப்போதே போன் செய்து அவருக்குச் சொல்கிறேன்,'' என்று டெலிபோன் செய்தார். அவர் டெலிபோன் செய்தது போலீசுக்கு. சற்று நேரத்தில் அவர்கள் வந்து அந்தப் பைத்தியத்தைப் பிடித்துச் சென்றனர்.

என்ன சொல்வது—என்று புரியாமல் தவித்தாள்.

வஹாப் சாயபு, ஷோரனூர் கடைத் தெரு ஆண்கள், புத்தி குழம்பிய சங்கரன்குட்டி—இப்போது சாக்கோ! இந்த ஆண்கள் எல்லோருக்குமே தன்னிடம் ஒரே நோக்கம்தானா?

தந்தம்போன்ற தன் சிவந்து உருண்ட கரங்களையும், திமிரோடு விம்மி எழும் உடலையும் பார்த்தாள். 'ஒரு வைசூரி நோய்வந்து என்னை ஒரு குரூபியாக்கி விட்டால், இந்த ஆண்களின் கொள்ளிக் கண்களின் பார்வையிலிருந்து தப்பலாம் அல்லவா?' என்று நினைத்து வெதும்பினாள். இவ்வாறு வேதனையோடு நடந்து வந்துகொண்டு இருந்தவள், குறுகிய கடை வீதியின் ஒரு மூலையில் எதையோ பார்த்துத் திகைத்து நின்றாள்.

நாம் பார்ப்பது உண்மையா, பொய்யா என்று தெரியாமல் யோசித்து நின்றாள்.

பிறகு மோகினி கண்களைத் துடைத்துக்கொண்டு நோக்கினாள். அதே உருவம். காலம் என்ற அடிவானத்தில் பல வருஷங்களுக்கு முன்பு கண்டு பூஜித்த அதே உருவம்! அதே மேனி. அதே புன்னகை. கடவுள் என்ற அறியாத ஒரு அரூப சக்திக்கு உருவம் கொடுத்து நிற்கும் அதே மேனி. மறக்கமுடியாத அதே புன்னகை. ஆம், அவரேதான் என்று நினைத்தாள்.

துன்பக்கேணியின் அடியில், குழம்பிய சிந்தனைகளால் மருண்டு நிற்கும் மோகினிக்கு ஊன்றுகோல் போல் தோன்றினார் அவர். அது பாலக்காட்டுக் கடைவீதி என்பதை மறந்தாள். தெரு நடுவே ஓடுகிறோம் என்று உணராமல் ஓடினாள்.

''சாமி, சாமி, சாமி!'' என்று உரக்கக் கூவியபடி ஓடினாள்.

குழந்தைச்சாமி ஒரு கடைமுன் நின்று வாழைப்பழம் வாங்கியபடி நின்றார்.

'சாமி' என்ற குரல் கேட்டுத் திரும்பினார். தன்னை நோக்கி அழகுத் தேர் போன்ற ஒரு பருவப் பெண் ஓடி வருவதைப் பார்த்தார்.

சாமியின் உருவத்தில் அதிக மாறுதல் இல்லை. மோகினி அவரை அடையாளம் கண்டுகொண்டாள். ஆனால் பாவாடை கட்டிய சிறுமி, பருவப் பெண்ணாக மலர்ந்தபின், மோகினியை சாமி எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? யார் என்று தெரியாமல் திகைத்து நோக்கினார். மோகினி ஓடிவந்து அவரை அணைத்துக்கொண்டு குழந்தை அழுவதுபோல் அழுதாள்.

மோகினியின் உதடுகள் 'சாமி, சாமி' என்று முணு முணுத்தன. இரு பக்கமும் கடைக்காரர்கள் இந்தக் காட்சியை ஒரு விதமாகக் கவனிப்பதை உணர்ந்தார் குழந்தைச்சாமி. காவி அணிந்த மொட்டைத் தலைச் சாமியை மோகினி போன்ற பெண் வந்து நடுத்தெருவில் அணைப்பதென்றால் உலகம் என்ன நினைக்கமுடியும்?

மோகினியின் மனத்தில் ஆண்மை, பெண்மை என்ற இன உணர்வே இல்லை, என்பதை உலகம் உணர முடியுமா?

மோகினியின் குரல், சாமி, சாமி, என்று கூறும்போது, குழந்தைச்சாமியின் ஞாபகத்தைத் தாக்கியது.

மோகினியைத் தன் உடலில் இருந்து விலக்கி அவள் முகத்தை நோக்கினார். அதே மூன்றாம் பிறை நெற்றி, அந்த நெற்றியில் அசைந்தாடும் கூந்தல் சுழல், அதே கண்கள்! ஆம். அதே வண்டு விழிகள். பருவம் மாறினும் அவை மாறவில்லை. குழந்தை உருவத்தில் கண்ட அதே தெய்வீக அழகு.

பாலா திரிபுர சுந்தரியின் கற்பனை உருவம்தான் மறுபடியும் அவர் மனக் கண்முன் தோன்றியது, அவர் கண்களில் நீர் நிறைந்தன. ''நீ....நீ....நீ....''என்று சொல்லிவிட்டு நிறுத்தினார். ''ஆம். நான்தான்,'' என்று வார்த்தைகளால் சொல்லாமல் தலையசைப்பால் தெரிவித்தாள் மோகினி.

''நீதானே என் தாய் மோகினி! என் உபாசனா தெய்வம், பாலாதிரிபுர சுந்தரியின் மனித உருவம்! நீ பாலக் காட்டிலேயா இருக்கே?''—என்று சொல்லி நிறுத்தினார்.

மோகினியின் வாழ்வில், கல்யாணமாகாத அவளைத் தாய் என்று அழைக்கும் ஒரே ஜீவன் இந்தக் குழந்தைச் சாமிதான்.

மோகினி சிரித்தாள். ''இல்லை. நான் உங்கள் தாய் அல்ல. உங்கள் அன்பால் வளர்ந்து உருவாகியிருக்கும் மகள் மோகினி,'' என்று சொன்னாள்.

குழந்தைச்சாமி அதைக் கேட்டுச் சிரித்தார். ''யார் என்னைப் புறக்கணித்தாலும் நீதான் என் தாய். இந்த வயதான ஏழையைப் புறக் கணிக்கக் கூடாதம்மா,'' என்றுவாறு அவளைக் கெஞ்சியபடி பார்த்தார்.

(தொடரும்)



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 27

நடுத் தெருவில் இருக்கிறோம் என்பதை முதலில் உணர்ந்தவர் குழந்தைச்சாமிதான். விபரீத நோக்குடன் மற்றவர்கள் தன்னையும் மோகினியையும் கவனிப்பதைப் பார்த்தார் அவர். அண்ணன் மகன் ராஜுவின் மனைவி, முதல் நாள்தான் பழனி பிச்சைக்காரி பூஞ்சோலைக்குப் பண உதவி செய்யச் சொல்லியபோது, அதை எவ்வளவு தப்பாகப் புரிந்துகொண்டு பேசினாள் என்பதைக் காது கொடுத்துக் கேட்டிருந்தார். உடல் பசியினால் உந்தப்பட்டு உழலும் உலகத்தில், ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே கண்ணியமான தொடர்புகள் இருக்கமுடியும் என்று கற்பனை செய்து பார்க்கவும் திறனற்றுப் போய்விட்டது என்பதை வேதனையோடு புரிந்துகொண்டார்.

எப்போதும் அமைதியாக உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் வாழ்ந்துவந்த மோகினிக்கோ தன்னுடைய நடத்தை தன்னாலேயே நம்ப முடியாததாய் இருந்தது. 'நடுத்தெருவில் தன்னையும் மறந்து ஓடிவந்து குழந்தைச்சாமியை அணைத்துக்கொண்டு விட்டோமே! அது தப்பல்லவா?' என்று உணர்ந்தாள். உடனே தப்பைத் திருத்துபவள்போல் தரையில் குனிந்து குழந்தைச்சாமியின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள். இந்தச் செய்கை குழந்தைச்சாமியின் மனத்தை உருக்கியது.

''வா மோகினி! பஸ் ஸ்டாண்டுக்குப் போவோம்,'' என்று சொல்லி அழைத்தார்.

இருவரும் ஒன்றும் பேசாமலே பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தனர். இருவரும் தரையைப் பார்த்தபடியே நடந்தனர். இருவர் மனமும் நிறைந்து வழிந்தமையால் வார்த்தைகளுக்கு இடமில்லை. மோகினியும் குழந்தைச்சாமியும் ஷோரனூர் நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஏறினார்கள். ஷோரனூர் வரும்வரை இருவரும் ஒன்றும் பேசவில்லை. மோகினி தலை நிமிர்ந்து பார்த்தாள். குழந்தைச்சாமியின் முகத்தில் ஒருவிதக் களைப்பும் அவர் கன்னங்கள் இளைத்துக் குழி விழுந்திருந்ததையும் அறிந்தாள். அவருடைய மொட்டைத் தலையில் நரைத்த ரோமம் அரும்பு விட்டு இருப்பதையும் பார்த்தாள். குழந்தைச்சாமி தன் தலையை மோகினி பார்ப்பதைக் கவனித்தார். உடனே சிரித்தார்.

''ஏன் சாமி சிரிக்கிறீங்க?'' என்று கேட்டாள் அவள்.

''மோகினி, நீ குழந்தையா இருக்கிறப்பவும் இப்படித்தான் என் தலையை அடிக்கடி பார்ப்பே. அப்போ நீ என்ன சொன்னே ஞாபகம் இருக்கா?''

''ஞாபகமில்லையே!''

''என் தலையை ஈயச் செம்புபோல இருக்குன்னு சொன்னே. நான் அது ஈயாத செம்புன்னு பதில் சொன்னேன்.''

மோகினியும் சிரித்தாள். ஷோரனூர் வந்ததும் இருவரும் பஸ்ஸைவிட்டு இறங்கினார்கள். மோகினி குழந்தைச்சாமியை வீட்டுக்கு அழைத்தாள். அவர் மறுநாள் வருவதாகவும் நேரே பள்ளிக்கூடத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் சொன்னார். குழந்தைச்சாமி பள்ளிக்கூடம் என்று சொன்னதும் மோகினிக்குச் சுருக்கென்றது. அவள் பள்ளியிலிருந்து விலக்கப்பட்டது, அவள் வேலை தேடிப் பாலக்காட்டுக்கு வந்தது போன்ற விவரங்களை இன்னும் அவரிடம் சொல்லவில்லை என்பது ஞாபகத்துக்கு வந்தது.

''நான் பள்ளியிலே வேலையாயில்லே,'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

அவரோ, ''அது எனக்குத் தெரியும். எல்லா விஷயமும் குழந்தை கௌரி சொல்லிச்சு,'' என்று சொல்லிவிட்டு

எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் மோகினியைப் பார்த்தார்.

''குழந்தை கௌரியா? அவ எங்கே இருக்கா? அவுங்க அம்மா நல்லா இருக்காங்களா? அவுங்களுக்கு...... அவுங்களுக்கு ஆபத்து ஒன்று மில்லையே?''

''எல்லோரும் நல்லா இருக்காங்க. கௌரிதான் உன் நினைவாகவே இருக்காள். நீ என்னைப் பத்தி ஏதேதோ தப்பாகௌரியிடம் சொல்லி யிருக்கே மோகினி,''



என்று கண்டிப்பான பார்வையோடு சொன்னார்.

மோகினி இதைக் கேட்டதும் பதறி விட்டாள். ''நான் உங்களைப்பத்தித் தப்பா யாரிடமும் சொன்னதில்லையே!'' என்றாள்.

''கடவுளுக்கு ஓர் உருவம் இருந்தா, அது என் மாதிரி இருக்கும்னு சொன்னியாமே? அது தப்பில்லையாம்மா மோகினி?'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர்.

மோகினி தலை குனிந்தாள்.

''சங்கரன்குட்டி நல்லா இருக்கானு?'' என்று கேட்டார்.

மோகினி, ''அப்படியேதான் இருக்கான்,'' என்றாள்.

''சரி, நாளைக்கு வீட்டுக்கு வர்றேன்னு நாராயணி அம்மாவிடம் சொல்லு,'' என்று சொல்லிவிட்டு நடந்தார்.

மோகினியும் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். திடீரென்று குழந்தைச் சாமி, மோகினியைக் கூப்பிட்டார். மோகினி ஓடி வந்தாள். அவர் மோகினியிடம் தன் கையிலிருந்த வாழைப் பழத்தையும் கல்கண்டு பொட்டலத்தையும் எடுத்துக் கொடுத்தார். அவற்றைத் திகைத்துப் பார்த்து நின்றாள் மோகினி.

''முன்பெல்லாம்—உன்னை— அதாவது என் தாயைப் பார்க்க வெறும் கையோடு வரமாட்டேன். பழம் கல்கண்டோடுதான் வருவேன். என் தாய்

அதை மறந்துட்டாளா? இன்று பாலக் காட்டுக் கடைத் தெருவில் பழம் கல் கண்டு வாங்கிட்டிருக்கறப்போ என் தாயே என்னைத் தேடி வந்துவிட்டாள். அவளுக்கென்று வாங்கின கல்கண்டை யும் பழத்தையும் அவளுக்குத் கொடுக் காமல் போகலாமா?'' என்று கேட்டார்.

மோகினி பதில் பேசாமல் பழத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு அங்கிருந்து நடந்தாள். வீடு சென்ற தும் மோகினி பாலக்காட்டுப் பள்ளி யில் சாக்கோ அவளிடம் நடந்து கொண்டது, பஸ் ஸ்டாண்டுக்கு வந்தது, அங்கு குழந்தைச் சாமியைச் சந்தித்து அவருடன் பஸ்ஸில் திரும்பியது போன்ற எல்லா விவரங்களையும் சொன்னாள்.

நாராயணிக்குக் குழந்தைச்சாமி திரும்பிவிட்டார் என்று தெரிந்ததும் எல்லையில்லா மகிழ்ச்சி. ''இனி ஒரு கவலை இல்லே. உன்னைப்பத்திக் கவலை தீர்ந்துபோச்சு மோகினி. அந்த மகான் வருகை எப்போதுமே நமக்கு நல்லது தான் செய்திருக்கு,'' என்று சொல்லி விட்டு வேலையில் ஈடுபட்டாள்.

மறுநாள் காலை எழுந்ததும் மோகினி வீட்டு வேலைகளைப் பரபரவென்று செய்ய ஆரம்பித்தாள். குழந்தைச் சாமி அன்று வீட்டில் சாப்பிடவேண் டும் என்று அவருக்காக அவியல், ஓலன் எல்லாம் தயார் செய்தாள்.

காலை பத்துமணி சுமாருக்கு வந்தார் அவர். நாராயணி அவரைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள். ''உங்க பெண்ணே உங்களுக்காக ரொம்ப ஆசையோடு சமையல் செய்திருக்கா. சாப்பிடாமல் போகக்கூடாது.''

''அப்போ நான் மறுக்க முடியாது. சங்கரன்குட்டி, நீயும் சாப்பிடவா,'' என்று அவனை அழைத்து அருகில் உட்கார வைத்தார்.

இருவருக்கும் மோகினியேஉணவு பரிமாறினாள். சாப்பிட்டு முடிந்ததும் நாராயணி பழத் தட்டை அவர்முன் வைத்துவிட்டு, மெள்ள சாமர்த்தியமாக அவள் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தாள். ''மோகினி நீங்க ஏத்தி வைச்ச விளக்கு. அவள் படிச்சதும் உங்களாலே, அவளுக்கு வேலை கிடைச்சதும் உங்களாலே. அவள் ஒரு தப்பும் செய்யல்லே. உங்க அண்ணன் பேத்தியிடம் கொஞ்சம்

## அசலும் நகலும்





படத்தில் இருப்பவர்கள் இருவரும்ஒருவரல்லர். வலது பக்கத்தில் இருப்பவர் காலஞ் சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அல்ல. அவரைப் போலவே உள்ள சாமுவேல் பெல் நியூமேன் என்பவர். புகழ் வாய்ந்த ஓர் அமெரிக்க சிற்பி, கென்னடியின் உரு வத்தைச் செதுக்க இவரை 'போஸ்' கொடுக்கச் சொன் னதுண்டு. இவரது மூக்கில் உள்ள மச்சமே இவரையும் கென்னடியையும் வேற்று மைப்படுத்துகிறது. உண்மை கென்னடியை இடப் பக்கத் தில் காணலாம்.

—நியூஸ்வீக்கிலிருந்து

படமும், தகவலும்:

மு. சாகுல் அமீது.

அன்பா பழகினு. அதுக்காக அவளை வேலையை விட்டு நீக்கிட்டாங்க. இது நியாயமா சொல்லுங்க?'' என்று கேட்டாள்.

''நியாயம் உலகத்திலேயே அபூர்வமாகத்தான் இருக்கு. என்ன செய்யறது? உலகத்திலே யாரும் மத்தவங்க உணர்ச்சிகளைப் பற்றியோ, கஷ்டங்களைப் பற்றியோ கவலைப் படறதாத் தெரியல்லே. என் அண்ணன் மருமகள் விஜயாவும் அப்படித்தான். அவளும் எவ்வளவோ கஷ்டப்பட்டுவிட்டாள். ஆனால் இன்னும் அவளுக்குப் பரந்த உள்ளம் ஏற்படல்லே,'' என்று ஒரு விதமாகச் சொல்லிவிட்டு நிறுத்தினர்.

''நீங்க மனசு வைச்சா மறுபடியும் மோகினி இழந்த வேலையை அவளுக்கு வாங்கித்தர முடியாதா?''

குழந்தைச்சாமி ஒன்றும் சொல்லாமல் இருந்தார்.

நாராயணி, ''என்ன சாமி, பேசாமல் இருக்கிங்க?'' என்ருள்.

''மோகினி எந்தத் தவறும் இல்லாமல் வேலையை இழந்திருக்கா. அதனுலே அது ஆண்டவன் நடத்திய நிகழ்ச்சியாத்தான் நான் நினைக்கிறேன். விஜயா வெளிக் காரணமாயிருந்து அவளை அப்புறப்படுத்தியிருக்கா. உண்மையிலேயே மோகினி அந்தப் பள்ளியிலே வேலை செய்யறது அவ்வளவு சரியில்லேன்னு தோணுது,'' என்று சொல்லிவிட்டு மோகினியைப் பார்த்தார்.

''சாமி முடிவு எதுவானுலும் அது எனக்குச் சரிம்மா,'' என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டு, மோகினி, நாராயணி அம்மாளைப் பார்த்தாள்.

நாராயணி குழம்பி நின்ருள். அவள் பார்வை சட்டென்று சங்கரன்குட்டியின் மீது பாய்ந்தது.

''இனிமேல் மோகினி இந்த வீட்டில் இருப்பது அவள் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. மோகினியின் எதிர்காலம் நல்லா இருக்க ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்வது என்றுதான் எனக்குப் புரியவில்லே,'' என்று சொல்லிவிட்டு நிறுத்திருள்.

குழந்தைச்சாமி ஒன்றும் சொல்லாமல் சிந்தனையில் லயித்திருந்தார். பிறகு அவர் முகத்தில் ஒரு புன்னகை பிறந்தது. நாராயணியைப் பார்த்து, ''அம்மா, கொஞ்சம் வெளியே வர்நீங்களா? உங்களோட தனியாக் கொஞ்சம் பேசணும்,'' என்று சொல்லிவிட்டு எழுந்து நடந்தார்.

நாராயணி அம்மாளும் மரியாதை
யோடு அவரைப் பின்தொடர்ந்
தாள். சங்கரன்குட்டியும் மோகினியும்
அந்த வீட்டில் தனியாக விடப்பட்ட
னர். அன்று குளக்கரையில் மோகினி
யிடம் தவருக நடந்ததிலிருந்து சங்க
ரன்குட்டி மோகினியிடம் பேசியது
மில்லே. அவளைத் தலை நிமிர்ந்து பார்க்
கவும் இல்லை. இப்போது அவளைப்
பார்க்கவும் பயந்து தலையைத் தொங்க
விட்டுத் திரும்பிக் கொண்டான்.

மோகினி அதை லட்சியம் செய்யாது
''குட்டி, இப்படித் திரும்பி என்னைப்
பார்,'' என்று கட்டளையிட்டாள்.

குட்டி மெள்ளப் பயத்தோடு திரும்
பினுன். மோகினி அவனையே முறைத்
துப் பார்த்துவிட்டு, ''குட்டி, நீ மறு
படியும் ஆஸ்பத்திரிக்குப் போகணும்.
ஒழுங்கா மருந்து சாப்பிடணும். இந்த
மாதிரி ஓடி வந்துவிடக் கூடாது,''
என்று சொன்ஞள்.

சங்கரன்குட்டியின் முகத்தில் கல
வரம் ஏற்பட்டது. ''வேண்டாம்
மோகினி. ஆஸ்பத்திரிக்கு மட்டும்
என்னை அனுப்பாதே. ஆஸ்பத்திரிக்கு
மட்டும் என்னை அனுப்பாதே!'' என்று
கூச்சலிட்டான்.

''ஆஸ்பத்திரிக்குப் போகாமல்
உனக்கு எப்படிக் குணம் ஆகும்?''

''எனக்கு ஆஸ்பத்திரிக்குப் போனு
குணம் ஆகாது மோகினி. ஆஸ்ப
திரிக்குப் போறதுக்கு முன்னுலே நான்
ஏதாவது தப்பு செய்திருக்கேனு? அன்
னிக்குக் குளக்கரையிலே உன்னைப்
பார்த்ததும் அப்படி நடந்துட்டேனே
ஏன் தெரியுமா? எனக்கே புரியல்லே.
ஒன்றும் தெரியாமல் இருந்தேன்.
எனக்கு ஆஸ்பத்திரியிலேதான் புத்தி
கெட்டுப் போச்சு,'' என்று சொல்லி
விட்டு நிறுத்தினுன்.

''ஆஸ்பத்திரியிலே புத்தி கெட்டுப்
போச்சா? என்ன உளர்றே?'' என்று
கேட்டாள் அவள்.

''இல்லே மோகினி. ஆஸ்பத்திரியிலே
மாதவன் சம்சாரம்—அவதான் அங்கே
தைலம் காச்சறவள். பார்வதின்னு பேரு.
ஒருநாள் விடியற்காலம் நாலு மணிக்கு
என்னை எழுப்பி பாரதபிமானமே
குளிக்கணும்னு சொல்லிக் கூட்டிட்டுப்
போனுன். என் தலையிலே தைலத்தை
வைச்சுத் தேச்சா. அதனுலேதான்
மோகினி, நீ குளக்கரையிலே குளிக்
றப்போ எனக்கு உன்னைப் பார்த்ததும்
என்னவோபோல ஆயிட்டது. வெறி
மாதிரி நானும் உங்கிட்டே தப்பு

t.me/tamilbooksworld

நடந்திட்டேன். என்னை மன்னிச்சுடு மோகினி. ஆஸ்பத்திரிக்கு மட்டும் என்னை அனுப்பாதே மோகினி. அங்கே ..அங்கே.... பார்வதியைப் பார்க்கறதுக்கே எனக்குப் பயம்மா இருக்கு'' என்று அழாத குறையாகச் சொன்னான்.

சங்கரன்குட்டியின் உளறலிலிருந்து மோகினி அவன் நடத்தையில் ஏற்பட்ட திடீர் மாறுதலின் காரணத்தைத் தெரிந்துகொண்டாள். ஆஸ்பத்திரி சிப்பந்தியின் தவறுக்கு ஆஸ்பத்திரியைக் குறை கூற முடியுமா? இல்லே, சங்கரன் குட்டியைத்தான் குறை கூறவா?

குழந்தைச்சாமி மறுபடியும் நுழைந்தார். நாராயணியும் பின் தொடர்ந்தாள். அவர் அன்று மாலை வந்து மோகினியைத் தன்னுடன் கோயம்புத்தூர் அழைத்துப் போவதாகவும், அங்கு ஏதாவது வேலை பார்த்துத் தருவதாகவும் சொன்னார். சங்கரன்குட்டியைத் திரும்பிப் பார்த்தார். ''என்ன மோகினி, குட்டி ஆஸ்பத்திரியிலிருந்து ஓடிவந்து விட்டானுமே! அம்மா இப்பத்தான் சொன்னாங்க. அவனை நல்ல பாதுகாவல்லே வச்சு வைத்தியம் செய்யச் சொல்றேன். அவனுக்குத் தொழில் படிப்பும் சொல்லித்தர ஏற்பாடு செய்யறேன்,'' என்றார்.

சங்கரன்குட்டி பயத்தோடு மோகினியைப் பார்த்தான். மோகினி என்ன சொல்வது என்று தெரியாமல் நின்றாள். நாராயணி, ''சாமியே அவனுக்கு ஆகிற வைத்தியச் செலவை ஏற்றுக்கொண்டுவிட்டார் மோகினி,'' என்று மகிழ்ச்சியோடு சொன்னாள்.

மோகினி, சங்கரன்குட்டியை ஒருமுறை பார்த்தாள். அவன் கண்கள் மருட்சியோடு காணப்பட்டன. ''சாமி, அவனை அந்த ஆஸ்பத்திரிக்கு மட்டும் அனுப்பவேண்டாம். வேண்டுமென்றால் உங்களுடனே வைத்துக்கொண்டு வைத்தியம் செய்யுங்கள். இல்லாவிட்டால் அவன் அம்மாவோடு வீட்டிலிருக்கட்டும். ஆஸ்பத்திரியில் அவனைத் தனியாக விடவேண்டாம்,'' என்று மோகினி சற்றுக் கண்டிப்புடனேயே கூறினாள்.

உடனே சங்கரன்குட்டியும், ''சாமி, நான் உங்ககூட இருக்கேன். சாமி, தோட்டத்துப் பூவைப் பறிக்கமாட்டேன். ஒரு குறும்பும் செய்யமாட்டேன். உங்க காவி வேஷ்டி சட்டையெல்லாம் தோச்சுப் போடறேன் சாமி,'' என்று கெஞ்சினான்.

''மோகினி, அவனை ஆஸ்பத்திரியிலே சேர்க்கணும்னு ஒரு காலிலே நின்றவள் நீதானே மோகினி? இப்ப வேண்டாமென்கிறியே!'' என்று நாராயணி ஆத்திரத்துடன் கேட்டாள்.

''அம்மா, நம்ம குட்டிக்கு அந்த ஆஸ்பத்திரி சரிப்பட்டு வரல்லே, ராசியில்லே. வேண்டாம்மா!'' என்றுமோகினி முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

குழந்தைச்சாமி ஏதோ தக்க காரணத்தோடுதான் மோகினி மறுக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டார்.

''மோகினி சொல்றபடி குட்டி மடத்திலேயே என்னுடனே இருந்துட்டுப் போகட்டும். மோகினி, மாலை நாம் ரயிலில் கோயம்புத்தூர் போவோம்,'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

சங்கரன்குட்டி நன்றியோடும் மரியாதையோடும் மோகினியைப் பார்த்தான்.

அன்று மாலை ஷொரனூர் ஸ்டேஷனில் ரயில் ஏறி இரவு குழந்தைச்சாமியும் மோகினியும் கோயம்புத்தூர் வந்து சேர்ந்தனர். கோயம்புத்தூரில் உள்ள பிரயாண விடுதியில் மோகினியைத் தங்கச் சொல்லிவிட்டுக் குழந்தைச்சாமி, நண்பர்களைப் பார்க்கச் சென்றுவிட்டார். இரவு பூராவும் அவர் திரும்பவில்லை. மறுநாள் காலை பிறகும் அவர் ஹோட்டலுக்கு வரவில்லை.

ஹோட்டல் சப்ளையர்கள் மோகினியைச் சினிமாவில் நடிக்க வந்திருக்கும் ஓர் ஆரம்ப நட்சத்திரம் என்று நினைத்து அவளிடம் பேச்சுக் கொடுத்தனர். அவள் தங்கியிருந்த அறைக்கு எதிரே இருந்த ஓர் இளைஞன் அடிக்கடி அவள் அறையைப் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்தான். பல வருஷங்களுக்கு முன் டீச்சர் ட்ரெயினிங் படிக்க மோகினி கோயம்புத்தூர் வந்திருந்தாள். அன்று இருந்த கோயம்புத்தூருக்கும் இன்றுள்ள கோயம்புத்தூருக்கும் எவ்வளவோ வித்தியாசம். ஹோட்டல் வெளிப்புறம் வந்து செல்லும் பெரும் கார்கள், ஹோட்டலின் உள்ள இரைச்சல் இவையெல்லாம் மோகினிக்குப் புதுமையாக இருந்தன. ஒரு வித மிரட்சியையும் கொடுத்தன.

பிற்பகல் ஒரு மணிக்குக் குழந்தைச்சாமி ஹோட்டலுக்கு வந்தார். அவர் முகத்தில் ஒருவித விஷமப் புன்னகை இருந்தது. ''மோகினி, உனக்கு ஒரு பெரிய மனிதர் வீட்டில் வேலைக்கு ஏற்பாடு செய்துவிட்டேன். சம்பளம்

மூன்னூறு ரூபாய்,'' என்றார்.

''மூன்னூறு ரூபாயா?''

''என் தாய்க்கு மூன்னூறு ரூபாய் ஒரு பெரிதாகுமா?'' என்றார் அவர் சிரித்தபடி.

''என்ன வேலை சாமி?'' என்று கேட்டாள் மோகினி.

''பலவிதமான வேலைகள் இருக்கும். நீ செல்லும் வீட்டில் எஜமானியின் ஸ்தானத்தில் இருந்து நீ மற்ற வேலையாட்களிடம் வேலை வாங்கவேண்டும். மாதம் நூறு ரூபாய் என் மூலமாக நாராயணிக்கு அனுப்பப்படும். மாதம் நூறு ரூபாய் பாங்கில் உன் பெயரில் போடப்படும். மீதி 100 ரூபாய் உன் கையில் செலவுக்குக் கொடுக்கப்படும். அந்த வீட்டிலேயே தங்கவேண்டியிருப்பதால் உனக்குச் சாப்பாட்டுச் செலவு கிடையாது. ஏற்பாடு பிடித்திருக்கிறதா மோகினி?'' என்று கேட்டார்.

''உங்கள் ஏற்பாட்டில் குறை சொல்லமுடியுமா?'' என்றாள் அவள்.

திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவர் போல், ''இந்த ஏற்பாட்டில் ஒரு பெரும் குறை இருக்கிறது. நீ ஒரு பொய் சொல்லவேண்டி வரும்,'' என்று சொல்லிவிட்டு மோகினியைக் கவனித்தார்.

மோகினி ஒன்றும் புரியாமல் விழித்தாள். ''நேரமாகிறது. சாமான்களை எடுத்துக்கொண்டு வா,'' என்று அறையை விட்டுப் புறப்பட்டார் அவர்.

மோகினி குழப்பத்தோடு தன் சிறு பெட்டியைத் தூக்கிக்கொண்டு பின் தொடர்ந்தாள். இருவரும் வாசலில் காத்திருக்கும் டாக்ஸியில் ஏறினார்கள். டாக்ஸி கோயம்புத்தூர் வீதிகள் வழியே சென்றது. இருவரும் மௌனமாக இருந்தனர். சற்று நேரத்தில் டாக்ஸி தோப்பின் நடுவில் உள்ள ஒரு வீட்டில் நுழைந்தது. அந்த வீட்டின் எதிரே உள்ள திறந்த வெளியில் நின்றது. வீட்டின் வெளிப்புறம் உள்ள இரும்பு ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த பெண்ணைப் பார்த்ததும் மோகினி வியப்படைந்தாள். அந்தப் பெண், மோகினியைப் பார்த்ததும், ''டீச்சர்..'' என்று கூவிக்கொண்டு ஓடிவந்தாள். குழந்தைச்சாமியைப் பார்த்ததும் தன்னைத் திருத்திக் கொண்டாள்.

''தாத்தா, மறந்தே போயிட்டேன். டீச்சர்ன்னு கூப்பிடக்கூடாது. சாந்தின்னு கூப்பிடணும் இல்லையா?'' என்று கேட்டாள் கௌரி.

''ஆமாம் கௌரி. இந்தம்மாவை உனக்குத் தெரியாது. இவுங்க பேரு சாந்தி. பாலக்காட்டிலேருந்து வந்திருக்காங்க. மறந்துடாதே கௌரி.''

''சரி தாத்தா. அப்பா மில்லுக்குப் போயிருக்கார். அம்மா மாடியிலே இருக்காங்க. சாந்தியைக் கூட்டிட்டுப் போங்க,'' என்று அன்போடு மோகினியைப் பார்த்தாள் கௌரி.

''இதெல்லாம் என்னங்க சாமி, எனக்கு ஒன்றுமே புரியல்லியே!''

''இது தாத்தாவும் பேத்தியும் சேர்ந்து செய்த ஒரு சதி. அந்த சதிக்கு நீ உடந்தையா இருக்கணும்.''

''இது பெரிய பொய்யில்லையா, நீங்களா இந்த மாதிரிச் செய்யறீங்க?''

குழந்தைச்சாமி கலங்கிய கண்ணோடு மோகினியைப் பார்த்தார்.

''நீ கடவுளின் உருவம்னு நினைச்ச நான் பொய் சொல்றது உனக்கு அதிர்ச்சியா இருக்கு இல்லையா? என் வாழ்நாள் பூராவும் நான் எவ்வளவோ பொய் சொல்லியிருக்கேன். ஆனா அந்தப் பொய்களாலே எனக்கு எந்த விதப் பிரயோசனத்தையும் தேடிக்கல்லே. எல்லாப் பொய்களும் மத்தவங்களுக்கு நன்மையிலேதான் முடிஞ்சிருக்கு. இந்தப் பொய்யும் அப்படித்தான் முடியும்னு நினைக்கிறேன். ஒரு சமயம் நான் செய்யாத ஒரு குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கிட்டு தண்டனைகூட அடைஞ்சிருக்கேன் மோகினி,'' என்று சொல்லிவிட்டு மோகினியைப் பார்த்தார்.

(தொடரும்)



''சுத்த இலண்டா நீ? கிண்டிக்குப் போய் பிக் பாக்கெட் அடிச்ச ரெண்டாயிரம் ரூபா சம்பாதிச்சு, அத்தனையும் ரேஸிலே தோத்துவிட்டு வந்து நிக்கிறியே? உன் புத்தியைச் சொல்லு!''



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

சாமியார் தவறு செய்யமாட்டார், சாமியார் சொல்வதில் ஏதோ அர்த்தம் இருக்க வேண்டும், நல்லவர்கள் தவறுகள் செய்தாலும் அதன் முடிவு நன்மையாகவே முடியும்— என்று மோகினியின் பண்புள்ளம் கூறியது. ஆனால் மோகினியின் அறிவு படிப்பு இரண்டும், வேறு பெயரில் வாழ்வது ஒரு பொய் வாழ்க்கை, அது தவறு என்று கூறியது.

''வா மோகினி! உன்னை இந்த விட்டு எஜமானி அம்மாளுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்,'' என்று சாமியார் அழைத்துக்கொண்டு சென்றார். எந்த உணர்வும் இல்லாமல் பீதியோடு மோகினி பின்தொடர்ந்தாள். சாமியார் படிக்கட்டுகளில் ஏறினார். மோகினியும் பின்தொடர்ந்தாள். அவள் முகம் வியர்த்து. அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. நள்ளிரவில் ஒரு வீட்டில் திருட வந்தவன்போல் பயந்து பயந்து மோகினி அடி எடுத்து வைத்தாள்.

மாடியில் சாமியார் நீண்ட சதுரமான ஓர் அறைக்குள் நுழைந்தார். அந்த அறையில் ஒரு பெரிய கட்டில். அதையடுத்துச் சிறு ஸ்டூல்கள் போடப்பட்டிருந்தன. ரேடியோ, பெட்டி, பீரோக்கள், தொங்கும் வர்ண விளக்குகள் இத்யாதிப் பொருட்களை மோகினி முதன்முறையாகக் கவனித்தாள். அறையில் நுழைந்ததுமே அவள் கால்கள் கம்பளத்தில் புதைந்தன. திரண்ட செல்வத்தின் முதல் அறிமுகம் மோகினிக்கு இன்றுதான் ஏற்பட்டது.

அருகிலுள்ள மேஜையில் தங்கச் செயின்களும் வைரத் தோடுகளும் கவனிப்பாரற்றுக் கிடந்தன. மூவர் படுத்து உருளக்கூடிய பரந்த கட்டிலில் ஓரடி உயரத்துக்குப் பருமனான படுக்கை. அந்தப் படுக்கையின் மீது வெல்வெட் துணி கலைந்து கிடந்தது. வெள்ளிப் பாத்திரங்கள் தரையில் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிடந்தன. ஒரு சாதாரணப் பாத்திரம் கடையில் வாங்க நாராயணி அம்மாள் எவ்வளவு நாள் யோசித்து, சேமித்து வாங்க வேண்டி இருந்தது என்பதை நன்கு உணர்ந்திருந்தாள் மோகினி. வெள்ளிப் பாத்திரங்களைப் பற்றியும், தங்க நகைகளைப் பற்றியும் பார்த்தும், கேட்டுமிருக்கிறாள். ஆனால் ஆண்டு அனுபவித்ததில்லை.

சாமியார், ''விஜயா, விஜயா,'' என்று கூப்பிட்டார். அடுத்த வினாடி படபடவென்று சப்தம் கேட்டது. அறைக்கு வெளிப்புறம் பால்கனிக்குப் போகும் வழிக்கதவு படீரென்று திறந்தது. சற்று இருண்டு இருந்த அறையில் உடனே பளீரென்று ஒளி வீசியது. அந்த வழியே பால்கனியிலிருந்து சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு விஜயா நுழைந்தாள்.

விஜயாவின் பின்புறம் ஒளி நிறைந்து இருந்தமையால், மோகினிக்கு விஜயாவின் முகம் சரியாகத் தெரியவில்லை. விஜயா நாற்காலியைத் தள்ளியபடி நடு அறைக்கு வந்த பின்புதான், அவள் முகம் நன்கு தெரிந்தது. விஜயா சாமியாரைப் பார்த்து, ''நிக்கறீங்களே, உட்காருங்க,'' என்று சம்பிரதாயத்துக்காகச் சொன்னாள். அந்த உபசாரத்தில் உண்மை தொனிக்கவில்லை.

விஜயா மோகினியின் பக்கம் திரும்பினாள். மோகினியின் கண்களும், விஜயாவின் கண்களும் சந்தித்தன. மோகினியின் பார்வையில் இருந்தது மருட்சி, பயம். விஜயாவின் பார்வையில் இருந்தது அலட்சியம். விஜயாவின் பார்வை மோகினியின் கேசத்திலிருந்து, முகத்தில் நின்று, கழுத்து, மார்பு

## அத்தியாயம் 28

இவற்றில் தயங்கி நின்று பாதம் வரை பரிசீலித்ததும், அவள் பார்வையில் இருந்த அலட்சியம் படிப்படியாக ஆச்சரியமாக மாறியது. ஆச்சரியம் வேதனையாக மாறி, பொறுமையாக உருவெடுத்து நின்றது.

விஜயாவின் முகத்தில் ஏற்படும் உணர்ச்சிகளைக் கவனித்தபடி அமைதியாக அமர்ந்திருந்தார் சாமியார். விஜயா மோகினியிடம் ஒன்றும் பேசவில்லை. ''உட்கார்,'' என்று கூடச் சொல்லவில்லை. சட்டென்று முகத்தைச் சாமியார் பக்கம் திருப்பி, ''இவள்தான்...இவள்தான்...'' என்று ஆரம்பித்து முடிக்காமல் நிறுத்தினாள்.

சாமியார், ''இவள்தான் நான் சொன்ன பெண். மலையாளத்தைச் சேர்ந்தவள். நன்கு படித்தவள். வீட்டு வேலைகள், கணக்கு வழக்கு, குழந்தை களுக்குப் பாடம் சொல்லித் தருவது எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வாள்,'' என்று கூறினார்.

விஜயா விர்ரென்று மோகினியின் பக்கம் திரும்பினாள். ''உனக்கு என்ன வயசாகுது?'' என்று கேட்டாள்.

மோகினி பதில் சொல்ல முயன்றாள். ஆனால் பயத்தால் வார்த்தை வெளிவரவில்லை. மோகினியின் குழப்பத்தை உணர்ந்துகொண்ட சாமியார், ''பதினெட்டு, இருபது வயசிருக்கும்,'' என்று கூறினார்.

''நீ எந்த ஊர்?'' என்று விஜயா தொடர்ந்து கேட்டாள். மோகினிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. ஷோரனூர் என்று சொல்வதா, திருச்சூர் என்று சொல்வதா? சாமியார் ஏற்கனவே ஏதாவது சொல்லியிருந்தால், அதற்கு மாறாக நாம் வேறு ஊரைச் சொல்லிக் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாதே என்று வாய்மூடிப் பேசாமல் இருந்தாள். ''அவள் பிறந்தது குருவாயூரிலே. வளர்ந்தது ஷோரனூர் பக்கத்திலே,'' என்று உண்மையையே சொன்னார் சாமியார்.



விஜயா தொடர்ந்து, ''உன் பேரு என்னம்மா?'' என்று கேட்டாள். அதற்கும் மோகினி பதில் கூறு முன்பே சாமியார் முந்திக்கொண்டார். ''இவள் பேரு சாந்தினி.''

இப்படி ஒவ்வொரு கேள்விக்கும் சாமியாரே பதில் சொல்லிக் கொண்டிருந்தார். மோகினி வாய் புதைத்து நின்று கொண்டிருந்ததைக் கவனித்த விஜயா, ''அவள் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் நிற்கிறாளே, அவள் என்ன ஊமையா?'' என்று கேட்டாள்.

மோகினிக்குச் சுருக்கென்றது. சாமியார் சிரித்தார். ''விஜயா! அவள் ஏழை. தாய் தகப்பனில்லாத அனாதை. வயசிலே பெரியவங்க முன்னாலே அடக்கமாக இருக்கப் பழகியவள். எதிர்கால எஜமானியம்மா முன்னால், எப்படி மரியாதையா நடந்துக்கணும்னு தெரிந்து கொண்டவள். அதனாலேதான் பேசல்லே. பேசத் தெரியாமல் இல்லை,'' என்று கூறினார்.

விஜயா மறுபடியும் ஒருமுறை மோகினியைப் பார்த்தாள். ''சாந்தினி! நீ போய் வெராந்தாவிலே நில்லு,'' என்று கட்டளையிட்டாள். மோகினி உடனே வெளியே போய் வெராந்தாவில் நின்றாள். உட்புறமிருந்து விஜயா பேசுவது அவள் காதுகளில் விழுந்தது.

விஜயா: ''அவள் ரொம்ப அழகாயிருக்காளே?''

சாமியார்: ''ஆனால் ரொம்ப ஒழுக்கமானவள். அவள் அழகாயிருக்கிறது தான் அவளுக்குப் பெரிய துக்கம். அதனாலேதான் அவளை ஒரு நல்ல இடத்திலே அமர்த்தனும்னு நினைச்சேன். அழகும் படிப்பும் இருக்கிற அவளை, பணம் தானே தேடி வரும். ஆனால் அவள் ஒழுக்கம்தான் அவளைக் கண்ணியமான ஒரு இடத்தைத் தேடி வேலைக்கு அமரணும்னு சொல்லுது.''

விஜயா சற்றுச் சிந்தித்தபடி இருந்தாள். இதை வெளியில் நின்று கேட்டுக்கொண்டிருந்த மோகினி, முந்நூறு ரூபாய் வேலை தன் அழகின் காரணமாகத் தனக்குக்



கிடைக்காமல் போய்விடுமோ என்று பயந்தாள். அதே சமயத்தில் டாக்டர் தோல்பையுடன் படிகளில் ஏறிவந்தார். அவர் ஒரு விநாடி நின்று மோகினியைப் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தார்.

உள்ளே போனதும் விஜயாவிடம், ''கன்கிராஜுலேஷன்ஸ் மிஸஸ் ராஜு. ஈ. எஸ். ஜி. ரிப்போர்ட் சரியா இருக்கு. இனிமேல் உங்களுக்குப் பயமில்லே. ப்ளட் டெஸ்டும் கரெக்டா இருக்கு. உங்களுக்கு ஒருவித பயமும் இல்லே. அதைச் சொல்லத்தான் வந்தேன்,'' என்று பேசினார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் விஜயாவின் முகத்திலே ஒரு தெளிவு ஏற்பட்டது. சந்தோஷம் ஏற்பட்டது. அதைக் கவனித்த சாமியார் சந்தர்ப்பத்தைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக்கொண்டார். ''சாந்தினி வந்த வேளை நல்ல வேளைதான். டாக்டர் நல்ல செய்தியாகக் கொண்டு வந்திருக்கார்,'' என்று சொல்லி முடித்தார்.

நிரந்தர நோயாளியாக, நல்ல சூசகங்களுக்குக் காத்திருந்து அதையே நம்பி வாழ்ந்துவந்த விஜயாவுக்கு மோகினியின் மற்ற யோக்யதாம்சங்களைவிட இந்த ராசி என்ற விஷயம் மிகவும் பிடித்தது. அவள் வந்த வேளை நல்ல செய்தி வந்தது என்ற திருப்தி ஏற்பட்டது. ''நான் கௌரியைப் பிரசவித்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தப்போ டாக்டர்களெல்லாம் என்னைக் கைவிட்டுட்டாங்களாம். சித்தப்பா, நீங்க கொண்டுவந்த விபூதியும் குங்குமமும்தான் எனக்கு உயிர்ப்பிச்சைக் கொடுத்ததுன்னு அவர் அடிக்கடி சொல்வார். நீங்க செய்யறது எல்லாமே இந்த வீட்டுக்கு நல்லதாத்தான் வருது,'' என்றாள்.

திடீரென்று விஜயாவின் புகழ்ச்சிக்குக் காரணம் டாக்டர் கூறிய நல்ல செய்திதான் என்பதை உணர்ந்த சாமியார், ''விஜயா! என்னை ஒரேயடியாய்ப் புகழ்ந்து என்னை கடவுளாக்கிடாதே. நான் ஒரு சோம்பேறிச் சாமியார். என் வாழ்க்கையிலே நான் எவ்வளவோ பொய் சொல்லும்படி நேர்ந்திருக்கு,'' என்று தன்னைத்தானே குறைத்துக் கொண்டார்.

டாக்டர் விஜயாவிடம், ''மிஸஸ் ராஜு! அன்னிக்கு ஆஸ்பத்திரியிலே உங்களுக்கு ஞாபகம் வந்தப்போ, இவர் அங்கே இருந்தாரில்லே! ரொம்ப லக்கி பண்டாரம்!'' என்று விஜயாவின் வாதத்துக்கு ஒத்தூதினார். பெரிய மனிதர்கள் உளறினாலும் அந்த உளறலுக்குக் கண்ணியமான விளக்கங்கள் தேடித் தந்து அவர்கள் உளறலே அறிவுரை என்று நிரூபிக்கும் கோஷ்டியைச் சேர்ந்தவர் அந்தச் சின்ன டாக்டர் என்று புரிந்து கொண்டார் சாமியார். உடனே சாமியார் டாக்டரைப் பார்த்து ''நான் வெறும் லக்கி பண்டாரம் மட்டுமில்லே டாக்டர். விஜயாவின் சின்ன மாமனார்,'' என்று சொல்லிவிட்டுத் தன் வார்த்தைகள் டாக்டரின் முகத்தில் என்ன விளைவை உண்டாக்கி இருக்கின்றன என்று கவனித்தார்.

அவர் எதிர்பார்த்தபடியே டாக்டர் அயர்ந்துவிட்டார். உடனே, ''ஐ ஸீ...




நான் அப்போது ஏழு வயது சிறுவன். இரண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன்.

சரித்திரப் பாடங்களைப் படிக்கும்போது ''அசோகர் மயிலுக்கு ஒரு தண்ணீர் தொட்டியும், சத்திரமும் கட்டினார்,'' என்று படிப்பேன்.

எத்தனையோ பறவைகள் இருக்க, அசோகர் எதற்காக ஒரு மயிலுக்குப் போய்த் தண்ணீர்த் தொட்டி கட்டினார் என்ற சந்தேகம் எனக்கு வந்தது.

நான்காம் வகுப்பு வந்தவுடன்தான் எனக்கு அச் சந்தேகம் தீர்ந்தது.

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போகும் நெடுஞ்சாலைகளில், ஒரு 'மைல்' தூரத்துக்கு ஒரு தண்ணீர்த் தொட்டியும் அன்ன சத்திரமும் அசோகர் கட்டினார் என்று புரிந்தது.

—யு. எம். ராமசாமி

ஐ ஸீ...நீங்க...நீங்க...அந்த கிரேட் மில்லியனேர், கோடீஸ்வரர், வெங்கடபதியின் தம்பியா? எக்ஸ்க்யூஸ் மி. நான் உங்களைப் பண்டாரம்னு சொல்லிட்டேன். ஐ ஆம் சாரி. நான் ஒரு முட்டாள்,'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டு பேசினார்.

சாமியார் அமைதியாக, ''நீங்கள் முட்டாள் இல்லே. நீங்க கெட்டிக்காரர்னுதான் சொல்வேன். உலக இலக்கணம் புரிந்து வாழறவர்,'' என்று சொல்லி முடித்தார். சாமியார் சொன்னதை மறுப்பதா, ஒத்துக் கொள்வதா என்று புரியாமல் திகைத்தார் டாக்டர். அசடு வழியச் சிரித்தபடி விஜயாவிடம் விடை பெற்றுக் கொண்டார்.

டாக்டர் சென்றதும் விஜயா, மோகினியை மறுபடியும் உள்ளே அழைத்தாள். அவளை வேலைக்கு நியமித்துவிட்டதாகக் கூறினாள். பிறகு சாமியாரிடம் திரும்பி, ''இரண்டு நாளைக்கு முன்னே ஒரு கனவு கண்டேன். ரொம்ப வித்தியாசமாயிருந்தது.'' என்றாள்.

''என்ன கனவு விஜயா?'' என்று சாமியார் கேட்டார். வேலைக்கு நியமிக்கப்பட்ட பின்பு சும்மா நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பது சரியில்லை என்ற நினைப்பில் மோகினி, அங்கு கிடக்கும் புத்தகங்கள், வெள்ளிப் பாத்திரங்களை எடுத்து அங்குள்ள ஷெல்பில் ஒழுங்காக அடுக்கி வைக்க ஆரம்பித்தாள். விஜயா சாமியாரிடம் தான் கண்ட கனவைப் பற்றிக் கூற ஆரம்பித்தாள்.

''பயங்கரமான ராத்திரி வேளே. இடியும் மின்னலும் மழையும் ஒரே இரைச்சலா இருக்கு. நான் மலையாளத்துப் பங்களா வெராந்தாவிலே ஓடறேன். என்னை ஒரு பெண் துரத்திட்டு வர்ரா. இன்னதுன்னு தெரியாத ஒரு பயம் என்னைப் பிடிச்சுக்கிறது. திரும்பிப் பார்க்கறேன். என்னைத் துரத்திட்டு வர்ர பெண்ணோடு குழந்தை கௌரி சிரிச்சுப் பேசிக்கிட்டு ஓடி வருகிறாள். 'கௌரி! யாருடி அவ?''ன்னு கௌரியைக் கேக்கறேன். அதுக்கு கௌரி, 'மோகினி டீச்சர் அம்மா. அவள் வேலையைத்தான் நீ தொலைச்சுட்டே. உன்னை மோகினி டீச்சர் பழி வாங்காம விடமாட்டாள்' என்று சொல்கிறாள்,'' என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.



''நாம பேசின தொகைக்கும் மேலே ரூ. 4000 தந்தால்தான் மின்னே, நம்ம பெண்ணுக்குத் தாலியைக் கட்டுவானும்.''

''அப்படி என்ன தப்பு நடந்துடுத்தாம்?''

''உன் தாத்தாவின் மாமிக்கு அத்தானின் வேட்டகத்துக்குச் சின்ன மாமனாரின் சம்பந்திக்கு அத்தான் பெண்ணுக்கு ஆஸ்துமா என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது.''

❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊

மோகினி அப்படியே திகைத்து நின்றாள். விஜயா தொடர்ந்து கூறினாள்: ''கனவிலே வந்த மோகினி டீச்சர் என்னை மெள்ள நெருங்கினாள். அவள் முகத்திலே கோபமும் ஆத்திரமும் தாண்டவமாடியது. 'உங்க பெண்ணிடம் அன்பா நடந்துகிட்டதுக்காக என் சாப்பாட்டிலே மண்ணைப் போட்டே இல்லே? போ. கோயமுத்தூர் ஆஸ்பத்திரியிலே போய்ச் சாவு!' என்று என்னைப் பார்த்துச் சாபமிட்டாள். அப்படியே அலறி விழித்துக் கொண்டேன். விசித்திரம் என்னவென்றால், மோகினியை வேலையைவிட்டு நிறுத்திய மறுநாளே, நான் பாத் ரூம்லே விழுந்துட்டேன். அப்புறம் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே?'' என்று சொல்லிவிட்டுத் தன் பேச்சையே உற்றுக் கேட்டுக் கொண்டிருக்கும் மோகினியைப் பார்த்து ''என்ன அப்படித் திகைச்சு நிக்கறே? உன் முன்னாலே இந்த வீட்டிலே எவ்வளவோ பேசுவோம். நீ எதையும் கமெண்ட் பண்ணாமல் உன் வேலையைக் கவனிக்கணும்,'' என்று கண்டித்தாள்.

உடனே மோகினி பரபரவென்று படுக்கையைச் சரிசெய்ய ஆரம்பித்தாள். சாமியார் குறும்புப் புன்னகையோடு,

''கனவிலே நீ கண்ட மோகினி எப்படி இருந்தாள் விஜயா?'' என்று கேட்டார்.

''ஐயோ! ஒரே ஒல்லியா, பார்க்க அருவருப்பா இருந்தாள். சப்பை மூக்கும், மெலிந்த கூன் விழுந்த முதுகும் பார்க்கிறதுக்கே பரிதாபமா இருந்தாள். ஆனால் ஒரு விஷயத்திலே மோகினி கரெக்ட் சித்தப்பா. கௌரிக்கு ஒரு நோயும் இல்லேன்னு தைரியம் கொடுத்து ஓடியாடச் செய்தவள் அந்த மோகினிதான். நான்கூட அதனால் குழந்தைக்கு ஏதாவது ஆபத்து வரும்னு பயந்தேன். நேத்திக்குத்தான் இந்த ஊர் ஆஸ்பத்திரி பெரிய டாக்டர் கௌரியைப் பரிசோதனை பண்ணி, அவள் இருதயத்திலே ஒரு கோளாறும் இல்லேன்னு சொல்விட்டார். இப்ப நினைத்தால், அவளை ஏன் வேலையை விட்டுத் தள்ளினோம்னு தோணறது. நீங்க ஷோரனூர் போனால் அந்த மோகினியை மறுபடியும் பள்ளிக்கூடத்திலே வேலைக்குச் சேர்த்துடுங்க,'' என்றாள்.

சாமியார் சிரித்தபடியே எழுந்தார். ''அவளுக்கு வேற இடத்திலே வேலை வாங்கிக் கொடுத்திட்டேன். இப்போ அவளுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. வேலை போனதே ஒரு விதத்திலே அவளுக்கு அதிர்ஷ்டமா போச்சு,'' என்று சொல்லிவிட்டு மோகினியைப் பார்த்தார்.

''எப்படியோ அந்த மோகினி நல்லா இருந்தால் சரி. கௌரி அவள் மேலே உயிரையே வச்சிருந்தாள்,'' என்று விஜயா கூறி முடித்ததும் சாமியார், ''விஜயா! நாம் ஆத்திரத்திலே எவ்வளவோ தப்பு செய்யறோம். அதை உணர்ந்து வருந்தினால் பாபம் போயிடும். மோகினியை எனக்குக் குழந்தையிலிருந்து தெரியும். அவள் ரொம்ப நல்லவ. அவளுக்கு நீ இழைத்த தீங்குக்குப் பிராயச்சித்தமா இந்தச் சாந்தினியை நல்லா நடத்தினால் அதுவே போதும்,'' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

மோகினியும் அறையிலுள்ள வேலைகளை முடித்துவிட்டு அந்தப் பங்களாவின் கீழ்த்தளத்துக்கு வந்தாள். ஹாலில் போடப்பட்டிருந்த ஒரு பெஞ்சியில் சாமியார் சிரித்தபடி உட்கார்ந்திருந்தார். மோகினி பதற்றத்துடன் அவரிடம் சென்று, ''சாமி! எனக்குப் பயமா இருக்கு. இதென்ன நாடகம்! சினிமாவிலே நடக்கிற காட்சி மாதிரி இருக்கு. விஜயாவுக்கு உண்மை தெரிஞ்சால் நான் என்ன செய்யறதுங்க?'' என்று கேட்டாள்.

சாமியார், ''உண்மை தெரிந்து அவங்க உன்னைக் கேட்டாங்கன்னு பழியை என் மேலே போடு. சாமியார் சொன்னபடி செய்தேன்னு சொல்லு,'' என்று சாவதானமாகச் சொன்னார்.

''சாமி! எனக்கு ஒண்ணும் புரியல்லே. இந்தப் பொய் நாடகத்தை நீங்க ஏன் நடத்தணும்?'' என்று மோகினி அழாத குறையாகக் கேட்டாள். சாமியாரின் முகத்திலிருந்த புன்னகை மறைந்தது. அவர் குரலில் சோகம் நிறைந்தது. ''மோகினி! இந்த நாடகம் உனக்காக நான் நடத்தல்லே. எனக்காகவும் நடத்தல்லே.

# வா, நாம் துரோகியாகலாம்!

அறுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்—மதுரையில் பாண்டியன் ஆண்டிருந்த காலம். தகியுத்தீன், ஜமாலுத்தீன் என்ற இரு சகோதரர்கள், பாண்டிய மன்னனின் துணை அமைச்சராகவும் குதிரைப் படைத் தலைவராகவும் பதவியில் இருந்தார்கள். அச்சமயம்—

டெல்லி சுல்[illegible] அலாவுத்தீன் கில்ஜி, [illegible]ன் படைத் தலைவன் [illegible]லிக் காபூரைப் பெ[illegible] படையுடன் தெற்கே அனுப்பிவைத்தான் தென்னகத்தை அடி[illegible]ப்படுத்த.

பாண்டிய நாட்டில் முஸ்லிம் தளபதி இருக்கிறார் என்று கேள்வியுற்ற மாலிக் காபூர், ''நாம் இருவரும் முஸ்லிம்கள். ஒரே சமயத்தைச் சார்ந்த நாம் ஒன்று சேர்ந்து, பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளலாம்,'' என்று ரகசியமாகச் சேதி அனுப்பினான், ஜமாலுத்தீனுக்கு.

படைத் தலைவன் ஜமாலுத்தீன் பதிலிறுத்தான்:

''மன்னனின் அனுமதியின்றி மறைமுகமாக எந்த நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டோம். இந்த நாட்டின் உப்பைத் தின்றுவிட்டு இந்நாட்டுக்கே துரோகம் செய்வது இஸ்லாத்துக்கே செய்யும் துரோகமாகும்.''

—'துராப்'

அந்தக் குழந்தை கௌரிக்கு உன் துணை தேவைப்படுது. அது மட்டுமில்லே. இது என் அண்ணன் வீடு. எங்கண்ணன் எவ்வளவோ பேர் வாழ்க்கையை நசுக்கி இவ்வளவு செல்வத்தையும் சேர்த்தார். பலபேர் சாபம் இந்த வீட்டைச் சுத்துது. அதனாலே அமைதி இல்லே. இந்தக் குடும்பம் நல்லா இருக்கணும்னா உன்னைப்போல ஒரு சுத்த சத்துவமான ஜீவன் இங்கே வாழணும். உன் கருணையினாலேதான் ராஜுவின் வாழ்விலே சந்தோஷம் ஏற்படணும் தாயே! நான் புறப்படட்டுமா?'' என்று சொல்லி விட்டு வெளிப்புறம் நடந்தார்.

மோகினி அவரைத் தொடர்ந்து ஓடி, ''சாமி! மறுபடியும் நீங்க எப்போ வருவீங்க?'' என்று கேட்டாள். ''மின்னலும் மழையும் எப்போ வரும்னு சொல்ல முடியுமா? அது போலத்தான் என் வருகையும்,'' என்று சொல்லி விட்டு பங்களாவை விட்டுச் சென்று விட்டார் சாமியார். அவர் போன திசையையே பார்த்தபடி நின்றவள் ''யாரம்மா நீ? யாரைப் பார்க்க வந்தே?'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள். அப்படியே திகைத்து நின்றாள். சிவந்த முகம், எடுப்பான நெற்றி, அதை ஓரளவு மறைத்தபடி சுருண்டு விழுந்த கிராப். உள்ளத்து வலிமையைக் காட்டும் மோவாய்க் கட்டை. உடல் வலிமையைக் காட்டும் உருண்டு திரண்ட புஜங்கள். அந்தப் புஜங்களின் திரட்சியும் வனப்பும் சில்க் ஜிப்பாவின் உட்புறமும் நிழலாடின. பரந்த மார்பு, கறுத்த கண்கள். அந்தக் கண்களின் பார்வை கெஞ்சும் பார்வையாக இருந்தது. எதையோ பிச்சையாக வேண்டி எதிர்பார்த்து நிற்கும் பார்வை அது!

இந்தப் பார்வையை இதற்கு முன் எங்கு பார்த்தோம் என்று நினைத்தாள் மோகினி. சட்டென்று ஞாபகம் வந்தது. முதல் முறை கௌரியைச் சந்தித்த போது, கௌரி இதேபோல்தான் அவளை நோக்கினாள். கௌரியின் கண்களேதான்!

எஜமானின் முன் நிற்கிறோம் என்று உணர்ந்ததும் சேலைத் தலைப்பை எடுத்துத் தோளைப் போர்த்திக் கொண்டாள்.

ராஜு மீண்டும், ''நீங்க யாரைப் பார்க்க வந்தீங்க? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

''நான்...நான்...'' என்று கூறி விட்டுக் கண்களைக் கொட்டியபடி நின்றாள் மோகினி. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து நிற்கும் நிலையில் கௌரி, ''அப்பா! அப்பா!'' என்று கூப்பிட்டபடி ஓடிவந்தாள். கௌரியின் வருகை மோகினிக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. ''சாமியார் தாத்தா இவங்களைக் கூட்டிக்கிட்டு வந்தாங்கப்பா. இவுங்கதான் சாந்தினி. இனிமேல் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போறது இவுங்கதான்,'' என்று கௌரி கூறினாள்.

''தாத்தா எங்கே கௌரி?'' என்று ராஜு கேட்டான். அதற்கு கௌரி, ''அவர் போயிட்டாரப்பா. கேட் வரையிலும் அவரோட போயிட்டு வர்றேன். போறப்போ எனக்குக் கல்கண்டு கொடுத்துட்டுப் போனார். நான் இத்துனூண்டு இருக்கேன். சாமியார் தாத்தா எங்கிட்டே போயி, 'போயிட்டு வர்றேன் தாயே'ன்னு சொல்றாரப்பா!'' என்றாள். ராஜு சிரித்தான். அப்போது மோகினி ராஜுவின் அழகான உதடுகளையும், அந்த உதடுகளின் பின்புறம் வரிசையாகத் தோற்றமளித்த அழகான பற்களையும் கண்டாள். தன்னையும் மறந்து ராஜுவைப் பார்த்தபடி நின்றாள்.

''சாந்தினி!'' என்ற அதிகாரக் குரல் இடியோசைபோல் மோகினியின் காதுகளில் கேட்டது. மோகினி திரும்பிப் பார்த்தாள். மாடியில் சக்கர நாற்காலியில் விஜயா வீற்றிருந்தாள். விஜயா சாந்தினியை ஒருவிதமாகப் பார்த்தாள். ''சாந்தினி! தோட்டத்திலே போய்த் தோட்டக்காரனைப் பூச்செடிக்கு நீர் பாய்ச்சச் சொல்,'' என்று கட்டளையிட்டாள். மோகினி பயபக்தியோடு வெளியேறினாள்.

ராஜு மெள்ளப் படிக்கட்டுகளில் ஏறி மனைவி இருக்குமிடம் வந்தான். அவளது நாற்காலியைத் தள்ளிக் கொண்டு விஜயாவின் அறைக்குள் சென்றான். நாற்காலியில் அமர்ந்தபடியே விஜயா திடீரென்று தலையைத் திருப்பி ராஜுவைப் பார்த்தாள். அவள் பார்வை, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சந்தேகத்தில் அழைத்து வரப்பட்ட ஓர் ஆசாமியை இன்ஸ்பெக்டர் பார்ப்பது போல் இருந்தது.

''சாந்தினி எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டாள் விஜயா.

ராஜு ஒன்றும் புரியாமல் விழித்தான். ''யார் இந்தச் சாந்தினி? அவள் ஏன் இங்கு வந்திருக்கிறாள்? எனக்கு ஒன்றும் புரியல்லியே!'' என்று குழந்தை போல் கேட்டான்.

(தொடரும்)

www.padippakam.com



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 29

"சாந்தினி யாருன்னு தெரியாதுன்னு சொல்றீங்க. ஆனா, ஏழே ஹாலிலே அவகூடப் பேசிட்டு இருந்தீங்களே?"

"அவளை யாருன்னு கேட்டுக்கிட்டு இருந்தேன். அவள் யாரைப் பார்க்க வந்து இருக்கான்னு கேட்டேன். அந்தப் பொண்ணு முழிச்சிப் பார்த்துட்டு ஒரு பதிலும் சொல்லாம நின்னுக்கிட்டிருந்தாள். நம்ம குழந்தை கௌரி ஓடி வந்து, 'சாமியார் தாத்தா அழைச்சிக்கிட்டு வந்தார். இனிமேல் எனக்கு இவங்கதான் பாடம் சொல்லிக் கொடுக்கப் போறாங்க'ன்னு சொன்னான். இதெல்லாம் யார் ஏற்பாடு? சித்தப்பா எங்கே போயிட்டார்?"

"சித்தப்பா எங்கே போனார், அவர் எப்போ வருவாருன்னு யாருக்குத் தெரியும்? இந்தச் சாந்தினி ஏற்பாடு, உங்க சித்தப்பாவுடைய ஏற்பாடு,"—என்று தனக்கு ஒன்றும் தெரியாததுபோல் சொன்னாள்.

"சித்தப்பா எவ்வளவோ பேருக்கு ஏற்பாடு செய்வது உண்டு. அதுபோல இதுவும் ஒன்று..." என்று ராஜு சொல்லி முடிக்குமுன்பே, விஜயா, "ஆமாம், ஆமாம். பழனியிலே ஒரு பிச்சைக்காரிக்கு மணியார்டர் பண்ணச் சொன்னார். மலையாளத்திலிருந்து லட்சணமான ஒரு பெண்ணை அழைச்சிக்கிட்டு வந்து வேலை கொடுக்கிறார்," என்று குத்தலாகப் பேசினாள்.

"விஜயா! சித்தப்பாவைப் பற்றி ஒன்றும் சொல்லாதே. உனக்கு இஷ்டம் இல்லையானால் ஏன் இந்தப் பெண்ணை நீ வீட்டிலே வைத்துக் கொள்ளணும்? இப்போதே வெளியே அனுப்பிவிட்டால் போகிறது." என்றான் ராஜு.

அதற்கு விஜயா, "அடேடே. அவசரப்படறீங்களே. இந்தப் பெண்ணை வேலையில் வைத்துக் கொள்வதில் எனக்கும் இஷ்டம்தான். நான்தான் உங்கள் சித்தப்பாவிடம் சொல்லியிருந்தேன். வீட்டு வேலைக்காரர்களை மானேஜ் பண்ணவும், குழந்தை கௌரிக்குப் படிப்புச் சொல்லித் தரவும், எனக்கு மருந்து கொடுத்து, குளிப்பாட்டி என்னைக் கவனிக்கவும் ஒரு பெண் தேவை என்று சொல்லியிருந்தேன். யாராவது வயசான அம்மாவைக் கொண்டு வருவார் என்று நினைத்தேன். ஆனால் அவர் அழகான சின்னப் பெண்ணைக் கொண்டுவந்துவிட்டார்," என்று சொல்லி ஒருவித அர்த்தத்தோடு ராஜுவைப் பார்த்தாள்.

ராஜு ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்தான்.

"சாந்தினி உண்மையிலேயே அழகாக இருக்கிறாள் இல்லையா?" என்று விஜயா கேட்டாள்.

"நான் சரியாகக் கவனிக்கவில்லை விஜயா. வீட்டு வேலைக்கு அழகான ஒரு பெண் தேவையா? வேணுமானால் அந்தப் பெண், கௌரிக்கு வந்து தினமும் டியூஷன் சொல்லிக் கொடுத்து விட்டுப் போகட்டும். அவளை வேலைக்கு வைத்துக்கொண்டோம் என்று சித்தப்பாவுக்கும் திருப்தியாக இருக்கும். உன்னைக்

கவனிக்கவும், வீட்டை நிர்வாகம் பண்ணவும் வேறு யாராவது ஓர் அம்மாவைப் போடுவோம்,'' என்று ராஜு யதார்த்தமாகச் சொன்னான்.

இந்தப் பதிலைக் கேட்டதும் விஜயாவுக்குத் திருப்தி ஏற்பட்டது.

உண்மையிலேயே சாந்தினியின் அழகு ராஜுவைக் கவரவில்லை; அவன் சொன்னதுபோல் அவன் அவளை நன்றாகக் கவனிக்கவில்லை என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

''அவளுக்குக் கோயமுத்தூரில் தங்க இடமில்லை. அவள் மலையாளத்திலிருந்து வந்திருக்கிறாள். கௌரிக்கு டியூஷன் சொல்லித் தருவதற்கு மட்டும் அவளை வைத்துக்கொண்டால், நாம் அவளுக்கு இடம் பார்த்து வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் நமது பங்களாவில் தங்க இடம் தரவேண்டும். உங்கள் சித்தப்பா அவளுக்கு முன்னூறு ரூபாய் சம்பளம் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். மாதம் நூறு ரூபாய், ஷோரனூரில் உள்ள அவள் பந்துவுக்கு அனுப்ப வேண்டும் என்றும், ஒரு நூறு ரூபாய் அவள் கணக்கில் கட்ட வேண்டும் என்றும், மீதியுள்ள நூறு ரூபாயை அவள் கையில் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்,'' என்று கூறினாள்.

உடனே ராஜு, ''ஒரு வேளை இந்தப் பெண் அவருக்கு வேண்டியவர்கள் மகளாக இருக்கலாம். அதனாலேதான் அவர் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்,', என்று சொன்னான்.

''இவ்வளவு பணத்தையும் கொடுத்துவிட்டு அவளை வெறும் டியூஷனுக்குமட்டும் வைத்துக் கொள்வானேன்? வீட்டு வேலையைப் பூராவும் வாங்கிக் கொள்வோமே என்றுதான் அவளை எனக்கு ஒரு செக்ரட்டரி மாதிரி



இருந்து விட்டுப் போகட்டுமென்று நியமித்தேன்,'' என்று சொல்லிவிட்டு ராஜுவைப் பார்த்துச் சிரித்தாள்.

''முன்பு உன்னைக் கவனிக்கும் வேலை எனக்கு இருந்தது. அதுவும் இப்போ இல்லையென்று சொல்கிறாய்,'' என்று சொல்லிவிட்டு ராஜு சிரித்தான்.

''நீங்கள் மில், தோட்டம் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளலாம். வெறும் நோயாளியிடம் உட்கார்ந்து கிட்டு இருந்தால் உங்களுக்கும் சலிப்பாகத்தானே இருக்கும்?'' என்று விஜயா கூறினாள்.

அதற்கு ராஜு, ''உன்னைக் கவனிப்பதில் எனக்குச் சலிப்பு ஒன்றுமில்லை விஜயா,'' என்று கூறினான்.

''நாம் மலையாளத்திலே இருந்த போது நம்ம பந்துக்கள் யாரும் வர மாட்டார்கள். இப்போ கோயமுத்தூர் வந்துவிட்டோம். தினமும் காலையிலேயும் மாலையிலேயும் யாராவது வந்து கிட்டே இருப்பார்கள். நீங்கள் என் பக்கத்திலேயே ஒரு 'ஆண் நர்ஸ்' மாதிரி நின்றுகிட்டிருந்தா உங்கள் அந்தஸ்துக்குப் பொருத்தமா இருக்குமா? அதனாலேதான் சரியென்று தோன்றிற்று,'' என்று சொல்லி நிறுத்தினாள் விஜயா.

''இந்தச் சாந்தினி விஷயத்தில் உனக்கே பிடித்துப் போயிருக்கிறபோது என்னைக் கேள்வி கேட்பானேன்?''

வாளிப்பான உடல் என்கிறார்களே, அவ்வளவு அழகாகவா இருக்கிறது?



என்று கூறி விஜயாவைப் பார்த்தான்.

விஜயா சிரித்தாள். ''அது மட்டுமல்ல. இந்தப் பெண் வந்த வேளை, டாக்டர் வந்து ஒரு நல்ல செய்தியைச் சொல்லிட்டுப் போனார். என்னுடைய ரத்தத்திலே ஒரு தப்பும் இல்லையென்று தீர்மானம் ஆகிவிட்டதாம். ஈ. எஸ். ஜி. ரிப்போர்ட்டும், இருதயத்துக்கு கவலைப்படும்படியாக ஒரு கோளாறும் இல்லையென்று வந்துவிட்டதாம்,'' என்று கூறினாள்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம் விஜயா, ரொம்ப சந்தோஷம். என் மனத்திலிருந்து ஒரு பளுவான சுமை இறங்கின மாதிரி இருக்கிறது,'' என்று தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான் ராஜு. மேலும் அவன், ''இந்தப் பெண் வந்த வேளையினால் அல்ல விஜயா. சித்தப்பா ஒரு மகான். அவர் ஆசீர்வாதம்தான் நமக்கு எல்லா நன்மையும் செய்கிறது. அவர் என்னிடம் கீதைப் புத்தகத்தையும், தேவியின் துதிப் பாடலையும் கொடுத்துச் சென்றார். அதைத் தினமும் படிக்கச் சொல்லியிருந்தார். அதை இரண்டு நாட்களாக விடாமல் படிக்கிறேன். அதைப் படிக்க ஆரம்பித்ததிலிருந்தே மனத்துக்கு ஓர் ஆறுதல் விஜயா. 'நம்பிக்கையால் மலைகளையே நகர்த்தலாம்' என்று சொல்கிறது ஒரு ஆங்கிலப் பழமொழி. வைத்தியத்தால் சாதிக்க முடியாததை பக்தி சாதிக்க இயலும் அல்லவா? என் பக்தியினாலே உன் கால்களுக்கு வலு ஏற்பட்டு, நீ நடந்தாலும் நடக்கலாம் விஜயா,'' என்று உணர்ச்சியோடு சொன்னான் ராஜு.

அவனது ஆர்வத்தையும், உன்னதமான அன்பையும் கண்டு விஜயாவுக்கு மனம் நிறைந்தது. இவ்வளவு நல்ல கணவர்மீது நமக்குச் சந்தேகம் ஏற்பட்டதே என்று தன்னையே வெறுத்துக் கொண்டாள். ''இப்படி வாருங்கள்,'' என்று கணவனை அழைத்தாள்.

ராஜு மெள்ளக் கட்டிலை நோக்கி நகர்ந்தான். விஜயாவின் மெலிந்த கரங்கள் அவன் கழுத்தை அணைத்தன.

''என்னை மன்னித்துவிடுங்கள். என்னை மன்னித்து விடுங்கள். இவ்வளவு நல்லவருக்கு என்னால் எவ்வளவு வேதனை! எவ்வளவு சோதனை!'' என்று தன்னையே நொந்தபடி அழுதாள். அடுத்த விநாடியே, ''அம்மா,'' என்று அழைத்தபடி கௌரி அறையின் உட்புறம் நுழைந்தாள்.

அவளைத் தொடர்ந்து மோகினியும்

கையில் பிஸ்கட், காப்பி வைத்த ஒரு தட்டுடன் நுழைந்தாள்.

அறையில் நுழைந்ததும் மோகினி, அங்கு கணவனும், மனைவியும் இருக்கும் அன்னியோன்ய நிலையைக் கவனித்தாள்.

அந்த ஒரு விநாடியில் மோகினியின் மனத்தில் புரியாத ஒரு வெப்பம் ஏற்பட்டது. சிறு குழப்பமும் ஏற்பட்டது. முதல் நாளே தவறு செய்துவிட்டோமே, இந்தச் சமயத்தில் அறையினுள் நுழைந்து இருக்கக்கூடாதே என்று நினைத்தாள்.

அறையைவிட்டு வெளியேறத் திரும்பினாள். அதற்குள் விஜயாவின் குரல், ''சாந்தினி! அந்த ட்ரேயை மேஜை மீது வைத்துவிட்டுப் போ,'' என்று கட்டளையிட்டது. சாந்தினி தலைகுனிந்தபடியே ட்ரேயை மேஜைமீது வைத்துவிட்டு அறையைவிட்டு வெளியே போகத் திரும்பினாள். அதற்குள் விஜயாவும் ராஜுவும் பிரிந்து உட்கார்ந்திருந்தனர். கணவனும் மனைவியுமாக அவர்கள் இருந்த அன்னியோன்னியம் அவள் நெஞ்சில் ஒருவிதப் படபடப்பையும் சிறு கோபத்தையும் உண்டு பண்ணியது. இந்த உணர்ச்சி எப்படி அவள் மனத்தில் நுழைய முடிந்தது என்று அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது.

மோகினி, சாந்தினியாக மாறு பெயரில் அந்த வீட்டில் வாழ்ந்த அந்த முதல் இரண்டு நாட்களில், அவளுக்குப் பயமும் வேதனையும்தான் அனுபவிக்கக் கிடைத்தன. குழந்தை கௌரியின் அன்பு ஒன்றுதான் அவளுக்கு ஓர் ஊன்று கோல்போல் இருந்தது.

குழந்தை கௌரி எப்படித் தொடர்ச்சியாக இந்தச் சூது நாடகத்தில் தன் பாகத்தை நடிக்கப் போகிறாள்!

திடீரென்று தன்னையும் மறந்து அவள் உண்மையை உளறிவிட்டால் என்ன ஆகும் என்று பயந்தாள். ஆனால் மோகினியின் பயம் வீண் பயம் என்று இரண்டு நாட்களில் புரிந்துவிட்டது. கௌரி ஒரு முறைகூட மோகினியை, அவள் உண்மைப் பெயரில் அழைக்கவில்லை. எப்போதும், ''டீச்சர்!'' என்றுதான் கூப்பிட்டாள்.

மோகினியை 'டீச்சர்' என்று அழைப்பதை விஜயாவும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை.

குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவளை, ''டீச்சர்!'' என்று குழந்தை அழைப்பதில், தவறு இருப்பதாக யார் கருத முடியும்? மில் விவகாரங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் ராஜு வீட்டிலே அதிகமாகத் தங்குவதில்லை. அது மோகினிக்குப் பெரிய நிம்மதியைக் கொடுத்தது. வீட்டின் உட்புறமுள்ள திறந்த வெளியில் விஜயா ஒரு பூப்பந்து ஆட்ட மைதானம் தயார் செய்து அதில் கௌரிக்குப் பொழுது போக்குக்காக வலை கட்டிப் பூப்பந்து ஆடக் கற்றுக் கொடுக்கும்படி உத்தரவிட்டிருந்தாள்.

தினமும் காலையிலும் மாலையிலும் அந்தப் பாட்மிண்டன் கோர்ட்டில் மோகினி, கௌரிக்கு ஆட்டம் கற்றுக் கொடுப்பாள்.

அதை மாடியிலிருந்து, சக்கர நாற்காலியில் அமர்ந்து கவனிப்பாள் விஜயா.

ஒருநாள் மாலை நான்கு மணிக்கு ராஜு வீடு திரும்பியபோது, கௌரியும் சாந்தினியும் பந்தாடிக் கொண்டிருந்தனர். மாடிப் பால்கனியிலிருந்து விஜயா கவனித்து ரசித்துக் கொண்டிருந்தாள். கௌரி ஒவ்வொரு பந்தையும் வலையிலே அடித்துக் கொண்டிருந்தாள்.

பால்கனியில் இருந்தபடி கவனித்துக் கொண்டிருந்த விஜயாவுக்குத் தன் மகள் ஆடத் தெரியாமல் ஆடுவது கோபமாக இருந்தது. ''கௌரி! அப்படி மடத்தனமாக ஆடாதே. பந்தை எப்பவும் தூக்கிப் போட்டு ஆடணும். முறத்தாலே தட்டுகிற மாதிரி தட்டுகிறாயே?'' என்று கண்டித்தாள்.

கௌரிக்குக் கோபம் வந்தது. ''நீ சும்மா இரும்மா. எனக்குத் தெரிஞ்சபடி நான் ஆடறேன்,'' என்று பதில் சொன்னாள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ராஜு உடனே குறுக்கிட்டு, ''கௌரி! நான் ஆடிக் காட்டுகிறேன். நீ பார்த்துவிட்டு, அதே மாதிரி ஆடவேண்டும்,'' என்று சொல்லிவிட்டு பாட்மிண்டன் கோர்ட்டில் இறங்கினான்.

கௌரி மட்டையைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு, கோர்ட்டுக்கு வெளியே வந்தாள்.

ராஜு, ''எங்கே சாந்தினி, சர்வீஸ் போடு,'' என்று சொன்னான்.

மோகினிக்குக் குழப்பமாக இருந்தது. முதலாளியோடு ஆடுவதா என்று ஒரு முறை பால்கனியில் உட்கார்ந்திருக்கும் விஜயாவைப் பார்த்துவிட்டு, பந்தை எடுத்து சர்வீஸ் போட்டாள்.

உடனே ராஜு, தன் கையில் உள்ள பேட்டை நீட்டி, மறுபடியும் மோகினியின் பக்கம் பந்தை அடித்தான்.

www.tamilbooksworld

இவ்வாறு மாறி மாறிப் பந்து இரு புறமும் சென்று கொண்டிருந்தது. மோகினியும் கூச்சத்தை விட்டு ஆட்டத்தில் பூரா கவனத்தையும் செலுத்தி ஆடினாள்.

ராஜுவும் மோகினியும் வலையின் இரு பக்கமும் ஓடி ஓடிப் பந்தைத் தட்டிக் கொண்டிருந்தனர். மோகினி ராஜுவின் ஆட்டத்துக்குச் சற்றும் சளைக்கவில்லை. ராஜு எப்படியாவது பந்தை மோகினியின் கோர்ட்டில் போட முயன்றான். முடியவில்லை. ''அப்பா! டீச்சர் நல்லா ஆடுவாங்க. உங்களைத் தோற்கடிச்சுடுவாங்க. ஜாக்கிரதை,'' என்று கூச்சல் இட்டபடி ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தாள் கௌரி.

மாடியிலிருந்து விஜயாவும் மெய்ம்மறந்து ஆட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வலிமையும் வனப்பும் நிறைந்த கணவன், அழகே உருவான சாந்தினியோடு ஆடும் அந்த ஆட்டம், விஜயாவின் கண் முன்னால் தான் இழந்தது, அவள் கணவன் இழந்து நிற்பது யாவற்றையும் ஒருங்கே சேர்த்துக் கொண்டு வந்து நிறுத்துவதுபோல் தெரிந்தது.

எவ்வளவு அழகாக ஆடுகிறாள் இந்தச் சாந்தினி என்று நினைக்கும்போதே, வலிமையிழந்த தன் கால்களைப் பார்த்துக் கொண்டாள். வேதனை உண்டாயிற்று.

ராஜு இடமும் வலமுமாகப் பந்தைப் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால் ஒன்றுகூடத் தப்பாமல் திரும்பி வந்து கொண்டிருந்தது. 'பெரிய 'செம்பியன்' நான். என்னையே திணற அடிக்கிறாளே' என்ற ஆத்திரத்துடன் ஆட ஆரம்பித்தான் ராஜு.

கோர்ட்டில் அங்கும் இங்கும் ஓடிப் பந்துகளைத் திருப்பிக் கொண்டிருந்த மோகினிக்குத் தன் முந்தானை நழுவியது கூடத் தெரியவில்லை. அதே சமயத்தில் ஒரு பந்து நேராக ராஜுவின் பேட்டை நோக்கி வந்தது. தன் ஆத்திரம் பூராவையும் அந்தப் பந்தின்மீது செலுத்தி மட்டையால் பந்தை ஓங்கி அடித்தான். அந்தப் பூப்பந்து மோகினியைத் தாக்கிற்று. மோகினியின் கையிலிருந்த மட்டை நழுவியது. அவள் அப்படியே செயலற்று ராஜுவை நோக்கினாள். அவனும் அவளை நோக்கினான்.

அவளை இப்போது ஒரு வேலைக்காரியாக நோக்கவில்லை. ஒரு பெண்ணாக, ஓர் அழகியாக அவளைக் கண்டான். இவர்கள் இருவரையும் பால்கனியில் இருந்து விஜயா நோக்கினாள்.

(தொடரும்)

**Statement about ownership and other particulars about newspaper KUMUDAM**

FORM IV (*See Rule* 8)

| | |
|---|---|
| 1. Place of publication | 83, Purasawalkam High Road, Madras 10 |
| 2. Periodicity of its publication | Weekly |
| 3. Printer's Name | P. V. Parthasarathy, M.A., B.L. |
| Nationality | Indian |
| Address | 83, Purasawalkam High Road, Madras 10 |
| 4. Publisher's Name | P. V. Parthasarathy, M. A., B.L. |
| Nationality | Indian |
| Address | 83, P. H. Road, Madras 10. |
| 5. Editor's Name | S. A. P. Annamalai, M. A. B.L. |
| Nationality | Indian |
| Address | 83, P. H. Road, Madras 10. |
| 6. Names and addresses of individuals who own the newspaper and partners or Shareholders holding more than one per cent of the total capital | S. A. P. Annamalai, M.A., B.L. 6, Hunters Road, Madras-7. |

I, (P. V. Parthasarathy) hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 14-2-66 *Signature of Publisher* (Sd) P. V. Parthasarathy

# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்



மாடி பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த விஜயாவுக்குப் புது அதிர்ச்சி ஏற்பட்டது. இதுதான் முதன் முறையாகத் தன் கணவன் வேறொரு பெண்ணை உற்றுக் கவனித்ததை அவள் கவனிக்கும்படி ஆயிற்று.

விஜயாவுக்குக் கல்யாணமான வருஷத்தில் அவர்களிருவரும் குற்றாலத்துக்குப் போயிருந்தபோது, ஒரு பிரபல நடிகை அவர்கள் தங்கியிருந்த பங்களாவுக்கு அடுத்த பங்களாவில் தங்கியிருந்தாள். அவள் அடிக்கடி விஜயாவின் வீட்டுக்கு வந்து செல்வாள். ஒவ்வொரு முறை அந்த நடிகை பேசும்போதும், அவள் கண்கள் விடாமல் ராஜுவையே கவனித்தபடி இருக்கும். உதடுகள் மட்டும்தான் விஜயாவிடம் பேசிக் கொண்டிருக்கும். அருவியில் குளிக்கப் போகும்போது நடிகையும் விஜயாவைப் பின் தொடர்வாள். ஏதாவது சளசளவென்று பேசிக்கொண்டே இருப்பாள். ஒருமுறை, திறந்த மார்போடு ராஜு குளிக்க அருவியருகில் வந்தபோது அந்த நடிகை ராஜுவின் ஆண்மையில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு, நாம் எங்கு இருக்கிறோம் என்பதையே மறந்து நின்ற காட்சி, விஜயாவுக்கு ஆத்திரத்தை விளைவித்தது. ராஜு ஒன்றும் உணராமல் அவளைத் தாண்டிச் சென்று அருவியில் குளிக்க ஆரம்பித்தான்.

ராஜுவிடம் விஜயா அன்றிரவு பேசுகையில், அந்த நடிகையின் அழகைப் பற்றியே பேசினாள். ராஜு விஜயாவின் சூழ்ச்சி மனத்தைப் புரிந்து கொள்ளாமல், ''என்ன விஜயா! அந்த நடிகை அவ்வளவு அழகு என்றா சொல்கிறாய்? அவளுக்கு எப்படி சினிமாவில் சான்ஸ் கொடுத்தார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அவள் சிரிப்பதும், அவள் நெளிப்பதும், அவள் குலுங்கிக் குலுங்கி நடப்பதும் வேடிக்கையாகவும் பரிதாபமாகவும் இருக்கிறது,'' என்றான்.

அதற்கு விஜயா, ''அப்படியா? அவளுடைய கவர்ச்சிக்காகவே அவளுக்கு லட்ச ரூபாய்க்கு மேல் ஒரு படத்துக்குத் தருகிறார்கள். நாடே அவளை விரும்பிப் பார்க்கக் கூடுகிறதாம். இன்று அருவியில் அவ்வளவு கூட்டம் கூடியிருந்தது யாருக்காகத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

ராஜு உண்மையிலேயே புரியாமல் விழித்தான். ''அப்படியா? அப்போது அவள் அழகாகத்தான் இருக்க வேண்டும். எனக்குத்தான் புரியவில்லை,'' என்று சூதில்லாமல் அமைதியாகச் சொன்னான்.

அதே சமயத்தில் அவர்கள் தங்கியிருந்த அறைக்கு அந்த நடிகையே வந்தாள். அவளுக்கு அன்பளிப்பாக யாரோ மங்குஸ்தீன் பழங்களும், தித்திப்புப் பலகாரங்களும் கொண்டுவந்து கொடுத்தார்களாம். அவற்றில் சிலவற்றை விஜயாவுக்குக் கொடுத்துப் போக வந்தாள். ராஜு இம்முறை அவளையே முறைத்துப் பார்த்தான். அந்த நடிகைக்கு அது மகிழ்ச்சியையே கொடுத்தது. அவள் அர்த்தம் மிகுந்த புன்னகையை ராஜுமீது வீசிவிட்டு நகர்ந்தாள்.

அவள் போனதும் விஜயா, ''என்ன நீங்க அப்படிப் பாக்கறீங்க?'' என்று கடிந்து கொண்டாள்.

அதற்கு ராஜு குழந்தை போல், ''விஜயா! இப்போதுதான் நான் அவளை நல்லா கவனித்தேன். நெற்றி அழகாகத்தான் இருக்கு. உதடுகள் சற்றுப் பருமனாக இருக்கின்றன. உடல்கட்டு எல்லாம் கூட நன்றாகத்தான் அமைந்திருக்கிறது. அதனால்தான் ஜனங்களுக்கு அவளை மிகவும் பிடித்துப் போயிருக்குமென்று நினைக்கிறேன்,'' என்றான்.

''உங்களுக்கு...?'' என்று விஜயா கேட்டாள்.

''எனக்குப் பிடித்தது...'' என்று சொல்லிவிட்டு ராஜு விஜயாவின் உதடுகளை விரல்களால் தொட்டு மூடினான்.

## அத்தியாயம் 30

அந்தக் கடந்த காலக் காட்சிகள் விஜயாவின் நினைவுக்கு வந்தன. அன்று அவன் அந்த நடிகையைப் பார்த்தது போல், இன்று இந்தச் சாந்தினியை உற்று நோக்குவதை அவள் கவனித்தாள். அவன் பார்வை சாந்தினியின் மீதே நின்றதை பால்கனியில் இருந்து விஜயா பார்த்தாள். அன்று அவன் பார்த்தபோது அதில் புரளிதான் இருந்தது. இன்று அவன் குழப்பத்தோடு சாந்தினியைப் பார்த்தான். அந்த நடிகையை ஆராய்ச்சி நோக்கோடு கவனித்தான். ஆனால் சாந்தினியை அவன் கவனித்தது வெறும் ஆராய்ச்சி அல்ல. அந்தப் பார்வையில் ஆச்சரியம், ஒருவிதமான விண்ணப்ப உணர்ச்சி தெரிந்தது.

அதே சமயத்தில் மோகினிக்குத் தன்னுடைய முதலாளி தன்னைக் கவனிப்பதைப் பார்த்தபோது, முதலில் அது கூச்சத்தைக் கொடுத்தாலும், அது மறைமுகமாக அவளுக்கு ஒரு புரியாத இன்பத்தையும் கொடுத்தது.

''சாந்தினி!'' என்ற இடியோசை போன்ற குரல் மாடியிலிருந்து கேட்டவுடன்தான் மோகினி இந்த உலகத்துக்கு வந்தாள்.

உடனே அவசர அவசரமாக முந்தானையைச் சரி செய்துகொண்டு, தலை தூக்கி எஜமானியம்மாளைப் பார்த்து, ''என்னம்மா வேண்டும்?'' என்று பணிவன்போடு கேட்டாள்.

விஜயா பால்கனியில் இருந்தபடியே, ''சாந்தினி! எனக்கு மருந்து கொடுக்க வேண்டாம்? அதை மறந்துட்டு விளையாடிக்கொண்டு இருக்கியே?'' என்று கடுமையாகக் கேட்டாள்.

''இதோ வந்துட்டேம்மா. கௌரி! கௌரி! நீ அப்பாவோடு ஆடு.'' என்று மட்டையைக் கௌரியிடம் கொடுக்கப் போனாள்.

ஆனால் உடனே ராஜு அவளைத் தடுத்தான். ''பரவாயில்லே சாந்தினி. நான் போய் மருந்து கொடுக்கிறேன். நீ குழந்தையோடு விளையாடிக்கிட்டு இரு,'' என்று சொல்லிவிட்டு மட்டையைக் கௌரியிடம் கொடுத்துவிட்டு மாடியை நோக்கிச் சென்றான்.

சாந்தினி எஜமான் சொல்வதைக் கேட்பதா, எஜமானி சொல்வதைக் கேட்பதா என்று புரியாமல் திகைத்துப் போய் மாடியைப் பார்த்து நின்றாள்.

மாடி பால்கனியிலிருந்து விஜயா, ''சரி, சாந்தினி, நீ விளையாடு,'' என்று உத்தரவிட்டாள்.

சாந்தினி பேட்மின்டன் கோர்ட்டில் இறங்கி விளையாட ஆரம்பித்தாள். ராஜு மாடி அறைக்குச் சென்று மருந்தை எடுத்து ஊற்றிக்கொண்டு வந்து, பால்கனியில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த விஜயாவிடம் கொடுத்தான். விஜயா மருந்தை வாங்கிக் குடிக்கும்போது ராஜுவின் முகத்தையே கவனித்தாள். அவன் என்ன நினைக்கிறான் என்பதை அவளால் கண்டு கொள்ளமுடியவில்லை. மருந்தைக் குடித்து விட்டு அவுன்ஸ் கிளாஸை ராஜுவிடம் கொடுத்தாள்.

''சாந்தினி நல்ல ஹெல்தி கேர்ல் இல்லே?'' என்று ராஜுவைப் பார்த்துக் கேட்டாள்.

ராஜு ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தான். விஜயா விஷயத்தை அதோடு விடவில்லை.

''சாந்தினி நல்ல அழகி இல்லையா?'' என்று மறுபடியும் கேட்டாள்.

ராஜு சற்றுப் படபடப்புடன், ''அவள் எப்படி இருந்தா எனக்கு என்ன? விஜயா! இது என்ன அர்த்தமில்லாத கேள்வி?'' என்று கடுமையாகச் சொல்லி விட்டு பால்கனியைவிட்டு நகர்ந்தான்.

விஜயா எதிர்பார்த்தது வேறு. அன்று குற்றாலத்தில் நடிகையை அழகி என்று சொன்னபோது ராஜு, 'அவள் அழகி என்றா சொல்கிறாய்?' என்று குழந்தை போல் திருப்பிக் கேட்டான். அதே பதிலை இன்று ராஜு சொல்லியிருந்தால் விஜயாவுக்குத் திருப்தியாக இருந்திருக்கும். அவன் அந்தக் கேள்விக்குக் கோபமாகப் பதில் சொன்னது விஜயாவின் மனத்தில் சந்தேகத்தைக் கிளறியது. ராஜு, சாந்தினி அழகி என்று ஒப்புக்கொள்வதில் ஒரு வித தப்பும் இல்லை, அந்த அழகு அவன் மனத்தைக் கவராத வரையில். சாந்தினியின் அழகு ராஜுவைப் பாதிப்பதனால்தானே, அந்தக் கேள்வியைக் கேட்டதும் அவன் எரிச்சலுடன் பதில் சொல்கிறான் என்று நினைத்தாள். விஜயாவின் நிம்மதி குலைந்தது.

வேகமாகச் சக்கர நாற்காலியைக் கைகளால் தள்ளிக்கொண்டு ஹாலுக்குள் வந்தாள். அப்போதுதான் ராஜு ஒரு டவலுடன் பாத் ரூமுக்குள் சென்று கொண்டிருந்தான். அந்த மாடி ஹாலை அடுத்த பாத்ரூமின் ஜன்னலிலிருந்து பேட்மின்டன் கோர்ட் தெரியும். பாத்ரூம் கதவு மூடியதும் விஜயாவுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ஒரு வேளை ராஜு பாத்ரூமில் இருந்தபடி பேட்மின்டன் கோர்ட்டில் விளையாடிக் கொண்டிருக்

கும் சாந்தினியைக் கவனிக்கிறாளே? பாத்ரூமில் சில விநாடிகளுக்கு நிசப்தம் நிலவியது. ஒருவர் உண்மையிலேயே குளிக்கப் போனால், உடனே தண்ணீர் கொட்டும் சப்தமல்லவா கேட்க வேண்டும்? விஜயாவின் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்வது போல் பாத்ரூம் அறையிலிருந்து ராஜுவின் குரல் கேட்டது.

ராஜு பேட்மின்டன் கோர்ட்டிலிருக்கும் கௌரியிடம் பேசிக் கொண்டிருந்தான். ''கௌரி! நீ விளையாடினது போதும். உடனே ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுப் படிக்கப் போ,'' என்று உத்தரவிட்டான்.

''இன்னும் கொஞ்சம் நேரம் விளையாடறேம்ப்பா,'' என்று கீழேயிருந்த குழந்தையின் குரல் கேட்டது.

குழந்தையின் குரலைத் தொடர்ந்து சாந்தினியின் குரல் கேட்டது: ''போதும் கௌரி. அப்பா சொல்றபடி செய். இன்னிக்கிக் கோவிலுக்குப் போகவேண்டாம்?''

''சரி டீச்சர்,'' என்று வேண்டாவெறுப்புடன் கௌரி கூறுவதும் கேட்டது.



மோகினியின் மனம் படபடத்தது. நெஞ்சில் ரத்தம் நிறைந்து மூச்சுத் திணறியது.

அப்புறம் நிசப்தம் நிலவியது. பாத்ரூமில் தண்ணீர் பாத்டப்பில் கொட்டும் ஒலி கேட்டது. உண்மையிலேயே ராஜு, சாந்தினி விளையாடுவதைக் கவனிக்கும் நோக்கத்தில் பாத்ரூமுக்குள் சென்றிருந்தால் அவன் அங்கிருந்து கூச்சல் போடுவானா? இல்லை, ஆடுவதை நிறுத்தச் சொல்லிக் கட்டளைதான் இடுவானா? ராஜுவின் செல்வமென்ன? அவனுக்குள்ள சந்தர்ப்பங்கள் எவ்வளவு? அவன் தவறு செய்ய நினைத்தால் அவனை யார் தடுக்க முடியும்? 'என்ன அவலட்சணமான சந்தேகம் என் மனத்தைப் பிடித்துக் கொண்டது? எனக்கு உடல் மட்டும் ஊனமாகவில்லை, என் மனமும் ஊனமாகிவிட்டது,' என்று தன்னைத் தானே வெறுத்துக் கொண்டாள்.

சக்கர நாற்காலியைத் தள்ளியபடி படுக்கை அருகில் வந்து படுக்கையில் படுத்துக் கொண்டாள். 'எனக்கு மட்டும் நடக்கும் சக்தி இருந்தால் நான்மட்டும் பழையபடி இருந்தால் ஏன் இவ்வளவு வேதனை?' என்று நினைத்து வருந்தியபடி அழுது கொண்டிருந்தாள்.

பாத்ரூம் கதவு திறந்து ராஜு குளித்து விட்டு டிரஸ்ஸிங் ரூமுக்குள் நுழைவதைப் பார்த்தாள். அவன் படுக்கையில் படுத்து அழுது கொண்டிருக்கும் விஜயாவைக் கவனிக்கவில்லை.

"அம்மா! அம்மா!" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் விஜயா.

ஒரு தட்டின்மீது ஒரு கிளாஸ் டம்ளர் நிறைய ஹார்லிக்ஸ் கலக்கி எடுத்துக் கொண்டுவந்து சாந்தினி நின்று கொண்டிருந்தாள். "ஹார்லிக்ஸ் சாப்பிடுங்கம்மா. குழந்தைக்கு ஹார்லிக்ஸ் கொடுத்திட்டேன்," என்று அவள் சொன்னாள்.

படுத்திருந்தவிஜயா படுக்கையிலிருந்து மெள்ள எழுந்திருக்க முயன்றாள். அதற்குள் சாந்தினி ஹார்லிக்ஸை அங்குள்ள மேஜையில் வைத்துவிட்டு, விஜயாவைத் தூக்கிவிட்டாள். விஜயா சாந்தினியை முறைத்துப் பார்த்தபடி எழுந்து உட்கார்ந்தாள். சாந்தினி விஜயாவைத் தூக்கி உட்கார்த்தி வைக்கும்போதே டிரஸ்ஸிங் அறையிலிருந்து ராஜு வெளி வந்தான்.

தன்னைச் சாந்தினி தூக்கி உட்கார்த்தி வைக்கும் காட்சியை ராஜு பார்க்கும் படி ஆகிவிட்டதே என்ற ஆத்திரம் சாந்தினியின் மீது கோபமாகத் திரும்பியது விஜயாவுக்கு.

சாந்தினி ஹார்லிக்ஸை நீட்டிவிட்டு ராஜுவை நோக்கித் திரும்பினாள். "உங்களுக்குக் காப்பி கொண்டு வரவா, இல்லை ஹார்லிக்ஸா, இல்லை ஓவல்டினா?" என்று பணிவோடு கேட்டாள்.

விஜயா, "போதும். நீ ஹார்லிக்ஸ் கொண்டு வந்திருக்கிற லட்சணம். பச்சைத் தண்ணி மாதிரி இருக்கு. சமையல்காரங்கிட்ட சொல்லிக் கொஞ்சம் சூடா கொண்டு வரக்கூடாது? உனக்குத்தான் பேட்மின்டன் விளையாடவே பொழுது சரியாகப் போகுது. இதெல்லாம் கவனிக்க நேரம் ஏது?" என்று எதையாவது சொல்லிப் பொங்கும் ஆத்திரத்தைக் காட்ட நினைத்தாள்.

அதற்குள் ராஜு ஹார்லிக்ஸ் கிளாஸை எடுத்தான். அது சூடாக இருப்பதை ஸ்பரிசத்தால் உணர்ந்தான். "இது தான் சூடாக இருக்கே விஜயா?" என்று சாதாரணமாகக் கேட்டான்.

"நான் சூடு இல்லேன்னு சொல்றேன். அது சூடா இருக்குன்னு சொன்னா என்ன அர்த்தம்? நான் சொல்றது பொய்யா? சாந்தினி! போய் ஹார்லிக்ஸைச் சூடு பண்ணிக் கொண்டா போ," என்று கட்டளையிட்டாள்.

சாந்தினி சூடாக இருக்கும் ஒன்றை இன்னும் எப்படிச் சூடு செய்வது என்று புரியாமல் தவித்து நின்றாள். ராஜுவுக்கு விஜயாவின் கோபம் அர்த்தமற்றது என்று நன்றாகத் தெரிந்தது. இருந்தாலும் அவன் அதைச் சொல்லிப் பயன் இல்லை. கூடப்பாடித்தான் ஆக வேண்டும் என்பதை உணர்ந்திருந்தான்.



"ஆபீஸ் லிப்ட் மெஷின் கெட்டுப் போய்விட்டதாம்."

## லெனின்  தின்ற மைக்கூடு

ருஷ்யப் புரட்சி வீரர் லெனின் சிறையில் இருந்தபொழுது மிகவும் ரகசியமாகத் தன் சகாக்களுக்குச் செய்தி அனுப்பினர். தான் படிக்கும் புத்தகங்களின் அச்சிடப்பட்ட வரிகளுக்கு மத்தியில் உள்ள காலியான இடங்களில் சுத்தமான பசும் பாலில் செய்திகளை எழுதி அனுப்பிவிடுவார். அந்தத் தாள்களைச் சூடாக்கினால் எழுத்துக்கள் தோன்றும். அதற்காக ரொட்டியை மைக்கூடு போல் செய்து அதற்குள் பாலை ஊற்றி வைத்துக்கொண்டு எழுதுவது வழக்கம். காவலாளிகள் வந்தால் அந்த ரொட்டியை அவசர அவசரமாகத் தின்றுவிடுவார். இது பற்றி ஒருமுறை வேடிக்கையாக, ''இன்று நான் எட்டு மைக் கூடுகளைத் தின்றுவிட்டேன்,'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆதாரம்: வி. இ. லெனின் வாழ்க்கை வரலாறு.

—எஸ். சக்திதாசன்

ஆகையால் ராஜு அன்போடு சாந்தினியின் பக்கம் திரும்பி, ''சாந்தினி! அம்மா குடிக்கிலென்று போய்ச் சுட வைச்சுத்தான் கொண்டு வாயேன்,'' என்று தன் கண்களால் கெஞ்சினன்.

சாந்தினி ஒன்றும் பேசாமல் ஹார்லிக்ஸை எடுத்துக் கொண்டு ராஜுவைப் பார்த்து, ''உங்களுக்கு என்ன கொண்டு வர்றது?'' என்று கேட்டாள்.

''எது கொண்டு வந்தாலும் சரி,'' என்று ராஜு சொன்னன்.

சாந்தினி அறையைவிட்டு வெளியே சென்றதும் ராஜு, ''வீணுக ஏன் இப்படி மனசை அலட்டிக்கிறே? பொறுமையா இரு விஜயா,'' என்றன்.

''பொறுமையாக இல்லாமல் இப்போ என்ன பண்ணிட்டேன்?'' என்று கேட்டாள் விஜயா.

''மூன்னூறு ரூபாய் சம்பளத்துக்கு ஒரு ஆளைப் போட்டுட்டு, மூனு ரூபாய்ச் சம்பளத்துக் கூலிக்காரி மாதிரி விரட்டினேன்ன, பொறுத்துக்குவாளா?'' என்று கேட்டான் ராஜு.

''உங்களுக்கு ஏன் சாந்தினியைச் சொன்ன, இவ்வளவு கோபம் பொத்துக்கிட்டு வருது?''

''கோபமில்லே விஜயா...'' என்று ஏதோ சொல்லப் போகுமுன்பே சாந்தினி அறையில் நுழைந்தாள்.

ராஜு பேச்சை நிறுத்திக் கொண்டான். ஹார்லிக்ஸை விஜயாவிடம் நீட்டினுள் சாந்தினி. விஜயா, ''ஹார்லிக்ஸை அதுக்குள்ளேயும் சுட வச்சுட்டியா?'' என்று கேட்டாள்.

அதற்குச் சாந்தினி, ''இல்லேம்மா. அவருக்காகச் சூடாப் போட்டு இருந்த ஹார்லிக்ஸை உங்களுக்கு எடுத்துக்கிட்டு வந்தேன்,'' என்றள்.

''அவருக்கு ஆறிப்போன ஹார்லிக்ஸைத் திருப்பி எடுத்திட்டு வந்தியா?''

''இல்லேம்மா, அவருக்கு ஓவல் கொண்டு வந்திருக்கேன். அதுதான் அவருக்குப் பிடிக்கும்,'' என்று சொல்லி நிறுத்தினுள் சாந்தினி.

விஜயா, ''ஓகோ, ஓவல்தான் அவருக்குப் பிடிக்கும்னு உனக்கு எப்படித் தெரியும்? இந்த வீட்டிலேயே பல வருஷம் இருந்த மாதிரிப் பேசறியே?'' என்றுள்.

அதற்குச் சாந்தினி, ''இல்லேம்மா. தினமும் இந்த நேரத்துக்கு அவர் ஓவல்தான் கேக்கறுரு. எனக்காவது ஒரு நாள்தான் காப்பி குடிக்கிறுரு,'' என்று கூறினுள்.

''சரி சரி. அதை வைச்சுட்டுப் போ,'' என்று சொன்னுள் விஜயா.

சாந்தினி ஓவல்டினை ராஜுவின் முன்னல் வைத்துவிட்டு நகர்ந்தாள். ராஜு தலை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தான். சாந்தினி சென்ற பின்பு சில வினுடிகளுக்கு அங்கு மௌனம் நிலவியது.

''ஓவல்டினைச் சாப்பிடுங்க,'' என்றுள் விஜயா.

ராஜுவின் முகம் சிவந்திருந்தது. ''வேண்டாம் விஜயா. என்னை உட்கார வைத்துக்கொண்டு நீ அவளைக் குறுக்கு விசாரணை செய்வது அவளுக்கு அவமானமா இருக்காதா? என் கௌரவத்துக்குத்தான் அது குறைச்சல், என் ஆண்மைக்கே அது கேவலமாய் இருக்கும்னு உனக்குத் தோணவில்லையா விஜயா?'' என்று சொல்லிவிட்டு நாற்காலியிலிருந்து எழுந்தான் ராஜு.

''இன்றைக்குத்தான் நான் இப்படி முதன் முறையாக நடந்துக்கறேனு? இதுக்கு முன்னலே நான் கோபப்பட்டதில்லையா? இதுவரையிலும் நீங்க உங்க ஆண்மைக்குக் கேவலம் ஏற்பட்டதாகச் சொன்னதே இல்லையே!'' என்று படபடப்புடன் கேட்டாள் விஜயா.

அப்போதுதான் ராஜுவுக்கும் ஓர் உண்மை புலனாயிற்று. மற்ற வேலைக்காரர்கள் முன் விஜயா பொறுமை இழந்து பேசியது, அவனைப் பாதிக்கவில்லை. சாந்தினியின் முன்பு பேசிய போது அவன் ஆண்மை இழந்து கோழையாக இருப்பது போல் தோன்றியது. சாந்தினியின் முன்னால் மட்டும் அவன் ஆண் மகனாகக் காட்சியளிக்க வேண்டும் என்று ஏன் விரும்பினான் என்று அவனுக்கே புரியவில்லை.

''சரி சரி. நான் ஏதாவது சொன்னால் உனக்கு இன்னமும் கோபம் அதிகமாகும். நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்,'' என்று சொல்லி வெளியே போனான்.

அவன் படிக்கட்டில் இறங்கும்போது சாந்தினி படிக்கட்டில் ஏறிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் அவனுடைய கண்களைச் சந்தித்தன. ராஜுவின் பார்வை சாந்தினியை ஊடுருவிற்று.

அவன் அவளைத் திரும்பிப் பார்ப்பான் என்று எதிர்பார்க்காத சாந்தினிக்கு அவன் திரும்பிப் பார்த்தது வெட்கத்தைக் கொடுத்தது. வேகமாக மாடி ஹாலுக்குள் நுழைந்தாள். அங்கு அவள் ராஜுவுக்கென்று எடுத்து வந்த ஓவல்டின் சாப்பிடப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்ததும், உள்ளத்தில் வேதனை ஏற்பட்டது.

பணம், பொருள், அந்தஸ்து, மனைவி, ஒரு படை போன்ற ஆட்கள்— இவ்வளவையும் பெற்றிருக்கும் ராஜுவைப் பார்த்து, எந்தவித ஆதரவுமில்லாத, அனாதையான மோகினி ஏன் பச்சாதாபப்பட வேண்டும்? குழந்தை கௌரி பள்ளியில் சேர்ந்தபோதும், மோகினிக்கு அவள்மீது பச்சாதாப உணர்ச்சிதான் ஏற்பட்டது. கௌரியின் கெஞ்சும் கண்கள்தான் அன்று அவள் மனத்தை இழுத்தன. இன்றும் கௌரியின் தந்தையின் அதே கண்கள்தான் அவள் மனத்தில் ராஜுவின்மீது பச்சாதாப உணர்ச்சியைக் கொடுத்தன. பரிதாப உணர்ச்சி மட்டும்தானா, அதோடு துணையாக வேறு உணர்ச்சியும் இருந்ததா? படிக்கட்டில் ராஜுவைக் கடந்து வந்த போது மோகினியின் மனம் படபடத்தது. அவள் நெஞ்சில் ரத்தம் நிறைந்து அவள் மூச்சுத் திணறியது. நெற்றி வியர்த்தது. விரல்கள் துடித்தன. இது நாள்வரை மோகினி அவள் அழகே அவளுக்குச் சத்துரு என்றுதான் நினைத்து வந்தாள். ஏன் அழகாய்ப் பிறந்தோம் என்று மனம் நொந்திருக்கிறாள். ஆனால் இன்று விஜயாவின் அறையில் கண்ணாடியில் அவள் பிம்பத்தைப் பார்த்த போது அவளுக்கே திருப்தி ஏற்பட்டது. ஓர் இறுமாப்பும் பிறந்தது.

எதிரே பட்டும், சரிகையும், வைரமும் மின்ன, காலிழந்து கிடக்கும் விஜயாவை நோக்கினாள். மோகினியின் மனக்கண் முன் விஜயா இருளடைந்த இறந்த காலத்தின் சின்னமாகவும், தான் ஒளிமயமான எதிர் காலத்தின் முத்திரையாகவும் தோற்றம் அளித்தாள். 'யாருடைய இறந்த காலம், யாருடைய எதிர்காலம் நான்?' என்ற நினைவு வந்ததும் தன் சிந்தனைகள் பாபமானவை என்று மோகினியின் அடிப்படைப் பண்பு அவளுக்கு அறிவுறுத்தியது.

''என்ன கண்ணாடியிலே அழகு பார்த்துக்கிட்டு நிக்கறே சாந்தினி?'' என்று விஜயா கேட்டதும் கற்பனை மேகங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்த மோகினி, பூமிக்கு வந்தாள்.

''என்னம்மா, என்ன வேணும்?'' என்று பணிவோடு கேட்டாள்.

விஜயா அவளைக் கொடூரமாகப் பார்த்துவிட்டு, ''சாந்தினி! சின்னப் பொண்ணு நீ. கனவு காணாதே. கனவு காணறவங்க ஒரு நாள் கண்ணீர் சிந்த வேண்டி வரும்,'' என்று அர்த்தம் தொனிக்கக் கூறினாள்.

மோகினி ஒன்றும் பதில் சொல்லாமல் மேஜைமீது வைக்கப்பட்டிருந்த கண்ணாடி டம்ளர் முதலியவற்றை எடுத்துக்கொண்டு வெளியே செல்ல அடி எடுத்து வைத்தாள். அறைக் கதவருகே சென்றவளை விஜயா, ''சாந்தினி! இங்கே வா,'' என்றழைத்தாள்.

மறுபடியும் மோகினி விஜயாவை நோக்கி நடந்து வந்தாள்.

''இப்படி உட்கார்,'' என்று கட்டிலில் ஓர் இடத்தைக் காட்டினாள் விஜயா.

மோகினி உட்கார்ந்தாள். கட்டிலின் ஸ்ப்ரிங்கு மோகினியின் பளுவுக்கு ஈடு கொடுத்துத் தொய்ந்தது. விஜயா, ''சாந்தினி! உன் கையை இப்படிக் கொடு,'' என்று கேட்டாள்.

மோகினி பயத்தோடு நீட்டிய கையைத் தடவிப் பார்த்தாள். தன் கையில் நோயின் காரணமாக ஏற்பட்ட சுருக்கங்களும், உலர்ந்து போன வரட்சியுமே இருப்பது அவளுக்குத் தெரிந்தது. விஜயா பெருமூச்சு விட்டாள். ''தங்கத்தினால் ஆன வாழைத் தண்டு போல இருக்கு வழவழன்னு...''

மோகினி பதில் சொல்லவில்லே. விஜயா திடீரென்று மோகினியின் தோளைப் பிடித்து உலுக்கி, ''சாப்பாட்டுக்கு வசதியில்லாத ஏழை நீ. உனக்கு எப்படியடி இவ்வளவு அழகு வந்து சேர்ந்தது?'' என்று கேட்டாள்.

விஜயாவின் குரலிலிருந்து அவள் எவ்வளவு தூரம் தன்னை வெறுக்கிறுள் என்பதைப் புரிந்து கொண்ட மோகினிக்கு, ஏதாவது சூடாகப் பதில் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

''என்னம்மா செய்யறது? அழகு தேடியா வருது? தானு ஏற்படுது. பண்பு நிறைந்த நல்ல மனசுதாம்மா உடலைச் செழிப்பாக்குது,'' என்ருள்.

''எனக்குப் பண்பு இல்லே, கெட்ட மனசுன்னுதானே சொல்றே?'' என்று ஆத்திரத்துடன் மோகினியின் கன்னத்தில் அறைந்தாள் விஜயா.

மோகினிக்கு ஒரு விநாடிக்கு ஒன்றும் தோன்றவில்லே. அப்படியே முறைத்துப் பார்த்தபடி நின்ருள். விஜயா கூச்சலிட்டபடி, ''ஏண்டி! பேசாமல் நிக்கறே? ஏதாவது சொல்லேண்டி, உனக்கு உணர்ச்சி இல்லே? நான் கன்னத்திலே அறைஞ்சேன். உனக்குக் கோபம் வரல்லியா? பதிலுக்கு நீ அடிக்கமாட்டியா? ஏண்டி, அப்படியே பாத்துக்கிட்டு நிக்கறே?'' என்று அடுக்கிக் கொண்டே போனுள். மோகினி புன்முறுவல் செய்தாள். ''ஏண்டி சிரிக்கறே? உனக்குக் கோபமே வராதா?'' என்று விஜயா கேட்டாள்.

''சிரிக்காம என்னம்மா பண்றது? அடிச்சவங்க நீங்க. அடிபட்டவளேவிட அதிகமாத் துடிக்கறீங்களே, அது போருதா உங்களுக்கு?'' என்று சொல்லிவிட்டு எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

விஜயாவிடம் வேலேக்காரர்கள் பயந்திருக்கிருர்கள், விஜயாவிடம் வெறுப்பைக் காட்டியிருக்கிருர்கள். ஆனல் யாரும் இதுவரை அவளே அலட்சியப் படுத்தியதில்லே. விஜயா மனம் குமுறியபடி படுக்கையில் கிடந்தாள்.

(தொடரும்)





# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 31

மோகினி சென்றபின் விஜயாவின் சிந்தனைகள் பல கோணங்களில் சென்றவண்ணம் இருந்தன. மோகினியின் அமைதியான பதில் விஜயாவின் மனத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது. 'அடிச்சவங்க நீங்க, அடிபட்டவளைவிட அதிகமாகத் துடிக்கிறீங்களே? அது போருதா உங்களுக்கு?' என்று மோகினி சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப விஜயாவின் மனதில் எழுந்தபடி இருந்தன. 'இந்த சாந்தினிக்கு வலிமை உடலில் மட்டும் இல்லை. அவளுக்குத் திடமான மனமும் இருக்கு. செல்வம் இல்லை, வாழ்வில் அனாதை, என் வீட்டு வேலைக்காரி, அவளுக்கு இருக்கும் மனோ பலம்கூட எனக்கு இல்லையே!' என்று வருந்தினாள் விஜயா. சாந்தினியின்மீது அளவில்லாத வெறுப்பு ஏற்பட்டது. அதோடு அவளுக்கு சாந்தினியிடம் ஒரு பயமும் ஏற்பட்டது. 'இவள் ஒரு சாதாரண வேலைக்காரியல்ல. உள்ளத்தளவில் தன்னைவிட உயர்ந்தவள்,' என்ற கசப்பான உண்மை விஜயாவுக்குப் புலப்பட்டது.

அதே சமயத்தில் வீட்டை விட்டு வெளியேறிய ராஜு தன் மனத்தோடு போராடியபடி நடந்து சென்று கொண்டிருந்தான்.

பேட்மின்டன் கோர்ட்டில் அவன் பலமாகப் பூப்பந்தை அடித்ததும், அதுபோய் சாந்தினியின் மார்பில் விழுந்ததும், அவள் ராஜுவை லஜ்ஜையோடு பார்த்ததும் அவன் ஞாபகத்துக்கு வந்தன. சற்று முன் சாந்தினி படிக்கட்டில் ஏறி வரும்போது, அவள் அவனைக் கடந்தபோது, அவனுடைய பார்வையில் விழுந்த அவளுடைய தோளும், புஜமும், அந்தத் தந்தக் கழுத்தும், அவனுக்குப் புரிந்தன. ஆனால் மறந்து விட்ட நினைவுகளை எழுப்பின. படிக்கட்டின் உச்சியிலிருந்து அந்த சாந்தினி பார்த்த பார்வை அவன் கண்முன் அகலாமல் நின்றது.

நடந்து கொண்டே ராஜு ஒரு பூங்காவின் வெளிப்புறம் உள்ள மைதானத்தை நெருங்கினான். பல வருடங்களுக்கு முன் அதே மைதானத்தில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் அவன் பங்கெடுத்துக் கொண்டு விளையாடியது அவன் ஞாபகத்துக்கு வந்தது. அங்கு அவன் விஜயாவை முதன் முதலாகச் சந்தித்தான். விஜயா அவனை யாரோ ஓர் ஏழை என்று நினைத்து, தன் காரில் ஏறிக் கொள்ளச் சொல்லி அழைத்ததும் ஞாபகத்துக்கு வந்தது. அன்று அவன் பணமில்லாதவனாக ஒரு பெண்ணுக்குத் தோற்றமளித்ததும், அந்தப் பெண் அவனை அவனுக்காகவே விரும்பிய இன்பமும் இன்று நடந்தது போல் தோன்றின. சுபாவத்திலேயே கர்வியாக இருந்த விஜயா, அவன் ஏழை என்று நினைத்த நிலையிலும் அவனிடம் எவ்வளவு பயத்தோடும், ஆசையோடும், பணிவோடும் நடந்து கொண்டாள்! அந்தச் சில மாதங்களில் தான் விஜயாவின் சிறந்த பண்பையெல்லாம் அவன் கண்டான்.

அந்தக் காலத்தில் விஜயாவும் ராஜுவும் சந்தித்த ரகசிய சந்திப்புகளில், விஜயா காட்டிய ஆர்வம் அவளைக் கூச்சம் அற்றவளாகக்கூடத் தோற்றமளிக்கச் செய்தாலும், அவள் ஆசையின் தன்மை புனிதமானது என்பதில் சந்தேகமில்லை. பணத் திமிர் பிடித்த



விஜயா, அவள் ஏழை என்று நினைத்த ராஜுவிடம் முழுச் சரணாகதியடைந்தாள். துணிக்கடை மாடிக்கு, கையில் பலகாரங்களுடன் திருட்டுத்தனமாக வருவாள் அப்போதெல்லாம். குழந்தைக்கு ஊட்டுவது போல் பலகாரங்களை அவனுக்கு ஊட்டுவாள். அவனுடைய உடலைப் பிடித்து விடுவதில் அவளுக்கு அலாதி இன்பம். புழுதி படிந்த அந்தத் துணிக்கடை மாடி அறையில் இன்பமாக இருக்கும்போது அவன் தோள்மீது சாய்ந்தபடி அவள் சொன்ன வார்த்தைகள் இப்போது ஞாபகத்துக்கு வந்தன. ''இன்பத்தின் எல்லைக்கே என்னைக் கொண்டுபோய்விட்டீர்களே. இனிமேல் நான் வாழவே விரும்பவில்லை. இப்படியே உங்கள் தோள்மீது சாய்ந்தபடியே இறந்து விட்டால் போதும். என் வாழ்வு பூரணத்துவம் அடைந்துவிடும்,'' என்று விஜயா சொல்வாள்.

அவள் உடல் அடைந்த எல்லையில்லா மகிழ்ச்சியில் பிறந்த வார்த்தைகள் அவை! அதை ஒரு பெண்தான் கூறமுடியும். ஏன் என்றால் அவளுக்குத்தான் ஆண் பெண் உறவில் நிறைவு காணமுடியும். அந்த நிறைவை எல்லாப் பெண்களும் வாழ்நாள் பூராவும் அடைவதில்லை. ஆயிரத்தில் ஒருவருக்கு அது ஏற்படுகிறது. அந்த நிறைவு ஏற்படும்போது அவளுக்கு அது ஓர் 'உடல் முக்தி'யாகி விடுகிறது. அவள் பரம்பொருளில் கலந்த ஒரு பக்தன் போல் ஆகிவிடுகிறாள். அவள் பின்பு வேறு ஒன்றும் வேண்டுவதில்லை. அந்த நிறைந்த இன்பத்தைப் பெண்ணுக்குக் கொடுத்தவன் அவளது கணவனாகாமல், வெறும் காதலனாக மட்டும் இருந்துவிட்டால் அந்தப் பெண் சீரழிந்து வாழ வேண்டி வருகிறது.

ஆனால் விஜயாவின் அதிருஷ்டம் ராஜு அவள் காதலனாகவும் பிறகு கணவனாகவும் மாறினான். உடல் அடையக்கூடிய இன்பம் இவ்வளவுதான் என்று ஆண்டவன் ஒரு கணக்கு வைத்திருந்தானோ, என்னவோ! விஜயா அந்த எல்லையைத் தாண்டிவிட்டாள் போலும்! இன்பப் போதையான வாழ்வு முடிந்து, அவள் காலிழந்து நொண்டியாகிவிடும்படி ஆகிவிட்டது. அப்புறம் கணவனோடு விஜயா

அந்த இன்பத்தின் எல்லையையே அடையவில்லை. அந்த நிலை அவனைப் பொறுத்த வரையில் வெறும் ஞாபகமாகவே இருந்தது.

ராஜுவைப் பொறுத்தவரையில் அவனுக்கும் விஜயாவுக்கும் ஏற்பட்ட தொடர்பில் அவனுக்கு 'உடல் முக்தி' கிடைத்ததா என்பது சந்தேகம். அவன் அவளிடம் பரிவு காட்டினான். அவளிடம் மிகவும் பொறுமையாக இருந்தான். அவளுடைய கோபப் புயல்களைச் சகித்துக் கொண்டான். ஆனால் அவன் பொறுமைக்குக் காரணம், அவன் குற்றவாளி என்று தன்னைத்தானே நினைத்துக் கொண்டதுதான். குழந்தை பிறந்ததால் விஜயாவுக்கு ஊனம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் தானல்லவா என்று நினைத்தான். அதோடு, 'என்றோ எப்போதோ நாம் பெரிய தவறு செய்திருக்கிறோம். அதனால்தான் நமக்கு இந்தக் கஷ்டம்,' என்று நினைத்தான். அவன் தந்தை வெங்கடபதியின் மன அமைப்பு ராஜுவுக்கு இருந்திருந்தால் அவன் அவ்வளவு வருந்தியிருக்க மாட்டான். நடந்ததைப்பற்றிச் சிந்திக்காமல் அடுத்து நிகழ வேண்டியவற்றைப்பற்றி மட்டும் கவலைப்படும் வெற்றி வியாபாரியின் மன அமைப்பு ராஜுவுக்கு இல்லை.

ராஜுவுக்கு, அவன் சித்தப்பா குழந்தைச்சாமியைப் போல் ஒரு சிந்தனையாளன் மனம்தான் இருந்தது. ஒரு வேளை அவனுக்கும் குழந்தைச்சாமியைப் போல், போலீஸ் விசாரணை முதலிய சோதனைகள் ஏற்பட்டிருந்தால் அவனும் சாமியாராக மாறி இருப்பான். அவன் கொண்டிருந்த உடல் வலிமை, உள்ளத்தில் அடிக்கடி காம இச்சைகளை, முற்றுப்பெறாத தணியாத வேட்கைகளை, ஏற்படுத்தியது. அவனுடைய மன வலிமையும், இயற்கைப் பண்புமே அந்த வேட்கைகளை அவ்வப்போது தணித்தும் வந்தன. அவன் ஒழுக்கம் தவற வாய்ப்புகளும் செல்வமும் இருந்தும், கட்டுப்பாட்டுடன் சீலமாக வாழ்ந்ததற்கு அவன் மன உறுதிதான் காரணம். அந்த மன உறுதியையே குலைத்தது சாந்தினியின் அழகு. உள்ளத்துக்குக் கட்டுப்படாமல்கூட உடல் இயங்க முடியுமா என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது.

சாந்தினியை மறக்க வேண்டி, உடலை வருத்தி வியர்வைவரும் வரையில் நடந்து போய்க் கொண்டேயிருந்தான் ராஜு. கால் சளைக்கும்வரை நடந்து கொண்டே கோயமுத்தூரிலிருந்து பீளமேடுவரை வந்துவிட்டதை உணர்ந்தான். பிறகு மறுபடியும் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தான். வழியில் ஒரு நண்பர் காரில் செல்லாமல் கால் நடையாகச் சென்று கொண்டிருக்கும் ராஜுவைப் பார்த்ததும் தன் காரை நிறுத்தினார். ''என்ன ராஜு நடந்து போறீங்க? கார் பிரேக் டவுனா?'' என்று கேட்டார்.

ராஜு அசடு வழிய, ''இல்லை. சும்மா இப்படியே வாக்கிங் வந்தேன்,'' என்று சொல்லிச் சமாளித்தான்.

வீடு திரும்பும்போது மணி எட்டாகியிருந்தது. உடனே பாத்ரூமுக்குச்சென்று குளித்துவிட்டு வந்து சாப்பிட உட்கார்ந்தான். வேலைக்காரன் பரிமாறிய போது தலைகுனிந்தபடி சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு மாடி ஏறும்போது மாடிப்படியை அடுத்த அறையில் கௌரி சாந்தினியிடம் பாடம்படித்துக்கொண்டு இருந்தாள். கம்பராமாயணத்தில், சீதை மிதிலையில் நுழையும் ராமனைக் கண்ட காட்சியைப் பாடமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் மோகினி. அந்தக் காட்சியை அவள் மனம் லயித்துக் கூறியபடி இருந்தாள். ராஜு படிக்கட்டில் நின்று கேட்டான்.

உட்புறமிருந்த கௌரி கேட்டாள்: ''தோள் கண்டார் தோளே கண்டார்னு என்ன அர்த்தம், டீச்சர்?''



டைரக்டர்:

கிணற்றிலிருந்து தண்ணீர் இழுக்கிறமாதிரி சும்மா ஒரு போஸ் கொடுக்கச் சொன்னால் கிணற்றையே கீழே தள்ளிட்டிங்களே!

''ஸ்ரீ ராமரின் அழகான தோள்களைப் பார்த்தவங்க அதையே பார்த்தபடி இருந்தாங்க. வேறே எதையும் பார்க்கவில்லை, கௌரி,'' என்றாள் மோகினி.

''அது எப்படி டீச்சர் முடியும்? தோளை மட்டும் பார்க்க முடியுமா? தோளைப் பார்த்தா கழுத்து தெரியாதா? மூஞ்சி தெரியாதா, டீச்சர்?'' என்று கௌரி கேட்டான்.

''கௌரி, நீ குழந்தை. உனக்கு இப்போ அதெல்லாம் புரியாது.''

''எனக்கு எப்போ புரியும் டீச்சர்?''

கௌரிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள் சாந்தினி. ''நீ பெரியவனானப்புறம் புரியும். ராமர் தோள் ரொம்ப அழகாயிருந்தது. அதனாலே அதைப் பார்த்தவங்க அதையே பார்த்திட்டிருந்தாங்கன்னு கம்பர் சொல்றாரு.''

''அழகான தோள்னா அது எப்படி இருக்கும் டீச்சர்?''

''ராமர் ஒரு பெரிய வீரர். அதனாலே அவர் தோள் உயர்ந்து பலம் பொருந்தியிருந்தது...'' என்று சொல்லிக் குழம்பி நிற்கும்போதே, ராஜுவின் கால்கள் அவனைக் கௌரி பாடம் படித்துக் கொண்டிருக்கும் அறைக்கு வெளியே கொண்டு வந்துவிட்டன. கௌரியோ சாந்தினியோ அறைக்கு வெளியே ராஜு நிற்பதைக் கவனிக்கவில்லை.

கௌரி, ''டீச்சர், எங்கப்பா தோளும் தொட்டுப் பார்த்தால் கல் மாதிரி இருக்கும். ராமர் தோள் மாதிரி எங்கப்பா தோளும் அழகானதுதானே?'' என்று கேட்டான்.

''சரி. உங்கப்பா தோளுமாதிரின்னு வச்சுக் கொள்ளேன்,'' என்று சொல்லும்போது சாந்தினி தலை நிமிர்ந்து பார்த்தாள். ராஜு நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளுடைய முகம் வெட்கத்தால் சிவந்தது. ராஜுவும் குழப்பமடைந்தான்.

மோகினியின் குழப்பம் சற்றுக் கோபமாக மாறியது. அதைப் புரிந்து கொள்ளாமல் கௌரி தந்தையைப் பார்த்ததும் ''அப்பா, ராமர் தோள் மாதிரிதான் உங்க தோள். டீச்சரை வேணும்னா கேட்டுப் பாருங்கப்பா,'' என்று சொன்னான்.

ராஜு, ''சரி, சரி. என்ன சாந்தினி, குழந்தைக்கு இந்தப் பாடம்தானா சொல்லித் தரணும்? வேறே கணக்கு, இங்கிலீஷ் ஏதாவது சொல்லித் தரக்கூடாது?''என்று சொல்லிவிட்டு நகரப் போனான்.

சாந்தினிக்கு ஒன்றும் ஓடவில்லை. பாடத்தைத் தொடர்ந்து சொல்லித் தரவே அவளால் முடியவில்லை. டீச்சரின் குழப்பத்தைக் கண்டு கௌரிக்கு வேதனையாயிருந்தது. அப்பாவின்மீது கோபம் வந்தது. ''என்னப்பா, டீச்சர், உங்க தோள் ராமர் தோள் மாதிரி இருக்குன்னு சொன்னா உங்களுக்குக் கோபம்வருது! சந்தோஷம்னா வரணும்?'' என்று தந்தையைக் கேட்டான்.

ராஜுவின் கடுகடுப்பு மறைந்தது. அவன் திரும்பி, சாந்தினியைப் பார்த்தான். அவளது பார்வையில் இருந்த பயத்தைக் கவனித்தான். 'என் மனதில்

தெரிந்த முதுகுகள்
விடை:

1. விஷ்ணுராம்மேதி
2. மைசூர் மகாராஜா
3. ராஜஸ்ரீ
4. எம். ஜி. ஆர்.
5. கென்னடி
6. ஸ்வரன் சிங்
7. ஸ்ரீப்ரகாசா
8. சா. கணேசன்
9. பிரம்மானந்த ரெட்டி




இஸ்லாமிய கலீபாக்களில் ஒருவரான ஹஜ்ரத் அலி அவர்களிடம் ஒரு யூதன் ஓடோடி வந்தான். அப்பொழுது ஹஜ்ரத் அவர்கள் தொழுகைக்காகப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். ''மக்கள் தலைவ! ஒரு சந்தேகம். இஸ்லாம் ஒரு பகுத்தறிவு மதம் என்கிறீர்கள். அதே சமயத்தில் எல்லாவற்றையும் 'விதி' என்ற ஒன்று தனது அமைப்புக்குள் அடக்கியிருப்பதாகவும் நம்புகிறீர்கள் இது முரண்பாடல்லவா? விதி என்றால் என்ன? பகுத்தறிவு என்றால் என்ன? விளக்கம் தாருங்கள்,'' என்று கேட்டான் வந்தவன்.

ஹஜ்ரத் அவர்கள், ''இதற்குத்தானா இவ்வளவு அவசரமாக ஓடிவந்தாய்? தொழுதுவிட்டு வந்து பதில் சொல்லுகிறேன்,'' என்றார்கள். யூதன் இசையவில்லை. ''தந்திர

இருக்கும் களங்கத்துக்காக டீச்சரிடம் குற்றம் சொல்வானேன்' என்று ராஜு நினைத்தான். ''அதில்லே, தமிழ் படித்தால் மட்டும் போருது. இங்கிலீஷும் கணக்கும் சொல்லிக்கரணும்னு சொன்னேன்,'' என்று சொல்லிவிட்டு மாடியை நோக்கி நகர்ந்தான் ராஜு.

மாடியில் விஜயா உணவருந்திவிட்டுப் படுக்கையில் படுத்திருந்தாள். ராஜு உள்ளே நுழைந்தான்.

''வாக் போயிருந்தேன். திரும்பிவர நேரமாயிட்டது. நீ மருந்து சாப்பிட்டியா?'' என்றான்.

''ஆச்சு. சாந்தினியை விட்டு மருந்து கொடுக்கச் சொன்னேன்,'' என்று சொல்லிவிட்டு விஜயா கணவன் முகத்தில் நோட்டம் விட்டாள்.

ராஜு எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் படுக்கையில் சாய்ந்து அருகில் ஷெல்பில் வைத்திருந்த ஒரு புத்தகத்தைப் பிரித்தான். அது. டி. எச். லாரன்ஸ் எழுதிய 'லேடி சாட்டர்லீஸ் லவர்' என்ற நாவல்.

நான் அடிக்கடி விரும்பிப் படிக்கும் 'லேடி சாட்டர்லியின் காதலன்' என்ற நாவலுக்கும் தன் வாழ்க்கைக்கும் உள்ள ஒற்றுமையை நினைக்க ராஜுவுக்கு வியப்பாக இருந்தது.

''என்னங்க, எப்போ பார்த்தாலும் அந்தப் புஸ்தகத்தையே படிச்சிட்டிருக்கிங்களே. அதிலே என்ன அவ்வளவு சுவாரசியம்?'' என்று விஜயா கேட்டாள்.

''அப்படி ஒன்றும் சுவாரசியமான புஸ்தகமல்ல. ஏதாவது பொழுது போகணுமில்லே. அதனாலேதான் படிக்கிறேன்.''

''அதைப் பார்த்தால் பொழுது போக்குப் புஸ்தகமாத் தெரியல்லியே, என்ன கதைங்க அது?'' என்று கேட்டாள். அந்த நாவலின் கதையை ராஜு விஜயாவிடம் சொல்ல விரும்பவில்லை. ''அப்புறம் சொல்றேன் விஜயா.''

''இல்லே, இப்பவே சொல்லுங்க. ஏன் அந்தக் கதையை மூடி வைக்கிறீங்க?''

ராஜுவுக்கு ஆத்திரம் வந்தது. ''நான் ஒன்றும் மூடி வைக்கவில்லே. நான் இப்போ கதை சொல்கிற 'மூட்லே' இல்லே,'' என்று எரிந்து விழுந்தான்.

ராஜுவின் குரல் அவனையும் அறியாமல் கூச்சலாக மாறியிருந்தது.

மனைவியைப் பார்த்துக் கணவன் கூச்சலிடும் சமயத்தில் சாந்தினி இரண்டு பால் டம்ளர்களுடன் நுழைந்தாள்.

தன்னிடம் உரத்த குரலில் பேசும் போது, இந்தப் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறளே என்ற ஆத்திரம் விஜயாவுக்கு வந்தது.

அவள் சாந்தினியிடம் திரும்பி, ''உள்ளே வர்ரப்போ கதவைத் தட்டிட்டு உத்தரவு கொடுத்தாத்தான் வரணும்,'' என்று கண்டித்தாள்.

''கதவைத் தட்டினேன். உங்க காதிலே விழல்லிங்க. இனிமேல் கூப்பிட்டுட்டே வர்ரேன்,'' என்று பதில் சொன்னாள்.

''வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லாதே. கௌரி எங்கே?'' என்று கேட்டாள் விஜயா.

''குழந்தை என்னோடவே படுத்துக்கிறேன்னு சொன்னும்மா.''

''உன்னோடு ஒன்றும் படுக்க வேண்டாம். உடனே அவளை மாடிக்கு வரச் சொல்லு.''

''சரிம்மா,'' என்று சொல்லிவிட்டு வெளியே போகும்போது ராஜு சாந்தினியையே பார்த்தபடி இருந்தான்.

(தொடரும்)

www.tamilbooksworld

மாகத் தப்பிக்கவா? முடியாது! இப்பொழுதே பதில் சொல்லுங்கள்!'' என்றான்.

ஹஜ்ரத் அவர்கள் அவனிடம், ''சரி! உனது வலது காலைத் தூக்கு!'' என்றார்கள். யூதன் தனது வலது காலைத் தூக்கியபடி நின்றான். ''சரி! இப்பொழுது நீ தூக்கிய காலைக் கீழிறக்காமலே இடது காலையும் தூக்கு!'' என்றார் கலீபா.

''இது எப்படி முடியும்? முடியாதே!'' என்றான் பரிதாபமாக அந்த யூதன்.

''உன்னால் ஒற்றைக் காலை மட்டுமே தூக்க முடிந்தது. அதுதான் உனது பகுத்தறிவு. மற்றொரு காலைத் தூக்காமல் திண்டாடுகிறாயே, அதுதான் விதி!'' என்று கூறிவிட்டு ஹஜ்ரத் அவர்கள் மேலே நடந்தார்கள்.

(காரை ஏ. எம். அலி எழுதிய 'கதையுலக மன்னன் அலெக்ஸாந்தர் டுமாஸ்' என்ற நூலிலிருந்து.)

—மு. அழகு தம்பி



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 32

ராஜு புத்தகம் படிக்கத் தன் அருகில் வைத்திருந்த டேபிள் விளக்கின் மங்கிய ஒளியில் மோகினி அணிந்திருந்த சந்தனக் கலர்ச் சேலை, உடம்போடு ஒட்டி உடம்பு நிறமாகவே இருந்தது. ராஜுவின் பார்வையில் அவள் சந்தனப் பாவைபோலத் தோன்றினாள்.

ராஜு அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்த விஜயா, ''என்ன அவளையே முறைச்சுப் பார்க்கறீங்க?'' என்று கேட்டாள்.

இந்த வார்த்தைகள் அறையைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த மோகினியின் காதில் விழுந்தன.

வெளியே சென்று நின்றாள்.

''விஜயா, சாந்தினியை உனக்குப் பிடிக்கவில்லையானால் போகச் சொல்லிவிடு. பொருத்தமில்லாமல் ஏதாவது பேசாதே.'' என்று கோபமாகக் கண்டித்தான் ராஜு.

''எனக்குப் பிடிக்கல்லேன்னு போகச் சொல்லிடுன்னு சொல்றீங்களே. அப்போ உங்களுக்கு அவளைப் பிடிச்சிருக்குன்னு சொல்லுங்க,'' என்று பதில் சொன்னாள் விஜயா.

ராஜு அதற்குப் பதில் சொல்லவில்லை.

''ஏன் பேசாமல் இருக்கீங்க? பதில் சொல்லுங்க,'' என்று தொடர்ந்து கேட்டாள்.

''விஜயா, உன் சந்தேகம் அர்த்தமில்லாத ஒரு சந்தேகம். அந்தப் பெண் அழகாக இருப்பது, அவள் குற்றமுமல்ல, அது என் குற்றமும் இல்லை.''

''காலில்லாமல் நொண்டியாகக் கிடக்கிறேனே, அதுதான் என் குற்றம்.''

''அவள் இருப்பதனால் உனக்கு வேதனை ஏற்படுகிறதே என்றுதான் சொல்கிறேன். அவளை அனுப்பிவிடுவோம். அவளுக்குத் தேவையான பணம் கொடுத்து வேண்டுமானால் அனுப்பி விடுவோம். அவளால் நமக்குள் ஏன் சச்சரவு ஏற்பட வேண்டும்?'' என்று தணிவாகச் சொன்னான் ராஜு.

படிக்கட்டருகில் நின்று ராஜுவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த மோகினிக்கு அவை பெரும் வேதனையைத் தந்தன. 'கூசாமல் அவளை அனுப்பி விடுவோம் என்று சொல்கிறாரே. என்னைப்பற்றி அவருக்கு அக்கறையே இல்லையா?' என்று நினைத்து வருந்தினாள். வீட்டைவிட்டு வெளியே அனுப்பி விடுவார்களோ என்று பயந்தாள்.

ஆனால் அடுத்த விநாடியே விஜயா சொன்ன வார்த்தை அவளுக்கு ஆறுதல் அளித்தது. ''அவளை ஏன் இங்கிருந்து அனுப்ப வேண்டும்? அவ்வளவு அழ[illegible] கானவள் இந்த வீட்டில் இருக்கும் போதுதானே உங்கள் உறுதியைப் பர் சோதிக்க முடியும்? உங்களுக்கு என் மீதுள்ள அன்பு உண்மையானதா என்று நான் எப்படித் தெரிந்து கொள்வது? அதற்காகவாவது அவள் இந்த வீட்டில் இருக்கட்டும்,'' என்று கடுமையாகச் சொன்னாள். ராஜுவுக்கு இந்தப் பதில் ஆத்திரத்தைக் கொடுத்தது.

''விஜயா, அன்பை இழக்க ஒரே ஒரு வழி என்ன தெரியுமா? அதைத் தொடர்ந்து பரிசோதிப்பதுதான். இத்தனை வருஷங்களில் உனக்கு என் அன்பைப்பற்றிப் புரியவில்லை என்றால் உனக்கு இனிமேலா நம்பிக்கை வரப்போகிறது?'' என்று மனம் கசந்தபடி கூறிவிட்டு எழுந்து அடுத்த அறைக்குச் சென்றான்.

இந்த விபரீத உரையாடலைக் கேட்ட மோகினிக்கு, பெண்கள் இப்படியும் இருப்பார்களா என்று ஆச்சரியமாக இருந்தது.

www.tamilbooksworld

கீழே இறங்கிச் சென்று கௌரியை மாடி அறைக்குக் கொண்டுவந்து தாயிடம் ஒப்பித்தாள் மோகினி. தன் அறைக்குத் திரும்பிவந்து படுத்தவளுக்குத் தூக்கமே வரவில்லை. இந்தப் பொய் வாழ்க்கையை எப்படியாவது முடித்து விட்டு அந்த வீட்டைவிட்டு விலகிச் சென்றால் போதுமென்று தோன்றியது.

அந்த வீட்டில் நுழைந்தபோது செல்வத்தின் பளபளப்பு அவள் கண்ணைப் பறித்தது. ஆனால் அந்தப் பளபளப்பின் அடியில் முட்கள்—கூர்மையான முட்கள்— இருப்பதை உணர்ந்தாள். லட்சக்கணக்கில் சம்பாதனையுள்ள அந்த வீட்டில் உள்ளே மூன்றே ஜீவன்கள், எப்படி அமைதி இழந்து நிற்கிறார்கள் என்பதை நினைக்கவும் அவளுக்கு விசித்திரமாயிருந்தது.

பணம் ஒன்றால் மட்டும் இன்பம் அடையமுடியாது என்பது விஜயா—ராஜு விஷயத்தில் தெரிந்தது.

மறு நாள் காலை எழுந்தவுடனேயே அவளுக்கு ஒரு சோதனை காத்திருந்தது. விஜயாவுக்குச் சிற்றுண்டி எடுத்துச் சென்றபோது ராஜு டெலிபோனில் யாரிடமோ கோபமாகப் பேசிக் கொண்டிருந்தான். ''உடனே போலீஸாருக்கு ரிப்போர்ட் செய்து அந்த சின்னய்யனை அரஸ்ட் செய்யுங்கள்,'' என்று உத்தரவு பிறப்பித்தான்.

விஜயா, ''யார் அந்த சின்னய்யன்? அவன் என்ன தவறு செய்தான்?'' என்று கேட்டாள்.

''அந்த சின்னய்யன் முன்பு நமது மில்லில் உதவி மானேஜராக இருந்தான். திடீரென்று நான்கு மாதங்களுக்கு முன்பு நடத்தை சரியில்லையென்று அவனை நிறுத்திவிட்டோம். நல்லதொகை போனஸாக கொடுத்துத்தான் நிறுத்தினேன். அந்த நன்றி கெட்டவன் என்னுடைய லெட்டர் பேப்பரில் பொய்க் கடிதம் எழுதி என்னைப்போல் என் பெயரால் நடித்து பம்பாய் கல்கத்தா ஸேட்டுகளிடமிருந்து முப்பதினாயிரம்வரையில் அட்வான்ஸாகப் பெற்றுக்கொண்டு செலவழித்திருக்கிறான். பொய்க் கடிதம் எழுதுவது, பொய்ப் பெயரில் உலாவுவது, இந்த விஷயமெல்லாம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை விஜயா,'' என்று கூறினான்.

''யோக்கியதை தெரியாமல் ஆசாமிகளை வேலைக்கு வைத்துக்கொள்வதன் தொந்தரவு இது. அவனை ஏன் முதன் முதலாக மில்லில் சேர்த்தீர்கள்?'' என்று கேட்டாள் விஜயா.

''என்ன செய்வது விஜயா? சித்தப்பா சிபாரிசின் பேரில் அப்பா சாவதற்கு ஒரு மாதம் முன்புதான் அவனைச் சேர்த்தார். அவன் ஷோரனூர் மடத்தில் சித்தப்பாவுக்கு உதவியாக இருந்தவன். அவன் இப்படி நடந்து கொள்வான் என்று எப்படி நினைக்க முடியும்?'' என்று ராஜு பதிலுரைத்தான்.

''சித்தப்பா சிபாரிசு செய்த ஆளா? பின்னே எப்படி இருப்பான்?'' என்று விஜயா சொன்னவள், சிற்றுண்டியை டேபிள்மீது வைத்துக் கொண்டிருக்கும் மோகினியின்மீது பார்வை செலுத்தினாள்.

பிறகு திடீரென்று, ''என்னம்மா சாந்தினி, நீயும் சித்தப்பா சிபாரிசில் வந்தவள். உனக்கும் சாந்தினி என்ற பெயரைத் தவிர வேறு பெயர் உண்டோ?'' என்று புரளியாக விசாரித்தாள்.

விஜயா கேலியாகக் கேட்டாலும், அந்தக் கேள்வியில் இருந்த உண்மையை நினைத்து மோகினி நடுங்கிவிட்டாள்.

ராஜு உடனே குறுக்கிட்டு, ''விஜயா, சின்னய்யன் தவறுக்கு, சித்தப்பா என்ன செய்வார்? ஷோரனூர் மடத்தில் இருந்தபோது அவன் நல்லவனாகவேதான் இருந்தானாம். கோயமுத்தூர் வாழ்க்கைதான் அவனைக் கெடுத்திருக்கிறது. சித்தப்பா நல்லவர். அவர் எல்லாரிடமும் நல்லதையே பார்க்கிறார்.'' என்றான்.

மோகினி மாடி அறையிலிருந்து சத்தமில்லாமல் நகர்ந்தாள். இந்த வேதனை நாடகத்தில் புனைப்பெயர் தாங்கி நடிக்கும் வேலையை நம் தலைமீது சுமத்திவிட்டுச் சென்று விட்டாரே சாமியார் என்று மனம் வருந்தினாள்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுத்தானே தீரவேண்டும்? அவள் பெயர் சாந்தினி அல்ல, மோகினி என்று தெரிந்துவிட்டால் அப்புறம் எவ்வளவு கேவலம்? உண்மையைச் சொல்லி விடலாம் என்றால் சாமியாரையும் சம்பந்தப்படுத்தி ஆகவேண்டும். அடுத்த முறை அவர் வந்தால் அவரிடம் சொல்லி விடவேண்டும். 'போதும் இந்த நாடகம். நான் வேறு எங்காவது நிம்மதியாக வேலைசெய்ய விரும்புகிறேன்' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

கௌரி காலையில் குளித்துவிட்டு பாடத்துக்காகக் காத்திருந்தாள். அவள் முகத்தைப் பார்த்ததும் மோகினிக்கு ஒரு தெளிவு ஏற்பட்டது.

''என்ன டீச்சர், ஒரு மாதிரியா இருக்கீங்க?'' என்று கேட்டாள் கௌரி.



மோகினி, "இல்லே கௌரி. நான் சாந்தினு என்கிற பெயரிலே இங்கே வாழுறது எனக்குப் பிடிக்கல்லே. உங்கம்மாவுக்கு உண்மை தெரிஞ்சா என் நிலை என்னாகும்? உங்கப்பா என்னைப் பற்றி என்ன நினைப்பார்?" என்றாள்.

"அம்மா என்ன நினைப்பா என்கிறதைப்பற்றித்தான் கவலைப்படணும். அப்பாவைப்பற்றிக் கவலைப்படாதிங்க டீச்சர். அவருக்குத் தெரிஞ்சாலும் ஒண்ணும் செய்யமாட்டார்!"

"எனக்கென்னவோ உங்கம்மா கோபப்படறதுகூட அவ்வளவு பெரிசாத் தெரியல்லே. உங்கப்பா என்னைக் கொஞ்சம் தப்பா நினைச்சாக்கூட என்னாலே பொறுக்க முடியாது கௌரி."

"ஏன் டீச்சர் நீங்கள் அப்பா நினைக்கிறதைப்பத்திக் கவலைப்படறீங்க? நீங்க என்ன நினைக்கிறீங்க என்கிறதைப்பத்தி அவர் கவலைப்படுறாரா?" என்று கேட்டாள்.

கௌரியின் மறு கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை மோகினியால். உடனே பாடத்தைத் தொடங்கி நடத்த ஆரம்பித்தாள். பாடத்தை நடத்தும் போது உள்ள சுவாரசியத்தில் மோகினி ஓரளவு தன் உள்ளத்து வேதனைகளை மறந்தாள்.

பூமி, சுக்கிரன், செவ்வாய், சனி, போன்ற கிரகங்கள் சூரியனைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் விந்தையை மோகினி குழந்தைக்குப் படம்போட்டு விளக்கினாள்.

''இல்லே கௌரி. ஒவ்வொரு கிரகமும் திட்டமான தூரத்திலேயேதான் சென்று கொண்டிருக்கும். இந்த மாதிரி கிரகங்கள் செல்வதன் காரணம் ஓர் ஆகர்ஷண சக்தி. பூமியினுடைய ஆகர்ஷணசக்தி தான், எந்தப் பொருளை பூமியிலிருந்து வீசி எறிந்தாலும் அதை மறுபடியும் பூமிக்குக் கொண்டுவருகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி வருவதும் ஒருவிதக் கவர்ச்சிதான். புவனமே ஒரு காந்த வலை,'' என்று விளக்கினாள்.

கௌரி ஒரு விநாடி யோசித்தபடி இருந்தான். பிறகு திடீரென்று சிரித்தான். ''டீச்சர், அப்பா, அம்மாவைச் சுத்தி வர்றார். நான் அவுங்க ரெண்டு பேரையும் சு த் தி வ ர் றே ன். என்னைச் சுத்தி நீங்க. சக்கர நாற்காலியைச் சுத்தி அம்மா. இந்த வீடும் ஒரு காந்தவலைதானே டீச்சர்?''

''ஆமாம், எல்லாருமே ஒரு காந்த வலைக்குள்ளே மாட்டிட்டுத்தான் இருக்கோம் கௌரி,'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''ஏன் டீச்சர், இந்தக் கிரகங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று ஒருநாள் மோதிடாதா!''

மோகினியின் பார்வை கதவுப் பக்கம் சென்றது. மோகினி திகைத்து விட்டாள். அவள் கொஞ்சமும் எதிர் பார்க்காத உருவத்தை அங்கு பார்த்தாள். மோகினியின் பாடம் அப்படியே நின்றுவிட்'' து.

பாடம் சொல்லிக் கொண்டிருந்த டீச்சர், எதையோ பார்த்துவிட்டுப் பேச்சிழந்துவிட்டதைக் கண்ட கௌரியும் கதவுப்புறம் திரும்பி நோக்கினான்.

கதவருகில் பாருக்குட்டி அம்மாள் நின்றுகொண்டிருந்தாள். வேலையிலிருந்து தன்னை நீக்கிய அந்தப் பாருக்குட்டி அம்மாள் கோயம்புத்தூருக்கு வருவாள் என்று கொஞ்சமும் எண்ணிப் பார்க்க வில்லை மோகினி. மோகினிக்கு இருந்த ஆச்சரியத்தைவிட, பாருக்குட்டி அம்மாளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிதான் அதிகமாயிருந்தது.

தனக்கு மிகவும் பிடித்த டீச்சரை, உடனே பள்ளியிலிருந்து விலகும்படி சொன்னதே ராஜுதான். பள்ளி போஷகர் உத்தரவை மீறமுடியாதே என்று அழாத குறையாகத்தான் பாருக்குட்டி அம்மாள் மோகினியைப் பள்ளியிலிருந்து விலக்கினாள்.

'மிகவும் திறமையுள்ள மோகினியைக் குற்றம்கூறிப் பள்ளியிலிருந்து விலக்கச் சொல்லிவிட்டு, அவளையே தன் வீட்டில் வைத்து இப்போது குழந்தைக்குப் பாடம் சொல்லச் செய்திருக்கிறாரே ராஜு? இதற்கு என்ன அர்த்தம்?'' என்று புரியாமல் திகைத்தாள்.

''மோகினி, இப்போ இங்கேயா வேலை செய்கிறாய்?''

''ஆமாம். இப்போ இந்த வீட்டிலே தான் வேலை செய்யறேன்,'' என்று சொல்லிவிட்டு வணக்கம் தெரிவித்தாள் மோகினி. அதே விநாடி ராஜு மாடியிலிருந்து இறங்கி ஹால் நோக்கி வந்தவன் பாருக்குட்டி அம்மாள் நிற்பதைப் பார்த்ததும், ''வாங்க ஹெட் மிஸ்ட்ரஸ்! ஏது இவ்வளவு தூரம்? ஏதாவது பள்ளி விஷயமா வந்தீர்களா?'' என்று கேட்டான்.

''ஆமாம். பள்ளி விஷயமா டி. ஈ. ஒ ஆபீஸிலே கொஞ்சம் வேலையிருந்தது. அத்துடன், பள்ளிக்கு ஒரு புது ஹால் தேவைப்படுகிறது. அரசாங்கம் பாதிச் செலவுக்கு ஒப்புக் கொள்கிறார்கள். நீங்கள் பாதிச் செலவை ஏற்றுக் கொண்டால் அடுத்த மாசமே ஹாலைக் கட்டி முடித்துவிடலாம். இப்போ நிறையக் குழந்தைகள் படிக்கிறார்கள். இடம் போதவில்லை...''

''எ வ் வ ள வு தொகை தேவைப் படும்?'' என்று ராஜு பாருக்குட்டி அம்மாளைக் கே''டான். அவன் பார்வை பாய்ந்து நிற்கும் மோகினியின்மீது விழுந்தது.



''இதென்ன? வடை மாலையா?''

''ஆமாம். எங்க மானேஜர், வேலை மாற்றலாகி பம்பாய் ஹெட் ஆபீஸ் போகிறார். ரோஜா மாலைக்குப் பதில் இதை, அவர் கழுத்திலே போடுகிறோம். ஸ்டேஷனுக்கு ஒன்றாகத் நின்று கொண்டே போகச் சௌகரியமாக இருக்கும்!''

''நீங்கள் இருபதினாயிரம் கொடுத்தால் போதும்.''

''இவ்வளவுதானே? ஆடிட்டரை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு உடனே செக் அனுப்பிவிடுகிறேன்,'' என்று சொன்னான்.

ராஜு தொடர்ந்து, ''கௌரியை இப்போது ஸ்கூலுக்கு அனுப்பாமல், வீட்டிலேயே டீச்சர் போட்டுச் சொல்லித் தருகிறேன்.''

''மோகினிக்கும் கௌரிக்கும் பள்ளிக்கூடத்திலே இருக்கிறபோதே ரொம்ப பிடிச்சுப் போயிருந்தது. மோகினி ரொம்ப நல்லவ. ஏதோ ஒரு மனசிலே நீங்கள் அவளை வேலையைவிட்டுப் போகச் சொன்னாலும் மறுபடியும் அவளையே டீச்சராகப் பொறுக்கினது பாராட்ட வேண்டியதுதான். உங்க சித்தப்பா பாடம் சொல்லித்தந்து வளர்த்த பெண், உங்க பெண்ணுக்கு டீச்சராகிறது ரொம்பப் பொருத்தமே,'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''நீங்க யாரைப்பற்றிச் சொல்கிறீர்கள்?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் ராஜு.

''இதோ, எதிரே நிற்கிறாளே மோகினி. அவளைத்தான் சொல்கிறேன். இவள் குழந்தைச்சாமியார் வளர்த்து ஆளாக்கினவள்தானே?'' என்றாள் பாருக்குட்டி.

தந்தையின் குழப்பத்தையும் மோகினியின் பீதியையும் பார்த்த கௌரிக்குப் பயம் ஏற்பட்டது.

எப்படியாவது மோகினியைக் காப்பாற்ற வேண்டுமென்று தோன்றியது. உடனே தந்தையிடம் ஓடினாள்.

''அப்பா, பெரிய டீச்சர் மோகினி டீச்சரோடு பேசிக் கொண்டிருக்கட்டும். நான் உங்களுக்கு எல்லாம் சொல்கிறேன்,'' என்று கூறி அப்பாவின் கையைப் பிடித்து இழுத்தாள். ராஜு தலைகுனிந்து நிற்கும் மோகினியைத் திரும்பிப் பார்த்தபடி, குழந்தை கௌரி இழுக்க ஹாலுக்குச் சென்றான்.

(தொடரும்

மூத்திரப்பை பலஹீனத்தால் ஸ்திரீகள் அவதியுறுகிறார்கள்

அநேக ஆடவர்களும், ஸ்திரீகளும் 35 வயது கடந்தவுடன், ஸிஸ்டிடிஸ், பைலிடிஸ் போன்ற மூத்திரக்காய் கோளாறுகளால் தங்கள் சக்தியையும் வீர்யத்தையும் இழக்க ஆரம்பிக்கிறார்கள். இந்த மூத்திரக்காய் கோளாறுகள், முதுகு வலி, தசைகளிலும், மூட்டுகளிலும் பிடிப்பு, மற்றும் வலி எரிச்சல், அரிப்புடன் கூடிய நிரசவ மூத்திரப் பாதை, இரவிலோ பகலிலோ அடிக்கடி சிறுநீர் கழித்தல், கால்களில் வலி முதலிய உபாதைகளுக்குக் காரணமாய் இருந்து தூக்கமின்மையையும் பலஹீனத்தையும் உண்டாக்குகின்றன. 30 வருஷகாலமாய் பல லக்ஷம் பேர்கள் மூத்திரக்காய் கோளாறுகளுக்கு ஸிஸ்டெக்ஸ் (CYSTEX) உபயோகித்து வருகிறார்கள். இன்றே உங்கள் கெமிஸ்டிடம் ஸிஸ்டெக்ஸ் (CYSTEX) வாங்குங்கள். எவ்வளவு துரிதமாக குணமடைகிறீர்கள் என்பது உங்களுக்கே தெரியும். அது பூர்ண திருப்தி நிச்சயமாக அளிக்கும். உபாதை விடாது நீடிக்கும் பக்ஷத்தில், உங்கள் டாக்டரைப் பாருங்கள்.

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்ஸோடர்ம் (NIXODERM) உபயோகித்தால் முகப் பருக்கள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடர்ம் (NIXODERM) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாக மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம் (NIXODERM) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள், மேலாகப் பரவும் படை, படர் தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க, விஞ்ஞான முறையில் தயாரிக்கப் பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய இவர்களில் இருக்கும் பூச்சிகளை, கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (NIXODERM) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச்செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடர்ம் (NIXODERM) வாங்குங்கள்.

www.tamilbooksworld

## அத்தியாயம் 33



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

ராஜு அங்கிருந்து நகர்ந்ததும் மோகினியின் மனத்தில் ஓரளவு சுமை குறைந்தது. ஆனால் பூராவும் நிம்மதி ஏற்படவில்லை.

பாருக்குட்டி அம்மாளிடம் உண்மையைச் சொல்லிவிடுவதுதான் சரி என்று நினைத்தாள். "அம்மா! நான் இந்த வீட்டில் சாந்தினி என்ற பெயரில் இருக்கிறேன். அவர்களுக்கு நான்தான் மோகினி டீச்சர் என்பது தெரியாது," என்ற உண்மையைக் கூறினாள்.

பாருக்குட்டி அம்மாளுக்குப் புரியவில்லை. "என்ன மோகினி, மாறு பெயரில் இங்கு இருக்கிறாயா? இது... இது... ஏமாத்துற மாதிரி ஆகாது?" என்று கண்களைக் கொட்டியபடி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆமாம். தப்புத்தான். ஆனால் சாமிதான் என்னை இங்கே அழைச்சு வந்து, இந்த வேலையில் அமர்த்தினார். சாந்தினி என்கிற மாறு பெயரும் அவர்தான் எனக்குக் கொடுத்தார். இந்தச் சூதில் என்னை ஏன் பங்காளி ஆக்கினார் என்று எனக்கே புரியவில்லை. ஆரம்பத்திலேயே தெரியும், இது ஒரு நாள் வெளியாகிவிடும் என்று," என்று கூறினாள். பாருக்குட்டி அம்மாளுக்குக் குழந்தைச்சாமிதான் மோகினியை மாறு பெயரில் அழைத்து வந்து வேலை வாங்கிக் கொடுத்தார் என்பதைக் கேட்க, ஆச்சரியம் அதிகமாயிற்று. மோகினி பொய் சொல்கிறாள், அவள் செய்த தவறுக்குக் குழந்தைச்சாமியின் பெயரைப் பக்க பலமாக உபயோகப்படுத்துகிறாள் என்று நினைத்திருப்பாள். ஆனால் இருபது நாட்களுக்கு முன்பு குழந்தைச்சாமி ஷோரனூர் வந்தபோது சொன்ன வார்த்தைகள் அவள் நினைவுக்கு வந்தன. 'மோகினியை ஒரு நல்ல இடத்தில் அமர்த்திவிட்டேன். அவள் உலகமறியாக் குழந்தையாக இருக்கிறாள். அவள் இன்னும் ஒரு வருஷத்துக்குள் உலகத்தைப் புரிந்து கொள்வாள். அம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் அவளுக்கு வேலை பார்த்து வைத்திருக்கிறேன். அதன்
உண்மையைப் பூராவும் கேட்டால் நீங்
களே ஆச்சரியப்படுவீர்கள்,' என்று
அவர் சொன்னார்.

இந்த நாடகத்தில் குழந்தைச்சாமிக்கு
உள்ள பங்கைப்பற்றிச் சந்தேகம் ஏற்
படவில்லை. சூதுவாதில்லாத பெண்
என்று நினைத்த மோகினி, பொய்யே
தெரியாதவர் என்று நம்பிய சாமியார்
—இருவரும் சேர்ந்து அவருடைய அண்
ணன் மகன் வீட்டிலேயே இந்த
நாடகத்தை நடத்த வேண்டுமா? குழந்
தைச்சாமி மோகினிக்கு வேறு இடத்
தில் வேலை வாங்கித்தர முடியாதா?
இல்லை, ராஜுவிடம், 'மோகினியை
மறுபடியும் பள்ளியில் சேர்த்துக்
கொள்,' என்று சொல்லியிருந்தால்
ராஜு மறுத்திருப்பாரா? உலகத்தை
ஒரே சீரான அமைப்பாகப் பார்த்து
வந்த பாருக்குட்டி அம்மாளுக்கு இந்த
விஷயம் குழப்பத்தைக் கொடுத்தது.
ஆனால் குழந்தைச்சாமி கெட்ட நோக்
கத்தோடு எதையும் செய்யமாட்டார்
என்பது பாருக்குட்டி அம்மாளுக்குத்
தெரியும். அவர் செய்தது எதுவாயினும்
அதுவே சரி என்று நினைத்துப் பின்பற்று
வதே பொருத்தமானது என்பதை
உணர்ந்தாள்.

ராஜுவுக்கும் அவன் மனைவிக்கும்
தெரியாத ஓர் உண்மை நம்முடைய
பேச்சால் வெளியாகிவிட்டதே, ஒரு
வேளை ராஜு இந்த உண்மையைத்
தெரிந்த நிலையில் மோகினியை வேலை
யிலிருந்து நிறுத்திவிட்டால் என்ன செய்
வது என்ற பயமும் ஏற்பட்டது.
"மோகினி! என் பேச்சால் நீ யார்
என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்
டேன். எனக்கு ஒரே வேதனையாயிருக்

முதலாளி உன்னை வேலையைவிட்டு நீக்கிட்டா?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டு நிறுத்தினுள்.

''என்னை வேலையிலிருந்து நீக்கினு பெரிய நிம்மதியாய் இருக்குமே! முன்னூறு ரூபாய் பணத்துக்காகத் தினமும் பொய்யான வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கு. என் விஷயம் இருக்கட்டும். ஊரிலே நாராயணி அம்மாவும் சங்கரன்குட்டியும் நல்லா இருக்காங்களா?'' என்று மோகினி விசாரித்தாள்.

''அவுங்களுக்குக்கூட நீ பங்களா நாயக்கர் வீட்டிலே இருக்கிறதாகத் தெரியாது போலிருக்கு. போன வாரம் நாராயணி அம்மாளைப் பார்த்தேன். நீ கோயமுத்தூரிலே இருக்கிறதாகவும், எந்த இடத்திலேங்கிறது தெரியாதுன்னும் சொன்னுங்க. சங்கரன்குட்டி குழந்தைச்சாமியோடு மதுரைக்குப் போயிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்...'' என்று பாருக்குட்டி ஷொரனூர்பற்றிய விஷயங்களைக் கூறிக் கொண்டிருக்கும்போது ராஜு அங்கு வந்தான்.

பாருக்குட்டி அம்மாளிடம் பேசிக் கொண்டே பங்களா வாசலுக்குச் சென்ருன். ராஜு ஒருமுறைகூட மோகினியின் பக்கம் திரும்பவில்லை. பள்ளித் தலைவியை அவனுடைய காரில் ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு, நேராக மாடிக்குச் சென்றுவிட்டான்.

பள்ளித் தலைவியும் ராஜுவும் என்ன பேசினுர்கள் என்பது மோகினிக்குத் தெரியவே இல்லை. ராஜு மாடிக்குச் சென்றபின் மோகினி கௌரியைத் தனியே அழைத்துப் போய் மெள்ள விசாரித்தாள். ''அப்பா என்ன சொன்னுர் கௌரி?''

''டீச்சர்! நீங்கதான் மோகினி டீச்சர்னு தெரிஞ்சா, அப்பா உங்களைத் துரட்டிடுவாரோன்னு எனக்குப் பயமாப் போயிடுச்சு. அதுதான் அவரைத் தனியா அழைச்சிட்டுப் போய் உண்மையைச் சொல்லிட்டேன்.''

''என்ன சொன்னே கௌரி?''

''அப்பா! என்னுலே மோகினி டீச்சரைப் பிரிஞ்சு இருக்க முடியல்லே. நான்தான் தாத்தாவிடம் சொல்லி மோகினி டீச்சரை அழைச்சிட்டு வரச் சொன்னேன். டீச்சர் ஒரு தப்பும் செய்யல்லே. அவுங்களைத் திட்டாதிங்கன்னு சொல்லிட்டேன்.''

''அதுக்கு உங்கப்பா என்ன சொன்னுர்?''

''அப்பா கொஞ்ச நேரத்துக்கு ஒண்ணும் சொல்லலே. பேசாம இருந்தாரு. அப்புறம் என்னைப் பார்த்துச் சிரிச்சாரு. நான் டபக்குன்னு அப்பாவுக்கு முத்தம் கொடுத்தேன்.''

''உங்கப்பா என்னைப்பத்தி ஒன்றுமே சொல்லலியா?''

''உங்களைப்பத்தி ஒண்ணும் சொல்லலே டீச்சர். ஆனு அப்பா ஒண்ணு சொன்னுரு. கௌரி! இந்த விஷயம் அம்மாவுக்குத் தெரிய வேண்டாம்னு சொன்னுரு.'' என்று கூறிவிட்டுக் கௌரி சிரித்தபடி மாடிப்புறம் சென்ருள்.

'விஷயம் அம்மாவுக்குத் தெரிய வேண்டாம் என்ருல் என்ன அர்த்தம்? இனிமேல் அவரும் இந்த நாடகத்துக்கு உடந்தையாகப்போகிருரா? என்ன நோக்கத்தோடு அவரும் விஷயத்தை மூடிவைக்க விரும்புகிருர்? ஒரு பெண் ஆடவன் பார்வையில் தப்புச் செய்கிறவள் போல் ஆகிவிட்டால் அப்புறம் அவளுக்குத் தன்மானம் இல்லாமல் போய்விடுகிறது. அவளை எந்த வழிக்கு வேண்டுமானுலும் இழுக்கலாம் அல்லவா?' இம்மாதிரி எண்ணங்கள் தொடர்ந்து மோகினியின் மனத்தில் எழுந்ததும், மோகினிக்கு ராஜுவின் மேல் கோபமே வந்தது.

ராஜு தன்னிடம் வந்து, 'மோகினி! நீ ஒரு கபட வேஷக்காரி, இன்றே விலகிக் கொள்,' என்று சொல்லியிருந்தால், அவள் ராஜுவைப் பாராட்டி இருப்பாள். அப்போது அவளுக்கு வேலை மட்டும்தான் போயிருக்கும். மனத்தில் அவள் ராஜுவைப்பற்றி வரைந்திருந்த ஒரு லட்சிய புருஷன் என்ற உருவம் மறைந்திருக்காது. வேலை போனுலும் பரவாயில்லை. ராஜு தனியான சிறப்புடையவர் அல்ல என்ற எண்ணம் தோன்றும்படி அவர் நடக்காமல் இருந்தால் போதும் என்று நினைத்தாள்.

அன்று சாப்பிடும் அறையில் ராஜுவுக்கு உணவு பரிமாறும்போது, ராஜு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவளை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை.

மாலைச் சிற்றுண்டியை எடுத்துக் கொண்டு மோகினி மாடி அறைக்குச் சென்ருள். கணவனும் மனைவியும் இருந்தனர். இருவர் முன்னிலையிலும் மோகினி பலகாரங்களை வைத்தாள். விஜயா எதேச்சையாக ராஜுவிடம் ஷொரனூர் பள்ளிக்கூடத்தைப்பற்றிப் பேச்சுக் கொடுத்தாள்.

''உங்க சித்தப்பாவுக்காக எவ்வளவு தான் கொடுக்கிறதுன்னு அளவு கிடையாதா? ஷொரனூர் பள்ளிக்கூடத்துக்காக எதுக்கு இருபதினுயிரம் ரூபாய்

அழணும்?'' என்று விஜயா கேட்டாள்.

ராஜுவின் முகம் சிவந்தது. ''இதைப் பற்றி அப்புறம் பேசுவோம் விஜயா,'' என்றான்.

''ஏன், சாந்தினி இருக்காளேன்னு சொல்றீங்களா? அவள் உங்க சித்தப்பா கொண்டு வந்து வச்ச ஆள்தானே! அவள் முன்னாலேயே பேசுவோம். அவள் வேணும்னு அவரிடம் போய்ச் சொல்லட்டும்,'' என்று விஜயா கூறினாள்.

ராஜு பதிலே சொல்லவில்லை. சிற்றுண்டி சாப்பிட்டபின் ராஜு கீழ இறங்கி வந்தான். அப்போது கீழ் ஹாலில் யாரும் இல்லை. மோகினி மட்டும் நின்றுகொண்டு இருந்தாள். இப்போதாவது ஏதாவது சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள். ராஜு ஒன்றும் சொல்லவில்லை. ஒரு முறை ந



அவளைப் பார்த்தான். அந்தப் பார்வையின் அர்த்தம் புரியவில்லை. வெளியே சென்றுவிட்டான்.

அப்புறம் ஒவ்வொரு மணிக் காலத்தை கழிப்பதும் மோகினிக்குப் பெரிய வேதனையாக இருந்தது. அதை மறக்கக் கௌரியோடு காலத்தைப் போக்கினாள். கௌரிக்குத் தன் தாயை ஏமாற்றுவதில் தப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அவன் தோட்டத்துத் திறந்த வெளியில் நின்றபடி பட்டம் விடுபவர்களைப் பார்த்து மகிழ்ந்தாள். "டீச்சர்! எனக்குப் பட்டம் விடணும்போல் ஆசையாயிருக்கு," என்று கௌரி கேட்டான்.

மோகினி சமையல்காரனை அனுப்பி, காகிதம், நூல்கண்டுகள் முதலியன வாங்கி வரச் செய்தாள். அன்று மாலை நேரம் முடியும் தருணம் ஆகிவிடவே கௌரிக்குப் பட்டம் செய்து தரமுடியவில்லை. மறுநாள் மாலை கௌரி பட்டம் விடலாம் என்று சொல்லி, அவனைத் திருப்தி செய்து வைத்தாள்.

இரவு எட்டு மணி சுமாருக்கு ராஜு திரும்பி வந்தான். வீட்டினுள் நுழையும்போது, மோகினி சாப்பாட்டுத் தட்டை எடுத்துக்கொண்டு படிக்கட்டில் அடி எடுத்துவைத்தாள். ராஜு, "மோகினி!" என்று அழைத்ததும் விர்ரென்று திரும்பிப் பார்த்தாள்.

ராஜு அவளை நோக்கியபடியே இருந்தான். ராஜுவின் பார்வை மோகினியின் உடலை ஊடுருவிச் சென்றது. அவளுக்குச் சிலிர்ப்பு ஏற்பட்டது. இது தான் ராஜு முதல் முறையாக அவளை, "மோகினி!" என்று அழைத்தது.

தொடர்ந்து ஒன்றும் பேசாமல் அவளையே பார்த்தபடி இருந்தான். மோகினியும் ராஜு என்ன சொல்லப் போகிறான் என்று காத்துக் கொண்டிருந்தாள். ராஜு ஒரு முறை கனைத்துக் கொண்டான். கம்மிய குரலில், "மோகினி! இன்று நீ எனக்குச் சாப்பாடு பரிமாற வேண்டாம். சமையல்காரனைப் பரிமாறச் சொல்," என்றவன், விருட்டென்று இடதுபுறமுள்ள அறைக்குள் சென்றுவிட்டான்.

ராஜுவுக்கு ஒவல்டின் கொண்டு வருவது, அவனுக்கு உணவு பரிமாறுவது போன்ற பணிகளில் அலாதி இன்பத்தை அடைந்து வந்த மோகினிக்கு இந்தக் கட்டளை மிகுந்த வேதனையைக் கொடுத்தது. தன் கையால் உணவு சாப்பிடுவதைக்கூட அவர் விரும்பவில்லையா? தன்மீது அவருக்கு அவ்வளவு வெறுப்பு இருந்தால் அவர் தன்னைப் பார்க்கும்போது மட்டும் ஏன் அந்த வெறுப்புத் தெரிவதில்லை? அந்தப் பார்வையின் அர்த்தம் அவளுக்குப் புரியாமல் இல்லை. அவள் பருவப் பெண் ஆனதிலிருந்து அந்தப் பார்வையை அடிக்கடி ஆண்களிடம் சந்தித்திருக்கிறாள். ஆனால் ராஜு பார்க்கும்போது மட்டும் மற்ற ஆடவர்களிடம் அவள் வெறுத்த பார்வை, அவளுக்கு இன்பச் சிலிர்ப்பைக் கொடுத்தது.

சாப்பாட்டுத் தட்டை எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள். விஜயா வழக்கத்துக்கு விரோதமாகக் கடிந்து கொள்ளாமல், பொறுமையாக இருந்தாள். சாப்பாடு முடிந்ததும் தட்டை எடுத்துக்கொண்ட மோகினி சமையல்காரனிடம், "இன்று எஜமானருக்குப் பரிமாறு," என்று கூறிவிட்டுத் தன் அறைக்கு வந்தாள்.

அன்று அவளுக்குச் சாப்பிடவும் பிடிக்கவில்லை. சாப்பிடவும் இல்லை. ஆனால் தன் அறையில் இருந்தபடியே ராஜுவுக்கு உணவு அளிக்கப்படுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். "போதும்," "ஊறுகாய் போடு," என்று ராஜு சொல்வது, வட்டிலில் கரண்டி மோதும் சப்தம், படிவாசல் ராஜு வாஷ்பேஸினில், கை கழுவி வாய் கொப்பளிக்கும் சப்தம் எல்லாவ



"முப்பத்தைந்து வருஷம் இதே ஆபீசில் டெஸ்பாட்சாகப் பணிபுரிந்து நாளை நீங்கள் ரிடையராகப் போகிறீர்களே! உங்க சேவையைப் பாராட்டி வாழ்த்துத் தயாரித்திருக்கிறோம்."

"இப்படிக் கொண்டாங்க! இன்றே போஸ்ட் பண்ணிவிடுகிறேன்."

றையும் தன் அறையின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

மெள்ளக் கதவின் இடைவெளியில் வந்து நின்றாள். இருளில் கதவின் பின்புறம் மோகினி நிற்பது, ஹாலில் நிற்பவர்களுக்குத் தெரியாது. ராஜு சாப்பிட்டுவிட்டு டவலால் கைகளைத் துடைத்துக்கொண்டு ஹாலுக்குள் வந்தான். சமையல்காரன் அவனிடம் பீடாவை நீட்டினான். பீடாவை வாயில் போட்டுக் கொண்டு ராஜு முதல் முதல் படிக்கட்டில் நின்றான். சமையல்காரன் சமையல் அறைக்குள் செல்லும்வரை காத்திருந்தான். பிறகு மோகினியின் அறையை ஒரு முறை பார்த்தான். மெள்ள அவள் அறையை நோக்கி நடந்தான்.

மோகினியின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. திடீரென்று நின்றான். திரும்பி மாடியை நோக்கி நடந்தான். இவ்வளவையும் இருளில் நின்று கவனித்துக் கொண்டிருந்த மோகினிக்குப் பயமாக இருந்தது. ராஜு சென்றபின் ஹாலில் உள்ள விளக்குகளை ஒவ்வொன்றாக அணைத்துவிட்டுத் தன் அறைக்கு வந்தாள். கதவை ஒட்டித் தரையில் தன் படுக்கையை விரித்தாள். அறையில் உள்ள நீண்ட நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். மனத்தில் உள்ள குழப்பத்தாலும் வெப்பத்தாலும் உடல் வியர்த்திருப்பதை உணர்ந்தாள். அறையிலும் புழுக்கம், மனத்திலும் புழுக்கம். படுக்கையில் உட்கார்ந்தாள். சேலைத் தலைப்பால் சற்றே விசிறி விட்டுக்கொண்டு படுத்தாள். கண்களை மூடினாள். தூக்கம் வரவில்லை.

கபடமாக வேறு பெயரில் வாழ்ந்தும், ராஜு அவளை ஒரு வார்த்தைகூடக் கண்டிக்கவில்லை. மாடிக்குப் போக வேண்டியவர் ஏன் சமையல்காரன் போகும் வரையில் படிக்கட்டில் காத்திருக்க வேண்டும்? நான் இருக்கும் அறையை அப்படி முறைத்துப் பார்க்க வேண்டும்? இவரும் மற்றவர்களைப் போல் என்னை ...என்னை... மேற்கொண்டு நினைக்கவே அவளுக்கு மனம் கூசிற்று. மற்றவர்களிடமாவது அவள் திமிறி, தப்பி ஓடிவிட முடியும். ராஜுவின் பார்வையே அவளுக்கு இவ்வளவு வேதனை தருகிறதே! அவன் கரம் பட்ட பின்பும் அவள் மனம் அவளுடையதாகவே இருக்குமா? அவளுக்கு அவள் மானத்தைக் காத்துக் கொள்ள வலிமை இருக்குமா?

பயத்தோடு அவள் இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது படிக்கட்டில் சப்தம் கேட்டது. யாரோ அடிமேல் அடிவைத்து ரகசியமாக வருவது போல் தெரிந்தது. மோகினியின் இதயத்தில் ரத்தம் வேகமாக ஓட ஆரம்பித்தது. காலடி சப்தம் தன் அறையை நோக்கி வருவது போல் தோன்றியது. சிலவினாடிகளுக்கு நிசப்தம்.

ஹால் கடியாரத்தில் மணி பதினொன்று அடித்தது. அடுத்த வினாடி அவள் அறையின் கதவு மெள்ளத் திறந்தது. அறையின் வெளிப்புறத்திலிருந்து ராஜு உள்ளே நுழைந்தான். தரையில் தூங்காமல் உட்கார்ந்திருக்கும் மோகினியைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். அவன் பனியனோடு நின்று கொண்டிருந்தான். அவனது சிவந்த தோள்கள் மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தன. படுக்கையில் வீற்றிருக்கும் மோகினியைக் கவனித்தான். ''மோகினி! இன்னும் நீயும் தூங்கலியா?'' என்று கேட்டான்.

'நீயும் தூங்கலியா?' என்ற வாக்கியத்திலுள்ள 'உம்'மைக் கேட்டதும் மோகினியின் இதயத்தில் மிஞ்சியுள்ள சிறு உறுதியும் அவளை விட்டுப் பறந்து போய்விட்டது. அவள் கை கால்கள் பலமிழந்து தொய்வதை உணர்ந்தாள். புரியாத புதிருக்கும் விடை உண்டு. திறக்க முடியாத பூட்டுக்கும் ஒரு சாவி உண்டு. உறுதியான கற்பு நெறியுள்ள பெண்ணின் உறுதியையும் குலையச் செய்யும் ஓர் அழகன் உண்டு. இவர் முன்னால் என் வைராக்கியம் என்னைக் காப்பாற்றுமா என்று கலங்கி நின்றாள். இருவரும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தனர்.

அந்த அறையில் மோகினியும் ராஜுவும் விட்ட சுவாசத்தின் ஓசை மட்டும் தான் ஒலித்தது.

(தொடரும்)

❋

## (அ) சுப பந்துவராளி

லால் பகதூர் சாஸ்திரி இறந்தபோது ரேடியோவின் அலைவரிசையில் ஒரு சோக இசை இழைந்து கொண்டிருந்ததே, நினைவிருக்கிறதா? இ[illegible]களில் சோகத்தைப் பிழியும் அந்த ராகத்தின் பெயர் என்ன தெரியுமா? சுப பந்துவராளி.

—மணிகண்டன்

www.t.me/tamilbooksworld

34

அந்த இரவில் இருவர் மட்டும் நின்று கொண்டி தனர்.

இனக்கவர்ச்சியின் இன்பத்தை உணர்ந்து அனுபவித்து விட்டு இப்போது அதைத் துறந்து வாழும் பிரம்மச்சாரி அவன். இனக்கவர்ச்சியின் பிறப்பை அப்போதுதான்

புரிந்துகொள்ள முயன்று கொண்டிருந்த கன்னி அவள். இருவருக்கும் இயற்கை, வலிமையும் அழகும் நிறைந்த உடலைக் கொடுத்திருந்தது. இருவரும் ஒன்றும் பேச வில்லை. என்ன பேசுவதென்று இருவருக்கும் புரியவில்லை. ராஜுவின் பார்வையில், மோகினியின் பருவத் துடிப்பு அவள் பயத்தோடு சுவாசித்த முறையில் நன்கு தெளிவா கியது. அவன் துடிக்கும் உதடுகள், நடுங்கும் கைவிரல்கள், அவனுடைய வெறித்த பார்வை எல்லாம் சேர்ந்து அவன் மனக்குழப்பத்தைத் தெளிவாக்கின. ரத்த நாளங்களில் வேகமாக ஓடிய இரத்தம், "மனிதா! நீ என்ன படித் தாலும், பயின்றாலும் அடிப்படையில் நீயும் விலங்கு தான்!" என்ற பல்லவியைப் பாடியபடி இருந்தது.

வார்த்தைகள் வெளிவரவில்லையென்றாலும் ஒருவர் மனத்தில் என்ன எண்ணங்கள் உதிக்கின்றன என்பது மற்றவருக்குப் புரியாமல் இல்லை. நாடி துடிக்க நயனம் பேச நின்றனர் இருவரும்.

முதலில் சுய உணர்வுக்கு வந்தவள் மோகினிதான். சேலை ஒதுங்கியிருப்பதையும் தோள் தெரியத் தான் உட்கார்ந்திருப்பதையும் உணர்ந்தாள் அவள். எஜமான் நின்று கொண்டிருக்கும் போது அவர் முன்னிலையில் தான் பெஞ்சில் உட்கார்ந்திருப்பது சரியல்ல என்பதை அறிந்தாள். உடனே எழுந்து சேலையைச் சரி செய்து கொண்டு தலைகுனிந்து கால்கட்டை விரலால் தரையைக் கீறியபடி நின்றாள்.

அடுத்தபடி என்ன நடக்கும் என்ற ஆவல் ஒரு பக்கம்; ஒரு தவறும் நடக்கக்கூடாதே என்ற பயம் மறுபக்கம். தன் மனத்தில் பயம் அதிகமாயிருந்ததா, ஆவல் அதிகமா யிருந்ததா என்று மோகினிக்கே புரியவில்லை.

ராஜு, "மோகினி" என்று கூப்பிட்டான். அப்புறம் பேசாமல் நிறுத்திவிட்டான்.

மோகினி பதில் சொல்லாமல் நின்றாள். மறுபடியும் ராஜு அவளை நெருங்கி வந்தான். "மோகினி" என்று

மறுபடியும் கூப்பிட்டான். மோகினி தலையை நிமிராமல் தரையைப் பார்த்தபடி இருந்தாள். ஒவ்வொரு விநாடியும் ராஜு அடுத்தபடி என்ன செய்வானோ என்று எதிர் பார்த்தபடி இருந்தது அவள் மனம்.

''மோகினி, என்னை மன்னித்துவிடு. எனக்கு வேறு வழியில்லை. இம்மாதிரி திருட்டுத்தனமாகத்தான் வந்து உன்னுடன் பேச வேண்டி இருக்கிறது'' என்று கூறிவிட்டு அடுத்தபடி சொல்ல வார்த்தைகளைத் தேடினான் ராஜு. மோகினி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் நெற்றி வியர்த்திருந்தது. அவன் கண்கள் சிவந்து இருந்தன.

''சித்தப்பாவும் நீயும் செய்த இந்தச் சூழ்ச்சி விஜயா வுக்குத் தெரியாது. இனிமேலும் தெரியக் கூடாது. அதனால்... அதனால்...'' மேலே அவனால் பேச முடிய வில்லை.

மனத்திலுள்ளதைச் சொல்ல ஏன் இவ்வளவு தயக்கம் என்று ஆத்திரமாக வந்தது மோகினிக்கு. ''இப்போது... இப்போது நான் என்ன செய்வது?'' என்று கேட்டாள்.

''உன் மேல் எனக்குக் கோபமில்லை மோகினி. உன்னைப் பள்ளியிலிருந்து காரணமில்லாமல் நீக்கியது என் குற்றம். குழந்தை கௌரியிடம் நீ அன்பு வைத்தது தவறு இல்லை, அதற்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக உன்னை வேலை இல்லாமல் செய்துவிட்ட நான்தான் இரக்கமில்லாதவன். என்னை மன்னித்து விடு மோகினி'' என்று கெஞ்சிக் கேட்டான் ராஜு.

'இவர் எதற்கு இவ்வளவு பெரிய பீடிகை போடுகிறார்? இரவு வேளையில் ஒரு பெண்ணிடம் தனிமையில் வந்து பேசுவதற்கு இது அஸ்திவாரமா?' என்று மோகினி நினைக்க ஆரம்பித்தாள். இந்த நினைப்பு எழுந்ததுமே அவள் மனத்தில் கவர்ச்சி இருந்த இடத்தில் உறுதி எழுந்தது. வார்த்தைகள் பேசாது திடீரென்று அவன் அவளைத் தொட்டிருந்தால் அவளால் குழப்பத்தில் ஒன்றும் செய்ய முடியாமல் போயிருக்கும். ராஜுவின்

விண்ணப்ப வார்த்தைகள் அவளைச் சூழ்ந்திருந்த மயக்கத்தைக் குறைத்து அவனைச் சாதாரண மனிதனாகக் காட்டியது.

மோகினியின் பார்வையினால், அலை அலையாக எழுந்த அந்தப் புரியாத உணர்ச்சியின் ஓசைகள் அடங்கின.

''சித்தப்பா செய்ததும் சரி. நீ இங்கு கௌரிக்குப் பாடம் சொல்லித் தர வந்ததும் சரி. ஆனால் நான்தான் தவறு செய்தவன்'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னான் ராஜு. அவன் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாமல் மோகினி அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள். ராஜு தொடர்ந்து, ''நீதான் ஷோரனூர் பள்ளியில் வேலை பார்த்த மோகினி என்பது மட்டும் எனக்குத் தெரியாமலே இருந்திருந்தால் ஒரு வம்பும் இல்லை. அப்போது இந்த ஏமாற்று நாடகத்தின் ரகசியம் எனக்குத் தெரியாமலே போயிருக்கும். நான் என் மனைவியை ஏமாற்றியிருக்க மாட்டேன். இப்போது உண்மை தெரிந்த பின் நான் ஒன்றும் பேசாதிருந்தால் விஜயாவை ஏமாற்றியதுபோல் ஆகாதா, மோகினி?'' என்று கேட்டான்.

''ஆரம்பத்திலிருந்தே இது ஏமாற்றம்தான். அதில் உடந்தையாயிருந்ததற்கு நான் வருந்துகிறேன்'' என்றாள் மோகினி.

''நீயோ சித்தப்பாவோ உண்மையை மறைத்துப் பெரிய லாபம் அடைந்துவிடவில்லை. இதனால் என் குழந்தை கௌரிக்குத்தான் லாபம். அவள் மனச் சந்துஷ்டியோடு இருக்கிறாள். எனக்கு ஒரு நஷ்டமும் ஏற்படவில்லை. ஆனால் விஜயாவுக்குத் தெரியாமல் ஒரு விஷயத்தை மூடிவைக்கும்போது அவளுக்கு துரோகியாகிறேன் நான். அவளிடம் இப்போது போய் உண்மையைச் சொல்வதில் பலனில்லை. நீ வேலையை இழக்கும்படி நேரும். அவ்வளவுதான். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. விஜயாவுக்கு வாழ்வில் எந்த

இன்பமும் இல்லை. என் அன்பும் போய்விட்டது என்ற சந்தேகம் அவள் மனத்தில் ஏற்பட்டால் அவள் வாழ்வே வீணாகிவிடும். ஆதலால் இந்தச் சிக்கலிலிருந்து விடுபட நீ தான் ஒருவழி சொல்லவேண்டும். காலைவரை யோசித்து ஒரு முடிவுக்கு வா மோகினி'' என்று சொல்லிவிட்டு அறையைவிட்டு வெளியேறினான்.

மோகினிக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. 'இதைச் சொல்லவா இவ்வாறு பயந்து பயந்து உள்ளே திருடனைப்போல் வந்தார்? இல்லை, அறையில் நுழையும் போது வேறு எண்ணத்தோடு இருந்தவர், வந்த பிறகு மனம் மாறிவிட்டாரா? தனக்குத் தெரிந்த ஒரு ரகசியத்தை மனைவிக்குத் தெரியாமல் மூடிவைப்பதே துரோகம் என்று நினைத்து வருந்தும் பண்பு உடையவர், தவறான ஆசையால் உந்தப்பட்டு அறையில் நுழைந்திருப் பாரா?' என்ற சந்தேகம் எழுந்தது. 'அவரை எவ்வளவு கேவலமாக எடை போட்டோம்!' என்று நினைத்து வருந்தினாள். ராஜூ அவளிடம் என்ன எதிர்பார்க்கிறார்? 'வேலையைவிட்டு விலகிக்கொள் என்று மரியாதையாகச் சொல்கிறாரா?' புரியாமல் தவித்தாள்.

சத்தமில்லாமல் மாடியில் படுக்கைக்கு வந்து படுத்த ராஜூவுக்குத் தூக்கமே வரவில்லை. சிறிது தூரத்தில் நிம்மதியாகத் தூங்கும் மனைவியைப் பார்த்தான். அவன் மனச்சாட்சி அவனைத் திருடன் என்று சுட்டியது. அவளை எழுப்பி உண்மையைச் சொன்னால் அவள் அவன்மீதுதான் சந்தேகப்படுவாள். சாந்தினிதான் மோகினி டீச்சர் என்று தெரிந்தால் சாந்தினியை வேலையைவிட்டு நீக்கவேண்டி வரும். குழந்தை கௌரிக்குப் பெரிய ஏமாற்றம் ஏற்படும். சித்தப்பா சாமியாரின் மனம் கசந்துவிடும்...

சாந்தினி வீட்டைவிட்டு வெளியேறுவதை அவன் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை.

பாருகுட்டி அம்மாள் அந்த வீட்டுக்கு வந்துபோனபின் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி ஒன்றுமே அறியாமல்

இருந்தாள் விஜயா. ஆனால் காலையில் அவள் பலகாரம் சாப்பிடும்போது ராஜுவும் மாடியறையில் ஒரு புத்த கத்தைப் படித்தபடி அவளுடனேயே இருந்தான்.

மோகினி பலகாரத்தை எடுத்துப் பரிமாறியபடி இருந் தாள். அவள் முகத்தில் ஏற்பட்ட சோர்வைக் கவனித்த விஜயா, ''என்ன சாந்தினி, முகம் சோர்ந்திருக்கு? ராத்திரி பூராவும் தூங்கவில்லையா?'' என்று கேட்டாள்.

மோகினியின் பார்வை அவளையுமறியாமல் ராஜுவின் பக்கம் சென்றது. ராஜுவின் கையில் புத்தகம் இருந்தது. ஆனால் அவன் கண்கள் மூடியபடி இருந்தன. மோகினி அதைக் கவனிக்கும்போதே விஜயாவும் கவனித்து விட்டாள்.

''என்னங்க, என்னங்க!'' என்று விஜயா கூப்பிட் டாள். சட்டென்று விழித்துக்கொண்டான் ராஜு. கண்கள் சிவந்து சோர்வோடு காணப்பட்டன.

''என்னங்க, நீங்க பொழுது விடிஞ்சப்புறம் தூங்கி நான் பார்த்ததில்லையே! ஏன், ராத்திரி தூங்கலையா?'' என்று விஜயா ராஜுவைக் கேட்டாள்.

ராஜுவின் பார்வை ஒரு விநாடிக்கு மோகினியின் பார்வையைச் சந்தித்தது. ''இல்லை, விஜயா! நேற்று ராத்திரி எனக்குச் சரியான தூக்கம் இல்லே. விடிகிற வரையிலே இந்தப் புத்தகத்தைப் படிச்சிட்டிருந்தேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான். அவன் வெளியே செல்லும்போது மோகினி அவனைப் பரிவோடு பார்த்தாள். அந்தப் பார்வையைக் கவனித்த விஜயாவுக்கு குழப்பம் ஏற்பட்டது.

''இந்த வீட்டிலே நான்தான் நோயாளி. தினமும் தூக்க மாத்திரை சாப்பிட்டால்தான் நான் சரியாகத் தூங்க முடியும். அப்படிப்பட்ட நானே நேத்திக்கு எந்த மாத்திரையும் சாப்பிடாமல் நல்லா தூங்கியிருக்கேன். ஆனால் இந்த வீட்டுலே மத்தவங்கதான் நேத்திக்குத் தூங்கலை போலிருக்கு?'' என்று உள்ளர்த்தம் தொனிக்க

ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, மோகினியைக் கவனித்தாள்.

மோகினி எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் காப்பியை டம்ளரில் ஊற்றி விஜயாமுன் வைத்துவிட்டு, அவள் பலகாரம் சாப்பிட்ட தட்டுக்களை எடுத்துக் கொண்டு கீழே இறங்கிச் சென்றாள். சமையல் அறையில் தட்டுகளை வைத்துவிட்டுத் தன் அறைக்கு வந்தாள். பெஞ்சியில் உட்கார்ந்து கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்தாள். ஒரு பொய் சொல்ல, அந்தப் பொய்யை மறைக்கத் தொடர்ந்து பொய்களாகவே கூறிக்கொண்டிருக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதே என்று வருந்தினாள்.

அழுதுகொண்டே நிமிர்ந்து பார்த்தவள் திகைத்தாள். அறையின் வெளிப்புறம் ராஜு நின்று அவள் அழுவதை கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஏன் மோகினி அழுகிறே? விஜயா ஏதாவது சொன்னாளா?" என்று கேட்டான் ராஜு.

"இந்த வீட்டிலே தன்னைத் தவிர மத்தவங்க தூங்கலை போலிருக்குன்னு சொன்னாங்க. ஒரு தவறும் செய்யாத நாம் இரண்டு பேரும் கூட்டுக் குற்றவாளிங்க போல மறைஞ்சு மறைஞ்சு பேசவேண்டியிருக்கு. இது எனக்குப் பெரிய வேதனையா இருக்கு. எனக்காக நான் வேதனைப்படலே. பண்பும் ஒழுக்கமும் நிறைந்த நீங்கள் கஷ்டப்படறதைப் பார்க்க எனக்கு வேதனையா இருக்கு. நான் இரண்டு நாளிலே வேலையைவிட்டு விலகிக்கிறேன். அதுதான் சரியான வழி என்று தோணுது" என்றாள் மோகினி.

"குழந்தை கௌரியின் மனம் வேதனைப்படாதா?"

"அவளுக்கு ஏதாவது ஆறுதல் சொல்லிச் சரிப்படுத்தறேன்...மோகினி என்ற டீச்சர் இந்த வீட்டிலே சாந்தினியாக வந்து இருந்தாள் என்பதே உங்கள் மனைவிக்கு என்றைக்கும் தெரியவேண்டாம்" என்று சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள், அன்பும் ஏக்கமும்

ராஜுவின் முகத்தில் பிரதிபலித்தன. அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் நகர்ந்து சென்றான்.

அன்று பிற்பகல் கௌரிக்குப் பாடம் சொல்லித் தரும் போது மோகினி, ''கௌரி, உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன்'' என்று ஆரம்பித்தாள்.

''என்ன விஷயம் டீச்சர்!''

''பொய் சொல்றவங்களுக்கு நிம்மதியே கிடையாது கௌரி! நான் இந்த வீட்டிலே சாந்தினி என்கிற பெயரிலே அடியெடுத்து வைத்த நாள் முதல் எனக்கு அமைதியில்லை கௌரி!''

''அப்படீன்னா நீங்க வீட்டை விட்டுப் போயிடுவீங்களா டீச்சர்?'' என்று ஏக்கத்துடன் கேட்டாள் கௌரி.

''விலகிக்கிறதுதான் சரி என்று தோணுது, கௌரி.''

''அம்மாவுக்கு நீங்கதான் மோகினி டீச்சர்னு தெரிஞ்சு போயிட்டுதா?''

''இல்லை, கௌரி. அப்பாவுக்குத் தெரிஞ்சு போயிடுச்சே, அது போதாதா?''

''அப்பாவுக்குத்தான் உங்கமேலே கோபம் இல்லையே! நீங்க ஏன் போகணும்?''

''நான் போறதுதான் உங்க அப்பாவுக்கும் பிடிக்கும்.''

''நேத்திக்கு மில்லுக்குக் காரிலே போறப்போ உங்க மேல் கோபம் இல்லேன்னு அப்பா எங்கிட்ட சொன்னாரே? எங்கிட்டகூட, 'கௌரி! நீ நல்லா சாப்பிட்டு ஓடி ஆடி விளையாடினால் உங்க டீச்சர் மாதிரி நீயும் அழகானவளாயிடுவே' அப்படீன்னு சொன்னாரே? அப்பாவுக்கு உங்களைப் பிடிச்சுப் போச்சு, டீச்சர்'' என்றாள் கௌரி. இதைக் கேட்டதும் வேதனையின் நடுவே மோகினிக்குச் சிரிப்பும் வந்தது.

''அதில்லே, கௌரி! சொன்னால் உனக்குப் புரியாது. நான் இந்த வீட்டை விட்டு விலகிக்கிறதுதான் சரி.''

"உங்களை விட்டு எப்படி நான் பிரிஞ்சு இருக்கிறது, டீச்சர்?" என்று அழும் குரலில் சொன்னாள் கௌரி.

"என்னை ஏன் பிரிஞ்சிருக்கணும்? ஒவ்வொரு வருஷமும் நீ ஷோரனூருக்கு உங்க பங்களாவுக்கு வா. இரண்டு மாசம் அங்கே பொழுது போக்குக்குத் தங்கியிரு. அப்போ நாம் சந்திக்கலாம்."

கௌரிக்குக் குழப்பமாயிருந்தது. "அதைப்பத்தி ஏன் டீச்சர் இப்ப பேசணும்? அம்மாகிட்டே நீங்க யாருன்னு நான் சொல்லமாட்டேன். அப்பாவும் சொல்லமாட்டார். நீங்க கவலைப்படாதீங்க, இன்னிக்குச் சாயந்தரம் பட்டம் பறக்க விடலாமா, டீச்சர்" என்று விஷயத்தை மாற்றிப் பேச ஆரம்பித்தாள்.

"உன் இஷ்டப்படியே செய்வோம், கௌரி. காகிதம், நூல் எல்லாம் வாங்கியாச்சு. இனிமேல் பட்டம் தயார் செய்யவேண்டியதுதான் பாக்கி. அதுவும் இன்னம் ஒரு மணி நேரத்திலே தயார் செய்துடறேன் கௌரி" என்று சொல்லிவிட்டுப் பட்டம் செய்வதில் முனைந்திருந்தாள் மோகினி. மாலை ஐந்து மணி சுமாருக்குச் சிவப்பும் வெள்ளையுமாய் கலந்த பட்டம் ஒன்று தயார் செய்தாள் அவள். அதை நூலில் கட்டி அதற்கு ஒரு நீல நிற வால் கட்டிவிட்டு கௌரியிடம் தந்ததும், அவள் அதைப் பறக்க விட்டாள்.

மாடி பால்கனியிலிருந்து விஜயா மகிழ்ச்சியோடு மகள் பட்டம் விடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பட்டம் காற்றில் பறப்பது, தானே பறப்பது போன்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது கௌரிக்கு.

உடல் என்ற பளுவைத் துறந்து, தானே காற்றில் பறக்க வேண்டும் என்ற ஆசை, ஒவ்வொரு ஜீவனுக்கும் இயற்கையாக ஏற்படும் உணர்வல்லவா? மனிதன் விஞ்ஞான ரீதியாக விமான மூலம் பறக்கக் கற்றுக் கொண்ட போதிலும் அவன் சுயமாகவே பூ ஆகர்ஷணச் சக்தியை வென்று பறப்பது இன்றுவரை முடியாத சாதனையாகவே இருக்கிறது.

அந்த விஷயத்தில் பறவைகள் மனிதனையும்விடச் சாமர்த்தியசாலிகளாகவே இருக்கின்றன. நினைத்தபோது சிறகடித்துப் பறந்து வீட்டின் உச்சியிலே உட்கார முடியும்; வானத்தில் பறக்க முடியும். நினைத்த இடத்தில் இறங்கி இளைப்பாற முடியுமே...

—இவ்வாறு சிந்தித்தவண்ணம் தன் மகள் பறக்க விட்ட பட்டம் காற்றில் பறப்பதைக் கவனித்தபடி தோட்டத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான் ராஜு. அந்தப் பறக்கும் பட்டம்போல் தன்னை அழுத்தும் குடும்பச் சூழ்நிலையை விட்டு விடுதலையடைந்து வெளியேற விரும்பினான் போலும்! அப்போது அவனுக்கு, சித்தப்பா குழந்தைச்சாமியின் நினைவு வந்தது. பணம், சொத்து, அந்தஸ்து குடும்பம், ஆசைகள் இம்மாதிரியான சுமைகளைத் துறந்துவிட்டதால் அவர் ஒரு பட்டம்போல் நிம்மதியாக உயர்ந்த இடத்தில் உலவி வாழ முடிகிறது...

மோகினி, பட்டத்தைக் கௌரியின் கையில் கொடுத்து விட்டு, தன் வேலைகளைக் கவனிக்கலானாள் தாய். பால்கனியிலும் தந்தை தரையிலும் இருந்தபடி பறக்கும் பட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

வேறு ஒரு பட்டம் கௌரியின் பட்டத்தை நோக்கிப் பறந்து வந்தது. அது நீல வர்ணப் பட்டம். சற்றுப் பெரிதாக இருந்தது. அந்த நீல வர்ணப் பட்டம் சிவப்பும் வெள்ளையுமான கௌரியின் பட்டத்தைக் கொத்துவது போல் தொட்டுவிட்டு நகர்ந்தது.

மோகினி தரையில் நின்றபடி இதைக் கவனித்தாள். "கௌரி! உன் பட்டத்தை ஒதுக்கு. இல்லைன்னா அந்த நீலப் பட்டம் உன் பட்டத்தை அறுத்துவிடும்!" என்று எச்சரித்தாள்.

கௌரி கைகளை அசைத்துப் பட்டத்தை வேறு திசைக்குத் திருப்புவதற்காகப் பின்புறம் நகர்ந்தபடி தன் பட்டத்தை நீலப் பட்டத்திடமிருந்து நகர்த்தினாள்.

நகர்ந்து கொண்டே பூமி மட்டத்துக்குமேல் அரை அடி உயரமான கிணற்றின் கைப்பிடிச் சுவர்மீது ஏறினாள்.

எல்லோர் கவனமும் பட்டணத்தில் இருந்தது.

நீல வர்ணப் பட்டம் கௌரியின் பட்டத்தை நெருங்கி வந்தது. ஆனால் கௌரின் பட்டம் நகர்ந்து கொடுத்தது. ஆகாயத்தில் நடக்கும் ஆக்கிரமிப்பில் அனைவரின் கவனமும் இருந்தது. கௌரியின் பட்டம் இப்படியும் அப்படியுமாக ஆடித் தப்ப முயன்றது. அவள் கவனமும் பட்டத்தில் இருந்ததால், தான் எங்கு நிற்கிறோம் என்பதைக் கவனிக்கவில்லை. கிணற்றின் கைப்பிடிச் சுவர்மீது நின்றிருந்தாள் அவள். கால்கள் மெள்ள நகர்ந்து கிணற்றை மூடியிருந்த பலகைமீது நின்றன. அடுத்து, பலகை மீது நடக்க ஆரம்பித்தன. பாதிக் கிணறுதான் பலகையால் மூடப்பட்டிருந்தது. மறுபாதி திறந்து கிடந்தது. கௌரியின் கால்கள் பலகையின் விளிம்பில் இருந்தன.

ஏதேச்சையான மோகினியின் பார்வை கௌரியின் மீது திரும்பியது. கௌரியின் ஆபத்தான நிலையை மோகினி உணர்ந்தாள். மோகினியின் நெஞ்சில் மின்னல் போல் பயம் பாய்ந்தது. ''கௌரி'' என்று அலறியபடி கிணற்றை நோக்கி ஓடினாள்.

அதே சமயத்தில் கௌரியின் கால்கள் நகர்ந்தன. பட்டத்தை நூலால் இழுத்தபடி அவள் கிணற்றுக்குள் மறைந்தாள்.

பால்கனியில் இருந்த விஜயா மின்சாரத்தால் தாக்கப் பட்டவள்போல் ''கண்ணே, கௌரீ!'' என்றலறியபடி அதிர்ச்சியில் தன்னையும் மறந்து சக்கர நாற்காலியிலிருந்து எழுந்தாள்; அலறியபடி ஆடித் தரையில் சாய்ந்தாள். மோகினி கிணற்றினுள் குதித்தாள். ராஜு கிணற்றை நோக்கி ஓடினான்.

இவை எல்லாம் ஒரு வினாடிக்குள் நிகழ்ந்துவிட்டன.

கௌரியின் பட்டத்தைக் கிழிக்க வந்த நீலவர்ணப் பட்டம் அமைதியாக இறுமாப்போடு வானத்தில் பறந்த

படி அந்த வீட்டுத் திறந்த வெளியில் நடப்பதை வேவு பார்த்தது.

www.t.me/tamilbooksworld



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

ஒரு விநாடிக்கு ராஜுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் பார்வையில் கிணற்றின் உட்புறம் செல்லும் இரும்பு ஏணி தென்பட்டது. அதன் வழியாகக் கிணற்று மோட்டாரை ரிப்பேர் செய்யும் மெக்கானிக் உள்ளே சென்று வெளி வருவது வழக்கம். அதன் வழியே கிணற்றினுள் வேகமாக இறங்க ஆரம்பித்தான்.

மலையாளத்தில் இருந்தபோது மோகினிக்கு நீச்சல் பழக்கம் ஏற்பட்டிருந்தமையால் அவள் கிணற்றினுள் குதித்ததுமே கிணற்றின் அடி தளத்திற்குச் சென்று குழந்தை கௌரியைத் தூக்கிவிட்டாள். மெள்ள முயன்று கௌரியை மேலே கொண்டு வந்தாள். நடுக் கிணற்றில் விழுந்தமையால் கிணற்றின் சுவர்களில் மோதாமல், இரும்பு ஏணியின் கம்பிகளில் உரசாமல் தப்பியிருந்தாள்.

விழுந்த அதிர்ச்சியில் கௌரிக்கு மயக்கம் ஏற்பட்டிருந்தது. தண்ணீர் அவள் மூக்கின் வழியே சென்றிருந்தது. நீர் மட்டத்துக்குக் கௌரியைத் தூக்கி வந்து, மோகினி, ஏணியின் படிகளில் ஏற ஆரம்பிக்கும் போது ராஜு படிகளில் இறங்கி வருவதைப் பார்த்தாள். குழந்தையை ராஜுவிடம் கொடுத்து, "சீக்கிரம் மேலே எடுத்துச் செல்லுங்கள்," என்று கட்டளையிட்டாள்.

ராஜு மறு பேச்சுப் பேசாமல் ஒரு கையில் குழந்தையை உடலோடு அணைத்து மேலே ஏறினான். அவனைப் பின் தொடர்ந்து மோகினியும் மெல்ல ஏணியில் ஏற ஆரம்பித்தாள்.

கிணற்றுக்கு வெளியே வந்ததும் மோகினி குழந்தையை ராஜுவிடமிருந்து வாங்கிக் கொண்டு வீட்டின் உட்புறம் ஹாலுக்கு ஓடினாள். குழ தையைத் தரையில் கிடத்தி முத சிகிச்சை செய்து கௌரியின் மூக் ளுள் சென்றிருந்த நீரை வெளிப்படு தினாள்.

சுற்றிச் சூழ்ந்திருந்த வேலைக்கார கள் திகைத்திருந்தனர். ராஜுவு ஒன்றும் புரியாமல் வேலைக்காரர் களோடு நின்றிருந்தான். மோகினிதா முதன் முதலாகச் சுய உணர்வுக் வந்து ராஜுவிடம், "குழந்தைக்கு பயமில்லை. குழந்தை கிணற்றி விழும்போது விஜயா அம்மா மா பால்கனியில் இருந்தாங்க. அவுங்கள போய்க் கவனியுங்க," என்று உத் விட்டாள்.

அப்போதுதான் ராஜுவுக்கு விஜய வின் ஞாபகம் ஏற்பட்டது. விஜய வுக்கு ஏற்கெனவே பலவீனமா இருதயம் என்பது தெரிந்த விஷ மல்லவா! ராஜு மாடிப்புறம் நோக் ஓடினான்.

மோகினி எதிரே நின்று கொ டிருந்த சமையல்காரனிடம், "ஆட ஹார்லிக்ஸ், ஓவல்டின் ஏதாவ இருந்தால் கொண்டு வாப்பா," என்று உத்தரவிட்டாள்.

மாடிப்படிகளில் கிடந்த விஜயாவை ராஜு தூக்கி வந்து படுக்கையி வைத்தான். அவள் கால்கள் ஜில்லிட் இருந்தன. சுவாசம் லேசாக வர் போய்க் கொண்டிருந்தது. பரப புடன் போனை எடுத்து டாக்டருக் போன் செய்தான்.

## அத்தியாயம் 35

சில விநாடிகளில் டாக்டரும் வீடு வந்து சேர்ந்தார். மாடியில் படுத்திருந்த விஜயாவின் இருதயத்தை வலுப்படுத்தும் இன்ஜெக்ஷன் ஒன்று கொடுத்தார்.

விஜயா மெல்லக் கண் விழித்துப் பார்த்தாள். பார்த்ததும், ''கௌரி... என் கௌரி...'' என்று படபடப்புடன் பேச ஆரம்பித்தாள்.

ராஜு, ''கௌரி பிழைத்துவிட்டாள் விஜயா. கௌரிக்குப் பயமில்லே,'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அறையின் கதவு திறந்தது. அதன் வழியே மோகினி குழந்தையைத் தூக்கிக் கொண்டு நுழைந்தாள்.

கௌரியின் கண்கள் திறந்து இருந்தன. அதிர்ச்சி பூராவும் தெளியவில்லையாகையால் கௌரி ஒரு வித மயக்கத்தோடு திடீரென்று தூக்கத்தில் எழுப்பிய குழந்தை போல் காணப்பட்டாள். கௌரியை மோகினியிடமிருந்து வாங்கி மார்போடு அணைத்துக் கொண்டாள் விஜயா.

மோகினி, டாக்டரிடம் ''அம்மாவுக்கு எப்படீங்க இருக்கு?'' என்று கேட்டாள்.

விஜயா நன்றியோடு மோகினியைப் பார்த்தாள்.

டாக்டர், ''அதிர்ச்சி இருதயத்துக்கு ஆபத்து ஏற்படுத்தியிருக்கிறது. விஜயா, நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்த விதமான உணர்ச்சிக்கும் வசப்படாமல் அமைதியாக இருக்கவேண்டும்,'' என்று சொன்னார்.

அப்போது விஜயா கேலியாகப் புன்னகை செய்தாள். படுத்திருந்தபடியே தன் கால்களை நகர்த்தினாள். கால்களை மெள்ள நகர்த்தியபடி எழுந்து உட்கார்ந்தாள்.

டாக்டர், ''நீங்க ஸ்ட்ரெயின் பண்ணிக்கொள்ளக் கூடாது,'' என்று எச்சரித்தார்.

அந்த எச்சரிக்கையைச் சிறிதும் லட்சியமாக்காமலே, ''டாக்டர் சார், பாருங்கள் என் கால்களை. என்னால் அசைக்க முடிகிறது. கௌரியின் பிரசவத்திலிருந்து இவைகளை என்னால் அசைக்கக்கூட முடியாது. பாருங்கள், என் விரல்களை ஆட்ட முடிகிறது. கௌரி கிணற்றில் விழுந்த போது என்னையுமறியாமல் நாற்காலியிலிருந்து எழுந்து நின்றுவிட்டுத்தான் மயக்கமடைந்தேன்!''

டாக்டரும் ராஜுவும் மகிழ்ச்சியோடு விஜயாவைப் பார்த்தனர்.

டாக்டர் ஆச்சரியத்துடன், ''குழந்தை கிணற்றில் விழுந்துவிட்டாளா?'' என்று கேட்டார்.

அப்போதுதான் நடந்தது பூராவும் டாக்டருக்குத் தெரியாது என்பதை உணர்ந்தார்கள் அனைவரும். விஜயாவைப் பற்றியிருந்த கவலையில் டாக்டரிடம் யாரும் விஷயத்தைச் சொல்லவில்லை.

ராஜு விஷயத்தை விளக்கியதும் டாக்டர், ''இந்த அதிர்ச்சிதான் விஜயாவுக்குக் கால்களை இயக்கும் சக்தியைக் கொடுத்திருக்கிறது. ஆனால் இருதயத்தை அது தாக்கி, பலவீனப்படுத்தியிருக்கிறது. ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைக் கெடுத்திருக்கிறது,'' என்று சொன்னார்.

விஜயா, ''என் கௌரி பிறந்தபோது கால்களை இழந்தேன். அவள் செத்து மறுபடி பிழைத்து என் கால்களைக் கொடுத்துவிட்டாள்,'' என்று கௌரியை அணைத்துக் கொண்டே மோகினியைக் கவனித்தாள். ஈரப் புடவை ரவிக்கை உடலோடு ஒட்டியபடி நீர் சொட்டும் தலையோடு நிற்கும் மோகினியைக் கவனித்தாள். ஒரு சகோதரியின் பரிவோடு, ''டாக்டர்! அவள்தான் என் குழந்தை கிணற்றில் விழுந்ததும், தன் உயிரை மதிக்காமல் கிணற்றில் குதித்தவள். தாயும் தந்தையும் கௌரிக்குச் செய்ய முடியாததைச் செய்தவள். சாந்தினி எவ்வளவு நேரமாய் ஈரப் புடவையோடு நீ நிற்க முடியும்? போய் உடை மாத்திட்டு வாம்மா,'' என்று முதல் முறையாகச் மோகினியை அன்போடு அழைத்தாள்.

மோகினி அறையைவிட்டு அப்புறம் சென்றாள். மாற்று உடை அணிந்து மோகினி மாடியறையில் நுழைந்ததும் கௌரிக்கு மயக்கம் பூராவும் தெளிந்திருந்தது. ''டீச்சர்!'' என்று ஓடி வந்து மோகினியை அணைத்துக்கொண்டாள்.

''டீச்சர், நன்றி டீச்சர்,'' என்று சொல்லியபடி அழுதாள்.

விஜயா, ''நீ உயிரோடு இருக்கறதுக்கே காரணம் உன் டீச்சர். டீச்சர் காலைத் தொட்டு வணங்கு கௌரி,'' என்று கட்டளையிட்டாள்.

குழந்தை கௌரியும் டீச்சர் காலைத் தொட்டு வணங்கி எழுந்தாள். விஜயாவின் பார்வையில் இப்போது மோகினி



யிடம் பொறாமை இல்லை; வெறுப்பு இல்லை, அன்புதான் இருந்தது. விஜயா, "சாந்தினி! நீ சாப்பிட்டாகி விட்டதா?" என்று கேட்டாள்.

மோகினி, "இல்லையம்மா. இனி மேல்தான் சாப்பிட வேண்டும்," என்றாள்.

"நீ ஒன்றும் தனியாகச் சமையலறையில் சாப்பிட வேண்டாம் இன்று. என்னோடு நீ சாப்பிடலாம்," என்று சொன்னாள்.

அன்றிரவு மோகினி, ராஜு, விஜயா மூவரும் மாடியிலேயே சாப்பிட்டனர். ராஜு சாப்பிடும் போது தலை குனிந்தபடியே இருந்தான். அவன் அவர்கள் இருவரும் பேசுவதில் கலந்துகொள்ளவே இல்லை. விஜயா, "சாந்தினி, உனக்கு உறவினர்கள் யாருமே இல்லையா?" என்று கேட்டாள்.

"குழந்தைப் பருவத்திலே அம்மா இறந்துவிட்டாள். தந்தையும் இறந்து விட்டார். எனக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள நாராயணி அம்மாள் என்ற ஒரு விதவையும் அவர்களுக்குப் பிறந்த சங்கரன் குட்டி என்ற ஒரு மகனும்தான் இருக்கிறார்கள்," என்றாள் மோகினி.

"எங்களை மறந்துவிட்டாயே! நாங்கள் இருவரும் என்றும் உனக்கு உறவினர்களாக இருப்போம்," என்று சொல்லி கணவன் ராஜுவைப் பார்த்தாள் விஜயா.

''ரொம்ப நன்றியம்மா!''

''அந்தச் சங்கரன் குட்டி என்ன உத்தியோகத்தில் இருக்கிறான்? அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?''

''சங்கரன் குட்டிக்குப் புத்தி சரியில்லே. அவன் இப்போது சாமியாரோடுதான் இருக்கிறான்,'' என்ற உண்மையைச் சொன்னாள் மோகினி.

விஜயாவின் கேள்விகள் மோகினி ஷோரனூரில் பார்த்த பழைய உத்தியோகத்தைத் தொடவில்லை. அதனால் மோகினி விஜயாவிடம் பொய் சொல்லும்படியான தேவை ஏற்படவில்லை.

சாப்பிட்டு முடிந்ததும், மோகினி படுக்க அவள் அறைக்குச் சென்றாள். அப்போது ராஜுவும் எதேச்சையாக மோகினியைப் பின் தொடர்ந்தான். கீழ் ஹாலுக்கு வந்ததும் ராஜு, ''மோகினி! காலம் தாழ்த்தி நான் நன்றி சொல்கிறேன். என்னை மன்னித்துவிடு,'' என்றான்.

''எனக்கு நீங்கள் நன்றி கூடச் சொல்லவேண்டுமா? கௌரி என் உயிர்போல் அல்லவா? அவளைக் காப்பாற்றுவதற்கு நன்றிகூடத் தேவையா?''

ராஜு பேசாமல் இருந்தான். மோகினி ராஜுவை ஒரு முறை பார்த்தாள். ''கவலைப்படாதீர்கள். சீக்கிரமே நான் இந்த வீட்டை விட்டுப் போய்விடுகிறேன். நான் ஆரம்பித்த சூது நாடகத்தின் முடிவுக் காட்சி, நல்லவேளை கண்ணியமாக முடிந்துவிட்டது. நான் நல்ல பெயரோடு இந்த வீட்டை விட்டு விலகிக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது,'' என்று சொல்லிவிட்டு மோகினி அவள் அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டாள்.

மறுநாள் காலை விஜயாவிடம் வேலையை விட்டு விலகிக் கொள்வது பற்றிப் பேசவேண்டும் என்று நினைத்தாள். இப்போது விஜயாவுக்கு இருக்கும் அன்பு நிலையில் அவள் அதைத் தடுப்பாள். எப்படியாவது சாமர்த்தியமாகப் பேசி அவளை ஒப்புக்கொள்ளச் செய்து விலகிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

மறுநாள் காலை மோகினி மாடிக்குச் சென்றதும் விஜயா, ''சாந்தினி, அந்த இரும்புப் பெட்டியைத் திற,'' என்று சொல்லி, சாவியை அவள் கையில் கொடுத்தாள்.

மோகினி நடுக்கத்தோடு மெள்ளச் சென்று இரும்புப் பெட்டியைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு நகைப் பெட்டியை எடுக்கச் சொன்னாள். பிறகு பக்கத்திலுள்ள பீரோவிலிருந்து விலையுயர்ந்த புடவை, அதற்குப் பொருத்தமான ஒரு ஜாக்கெட் இரண்டையும் எடுக்கச் செய்தாள். புடவை நீல நிறம். ஜாக்கெட் நல்ல வெண்பட்டு. அதில் நடுநடுவே சிவப்புப் பூக்கள் போடப்பட்டிருந்தன. நகைப் பெட்டியிலிருந்து ஒரு ஜதை வைரக் கம்மலை எடுத்து வைத்தாள்.

பிறகு, ''சாந்தினி, நீ குளித்துவிட்டு வா,'' என்று உத்தரவு பிறப்பித்தாள்.

மோகினி ஊமை போல் பதில் சொல்லாமல் குளித்துவிட்டு வந்தாள். விஜயா, ''சாந்தினி, அடுத்த அறையில் சென்று இந்தப் புடவை ஜாக்கெட் நகை எல்லாம் அணிந்துகொண்டு வா,'' என்றாள்.

''என்னம்மா சொல்றீங்க! நான் இந்தப் புடவை நகை எல்லாம் அணிந்து கொள்ளவா?'' என்று அச்சத்தோடு கேட்டாள் மோகினி.

விஜயாவின் கண்கள் கலங்கியிருந்தன. ''சாந்தினி! நீ நல்ல புடவை, நகை அணிந்திருக்கும்போது எப்படி இருக்கிறாய் என்று பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது. நான் சொல்றபடி செய்,'' என்றாள்.

மோகினி ஒன்றும் பதில் சொல்லாமல் அடுத்த அறைக்குச் சென்று நகையணிந்து வந்தாள். அவளைப் பார்த்ததும் விஜயா அப்படியே அயர்ந்துவிட்டாள். நீலநிறப் புடவையில் தந்தச் சிலைபோல் நெற்றியில் குங்குமம் துலங்க வந்து நின்ற மோகினியைப் பார்த்து விஜயா, ''சாந்தினி, நீ ராணி போல இருக்கே. அருகே வா,'' என்றாள்.

மோகினி பயந்தபடி அருகே வந்தாள். அன்போடு அவளை ஒரு முறை பார்த்துவிட்டு, ''நீ எனக்குச் சகோதரியாகப் பிறந்திருந்தால் எவ்வளவு நிம்மதியாக இருந்திருக்கும்!'' என்றாள்.

அதே நிமிஷத்தில் அறைக் கதவு திறந்தது. ராஜு உள்ளே நுழைந்தான். அவன் ஏதோ பிரயாணத்துக்குத் தயாரானவன் போல் சில்க் ஜிப்பாவும் ஜரிகை அங்கவஸ்திரமும் அணிந்திருந்தான். பட்டும் வைரமும் மின்ன நிற்கும் மோகினியைப் பார்த்ததும் அவன் மனம் படபடத்தது. தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு தரையைப் பார்த்தான்.

அவனோடு வந்த கௌரி, டீச்சரைப் பார்த்துவிட்டு, ''அம்மா, டீச்சர் எவ்வளவு அழகா இருக்காங்க பார்த்தி

யாம்மா?'' என்று தன்னையும் அறியாமல் சொன்னாள்.

விஜயாவின் அன்பு திடீரென்று வெறுப்பாக எப்போது மாறுமோ என்று பயந்தபடி நின்றாள் மோகினி.

ராஜு, ''விஜயா! நானும் கௌரியும் உடுமலைப்பேட்டை கல்யாணத்துக்குப் போயிட்டு வர்றோம்,'' என்றான்.

விஜயா, ''நீங்க ரெண்டு பேர் மட்டும் போகவேண்டாம். சாந்தினியும் வரட்டும். அவள் கௌரியைக் கவனித்துக் கொள்வா,'' என்றாள்.

ராஜு தயங்கினான். ''அப்படீன்னா சாந்தினியும் கௌரியும் போயிட்டு வரட்டும். நான் எதுக்குப் போகணும்?''

''இல்லை இல்லை. எங்கப்பாவின் சகோதரன் மகள் கல்யாணத்துக்கு நான் போகவில்லையென்றாலும் நீங்களாவது போகவேண்டாமா? அப்படியே பழனிக்கும் போயிட்டு வாங்க. குழந்தை உயிர் பிழைச்சதுக்கு முருகனுக்குக் காணிக்கை செலுத்த வேண்டாமா?''

''நான் போயிட்டா உங்களுக்கு மருந்து கொடுக்க, சாப்பாடு கொடுக்க ....'' என்று சொல்லி மோகினி நிறுத்தினாள்.

''நீதான் இரவிற்குள் வந்துடப் போறியே? அதுவரையில் சமையல்காரன் கவனிச்சுக்குவான்.''

இந்த அளவுக்குத் திடுமென்று விஜயாவுக்கு ஏற்பட்ட மனப்போக்கு ராஜுவுக்குப் புரியவில்லை.

மோகினி கௌரியோடு அறையை விட்டுச் சென்றாள். அவள் போனதும் விஜயா ராஜுவிடம், ''என்ன குழம்பிப் போயிருக்கீங்க? எனக்குப் பெரிய உண்மை தெரிஞ்சது. தன் உயிரை மதிக்காமல் என் குழந்தையின் உயிரைக் காப்பாற்றக் கிணற்றில் குதித்த ஒரு பெண் எந்த விதத் தப்பும் செய்யமாட்டா. அவளை வெறும் வேலைக்காரியா மட்டும் நினைக்கறது சரியில்லேன்னு தோணுது. உங்க சித்தப்பா நம்ம வீட்டுக்கு உண்மையிலேயே சிறந்த உத்தமியைத்தான் அழைச்சிட்டு வந்திருக்கார். அவளைக் கார்லே அழைச்சிட்டுப் போறது கேவலம்னு நினைக்கிறீங்களா?'' என்று கேட்டாள்.

ராஜுவால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. ''உன் இஷ்டம் விஜயா,'' என்று சொல்லிவிட்டு அறையைவிட்டு நகர்ந்தான்.

(தொடரும்)

?



## தேவர், முருக பக்தரானது ஏன்?

அது ஒரு சிறிய கதை. அவரே இதைப் பேச்சு வாக்கில் ஒருமுறை கூறினார்.

தாய்க்குப்பின் தாரம் படம் எடுப்பதற்கு முன்பு சின்னப்ப தேவர் ஓர் 'அன் எம்ப்ளாய்மெண்ட்' இளைஞர். இந்த நிலையில் கோவையில் வாழ்ந்த அவர் ஒரு வெற்றிலை பாக்குக் கடையில் அக்கவுண்ட் வைத்து, சுமார் ரூ. 10 வரை கடன் வைத்துவிட்டார். அந்தக் கடைக்காரன் தேவரை நெருக்கினான். தேவரோ அந்தக் கடைப் பக்கம் போகாது சமாளித்தார். ஆனால் எத்தனை நாள் இப்படி 'அண்டர் கிரவுண்ட்' வாசம் செய்வது?

ஒரு நாள் கோவை வாளாங்குளத்தின் கரைமேல் நடந்தபடி தீர்க்க முடியாத கடனை எண்ணிச் சென்று கொண்டிருந்தவர், அருகே இருந்த முருகன் கோயிலை பார்த்து, ''முருகா! நீதான் காப்பாத்தணும்!'' என்றார்.

அந்த நாளில் பத்து ரூபாய் கடன் என்றால் தற்போது ஆயிரம் ரூபாய் மாதிரி ஆயிற்றே!

முருகனைக் கும்பிட்டுவிட்டு நடந்தவர் பாதையில் கிடந்த ஒரு காலி தீப்பெட்டியை 'புட்பால்'போல உதைத்துச் சென்றார். சிறிது தூரம் சென்ற பிறகு அவருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை, அந்தக் காலி தீப்பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்தார். அவரே பிரமித்துவிட்டார். அந்தத் தீப்பெட்டியில் பத்து ரூபாய் நோட்டு மடித்து வைக்கப்பட்டிருந்ததாம்.

''முருகா!'' என்று சத்தமிட்டபடி அந்தக் கோயிலுக்கு ஓடி சாஷ்டாங்கமாக விழுந்தாராம். அந்தக் கடனையும் உடனே தீர்த்துக் கட்டினாராம்.

இந்தச் சம்பவம்தான் அவரை முருகனோடு அப்பொழுதே பிணைத்துவிட்டது.

—எம். கே. ராஜகோபால்

!

## அத்தியாயம் 36



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

உடுமலைப்பேட்டை செல்லும் காரில் டிரைவருக்கு அடுத்தபடியாக ராஜு உட்கார்ந்திருந்தான்.

பின் சீட்டில் மோகினியும் கௌரியும் உட்கார்ந்திருந்தனர். விஜயாவின் வைர நகைகள், புடவை ஆகியவற்றை அணிந்து பின் சீட்டில் உட்கார்ந்திருந்த மோகினியின் உணர்ச்சிகள் புரியாத ஒரு கலவையாக இருந்தன.

முதல்தரமான பெரிய காரில் அவள் பயணம் செய்வது அதுதான் முதல் தடவை. விலையுயர்ந்த நகைகள் புடவை அணிந்தது அதுதான் முதல் தடவை.

அவள் மனத்தில் புரியாத இன்பம் ஒரு பக்கம், ராஜுவோடு காரில் பயணம் செய்கிறோம் என்பதில் ஏற்பட்ட வெட்கம் ஒரு பக்கம்.

நகை, புடவை, அணிந்துகொண்டு மினுக்குகிறாள் என்று ராஜு தவறாக எண்ணிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் ஒரு பக்கம்.

வீட்டை விட்டு விலகிக் கொள்கிறேன் என்று சொன்னவள் இப்போது வீட்டு எஜமானியின் ஸ்தானத்தில் காரில் அமர்ந்து வருகிறாளே என்று ராஜு நினைத்தால் என்ன செய்வது?

உண்மையிலேயே அவள் மனம் அந்தப் பயணத்தை வெறுத்ததா என்றால் அதுதான் இல்லை.

நல்ல புடவை, வைர நகைகளை அவள் மனம் வெறுத்ததா என்றால் அதுவும் இல்லை. 'மற்றப் பெண்களைப் போல்தானா நானும்? செல்வத்தின் பளபளப்புக்காக மனத்தைப் பறி கொடுப்பவள்தானா?'

'மஞ்சள் அழகும், குஞ்சியழகும் அழகல்ல, கல்வி அழகே அழகு' என்று எப்போதோ குழந்தைப் பருவத்தில் சாமியார் சொல்லிக் கொடுத்த தமிழ்ப் பாட்டின் அடிகள் அவள் ஞாபகத்துக்கு வந்து கொண்டுதான் இருந்தன.

கார் ஜன்னல் வழியாக வீசிய காற்று அவள் அணிந்திருந்த பட்டுச் சேலையின் மீது வீசி முந்தானையை விலக்கப் போகும்போது அவள் அதை இழுத்துப் பிடித்து உடலோடு ஒட்டிப் போர்த்திய போதெல்லாம் அந்தச் சேலை தன் உடல் செழிப்பை எவ்வளவு அதிகம் வெளிப்படுத்தியது என்பதை அவள் உணராமல் இல்லை.

ராஜுவின் மனத்தில் என்ன சிந்தனைத் தொடர் ஓடுகிறது என்பதை உணரத் துடித்தாள் மோகினி. ஆனால் ராஜு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

குழந்தை கௌரி நடுநடுவே கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு நேர் எதிரே சாலையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் ராஜு.

பின்புறம் கூடத் திரும்பாமல் கௌரியின் கேள்விகளுக்கு ராஜு பதில் சொன்னது மோகினிக்கு வேதனையாக இருந்தது.

'அவர் ஏன் இப்படி ஒரு மாதிரியாக இருக்கவேண்டும்? நான் அவரோடு காரில் வருவது அவருக்குப் பிடிக்கவில்லையா?' என்று நினைத்தாள்.

கோயம்புத்தூரிலிருந்து சுமார் பத்துப் பன்னிரண்டு மைல்கள் வந்த பிற்பாடு காரில் ஏதோ 'கடகட' என்று சப்தம் வரவே, டிரைவர் மெள்ளக் காரை ஓட்டிக் கொண்டு சென்று அருகில் உள்ள ஒரு பெட்ரோல் பங்கில் நிறுத்தினான்.

கார் பானட்டைத் திறந்து ஏதோ பழுது பார்த்துக் கொண்டிருந்தான். சுமார் பத்திலிருந்து பதினொன்று வய[...]துக்குள் உள்ள சிறுவர்கள் கூட்டம் கைகளில் புத்தகப் பையுடன் பள்ளி[...]க்குச் சென்று கொண்டிருந்தது. அந்த[...] சிறுவர் கூட்டம் பெரிய கார் ஒன்று பெட்ரோல் பங்கின் அருகில் நிற்கவு[...] காரை நோக்கி நெருங்கியது.

எதிர் வெய்யில் கண்ணாடி வழியே மோகினியின் தங்க நிற முகத்தி[...]



வீசி அவள் மேனியை இன்னும் பிரகாசப்படுத்தியது.

சிறுவர்களின் பார்வை மோகினியின் முகத்தில் பட்டதும் அந்தக் கூட்டத்திலுள்ள ஒருவன், "டேய், சினிமா ஸ்டார்டா," என்று கூச்சல் போட்டான்.

உடனே மற்றச் சிறுவர்கள் காரை நெருங்கினர்.

காரின் உட்புறம் உட்கார்ந்திருந்த மோகினியைச் சுட்டிக் காட்டி, பல ஸ்டார்களின் பெயரைச் சொல்லி, 'இதுவாயிருக்குமோ! அதுவாயிருக்குமோ!' என்று சர்ச்சை செய்ய ஆரம்பித்தனர்.

சிறுவர்களின் பேச்சுக் குரல் ராஜுவின் காதில் பட்டதும் அவன் திரும்பி மோகினியைப் பார்த்தான். மோகினியும் அதே சமயத்தில் ராஜுவைப் பார்த்தாள். ராஜு சிறுவர்களைத் தூரச் செல்லும்படி விரட்டினான். அதற்குள் சிறுவர் கூட்டத்தில் ஒருவன், "இத்தம்மா பழைய ஸ்டார் இல்லடா. யாரோ புது ஸ்டார்டா!" என்று சொல்லிவிட்டு ஓடினான்.

இதைக் கேட்டதும் மோகினி வெட்கத்தோடு தலை குனிந்தாள்.

ராஜு சிரித்தபடி, "என்ன செய்யறது மோகினி? நல்ல புடவை நகையணிந்து காரிலே உட்கார்ந்தாலே சிறு பிள்ளைகள், ஸ்டார் ஆக்கிடறாங்க," என்றான்.

அதற்குள் டிரைவர் பானட்டை மூடிவிட்டு டிரைவிங் சீட்டுக்கு வரவே ராஜு பேச்சை நிறுத்திவிட்டு முகத்தை முன்புறம் திருப்பிக் கொண்டான்.

கல்யாண வீடு செல்லும் வரையில் ராஜு அப்புறம் மோகினியிடம் பேசவில்லை.

டிரைவர் இல்லாத சமயத்தில் தன்னிடம் பேசிவிட்டு அவன் வந்ததும் ராஜு முகத்தை முன்புறம் திருப்பிக் கொண்டது ஆண்மையோ தைரியமோ நிறைந்த செயலாக அவளுக்குத் தோன்றவில்லை.

மோகினிதான் சாந்தினி என்ற



உண்மை தெரிந்த பின் அதை மனைவியிடமிருந்து மூடி மறைப்பதே மனைவிக்குச் செய்யும் துரோகம் என்று நினைக்கும் அளவுக்குப் பண்புள்ளவர், டிரைவரின் முன் ஏன் இப்படிப் பயப்பட வேண்டும் என்று புரியாமல் நின்றான்.

'மனிதனின் மனம் பல பகுதிகளால் ஆனதா? ஒரு பகுதியில் உறுதியும் மறு பகுதியில் பலவீனமும் இருக்குமா? ஒரு பக்கத்தில் சீலமும் வேறு ஒரு பக்கத்தில் மட்டமான ஆசைகளும் நிறைந்திருக்குமா?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

ஒரு விஷயத்தில் ஏற்பட்ட துணிவு இன்னொரு விஷயத்தில் ஏன் ஏற்படுவதில்லை?

சில நாவல்கள், கதைகளில் வருவது போல் பூராவும் நல்லவர்கள், பூராவும் கெட்டவர்கள் இருக்க முடியாது என்பதை உணர்ந்தான்.

மனம் என்பது ஒரு கலப்படம். நல்லதும் கெட்டதும், துணிவும் அச்ச



மானேஜர்:

''முதல் தேதி சம்பளத்தை உங்கள் வீட்டுக்கு அனுப்பினால் தான் இரண்டாம் தேதி ஆபீஸ் வருவீர்களா?''

பெண் குமாஸ்தா :

''ஆமாம் சார். பவுடர் டப்பி காலி. சோப்பு இல்லே. ஸ்நோவும் தீர்ந்துவிட்டது. சம்பளத்தை வீட்டுக்கு அனுப்பினால் தானே இதை எல்லாம் வாங்க முடியும்? இவைகளைப் போடாமல் வர முடியுமா என்னால்?''

மும், கொடுமையும் கருணையும், கலந்த ஒரு கலப்படம். அந்த ஒரு கலவையை நாம் பிறந்த சூழ்நிலை, வளரும் சூழ்நிலைதான் நமக்கு ஏற்படுத்துகிறது. அதுவே மொத்தத்தில் கர்மா என்ற முத்திரையில் நம்முடைய ஒரு பகுதி ஆகிறது. இம்மாதிரி கலப்படமான கர்மா ஒவ்வொரு பிறப்பிலும் ஏற்பட்டு மறு பிறப்பிலும் தொடர்ந்து, நம்மை ஆட்டி வைக்கிறதா? நன்மையும் தீமையும் இன்பமும் துன்பமும் மாறி மாறி நாம் அனுபவிக்கக் காரணமாக இருப்பவை நம் மனத்திலுள்ள பல பொருத்தமில்லாத பகுதிகள்தானே? அப்படியென்றால் யாரைத்தான் எதற்குத்தான் குற்றம் சொல்ல முடியும்!

அயோக்கியன் என்பது அவனவன் குற்றமல்ல. தலைவலி, ஜுரம், என்னும் வியாதிகள் மனிதனை வந்தடைவது போல் குணங்களும் அவனையறியாமல் அவனை வந்தடைகின்றனவா இப்படி?'

சிந்திக்கச் சிந்திக்க அவனுக்கு அவன் மீதும் உலகத்தின் மீதும் வெறுப்பு ஏற்பட்டது. சில விநாடிகளுக்கு முன் இரவல் வைர நகை, பட்டுப் புடவையில் தன் அழகை நினைத்து மகிழ்ந்த மோகினிக்கு இப்போது அவள் இருக்கும் நிலை திருப்தியளிக்கவில்லை.

உடுமலைப்பேட்டையில் கல்யாண வீட்டுக்கு வந்ததும் இன்னும் பெரிய சோதனைகள் அவனை எதிர் நோக்கின.

விஜயாவின் பந்துக்கள் நிறைந்த பெரிய ஒரு சமூகமே அந்தக் கல்யாணத்தில் கூடியிருந்தது. ராஜுவின் தந்தை வேங்கடபதி அந்தச் சமூகத்தில் பெரிய புள்ளியாக வாழ்ந்தவர். ராஜுவின் சிறிய மாமனார் வீட்டுக் கல்யாணம், விஜயாவின் பிறந்த வீட்டுக் கல்யாணம். அந்தக் கல்யாணத்துக்கு ராஜு செல்லும்போது தன் மனைவி இல்லாமல் வந்திருப்பதைப் பற்றி அவனிடம் யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை. விஜயாவின் நிலையை உணர்ந்த பந்துக்கள் அவள் வந்தால் தான் ஆச்சரியப்படுவார்கள்.

விஜயாவுக்குப் பதில் விஜயாவை விட அழகான இளமையான ஒரு பெண் விஜயாவின் கணவனோடு கல்யாணத்துக்கு வந்திருந்தது அங்குள்ளவர்களின் கவனத்தைக் கவர்ந்தது.

குழந்தை கௌரிக்குத் துணையாக ஒரு வீட்டு வேலைக்காரி வருவதில் தவறில்லை. அந்த வேலைக்காரியின் அழகுதான் பேச்சைத் தூண்டியது. அழகோடு அவள் விஜயாவின் வைர நகைகளை அணிந்து கண்ணையும் கருத்தையும் பறிக்கும் வகையில் ஒரு தேவமாது போல் பந்தலில் நுழைந்ததும் எல்லோர் கவனமும் ராஜு மீதும், மோகினி மீதும்தான் நின்றன.

உறவினர்கள் எல்லோரும் கௌரியிடம் மோகினி யார் என்று விசாரிக்கத் தொடங்கினர்.

கௌரி, ''என் டீச்சர்,'' என்று சொன்னாள். வயதான ஒரு பெண் பிள்ளை, ''உனக்கு டீச்சரா, இல்லை உங்கப்பாவுக்கு டீச்சரா?'' என்று வேடிக்கையாகக் கேட்டதன் அர்த்தம் கௌரிக்குப் புரியவில்லை.

வெளிப்படையாக எல்லோரும் மரியாதையாக நடந்து கொண்டனர்.

ஆனால் அங்குள்ளவர்கள் ராஜுவையும் மோகினியையும் ஒரு மாதிரியாகப் பார்ப்பதை ராஜு உணர்ந்தான்.

''விஜயா ஏன் இப்படி யோசனையில்லாமல் மோகினியையும் கூட அனுப்பி வைத்தாள்? அவளுக்குள்ள வழக்கமான பொறுமைக் குணம் இருந்திருந்தால் கல்யாண வீட்டில் நிகழக்கூடிய விளைவுகளை முன்பே யோசித்திருப்பாள். மோகினியைத் தனியாக என்னுடன் அனுப்பக் கனவிலும் இசைந்திருக்க மாட்டாள்.

மோகினி கிணற்றில் குதித்துக் கௌரியைக் காப்பாற்றியதிலிருந்து விஜயாவின் போக்கில் ஒரு மாறுதல்...

என்றுமே அவள் சுபாவத்தில் இல்லாத கனிவு, அன்பு இருந்தது...'

ராஜு முகூர்த்தம் முடிந்து சாப்பிட்டவுடனே அங்கிருந்து புறப்பட்டுவிடுவது என்று தீர்மானித்தான்.

கல்யாணத்துக்கு வந்திருந்த மைனர்கள் காசு வைத்துச் சீட்டாட ராஜுவை அழைத்தனர். மூன்று சீட்டு ஆட்டம்!

ராஜுவால் மறுக்க முடியவில்லை. ஆடவும் பிடிக்கவில்லை. ஆனாலும் ஆட உட்கார்ந்தான். அன்று அவனுக்குத் தொடர்ந்து வெற்றி. ஒவ்வொரு முறையும் வெல்லும் போது ராஜுவின் கையிலிருந்த சீட்டு மூன்று ராணியாக இருந்தது.

சீட்டாடிக் கொண்டிருந்த ஒருவன், ''ராஜு! நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி, மூன்று ராணியாக அடிக்கிறேடா,'' என்றான்.

அடுத்தவன் கிண்டலாக, ''ராஜுவுக்கு எப்பவுமே லேடீஸ் 'லக்'

உண்டு. அதுதான் மூணு க்வீன் திரும் பத் திரும்ப வருகிறது. நமக்குத் தெரிந்தவரை இரண்டு ராணி உண்டு. மூன்றாவது யாரோ?'' என்று சொல்லி விட்டு வெற்றிலைக் காவி படிந்த பற் களைக் காட்டினன்.

ராஜு அடுத்த ஆட்டத்திலேயே எழுந்துவிட்டான். சாப்பிட்டவுடனே கௌரியையும் மோகினியையும் அழைத் துக்கொண்டு கோயம்புத்தூரை நோக் கிப் புறப்பட்டான்.

மோகினி காரில் ஏறும்போது கல்யாண வீட்டு வெளிப் புறத்தில் கூட்டமாக ஆண்களும் பெண்களும் நின்று கொண்டு அவர்களைக் கவனிப் பதைப் பார்த்தாள். மோகினியின் உள்ளம் துடித்தது.

மாலை சுமார் மூன்று மணிக்கே கோயம்புத்தூர் பங்களாவுக்கு வந்து சேர்ந்தனர்.

விஜயா அன்று இரவுதான் தன் கணவன் வரவை எதிர்பார்த்தாள். அவ்வளவு சீக்கிரம் திரும்பிவிட்டதன் காரணம் அவளுக்குப் புரியவில்லை. குழந்தை கௌரியாவது சும்மா இருந் திருக்கலாம்.

கௌரி, ''அம்மா, எனக்குக் கல் யாணத்திலேயே இருக்கலாம் போலி ருந்தது அம்மா! அப்பாதான் அவசரப் படுத்திக் கூட்டிட்டு வந்துட்டார்,'' என்று முறையிட்டாள்.

விஜயா கணவனை, ''ராத்திரி சாப் பாட்டுக்கு அப்புறம் வரக் கூடாதோ?'' என்று கேட்டாள்.

''எனக்கு அங்கு இருக்கப் பிடிக்க வில்லை,'' என்று சொல்லிவிட்டு அங் கிருந்த புஸ்தகத்தைப் படிக்க ஆரம் பித்தான் ராஜு.

மோகினியும் புடவை நகைகளைக் களைந்துவிட்டு தன்னுடைய ஆடையை உடுத்திக் கொண்டு மாடிக்கு வந்தாள். அவள் கையில் நகைகளும் நீலப் பட்டுப் புடவையும் இருந்தன. புடவையைப் பீரோவில் வைத்துவிட்டு நகைகளை இரும்புப் பெட்டியில் வைத்தாள்..

மோகினி விஜயாவிடம் திரும்பி, ''அம்மா, நகையெல்லாம் இரும்புப் பெட்டியில் வைத்துவிட்டேன்,'' என்று சொல்லிவிட்டு விஜயாவின் முகத்தைப் பார்த்தாள்.

விஜயா மோகினியிடம், ''என்ன சாந்தினி, உனக்குக் கல்யாணம் பிடிச் சிருந்துதா?'' என்று கேட்டாள்.

சாந்தினி தயங்கிவிட்டு, ''அம்மா, நீங்க வந்திருந்தா நல்லா இருந்திருக் கும்,'' என்று சொல்லிவிட்டு நிறுத் தினாள்.

மாடி அறையில் மௌனம் நிலவியது. மோகினி மெள்ள கணவனையும் மனைவி யையும் அறையில் தனியே விட்டு நகர்ந்தாள்.

மோகினி வெளியே நகர்ந்ததும், அதுவரையில் சிந்தித்தபடி பேசாமல் இருந்த விஜயா கணவனை நோக்கி, ''ஏன், கல்யாணத்தில் என்ன நடந் தது?'' என்று கேட்டாள்.

ராஜு சற்று வெப்பத்துடன், ''நீ கௌரியோடு அவள் டீச்சரையும் அனுப்பினது சரியில்லை. கல்யாணத் துக்கு வந்திருந்தவங்க அவளை ஒரு ஒரு மாதிரியாகப் பார்த்தாங்க,'' என்றான்.

விஜயாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

''கௌரியின் டீச்சர்தான் சாந்தினி ன்னு சொல்றதுதானே?''

''யாராவது ஏதாவது என்னை நேரில் கேட்டால்தானே பதில் சொல்ல? ஒன்றும் கேட்காமல் அவர்களே தங்கள் மனத்துக்குள்ளே முடிவு பண்ணிட் டாங்க,'' என்று கூறிவிட்டுக் குளிக்கும் அறைக்குள் சென்றான்.

விஜயா சிந்தித்தபடி இருந்தாள்.

(தொடரும்)




மாப்பிள்ளை: பெண்ணுக்கு டைப் சொல்லிக் கொடுத்திருந்தால் டைப் ரைட்டர் வாங்கித் தருவேன். வீட்டில் சும்மா இருக்கிற நேரத்திலே 'ஜாப்' டைப்பாவது செய்வாளே?

மாமனார்: கார் டிரைவிங் தெரியும் அவளுக்கு. ஒரு டாக்ஸி வாங்கிக் கொடுத்து விடுங்களேன்.

www.tamilbooksworld

# மின்னல், மழை, மோகினி



ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 37

ராஜூ உடுமலைப் பேட்டைக் கல்யாணத்தில் நிகழ்ந்ததைக் கூறியதும் விஜயாவுக்குக் குழப்பம்தான் ஏற்பட்டது. விஜயாவுக்கு அது புரியாத விஷயமில்லை. விஜயாவே ஒரு வாரத்துக்கு முன்பு இதேபோல்தான் நடந்து கொண்டிருப்பாள். அவள் மனமும் அப்போது சாந்தினியைப் பொறுத்த வரையில் சந்தேகப் படாமல் இல்லை. கடந்த சில நாட்களாகத்தான் விஜயாவின் சுபாவத்தில் மாறுதல் ஏற்பட்டது. அந்த மாறுதல் ஓர் அடிப்படை மாறுதலாக இருந்தது.

அன்று பட்டம் பறக்கவிட்டுக் கொண்டிருந்த கௌரி கால் தவறிக் கிணற்றில் விழவும், அதை மாடி பால்கனியிலிருந்து பார்த்த விஜயா தன்னையுமறியாமல் ''கௌரி!'' என்றலறி, சக்கர நாற்காலியிலிருந்து எழுந்து நின்றதும், அதே விநாடியில் சாந்தினி ஓடி வந்து கிணற்றில் குதித்ததும் விஜயாவின் மனத் திரையில் அழுத்தமாகப் பதிந்த காட்சிகள். மூர்ச்சை தெளிந்து எழுந்தபின் விஜயாவுக்கு எல்லாம் புதிதாக இருந்தன. அவளுடைய ஆசாபாசங்களையெல்லாம் அவள் மூர்ச்சையாகிக் கிடந்த இடைவெளியில் கடவுள் அவள் மனத்தில் புகுந்து மாற்றி அமைத்துவிட்டது போல் தோன்றியது. அதிர்ச்சி ஓரளவு விஜயாவின் கால்களுக்கு உணர்ச்சியைக் கொடுத்தது மட்டுமல்லாமல் அவள் உள்ளத்திலிருந்து வெறுப்பு, பொறாமை முதலிய உணர்ச்சிகளையே போக்கியிருந்தது. விஜயா முதன் முறையாக உலகத்தைக் குளிர்ச்சி நிறைந்த பார்வையோடு பார்த்தாள். வெறுப்பின் வெப்பம் அடங்கியிருந்தது. சாந்தினியின் மீது அன்பு ஏற்பட்டது.

கணவனிடம் எப்போதுமே அவளுக்கு ஆசை இருந்தது. ஆனால் அந்த ஆசையில் சந்தேகமும் குற்றம் காணும் தன்மையும் கூடக் கலந்து குடியிருந்தன. இப்போது அதே ஆசை ஒருவித அமைதியான கனவு நிறைந்த ஆசையாக மாறியிருந்தது.

முன்பெல்லாம் விஜயா, இரக்கத்துக்குப் பாத்திரமானவள் தான் ஒருத்திதான் என்று நினைத்துத் தன் தவறுகளுக்கெல்லாம் மற்றவர்கள் பொறுமை காட்டவேண்டுமென எதிர்பார்த்தாள். முன்பு சாந்தினி அழகாக இருந்ததே அவளுடைய குற்றமாக இருந்தது. ஆனால் இப்போது சாந்தினியின் அழகு குற்றமாகத் தோன்றவில்லை. சாந்தினியையும் அவள் கணவனையும் சேர்த்து உடுமலைப்பேட்டையில் உள்ள அவள் பந்துக்கள் பேசியதை சாந்தினிக்கு இழைத்த அவமானமாகவே நினைத்தாள். பரிகாரமாக சாந்தினிக்கு ஏதாவது ஒரு விதத்தில் நல்லது செய்யவேண்டும் என்று நினைத்தாள்.

சாந்தினி வந்ததிலிருந்து விஜயாவின் வீட்டில் நல்லதே நடக்கிறது. அவளைச் சாமியார் அழைத்து வந்த தினமே டாக்டர் அவளுடைய கார்டியோகிராம் ரிபோர்ட் நல்லபடி இருக்கிறது என்று சொன்னார். குழந்தைக்கு உயிரையே கொடுத்தாள். இப்போது விஜயாவின் காலுக்குப் பலம் வந்துவிட்டது. இன்னும் மூன்று நான்கு மாதங்களில் கைப்பிடிச் சுவரைப் பிடித்து நடக்கவும் முடியும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்...

இவ்வாறு சிந்தனையில் மகிழ்ந்தாள் விஜயா. அடுத்த விநாடியே மகிழ்ச்சி மறைந்தது. அவளுடைய இருதயம் ஏற்கெனவே இருமுறை தாக்கப்பட்டிருந்ததால், மூன்றாவது முறை ஒரு 'அட்டாக்' வந்தால் பிழைப்பது கடினம் என்று டாக்டர் சொன்ன வார்த்தைகள் விஜயாவின் ஞாபகத்துக்கு வந்தன.

தினமும் டாக்டர் வந்து இஞ்செக்ஷன் கொடுத்து, அவளது இருதயத்

தைப் பரிசோதித்துவிட்டுச் செல்வது வழக்கம். இன்று அவர் வந்தபோது இருதயத் துடிப்பு பலவீனமாக இருப்பதாகவும் உடலை அலட்டிக் கொள்ளாமல் இருக்கும்படியும் சொன்னார்.

விஜயா, "என்ன டாக்டர், இப்படிச் சொல்றீங்க? திடீரென்று என்னால் கால்களை அசைக்க முடிந்தது. கால்களுக்குப் பயிற்சி கொடுத்துப் பழைய படி ஆக்கலாம் என்றால் அதுவும் கூடாதென்கிறீர்களே!" என்று கடிந்து கொண்டாள்.

"இல்லையம்மா. எந்த அதிர்ச்சி உங்கள் கால்களுக்குச் சலனத்தைக் கொடுத்ததோ, அதே அதிர்ச்சிதான் உங்கள் இருதயத்தையும் தாக்கிப் பலவீனப் படுத்தியிருக்கிறது. மறுபடியும் அது சாதாரண நிலைக்கு வரும் வரையில் நீங்கள் எந்த விதமான சிறு உழைப்பிலும் ஈடுபடக் கூடாது," என்று சொல்லிவிட்டுச் சென்றார், டாக்டர்.

அவர் சென்ற பின் மோகினி மாடிக்கு வந்து விஜயாவுக்கு முகம் கழுவித் தலைவாரிப் பொட்டிட்டுவிட வந்தாள்.

டாக்டர் சொன்னதை விஜயா மோகினியிடம் கூறினாள்:

"என்ன சாந்தினி! டாக்டர்கள் சொல்லுவதெல்லாம் பூராவும் உண்மையாக இருக்குமா? அவர்களுக்குப் புரியாத விஷயங்கள் இருக்க முடியாதா? எனக்கு மாரிலே வலியோ ஆயாசமோ இல்லை. ஆனாலும் என்னை ஒன்றும் செய்யக் கூடாது என்று எச்சரிக்கிறார்கள். குழந்தை கௌரியையும் அப்படித்தான் ஷோரனூர் டாக்டர் எச்சரித்து வைத்திருந்தார். ஆனால் கௌரி படித்த பள்ளிக்கூடத்



தில் மோகினி என்று ஒரு டீச்சர் இருந்தாள். அந்த மோகினி டீச்சர் தான் சௌரிக்குத் தைரியம் கொடுத்து அவளை நடக்கச் செய்தாள். அப்போது நான் கூட அந்த மோகினி என் குழந்தையைக் கொன்றுவிடுவாள் என்று பயந்தேன். என் பயம் அவ்வளவும் தவறு என்று ஆகிவிட்டது. என் விஷயத்திலும் டாக்டர்கள் அப்படித் தான் தவருக எச்சரிக்கிருர்களோ என்று தோன்றுகிறது.''

உடனே மோகினியின் மனத்தில் 'இப்போதாவது நான்தான் அந்த மோகினி டீச்சர் என்று சொல்லி விடலாமா?' என்று தோன்றியது. ஆனல் துணிவு வரவில்லை. ''குழந்தை விஷயம் வேறு, பெரியவர்கள் விஷயம் வேறு, அம்மா. வளரும் குழந்தைகளின் உடலிலுள்ள குற்றங்களை இயற்கை, தானே சரி செய்துவிடலாம். ஆனல் பெரியவர்களுக்கு அதுமாதிரி ஏற்பட வாய்ப்பு இல்லை. அதனுலே நீங்க டாக்டர்கள் சொல்கிறபடி ஜாக்கிரதையா இருக்கிறதுதாம்மா நல்லது,'' என்று மட்டும் சொல்லி விட்டு நிறுத்திக் கொண்டாள்.

''என்ன சாந்தினி! கால்களை அசைக்காமல பிறத்தியார் கை பார்த்து எத்தனை நாள் நான் வாழ்வது? இந்தப் படுக்கைச் சிறையிலிருந்து எப்போ நான் விடுதலையடைவது? இந்த நாற்காலியிலிருந்தபடி என் உயிர் போயிடுமோ என்று பயமாயிருக்கிறது,'' என்று கண்கள் கலங்கக் கூறினுள்.

விஜயாவின் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளைக் கேட்டதும் மோகினிக்குப் பரிதாபமாக இருந்தது. விஜயாவின் அருகில் உட்கார்ந்து அவளை அன்போடு நடவியபடி, ''இத்தனை வருஷம் பொறுத்து இருந்திருக்கிங்களே, அம்மா. இன்னும் இரண்டு மாசம் பொறுங்கள். இருதயத்திற்கு பலம் வந்த பின்பு நீங்க நடக்க ஆரம்பிக்கலாம். வெண்ணெய் திரண்டு வர்றப்போ அவசரப் படாதீங்கம்மா,'' என்ருள்.

''சாந்தினி! நீ இந்த வீட்டுக்கு வந்த புதிசிலே நான் எவ்வளவோ உன்னைத் தப்பாய்ப் பேசியிருக்கேன், ஒரு நாள் உன் கன்னத்திலே கூட அடிச்சிருக்கேன். இருந்தாலும் நீ என்னை வெறுக்காமல் என் கூடப் பிறந்த சகோதரி மாதிரி என்னிடம் பிரியமா இருக்கிருயே! எங்க பந்துக்கள் எல்லாரும் எங்கிட்டே அன்பு காட்டுவாங்க. அந்த மரியாதை என் கணவரின் பணத்துக்காக, என் அந்தஸ்துக்காக. 'இந்த நொண்டிக்குப் பாரடி, எவ்வளவு ஆணவம்!' என்று பேசுவாங்க, வேறிடத்திலே. நான் உண்மையான அன்பையே கண்டதில்லை,'' என்று சொல்லி வருந்தினுள்.

''மற்றவர்கள் அன்பு எதுக்கம்மா? அவர்தான் உங்கள் மேலே உயிரையே வெச்சிருக்காரே!'' என்று ராஜுவைக் குறிப்பாக உணர்த்தினுள் மோகினி. விஜயா மோகினியை ஒரு முறை பார்த்துவிட்டுச் சில விநாடிகள் பேசாமல் இருந்தாள்.

''அவர் அன்பை வெறுமே அன்புன்னு சொல்லக் கூடாது சாந்தினி! அவர் ஆசை ஒரு நெருப்பு மாதிரி. கல்யாணமாவதற்கு முன்னடியே அவரை நான் சந்திச்சிருக்கேன். அப்போ எல்லாம் நான் ரொம்ப அழகா இருப்பேன், சாந்தினி, உன் மாதிரிதான் இருப்பேன். இந்த உலகத்திலே எந்தப் பெண்ணும் நான் அவரோடு இன்பமாய் இருந்த மாதிரி எந்த ஆடவனோடும் இருந்திருக்க முடியாது. அழகு, பணம், பலம் மூன்றும் நிறைஞ்ச கணவர் எனக்குக் கிடைத்தார். அழகு, பணம் மற்றவர்களுக்கு இருக்கலாம். ஆனுல் அவருக்குள்ள வலிமை இந்த உலகத்திலே வேறு யாருக்கும் இருக்காது..'' என்று சொல்லி விஜயா பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

அவள் ராஜுவின் வலிமையைப் பற்றிப் பேசும் போது மோகினியின் உடலில் ஒருவித சிலிர்ப்பு ஏற்பட்டது. தன் மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தை, வெப்பத்தை, விஜயா புரிந்து கொள்வாளோ என்று பயந்தாள் மோகினி.

ஆனல் விஜயாவின் மனம் கடந்த காலக் கனவுகளில் சென்று கொண்டிருந்தது. ''சாந்தினி! நான் அவரோடு அடைந்த இன்பத்தைக் கண்டு தெய்வத்துக்கே பொறுக்கவில்லை என்று தான் நினைக்கிறேன். அதனுல்தான் என்னை இப்படி ஆக்கி விட்டது. அவ்வளவு உடல் வலிமையுள்ளவர் எப்படிப் பெண் இன்பத்தைத் துறந்து வாழ முடியும் என்ற பயம்தான் என்னை ஆத்திரக்காரியாகச் செய்து விட்டது. அவர் வேறு பெண்ணை மனத்தால் நினைப்பது கூட என்னுல் பொறுக்க முடியாது, சாந்தினி! எத்தனை முறை அவரைச் சொற்

களால் வதைத்திருப்பேன் தெரியுமா? எவ்வளவு தரம் அவரை வீணாகச் சந்தேகப் பட்டிருப்பேன் தெரியுமா!'' இதெல்லாம் ஏன் உன்கிட்டே சொல்றேன் என்று எனக்கே புரியவில்லை,'' என்று சொல்லிவிட்டு மோகினியைக் பார்த்தாள். அவள் தலை குனிந்தபடி இருந்தாள். விஜயா, ''அப்போர்ப்பட்ட நல்லவரைக் கல்யாண வீட்டிலே இருக்கிற என் சொந்தக்காரர்கள் தவறாய்ப் பேசினாங்க என்றால் அது எவ்வளவு பெரிய கொடுமை! நீயே யோசித்துப் பாரு!'' என்று சொன்னாள்.

மோகினிக்கு என்ன சொல்வதென்று விளங்கவில்லை. ஒன்றும் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. ''அம்மா, நான் அந்தக் கல்யாணத்துக்குப் போயிருக்கக் கூடாது. அப்படிப் போயிருந்தாலும் உங்களுடைய வைர நகைகளை அணிந்து போயிருக்கக் கூடாதம்மா,'' என்றாள்.

விஜயா பதில் பேசாமல் படுக்கையில் படுத்துக் கொண்டாள். மோகினி அறையை விட்டு நகரப் போனாள். விஜயா திடீரென்று, ''நில்லு சாந்தினி!'' என்று கூப்பிட்டாள். படுக்கையடியில் இருந்த ஒரு தோல் பெட்டியை எடுக்கச் சொன்னாள் மோகினியிடம். பெட்டியைத் திறந்தாள். அதில் ஒரு ரோஸ் கலர் சேலையும், ப்ளவுசும் இருந்தன. அந்தச் சேலையின் தலைப்பிலும் உடலிலும் ஜரிகை மின்னியது. விஜயா சேலையையும் ப்ளவுசையும் படுக்கையில் வைக்கச் சொன்னாள்.

''சாந்தினி, இந்தச் சேலையை என் மாமனார் என் தேனிலவுக்கென்று தனியாகக் கொள்ளேகாலத்திலே ஆர்டர் கொடுத்துத் தயார் செய்யச் சொன்னார். இதை நான் அணிந்து நடந்து வந்தால் என் கணவர் அப்படியே சொக்கி விடுவார். சாந்தினி! மங்கிய ஒளியில் பார்த்தால் நிலா வெளிச்சத்தையே புடவையாக நெய்தது போல் தோன்றும்!''

''கண்களையும் கருத்தையும் பறிக்கும்படியாத்தாம்மா இருக்கு,'' என்றாள் மோகினி. இந்தச் சேலையை ஒரு நாளாவது நாம் அணிய வேண்டும் என்று பெண் இனத்துக்கென்றே இயற்கையாக ஏற்பட்ட ஆசை அவள் கண்களில் வெளிப்பட்டது.

''இதை நான் வெளியே எடுக்கிறதில்லை. ஏன் தெரியுமா? இதை அவர் பார்த்தாரானால் அவருக்கு இன்பமாகக் கழிந்த கடந்த கால நினைவுகள் எல்லாம் தோன்றும். அவர் சித்தம் குழம்பும். இதை நான் என்றைக்குமே அணியப் போறதில்லை. அதனாலே இதை உனக்குக் கொடுத்திடறேன்!''

''எனக்காம்மா! இவ்வளவு விலையுயர்ந்த சாரியா?'' என்று கேட்டாள் மோகினி.

''என்னிக்குமே இந்த வீட்டிலே இருக்கப் போறியா நீ? ஒரு நாள் திருமணமாகி வெளியே போகவேண்டியவள்தானே? அப்போ இதைக் கட்டிக் கொள்ளேன்,'' என்று கெஞ்சிய மாதிரி சொன்னாள் விஜயா.

மோகினி அந்தச் சேலையை வைத்த கண் எடுக்காமல் பார்த்தபடி இருந்தாள். அதன் கவர்ச்சி ஓர் உயிருள்ள ஓவியத்தின் கவர்ச்சி போல் இருந்தது. அந்தக் கவர்ச்சியில் பயங்கரம் பிரதிபலித்தது. அதைக் கையில் தொட்டதும் அது மோகினியின் உடலில் சிறு நடுக்கத்தையே கொடுத்தது. வீடுகளுக்கும் வைரங்களுக்கும் ரா

---

## பொம்மை வந்த விதம்!

ஒரு பொருளில் பொய்யும் மெய்யும் சேர்ந்தால் என்ன ஆகும்?

பொம்மையாகும்!

ஆம். 'பொம்மை' என்ற தமிழ்ச் சொல்லின் பழைய வடிவம் 'பொய் மெய்' என்பதே.

குழந்தையைப் போன்ற வடிவம்; ஆனால் குழந்தை அன்று. பொய். அது குழந்தைப் பொம்மை!

குரங்கு போன்ற உருவம், மெய். ஆனால் அது குரங்கு அன்று. பொய். ஆகவே அது குரங்குப் பொம்மை!

(பேராசிரியர் மு. வ. வின் மொழியியற் கட்டுரைகளிலிருந்து)

—எஸ். சேஷாத்திரி



புண்டு என்று சொல்லுவார்கள். அது மாதிரி இந்தப் புடவைக்கும் ராசி இருக்குமோ? அப்படி அதற்கென்று ஒரு தன்மை இருந்தால் அது விபரீத ராசியாகத்தான் இருக்கும் என்று தோன்றியது.

மோகினி அதை எடுக்கவே தயங்கினாள். "எடுத்துக் கொள், சாந்தினி! எடுத்து உன் பெட்டியிலே வை. நீ இந்த வீட்டிலே இருக்கிறவரையில் அணியவேண்டாம். நான் இந்தச் சேலையை உனக்குக் கொடுத்த விஷயம் அவருக்குத் தெரியவே வேண்டாம்!" என்றாள் விஜயா.

மோகினி அதை எடுத்துக் கொண்டு படிகளில் இறங்கித் தன் அறைக்கு வந்தாள். சேலையையும் ப்ளவுசையும் பெட்டியில் வைத்து மூடினாள். தன் கணவனைப் பற்றிய ரகசியமான விஷயங்களைக் கூட விஜயா தன்னிடம் சொன்னது மோகினிக்கு வேதனையையே கொடுத்தது. விஜயாவின் மாறுதல் திடீரென்று ஏற்பட்டதால் அது எவ்வளவு நாள் நீடிக்குமென்று பயந்தாள்.

ஏதாவது தக்க காரணத்தைச் சொல்லி அந்த வீட்டை விட்டுப் போய்விட வேண்டும். என்ன காரணம் சொல்லுவது? மோகினி யோசித்தாள். இப்போது விஜயா தன்னை ஒரு சகோதரி போல் நினைக்கிறாள். விலகிக் கொள்ள அனுமதிக்க மாட்டாளே? என்ன செய்வது! நாராயணியம்மாளுக்கு உடல்நிலை சரியில்லை என்று ஒரு சாக்குச் சொல்லிவிட்டு ஊருக்குப் போய்விடலாமா? ஷோரனூர் சென்றபின் திரும்பாமலே இருந்துவிட்டால்? அது ஒரு நாளும் வெற்றியடையாது. கடிதம் எழுதியோ ஆள் அனுப்பியோ விஜயா தன்னை மறுபடியும் வேலைக்கு வரும்படி அழைப்பாள்.... ஊருக்குச் சென்றபின், 'உங்களிடம் சாந்தினி என்ற பெயருடன் பழகியவள் மோகினி டீச்சர்தான்' என்ற உண்மையைக் கடித மூலம் தெரிவித்து விட்டால் என்ன? அதுவும் சரியெனத் தோன்றவில்லை. எல்லோரையும் வெறுத்து, சந்தேகக் கண்ணோடு பார்த்து வந்த விஜயாவின் மனத்தில் இப்போதுதான் மனித இனத்தின் மீதே நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கை போய், அவள் பழைய விஜயா ஆகிவிடுவாள் என்ற பயமும் மோகினிக்கு ஏற்பட்டது. காலமும் கடவுளும் தான் இந்தத் தர்ம சங்கடத்திலிருந்து தனக்கு விடுதலையளிக்க வேண்டும் என்று நினைத்தாள்.

கடவுள் வேறு திட்டங்களை வகுக்கிறார் என்பது அவளுக்குப் புரியவில்லை.

அன்று மாலை திடீரென்று செய்தி வரவே ராஜு நீலகிரியில் குன்னூருக்கு அருகிலுள்ள தன் எஸ்டேட்டைப் பார்க்கப் போய்விட்டான்.

அவன் வீட்டில் இல்லாததே மோகினிக்கு நல்லதாகப் பட்டது. ஆனால் குன்னூருக்குச் சென்ற ராஜுவின் மனத்தில் நிம்மதியே இல்லை. உடுமலைப் பேட்டைக் கல்யாணத்தில் அவனையும் மோகினியையும் சேர்த்துக் கற்பனை செய்த அவதூறுகள் அவன் மனத்தைக் குழப்பின. ஆதாரமில்லாத அவதூறுகளாயிருந்தால் பரவாயில்லை. மறந்து விடலாம். மோகினியைப் பார்க்கும் போதெல்லாம் அவன் மனத்தில் ஏற்படும் சலனம் அவனை வேதனைக்குள்ளாக்கியது. தன்னை மறக்கக் கையில் எடுத்து வந்த டி. எச். லாரன்ஸின் 'லேடி சாட்டர்லீஸ் லவர்' என்ற புத்தகத்தைப் படித்தான். அந்தப் புத்தகத்தில், கதாநாயகி வேலைக்காரனின் குடிசைக்குச் சென்று கூச்சமில்லாமல் அவனிடம் தன் உடலை அர்ப்பணிக்கும் காட்சியைப் படித்தான். அதைத் திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும் என்று தோன்றியது. 'உடல் பசிதான் காதலின் முடிவு நிலை. உடலையும், அதன் பசியையும் மறந்த காதல் இருக்க முடியாது.' என்ற லாரன்சின் தத்துவம் சரிதானு என்று யோசித்தான். குன்னூரின் குளிரில், கம்பளிகளின் அடியில் படுத்திருந்த அவனுக்கு அவன் உடலின் வெப்பம் ஆசைகளின் தாக்குதலால் இன்னும் அதிக வெப்பமாகத் தோன்றியது.

அன்று பிற்பகல் அடுத்த பங்களாவில் தங்கியிருந்த இரண்டு ஐரோப்பியர்கள் அவனை விருந்துக்கு அழைத்தனர். அவர்கள் தேயிலை எஸ்டேட்டில் வியாபார நிமித்தம் வந்தவர்கள்.

அவர்கள் அளித்த மதுவை முதலில் குடிக்க மறுத்தான். மறுப்பது மரியாதை இல்லை என்று அவனுடைய மானேஜர் வற்புறுத்தவே மரியாதைக்காகக் கொஞ்சம் குடித்தான். அவன் இருந்த குழம்பிய நிலையில், பேச்சுப் போக்கில் இன்னும் கொஞ்சம் குடித்தான். மனத்திலுள்ள சுமை படிப்படியாக இறங்குவது போல் தெரிந்தது. உணவு அருந்திவிட்டுத் தன் 'காட்டே'

ஜுக்கு வந்து படுத்தான். அயர்ந்து தூங்கிஞன்.

கண் விழித்ததும் மணி ஏழு ஆகி விட்டதை உணர்ந்தான். அவன் உடலில் ஒரு மதமதப்பு இருந்தது. அவன் மனச் சாட்சியின் குரல் அவ்வளவு வலிமை உள்ளதாக இருக்கவில்லை. போதையுடன் படுத்துத் தூங்கிய போது அவன் மனத் திரையில் ஏற்பட்ட கனவுகளின் தொடர்ச்சியோ என்னவோ, விழித்தெழுந்ததும் அவனுக்கு மோகினியின் நினைவுதான் வந்தது. நீலப் புடவையில், வைர நகையணிந்து காரின் பின் சீட்டில் உட்கார்ந்திருந்த உருவம்தான் அவன் கண்முன் நின்றது.

ஓர் அசுர சக்தி அவனைக் கோயம்புத்தூருக்குச் செல்லும்படி தூண்டியது. இரவு ஆகிவிட்டதே, மலை வழியாயிற்றே என்று கூட அவன் நினைக்கவில்லை. உடனே காரை எடுத்துக்கொண்டு கோயம்புத்தூரை நோக்கிப் புறப்பட்டான். காந்தம் ஊசியைத் தன்னிடம் இழுப்பது போல் கோயம்புத்தூர் அவனை இழுத்தது. வேலை முடியவில்லையே என்று மானேஜர் அவனை தடுக்க முயன்றதற்கும் பலனில்லை. வியாபாரம் அவ்வளவு முக்கியமானதாகத் தோன்றவில்லை ராஜுவுக்கு. இவ்வளவு வருஷங்களாக அணைபோட்டுத் தடுத்திருந்த உணர்ச்சிகள் வெள்ளமாக எழுந்து தாக்கின. இருளில் விறைத்துப் பார்த்தபடி பறக்கும் காரில் அமர்ந்திருந்தான்.

கார் மேட்டுப்பாளையம் வரும் போது பேய்மழை பெய்து கொண்டிருந்தது. இடியோசையும் மின்னல் ஒளியும் கண்களைப் பறித்தன. டிரைவர் கூட, ''மேட்டுப்பாளையத்தில் தங்கி விடலாமா சார்?'' என்ருன். ஆனல் ராஜுவின் மனத்தில் வீசிய புயல் இயற்கையின் புயலைவிட வலிமை மிகுந்து இருந்ததால் அவன் மழையைப் பாராட்டாமல், ''பரவாயில்லை. கோயம்புத்தூருக்கு ஓட்டு,'' என்ருன்.

மேட்டுப்பாளையத்தைத் தாண்டிக் காரமடை வரும்போது வழியில் ஒரு பள்ளத்தில் வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. வண்டி நின்றுவிட்டது. கொட்டும் மழையில் குடையின் உதவி கூட இல்லாமல் டிரைவர் பானெட்டைத் திறந்து டார்ச் லைட்டின் உதவியால் வண்டியைப் பழுது பார்க்கலாஞன். ராஜு, ''இன்னும் ரிப்பேர்



''சனியனே! பல்லைக் காட்டேன் உனக்குத்தான் பல் தேய்க்கத் தெரியலேன்னு நானும் நாலுவது தேச்சு விடறேன்!''

முடியவில்லையா?'' என்று டிரைவனை விரட்டிக் கொண்டேயிருந்தான்.

அந்த டிரைவர் வாழ் நாளிலேயே எஜமான் இவ்வாறு விரட்டிப் பார்த் இல்லை. 'இவருக்கு இன்று என்ன வந்துவிட்டது? ஏன் இப்படித் துடிக் ருர்?' என்று ஆச்சரியப்பட்டான்.

அங்கே—

கோயம்புத்தூரில் பேய் மழையும் காற்றும் அடித்தன. மோகினி மாடி பால்கனியின் ஜன்னல்களையெல் லாம் மூடினாள். இடிச் சத்தம் கேட்டு குழந்தை கௌரி நடுங்கினாள். மோகினி அவளருகில் உட்கார்ந்து அவளைத் தூங்கச் செய்தாள். பிறகு விஜயா விடம், ''அம்மா, நான் இங்கேயே உங்கள் பக்கத்தில் துணைக்குப் படுத்துக் கொள்ளட்டுமா?'' என்று கேட்டாள்.

விஜயா, ''வேண்டாம் சாந்தி நீ போய்ச் சாப்பிட்டுவிட்டு உன் அறையிலேயே படுத்துக் கொள்,'' என்று கூறிவிட்டாள்.

கீழே இறங்கி வந்தாள் மோகினி காற்றில் விளக்குகள் ஆடிக் கொண் டிருந்தன. அதனால் ஹாலிலுள்ள நிழல்களும் ஆடுவதுபோல் தெரிந்தது சாப்பிட்டு விட்டுத் தன் அறைக்கு வந்தாள். மின்னலும் மழையும் இன் னும் அதிகமாகி இருந்தன.

மோகினியைப் புரியாத ஒரு பய பிடித்துக் கொண்டது.

(தொடரும்




## அத்தியாயம் 38

குழந்தையாக இருந்த போது இதே மாதிரி மின்னல் மழையில் அவள் தாயோடு ஷோரனூரிலிருந்து பஸ்ஸில் வந்தது அரைகுறையாக ஞாபகத்துக்கு வந்ததும் மோகினியின் நெஞ்சு படபடத்தது. அந்த மின்னலும் மழையும் மோகினியின் வாழ்வில் ஒரு மாறுதலைக் கொடுத்தது. இந்த மின்னலும் மழையும் என்ன செய்யுமோ என்ற எண்ண அலை அவள் மனத்தைத் தாக்கியது. மடேர் என்று ஆலமரம் முறிவது போன்ற ஓர் இடி ஒலித்தது. தன் காதுகளை உடனே கைகளால் பொத்திக்கொண்டாள் மோகினி. அவள் பெட்டி திறந்து கிடந்தது. அதன் மேல் புறத்தில் முதல் நாள் விஜயா கொடுத்த ரோஸ் கலர் சரிகைப் புடவையும், பிளவுசும் இருந்தன. அந்தப் புடவை, 'என்னை அணிந்துகொள்,' என்று அழைப்பது போல் தோன்றியது. 'விஜயாவும் தூங்கிவிட்டாள். அவரோ குன்னூரில் இருக்கிறார். நாம் இந்தப் புடவையை ஒரு முறை அணிந்து அழகு பார்த்தால் என்ன?' என்று நினைத்தாள் மோகினி. உடனே புடவையை எடுத்து அணிந்து, பிளவுசையும் அணிந்துகொண்டு ஹாலுக்குள் வந்தாள். அங்குள்ள ஆளுயர நிலைக் கண்ணாடி முன் நின்று தன் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆடும் விளக்கின் மங்கிய ஒளியில் சந்திர கிரணங்களை நூலாக வைத்து நெய்த சேலை போல் தோன்றியது அது.

தன் அழகில் லயித்து நின்ற மோகினி காற்றின் வேகத்தில் வெளிக் கதவு திறந்து கொண்டதைக் கவனிக்கவில்லை. ஈரம் படிந்த ஆடையும், கலைந்த தலையும், சிவந்த கண்களுமாக வெறியின் உருவமாக நுழைந்த ராஜுவையும் கவனிக்கவில்லை.

கண்ணாடியில் தன் முகத்துக்குப் பின்புறம் ராஜுவின் உருவம் தெரிவதைப் பார்த்ததும் மோகினி திடுக்கிட்டாள்.

'குன்னூரில் இருக்க வேண்டியவர் கொட்டும் மழையில் எப்படி வந்தார்? ஏன் வந்தார்? இல்லை, நாம் பார்ப்பது ஒரு நிழல் காட்சியா?' என்று திகைத்துத் திரும்பினாள்.

காற்றுக் காரணமாக ஹாலில் தொங்க விடப்பட்டிருந்த விளக்கு அங்குமிங்குமாய் அலைக்கழிக்கப்பட்டு ஒளியையும் நிழலையும் மாறி மாறிப் பொருள்களின் மீது வீசிப் பொருள்களின் உருவங்களையே பயங்கரத் தோற்றமாக்கிக் காட்டியது. படிக்கட்டின் நிழல் மோகினியின் முகத்தின் மீது விழுந்தபடி இருந்ததாலும், அவள் உடல் மீது வீசிய ஹால் விளக்கின் ஒளி ஊசலாடியபடி இருந்ததாலும், மோகினியின் உருவம் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய உருவமாகவும் இல்லை.

குன்னூர் ஐரோப்பியர் மாளிகையில் அதிசயமாக ராஜு அருந்திய மதுவின் மயக்கம், அதோடு சேர்ந்த ஆசைக் குழப்பம்— இரண்டும் அவனது நிலையை ஓர் அசாதாரண மனிதனாக்கியது. மின்னல், மழை, பேய்க்காற்று மூன்றையும் சட்டை செய்யாது ஓர் அரக்கன் போல் வீட்டை வந்தடைந்தவன் பார்வையில், முதலில் பட்டது அவன் மனைவி பல வருடங்களுக்கு முன் தேனிலவின்போது அணிந்த அந்த அழகான பட்டுச் சேலைதான். விஜயாவை படிக்கட்டுகளில் இறங்கி,

பழைய இளமையோடு நிற்பது போல் தெரிந்தது. அவன் எதை அடிக்கடி விரும்பிக் கனவு கண்டு வந்தானோ, அதே காட்சியைப் பார்த்தான். "விஜயா!" என்ற வார்த்தைதான் அவன் உதடுகளில் ஒலித்தது.

ஓடிப்போய், "விஜயா! விஜயா!" என்று கூறியபடி மோகினியை அணைத்துக் கொண்டான்.

இருவர் உடலும் ஒன்றோடு ஒன்று உறைந்தபடி நிற்கும் போதுதான் ராஜுவிற்கு அவன் மோகினியை அணைத்து நிற்கிறோம் என்ற உண்மை புரிந்தது. அவன் உடலும் மனமும் அடைந்த இன்ப 'போதை நிலையில், மோகினியைத் தொடுவது சரியில்லை என்ற நேர்மை உணர்ச்சி வலிமையில்லாது ஆர்க்கெஸ்ட்ராவின் பின்னணியில் ஒலிக்கும் வயலின்போல் மென்மையாக ஒலித்தது. அவன் மனத்தின் முன்னணியில் பயங்கரமாக ஓலமிடும் அரக்க உணர்ச்சிகளின் கூச்சலில் மற்றது கேட்கவில்லை.

மோகினியோ புரியாத ஓர் உலகத்தில் கால்கள் பாவாமல் மிதந்தபடி இருந்தாள். உள்ளங்கால் முதல் உச்சந் தலைவரை மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. கண்கள் மூடி உதடுகள் திறந்தன. இடம் காலம் என்ற இரண்டு பரிமாணங்களும் அவள் அனுபவத்திலிருந்து மறைந்தன. ஒரே இருள். அதன் நடுவே கண் கூசும் ஒளி. அது ஒளியா இருளா? அவளுக்குப் புரியவில்லை. பிரம்மத்தைத் தொட்ட நிலையில் சிந்தனை செத்து நிற்குமாம் சித்தர்களுக்கு. மோகினிக்கும் சிந்தனை சாய்ந்து உணர்வுகள் இன்பத்தில் ஒய்ந்து எல்லாம் ஓர் ஆனந்த சூனியத்தில் ஒடுங்கி நின்றன. ஆறு கடலில் கலப்பது போல், ஐயம் தெளிவில் மறைவது போல், மென்மையும் புனிதமும் நிறைந்த பெண்மை வலிமை நிறைந்த அவன் ஆண்மையில் கலந்தது.

வெளியே வீசிய மின்னலின் ஒளியும் புயலின் வேகமும் சேர்ந்து ஒரு கலவைப் பொருளாகி, அந்தக் கலவை அவர்கள் இருவர் உடலிலும் பாய்ந்தது போல் பிரியாமல் நின்றனர். பாபமும், புண்ணியமும் இரண்டும் உணராத ஒரு நிலை சமூகம் வகுத்த சட்டங்களைப் புரிந்து கொள்ளாது இயற்கை தன்னிச்சையாகப் பஞ்ச பூதங்களில், புல் பூண்டுகளில் மிருகத்தில் இயங்குவது போல் அந்த இரண்டு கண்ணற்ற மனித ஜீவன்களிடமும் இயங்கியது ஒரு விநாடிக்கு. ஒரே ஒரு விநாடிக்குத்தான்.

'டமார்!' என்று ஓர் இடி. அந்த வீட்டின் கூரைமீதே விழுந்தது போல் பயங்கரமாக ஒலித்தது. அடுத்த கணமே அந்த வீட்டில் மின்சாரத் தொடர்பு துண்டிக்கப்பட்டு வீடு பூராவும் இருள் சூழ்ந்தது. ஹாலில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த ஒரு விளக்கும் அணைந்துவிடவே ராஜுவும் மோகினியும் இருளில் நின்றனர். ஒளி இருந்தபோது உணர்ச்சியால் பார்வையிழந்து குருடர்களாய் நின்ற ராஜுவுக்கும் மோகினிக்கும் கும்மிருட்டில் உணர்ச்சி தணிந்து பார்வை திரும்பியது.

"என்னை விடுங்கள்," என்று பதறியபடி மோகினி விலகிக் கொண்டாள். என்ன தவறு செய்துவிட்டோம் என்று துடித்தாள்.

'கலந்தால்தான் தவறு? அணைத்தாலும் அது துரோகம்தானே?' என்று வேதனைப்பட்டான் ராஜு.

அதே சமயத்தில் மாடியிலிருந்து விஜயாவின் அலறல் கேட்டது. "சாந்தினி, சாந்தினி!" என்று தொடர்ந்து அழைத்தாள்.

ராஜு, "மோகினி, மெழுகுவர்த்தியை எடுத்து வா சீக்கிரம்," என்று எஜமானனாகக் கட்டளையிட்டான்.

பதில் பேசாமல் மோகினி மெழுகுவர்த்தியை ஏற்றிவர ஓடினாள். மாடியில் ஜன்னல், காற்றின் வேகத்தால் திறந்து கொள்ள அதே சமயத்தில் பயங்கரமான இடி தன் தலைமேல் விழுவதைப் போல் ஒலிக்கவும் விஜயா விழித்துக் கொண்டாள். குழந்தை வெளிறியும் பதறியபடி எழுந்து படுக்கையிலிருந்து மூர்ச்சையடைந்தாள். மயங்கிக் கிடக்கும் குழந்தையை எடுக்கத் தன்னை மறந்து எழுந்த விஜயா வழியிலிருந்த ஸ்டூல் தடுக்கி விழுந்தாள். உடனே அவளுக்கு மார்பு வலி எடுக்கவும், "சாந்தினி!" என்று கூவி உதவிக்கு அழைத்தாள்.

அந்தக் குரல்தான் ராஜுவின் காதில் விழுந்தது. மோகினி மெழுகுவர்த்தியை எடுத்து வரவும் இருவரும் மாடி அறைக்கு ஓடினர். மோகினி மெழுகுவர்த்தியை மேஜை மீது வைத்து விட்டுத் திறந்திருந்த ஜன்னலை மூடினாள்.

ராஜு தரையில் கிடந்த மனைவியைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தி



ஞன். கீழேகிடக்கும் குழந்தையை எடுத்துப் படுக்கையில் விட்டான்.

விஜயா, "குழந்தை கௌரியைப் பாருங்க. . மயங்கிப் போயிட்டா," என்றாள்.

ராஜு குழந்தையிடம் ஓடினான். விஜயா மூச்சுத் திணறுவதைக் கவனித்த மோகினி, "அம்மாவுக்கு மூச்சு விடமுடியல்லே. டாக்டரைக் கூட்டிவாங்க," என்று கட்டளையிட்டாள்.

ராஜு மயங்கிக் கிடக்கும் குழந்தையைப் பார்த்தான். வெளுத்த முகத்துடன் மூச்சு வாங்கியபடி கிடக்கும் விஜயாவைக் கவனித்தான். உடனே அறையை விட்டு ஓடினான். டிரைவரைக் கூட அழைக்கவில்லை. அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பான் என்று ராஜுவுக்குத் தெரியும். தானே காரை எடுத்துக் கொண்டு டாக்டரை அழைத்துவரச் சென்றான்.

மாடி அறையில் விஜயா மெள்ளக் கண் திறந்தாள். அவளுடைய மங்கிய பார்வையில் மோகினியின் உருவம்தான் தெரிந்தது. மோகினி, "அம்மா, இந்தத் தண்ணியைக் கொஞ்சம் சாப்பிடுங்கம்மா," என்று சிறிது தண்ணீர் கொடுத்தாள்.

விஜயா, "சாந்தினி... சாந்தினி.." என்று கூறியபடி மோகினியைப் பார்த்தாள்.

மேஜை மீது வைக்கப்பட்ட மெழுகுவர்த்தியின் ஜுவாலை காற்றில் ஆடியது. அதன் வெளிச்சத்தில் குனிந்து விஜயாவைக் கவனித்துக் கொண்டிருந்த மோகினியின் நிழல் ராட்சசப் பரிமாணத்துக்கு எதிர் சுவரில் விழுந்தது. விஜயாவின் பார்வை அப்படியே மோகினியின் மீது குத்திட்டு நின்றது. அவள் பார்வையில் வெறுப்பு என்ற ஓர் உணர்ச்சிதான் வெளிப்பட்டது. சுண்ணாம்பு போல் வெளுத்துவிட்ட விஜயாவின் முகத்தில் கறுப்பான கண்கள் ஒளி வீசின. விஜயாவின் உயிரெல்லாம் ஒருங்கே அவள் கண்களில் நிற்பது போல் தெரிந்தது.

விஜயா, "குன்னூரில் இருந்தவர் எப்போ வந்தார்? இல்லே, அவர் குன்னூருக்குப் போகாமல் இங்கேயேதான் இருந்தாரா?" என்று கேட்டாள். அந்தக் கேள்வி கேட்பதற்குள் விஜயாவின் மூச்சு முட்டியது.

"இல்லேம்மா. குன்னூருக்குப் போனவர் ஐந்து நிமிஷத்துக்கு முன்னாலே

தாம்மா வந்தாரு," என்றாள் மோகினி.

விஜயா சந்தேகத்தோடு மோகினியைப் பார்த்தாள். "ஐந்து நிமிஷத்துக்கு முன்னால் வந்தவர் மாடிக்கு வராமல் கீழே என்ன செய்து கொண்டிருந்தார்? இந்தப் பேய் மழையில் நீ அவருக்காக அலங்காரம் செய்து கொண்டு காத்திருந்தாயா?"

மோகினியின் உடல் சிலிர்த்தது. விஜயா அளித்த பட்டுச் சேலையை அணிந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். அந்தச் சேலையை இந்த வீட்டில் இருக்கும்வரை கட்டிக்கொள்ள வேண்டாம் என்று விஜயா எச்சரித்திருந்ததையும் உணர்ந்தாள். மெழுகுவர்த்தியை ஏற்றிக்கொண்டு வரும் அவசரத்தில் சேலையை மாற்றி வேறு சேலை கட்டிக்கொண்டு வர அவகாசம் ஏது?

விஜயாவின் கணவன் மனத்தில் ஏற்பட்ட ஆசைக்குக் காரணம்? அவள் அந்தச் சேலையில் நின்றதுதான் காரணமா? ஆம், அவர் அவளை வந்து அணைத்தபோது கூட, 'விஜயா...' என்று கூறித்தான் அணைத்தார்.

இவ்வாறு மோகினி சிந்திக்கும் போதே விஜயா தொடர்ந்து ஆத்திரத்தோடு கேட்டாள்: "நீயும் அவரும் சேர்ந்துதானே மாடிக்கு வந்தீர்கள்? கீழே என்ன நடந்தது? சொல்!"

மோகினி, "ஒன்றுமில்லையம்மா. அவர், 'மெழுகுவர்த்தி கொண்டுவா!' என்று உத்தரவிட்டார். நான் உடனே ஓடிபோய் மெழுகுவர்த்தியை ஏற்றி எடுத்துக்கொண்டு வந்தேன். அவ்வளவுதாம்மா," என்றாள் நடுங்கியபடி.

விஜயா ஆத்திரம் தொனிக்க, மெள்ள எழுந்தவள் மோகினியைப் பலம் கொண்டவரையில் இழுத்துப் படுக்கையில் தன் அருகில் தள்ளிவிட்டாள். அடுத்த விநாடியே விஜயாவின் நடுங்கும் கை, பக்கத்து டேபிளில் பழம் நறுக்க வைக்கப்பட்டிருந்த கத்தியை எடுத்துக் கொண்டது. விஜயாவின் ஒரு கரம் மோகினியின் நெஞ்சைப் படுக்கையில் அழுத்தியது. இன்னொரு கையில் கத்தி இருந்தது. விஜயா ஒரு பேய் போல் தோற்றமளித்தாள். "சாந்தினி, சாகிறவளிடம் பொய் சொல்லாதே. கீழே என்ன நடந்தது, சொல்லு? முன்னேற்பாடாகக் குன்னூரிலிருந்து அவர் வந்தாரா? அவர்தானே உன்னை இந்தப் புடவை அணிந்து கொள்ளச் சொன்னது?"

"இல்லேம்மா. நான்தாம்மா சேலையைக் கட்டிக்கிட்டு கண்ணாடி முன் நின்னேன். குன்னூரிலிருந்து அவர் இந்த மழையில் வருவார்னு நான் நினைக்கல்லேம்மா," என்று கெஞ்சினாள்.

"இல்லே. நீ பொய் சொல்றே. கீழே ஏதோ நடந்திருக்கு. என்னதான் நடந்தது, சொல்லு?" என்று சொல்வதற்குள் மூச்சு விஜயாவின் பேச்சைத் தடுத்தது. "உண்மையைச் சொல்லு. என் கணவன் என்னைத் தவிர வேறு ஒரு பெண்ணை நினைச்சாரா என்கிற உண்மை எனக்குச் சாகிறதுக்கு முன்னாடி தெரியணும். சொல்லு. உண்மையைத் தெரிஞ்சுக்காமல் நான் இந்த உலகத்தை விட்டுப் போக விரும்பலே! சொல்லுடி. பொய் சொன்னே, உன்னைக் கொன்னுடுவேன். ரெண்டு பேருமே இந்த உலகத்தை விட்டுப் போய்விடுவோம்," என்று கூறிக் கத்தியைக் கழுத்துக்கு நேரே கொண்டு வந்தாள்.

மோகினி திமிறிப் பார்த்தாள். முடியவில்லை. உலர்ந்து போன விஜயாவின் கை மோகினியின் கழுத்தை இரும்புபோல் பிடித்துக் கொண்டிருந்தது. இவ்வளவு பலம் விஜயாவுக்கு எங்கிருந்து வந்தது என்று புரியவில்லை.



"இதென்ன சார் வேடிக்கை? உங்க மனைவி கையிலே தேள் கொட்டிவிட்டது என்றீர்கள். நீங்க, கையிலே கட்டு போட்டுட்டிருக்கீங்களே?"

"தப்பி ஓடிப்போன தேளைக் கண்டு பிடித்து அடிக்கப் போன போது என் கையிலும் கொட்டிவிட்டது அந்தச் சனியன்."

விஜயாவின் உடல் தன் கடைசி நிகழ்ச்சிக்கு என்று அவளுக்குப் பலத்தைப் பரிந்து கொடுத்ததா? இல்லை, அவள் உள்ளத்தில் குடியிருந்த வெறுப்பு அவளுக்கு அந்தப் பலத்தைக் கொடுத்ததா என்று புரியவில்லை.

''என்னடி முழிச்சுப் பார்க்கிறே? இங்கே என்ன நடந்தது? சொல்லு. அவருக்கும் உனக்கும் இடையே ஒன்றுமில்லையா? சில விநாடிகள் உயிரோடு இருக்கப் போறேன். எங்கிட்டே பொய் சொல்லாதே. உண்மையைச் சொல்லு. என் கணவர் தவறிவிட்டாரா?'' என்று கேட்டாள்.

உடனே மோகினி பீதியோடு, ''அவர் தவறு செய்யல்லேம்மா. சத்தியமாச் சொல்றேன். அவர் என்னை அடையல்லேம்மா! நான் இன்னும் ஒரு கன்னிப் பெண்.'' இதைக் கேட்டதும் விஜயாவின் பிடி லேசாகத் தளர்ந்தது.

மோகினிக்கு ஒரு திருப்தி. ராஜுவும் அவளும் ஒன்றுக இல்லை. அவள் இன்னும் உடலளவில் கன்னிதான். அதைச் சத்தியம் செய்து சொல்வதில் தவறில்லை என்று நினைத்தாள். விஜயா இதோடு விட்டுவிட்டால் அவள் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்தாள். ஆனல் விஜயா அவளை விடுவதாக இல்லை.

விஜயா தொடர்ந்து, ''அவர் உன்னைத் தீண்டாமல் இருக்கலாம். ஆனல் அழகான உன்னைப் போன்ற ஒரு பெண்ணுக்கு இது புரியாமல் இருக்காது. அவர் உன் அழகைக் கண்டு மயங்கவில்லை என்று சொல்கிறுயா? அவர் உன்னிடம் மனத்தைப் பறி கொடுக்கவில்லை என்கிறுயா? அவர் மனம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஒளிக்காமல் உண்மையைச் சொல்,'' என்றுள்.

மோகினி விஜயாவைப் பார்த்தாள். விஜயாவின் கைக்கத்தி தன் கழுத்தில் பாய்ந்துவிடும் என்ற பயம் விலகிற்று. பயம் இருந்த இடத்தில் மோகினிக்குப் பச்சாதாபம்தான் மிஞ்சியது. இறுதி வேளையிலும் தன் கணவன் அவள் ஒருத்தியைத்தான் விரும்புகிறுன் என்று நினைக்க ஆசைப்படும் அந்தப் பெண் உள்ளத்தைப் புரிந்து கொண்டாள். கணவனின் காதல்—அதுதான் விஜயாவின் இதயத்துக்கு முடிவு வேளையில் தேவையான ஔஷதம் என்பதைப் புரிந்து கொண்டாள். ஒரு பொய், ஆன்மாவுக்கு நிரந்தர சாந்தியளிக்குமென்றுல் அந்தப் பொய் பல சத்தியங்களுக்கும் மேல் என்று நினைத்தாள். குழந்தைச்சாமி வளர்த்த பெண் அல்லவா! குழந்தைச்சாமியும் மற்றவர்கள் இன்பமாக வாழப் பொய் சொன்னவர்தானே? அவர்தானே மோகினியை இந்தப் பொய் நாடகத்தில் கொண்டு வந்து மாட்டியவர்? அவர் ஆரம்பித்த பொய் நாடகம் ஒரு பலன் தரும் பொய்யோடு முடியட்டும் என்று தீர்மானித்தாள்.

''அம்மா, நான் உண்மையைச் சொல்லிடறேன். அவர் உங்களைத் தவிர வேறு யாரையும் விரும்பல்லேம்மா! தவறு செய்தவள் நான்தாம்மா! நான் தான் இந்த வீட்லே அடி எடுத்து வைத்த நிமிஷத்திலிருந்து அவரை மானசீகமாக நேசித்தேன். இவ்வளவு வசவையும் திட்டையும் கேட்டுக் கொண்டு வேலையை விட்டு விலகாமல் நான் இருக்கிறேனே என்று ஆச்சரியப் பட்டீங்களேம்மா அதுக்குக் காரணம் எனக்கு அவர் மீது ஏற்பட்ட ஆசை தாம்மா! கௌரி மீது உள்ள அன்பும் அவர் மேலே இருந்த ஆசையும்தான்

## கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

மனிதர்களிற் சிறந்தவன் பிறரைச் சந்தோஷப் படுத்துகிறவன்.

நண்பர்களிற் சிறந்தவன்————————1.

கல்வியிற் சிறந்தது உனது நெஞ்சத்தில் பதிந்திருப்பது.

செல்வத்திற் சிறந்தது————————2.

சொல்லிற் சிறந்தது சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்வது.

செயல்களிற் சிறந்தது————————3.

குடும்பத்திற் சிறந்தது நல்ல மனைவியுள்ள குடும்பம்.

பேறுகளிற் சிறந்தது————————4.

பொருளிற் சிறந்தது உனக்குப் பலன் தரத் தக்கது.

நன்மைகளிற் சிறந்தது————————5.

(விடை : அடுத்த பக்கம்)

ஓர் அரபி நூலிலிருந்து மொழிபெயர்த்தனுப்பியவர்:

—கே. நிஜாமுத்தீன்.

என்னை இந்த வீட்லே தங்க வச்சது. முன்னூறு ரூபாய்ப் பணமில்லேம்மா. ஆனால் அவர் மனசிலே உங்களைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லே என்பதும் எனக்குத் தெரியும். என்னை மன்னிச்சுடுங்கம்மா,'' என்றாள்.

இதைக் கேட்ட விஜயா அப்படியே மோகினியை விறைத்துப் பார்த்தபடியே இருந்தாள். அவள் கையிலிருந்த கத்தி நழுவிப் படுக்கையில் விழுந்தது. மோகினியின் கழுத்தில் விஜயா வைத்திருந்த பிடியும் தளர்ந்தது. மோகினி எழுந்து உட்கார்ந்தாள். விஜயாவின் கண்களில் நீர் நிறைந்து இருந்தது. வெறுப்பும் பொறாமையும் சில விநாடிகளுக்கு விஜயாவுக்கு அளித்த பலம் மறைந்து கொண்டிருந்தது. விஜயாவின் குரல் பலவீனமாகக் கேட்டது. விஜயா, ''சாந்தினி, சாந்தினி! என்னை உன் மடி மீது வைத்துக் கொள்,'' என்றாள்.

மோகினி எழுந்து போய் விஜயாவைத் தன் மடி மீது வைத்துக் கொண்டாள்.

''சாந்தினி, நீ ரொம்ப நல்லவ. உன் மனசிலே இருக்கிற உண்மையை அப்படியே சொல்லிட்டே. பாவம், அவர் எனக்காக ஒரு நரகத்தையே அனுபவிச்சுட்டாரு! பணம், அழகு, பலம் மூணும் உள்ளவர் எனக்காக என் மன அமைதிக்காகச் சுகத்தைத் துறந்து சன்யாசி மாதிரி இருந்தார். இது நாள் வரை...'' என்று சொல்வதற்குள் விஜயாவுக்கு இருமல் வந்தது.

''பேசாமல் இருங்கம்மா,'' என்றாள் மோகினி.

''இப்ப நான் பேசல்லேன்னு நான் என்னிக்குமே பேச முடியாது, சாந்தினி,'' என்று கூறிவிட்டு மேற்கொண்டு பேச ஆரம்பித்தாள் விஜயா.

''பணமும் அழகும் உள்ள ஆண்கள் எப்படி வாழறாங்கன்னு தெரியும். அவருக்கு உள்ள பண்புதான் அவரை இவ்வளவு கஷ்டத்தையும் பொறுக்கும்படி செய்தது. நான் அவருக்கு வேதனையைத்தான் கொடுத்தேன். இன்பத்தைத் தரல்லே. சாந்தினி, என்னோடு அவர் அனுபவிக்கத் தவறிய இன்பத்தை நீ அவருக்குத் தருவியா சாந்தினி? நான் போனப்புறமாவது அவர் சந்தோஷமா இருக்கணும் என்கிறதுதான் என் ஆசை,'' என்று சொல்லிவிட்டு மோகினியின் மேலாய்க் கட்டையை அவள் கைகளால் பிடித்தாள்.

மோகினி பேசாமல் இருந்தாள்.

''என் குழந்தை கௌரிக்கு உன்னை விடச் சிறந்த மாற்றாந்தாய் கிடைக்க மாட்டாள். நான் இருந்த வரையில் கௌரி ஒரு தாயில்லாப் பெண்ணாக இருந்தாள். அவர் தாரமிழந்த மனிதராகத்தான் இருந்தார். நான் போன பின்பாவது இந்த வீட்டில் ஒரு லக்ஷ்மி நடமாடட்டும். என்ன, உனக்குச் சம்மதம்தானே தங்கச்சி?'' என்று கேட்டாள்.

'ஆம்' என்று தலையை ஆட்டினாள் மோகினி.

விஜயா முகம் புன்முறுவலுடன் சாந்தினியைப் பார்த்தது. ''சாந்தினி, அவரும் இந்த ஏற்பாட்டை ஒப்புக் கொள்வார் என்று நினைக்கிறேன்... அவரிடம் சொல்லலாம் என்றால் அவர் எங்கோ போய் விட்டாரே!'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''கார் சத்தம் கேட்கிறது. அவர் வந்து விட்டாரம்மா,'' என்று மோகினி கூறினாள்.

விஜயா கடைசி முறையாக மோகினியைப் பார்த்துவிட்டு, ''என் கௌரி! என் கௌரி!'' என்று கூறியபடி படுக்கையில் மயங்கிக் கிடக்கும் குழந்தையைப் பார்த்தாள்.

படிக்கட்டுகளில் டாக்டரும் ராஜுவும் வரும் சத்தம் கேட்டது. அதே விநாடி தடைபட்ட மின்சாரம் திரும்பி அந்த வீடு முழுவதும் ஒளி வீசியது. ஆனால் படுக்கையில் கிடந்த விஜயாவின் உயிர் ஒளி அந்தச் சமயம் பார்த்து உடலை விட்டு விலகியது. விஜயாவின் தலை பொத்தென்று தன் உடலில் விழுவதை மோகினி உணர்ந்தாள்.

''அம்மா!'' என்று தன்னையும் மறந்து அலறினாள்.

அதே விநாடி டாக்டரும் ராஜுவும் அறையில் நுழைந்தனர்.

(தொடரும்)

கோடு——————விடை :

1. நன்மை வழியை உனக்கு அறிவிப்பான்.
2. போதுமென்ற மனம் படைப்பது.
3. நடுநிலையைக் கொள்வது.
4. ஒழுக்கமுள்ள பிள்ளைகளைப் பெறுவது.
5. நாக்கை அடக்குவது.

# மின்னல், மழை, மோகினி



ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 39

டாக்டர், விஜயாவின் கையைப் பிடித்ததுமே அவள் இறந்துவிட்டாள் என்ற செய்தியைப் புரிந்துகொண்டார். ஆனால் ராஜுவுக்கு இது புரியவில்லை.

அவனிடம் எப்படி இதைச் சொல்வது என்று தெரியாமல் டாக்டர் தவித்தார்; ஒன்றும் பேசாமல் படுத்திருக்கும் குழந்தை கௌரியிடம் சென்று அந்தக் குழந்தைக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்.

கௌரி கண் விழித்துக் கொண்டாள்.

விஜயா இறந்துவிட்டாள் என்பதை மோகினி உணர்ந்தாளாகையால், அவள் பார்வை பூராவும் ராஜுவின் கவலை நிறைந்த முகத்தில் நின்றது.

ஆனால் ராஜு மோகினியின் பார்வையைச் சந்திக்க வெட்கப்பட்டான். மோகினி, எப்படி இருந்தாலும் டாக்டர் அவனிடம் உண்மையை இன்னும் சில விநாடிகளில் கூறி விடுவார், அப்போது குழந்தை கௌரி அங்கு இருந்தால் தாய் இறந்துவிட்டாள் என்ற செய்தி கேட்டு குழந்தை மனம் அதிர்ச்சி அடையும் என்பதை உணர்ந்து கொண்டாள்.

மோகினி குழந்தையை மாடியிலியிலிருந்து அழைத்துக்கொண்டு போகத் தூக்கினாள்.

ராஜு பரபரப்புடன், ''டாக்டர், டாக்டர்! ஏன் சும்மா இருக்கீங்க? விஜயாவுக்கு ஏதாவது வைத்தியம் செய்யுங்க டாக்டர்,'' என்று சொன்னான்.

டாக்டர் மறுபடியும் விஜயாவின் அருகில் வந்து படுக்கையில் விழுந்து கிடக்கும் அவளை ஒரு முறை பார்த்தார். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். ''மிஸ்டர் ராஜு, குழந்தை கிணற்றில் விழுந்து தப்பிய அன்றே அதிர்ச்சியால் விஜயாவின் இருதயம் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று எச்சரித்தேன். எந்தவிதமான அதிர்ச்சியும் இல்லாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும் எச்சரித்திருந்தேன். என் எச்சரிக்கை பலன் அளிக்கவில்லை என்று தோன்றுகிறது,'' என்று சொல்லிவிட்டு விஷயத்தை அப்பட்டமாகச் சொல்லாமல் தயங்கினார். ராஜுவின் மனம் கலவரத்தால் சூழ்ந்தது.

ஓடிவந்து விஜயாவின் அருகில் உட்கார்ந்து கொண்டான். தொய்ந்து கிடந்த விஜயாவின் கையை எடுத்துத் தொட்டுப் பார்த்தான்.

இறந்தவள் கை ஜில்லென்று கிடந்தது.

அதே விநாடி டாக்டர், ''மிஸ்டர் ராஜு, விஜயா இறந்து விட்டாள். இனி எந்த வைத்தியமும் அவளுக்குத் தேவையில்லை,'' என்று சொல்லிவிட்டு மெள்ள மாடி அறையைவிட்டு நகரப் போனார். ராஜுவுக்கு ஒன்றும் புரியவில்லை. டாக்டர் சொன்ன உண்மையை அவனால் நம்பவும் முடியவில்லை. விஜயா பல முறை சாவின் வாசல்வரை சென்று திரும்பியதை அவன் கண்டிருக்கிறான். இம்முறையும் அதே போல் திரும்பி விடுவாள் என்றுதான் நம்பியிருந்தான்.

ஆனால் இம்முறை எல்லாம் முடிந்து விட்டது. அவள் வாழ்வின் ஜுரம் முடிந்து, அவள் நிரந்தர நிம்மதியையும், ஓய்வையும் அடைந்துவிட்டாள் என்பதை நம்ப அவன் மனம் விரும்பவில்லை.

''விஜயா, விஜயா!'' என்று இரு முறை அலறிக் கூப்பிட்டான்.

எந்தப் பதிலுமில்லாமல் கிடந்தாள் விஜயா. மாடி வராந்தாவை நெருங்கிக் கொண்டிருந்த மோகினி அப்படியே நின்றாள்.

அவள் தோளில் சாய்ந்திருந்த குழந்தை கௌரிக்குத் தந்தையின்

அலறலைக் கேட்டதும் அம்மாவுக்கு ஏதோ ஆபத்து என்பது புரிந்துவிட்டது.

கௌரி, மோகினியின் தோளிலிருந்து கீழே குதித்து அறைக்குள் ஓடினாள். தாயின் அருகில் சென்று, ''அம்மா, அம்மா,'' என்று கதறியபடி குழந்தை கௌரி அழத் தொடங்கினாள்.

கதறி அழும் குழந்தை, அதற்குச் செவி சாய்க்காமல் கிடக்கும் மனைவி, இரண்டையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் ராஜு.

கடந்த சில வருடங்களாக எந்த நிகழ்ச்சிக்குப் பயந்து பயந்து காத்திருந்தானோ அந்த நிகழ்ச்சி திடீரென்று ஏற்பட்டுவிட்டது.

கோயமுத்தூர் ஆஸ்பத்திரியில் விஜயா இறந்திருந்தால் இவ்வளவு அதிர்ச்சி இருந்திருக்காது.

ஒவ்வொரு ஆபத்தையும் தாண்டி வாழ்ந்து வந்தவள், திடீரென்று அவனிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் மறைந்துவிட்டாள்.

இத்தனை வருடங்கள் அவளைக் கட்டிக் காத்து, பாதுகாத்து வந்தவன், அவளை விட்டுப் பிரியாமல் நிழல் போல் இருந்தவன், அவள் உயிர் பிரியும் வேளையில் அருகில் இல்லை.

அவளுடைய கடைசி வார்த்தைகளைக் கேட்க முடியவில்லை. 'என் உயிர் பிரியும்போது என் தலை உங்கள் மடியில் இருக்க வேண்டும்' என்று விஜயா எப்போதோ சொன்னது ராஜுவின் ஞாபகத்தின் அடித் தளத்திலிருந்து எழுந்து நினைவுக்கு வந்தது.

இறந்துவிட்ட விஜயாவின் தலையை எடுத்துத் தன் மடிமீது வைத்துக் கொண்டான்.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் ஓடையெனப் பெருக்கெடுத்து ஓடியது.

விஜயாவின் அன்பு, அவள் கோபம், அவள் தன்னை மறந்து கூறிய சுடு சொற்கள் எல்லாம் மறுபடியும் அவன் மனத்திரையில் காட்சிகளாய் உருவெடுத்து ஓடின.

நினைவுப் பாதையில் அவன் நடந்து போய்க் கொண்டிருந்தான். பொருத்தமில்லாத சாதாரண நிகழ்ச்சிகள்கூட இப்போது முக்கியத்துவம் பெற்றன.

அவன் மறந்தே போய்விட்ட ஒரு நிகழ்ச்சி, அர்த்தமில்லாத ஒரு நிகழ்ச்சி, மூட நம்பிக்கை என்றே சொல்ல வேண்டிய நிகழ்ச்சி இப்போது அவன் மனக் கண் முன் விபரீத அர்த்தத்தோடும், பரிமாணத்தோடும் உருவெடுத்துக் கொண்டது.

விஜயா காலிழந்த ஆரம்ப காலம் அது.

திருவனந்தபுரத்துக்கும் கன்னியா குமரிக்கும் இடையே உள்ள கடற்கரை கிராமம். அங்கு மூஸ் என்ற மலையாள வைத்தியன் பக்க வாதத்தைக் குணம் செய்வதில் நிபுணன் என்று கேள்விப்பட்டு ராஜு விஜயாவை அழைத்துக் கொண்டு அங்கு சென்றான்.

வசதியான பெரிய வீடுகள் இல்லாத சிறிய ஊர்.

கடற்கரையில் ராஜுவே அதிகப் பணம் செலவழித்து ஒரு மாதத்தில் வீடு அமைத்துக் கொண்டான்.

வீடு கட்ட ஒரு மாதம், வைத்தியத்துக்கு அந்த வீட்டில் தங்கியது ஒரு மாதம். வைத்தியம் குணம் தராமல் போகவே, மறுபடியும் ஷொரனூர் திரும்பினர்.

கட்டிய வீட்டை வைத்தியம் பார்த்த மூஸுக்கே தானமாகக் கொடுத்து விட்டுத் திரும்பினான்.

அந்த ஒரு மாத காலத்தில் நடந்த நிகழ்ச்சிதான் இப்போது ராஜுவின் ஞாபகத்துக்கு வந்தது.

அந்தக் கடற்கரை வீட்டில் தங்கியிருந்தபோது திடீரென்று ஒரு நாள் காலை, கடற்கரையில் பெரிய கூட்டம் கூடியது. ஒரு மீனவனின் பிரேதம் கரை சேர்க்கப்பட்டது. மீனவனுக்குத் திருமணமாகி இரண்டு வருடங்கள் தான் ஆகியிருந்தன.

கடலில் புயலும் இல்லை. மீனவனோ நன்றாக நீந்தத் தெரிந்தவன். கட்டு மரங்களைக் கடலில் செலுத்துவதில் கை தேர்ந்தவன். அவன் எப்படிக் கடலில் மூழ்கினான் என்று தெரியவில்லை.

தற்கொலை என்று சொல்லவும் முடியவில்லை. மீன் பிடிக்கப் புறப்படும்போது அவன் குதூகலமாய் இருந்ததை மீனவச் சேரி முழுவதும் உணர்ந்திருந்தனர்.

கொலை என்று சொல்லவும் முடியவில்லை. ஆனால் அந்தச் சேரியில் இருந்த முதியவர் மட்டும் 'மீனவனின் மனைவி தவறிழைத்திருக்க வேண்டும். அது தான் அவள் மாங்கல்யத்தைப் போக்கி விட்டது' என்று சொன்னார்.

மனைவியின் நடத்தை பற்றித் தப்பான அபிப்பிராயம் ஊரில் எதுவும் இல்லை. அவள் நடத்தை தவறாத உத்தமி என்பதை ஊர் ஒருமுகமாகக் கூறியது.

ஆனால் இரண்டு நாட்களில் அவளும் தற்கொலை செய்து தன் உயிரைப் போக்கிக் கொண்டாள்.

மடியுமுன் அவள் தன் மாமியாரிடம், ''என் கணவரும் உங்கள் மகனுமாகியவருக்கு நான் துரோகம் இழைத்துவிட்டேன். நான் ஒரு ஆடவனுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தேன்,'' என்று கூறியிருந்தாளாம்.

மனைவி ஒழுக்கம் தவறினால், மீன் பிடிக்கப் போன கணவன் திரும்ப மாட்டான் என்ற மீனவரின் நம்பிக்கைக்கு இதை எடுத்துக்காட்டாகக் கூறினார் ஒரு பெரியவர்.

இதைக் கேட்டதும் ராஜு புரளியாகப் பேசினான். ''தவறு செய்பவள் மனைவி. அதற்காகக் கணவன் ஏன் மடிய வேண்டும்? இது அர்த்தமற்ற மூட நம்பிக்கை,'' என்றான்.



ஆனால் விஜயா ராஜுவின் வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ''ஏழை மீனவர்களின் நம்பிக்கையில் அர்த்தம் இருக்கிறது. ஆபத்து நிறைந்த கடலில் அன்றாடம் பிழைப்புக்காகப் போகும் கணவன் மீது, உண்மைக் காதல் உள்ள மனைவியாக இருந்தால், அவள், அவன் திரும்பும் வரை மனம் துடித்துக் கொண்டேதான் இருப்பாள். அவள் மனத் துடிப்புதான் அவள் கணவனின் உயிருக்குக் காவல். என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் வற்றாத அன்பு இருக்கும்வரைதான், எனக்கு வாழ்வு இருக்கும். உங்களை இழந்தபின் நான் வாழ மாட்டேன். என்றைக்கு நீங்கள் தவறுகிறீர்களோ அன்றே நான் இந்த உலகத்தை விட்டுப் போக வேண்டுமென்பதே என் பிரார்த்தனை,'' என்று கூறினாள்.

ராஜு உடனே சிரித்தான். ''என் ஒழுக்கத்துக்கும் உன் உயிருக்கும் ஓர் இணைப்பு இருக்குமானால் எனக்கு உன்னைப் பற்றிக் கவலை இல்லை விஜயா. நீ நீண்ட நாள் வாழப்போகிறாய்.''

அன்று வேடிக்கையாகப் பேசிய நிகழ்ச்சியின் பயங்கரமான பொருள் இன்றுதான் அவனுக்குத் தோன்றியது.

'மாடியிலே விஜயா மரணத்தை நெருங்கும்போது கீழ் ஹாலில் நான் மோகினியை அணைத்தபடி நின்றேனே.' என்று நினைக்கவும் ராஜுவுக்குத் துக்

கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. ராஜு வுக்கு அவன்மீதே கோபம் கோபமாக வந்தது.

குன்னூரில் வெள்ளைக்கார நண்பர் களுடன் மதுவருந்தியது, பிறகு வெறி யோடு காரில் புறப்பட்டுக் கோயமுத்தூர் வந்தது, அங்கு தன்னையும் மறந்து மோகினியை அணைத்தது எல்லாமே அவன் செய்யக்கூடிய செயல்களாகத் தோன்றவில்லை.

வெகுநாள், அவனுக்குள்ளே அவ னுக்குத் தெரியாமல் உறங்கிய மிருகம், அவன் மனம், உடல் இரண்டிலும் ஆக்கிரமித்து அவனைக் குற்றவாளி யாக்கிவிட்டதுபோல் தோன்றியது.

அவன் தவறு செய்துவிட்டான். அவன் மனைவி இறந்துவிட்டாள்.

முன்னதற்கும், பின்னதற்கும் ஒரு பிணைப்பு இருப்பதாகத் தோன்றியது.

அவன் மனைவியைக் கொன்ற குற்ற வாளி அவனே என்ற எண்ணம் திட மாக எழுந்தது.

''என்றைக்கு நீங்கள் தவறுகிறீர் களோ அன்றே இந்த உலகத்தை விட்டு நான் போக வேண்டுமென்பதே என் பிரார்த்தனை,'' என்ற வார்த்தை களை மாடியில் படுத்துக் கிடக்கும் விஜயா வாய் திறந்து கூறுவதுபோல் பிரமை ஏற்பட்டது.

''விஜயா, உன் பிரார்த்தனை நிறை வேறிவிட்டது, உன் பிரார்த்தனை நிறை வேறிவிட்டது. என்னை மன்னித்து விடு, என்னை மன்னித்துவிடு,'' என்று சொல்லி அழுதான்.

அந்த வீட்டின் கீழ் ஹாலில் டாக்டர் பெட்டியுடன் நின்று கொண்டிருந்தார். அவரை மறுபடியும் அந்த மனையில் வீட்டுக்கு அழைத்துப்போக யாரும் இல்லை.

ராஜுவோ மாடியில் துன்பக் கேணி யில் விழுந்து கிடந்தான்.

மோகனி டாக்டரின் நிலையை உணர்ந்து கொண்டு உடனே காரேஜுக் குச் சென்று டிரைவரை அழைத்து வந்து டாக்டரை வண்டியில் அனுப்பி னான்.

டிரைவரிடம் எஜமானியம்மாள் இறந்துவிட்டாள் என்று சொன்னதும் அந்த வீட்டு வேலையாட்களுக்குச் செய்தி பரவியது.

டிரைவரின் உதவி கொண்டு விஜயா வின் நெருங்கிய உறவினர்களுக்கெல் லாம் தந்தி டெலிபோன் மூலம் செய்தி தெரிவித்தான்.

விடியற்காலையில் ஐந்து மணி வரை மோகினி டெலிபோனில், சம்பந்தப் பட்டவர்களுக்கெல்லாம் செய்தி அனுப் பியபடி இருந்தான்.

ஓய்வில்லாமல் வேலையில் ஈடுபட்ட தால் அவனுக்குத் துக்கம் கொண்டாட அவகாசம் இல்லை.

நிலைக் கண்ணாடியில் தன் உருவத் தைப் பார்த்ததும்தான் அவன் இன் னும் விஜயா அளித்த அந்த விபரீதச் சேலையுடன் இருப்பதை உணர்ந்தான். உடனே ஓடிப்போய் அதைக் களைந்து விட்டு வேறு சேலை அணிந்து கொண் டான்.

ராஜுவின் உறவினர்கள் ஒவ்வொரு வராக வந்தபடி இருந்தனர். ராஜு பங்களாவின் காம்பவுண்டில் கார்களாக நிறைந்துவிட்டன.

அதிகாலையில் வந்த உறவினர்களுக் குச் சமையல்காரன் காப்பி தயார் செய்ய ஆரம்பித்தான்.

மாடி அறையில் விஜயாவை மடியில் கிடத்தியபடியே உட்கார்ந்திருந்த ராஜு வின் பார்வையில் உறவினர் வந்ததும் தெரியவில்லை. அவர்கள் ஒப்புக்காகக் கூறிய உபசார வார்த்தைகளும் விழ வில்லை.

பிரமித்தவன்போல் உட்கார்ந்திருந் தான்.

கௌரி அழுதபடியே ஹால் சோபா வில் தூங்கிவிட்டாள்.

பந்துக்கள் வந்தபோது ஏற் பட்ட இரைச்சலில் விழித்துக் கொண்டாள். தந்தை மாடியில் ஊமையாக வீற்றிருக்கவே, உற வுப் பெண்கள் மகளிடம் வந்து துக்கம் விசாரித்தனர்.

ஒவ்வொருவர் பேச்சும் கௌரி யின் துக்கத்தை இன்னும் அதிகப் படுத்தியது.

கௌரி அலறியபடி மாடிக்கு ஓடினாள். தந்தையிடம் ஓடிவந்து அவனுக்கே விளங்காத துக்கத்

இதுதான் சம்பந்தம்

ஷீ
1. வெண்ணிற ஆடை நிர்ம
3 வைஜயந்தி மா
4. கம
5. விஜய நிர்ம
6. மணி மா

லா

தைப் பகிர்ந்துகொள்ளத் துடித்தாள்.

ராஜு, சிலைபோல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் கௌரி, ''அப்பா, ஏம்பா பேசமாட்டேங்கிறீங்க? பேசுங்கப்பா,'' என்று சொல்லித் தந்தையைத் தன் பிஞ்சுக் கைகளால் குத்தினாள். ராஜுவிடம் எந்தவிதச் சலனமும் ஏற்படவில்லை.

குழந்தையின் தவிப்பைப் பார்த்த மோகினி ராஜுவை நெருங்கினாள். ''பாருங்க, குழந்தை தவிக்கிறா பாருங்க. அவளுக்கு நீங்க ஆறுதல் சொல்லாட்டா யார் சொல்ல முடியும்?'' என்று பேச ஆரம்பித்ததும் ராஜு அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அந்த மாதிரி ராஜு என்றும் யாரையும் பார்த்ததில்லை. வெறுப்பு அவன் கண்களில் ஒளி வீசியது. ராஜுவின் பார்வையிலுள்ள வெறுப்பு மோகினியின் தேகத்தில் ஊடுருவிப் பாய்ந்தது.

அவளால் அங்கு நிற்கவே முடியவில்லை. கீழே சென்றாள். பொறுப்பாக விஷயங்களைக் கவனிக்க வேறு யாருமில்லையே என்ற கடமை உணர்ச்சிதான் அவளை அங்கு நிற்கச் செய்தது.

மோகினி தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ''உறவுக்காரங்க எல்லாம் வந்திருக்காங்க,'' என்று கூறிவிட்டு மேலே சொல்ல முடியாமல் நிறுத்தினாள்.

ராஜு ஒரு பதிலும் சொல்லாமல் விஜயாவின் சவத்தைப் பார்த்தபடி இருந்தான்.

''மேற்கொண்டு எவ்வளவோ காரியங்கள் ஆக வேண்டியிருக்கு. பொறுப்பாக விஷயங்களைக் கவனிக்க யாருமில்லை. எனக்கும் ஒன்றும் புரியல்லே,'' என்று சொல்லிவிட்டு ராஜுவின் முகத்தைப் பார்த்தாள்.

ராஜு கோபத்தோடு அவள் பக்கம் திரும்பினான்.

''மேற்கொண்டு என்ன காரியம் இருக்கிறது? விஜயாவைச் சுடுகாட்டுக்கு அனுப்பறதுதானே? அவள் உடலைச் சீக்கிரம் அனுப்பிவிட்டு நீ எஜமானியாக நினைக்கிறாயா? அதை ஒரு நாளும் நான் அனுமதிக்க மாட்டேன். விஜயா இங்கேயேதான் இருக்கப் போகிறாள். நீ போ வெளியே!'' என்று கூச்சலிட்டான்.

குழந்தை கௌரியும் தந்தையின் கோபத்தைக் கண்டு நடுங்கினாள். மோகினி விர்ரென்று மாடி அறையிலிருந்து வெளியேறினாள். அவளைத் தொடர்ந்து குழந்தையும் வெளியே வந்தாள்.



''உன் சம்பளத்தைப் பணமாக கொடுக்கவா? செக்காகக் கொடுக்கவா?''

''பஸ்ட் கிளாஸ் ரிசர்வேஷன் சினிமா டிக்கெட்டாக வாங்கிக் கொடுத்திடு சாமி!''

அவள் படிக்கட்டில் இறங்கி வரும்போதே மாடி அறைக் கதவும் ஜன்னல்களும் மூடப்படுவதன் ஓசையும் கேட்டது.

துக்கம் விசாரிக்க வந்த பந்துக்கள் கீழ் ஹாலிலேயே இருந்தனர்.

யார் போய் மாடிக் கதவைத் தட்டியும் கதவு திறக்கப்படவில்லை. ராஜுவும் வெளியே வரவில்லை.

விஜயாவின் சிறிய தந்தை உடுமலைப் பேட்டையிலிருந்து பத்து மணிக்கு வந்தார்.

அவர் மாடி வரை போய், ''ராஜு, நான் வந்திருக்கிறேன். கதவைத் திற,'' என்று அழைத்துப் பார்த்தார்.

பதில் இல்லை. மணி பன்னிரண்டாகியது. கதவு மூடியே இருந்தது. பந்துக்களின் கூட்டம் அதிகமாகிவிட்டது.

'இறந்த வீட்டில் சமையல் செய்வதா? வந்தவர்களைப் பட்டினியாகவே இருக்கச் செய்வதா? எது முறை? என்ன செய்வது?' என்று தெரியாமல் மோகினி விழித்தாள்.

சிலர் ஓட்டலுக்குச் சென்று ஏதோ சாப்பிட்டுவிட்டு வந்தனர். மற்றவர்கள் அப்படியே ஹாலிலும் வராண்டாவிலும் உட்கார்ந்திருந்தனர்.

மோகினி டிரைவரின் உதவிகொண்டு ஓட்டலில் இருந்து பலகாரம் காப்பி வாங்கிவந்து பந்துக்களுக்குக் கொடுத்தாள். மாடி அறையில் ராஜு, விஜயா

வின் சவத்தோடு தனியாக இருப்பதைப் பற்றி விவாதம் நடந்தபடி இருந்தது.

புரோகிதரும் இன்னும் சிலரும் உடலை அடக்கம் செய்யாமல் மணிக்கணக்காக வைத்திருக்கக் கூடாது என்று மோகினியிடம் கூறினர்.

துணிவை வரவழைத்துக்கொண்டு மோகினி மாடிக்குச் சென்று கதவைத் தட்டினாள். பதில் இல்லை.

சூரியன் மறைந்து இரவும் நெருங்கியது. வந்து கூடியிருந்த பந்துக்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. கதவை உடைத்து உள்ளே புகுந்துதான் ஆக வேண்டிய காரியங்களை செய்ய வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்தார் ஒரு பெரியவர்.

இந்த நிலையில் குழந்தைச்சாமி அந்த வீட்டினுள் நுழைந்தார். ராஜூவின் சொந்தக்காரர் ஓடிப்போய், "அழகிரி, உங்கண்ணன் மகன் அவன் சம்சாரத்தின் சவத்தோடு உட்கார்ந்திட்டிருக்கான். யார் சொல்லியும் கதவைத் திறக்கமாட்டேங்கறான்," என்று முறையிட்டார்.

சாமியாரைப் பார்த்ததும் மோகினி ஓவென்று அழுதுவிட்டாள்.

சாமியார், "அழாதே மோகினி, விஜயாவுக்கு விடுதலை கிடைத்து விட்டது," என்று சொல்லிவிட்டு மாடிப் படிகளில் ஏறிச் சென்றார்.

சாமியார், "ராஜூ, என் மகனே! கதவைத் திறப்பா. விஜயா வாழ்ந்தப்போதான் படுக்கையிலேயே சிறைப் பட்டுக் கிடந்தது. இன்னும் அவள் படுக்கையிலேயே இருக்கணும்னு விரும்பறியா?" என்று கூறினார்.

சில விநாடிகளுக்கு நிசப்தம் நிலவியது. பிறகு கதவு படீரென்று திறந்தது. "சித்தப்பா!" என்று அலறியபடி ராஜூ வந்து அவரை அணைத்துக் கொண்டான்.

சாமியார் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "என்னப்பா செய்வேன்? இரண்டு முறை உன் வீட்டுக்கு வந்தப்போ விஜயா மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்தாள். ஆனால் இந்த முறை நான் எல்லாம் முடிஞ்சப்புறம் வந்திருக்கேன்," என்று சொல்லிவிட்டு மாடி அறையில் நுழைந்தார்.

(தொடரும்)

---

ESTD. 21-3-52.

**தபால் மூலம்**

GOVT REGD 3072.

# இலவசக் கல்வி போதனை

"D" வகுப்புகள் ஆரம்பத் தேதி 11—5—66

ஆண்-பெண் ஆகிய இருபாலரும், ஆசிரியர்களும், கீழ்க்கண்ட வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று சர்க்கார் 1966—67 வருடத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளித்து வருகிறோம்.

1. திருப்புவன் I.A. & I. Com; 2. போபால் P.U.C. (A & B கோர்சஸ்); 3. மதராஸ் மெட்ரிகுலேஷன்; 4. பெனாரஸ் மெட்ரிக்; 5. ஆந்திரா மெட்ரிக்; 6. மெட்ராஸ் P.U.C.; 7. தமிழ் வித்வான் வகுப்புகள்; 8. சர்வீஸ் கமிஷன்; 9. XI Std. S.S.L.C; 10. கைத்தறி நெசவு; 11. விவசாயம்; 12. Accountancy; 13. Overseer; 14. போஸ்டல் கிளார்க்; 15. போஸ்ட்மேன்; 16. கிராம மணியம்; 17. கிராம கர்ணம்; 18. ஹிந்தி வகுப்புகள்; 19. ஹோமியோபதி (தமிழ்-ஆங்கிலம்) 20. பேசிக் ஆங்கிலம்; 21. பிரி. மெட்ரிக்; 22. S. S. L. C. for Women.

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

1. S.S.L.C. தேறியவர்களும் தவறியவர்களும், ஆசிரியர்களும் போபால் P.U.C. வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம்; 2. (8-ம் வகுப்பு) III, IV, V படிவம் பயின்ற மாணவிகள் XI S.S.L.C. தேர்வில் கலந்து கொள்ளலாம். மேற்கண்ட வகுப்புகளின் முழு விவரங்களுக்கு 15np தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைய உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு: இவ்வகுப்புகளில் 21—5—66 வரை மாணவர்கள் சேர்ந்து கொள்ளலாம்.

தமிழகத்தின் தனிப்பெரும் தபாற் கல்வி ஸ்தாபனம்!

**ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்**

ரிஷிவந்தியம், .... தென் ஆற்காடு ஜில்லா, தென் இந்தியா.

கிளைகள்: சிலோன், மலேசியா, தென் ஆப்பிரிக்கா, மாரிஷஸ்.

ELEGANT



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 40

குழந்தைச்சாமியார் வந்தவுடன் மூடியிருந்த மாடி அறைக் கதவு மட்டும் திறக்கவில்லை. ராஜுவின் அடைபட்டிருந்த துக்கத்தின் கதவு கள் திறந்து துக்கம் கண்ணீராக மாறிப் பொழிந்தது. ஒன்றுமறியாக் குழந்தை போல் அழுதான். வளர்ந்த மனிதனின் தன்னடக்கம் சிறிதுமில்லாமல் அவன் நடந்து கொண்டான்.

ராஜுவின் உறவினர்களுக்கு இது ஆச்சரியத்தைக் கொடுத்தது. உடுமலைப் பேட்டைக் கல்யாணத்தில் ராஜுவை யும் மோகினியையும் சேர்த்துப் பார்த் துப் புரளியாகப் பேசியவர்கள் துக்கம் விசாரிக்க வந்திருந்தனர். கிழ்த்தர நோக்குடன், மனைவியின் மரணத்தை ராஜு விரும்பி ஏற்றுக் கொள்வான் என்றே கணக்குப் போட்டிருந்தனர் அவர்கள். இது அவனுக்கு நிம்மதி அளிக்கும் நிகழ்ச்சி என்றே வழியில் பேசி வந்தனர். ராஜுவின் வீட்டை அடைந்ததும் அவன் இறந்த மனைவி யோடு பித்தம் பிடித்தவன் போல் அந்த மாடி அறையில் அடைபட்டு இருப்பது புரியாத புதிராக இருந்தது. அவர்களில் ஒரு சிலர் இதுவரை ஏமாற் றுகிற நடிப்பு என்றுகூடப் பேசினர். பருத்தி விற்று, நூல் விற்று, பணத் தைச் சேர்ப்பதே மூல மந்திரமாகக் கொண்டு வாழ்ந்த அந்தச் சமூகத்தின் முதல் படியில் இருந்தவன் ராஜு.

ராஜுவின் தந்தை வெங்கடபதியின் காலத்தில் இருந்தே அவர்களுக்கு வெங்கடபதியின் குடும்பத்தின் மீது பொருமை யுண்டு. வெங்கடபதி வாழ் வில் உயர்ந்தாலும், அவன் தம்பி அழகிரி குற்றவாளியாகி, தண்டிக்கப்பட்டு, சிறைச்சாலையிலிருந் தது அவர்களுக்குத் திருப்தி அளித்த ஒரு விஷயம். பிறகுராஜு வின் மனைவி காலி மூந்து முடமானதில் ஒருவித திருப்தி அவர்களுக்கு.

இன்று துக்கம் விசாரிக்க வந்தவர் களில் பலர், வேடிக் கை பார்க்க வந்த வர்களே. 'விஜயா எப்படி இறந்திருப் பாள்? இயற்கையாகவே இறந்தாளா, இல்லை ஏதாவது நடந்திருக்குமா?' என்று நினைக்கவும் அவர்கள் சிந்தனை தயங்கவில்லை. உதட்டளவில் 'ஐயோ பாவம்,' என்று வருத்தம் தெரிவித் தாலும், அவர்கள் மனம் விபரீதத்தை எதிர்பார்த்தபடியே இருந்தது. இதைப் புரிந்து கொள்ளாமல் ராஜு, "சித் தப்பா, நானே அவள் வாழ்வை முடித்துவிட்டேன். நான் ஒரு பாவி சித்தப்பா!" என்று அழுதான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட உற வினர்கள் ஒருவிதமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மோகினியை யும் தவறான நோக்கத்தோடு பார்த் தனர். சாமியார், "ராஜு! விஜயா வின் காலம் முடிந்துவிட்டது. உனக்கு அவள் மீதுள்ள அன்பு எனக்குத் தெரி யாதா? வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே." என்று அவனுக்கு ஆறுதல் அளித்துவிட்டு விஜயாவின் உடலை அடக்கம் செய்வதற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்தார். பந்துக் கள் ஒவ்வொருவராக மாடிக்குச் சென்று விஜயாவின் உடலைப் பார்த்துவிட்டு வந்தனர். ஓரிரண்டு பெண்கள், இறந்த விஜயாவின் முகத்தைக் கூர்ந்து கவனித் தனர். "ஏதாவது விஷமாக இருந் தால் உடல் நீலம் பாரித்துப் போயிருக் குமே? முகம் சாதாரணமாகத் தூங்கு கிறமாதிரித்தானே இருக்கு?" என்று பேசிக் கொண்டனர். அறையில் மோகினி நிற்பதைக் கண்டபிறகே பேச்சை நிறுத்திக் கொண்டனர்.

இந்த வார்த்தைகள் மோகினிக்கு வேதனையைக் கொடுத்தன.

குழந்தை கௌரி முதன் முறையாக மரணத்தை இப்போதுதான் புரிந்துகொண்டாள். தந்தையின் அழும் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்கும் அழுகை வந்தது. தாயைப்பற்றி ஒவ்வொருவரும் அவளிடம் பேசும்போதெல்லாம் கண்ணீர் குமுறிக்கொண்டு வந்தது. இனிமேல் அம்மா பேசவே மாட்டாள் என்பதைப் புரிந்துகொண்டிருந்தாள். மெள்ள நெருங்கி, தாயின் இறந்த கண்களைப் பார்த்தாள். அருகில்



தின்ற மோகினிக்கு. கௌரி தாயின் கண்களை உற்றுப் பார்ப்பதைப் பார்த்ததும் மனம் துடித்தது. ''கௌரி, உங்கம்மா உயிர் போறப்போ படுக்கையிலேயே மயங்கிக் கிடந்த உன்னைத்தான் பார்த்திட்டிருந்தாள். அந்தத் திறந்த கண்கள் இன்னும் உன் உருவத்தோடுதான் இருக்கணும்,'' என்று சொல்லி கௌரியை அணைத்துக் கொண்டாள்.

சடங்குகள் முடிந்து வீடு திரும்பும் உறவினர்களுக்கு, தெரிந்தவர் வீட்டிலிருந்து இரவு உணவு எடுத்துவந்து பரிமாற ஏற்பாடு செய்தாள் மோகினி. ராஜு எந்தவித உணர்வும் இல்லாமல் தன் மனைவியின் இறுதிப் பயணத்தில் பின் தொடர்ந்து சென்றான். குழந்தைச் சாமியே விஜயாவுக்கு இறுதிச் சடங்குகள் செய்தார்.

வீடு திரும்பியதும் ராஜு மாடி அறைக்குச் சென்றான். உணவைப் பற்றி நினைக்கவில்லை. அப்படியே தன் அறையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். வந்தவர்கள் எல்லோரும் உணவு அருந்திக் கொண்டிருந்தனர். கடந்த இருபது மணி நேரங்களாக ராஜு ஒன்றுமே சாப்பிடவில்லையே என்ற கவலை மோகினிக்கு எழுந்தது. அவனிடம் நெருங்கி, ''சாப்பிடுங்கள்,'' என்று சொல்லவும் தைரியம் வரவில்லை. சாமியாரிடம் சொல்லிப் பார்த்தாள்.

சாமியார், ''மோகினி, அவனுக்கு இப்போது துக்கம்தான் உணவு. அவனாக வாய் திறந்து உணவு என்று கேட்காத வரையில் அவனைத் தொந்தரவு செய்வது தவறு,'' என்றார்.

சாமியார் சொன்னது மோகினிக்குப் பொருத்தமாகப் படவில்லை. இருந்தாலும் என்ன செய்ய முடியும்? உறவினர்கள் ஒவ்வொருவராக வீடு செல்ல ஆரம்பித்தனர். சிலர் அன்றிரவு அங்கேயே தங்க நினைத்தனர். இரவு இரண்டு மணி சுமாருக்கு அந்த வீட்டில் ஆரவாரம் ஓய்ந்தது.

கௌரி மோகினியின் அறையில் படுத்துக் கொண்டாள். அவளுக்குத் தூக்கமே வரவில்லை. நினைப்பதையெல்லாம் நடத்தியபடி ஒரு ராணி போல் *வாழ்ந்த விஜயா, சில விநாடிகளில் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு, தன் மடியில் இறந்தது அவளுக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது.

அவள் அறையை அடுத்த வெராந்தாவில் சிலர் படுத்திருந்தனர். அவர்களில் ஒருவர், ''அந்த மலையாளிப் பொண்ணுதான் விஜயா சாகறப்போ பக்கத்திலே இருந்திருக்காள். ராஜு டாக்டரைக் கூட்டிட்டு வரப்பவே உயிர் இல்லையாமே?'' என்றார்.

''அப்பன் வெங்கடபதி போலத்தான் மகனும். சொந்தக்காரர்களை நெருங்க விடறதில்லை. சம்பந்தமில்லாதவர்களைத் துணிஞ்சு நம்பறான். என்ன நடந்ததோ, யாரு கண்டாங்க? அந்தக் குழந்தை கௌரியைப் பாரு. அந்த மலையாளச்சியை சொந்தத் தாய்போல நினைச்சுப் பழகுகிறாள்! என்ன மந்திரம் போட்டு மயக்கி வச்சிருக்காளோ?'' என்றார் இன்னொருவர்.

''உன்னையும் என்னையும் வந்து யாரா வது மயக்கிறாங்களா? ஹூம்! எல்லாம் சொத்து இருந்தாத்தான்!''

''ஆமாம், சொத்து இருந்தாலும் துக்கம்தான்; அது இல்லாட்டியும் துக்கமாகத்தான் இருக்குது.''

இவ்வாறு ராஜுவின் உறவினர்கள் பேசும் வார்த்தைகளைக் கேட்டதும், மோகினிக்கு ஒரு குழப்பம் வந்தது. விஜயா இறக்கும்போது தனியாக அந்த அறையில் இருந்தது, எவ்வளவு தவறான சந்தேகத்தில் அவளைச் சூழவைக்கிறது என்பதை உணர்ந்தாள். விஜயாவின் இறுதி வேண்டுகோளை தான் வாய்



''நம்ம எதிர் வீட்டுக் காலேஜ் மாமா, மஞ்சள் நூலிலே கோத்த இந்தத் தங்க டாலரை உனக்காக வாங்கினாராம். உன்னிடம் காட்டச் சொன்னார். நன்றாக இருக்கிறதா பார் அக்கா!''

திறந்து சொன்னால் இன்னும் எவ்வளவு சந்தேகப்படுவார்கள்! சொத்துக்காக ஆசைப்பட்டுக் கொலையே செய்து விட்டாள் என்று சொல்லமாட்டார்களா? நினைத்து நினைத்து மோகினி வேதனைப்பட்டாள். விஜயா கடைசியாகத் தன்னிடம் கூறிய வார்த்தைகளை எப்படி மற்றவர்களிடம் சொல்வது என்ற பயம் எழுந்தது. குழந்தைச் சாமியாரிடம் அதைச் சொன்னால் மற்ற எல்லாவற்றையும் அவரிடம் சொல்ல வேண்டும். ராஜுவும் அவளும் சூழ்நிலையை மறந்து சில விநாடிகள் ஒருவரை ஒருவர் அணைத்து நின்ற விஷயத்தை எப்படிச் சொல்வது? அதை நினைக்கவே அவளுக்கு ஒரே வெறுப்பாக இருந்தது.

பொழுது விடியும் வரையில் மோகினி தூங்கவே இல்லை.

மறுநாள் பூராவும் ராஜு மாடியிலிருந்து இறங்கவும் இல்லை. மோகினிக்கு மாடிப்பக்கம் போகவும் துணிவில்லை. சாமியார்தான் காப்பி எடுத்துச் சென்றார். சாமியார், ராஜுவுக்கு ஒரு தோழன் போல் இருந்தார். மோகினி அவரை அந்த வீட்டிலேயே இருக்கும்படி வேண்டிக் கொண்டாள்.

அந்த வேண்டுகோளைக் கேட்டதும் சாமியார் சிரித்தார்.

''ஏன் சாமி சிரிக்கிறீங்க?'' என்று மோகினி கேட்டாள்.

சாமியார், ''ராஜுவும் உன்னைப் போல்தான் மோகினி சொல்கிறான். 'சித்தப்பா, என்னைத் தனியா இந்த வீட்டிலே விட்டுட்டுப் போயிடாதீங்க' என்று சொல்கிறான்,'' என்று கேலியாகச் சொன்னார்.

மோகினி அதற்கு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

நாட்கள் சென்றன. ராஜு மாடியிலிருந்து இறங்கவே இல்லை. கௌரியும் தன்னுடனே இருக்க வேண்டுமென்று அழைத்துக் கொண்டான். சாமியார் அந்த வீட்டில் இருந்தது மோகினிக்குப் பெரும் துணையாக இருந்தது. அவரிடம் அந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளைச் சொன்னாள். பாருகுட்டி அம்மாள் வந்ததும், சாந்தினிதான் மோகினி டீச்சர் என்று ராஜுவுக்குப் புரிந்து விட்டது என்று சொன்னாள். ஆனால் ராஜுவை அவள் விரும்பியதையோ, ராஜு அவளை விரும்பியதையோ சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள்.

''விஜயாவுக்கு நீதான் மோகினி டீச்சர் என்பது தெரியுமா?'' என்று சாமியார் கேட்டார்.

''கடைசி வரையில் நான் உண்மையைச் சொல்லாமலே இருந்து விட்டேன்,'' என்று சொல்லிவிட்டுத் தரையை நோக்கினாள் மோகினி. ஒரு தந்தையைவிட அன்பால் நெருங்கியவர் சாமியார், அவள் வாழ்க்கையை அமைத்தவரே அவர். அவரிடம் கூடச் சில விஷயங்களைச் சொல்ல யோசனையாய் இருந்தது.

சாமியார், மோகினியை ஒருவிதக் கனிவோடு பார்த்தார். ''இந்த வீட்டுக்கு நான் உன்னை அழைத்து வரும் போது நீ ஒரு குழந்தை. ஆனால் இன்று நீ ஒரு 'ஸ்திரீ'யாகிவிட்டாய் மோகினி!'' என்று சொன்னார். அவர் கூறியதன் அர்த்தத்தை மோகினியால் பூராவும் புரிந்து கொள்ள முடியவில்லை. விஜயாவின் மறைவுக்குப் பின் அந்த வீட்டில் அவள் நிலையையே அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. சமையல்காரன், டிரைவர் முதலியவர்கள் அவளை ஒரு எஜமானியைப்போல் நடத்தினர். குழந்தை கௌரி தாயைப்போலக் கருதினாள். ஆனால் ராஜு அவள் எதிரிலேயே வரத் தயங்கினான். அவனிடம் அவள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நேராகச் சமையல்காரனிடம் தனக்குத் தேவையானவற்றைப் பற்றிச் சொல்லி, தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டான். எந்த முகத்தோடு தொடர்ந்து அந்த வீட்டில் இருப்பது என்று மோகினிக்குப் புரியவில்லை.

ஒருநாள் சாமியார், கோயமுத்தூருக்கு மேற்கே உள்ள பேரூர் என்ற தலத்திலுள்ள கோவிலுக்குச் சென்றார். குழந்தை கௌரியையும் உடன் அழைத்துச் சென்றார். சமையல்காரன் சமையல் அறையில் வேலையாக இருந்தான். தோட்டக்காரன், டிரைவர் எல்லோரும் வெளிப்புறத் தோட்டத்தில் இருந்தனர். மோகினி துவைத்த தன் துணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது பின்புறம் கதவு ஆடும் சத்தம் கேட்டுத் திரும்பினாள்.

கதவருகில் ராஜு நின்று கொண்டிருந்தான். க்ஷவரம் செய்யப்படாத தாடி, ஒளியிழந்த கண்கள், வெளுத்த முகம், கைகளிலே ஒரு நடுக்கத்தோடு நின்றான் அவன். அவனைப் பார்க்கவும் பரிதாபமாக இருந்தது மோகினிக்கு. ராஜு என்ன பேசப் போகிறான் என்ற ஆவலோடு நின்றாள்.

ராஜு, ''மோகினி, எனக்கு வாழ்க்

கையே நரகமாகத் தோன்றுகிறது. அன்று இரவு நான் உன்னிடம் தவறாக நடந்து கொண்டதற்கு என்னை மன்னித்து விடு,'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

'யார் யாரை மன்னிப்பது? இருவருமே குற்றவாளிகள் தானே?' என்று மோகினி நினைத்தாள். ஆனால் வார்த்தைகளால் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை.

''விஜயா இறக்கும்போது கடைசி நிமிடங்களில் நீ தானே அவளோடு இருந்தாய்? அவள் என்ன நினைத்தாள், என்ன சொல்ல விரும்பினாள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். அவளைக் கொன்றவன் நான்தான் என்று நினைக்கிறேன். அவள் என்னிடம் ஒரு சமயம் சொல்லியிருந்தாள். 'நீங்கள் என்று எனக்குத் துரோகம் செய்கிறீர்களோ, அன்றுதான் எனக்கு முடிவு. வியாதி என்னைக் கொல்லாது. உங்கள் அன்பை இழந்துவிட்டேன் என்ற எண்ணம்தான் என்னைக் கொல்லும்' என்று சொன்னாள். அவள் நினைத்தபடியே ஆகிவிட்டது. என் மனச்சாட்சி என்னை ஒவ்வொரு நிமிஷமும் கொல்கிறது. நீ இந்த வீட்டில் இருக்கும் வரையில் நான் என் மனச் சாட்சியோடு அமைதியாக வாழ முடியாது என்று நினைக்கிறேன்,'' என்றான்.

மோகினி ஒன்றும் பேசாமல் நின்றாள்.

''உனக்கு எவ்வளவு ஆயிரம் ரூபாய் வேண்டுமானாலும் தருகிறேன். நீ எப்படியாவது இந்த வீட்டை விட்டுப் போய்விடு. அதுதான் இறந்து போனவளின் ஆன்மா சாந்தியடைய நீ செய்யக்கூடிய பெரிய உதவி,'' என்று கெஞ்சிக் கேட்டான் ராஜு.

மோகினியின் உடல் குப்பென்று வியர்த்தது. விஜயாவின் இறுதி ஆசையை இவரிடம் எப்படிச் சொல்வது? 'நான் அவருக்கு அளிக்கத் தவறிய இன்பத்தை நீ கொடு தங்கச்சி' என்று விஜயா சொன்னாள் என்பதை இவர் நம்புவாரா? ஆயிரக் கணக்கான பணம் கொடுத்து என்னைத் திருப்தி செய்யலாம் என்று நினைக்கும் இவர், என்னை ஒரு வேசிபோல் நினைக்கிறாரே! கேவலம் ரூபாய்க்காக நான் எதையும் செய்வேன் என்று நினைக்கிறாரே! இவரை என் மனம் ஏன் இன்னும் விரும்புகிறது?—என்று துடித்தாள்.

''எனக்கும் இங்கு தங்குவது நரகமாகத்தான் இருக்கிறது. குழந்தை கௌரியிடம் நான் போவது பற்றிச் சொல்ல வேண்டாம். இரவில் அவள் தூங்கிய பின் நான் புறப்படுகிறேன்,'' என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினாள் மோகினி.

அன்று பிற்பகல் சாமியாரிடம் மட்டும், அவள் அந்த வீட்டை விட்டு வெளியேற விரும்புவதாகச் சொன்னாள். சாமியார் மோகினியின் மனத்தை மாற்றப் பார்த்தார். மோகினி பிடிவாதமாகப் போகப் போகிறேன் என்று சொன்னது சாமியாருக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது.

மோகினியின் பயணத்தைக் கௌரியிடம் யாரும் சொல்லவில்லை. அது ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

அன்று மாலை, கௌரி, ''என்ன டீச்சர், நீங்க ஊருக்குப் போகப் போறீங்களா? ராத்திரி நீங்க கார்லே ஸ்டேஷனுக்குப் போக வேண்டுமென்று அப்பா டிரைவரிடம் சொன்னாரே?'' என்று கேட்டாள்.

மோகினி, ''நான் எங்கும் போகப் போவதில்லை. இங்கேதான் இருக்கப் போகிறேன். நீ நிம்மதியாக தூங்கு,'' என்றாள்.

கௌரி குழப்பத்தோடு காணப்பட்டாள். குழந்தையின் கேள்வியும் அதற்கு மோகினி கொடுத்த பதிலையும் கேட்டுக் கொண்டிருந்த சாமியார், மோகினி ஹாலுக்கு வந்ததும், ''மோகினி! நல்லா பொய் சொல்லக் கற்றுக் கொண்டு விட்டாயே?'' என்று இடக்காகக் கேட்டார்.

மோகினி புன்முறுவலோடு சாமியாரைப் பார்த்து, ''ஒரு பொய்யின் துணை கொண்டுதானே இந்த வீட்டுக்கு வந்தேன்? ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு வீட்டைவிட்டுப் போவது தவறா?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

சாமியார் சிரித்துவிட்டார். ''கௌரி உன்னைப் பிரிந்து இருக்க மாட்டாளே என்பதற்காகப் பொய் கூறி உன்னை இங்கு கொண்டுவந்தேன். நான் செய்தது எவ்வளவு சரி என்பது அந்தக் குழந்தை கிணற்றிலே விழுந்தும் இன்று உயிரோடு இருக்கிறதிலேருந்து தெரியுது. என் பொய் ஒரு உயிரையே காப்பாத்தியிருக்கு. இல்லையா?'' என்று கேட்டார்.

மோகினியால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. உணவருந்தியதும் தன் அறைக்கு வந்து படுத்துக் கொண்டாள்.

கௌரி, மறுபடியும் அவளிடம் வந்து, ''டீச்சர், நீங்க சொல்லாமல் போயிட மாட்டீங்களே?'' என்று கேட்டாள்.

மோகினி உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ''கவலைப்படாதே. தூங்கு கௌரி,'' என்று சொல்லிக் கௌரியின் அருகில் படுத்துக் கொண்டாள். குழந்தை தன் கையால் மோகினியை இறுக அணைத்துக் கொண்டு தூங்கினாள். தூக்கத்திலும் கௌரியின் பிடி தளரவில்லை.

இரவு பதினொரு மணிக்கு அறையின் கதவு திறந்தது. ராஜு நின்று கொண்டிருந்தான். மெல்லிய குரலில், ''ரயிலுக்கு நேரமாச்சு, மோகினி,'' என்றான்.

மோகினி, தூங்கும் கௌரியைப் பார்த்தாள். மெள்ள அவள் கையை விலக்கித் தலையணையின் மீது வைத்தாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

ராஜு, ''என்ன மோகினி?'' என்றான்.

மோகினி, ராஜுவின் முகத்தைப் பாராமலே பின்வரும் வார்த்தைகளைக் கூறினாள்:

''ஒருத்தி அவள் பெறாத குழந்தைக்குத் தாயாகவே கூடாது. கூடவே கூடாது. ஏன் என்றால் அது உரிமையில்லாத ஒரு தாய்மை. எந்த நிமிஷம் வேண்டுமானாலும் அவள் தாய்மை பிரிக்கப்படலாம்; இல்லையா?'' என்று நாக்குழறச் சொல்லிவிட்டு வாயிலை நோக்கி நகர்ந்தாள். அங்கு சாமியார் நின்று கொண்டு இருந்தார். சாமியாரின் காலைத் தொட்டு வணங்கினாள்.

ராஜு மோகினியிடம் 5000 ரூபாயைக் கொடுத்து, ''விஜயாவின் விருப்பத்துக்காக இதை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்,'' என்றான்.

''வேண்டாம். தயவு செய்து பணத்தை மட்டும் கொடுக்காதீர்கள். என்னைப் பணத்தால் அவமதிக்க வேண்டாம்,'' என்று சொல்லிக் காரில் ஏறிக் கொண்டாள்.

(தொடரும்)

தி மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்.
L. L. A. பில்டிங்க்ஸ் (2-வது மாடி)
150-A, மவுண்ட் ரோடு, சென்னை-2.
டிபாஸிட்டுகள்
ரூபாய் 1,000மும்
அதற்கு மேற்பட்ட தொகைகளும்
ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
கணிசமான வட்டி விகிதங்களுக்கு
எங்களை அணுகுங்கள்.
உங்களுடைய அசலுக்கும் வட்டிக்கும்
சென்னை அரசாங்கம்
உத்தரவாதம் அளித்திருக்கிறது.
SA



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

கார் ஸ்டேஷனை நோக்கிச் செல்லும்போது, காற்று ஜில்லென்று வீசியது.

பொய்ப் பெயரில் பொய் நாடகம் ஆடவேண்டி வந்த சுமை, ராஜூவின் வீட்டுக்குக் குழந்தைச்சாமியோடு வந்த போது இருந்தது மோகினிக்கு. ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு சோதனையாகக் கழிந்த அந்த வேதனை நாடகம் முடிந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தாள் அவள்.

அந்த நாடகத்தின் கடைசிக் காட்சி ராஜூ அவளுக்குப் பணத்தை நீட்டியதுதான். அவள் மனத்தில் அவள் ராஜூவை விரும்பியது தவறாகவோ, பாவமாகவோ படவில்லை. மலர், மணம் தருவது அதன் குற்றமாகுமா? அது போல் அவள் காதலும் அவளுக்குப் பெரிய தவறாகப் படவில்லை. குழந்தை கௌரியிடம் அவள் பாசம் வைத்தது போல், அவள் ராஜூவிடம் இன்னொரு விதமான பாசம் வைத்திருந்தாள். குழந்தைச்சாமியிடம் ஒரு விதமான அன்பு. நாராயணி அம்மாள், சங்கரன் குட்டி இருவரிடமும் ஒருவிதமான அன்பு இருந்தது.

நிரந்தரமான வெறுப்பு என்ற உணர்ச்சிக்குத் தன் மனத்தில் இடமே ஒதுக்காமல் வளர்ந்து வந்த மோகினிக்கு, அன்பு செலுத்துவது குற்றமாகத் தோன்றவில்லை. ஆனால் அவள் ராஜூவிடம் செலுத்திய அன்பு மற்றவர்களிடம் செலுத்திய அன்பைப் போல் அல்ல என்பது அவளுக்குத் தெரியும். ராஜூவை நினைக்கும் போது அவள் உடலில் ஏற்பட்ட கிளர்ச்சி, பூரிப்பு அவளுக்கு வெட்கத்தையே கொடுத்தது. அவன் திருமணம்ஆனவன், அவன் அன்புக்குப் பாத்திரமான ஒரு மனைவி இருக்கிறாள் என்பதையெல்லாம் அவள் உணராமல் இல்லை. அந்த மனைவிக்குத் துரோகம் இழைப்பது கருணையில்லாத செயல் என்று உணர்ந்தாள். ஆனால் அது பாபம் என்று நினைக்கவில்லை.

விஜயாவுக்குத் துரோகம் இழைப்பது சமூகச் சட்டப்படி குற்றம். ஆனால் இயற்கைச் சட்டம் சமூகத்தின் சட்டத்தை ஏற்றுக் கொள்வதில்லையே! இயற்கையின் வேகம்தானே அன்று மழையும் பேய்க் காற்றும் வீசும் போது ராஜூவையும் மோகினியையும் ஒருவரை ஒருவர் மறந்து அணைத்து நிற்கும்படி செய்தது!

விஜயாவின் மரணத்துக்குத் தன்னைக் காரணமாக்கிக் கொண்டு வருந்தும் ராஜூவின் மனநிலையை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. ராஜூவின் மனத்தில் எழுந்த குற்ற உணர்ச்சிகளை அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. மோகினிக்குப் புண்ணியம் என்று ஒன்று இருப்பதாக உணர்வு இருந்தால் அல்லவா பாவம் என்று ஒன்று இருப்பதாக அவள் எண்ண முடியும்!

குழந்தை கௌரியின் உயிரைக் காப்பாற்றியதற்காக விஜயா அவளைப் பாராட்டியதும் அவளுக்கு மிகையாகவே தோன்றியது. அவள் எந்த விதமான வீரச் செயல் புரிந்ததாகவும் நினைக்கவில்லை. அவள் உயிருக்கும் மேலாக விரும்பிய குழந்தையைக் காப்பாற்ற அவள் கிணற்றில் குதித்தது அவளுக்கு இயற்கையாகவே தோன்றியது. மோகினியைப் பொறுத்தவரையில் அன்பு ஒன்றுதான் உலகத்தில் மனிதன் பாராட்ட வேண்டிய பண்பாகத் தோன்றியது. அன்பில்லாத ஜீவன்தான் பாவி என்று நினைத்தாள்.

அத்தியாயம் 41

குழந்தைச்சாமி அன்பின் உருவமாகத் தானே அவனுடைய குழந்தைப் பருவத்தில் தோன்றினார்! அவர் கருணையால்தானே அவன் உருவானான்!

காரில் புறப்படும் போது ராஜூ தன்னிடம் பணத்தை நீட்டியது அவளை அவமானப்படுத்தும் அன்பில்லாத செயலாகத் தோன்றியது. ஒவ்வொரு செயலிலும் குற்றம் கண்டு பிடித்துச் கடு சொற்கள் சொல்லிய விஜயா கூட வாழ்வின் கடைசி விநாடிகளில் அவளிடம் அன்பைக் காட்டி விட்டுத்தான் இறந்தாள். அவள் வீட்டில் நடமாடும் லட்சுமியாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். ஆனால் ராஜூவோ அவளிடம் பணத்தை நீட்டி அவள் மனத்தை நோகச் செய்துவிட்டான்.

இவ்வாறு குழம்பிய சிந்தனையோடு ரயில்வே ஸ்டேஷனை வந்தடைந்தாள். மலையாளம் செல்லும் ரயிலில் ஏறினாள்.

அதிகாலையில் ரயில் ஷோரனூர் வந்து சேர்ந்தது. ஷோரனூர் ஸ்டேஷனில் இறங்கியதும் அவளை ஒரு சோர்வு பிடித்துக் கொண்டது. மெள்ளத் தள்ளாடியபடி மக்கச் சந்தில் உள்ள நாராயணி அம்மாள் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இன்னும் இருள் நீங்கவில்லை. பட்சிகளின் ஒலம் எங்கும் நிறைந்திருந்தது. மழை பிசுபிசுவென்று தூற ஆரம்பித்தது. பெட்டியைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடக்கவும் முடியவில்லை.

வீட்டை நெருங்கியதும் நிசப்தமாக இருந்தது. வீட்டின் வெளிக் கதவு திறந்து கிடந்தது. திடீரென்று மோகினிக்கு அவள் ஞாபகக் குவியலின் அடியிலிருந்து ஒரு ஞாபகம் எழுந்தது. ஞாபகம் அவ்வளவு தெளிவாக இல்லை.

அவள் சிறு குழந்தையாய் அந்த வீட்டுக் கதவைத் தட்டுவதும், கதவு திறக்கப்படுவதும், நாராயணி அம்மாள் அவளை வீட்டுக்குள் அழைத்துக் கொள்வதும்தான் அந்தக் காட்சி. அந்தக் காட்சி ஏன் இப்போது மோகினியின் நினைவுக்கு வந்தது என்று மோகினியால் சொல்ல முடியவில்லை. வீட்டின் உட்புறம் அடியெடுத்து வைத்தாள்.

அவள் கால்கள் நடுங்கின. ஓடிப் போய் நாராயணி அம்மாளின் மடியில் தலை வைத்து, கோயம்புத்தூரில் நடந்தவற்றையெல்லாம் சொல்லி அழ வேண்டும் போல் தோன்றியது. ஒன்றையும் ஒளிக்காமல் தன்னை வளர்த்த தாயாகிய நாராயணியிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். பெட்டியை வைத்துவிட்டுச் சமையல் அறைப் பக்கம் திரும்பினாள். அடுப்பு அணைந்து கிடந்தது. சங்கரன்குட்டியின் மடியில் நாராயணி அம்மாள் படுத்திருந்தாள்.

சங்கரன்குட்டி, ''கஷாயம் சாப்பிடம்மா. கஷாயம் சாப்பிடம்மா,'' என்று வற்புறுத்திக் கொண்டிருந்தான்.

''குட்டி, அம்மாவுக்கு என்னடா உடம்பு?'' என்று கேட்டபடி குட்டியை நெருங்கினாள் மோகினி.

குட்டி, நிமிர்ந்து பார்த்து விட்டு, ''மோகினி, நீயா? வந்துட்டியா! பாரு மோகினி. அம்மா மருந்து சாப்பிடாமல் அடம் பிடிக்கிறாங்க. நீ சொன்னாத்தான் அம்மா கேப்பாங்க. நீயே மருந்து கொடு,'' என்று சொல்லி, சின்னக் கண்ணாடி அவுன்ஸ் கிளாஸில் இருந்த மருந்தை மோகினியிடம் நீட்டினான்.

மோகினி அவுன்ஸ் கிளாஸை வாங்கிக் கொண்டு நாராயணி அம்மாளை நெருங்கினாள். நெருங்கியதும், மோகினி அதிர்ச்சி அடைந்தாள். நாராயணி அம்மாளின் கண்கள் திறந்தபடி இருந்தன. அவள் உடல் கட்டை போல் கிடந்தது. கையைத் தொட்டுப் பார்த்தாள். பனிக்கட்டி போல் இருந்தது. மோகினி, ''அம்மா... அம்மா!'' என்று கூறியபடி அழ ஆரம்பித்தாள்.

நாராயணி அம்மாள் இரவே இறந்திருக்க வேண்டும். அதைப் புரிந்து கொள்ளாமல் சங்கரன் குட்டி தன் தாய்க்கு மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறான்.

''என்ன மோகினி, ஏன் அழறே?'' என்று குட்டி கேட்டான்.

''அம்மே மரிச்சுப் போயி! போய் மகேசன் நம்பூதிரியைக் கூட்டிட்டு வா குட்டி....'' என்று சொல்லி அனுப்பினாள் மோகினி.

குட்டி வெளியே ஓடினான்.

'இப்போதுதான் ஒரு சாவு வீட்டிலிருந்து வருகிறேன். இங்கும் ஒரு சாவா?' என்று மோகினி நினைத்து மனம் புழுங்கினாள். நாராயணி அம்மாளின் உடல் உலர்ந்து சருகுபோல் கிடந்தது. வெகு நாட்களாக வியாதியால் வாடிய உடம்பு போல் தெரிந்தது. உழைத்து உழைத்து ஒரு நாள் இன்பம் கூட இல்லாமல் மடிந்தவள் நாராயணி என்று நினைத்த போது, மோகினிக்கு வாழ்வே அர்த்தமற்ற ஒரு பயங்கரக் குழப்பமாகத் தோன்றி

யது. எவ்வளவோ விஷயங்களைப் பேச வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த மோகினிக்கு நாராயணியின் மரணம் அதிர்ச்சியைக் கொடுத்தது.

எங்கும் சாமான்கள் சீரில்லாமல் கிடந்தன. நாராயணி அம்மாள் சமையல் அறையில் படுத்திருப்பதிலிருந்தே ஒரு விஷயம் மோகினிக்குத் தெளிவாயிற்று. சில நாட்களாகவே நாராயணி அம்மாள் எழுந்து நடமாட முடியாமல் போயிருக்க வேண்டும். உட்கார்ந்த நிலையிலே கஞ்சி வைத்துக் குடித்துவிட்டுச் சமையல் அறையிலேயே படுத்துக் கிடந்திருக்கிறாள் என்பது தெளிவாயிற்று. கோயம்புத்தூரில் உள்ள மோகினிக்கு ஏன் ஒரு கடிதம் கூட எழுதவில்லை என்று புரியவில்லை.

அடுத்த அறைக்கு வந்து பார்த்தாள். அங்கு மரப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். அதில் பணம் கற்றை கற்றையாக இருந்தது. ஒவ்வொரு மாதமும் மோகினியின் சம்பளத்திலிருந்து அனுப்பிய பணம், செலவழிக்கப் படாமல் அப்படியே ஒரு கவரில் சுற்றி வைக்கப் பட்டிருந்தது. அதன் மீது 'மோகினி' என்று எழுதப் பட்டிருந்தது.

மகேசன் நம்பூதிரி வந்ததும் அவர் விக்கி அழுதபடி துக்கம் விசாரிக்க ஆரம்பித்தார். குட்டி ஒரு பக்கம் உட்கார்ந்து அழத் தொடங்கினான். நம்பூதிரி கூறியதிலிருந்து நாராயணி ஒரு மாதமாகவே உடல்நிலை சரியில்லாமல் இருந்திருக்கிறாள் என்பது தெரிந்தது.



'மோகினி நல்ல இடத்தில் வேலையாயிருக்கிருள். அவள் அங்கேயே நிம்மதியாய் இருக்கட்டும். அவளுக்கு என் உடல் நிலைபற்றித் தெரியக்கூடாது,' என்று நம்பூதிரியிடம் சொல்லியிருக்கிருள் என்ற விஷயமும் தெரிந்தது. அதோடு குட்டி ஓரிரண்டு மாதம் குழந்தைச்சாமியோடு இருந்தவன் அந்த வாழ்க்கை பிடிக்காமல் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான் என்பதும் தெரிந்தது. குழந்தைச்சாமியும், அவளிடம் சங்கரன் குட்டியைப் பற்றிக் குறைவாகச் சொல்லவில்லை. என்ன காரணத்துக்காகவோ அவர் அவன் பேச்சையே எடுக்கவில்லை. நல்லவேளை, தாயின் மரணத்தின்போது குட்டியாவது அருகில் இருந்திருக்கிருன் என்பது மோகினிக்குத் திருப்தி அளித்தது. நாராயணி அம்மாள் தன் கல்யாணத்துக்காகச் சேர்த்து வைத்திருந்த பணத்தை நாராயணி அம்மாளின் ஈமக் கடன்களுக்காகவே செலவழித்தாள் மோகினி.

அந்தச் சிறிய கிராமத்தார் நாராயணி அம்மாளின் சடங்குகள் இவ்வளவு சிறப்பாக நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை. கோதானம், பாத்திர தானம், பூதானம் போன்ற எல்லாவித தானங்களும் செய்தாள். அந்த வீட்டுக்கு அருகில் இருந்த சிறு தோட்டத்தையும் தானமாகக் கொடுத்துவிட்டாள்.

நம்பூதிரி, ''குட்டியின் எதிர்காலத்துக்கு என்ன செய்யப் போகிருய்?'' என்று கேட்டார்.

''குட்டி உயிருள்ளவரை அவன் பசியால் வாடாமல் கவனிக்க வேண்டியது என் பொறுப்பு. நான் சம்பாதித்து அவனைக் காப்பாற்றுவேன்,'' என்று சொன்னுள் மோகினி.

எர்ணுகுளத்தில் ஒரு பள்ளியில் வேலை இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு செல்வது என்று முடிவு செய்தாள் மோகினி—வீட்டை மகேஹசன் நம்பூதிரியிடம் விட்டு விட்டு.

குட்டியுடன் எர்ணுகுளத்துக்கு ரயிலில் புறப்பட்டாள். ரயில் திருச்சூர் ஸ்டேஷனை அடைந்ததும் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் அவள்.

தூரத்தில் ஸ்டேஷன் வெளிப்புறம் ராஜுவின் பெரிய கார் நிற்பதைக் கவனித்தாள். அடுத்த விநாடி ராஜு ஸ்டேஷனில் நுழைவதையும் கவனித்தாள். அவனுடன் குழந்தைச்சாமியும் இருந்தார். ராஜுவின் முகம் களையிழந்து கவலையோடு இருந்தது. அவன் முகத்தைப் பார்க்கவும் அவளுக்கு வேதனையாக இருந்தது. அவர்கள் கண்ணில் படவேண்டாமென்று ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்தவள் எழுந்து வேறு பக்கம் சென்றுள்.

ராஜுவும் குழந்தைச்சாமியும் வண்டியின் உட்புறம் பார்த்தபடி அவள் இருந்த பெட்டியைத் தாண்டிச் செல்வதைப் பார்த்தாள். சில விநாடிகளில் அவர்கள் திரும்பவும் அந்தப் பெட்டியைப் பார்த்தபடி எதிர்த் திசையில் சென்றனர். அவர்கள் யாரையோ ரயில் வண்டியில் தேடுவது போல் தெரிந்தது.




ஜப்பானில் ஓஸாகா நகரிலுள்ள மாட்ஷுஷிடா மின்சாரத் தொழிற்சாலையில் இப்படி நடக்கிறது:

வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளிக்குக் கோபம் மிகவும் வந்து விட்டால் அவன 'மனிதச் சமநிலை அறைக்குச்' செல்வான். அந்த அறையில் புல் முதலியவற்ருல் அடைக்கப்பட்ட முதலாளியின் உருவம் ஒன்று (சோளக்கொல்லைப் பொம்மையைப் போன்றிருக்கும் அது) தொங்கும். அந்த முதலாளியைத் தொழிலாளி தன் விருப்பப்படி அடிப்பான், அறைவான், உதைப்பான். அங்கே அருகில் வைக்கப்பட்டிருக்கும் மூங்கில் தடியால் முதலாளியைக் குத்தியும் கொல்வான்.

இந்த முறையைக் கையாண்டு ஜப்பானில், தொழிலாளர்களின் உணர்ச்சிச் சிக்கலின் விளைவைத் தவிர்த்து, அதன் மூலம் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகைசெய்கிருர்கள்.

'இன்டர்நேஷனல் மேனேஜ்மெண்ட்' என்ற இதழ் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

—மலயமான்

அவர்கள் அவனைத்தான் தேடுகிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை. முந்திரிப் பருப்பு விற்பவன் ஒருவன் தட்டோடு செல்வதைப் பார்த்த சங்கரன் குட்டி, ''மோகினி, முந்திரிப் பருப்பு வாங்கட்டா?'' என்று பயத்தோடு கேட்டான்.

மோகினியால் அவன் வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. அவனிடம் எட்டணா கொடுத்தாள். அவன் வண்டியிலிருந்து இறங்கி முந்திரிப் பருப்பு விற்பவனைக் துரத்திக்கொண்டு சென்ருன். குட்டி முந்திரிப் பருப்பு வாங்கிக் கொண்டு திரும்புவதற்குள், ஸ்டேஷன் மணி அடித்து, கார்டு விசில் ஊதினர். குட்டி ரயிலை மறந்துவிட்டானே என்ற கவலையோடு மோகினி கதவருகே ஓடினள். அதே சமயத்தில் வண்டியினுள் சங்கரன் குட்டி முந்திரிப் பருப்பைத் தின்று கொண்டே நுழைந்தான். அவன் பின்னல் குழந்தைச்சாமியும் ராஜுவும் மூன்ருவது வகுப்பு வண்டியில் நுழைந்தனர். ராஜுவைப் பார்த்ததும் மோகினிக்கு ஒரே குழப்பமாகப் போய் விட்டது. வண்டியும் நகர ஆரம்பித்தது.

மோகினி ஒன்றும் பேசாமல் தன் இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டாள்.

குழந்தைச்சாமி, ''என்ன மோகினி, என்னை உனக்கு அடையாளம் தெரியல்லியா? பார்த்தும் பேசாமல் இருக்கிருயே! என் தாய்க்கு என் மேலே கோபமா?'' என்று கேட்டார்.

ராஜுவின் பார்வை அவள் முகத்தின் மீது இருந்தது. அவனை நிமிர்ந்து பார்க்க மோகினிக்குக் கஷ்டமாக இருந்தது. தலை குனிந்தபடி, ''சாமி, அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க. உங்களை நான் எதிர்பார்க்கல்லே. அதான் பேசல்லே,'' என்று சொல்லி மழுப்பினள்.

''நாராயணி அம்மா இறந்த செய்தி ஊருக்கு வந்தப்புறம்தான் தெரிஞ்சது. அப்போதான் நீயும் எர்ணுகுளத்துக்குப் புறப்பட்டு ரயில்லே போனதாக மஹேசன் சொன்ஞரு. உடனே ரயிலைத் துரத்திட்டுக் கார்லே வந்தோம். திருச்சூர்லே உன்னைப் பார்த்திடலாம்னு நினேச்சு, ஒவ்வொரு வண்டியாய்த் தேடினேம். ஆனல் உன்னைக் காண முடியல்லே,'' என்ருர் குழந்தைச் சாமி.

(தொடரும்)

## சற்றே



''ஹாங்..ஹச்சு! அச்சு..!அச்... மகிழ்ச்சியுடன் இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைக்கிறேன்!''

*

''இப்பத்தானே' ஆபீஸ் போனீர்கள்? அதற்குள் திரும்பிவிட்டீர்களே! ஏன்?''



''ஆபீஸ் நடவடிக்கைகளைச் சிக்கனமாக நடத்துவது எப்படி என்று ஒரு பட்டியல் போட்டுக் கொடுத்தேன். முதலில் எனக்குச் சீட்டுக் கிழித்து விட்டார்கள்!''

*



''இவர், மாதக் கடைசியில் வந்த விருந்தாளி டாக்டர்! இவருக்கு ஒரு குளுகோஸ் இன்ஜெக்ஷன் போட்டு விடுங்கள். பணம் நான் தரேன்!''

நகுக



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

## அத்தியாயம் 42

ரயில் வண்டி எர்ணாகுளம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. குழந்தைச் சாமியார் தாம் மோகினியைத் தேடி வந்ததன் நோக்கத்தை விளக்கினார். மோகினி சென்றதிலிருந்து குழந்தை கௌரி உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறாள் என்பதை விளக்கினார். மோகினி எப்படியாவது கோயம்புத்தூர் திரும்ப வேண்டும் என்று மோகினியிடம் கேட்டார்.

''சாமி, நீங்க சொல்லி நான் தட்ட முடியாது. ஆனால் இந்த விஷயத்தில் என்னை வற்புறுத்தாதீர்கள். அந்த வீட்டுக்கு நான் வர விரும்பவில்லை. அங்கே நான் இருக்கிறதே தவறாகப் படுகிறது. கௌரி சில நாட்களில் என்னை மறந்து விடுவாள். அப்புறம் எல்லாம் சரியாகிவிடும். என்னை மறுபடியும் கோயம்புத்தூர் வரும்படி வற்புறுத்தாதீர்கள்,'' என்று வேண்டிக் கொண்டாள்.

குழந்தைச்சாமிக்கு அவளிடம் என்ன சொல்வதென்றே புரியவில்லை. மோகினி அவரிடம் உத்வேகத்தோடு மறுத்துப் பேசியது இதுதான் முதல் தடவை. இந்த உரையாடல் நிகழும்போது ராஜு குறுக்கிடவே இல்லை.

ரயில் வண்டியில் நுழைந்தது முதல் அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவன் மோகினியின் திசையில் கூடப் பாராமல் ரயில் ஜன்னல் புறம் பார்த்தபடி இருந்தான்.

அவன் அப்படி இருந்தது பணக்காரன் என்ற அகம்பாவத்தால் அல்ல என்பது மோகினிக்குத் தெரியும். ராஜுவுக்கு இயற்கையிலேயே அகம்பாவம் என்ற குறை கிடையாது.

ஏற்கனவே சிவப்பான மேனி, பொசுக்கும் வெய்யிலில் காரில் பிரயாணம் செய்ததனால் அப்படிக் குங்குமம் போல் குழம்பிச் சிவந்ததா, இல்லை, மோகினியைப் பார்த்தபின் ஏற்பட்ட மனக் குழப்பத்தினால் அப்படிச் சிவந்ததா என்று மோகினியால் நிர்ணயிக்க முடியவில்லை. அவள் அதை நிர்ணயிக்கவும் விரும்பவில்லை.

தன்னால் ஒரு லட்சாதிபதியின் வேண்டுகோளை நிராகரித்து மறுக்க முடிந்ததே என்பதில் மோகினிக்கு ஒரு திருப்தி.

ராஜுவை மனம் நோகச் செய்வதில் ஒரு புரியாத இன்பம் அவளுக்கு இருந்தது.

சாமியார், மோகினி கோயம்புத்தூர் வருவதைப் பற்றி அப்புறம் பேசவில்லை.

எர்ணாகுளத்தில் எங்கு தங்கப் போகிறாள், என்ன சம்பளம் என்பது பற்றியெல்லாம் விசாரித்தார்.

''எங்கு தங்கப் போகிறேன் என்று எனக்கே புரியவில்லை. என்ன சம்பளம் கொடுப்பார்கள் என்று தெரியவில்லை,'' என்று உண்மையைச் சொல்லிவிட்டுச் சாமியைப் பார்த்தாள்.

''சங்கரன் குட்டியையும் அழைத்துக் கொண்டு தங்க இடம் இல்லாமல் சம்பளத்தையும் நிர்ணயிக்காமல் என்ன

செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார் குழந்தைச்சாமி.

மோகினி அப்போதுதான் தான் ஒரு திட்டமில்லாமல் எதிர்காலத்தில் இறங்கிவிட்டோம் என்பதை உணர்ந்தாள்.

அவள் பரிதாப நிலையைக் காரணமாக்கிக் கோயம்புத்தூர் வரும்படி சாமி தூண்டுகிறாரோ என்ற சந்தேகமும் எழுந்தது.

''யாருக்கோ பிறந்தேன். எப்படியோ நாராயணி அம்மாள் வீட்டுக்கு எரியும் பஸ்ஸில் வந்து சேர்ந்தேன். பிறகு உங்கள் ஆதரவால் படித்து முன்னுக்கு வந்தேன். எந்தக் கடவுள் என்னை இதுவரை காப்பாற்றினாரோ அவர் என்னைத் தொடர்ந்து காப்பாற்றுவார்.'' மோகினியின் டம்பமான பேச்சு சாமியாருக்குச் சிரிப்பை மூட்டியது.

''என் வேண்டுகோள், ஏன் அந்தக் கடவுளின் குரலாக இருக்கக்கூடாது?'' என்று சாமியார் சொன்னதும் மோகினி தலை குனிந்தாள். சாமியார் தொடர்ந்து பேசினார். ''ஒரு சமயம் மோகினி என்ற சிறுமியின் வாழ்வுக்காக ஊர் சுற்ற வேண்டியவன், நான் ஷோரனூரிலேயே தங்கினேன். இன்று கௌரி என்ற சிறுமியின் வாழ்வு மலர வேண்டும் என்று விரும்புகிறேன். மோகினிக்கு வளர்ப்புத் தாய் இருந்தாள். அது மட்டுமல்ல, மோகினியின் பண்பை வளர்க்கத் தரித்திரச் சூழ்நிலை இருந்தது. ஆனால் கௌரிக்குத் தாயின் துணையுமில்லை. அவளைத் தவறான வழியில் வளர்த்து அழிக்கத் திரண்ட சொத்தும், பண்பில்லாத பந்துக்களும் வேலையாட்களும் இருக்கின்றனர்,'' என்று சொல்லிவிட்டு மோகினியைப் பார்த்தார். சாமியார் தன்னையும் கௌரியையும் ஒப்பிட்டுப் பேசியது மோகினியின் இதயத்தைத் தொட்டது.

''சாமி, நான் கோயம்புத்தூர் வருகிறேன். ஆனால் அங்கு வேலைக்காக இருக்கும்வரையில், எனக்குச் சம்பளம் தரக்கூடாது. இரண்டாவது, சங்கரன் குட்டியும் அந்த வீட்டில் இருக்கவேண்டும். அவனை எங்கும் தனியே விட முடியாது.'' என்றாள்.

சாமி சிறிது யோசித்தார். பிறகு, ''சரி. உன் இஷ்டம், மோகினி,'' என்றார்.

எர்ணாகுளம் வந்ததும் ராஜூவின் கார் எர்ணாகுளம் ஸ்டேஷன் வெளிப்புறம் காத்திருந்தது. அதில் சாமான்களை ஏற்றினாள் மோகினி. சங்கரன் குட்டி, அவ்வளவு பெரிய காரில் சவாரி செய்யப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் குழந்தை போல் குதித்தான். ''மோகினி, இந்தக் காரிலேயா போகப் போகிறோம்? கோயம்புத்தூருக்கா போகப் போகிறோம்? அங்கே பெரிய 'பயாஸ்கோப்' இருக்காமே? என்னை பயாஸ்கோப்புக்குக் கூட்டிட்டுப் போவியா மோகினி?'' என்று கேட்டான்.



ராஜு ஆஜானுபாகுவாக வளர்ந்து இருக்கும் குட்டியைப் பார்த்தான். பிறகு அவனை முன் சீட்டில் உட்காரச் சொல்லித் தானும் அமர்ந்து கொண்டான். காரின் பின் சீட்டில் மோகினியும் சாமியாரும் அமர்ந்து கொண்டனர்.

மாலை ஆறு மணிக்கே எல்லோரும் கோயம்புத்தூர் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

மோகினி மறுபடியும் அவள் உள்ளத்தை மாற்றிய அந்தப் பயங்கர வீட்டில் நுழைந்தாள். அவளுக்கு அந்த ஹாலில் நுழையும்போதே சுருக்கென்று பயம் பிடித்துக் கொண்டது. தோட்டத்திலிருந்து குழந்தை கௌரி, வயல்வெளியில் மேய்ந்து விட்டுத் திரும்பும் தாய்ப் பசுவைப் பார்த்ததும் கன்று ஓடிவருவது போல் ஓடி வந்தாள்.

அப்படியே மோகினியை அணைத்துக் கொண்டாள். ''இனிமேல் என்னை ஏமாத்திட்டு ஊருக்குப் போக மாட்டீங்களே?'' என்று சொல்லிக் கண்ணீரோடு நின்றாள்.

மோகினி, ''இனிமேல் நீயே போன்னு சொல்கிற வரையிலும் நான் இந்த வீட்டை விட்டுப் போகமாட்டேன்,'' என்று சொன்னாள்.

சங்கரன்குட்டி அவ்வளவு பெரிய வீட்டையும் அங்குள்ள விளக்குகளையும் பார்த்துத் திகைப்படைந்தான்.

ராஜு சங்கரன்குட்டியிடம் பட்சமாக நடந்து கொண்டான். சங்கரன் குட்டியிடம் உள்ள கோளாறு என்னவென்றால், தன்னிடம் யார் கோபிக்காமல் பட்சமாக நடக்கிறார்களோ, அவர்களை அர்த்தமில்லாத கேள்விகளைக் கேட்டுத் துளைத்துவிடுவான்.

அதேபோல் ராஜுவைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டபடி இருந்தான். ராஜு அவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பொறுமையுடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

வீட்டின் நிர்வாகப் பொறுப்புகளெல்லாம் மோகினியிடம் இருந்தது என்றாலும் மோகினி அங்கு ஒரு வேலைக்காரி போலவே இருந்து வந்தாள். சம்பளம் வாங்காத வேலைக்காரியாக இருந்தாள். ஆடை அலங்காரம் எதிலுமே அவளுக்குப் பிரியம் இல்லை. ஓர் ஆசிரமத்துத் துறவியைப் போல் இருந்தாள்.

அதை ராஜு கவனியாமல் இல்லை.

ஒவ்வொரு இரவும் கௌரி, ''நான் உங்களோடு படுத்துக் கொள்கிறேன் டீச்சர்,'' என்றால் மோகினி அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டாள்.

''கௌரி, அப்பாவோடு மாடி அறையில் படுத்துக் கொள்ளவேண்டும். நீ அப்பாவிடம் பிரியமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்,'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவாள்.

மோகினி ராஜுவின் எதிரே உணவருந்தும்போதுகூட வருவதில்லை. ராஜு மாடியில் இருக்கும்போது மாடிப் பக்கம்கூடப் போகமாட்டாள்.

வெகு சீக்கிரம் கௌரிக்குத் தன்னை விட்டு பிரிந்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டு, அந்த வீட்டை விட்டு நகரத் திட்டமிட்டாள். கௌரிக்கு மோகினியின் நடத்தையில் இருந்த மாறுதலின் காரணம் புரியவில்லை.

''ஏன் டீச்சர் மாறிவிட்டீங்க?





"பேபியை வேகமாகத் தன்னை ஆட்டுவதையும், கழுத்தை வெட்டுவதையும் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கள். பல் ஆடுகிறதாம்!"

மூந்தி மாதிரி இல்லையே நீங்க?" என்று கௌரி கேட்டாள்.

"கௌரி, நீ என்னை அம்மா மாதிரி நினைக்கலாம். ஆனால் நீ பணக்கார வீட்டுப் பெண். நான் ஒரு வேலைக்காரி. இதை மறந்து நாம் இரண்டு பேரும் கனவு காணக்கூடாது," என்று பனிச் சென்று சொன்னாள்.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த ராஜு அப்படியே நின்றான்.

ராஜுவைப் பார்த்ததும் மோகினிக்குச் சுருக்கென்றது. ஹாலிலிருந்து தன்னுடைய அறைக்குச் சென்று விட்டாள்.

சாமியார் அந்த வீட்டிலேயே இருப்பதுபோல் இருந்தாலும் அவர் அடிக்கடி வெளியூர்கள் சென்று திரும்பியபடி இருந்தார்.

ஒரு வெள்ளிக்கிழமை மோகினி குளித்துவிட்டு அம்மன் கோயிலுக்குப் புறப்பட்டாள். கௌரியும் சங்கரன் குட்டியும் சினிமாவுக்குப் போயிருந்தனர். கோயம்புத்தூர் வந்ததிலிருந்து சங்கரன்குட்டி ராஜுவோடு நெருங்கிப் பழகி வந்தான்.

ஒரு வாரத்தில் இரண்டு மூன்று முறை குட்டி, ராஜுவின் காரில் சினிமாவுக்குச் சென்றுவிடுவான்.

வீட்டில் வேலைக்காரர்களும் ராஜுவும் மட்டுமே இருந்தனர். மோகினி கோவிலுக்குச் சென்று திரும்புகையில் நடு வழியில் காரில் ராஜு வந்து கொண்டிருந்தான். காரில் டிரைவர் இல்லை. ராஜுவே ஓட்டி வந்தான்.

ராஜு மோகினியைப் பார்த்ததும் காரை நிறுத்தினான். "மோகினி, வீட்டுக்குத்தானே போறே? காரிலேயே போய்விடலாம்," என்றான்.

மோகினி, "இல்லே, நான் நடந்தே வீட்டுக்குப் போறேன்," என்று சொல்லி ராஜுவின் பதிலுக்குக் காத்திராமல் நடக்க ஆரம்பித்தாள்.

ராஜுவுக்குக் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. ஒன்றும் சொல்லாமல் காரிலே ஏறிக்கொண்டு வீடு சென்றான்.

15 நிமிடங்களில் மோகினி வீடு வந்து சேர்ந்தாள். வீட்டு வாசலில் ராஜு ஓட்டி வந்த கார், ஷெட்டில் விடப்படாமல் நின்று கொண்டிருந்தது. மோகினி உள்ளே சென்றாள். சமையல்காரனிடம், "எஜமான் எங்கே?" என்று கேட்டாள். "மாடியில் இருக்காங்கம்மா," என்றான்.

"இந்தப் பிரசாதத்தை அவரிடம் கொடு," என்று குங்குமப் பொட்டலத்தைக் கொடுத்தனுப்பினாள்.

சமையல்காரன் பிரசாதத்தை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்று கொடுத்தான்.

மோகினி வழியில் சந்தித்தபோது அவனிடம் அந்தக் குங்குமப் பிரசாதத்தைக் கொடுத்திருக்கலாம். அதைச் செய்யாமல் வீடு வந்தபின் சமையல்காரனிடம் கொடுத்தனுப்பினாள். ராஜு அவளோடு தனிமையில் பேசுவதை அவள் விரும்பவில்லை என்பதைக் கண்ணியமான முறையில் தெரிவிக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டான்.

அறையில் மாட்டியிருந்த விஜயாவின் படத்தை ஒருமுறை பார்த்தான். அவன் கண்களில் நீர் நிறைந்தது.

அன்றிலிருந்து ராஜு வீட்டிலே அதிகமாகத் தங்குவதில்லை. சங்கரன் குட்டியோடு காரில் பல ஊர்களுக்குச் சென்று கொண்டிருந்தான்.

துப்பாக்கியோடு யானைமலைக் காடுகளுக்கு வேட்டையாடச் சென்று விடுவான்.

சங்கரன்குட்டி மற்ற விஷயங்களில் சிதறிய கவனத்தோடு இருந்தாலும் துப்பாக்கி சுடுவதில் நல்ல கவனத்தோடு கற்றுக்கொண்டான்.

சிறிதுகூடக் கை நடுக்கமில்லாது குறி தவறாமல் சுடக் கற்றுக் கொண்டான்.

அவனுக்குத் துப்பாக்கிப் பயிற்சியில் அலாதியான அக்கறை ஏற்பட்டது.

துப்பாக்கிகளுக்கு எண்ணெய் போட்

டுச் சத்தம் செய்வதே பொழுது போக்காக இருந்தது.

சாமியாருக்கு இது விஷயம் தெரிந்ததும் ராஜுவைக் கண்டித்தார்.

''சங்கரன்குட்டி சித்தம் தெளிவு இல்லாதவன். ராஜு, அவனுக்கு நீ இந்த மாதிரி ஆபத்தான ஆயுதங்களில் பயிற்சி கொடுப்பது சரியில்லே,'' என்று சொன்னார்.

ராஜு அதைப் பெரிதாகப் பாராட்டவில்லை. அவன் மனம் இருந்த நிலையில் சங்கரன்குட்டியின் தோழமை கூட அவனுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

வேட்டையிலேயே அவன் பொழுது சென்றது. வீட்டு விஷயங்களை மோகினியின் பொறுப்பில் விட்டான்.

மில் கடைகள், எஸ்டேட்டுகள் தாமாக இயங்கி அவைகளை நிர்வாகம் செய்த மானேஜர்களுக்குச் சொந்த லாபத்தைக் கொடுத்தன.

ராஜுவிடம் குழந்தைச்சாமியார் இது விஷயமாகப் பேசினார்.

ராஜு, ''என்ன சித்தப்பா, பணத்தைப் பற்றி, பிஸினஸைப் பற்றிப் பேசாதவங்க பேசறீங்களே?'' என்றான்.

''ஆமாம்பா, நீ என் அண்ணன் போலப் பேராசைக்காரனுமில்லே; என்னைப் போலத் தீர்மானமான துறவியுமாகவில்லே. இரண்டும் கெட்டானாக உன் வாழ்வு பாழாகுதே. செல்வம் சேர்ந்தா அந்தோட பொறுப்பும் இருக்கணும். பொறுப்பில்லாத இடத்துச் செல்வம் பேராபத்தை விளைவிக்கும்,'' என்றார்.

ராஜு, ''சித்தப்பா, இவ்வளவு சொத்து இருந்தும் நான் நரக வேதனைப் படறேன். அதை மறக்கத்தான் நான் வேட்டைக்குப் போறேன்,'' என்று பதில் சொன்னான்.

''எருமைகளையும் மான்களையும் கொல்வது உன் வேதனையைக் குறைக்கும் என்று நினைக்கிறாயா? அது இன்னும் உன் வேதனைகளை அதிகப்படுத்தும்,'' என்று சொன்னார்.

அப்போது 'டுமீல்' என்று ஒரு வெடிச் சத்தம் கேட்டது. சங்கரன்குட்டி பிஸ்டலை வெடித்துவிட்டுச் சிரித்தபடி வந்தான். ''ராஜு, அவனைக் கண்டித்து வை. அறிவில்லாதவன் கையில் ஆயுதத்தைக் கொடுத்துவிட்டாய்,'' என்று சாமியார் எச்சரித்தார்.

(தொடரும்)


ஜம்மியின்

லிவர்க்யூர்



குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி கோளாறுகளுக்கு

வழக்கமான மாதாந்தர விஜயம்

| இடம் | தேதி | நேரம் | விலாசம் |
|---|---|---|---|
| சேலம் | 3 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | கோயமுத்தூர் லாட்ஜ் இன் |
| கோயமுத்தூர் | 4 | ,, | மெஸர்ஸ் சல்வர் & கோ., கெமிஸ்ட்ஸ் |
| திண்டுக்கல் | 5 | ,, | C. ஆறுமுகம் பிள்ளை & ஸன்ஸ் |
| மதுரை | 8 | ,, | உடுப்பி போர்டிங் லாட்ஜ் |
| தூத்துக்குடி | 9 | ,, | மெஸர்ஸ் வி. எஸ். சங்கரம் பிள்ளை, மெடிகல் ஷாப் |
| திருநெல்வேலி ஜங்ஷன் | 10 | ,, | சந்திர விலாஸ் ஹோட்டல் |
| அம்பா சமுத்திரம் | 11 | 9 to 11 காலை | மெஸர்ஸ் கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ் |
| தென்காசி | 12 | ,, | மெஸர்ஸ் S. கிருஷ்ணு & கோ., மெடிகல் ஸ்டோர்ஸ் |
| காரைக்குடி | 13 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | AV. M. PL. ரெஸ்ட் ஹவுஸ் |
| கரக்பூர் | 4 | ,, | மெஸர்ஸ் யூனிடெட் மெடிகல் ஸ்டோர்ஸ், N. T. E. 155, ரயில்வே மார்க்கெட் |
| ஜம்ஷெட்பூர் | 15 | 9 to 12 காலை<br>4 to 6 மாலை | மெஸர்ஸ் வடிவு கெமிஸ்ட்ஸ், ஸாக்சி |

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்,

23, நந்திக்கோயில் தெரு, (போன்: 2158) தெப்பக்குளம்—திருச்சி-2 & கும்பகோணம்.



# அத்தியாயம் 43

விளையாட்டுப்போல் சங்கரன்குட்டி கைத் துப்பாக்கியால் சுடுவது தவறு, ஆபத்து என்பதை, குழந்தைச் சாமி குட்டிக்கு விளக்கிப் பார்த்தார்; முடியவில்லை. ராஜுவின் ஆதரவு குட்டிக்கு ஒருவிதமமதையைக்கொடுத்து அவன் பயத்தை போக்கிவிட்டது என்பதைச் சாமியார் ராஜுவிடம் விளக்கினார். "ராஜு, டிரைவர் இல்லாது ஓடும் கார் மாதிரி இந்தக் குட்டி. துப்பாக்கிப் பழக்கத்தை அவனுக்குக் கற்றுக் கொடுத்ததே தவறு. இனி மேல் அவனை வேட்டைக்கு அழைத்துச் செல்லாதே," என்று சொன்னார்.

ராஜு அன்றிலிருந்து வேட்டைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டான். வீட்டிலேயே இருந்தபடி பொழுது போக்கினான். மறுபடியும் பழைய ஆசைகள் அவனை ஆளத் தொடங்கின. மோகினியைப் பார்க்கும்போது அவன் மனம் படபடப்புடன் விபரீதக் கலவையான எண்ணங்களைக் கொடுத்தது.

விஜயா இறந்து ஒரு வருஷமாகி, திதியும் கொடுத்தாகிவிட்டது. சாமியாரின் ஏற்பாட்டின்படி காலில்லாப் பெண் பிச்சைக்காரிகளுக்குப் புடவையும் 100 ரூபாயும் தானம் கொடுக்கச் செய்தான் ராஜு. இந்தத் தானத்தால் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் கரைந்தன. மகிழ்ச்சியோடு அவர்கள் செல்லும் காட்சியை ராஜு பார்த்துக் கொண்டே இருக்கும்போது சாமியார் ராஜுவிடம், "இவ்வளவு பேர் ஆசிர்வாதம் வீண் போகாது. உன் வாழ்வில்

# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

ஒரு அமைதி ஏற்படும். பிடிப்பு ஏற்படும்,'' என்றார்.

அன்று பழனியிலிருந்த அஞ்சலையை வரவழைத்து அவளை ராஜுவுக்கு அறிமுகம் செய்வித்தார். அவளுக்குக் கோயம்புத்தூரில் ஒரு சிறு வீடும் தோட்டமும் கொடுக்கும்படி சொன்னார். அஞ்சலையின் சகோதரனுக்கும் அஞ்சலைக்கும் சாமியார் ஏன் இந்தச் சலுகை காட்டுகிறார் என்பது ராஜுவுக்குப் புரியவில்லை. அவரை அவன் கேட்கவும் இல்லை.

சாமியார் இரவு சாப்பிட்டானதும் ராஜுவிடம் பேச்சுக் கொடுத்தார். ''ராஜு, யாரோ பழனியிலுள்ள பிச்சைக்காரனுக்கும் அவன் சகோதரிக்கும் மாதா மாதம் பணம் அனுப்பச் சொன்னேன். அப்போதும் நீ ஏன், என்ன என்று கேட்கவில்லை. இப்போது வீடும் தோட்டமும் கொடுக்கச் சொல்கிறேன். அதற்கும் மறுப்புத் தெரிவிக்கவில்லையே?'' என்று கேட்டுவிட்டு ராஜுவின் முகத்தைப் பார்த்தார்.

ராஜு தலை கவிழ்ந்துப் பேசாமல் இருந்தான். பிறகு, ''அப்பா உயிரோடு இருக்கும்போது இந்த சொத்தில் ஒரு பகுதியாவது உங்களைச் சேர வேண்டும் என்று விரும்பினார். நீங்கள் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டீர்கள். ஷொரனூர் மடம், ஷொரனூர் பள்ளி இரண்டுக்கும் பணம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டீர்கள். எப்போதுமே நீங்கள் மற்றவர்களுக்காகக் கேட்கிறீர்களே அல்லாமல், . உங்களுக்காக ஒன்றுமே கேட்பது இல்லை. அப்படி இருக்கும்போது கொடுக்கும் இன்பத்தையும் நான் தடை செய்யலாமா?'' என்றான்.



"ஆனால் இந்தப் பிச்சைக்காரிக்கு வசதி செய்யுமாறு கேட்கும் போது நான் சுயநலத்தோடுதான் பேசுகி றேன்," என்று சொன்னார் குழந்தைச் சாமி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ராஜுவின் முகம் மாறியது. பிச்சைக் காரிக்குக் கொடுப்பதில் சாமியாருக்கு என்ன சுயநலம்? ஒரு வேளை அவர் அந்தக் காலத்தில் இந்த ஏழையுடன் ஏதாவது தொடர்பு....

நினைக்கவே அவனுக்கு அருவருப் பாக இருந்தது.

ராஜு மனத்தால் நினைப்பதை அவன் முகம் காட்டிவிட்டது. அவன் மனத்தில் அவன் மோகினியிடம் பழகிய விதம்தான் ஞாபகம் வந்தது. அவனும் ஒரு நாள் அவளைத் தொட் டான். அதுவே அவன் மனைவிக்கு இழைத்த குற்றமாக நினைத்தான். மோகினியிடம் எழுந்த ஆசை குற்ற மற்றது என்று அவனால் எண்ண முடியவில்லை. மோகினியை வீட்டை விட்டு அனுப்பும் போது அவளுக்குப் பணம் கொடுப்பதால் அந்தக் குற்றத் தையும் குறைத்து விடலாம் என்ற நப்பாசையால் துடித்தான். ஆனால் அந்த மோகினி மறுபடியும் வீடு திரும்பியுள்ளாள். மோகினியை விரும்பு வதை உண்மையில் அவன் ஆத்மா குற்றமாக நினைத்தால், மறுபடி மோகி னியைப் பார்க்கும் போது அவனுடைய மனத்தில் ஆசை எழலாமா? அவள் தோற்றம் ஏன் இன்றும் அவன் மனத் தில் சலனத்தை ஏற்படுத்துகிறது?

மோகினி வந்ததிலிருந்து வீட்டில் ஒரு நாற்கோணக் காந்த வலை பின்னக் கப்பட்டு இருந்தது. அந்த வலையின் ஒரு மூலை விஜயா. அவள் மறைந்து விட்டாள். இப்போது அந்தக் காந்த வலை முக்கோண வலையாக இருந்தது. மோகினி, கௌரி, ராஜு என்று மூன்று மூலைகளிடையே அதன் காந்த சக்தி இயங்கியபடியே இருப்பதை அவன் உணராமல் இல்லை. ஆகையால் சாமியார் சுயநலம் என்றவுடனே, தனக்கும் மோகினிக்கும் இருந்த கவர்ச்சி போன்ற ஒரு கவர்ச்சி சாமி யாருக்கும் அஞ்சலையிடம் இருந்திருக்க லாமோ' என்று எண்ணத் தூண்டியது.

அவன் எண்ணியதை உடனே புரிந்து கொண்டார் சாமியார். புன்முறுவலோடு ராஜுவைப் பார்த்த படி, "நீ நினைப்பது போல் அல்ல ராஜு," என்று சொன்னார்.

ராஜு திடுக்கிட்டான். 'நான் நினைத்ததை அவரிடம் சொல்லவில் லையே? அவர் எப்படி என் சிந்தனை யைப் புரிந்து கொண்டிருக்க முடியும்?' என்று ஆச்சரியப் பட்டான்.

"ராஜு, நீ நல்லவன். ஆனால் அனுபவம் முதிர்ந்த, புடம் போட்ட நல்லவன் அல்ல. நீ ஒரு குற்றத்தை பற்றிச் சதா சர்வகாலம் நினைத்து உருகுகிறாய். அதனால் நீ இன்னும் பல குற்றங்கள் புரிகிறாய்," என்று சொன்ன சாமியார், திடீரென்று பின்வரும் வாக்கியத்தைக் கூறினார்: "ராஜு, அஞ்சலைக்கும் எனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. நான் அவளைத் தலை நிமிர்ந்து பார்க்க முடியும். என் மனத்திலுள்ள குற்ற உணர்ச்சியைப் போக்குவதற்காக அவ ளுக்கு உதவி செய்யச் சொல்லவில்லை," என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்ட ராஜு வுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. மோகினிக்கும் தனக்கும் உள்ள குழப் பத்தைச் சாமியார் புரிந்து கொண்டு அப்படி சொல்கிறாரோ? 'அப்படியிருந் தால், அவர் மோகினியைக் கோயம் புத்தூருக்கு அழைத்து வர வேண்டு மென்று என்னிடம் வற்புறுத்துவாரா?' என்றும் நினைத்தான்.

"நம் குடும்பம் அஞ்சலையிடம் கடன் பட்டிருக்கிறது. அந்தக் கடனை விஜயா ஒருவாறு வேதனையாலும் மரணத்தாலும் கட்டி விட்டாள்," என்றார் சாமியார்.

"என்ன சொல்கிறீர்கள் சித்தப்பா?" என்று புரியாமல் விழித்தான் ராஜு.

"ராஜு, ஒரு சொத்தைச் சீக்கிரத் தில் அடையும்போது பலருடைய சுகம் பலியாக வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வெற்றியும் ஒரு யாகம். அந்த யாகத்தில் சுகம், இளமை இவற்றைப் பலியாக்க வேண்டும். அந்த வெற்றியை எப்படியாவது அடைய வேண்டும் என்னும் போது, யாகத் தீயில் தர்மம், நீதி, பச்சா தாபம், பலருடைய வாழ்வு ஆகிய வற்றைப் பலியாகச் செலுத்த வேண் டியிருக்கிறது. திரண்ட சொத்துக்களை அடையும் அந்த யாகத்தில், உன் அப்பா விலை கொடுக்காமல் சில ருடைய வாழ்வுகளைப் பலியாக்கி விட்டார். அஞ்சலையின் கணவன் விலையில்லாமல் உயிரைக் கொடுத்தான். அஞ்சலை தன் கால்களைக் கொடுத்

தான்,'' என்று சொல்லிவிட்டு திருத்திஞர்.

''நீங்கள் அந்த யாகத்துக்கு என்ன கொடுத்தீர்கள் சித்தப்பா?'' என்று கேட்டான் ராஜு.

சாமியார் சிரித்தார். ''நான் என் நல்ல பெயரையும் இளமையையும் கொடுத்தேன். அதற்குப் பதிலாக, சிறையில் இருந்தபோது சிந்தித்துச் சிந்தித்துப் பேரின்ப வாயிலின் திறவு கோலையும் பெற்றுக் கொண்டேன். நான் கொடுத்தது தினையளவு ராஜு. ஆனல் பெற்றுக் கொண்டது மலே யளவு. காலுக்குக் கால், உயிருக்கு உயிர் என்று விஜயாவும் தன் கணக்கை ஒருவாறு தீர்த்துவிட்டாள்.''

ராஜு சிந்தித்தபடி இருந்தான். சாமியார், குறைந்த வாக்கியங்களில், வெங்கடபதி நாகப்பட்டணத்தில் நடத்திய நாடகத்தை விளக்கிஞர். ''இவற்றையெல்லாம் நான் விஜயா உயிரோடு இருக்கும் வரையில் சொல்ல விரும்பவில்லை. உனக்கு ஒரு பக்குவம் ஏற்பட வேண்டும் என்று இருந்தேன்,'' என்ருர்.

ராஜு அதிர்ச்சியில் ஒன்றும் பேசவில்லை. இப்போதுதான் அவனுக்குத் தன் தந்தை வெங்கடபதி இறுதிக் காலத்தில் சித்தப்பாவிடம் செலுத்திய மரியாதையின் காரணம், தனிமையில் அவர் வாழ விரும்பியதன் நோக்கம் எல்லாமே புரிந்தன. ''உன் அப்பாவைப் பற்றித் தவருக நினைக்காதே ராஜு. வெங்கடபதிக்கு வெற்றி ஜுரம் ஏற்பட்டதற்குக் காரணம் தன் சந்ததிகள் செல்வத்தோடு வாழ வேண்டும் என்பதுதான். தந்தையின் செல்வம் மட்டும் மகனைச் சேருவதில்லை. அவன் கர்மாக்களும் மகனைத் தொடருகின்றன. நீ காரணமறியாமல் எவ்வளவோ அனுபவித்து விட்டாய்,'' என்று சொல்லிவிட்டு வெராந்தாவுக்குப் போய்விட்டார்.

அன்றிரவு ராஜுவுக்கு உறக்கமே கொள்ளவில்லை. மறுநாள் பூராவும் தன் தந்தையைப் பற்றியே நினைத்தபடி இருந்தான். சாமியாரின் விளக்கம் அவனுக்கு ஆத்திரத்தையே கொடுத்தது. தன் தந்தை செய்த தவற்றுக்கு விஜயா ஏன் அனுபவிக்க வேண்டும்? சித்தப்பா ஏன் சிறை செல்லவேண்டும்? தன் இல்லற வாழ்வு ஏன் நிறைவு பெருமல் இருக்க வேண்டும்? எல்லாமே சுத்தப் பைத்தியக்காரத்தனமாகத்தான் தோன்றியது ராஜுவுக்கு.

சங்கரன்குட்டி இதை ஏதும் அறியாமல், ராஜுவிடம் வந்து, ''வெளியே போய்விட்டு வரலாமா?'' என்று கேட்டான்.

ராஜுவுக்கு அவன் மீது கோபம் வந்தது. ''நீ போய்ப் பலகாரம் சாப்பிட்டுவிட்டு உன் அறையில் தூங்கு.'' என்ருன்.

குட்டிக்கு ராஜுவின் திடீர்க் கோபம் அதிர்ச்சியைக் கொடுத்தது. பேசாமல் பலகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு அறையில் போய்ப் படுத்தான். ஆனல் தூக்கம் வரவில்லை. சாமியார் ஒரு நண்பர் வீட்டில் ஏதோ காலட்சேபம் கேட்கப் போய்விட்டார். வானம் இருண்டு, வரப்போகும் மழையின் அறிகுறிக்கான இடியும் குளிர்ந்த காற்றும் வீசியது.

இந்த அறிகுறிகளைப் பார்த்ததுமே மோகினிக்கு விஜயா இறந்த தினம் தான் நினைவுக்கு வந்தது. குழந்தை கௌரியைத் தந்தையுடன் மாடிக்கு அனுப்பிவிட்டு, தன் அறையில் வந்து படுத்துக் கொண்டாள். படுத்தவுடன் தூங்கிவிட்டாள். ஆனல் மாடியில் படுத்திருந்த ராஜுவுக்குத் தூக்கம் வரவில்லை. சங்கரன் குட்டிக்கோ, இடியும் மழையும் சேர்ந்து வரவே பயம் பிடித்துக் கொண்டது. அவனது தெளிவில்லாத சித்தத்தில், பயத்தோடு

கெய்ரோவில் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குள் ஒரு சிறுமி வந்தாள், அழுது கொண்டே. அவளை விசாரித்த அதிகாரியிடம் அவள் சொன்னாள்:

''எங்கப்பாவை எனக்குப் புது கவுன் வாங்கித் தரச் சொல்லுங்கள். அப்பா கத்தைக் கத்தையாக நோட்டுகள் தினமும் அச்சடிக்கிறார். ஆனல் எனக்குப் புது டிரஸ் வாங்கித் தரமாட்டேன் என்கிறார்.''

அவளை அழைத்துக் கொண்டு அப்பாவின் 'அச்சக'த்துக்குப் போன போலீஸ், கள்ள நோட்டு அச்சடிக்கும் அவளுடைய தந்தையையும் அவரது உதவியாளர் ஒருவரையும் கைது செய்தார்கள்.

—தகவல்: ஸ்டேட்ஸ்மென்

—'ரங்கா'




ஒருவிதத் துணிவும் எழுந்தது. கடந்த கால நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக நினைக்கத் தொடங்கினான் சங்கரன் குட்டி.

ஒரு நாள் வீட்டருகில் இருந்த குளத்தில் அவன் மோகினியிடம் சென்று வம்பு செய்த போது மோகினி அவனை அடித்து விரட்டியது நினைவுக்கு வந்தது. அந்த சமயத்தில் அவன் தேகத்தில் ரத்தம் துடிப்போடு செல்வதை உணர்ந்தான். திரும்பத் திரும்ப சங்கரன்குட்டி மோகினியையே நினைத்து நினைத்துப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். அவன் உதடுகள் துடித்து, ரத்த நாளங்கள் புடைத்து, ஜுரம் வந்தவன் போல் ஆகிவிட்டான்.

வெளியே பேரிரைச்சலோடு மழை பெய்து கொண்டிருந்தது. இடி இடிப்பதற்கு முன் மின்னும்போதெல்லாம் குட்டி எழுந்து உட்காருவான். அவன் உடல் அவன் மனத்துக்குக் கட்டுப்படாமல் சொந்தமாக ஏதேதோ செய்யத் துடித்தது. 'சமையலறைக்குச் சென்று தீப்பெட்டியை எடுத்து வந்து வீட்டையே கொளுத்திவிட்டால், அது எவ்வளவு பெரிய வெளிச்சமாக இருக்கும்!' என்று திடீரென ஓர் ஆசை எழுந்தது. அடுத்த வினாடி அவன் மனத்தில் மோகினியின் நினைவு எழுந்தது. வீட்டுக்குத் தீ வைக்க வேண்டும் என்ற ஆசை, மோகினியின் மீது ஆசை இப்படி மாறி மாறி ஆசைகள் சங்கரன்குட்டியைத் தாக்கின.

பளீர் என்று ஒரு மின்னல் ஒளி வீசி மறைந்தது. அடுத்த வினாடி தலை மீது பாறை விழுவது போன்ற பேரிரைச்சல் கேட்டது. அந்தப் பெரும் சத்தத்தில் வீட்டில் எல்லோருமே விழித்துக் கொண்டனர். ராஜு, பயந்து போய்ப் படுத்திருந்த குழந்தையை அணைத்துக் கொண்டான்.

சங்கரன்குட்டி மெல்லப் படிக்கட்டுகளில் இறங்கிச் சமையலறைக்குச் சென்றான். அங்குள்ள அலமாரியில் வரிசையாகப் பாட்டில்களும் டப்பாக்களும் இருந்தன. தீப்பெட்டியைக் காணோம். குட்டியின் கைகள் தினவு எடுத்தன. எதையாவது கொளுத்த வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

தீப்பெட்டியைக் காணாமல் ஏமாற்றமடைந்து வெளியே வந்தான். ஹாலுக்கு வந்ததும் மோகினியின் அறைதான் அவன் கண்களில் பட்டது. மெல்ல நடந்து மோகினியின் அறையை

நோக்கிச் சென்றான். தப் தப் என்று அவன் காதுகளில் ஒரு இரைச்சல் கேட்டது. முகத்தில் வியர்வையுடன் குட்டி மோகினியின் அறைக்குள் நுழைந்தான். மோகினி ஒரு காலை நீட்டி ஒரு காலை மடக்கியபடி படுத்திருந்தாள். வெண்மையான தந்தம் போன்றிருந்தன அந்தக் கால்கள். ஒரு கரம் தலையணையில் தலையின் பின்புறம் கிடந்தது. குட்டி கண்கொட்டாமல் அவளையே பார்த்தபடி நின்றான். அவன் மூச்சு வேகமாக வந்து சென்றது. மெல்லக் குனிந்தான்.

தூங்கும் மோகினி, திடீரென்று ஒரு ஸ்பரிசம் பட்டதும் விழித்தாள். குட்டியைப் பார்த்ததும் அலறினாள். அவனைத் தள்ள முயன்றாள்.

குட்டி பைத்தியச் சிரிப்புச் சிரித்தபடி, ''மோகினி! இன்னிக்கு உன்னை விடமாட்டேன்!'' என்றான். அவன் முகத்தில் அறைந்தாள் மோகினி. ஒரு முரட்டுப் பலத்தோடு அவன் மோகினியைப் பிடித்தான். மோகினி உருண்டு தப்பப் பார்த்தாள். குட்டியும் அவளோடு சேர்ந்து உருண்டான். இனி சமாளிக்க முடியாது என்ற நிலையிலே, ''அம்மா! அம்மா!'' என்று அலறினாள். குட்டி, ஒரு குரங்கு போல் அவளுடைய ஆடைகளைக் கிழித்ததும், மோகினி கலவரத்தின் உச்ச நிலையை அடைந்தாள். ''ராஜு! ராஜு!'' என்று அலறினாள். ராஜுவின் பெயரைச் சொல்லிக் கூவியது இதுதான் முதல் தடவை.

''ராஜுவைக் கூப்பிட்டால் உன்னை விட்டுடுவேன்னு நினைக்கிறியா?'' என்று சொல்லி மோகினியை இறுக்கிப் பிடித்தான் குட்டி.

அடுத்த வினாடி, குட்டியின் முதுகை ஒரு கை வந்து பிடித்தது. குட்டியை இழுத்துத் தள்ளினான் ராஜு.

குட்டி வெறியோடு ராஜுவின் மீது பாய்ந்தான். ராஜு ஒரு வேங்கை போல் அவன் மீது பாய்ந்து அவனை ஆத்திரம் தீர அடித்தான். இரண்டு பலம் நிறைந்த ஆடவர்கள் வெறியோடு போரிடுவதைப் பார்த்தபடி திகைத்து நின்றாள் மோகினி. ராஜுவின் பலத்தை அன்றுதான் அவள் கண்கூடாகப் பார்த்தாள். ராஜுவின் கோபத்தையும் அன்றுதான் பார்த்தாள். சங்கரன்குட்டியை ராஜு அப்படியே ஒரு மூட்டையைத் தூக்குவது போல் தூக்கி வெளியே எறிந்தான்.

எறிபட்ட குட்டி மாடியை நோக்கி ஓடினான். ராஜு மோகினியிடம் திரும்பினான். ஆடைகள் கிழிக்கப்பட்டு, உடல் தெரிய நின்றாள் அவள்.

''குட்டி ஒரு பைத்தியம். அவன் தன் நிலை இழந்ததில் ஆச்சரியமில்லை. நான் மட்டும் என்ன? நானும் ஒரு நாள் உன்னிடம் என் புத்தியை இழந்து உனக்குத் தீங்கிழைக்க நினைத்தவன்தானே?'' என்று சொல்லிவிட்டு மாடியை நோக்கித் திரும்பினான் ராஜு.

மாடிப் படிக்கட்டில் குட்டி துப்பாக்கியோடு நின்று கொண்டிருந்தான்!

''ராஜு! மோகினியின் முன்னாலே என்னை அடித்துவிட்டாய். உன்னைச் சும்மா விடமாட்டேன். நான் சுட்டு விடப் போறேன்!'' என்று சொல்லி இறங்கி வந்து கொண்டிருந்தான் அவன்.

ராஜு அப்படியே ஸ்தம்பித்து நின்றான். மோகினி, ''குட்டி!'' என்று அலறினாள்.

குட்டி, ''மோகினி! பயப்படாதே! உன்னைச் சுடமாட்டேன்! இந்த ராஜுவைத்தான் சுடப் போறேன்!'' என்றான். அவன் உதடுகள் துடித்தன. ஆனால் அவன் கையில் துப்பாக்கி சிறிதும் ஆடாமல் ராஜுவைக் குறி பார்த்தபடி இருந்தது.

(தொடரும்)

www.tamilbooksworld

தோட்டங்களில் காணப்படும் நத்தை எப்படி உணவை அரைத்துத் தள்ளுகிறது? நத்தையின் உடம்பு முழுவதும் பற்கள்தான். 135 வரிசைகளில் மொத்தம் 14,175 பற்கள் கொண்ட பிராணி, நத்தை!

—க. ரா.

## அத்தியாயம் - 44



# மின்னல், மழை, மோகினி

ஜாவர் சீதாராமன்

கையிலே துப்பாக்கியோடு ராஜுவை விறைத்துப் பார்த்தபடி நின்ற சங்கரன் குட்டியைப் பார்த்த மோகினிக்கு என்றுமே ஏற்படாத ஒரு திகில் ஏற்பட்டது.

வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் அவள் துன்பத்தை அடைந்திருக்கிறாள். வீண் பழிக்குப் பலியாகி இருக்கிறாள். முரட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி, மானத்தை இழக்க வேண்டிய பயங்கர மூலைக்குச் சென்றிருக்கிறாள். அப்போதெல்லாம் பயம் என்ற உணர்ச்சி எழுந்திருக்கிறது. ஆனால் இன்றுதான் அவள் முழுப் பயத்தை உணர்ந்தாள்.

நா வறண்டு, முகம் வெளுத்து, உடல் வியர்த்து நின்றாள். பேச்சு வரவில்லை, வார்த்தைகளை உச்சரிக்க முயன்றாள். வார்த்தைகள் மனத்தில் பிறந்து, உதடுகள் வரை வந்து உருப் பெறாமலே குறை கர்ப்பக் குழந்தைகள் போல் மடிந்தன. சிரமப்பட்டு, ''குட்டி! துப்பாக்கியைக் கீழே போடு,'' என்று கட்டளையிட்டாள்.

குட்டி சிரித்தான். ''மோகினி, இன்னிக்குக் குட்டி உன் பேச்சைக் கேட்க மாட்டான். ராஜுவைக் கொல்லாமல் விடமாட்டான்,'' என்று சொல்லிவிட்டு ஓர் அடி எடுத்து வைத்துப் படிக்கட்டில் இறங்கினான்.

ராஜு எந்தவித உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் நின்றான். ஆனால் அவன் கண்கள் மட்டும் குட்டியின் கைகளைப் பார்த்தபடி இருந்தன. எப்போது குட்டியின் விரல்கள் துப்பாக்கியின் டிரிக்கரை அழுத்தும் என்று காத்திருப்பவன்போல் நின்றான். பார்வையைத் திருப்பாமல் ராஜு, ''மோகினி! நீ நகர்ந்து கொள்,'' என்று பதட்டத்தோடு சொன்னான், மோகினிக்குக் குண்டு வீச்சினால் ஆபத்து வரக்கூடாது என்ற அக்கறை தொனிக்க.

மோகினி ராஜுவைப் பார்த்தாள். அவ்வளவு அழகான, வலிமையான உடலை நோக்கித் துப்பாக்கி இருப்பதைப் பார்த்தாள். அவள் உயிரே அவள் கண்களுக்கு வந்து நின்றது. அந்தக் கண்கள் துப்பாக்கியில் லயித்தன. வெளியே இடி இடிப்பதுகூட மோகினியின் காதில் விழவில்லை. வெளிப்புறத்திலிருந்து ஹால் கதவைத் திறந்து கொண்டு குழந்தைச்சாமி நுழைவதையும் கவனிக்கவில்லை. அந்த ஹாலில் தொங்கிய மின்சார தீபங்கள் மழைக் காற்றில் ஒளியையும் நிழலையும் மாறி மாறி ஹால் முழுவதும் வீசுவதையும் கவனிக்கவில்லை.

திடீரென்று ஒரு மின்னல் மின்னியது. இதுதான் மோகினியின் வாழ்வில் கடைசி மின்னலோ என்று அச்சமுறும் படியான மின்னல். அதைத் தொடர்ந்து வந்த இடி சப்தம், இரண்டு ரயில்கள் மோதியது போன்ற ஓசையைக் கொடுத்தது. மின்னலும், மழையும் பெரும் பரிமாணத்துக்கு நிகழும்போதெல்லாம் மோகினியின் வாழ்வுப் பாதையில் ஒரு மைல் கல் நாட்டப்படுவது வழக்கம். 'இன்று மழை மின்னல் என் வாழ்வில் என்ன திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறதோ!' என்று நினைத்தும் நினைக்காமலும் இருந்தாள் மோகினி.

குழந்தைச்சாமி ஒரு நொடியில் விஷயத்தைப் புரிந்து கொண்டார். எந்தவித சப்தம் செய்தாலும் அது வெறி பிடித்த சங்கரன் குட்டியைச் சுடச் செய்யும், அது நிகழக் கூடாது என்று கட்டுண்ட நாகம்போல் நின்றார்.

கை நடுங்காமல் துப்பாக்கியை நீட்டி, சங்கரன்குட்டி ராஜுவின் மார்

www.tamilbooksworld

குட்டியை அழைத்துச் சென்று அருகில் உள்ள அறையில் தள்ளிப் பூட்டுகிறான். குழந்தைச்சாமி மோகினி கீழே விழுந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார்.

ராஜூ ஓடிவந்து அவளை ஒரு குழந்தையைப்போல் தன் பலம் நிறைந்த கைகளால் தூக்கினான்.



புக்குக் குறி பார்த்தான். அந்த நிமிஷத்தில்தான் எவ்வளவு ஆழமாக ராஜூவை நேசிக்கிறோம் என்பதை உணர்ந்தாள் மோகினி. அவள் பார்வை சங்கரன் குட்டியின் கையில் உள்ள ஆள்காட்டி விரலிலேயேஇருந்தது. அந்த விரல்தானே துப்பாக்கியின் டிரிக்கரை அழுத்தப் போகும் விரல்!

அந்த விரல் மடங்கி டிரிக்கரை அழுத்தப் போவதைப் பார்த்தாள். பார்த்த வினாடியே பாய்ந்தாள். பாய்வதும் குண்டு வெடிப்பதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. அடுத்த வினாடி தரையில் சாய்ந்தாள்.

என்ன நிகழ்ந்தது என்று குட்டிக்குப் புரியவில்லை. ராஜூவுக்கும் புரியவில்லை. ஆனால் குழந்தைச் சாமிக்குப் புரிந்துவிட்டது. தான் வளர்த்த பெண் தன் அண்ணன் மகனைக் காப்பாற்றிவிட்டு, குண்டைத் தன் மீது வாங்கிக் கொண்டாள் என்பதை உணர்ந்தார். தான் முற்றும் துறந்த சன்னியாசி என்பதை மறந்தார். மோகினியைத் தாயே என்று அழைத்து அழைத்துப் பழக்கப்பட்ட குழந்தைச்சாமியின் உதடுகள், ''என் குழந்தே! என் மகளே!'' என்று அலறியது. ஓடி மோகினியைத் தூக்கினார்.

இந்த இடைவெளியில் ராஜூ, திகைத்து நின்ற குட்டியின் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிவிட்டான்.

''சித்தப்பா, உடனே போய் டாக்டரை அழைச்சிட்டு வாங்க சித்தப்பா,'' என்று பதற்றத்துடன் சொன்னான்.

மோகினியின் கண்கள் சுழன்றன. ஆனால் அவள் முகத்தில் ஒருவித அமைதியும் நிறைவும் இருந்தது. ராஜூ அவளைத் தூக்கிக் கொண்டு மாடியை நோக்கிச் சென்றான்.

மோகினியின் பார்வை அவன் முகத்தின் மீதே லயித்து நின்றது. அதில் ஓர் அன்பும் ஆசையும் இருந்தன. மோகினி ஏதோ வெற்றியடைந்தவள் போல் திருப்தியுடன் காணப்பட்டாள்.

விஜயா படுத்திருந்த அதே கட்டிலில் மோகினியைப் படுக்க வைத்தான் ராஜூ. அவன் கண்களில் மருட்சி இருந்தது. அவன் உதடுகள் பேச மறுத்தன.

மோகினி, ராஜூவின் கையைப் பிடித்தாள். குண்டு அவள் தோளில் பாய்ந்திருந்தது. ராஜூ தன் வேஷ்டியைக் கிழித்து, கசியும் ரத்தத்தைத் துடைத்தான். ''எனக்கு எந்தச் சிகிச்சையும் பலனளிக்காது. தயவு செய்து காலத்தை வீணாக்காமல் நான் சொல்வதைக் கேளுங்கள்,'' என்று சொல்

வதற்குள் மூச்சு முட்டியது. பேச்சை நிறுத்தினாள். ராஜுவை ஒருமுறை பார்த்தாள். ''இதுநாள் வரை நான் உங்களிடமிருந்து ஒரு உண்மையை மறைத்துவிட்டேன். அதைச் சொல்லாமல் இறக்க விரும்பவில்லை. உங்கள் மனைவி விஜயா சாகும்போது நான் உங்களை..... உங்களை..... நேசிப்பதை உணர்ந்து கொண்டாள்,'' என்று கூறிவிட்டு ராஜுவைப் பார்த்தாள்.

''அப்படியானால், விஜயா நான் அவளுக்குத் துரோகம் இழைத்துவிட்டேன் என்ற எண்ணத்தோடுதான் இறந்தாளா?'' என்று கேட்டான் ராஜு.

''இல்லை, விஜயா மகிழ்ச்சியோடுதான் இறந்தாள். நான் உங்களை விரும்புவதை மட்டும்தான் கூறினேன். இந்த வீட்டில் நுழைந்த நாள் முதல் நான் உங்களை நேசிப்பதைத்தான் கூறினேன். உங்கள் மீது விஜயாவுக்கு எந்தவித சந்தேகமும் ஏற்படும்படி நான் ஒன்றும் பேசவில்லை. நீங்கள்... நீங்கள்... என்னை மணந்து கொண்டு வாழவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். விஜயா உங்களுக்கு அளிக்காத இன்பத்தையெல்லாம் நான் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். கௌரிக்கு என்னைவிடச் சிறந்த அன்னை கிடைக்க மாட்டாள் என்ற பூர்ண நம்பிக்கையோடு இறந்தார்கள்.''

''அதை ஏன் அப்போதே என்னிடம் சொல்லவில்லை மோகினி?''



''சொல்லியிருந்தால் நீங்கள் நம்பியிருக்க மாட்டீர்கள். பணத்துக்காக, சொத்துக்காகச் சொல்கிறேன் என்று நினைத்திருப்பீர்கள். இனிமேல்... நான் வாழப்போவதில்லை. மரணத்தின் பிடியில் இருக்கும் நான் சொல்வதை — நான் கூறுவதை இப்போது நம்புவீர்களல்லவா? உங்கள் மீது பாய வேண்டிய குண்டை என் உடலில் வாங்கிக்கொண்ட நிலையில் தான், எனக்குத் தகுதி ஏற்பட்டது—உங்களிடம் உண்மையைக் கூறத் தகுதி ஏற்பட்டது. நான் என்றுமே உங்கள் பணத்தை விரும்பவில்லை; உங்களையும் குழந்தை கௌரியையும்தான் விரும்பினேன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்,'' என்று சொல்வதற்குள் அவள் கண் மூடிவிட்டது. வாய் பேசுவதை நிறுத்திக் கொண்டது.

ராஜு, ''மோகினி! மோகினி!'' என்றழைத்துப் பார்த்தான்.

பதில் இல்லை. மோகினியின் உதடுகள் மட்டும் இன்னும் ஏதோ கூறத் துடிக்கிறாள் என்பதைத் தெளிவு படுத்தின. ஆனால் சப்தம் வரவில்லை.

டாக்டரும் குழந்தைச்சாமியும் அப்போது உள்ளே வந்தார்கள். டாக்டர் பரிசோதித்தார்.

ராஜு, ''என்ன டாக்டர்? எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான்.

www.t.me/tamilbooksworl

டாக்டர், ''என்ன செய்வது ராஜு! குண்டு சுவாசப் பையின் ஓரத்தைச் சேதப்படுத்தியிருக்கிறது. பிழைப்பது துர்லபம். எனக்கு நம்பிக்கையில்லை,'' என்றார்.

ராஜு அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்து விட்டான்.

குழந்தைச்சாமி, ''எனக்கு நம்பிக்கையிருக்கிறது டாக்டர். ஏதாவது செய்து எப்படியாவது என் குழந்தையைப் பிழைக்க வையுங்கள் டாக்டர்! இது ஆண்டவன் தோட்டத்தில் பூத்த அரு மலர்! இது இன்னும் மலரவில்லை; மணம் வீசவில்லை; அதற்குள் ஆண்டவன் இம்மலரைப் பறிக்கத் துணிய மாட்டான்,'' என்றார்.

''சாமி! நம்பிக்கையினால் மட்டும் உயிர் கொடுக்க முடியாது. உடலில் பாய்ந்த குண்டை எடுத்துவிடுகிறேன். தக்க சிகிச்சை செய்கிறேன். ஆனால் அவள் பிழைப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. வைத்தியக் கலைக்கே அந்த நம்பிக்கை இருக்க முடியாது,'' என்று சொல்லிவிட்டுச் சிகிச்சை செய்யத் தொடங்கினார்.

அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை கௌரி விழித்துக் கொண்டு ஓடிவந்தாள். மோகினி படுத்திருப்பதையும், அருகில் குழந்தைச்சாமியும் ராஜுவும் இருப்பதையும் பார்த்தாள். தன் தாய் இறந்த காட்சி ஞாபகத்துக்கு வந்தது. ''அப்பா! டீச்சருக்கு என்னப்பா? டீச்சரும் செத்துப் போயிடுவாங்களா?'' என்று கேட்டாள். படுக்கையை நெருங்கி ஓடிவந்து, ''டீச்சர்! டீச்சர்! நீங்களும் அம்மா மாதிரி போயிடாதீங்க டீச்சர்!'' என்று அழத் தொடங்கினாள்.

குழந்தைச்சாமி குழந்தை கௌரியை எடுத்துக்கொண்டு வெளிவராந்தாவுக்கு வந்தார். ராஜு அப்படியே மோகினியைப் பார்த்தபடி இருந்தான்.

டாக்டர் தன் வேலையைக் கவனித்தபடி இருந்தார். ஆனால் சிறிது சிறிதாக மோகினியின் நாடி விழத் தொடங்கியது. கால்கள் ஜில்லென்று ஆகி விட்டன. ராஜுவால் அங்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை.

டாக்டர், ''மிஸ்டர் ராஜு! நிச்சயமான ஒரு விஷயத்தை மாற்ற முடியாது. இந்தச் சிகிச்சையினாலே சில வினாடிகளிலே போகிற உயிர் சில மணி நேரம் கழித்துப் போகும். அவ்வளவுதான்,'' என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

கௌரி, ''டாக்டர் சொல்றதை நம்பாதீங்கப்பா. டீச்சர் எனக்கொரு பாட்டுச் சொல்லிக் கொடுத்தாங்க. அது பாரதியார் பாடின பராசக்தி பாட்டு. அதைப் பாடினா, கேட்டதெல்லாம் கிடைக்கும்னு சொன்னாங்க. டீச்சர் ஷோரனூர் போனப்புறம் நான் அந்தப் பாட்டைத்தான் பாடினேன். உடனே டீச்சர் வந்துட்டாங்க. அதே பாட்டை நான் மறுபடியும் பாடினா, டீச்சர் பிழைச்சிடுவாங்கப்பா,'' என்று கூறிவிட்டு, மோகினி படுத்திருக்கும் கட்டிலருகில் போய்ப் பாட ஆரம்பித்தாள்.

ஐந்து நிமிடம் கழித்து மறுபடியும் ராஜு அறைக்குள் வந்து பார்த்தான். மோகினியின் கால் விரல்கள் ஜில்லென்று இருந்தன. உதடுகள் சோர்ந்து இறுதி சுவாஸம் வரத் தொடங்கியது. அதைச் சாமியாரும் கவனித்தார். அவர் முகத்திலும் நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.

ராஜுவுக்கு ஆத்திரம் வந்தது. ''சித்தப்பா! இதற்கென்ன சித்தப்பா சொல்றீங்க? விஜயா என்னை உயிருக்கு மேலாக நேசித்தாள். அவள் பல வருஷம் நொண்டியாயிருந்து இறக்க வேண்டியிருந்தது. அதுக்கு என்னமோ எங்கப்பாவின் பாபம் என்று கதை சொன்னீங்க. விஜயாவாவது என் பணத்திலே—செல்வத்திலே பங்கெடுத்துக் கொண்டாள்! மோகினி என்ன தவறு செய்தாள் சித்தப்பா? என்னை விரும்பினாள் என்னும் காரணத்துக்காக அவளும் சாகணுமா? இதிலே அர்த்தமே இல்லை சித்தப்பா. நியாயம், தர்மம், பக்தி, கடவுள், இதுக்கெல்லாம் அர்த்தமே இல்லே, சித்தப்பா! வெறும் கட்டுக் கதை! மோகினி இறந்த மறு நிமிஷமே நான் வாழப்போறதில்லை சித்தப்பா! எனக்கு வாழ்க்கையே திகட்டிப் போச்சு. இந்தப் பணம், .சொத்து எல்லாம் நீங்களே ஏதாவது மடம், கோயிலுக்கு எழுதி வச்சிடுங்க,'' என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு வெளியேறினான்.

குழந்தைச்சாமி அப்படியே அரை மனிதராகிவிட்டார். அவர் நம்பியதெல்லாம் பொய்யா! அவர் வாழ்ந்த வாழ்வெல்லாம் வீண் வாழ்வா? ''வெங்கடபதி! நீ உன் தவறுகளால் என்னைப் பக்தி வழிக்கு அனுப்பினாய். மோகினி, என்னை மறுபடியும் நாத்திகத்துக்கு அனுப்பிவிடாதே! அம்மா, நீ வாழ வேண்டும்! மோகினி, நீ பிழைக்க வேண்டும்! இல்லாவிட்டால் எல்லாம்

பொய்யாகிவிடும்!" என்று அலறியபடி அப்படியே தரையில் சாய்ந்தார்.

குழந்தை கௌரி தன் பிஞ்சு நம்பிக்கையோடு பெரியவர்களின் பெரிய பிரசினையைச் சிறிதும் பாராட்டாமல் கண்ணை மூடியபடி டீச்சர் சொல்லிக் கொடுத்த அந்தப் பாட்டை அசையாத நம்பிக்கையோடுபாடிக்கொண்டிருந்தாள். ஆனால் மோகினியின் உயிர், முதிர்ந்த சாமியாரின் வேதனையையோ குழந்தை கௌரியின் நம்பிக்கையையோ பொருட்படுத்தாமல் மோகினியின் உடலைவிட்டு வெளியேறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தது. மோகினியின் உதடுகளின் ஆட்டமும் நின்றது. சாவின் அமைதி அவள் முகத்தில் படர்ந்தது.

ஒரு டிப்போ சொந்தக்காரர்

'ஓ. சி. டிப்போ' என்றுதான் முதலில் இருந்தது. எல்லோரும் 'ஓசி' கேட்டாங்க. அதனாலே 'சி. ஓ. டிப்போ' என்று மாற்றினோம். இப்போ ஒருத்தருமே வருகிறதில்லை!

—கலா



வராந்தாவில் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த டாக்டர், சிகரெட்டை எறிந்துவிட்டு அறையில் நுழைந்தார். அவர் பார்வையில் சலனமில்லாமல் கிடக்கும் மோகினியின் உருவம் தெரிந்தது. கதை முடிந்துவிட்டது என்பதைப் புரிந்து கொண்டார். "சாமி! இனிமேல் ஆக வேண்டியதைப் பாருங்க, எல்லாம் முடிஞ்சு போச்சு," என்று சொன்னார்.

குழந்தைச் சாமி பதில் பேசாமல் எழுந்திருந்தார். "எல்லாம் முடிஞ்சு போச்சா?" என்று விரக்தியுடன் கூறியபடி தன் காவி மேல் வேட்டியைக் கிழித்து எறிந்துவிட்டு கண்ணீரோடு மோகினியை நெருங்கினார். "குழந்தை! நான் உன்னைச் சந்தித்திருக்கவே கூடாது அம்மா! உன் வாழ்க்கையில் நான் குறுக்கிட்டிருக்கவே கூடாதம்மா!" என்று மோகினியின் கையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு அழுதார்.

அப்படியே அழுது கொண்டிருந்தவரின் முகம் அதிர்ச்சியோடு காணப்பட்டது. அவர் மோகினியின் மணிக்கட்டைப் பிடித்ததும், "டாக்டர்! டாக்டர்! இங்கே வந்து பாருங்க டாக்டர்! கையிலே நாடி பேசுது," என்றார்.

டாக்டர், நாடியைப் பார்த்தார். அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. "என்னங்க, மூச்சு நின்று போயிருக்கு. ஆனால் கையிலே நாடி பேசுது!" என்று ஸ்டெதாஸ்கோப்பால் இருதயத்தைப் பரிசோதித்தார்! மறுபடியும் நாடியைப் பரிசோதித்தார். உடனே அறையின் மூலையில் வைத்திருந்த தன்னுடைய தோல் பையிலிருந்து ஒரு மருந்தை எடுத்து ஊசியால் இன்ஜெக்ஷன் செய்தார்.

அப்போது அறையில் நுழைந்த ராஜு, "என்ன டாக்டர்?" என்று கேட்டான்.

"ராஜு! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மூச்சு நின்று போனப்புறம் இருதயம் துடிச்சிட்டிருக்கு. இது பெரிய ஆச்சரியமா இருக்கு," என்று டாக்டர் சொல்லி முடிப்பதற்குள் மோகினியின் நாசிகள் வழியாக மூச்சு வருவது தெரிந்தது. மறுபடியும் மார்பு விம்மியது.

இந்தக் கலாட்டாவில் எந்தவிதப் பங்கும் எடுத்துக் கொள்ளாமல் குழந்தை கௌரி அப்படியே நாற்காலியில் சாய்ந்து கிடந்தாள்.

டாக்டர், "ராஜு! மோகினி பிழைத்து விடுவாள். இது மறுபிறப்பு என்றே சொல்ல வேண்டும்! ஆனால் இன்னும் அரை மணி நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு அவளை எடுத்துச் செல்ல வேண்டும்!" என்று சொன்னார்.

ஆம்புலன்ஸ் வேன் வரவழைக்கப் பட்டது. மோகினியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

ராஜு ஒருவாரம் மோகினியின் அருகிலேயே இருந்தான். சாமியார் சங்கரன் குட்டியை ஒரு நர்ஸிங்ஹோமில் வைத்தார். குட்டிக்கு ஆத்திரம்

மறைந்ததும் ஆஸ்பத்திரியில் மோகினியைப் பார்க்க வேண்டும் என்று கூறி அழுதான். குட்டியே சாமியாரிடம், ''சாமி! என்னைத் தனியே எங்காவது வைத்துவிடுங்கள்,'' என்று வேண்டிக் கொண்டான்.

மோகினிக்குச் சரியான ஞாபகம் வந்ததும் ராஜூ ஆஸ்பத்திரிக்கு வருவதை நிறுத்திவிட்டான். அவளைப் பார்க்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது.

இருபது நாள் கழித்துக் குழந்தைச் சாமி ஆஸ்பத்திரியிலிருந்து மோகினியை வீட்டுக்கு அழைத்து வந்தார். மோகினி வெளுத்து இளைத்திருந்தாள். அவள் தன் அறையில் படுக்கையில் வந்து உட்கார்ந்தாள். ராஜூ அறையில் நுழைந்ததும் மோகினி படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

ராஜூ, ''பரவாயில்லை மோகினி! நீ எழுந்திருக்க வேண்டாம்!'' என்று சொல்லி அவளைப் படுக்கையில் அமர்த்தினான். ராஜூவின் கை பட்டதும் மோகினியின் உடல் சிலிர்த்தது. ''மோகினி! நானும் சித்தப்பாவும், டாக்டரும் நம்பிக்கையிழந்தபோதுகூட, கௌரி நம்பிக்கை இழக்கவில்லை. குழந்தையின் நம்பிக்கை பலத்தால்தான் நீ உயிர் பெற்றாய்! அந்தக் குழந்தைக்கு நீ தாயாக வேண்டும்,'' என்று சொல்லி விட்டு நிறுத்தினான்.

மோகினி சற்று நேரம் தரையைப் பார்த்தபடி இருந்தாள். பிறகு, ''கௌரிக்குத் தாயாகும் பாக்கியத்தை விடச் சிறந்தது வேறு எனக்கு இருக்க முடியாது. ஆனால் உங்கள் சொத்துத்தான் அதற்குப் பெரிய தடையாக இருக்கிறது. ஷொரனூரிலிருந்து வந்த ஏழை மச்சராகவே இருக்க நான் ஆசைப்படுகிறேன்.''

''என் சொத்தா! அப்படி ஒன்றும் இல்லை மோகினி! சொத்து என்னுடையதல்ல. பாதி தர்மத்துக்கு. பாதி கௌரிக்கு என்று எழுதியாகிவிட்டது. இனிமேல் நான் வேலை செய்துதான் பிழைக்க வேண்டும்.''

மோகினி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அடுத்த விநாடி அவன் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்தாள். ராஜூ அவளை எடுத்து அணைத்துக் கொண்டான்.

''இது சித்தப்பாவுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் மோகினி.

''அவருக்கு ஆரம்பத்திலிருந்தே எல்லாம் தெரிந்திருக்கிறது. இருந்தும் தெரியாதவர் போல் இருந்திருக்கிறார். தர்ம சொத்துக்கும் கௌரியின் சொத்துக்கும் அவர்தான் கார்டியன். சொத்தை விட்டு ஓடுகிறார். ஆனால் அது அவரை விடாமல் தொடருகிறது,'' என்று சொல்லி விட்டு, துப்பாக்கி குண்டு பாய்ந்த இடத்திலுள்ள வடுவைத் தொட்டான் ராஜூ.

அவன் கண்களில் நிறைந்த நீர் அந்த வடுவில் விழுந்தது! மோகினி அவன் கண்களைத் துடைத்தாள். பிறகு சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே ராஜூ தன் ஒளிமயமான எதிர்காலத்தைக் கண்டான். ''நாளை நாட்கள் நமதே!'' என்று சொல்லி அவள் கன்னத்தைத் தொட்டான்.

முற்றிற்று

✲

## முதல் படம்: 1965 (விடை)

1965' இல்தான் புதுமுகங்கள் அதிகம். அதிலும் ஆறு புது முகங்களை 'வெண்ணிற ஆடை' படத்தின் மூலம் அறிமுகப்படுத்திய பெருமை டைரக்டர் ஸ்ரீதரைச் சாரும். அவர்கள்:

ஜெயலலிதா, சேஷாத்திரி, ஸ்ரீகாந்த், நிர்மலா (3), ஆஷா, மூர்த்தி.

'கார்த்திகை தீபம்' மூலம் டைரக்டர் காசிலிங்கம் அறிமுகப்படுத்திய புதுமுகம் வனமாலா.

டைரக்டர் ஜோசப் தளியத் 'இரவும் பகலும்' மூலம் அறிமுகப்படுத்திய புது முகங்கள்: ஜெய்சங்கர், வசந்தா.

'என்னதான் முடிவு'க்காக, டைரக்டர் கே. எஸ். கோபால கிருஷ்ணனின் கண்டு பிடிப்பு: நிர்மலா (1).

தயாரிப்பாளர் சுப்பையா தேவர் 'பணம் தரும் பரிசு' வாயிலாக அறிமுகமானவர்கள்: எஸ். எம். ராமன், ரமண திலகம்.

ஒளிப்பதிவாளர் ஏ. வின்சண்ட் அறிமுகப் படுத்த, த. பி. சாணக்கியா பவன் படுத்தியவர் 'எங்க வீட்டுப் பெண்' விஜயநிர்மலா(2).

கிருஷ்ணன் பஞ்சு 'குழந்தையும் தெய்வமும்' படத்திற்காகச் சாந்தாவைக் கண்டார்.

டைரக்டர் ஏ. சி. திருலோகசந்தர், சிவகுமார், ரேவதி இருவரையும் 'காக்கும் கரங்களில்' அறிமுகப்படுத்தினார்.

கே. ஜே. மகாதேவன், 'ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்' மூலம் திரைக்குக் கொண்டு வந்தார் மல்லிகாவை.

'தாயின் கருணை' கதாநாயகியாக ஜி. பி. அய்யர் அறிமுகப்படுத்தியவர்: வந்தனா.

டைரக்டர் தங்கப்பன், ராதிகா, தேங்காய் ஸ்ரீனிவாசன், கிருஷ்ணா ராவ் ஆகிய மூன்று புதுமுகங்களை 'ஒரு விரல்' மூலம் திரைக்குக் கொண்டு வந்தார்.

தகவல்: அன்பு, ஆனந்தன்